“தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிக்கின்ற
மான் துள்ளும் வேகத்தைக் கவிதையினால்
வான்பெய்யும் கோடைமழைபோலப் பொழிகின்ற முடியரசர்
முன்னாள் தொட்டு இந்நாள்வரை இருக்கின்ற நம் கவியரசர்”

- கலைஞர் கருணாநிதி


தமிழ்மண் பதிப்பகம்
2, சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24339030

முடியரசன் படைப்புகள் - 7

கவியரசர்

# முடியரசன் படைப்புகள் - 7

## பூங்கொடி
## வீரகாவியம்



தமிழ்மண்

கவியரசர்

# முடியரசன் படைப்புகள்

7

பூங்கொடி

வீரகாவியம்

*ஆசிரியர்*

கவியரசர் **முடியரசன்**

**தமிழ்மண் பதிப்பகம்**

*சென்னை - 600 017*

நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **கவியரசர் முடியரசன் படைப்புகள் – 7** |
| ஆசிரியர் | : | முடியரசன் |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : | 2008 |
| தாள் | : | 16 கி வெள்ளைத் தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 16+ 456 = 472 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. **440/-** |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | வ. மலர் |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |
| வெளியீடு | : | **தமிழ்மண் பதிப்பகம்**<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர்நகர், சென்னை - 600 017.<br>தொ.பே. 2433 9030<br>மின்னஞ்சல் : tm_pathippagam@yahoo.co.in<br>இணையதளம் : www.tamilmann.in |

# தொகுப்புரை

*"கவியரசர்* ***முடியரசன்*** *கவிதை நூல்கள் ஒவ்வொன்றும் தமிழுக்கு ஆக்கம் செய்யும் செம்மொழிச் செல்வமாகும்" என்பார்* ***பேராசிரியர் அன்பழகன்****. அச்செல்வங்களை நாட்டுடைமை ஆக்கினார் தலைவர்* ***கலைஞர்****. அவற்றில் மூன்றில் ஒரு பங்கே எம் தந்தையார் காலத்தில் நூல்வடிவம் பெற்றன. எஞ்சிய பெரும் பகுதி பெட்டகத்துள் கட்டுண்டு கிடந்தன. அவற்றின் சிறப்புகள் அப்போது எமக்குத் தெரியவில்லை. எந்தையும் ஏதும் கூறவில்லை. அவரின் இறுதிக் காலத்தில் தான் அதை உணர்ந்த நான், அச்செல்வங்களைத் தொகுத்து வெளியிட முயற்சி மேற்கொண்டேன். எனினும் அவரின் மறைவுக்கப் பின்னரே அவற்றிற்கு நூல்வடிவம் தர எம்மால் இயன்றது. அச்செல்வங் களைத் தமிழுலகிற்கு வழங்கியதன் மூலம், மகன் தந்தைக்காற்றும் கடமையை, கவின் கலைச்செல்வியாம் தமிழ் அன்னைக்கு ஆற்றும் தொண்டினை நிறைவேற்றிய மனநிறைவும் கொண்டேன். தொடர்ந்து அப்பணியை எம் வாழ்வின் இலக்காகக் கொண்டு, ஒல்லும் வகை யெல்லாம் செயலாற்றி வருகின்றேன்.*

*இவ்வகையில், தந்தையின் அனைத்துப் படைப்பு களையும் ஒரே நேரத்தில் முழுத் தொகுப்பாகப் பதிப்பிக்க எண்ணியிருந்தேன். இந்நிலையில், 1999-இல் முனைவர் இளவரசு வழி, மொழிக்காவலர் கோ.இளவழகன்*

நட்பினைப் பெற்றேன். **தமிழ்மண்** பதிப்பகத்தின் முதல் வெளியீடு முடியரசன் நூல்களே. முழுத் தொகைப்பையும் தமிழ்மண் வெளியிடும் என அப்போது அவர் கூறினார். இப்போது அது கனிந்தது. முடியரசனார் படைப்பு களை முழுமையாகத் தொகுத்துத் தருமாறு அவர் கூறியதற்கிணங்க தொகுத்துத் தந்துள்ளேன்.

முந்தையரின் அரிய தமிழ்ச்சீர்களைத் தமிழர்க் களித்து வரும் அன்னார்க்கு என் பாராட்டு; அவ்வழி எந்தையாரின் செம்மொழிச் செல்வங்களையும் வழங்கும் அவர்க்கு என் நன்றி; தமிழ் மண்ணுக்கு என் வணக்கம்.

**முடியரசன்**

**‘ காணாது ஈத்த இப்பரிசிலுக்கு யான்ஓர்**
**வாணிகப் பரிசிலன் அல்லேன்........**
**.................**
**முற்றிய திருவின் மூவரே ஆயினும்**
**பெட்பின்றி ஈதல் யாம் வேண்டலமே’**

என்னும் சங்கப் புலவர்களின் வைர வரிகளுக்குச் சான்றாகப் பெருமித வாழ்வு வாழந்தவர். சலுகை போனால் போகட்டும்; என்றன் தமிழ் வெல்லட்டும், ஆண்ட தமிழர் உயரட்டும் எனப் போராடியவர் வளையா முடியரசர்; வணங்கா முடியரசர்; தெய்வத் தமிழை வணங்கியவர். எந்தச் சபலத்துக்கும் முடிசாய்க் காத ஆண்மையாளர். இலக்கிய உலகில் சிங்கமென உலவியவர். இருபதாம் நூற்றாண்டின் கவிதையுலகில் புதுமை பூத்த மரபுக் கவிஞர்

அழகும், இனிமையும், புதுமையும் கொஞ்சிக் குலவும் கவிதைகள் படைத்துத் தமிழுக்குப் புதிய அணிகலன்களைச் சூட்டியவர். தமது கவிதைகள் மூலம் சமூக அநீதிகளை - மனிதரிடையே பேதங்களைக் கற்பிக்கும் ஏற்பாடுகளை - குருட்டுப் பழக்க

*வழக்கங்களைச் சாடியவர். மனிதநேயத்துக்கும் சமத்துவத்துக்கும் எதிரான கருத்துகளை எதிர்த்து அறிவுப்போர் நடத்தியவர். ஒப்புரவும் மனிதநேயமுமே தமிழரின் பண்பாடு என முரசறைந்தவர்.*

*தமிழை இகழ்வார் தன்னுயிர்ப் பகையாய், அல்மொழி திணிப்பார் வல்வரவெதிர்த்துத் தொடு மொழிப் போரில் தும்பை சூடிய, குடியரசோச்சும் கொள்கை கொண்ட மொழியரசோச்சிய முதல் முடியரசன். தமிழ்த் தேசியக்கவி; தமிழுலகின் அபூர்வப் படைப்பாளி; செந்தமிழ் ஊற்று; பைந்தமிழ்ப் பொழில்; திராவிட நாட்டின் வானம்பாடி; தமிழ்நாட்டின் பாடுங்குயில்;* ***அப்பாட்டுப் பறவையின் வாழ்க்கைப் பயணம்*** *முழுதும் தமிழே உயிர்; கவிதையே மூச்சு.*

*ஆதித்தமிழரில் சாதிகள் இல்லை; பாதியில் புகுத்திய சாதியை ஒழிக்க ஓதினார் கவிதைகள்; ஓதியவாறே ஒழித்தார் வாழ்க்கையில். வள்ளுவ நெறியை வாழ்வில் நாட்டி, பெரியார் வழியை ஒளியாய்க் காட்டி, புத்தன் புகட்டிய பகுத்தறிவூட்டி, சாதி, சமய, சாத்திரம் அறுத்து, வாக்கின்படியே வாழ்ந்து காட்டி வரலாறானவர்.*

**முடியரசன் நூல்கள்:-**

***முடியரசன் கவிதைகள்*** *- ஆட்சிக்கும் அஞ்சாமல், யாவரேனும் ஆள்க எனத் துஞ்சாமல், தாய்மொழியின் ஆட்சிக்கும் தமிழகத்தின் மீட்சிக்கும் பாடிய போர்ப் பரணிகள். மேலோங்கு கொடுமைகளைக் காணும்போது, காட்சிக்குப் புலியாகிக் கொடுமை மாளப் பாய்ச்சிய கூர்வேல்கள். கயமைகள் வீழ வீசிச் சுழற்றிய கைவாள்கள். காசுக்கும் கைம்மாறு பெறுதற்கும் மாசற்ற கொள்கைக்கு மாறாய் நெஞ்சை மறைத்துவிட்டும் கெஞ்சாத தன்மான*

வரிகள். தமிழ் மானம் மீட்டெடுக்கப் பாடிய படைக் கலன்கள். வீழ்ந்த தமிழர் வாழ்ந்த வரலாறு மீள விழித்தெழப் பாடிய வீரக்கனல்கள்.

திராவிட எழுச்சிக் காலத்தில் **கவியரங்கில் முடியரசன்** முழங்கிய கவிமுழக்கம், முத்தமிழ்த் தோழர்க்கு முரசொலி முழக்கம்; அயலார்க்கோ இடிமுழக்கம். **தாய்மொழி காப்போம்** எனுமவர் **தமிழ்முழக்கம்**. வீரத் தமிழரை வீறு கொண்டெழைத்த வேங்கை முழக்கம். திராவிடத் திருவிடத்திற்கு ஒளிதந்த **ஞாயிறும் திங்களும்**. அரங்கு களில் ஆர்ப்பரித்த அயன்மொழிப் பாடல்களை அடக்கவந்த **காவியப்பாவை**. தமிழிலே இசையில்லை என்ற கூகைகளின் கூக்குரரை நெறிக்கக் கூவிய **பாடுங்குயில்**. சிந்தை உருக்கும் தெய்வத் தமிழ்ப் பாசுரங்கள். குறள்நெறி கூறிய, தமிழ் மறை போற்றிய **வள்ளுவர் கோட்டம், மனிதரைக் கண்டுகொண்டேன்** என நற்சான்றோர் போற்றிய சொற்பூ மாலை. புரட்சி வெடிக்க, புதுமை பூக்க, பொதுமை மலர, சாதி ஒழிய, சமயம் அழிய, சாத்திரம் மறைய, சமத்துவம் தழைய, உழைப்போர் உயர, ஒடுக்கப்பட்டோர் விடுதலை பெற **புதியதொரு விதி செய்வோம்** எனப் புகன்ற சிவப்புப் பிழம்புகள், குமுகாயத்தில் பண்பாடு புண்பட்டு, ஒப்புரவு கரவு பட்டு, கொடுமைகள் மலிந்து, குறைகள் நிறைந்ததை கண்டு, உள்ளம் கொதித்து **நெஞ்சு பொறுக்க வில்லையே** எனக் குமுறியும், மாந்தரிடையே கயமை, இழிமை, நேர்மையின்மை, ஒழுங்குமீறல் பரவியதையறிந்து, மனம் நொந்து, **மனிதனைத் தேடுகிறேன்** எனத் தேடி, பண்பாடு காக்க, கொடுமைகள் மாய, குறைகள் களைய, தீயவை தீய வெடித்துக் கிளம்பிய எரிமலைக் கவிதைகள்.

*உலக மொழிகளில் தேசீயக் காப்பியங்கள் எனக் கூறத்தக்க மூன்றனுள் ஒன்று* ***பூங்கொடி*** *- மொழிக் கொரு காப்பியம், கண்ணனைய மொழிகாக்கக் கடி மணத்தைத் துறந்த ஒரு பெண்ணணங்கின் போராட்டம், மொழிப்புரட்சி வரலாறு.*

*காதல், வீரம், கையாற்றவலம், முப்பெருஞ்சுவை களும் முகிழ்த்தெழும்; காதலும், வீரமும் கரையென நிற்க, வீரப்பேராறு வீறிட்டுப் பாயும்* ***வீரகாவியம்.***

*பண்டைத் தமிழே, தமிழர்க்கு* ***ஊன்றுகோல்*** *எனப் பண்டிதம் பாடிய பைந்தமிழ்க் காப்பியம்.*

*'உண்டாலம்ம இவ்வுலகம்' எனப் பாடிய, பழந் தமிழ்ப் பாண்டியன், போர்வாள் எறிந்த* ***இளம்பெருவழுதி*** *கடலுள் மாய்ந்த நாடகக் காப்பியம்.*

***எப்படி வளரும் தமிழ்?*** *எனச் சிந்திக்க வைக்கும் கட்டுரைகள். மாணாக்கர்களை நல்வழிப்படுத்த* ***அன்புள்ள பாண்டியனுக்கும், இளவரசனுக்கும்*** *எழுதிய கடித இலக்கியங்கள்.*

***எக்கோவின் காதல்*** *கொண்டு, இச்* ***சீர்த்திருத்தச் செம்மல்****, பார் திருத்தப் படைத்த சீர்த்திருத்தச் சிறுகதைகள்.*

*முடியரசன் படைப்புகள், படிப்போர் தம் தசைநார்களைப் புடைக்க வைக்கும்; தோள்களை நிமிர வைக்கும்; வீறு கொண்டு எழ வைக்கும்; உள்ளம் உருகி அழ வைக்கும்; பண்பாடு காக்க வைக்கும்; தமிழுணர்ச்சி ஊட்டவைக்கும்; சங்க நூல்களைச் சுவைத்தது போன்று சிந்தை இனிக்கும்.*

*தாம் எழுதுகின்ற கருத்தை உணர்ச்சியோடு உரைத்துப் பிறர் உள்ளத்திற் குடிகொள்கின்ற பெற்றியாளரே கவிஞர்*

*என்ற இலக்கணத்திற்கேற்ப, தம்* **நெஞ்சிற்பூத்தவை** *எனும் கவித்துவம் திகழும் செம்மொழிச் செல்வங்களைத் துய்ப்போர் உண்மையில் பெறும்பேறு பெற்றவரே.*

***தமிழ் வெல்லட்டும்! தமிழர் உயரட்டும்!***

***தமிழ்மண் சிறக்கட்டும்!***

**முடியரசர் கவிபரப்பி முத்தமிழுலகுக்கு முடிசூட்டுவோம்!**

***- பாரி முடியரசன்.***

*முடியரசன் குடில்*
*569, சூடாமணி நகர்,*
*காரைக்குடி - 630 003.*

## பதிப்புரை

கவியரசர் முடியரசன் 1920இல் பிறந்தவர். 1998இல் மறைந்தவர். வாழ்ந்த ஆண்டுகள் 78. எழுதிய நூல்கள் 25. இந்நூல்கள் அனைத்தையும் ஒருசேரத் தொகுத்து பொருள் வழிப் பிரித்து 13 தொகுதிகளாக **கவியரசர் முடியரசன் படைப்புகள்** எனும் தலைப்பில் ஒரே வீச்சில் வெளியிடுகிறோம். கவியரசர் முடியரசன் பாவேந்தர் பாரதிதாசன் வழிநிலை அறிஞர். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்ற பெருமக்களின் கொள்கையை தம் நெஞ்சில் தாங்கியவர்.

தன்னலம் கருதாது தமிழ்நலம் கருதியவர். தன்னை முன்னிறுத்தாது தமிழையும் தமிழரையும் முன்னிறுத்தியவர். இவர் எழுதிய நூல்கள் அனைத்தும் தமிழுக்கு வளமும் வலிவும் பொலிவும் சேர்ப்பன. தமிழர்களுக்குப் படைக்கருவிகளாக அரண் சேர்ப்பன.

நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும் உயர்ந்த அறிவுச் செருக்கும் கொண்ட பாரதியின் பாடலுக்கு சான்றாக வாழ்ந்து காட்டியவர்.

**புதுநூற்கள் புதுக்கருத்தால்,**
**பொதுவகையால் தரவேண்டும்**
**புலவ ரெல்லாம்**

எனும் பாவேந்தர் பாரதிதாசன் வரிகளுக்கு இலக்கியமாகவும் இலக்கணமாகவும் வாழ்ந்து மறைந்தவர். இருபதாம் நூற்றாண்டில் **'பா'** உலகில் புதுமைப் பூத்த மரபுக் கவிஞர். இவர்தம் நூல்களை ஒருசேர வெளியிடுவதில் பெருமை அடைகிறோம்.

நன்றி

**கோ. இளவழகன்**

# நூலாக்கத்திற்குத் துணை நின்றோர்

*நூல் கொடுத்து உதவியோர்*

மு.பாரி

*நூல் உருவாக்கம்*

*நூல் வடிவமைப்பு*
செல்வி ச. அனுராதா

*மேலட்டை வடிவமைப்பு*
செல்வி வ.மலர்

*கணினிக்கோப்பு*
மு.ந.இராமசுப்ரமணிய ராசா,
சு. நித்தியானந், செல்வி சு. ரேகா

*மெய்ப்பு*
மு. பாரி, சுப. இராமநாதன், புலவர். இராசவேலு,
கி.குணத்தொகையன், அரு.அபிராமி,

---

*உதவி*
அரங்க. குமரேசன், வே. தனசேகரன்,
இல.தர்மராசு, ரெ. விஜயகுமார்,

---

*எதிர்மம் (Negative)*
பிராசசு இந்தியா (Process India)

*அச்சு மற்றும் கட்டமைப்பு*
ஸ்ரீ வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ்

---

**இவர்களுக்கு எம் நன்றியும் பாராட்டும் . . .**

# வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | துரைராசு |
| பெற்றோர் | : | சுப்புராயலு - சீதாலெட்சுமி |
| பிறந்த ஊர் | : | பெரியகுளம். |
| வாழ்ந்த ஊர் | : | காரைக்குடி |
| தோற்றம் | : | 7.10.1920 - இயற்கையடைவு : 3.12.1998 |
| கல்வி | : | பிரவேசபண்டிதம்,<br>மதுரைத் தமிழ்ச் சங்கம் (1934 - 39)<br>வித்துவான், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி,<br>மேலைச்சிவபுரி (1939-43) |
| பணி | : | தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை<br>உயர்நிலைப்பள்ளி, சென்னை, (1947 - 49).<br>மீ.சு.உயர்நிலைப்பள்ளி,<br>காரைக்குடி (1949 - 78) |
| திருமணம் | : | 2.2.1949<br>(கொள்கை வழிக் கலப்புத் திருமணம்) |
| துணைவியார் | : | கலைச்செல்வி |

| **மக்கள்:** | | **மருமக்கள்:** | | **பேரப்பிள்ளைகள்:** |
|---|---|---|---|---|
| குமுதம் | + | பாண்டியன் | = | அருள்செல்வம்,<br>திருப்பாவை |
| பாரி | + | பூங்கோதை | = | ஓவியம் |
| அன்னம் | + | சற்குணம் | = | செழியன், இனியன் |
| குமணன் | + | தேன்மொழி | = | அமுதன், யாழிசை |
| செல்வம் | + | சுசீலா | = | கலைக்கோ |
| அல்லி | + | பாண்டியன் | = | முகிலன் |

# இயற்றிய நூல்கள்

**கவிதைத் தொகுதி**

| | | |
|---|---|---|
| 1. | முடியரசன் கவிதைகள் | 1954 |
| 2. | காவியப் பாவை | 1955 |
| 3. | கவியரங்கில் முடியரசன் | 1960 |
| 4. | பாடுங்குயில் | 1983 |
| 5. | நெஞ்சு பொறுக்கவில்லையே | 1985 |
| 6. | மனிதனைத் தேடுகின்றேன் | 1986 |
| 7. | தமிழ் முழக்கம் | 1999 |
| 8. | நெஞ்சிற் பூத்தவை | 1999 |
| 9. | ஞாயிறும் திங்களும் | 1999 |
| 10. | வள்ளுவர் கோட்டம் | 1999 |
| 11. | புதியதொரு விதி செய்வோம் | 1999 |
| 12. | தாய்மொழி காப்போம் | 2000 |
| 13. | மனிதரைக் கண்டு கொண்டேன் | 2005 |

**காப்பியம்**

| | | |
|---|---|---|
| 14. | பூங்கொடி | 1964 |
| 15. | வீரகாவியம் | 1970 |
| 16. | ஊன்றுகோல் | 1983 |
| 17. | இளம்பெருவழுதி (நாடகம்) | 2008 |

**சிறுகதைத் தொகுப்பு**

| | | |
|---|---|---|
| 18. | எக்கோவின் காதல் | 1999 |

**கடித இலக்கியம்**

| | | |
|---|---|---|
| 19. | அன்புள்ள பாண்டியனுக்கு | 1999 |
| 20. | அன்புள்ள இளவரசனுக்கு | 1999 |

**கட்டுரைத் தொகுப்பு**

*21.* தமிழ் இலக்கணம் *1967*

*22* பாடுங் குயில்கள் *1975*

*23.* சீர்த்திருத்தச் செம்மல் வை.சு.சண்முகனார் *1990*

*24.* எப்படி வளரும் தமிழ்? *2001*

*25.* பாட்டுப் பறவையின் வாழ்க்கைப் பயணம் (தன்வரலாறு) *2008*

# பொருளடக்கம்

தொகுப்புரை ........................................ iii
பதிப்புரை ........................................ ix
வாழ்க்கைக்குறிப்பு ........................................ xi
இயற்றிய நூல்கள் ........................................ xii

## பூங்கொடி

கவிஞரைப் பற்றி ........................................ *3*
முன்னுரை ........................................ *9*
கதைச் சுருக்கம் ........................................ *10*
பூங்கொடி ........................................ *15*
தமிழ்த் தெய்வ வணக்கம் ........................................ *15*
படைப்பு ........................................ *16*
*1.* விழாவயர் காதை ........................................ *17*
*2.* பழியுரை காதை ........................................ *21*
*3.* பூங்கா புக்க காதை ........................................ *26*
*4.* படிப்பகம் புக்க காதை ........................................ *31*
*5.* தாமரைக்கண்ணி தோன்றிய காதை ........................................ *37*
*6.* கல்லறை காண் காதை ........................................ *45*
*7.* கடல்நகர் புக்க காதை ........................................ *52*
*8.* கடல்நகரில் தங்கிய காதை. ........................................ *59*
*9.* திருக்குறள் கற்றுத் தெளிந்த காதை ........................................ *63*
*10.* தொல்காப்பியம் உணர்ந்த காதை ........................................ *67*
*11.* ஏடு பெற்ற காதை ........................................ *72*
*12.* மலையுறையடிகள் வாழ்த்திய காதை ........................................ *79*
*13.* மீனவன் வரலாறுணர்ந்த காதை ........................................ *85*
*14.* சுவடியின் மரபு தெரிவுறு காதை ........................................ *95*

15. இசைத்திறம் உணர எழுந்த காதை .......................... 104
16. எழிலியின் வரலாறறிந்த காதை ............................ 109
17. எழிலிபாற் பயின்ற காதை .................................... 118
18. இசைப்பணி புரிந்த காதை .................................... 124
19. கோமகன் மீண்டும் தோன்றிய காதை...................... 137
20. பெருநிலக்கிழார் வாழ்த்திய காதை ....................... 150
21. நூல்நிலையம் அமைத்த காதை.............................. 160
22. கோமகன் கொலையுறு காதை .............................. 166
23. சிறைப்படு காதை ................................................ 176
24. சிறைவிடு காதை ................................................. 186
25. கிழார்திறம் அறிந்த காதை .................................... 193
26. யாழ்நூல் பெற்ற காதை ........................................ 205
27. அயல்நாடு சென்று வந்த காதை ............................ 213
28. சொற்போர் நிகழ்த்திய காதை ............................... 220
29. அறப்போர் நிகழ்த்திய காதை................................ 230
30. சிறையகம் புகுந்த காதை...................................... 238
31, விடுதலைக் காதை ............................................... 244

## வீரகாவியம்

நன்றியுரை ......................................................... 253
இந்நூலைப் பற்றி ................................................ 254
காப்பிய உறுப்பினர் ............................................. 255
தமிழ் வாழ்த்து .................................................... 256

## காப்பியப் படலங்கள்

காட்சிப் படலம் .................................................. 257
திருமணப் படலம் ................................................ 309
மகப்பெறு படலம் ............................................... 332
படையெழுச்சிப் படலம் ....................................... 367
போர்ப்படலம் ................................................... 406

# பூங்கொடி

# கவிஞரைப் பற்றி

*7-10-1920* தமிழ் நெஞ்சங்களில் நிலை பெற்றுவிட்ட நாள். ஏனெனில், அதுதான் கவியரசு முடியரசனார், சுப்பராயலு - சீதாலெட்சுமி என்பார்க்கு மகனாகப் பிறந்த நல்ல நாள். "பிறப்பி னாலேயே பெருமை வந்து விடுமா?" என்று சிலர் வினவுவர். வாழ்வின் சிறப்பினால் பெருமை வளர்கின்ற பொழுது அது பிறப்பையும் பெருமைப்படுத்தி விடுவது உண்மைதானே!

பெரியகுளம்.... மதுரை மாவட்டத்தின் எழில் கொஞ்சும் நகரம் மட்டுமன்று. இருபதாம் நூற்றாண்டின் இலக்கியப் பசியைத் தணிக்கத் தமிழ் விருந்து படைத்த கவியரசு முடியர சனாரை ஈன்றெடுத்த நகரமும் ஆகும்.

உரிய வயதில் தொடக்கக் கல்வி கற்பிக்கப்பட்டது. தாய்மாமன் துரைசாமி பிற்கால இலக்கியங்களில் பெரும் ஈடுபாடு கொண்டவர். இதனால், 'இலக்கியச் சாறு' பருகும் பழக்கம் இளமையிலேயே இவருக்குக் கிட்டிற்று. அது இந்தக் கவிதை மீனுக்குப் பெரிய குளத்தை நல்ல நீச்சற் குளமாக ஆக்கிற்று.

வளைந்து கிடக்கும் மேற்குமலைத் தொடரும் அதில் **மேய்ந் துரியும்** மேகக் காட்சியும்- இசைபாடும் புள்ளினமும் இறங்கிவரும் சிற்றாறும் - வெள்ளிக் காசைக் சுண்டிவிட்டாற் போலத் துள்ளிக் குதிக்கும் கெண்டைமீன்களும், வெடித்துச் சிரித்துக் காண்பவர் விழியைக் கவரும் வாசமலர்க் **குலமும்** துரைராசுவின் இதயத்தைக் கவர்ந்தன; என்னவோ செய்தன. தாய்மாமன் துரைசாமி ஊட்டிய இலக்கியச்சாறு தன் வேலையைத் தொடங்கி விட்டது.

விளைவு......? இளைஞர் துரைராசு கவிஞர் முடியரசன் ஆனார். மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி தமிழறி வைத் தந்து சிறப்பித்தது. அக்கல்லூரியில் நிகழும் அறிஞர் பெருமக்களின் உரைகள், அப்போது நிகழ்ந்த உரை யாடல்கள் கவிஞரின் உள்ளத்தில் ஆழ்ந்த மொழிப்பற்றையும் இனப் பற்றையும் கிளர்ந்தெழச் செய்தன.

முடியரசன் தமது **21**ஆம் வயதில் எழுதிய, 'சாதி என்பது நமக்கு ஏனோ? என்ற கவிதையே அவரது முதல் கவிதையாகும். இது 'திராவிட நாடு' இதழில், 'பெரியகுளம் துரைராசு' என்ற பெயரில் வெளியாயிற்று.

**1940**ஆம் ஆண்டில் தந்தை பெரியாரின் தன்மான இயக்கத்தில் தொடர்பு கொண்டார். இத்தொடர்பு அவருடைய ஆளுமையை வெற்றிபெறச் செய்த போதிலும் **1943** - ஆம் ஆண்டு வித்துவான் தேர்வில் தோல்வியுறச் செய்தது. அவர் தோல்வியுறவில்லை; தோல்வியுறுமாறு செய்யப்பட்டார்.

இடையிலே நவாபு டி.எசு. இராசமாணிக்கம் நாடகக்குழு தம்பால் பணியாற்ற வருமாறு அழைத்தது, சென்றார். அங்கிருந்த 'சிறைவாழ்க்கையும்' மதவழிபாட்டு முறைகளும் வெறுப்பை விளைத்தன. எனவே போன சுவடு அழியு முன்னரே திரும்பி வந்துவிட்டார். பின்னர்த் தம்மைத் தோல்வியுறச் செய்தவர் களைத் தோற்கடிப்பதற்காகத் 'தலைமறைவாக' இருந்து படித்து **1947**இல் வித்துவான் பட்டம் பெற்றார்.

**1947-1949** வரையிலான இரண்டாண்டுக் காலம் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். இக்காலம் அவர்தம் எழுத்து வன்மை உரம் பெற வாய்ப்பாக அமைந்தது மட்டுமன்றி, திராவிட இயக்கத் தலைவர்கள் மற்றும் தமிழ் அறிஞர் பலரோடு தொடர்பு கொள்ளவும் ஏற்றதாக இருந்தது. போர்வாள், கதிரவன், குயில், முருகு, அழகு முதலிய இதழ்கள் இவர்தம் சிறுகதைகளையும், கவிதைகளையும், கட்டுரை களையும் தாங்கி வந்தன. அப்பொழுது புதுக்கோட்டையிலிருந்து வெளி வந்த "பொன்னி" எனும் இலக்கிய இதழ் 'பாரதிதாசன் பரம் பரையில்' முன்னணியில் நிற்பவராக இவரை அறிமுகம் செய்து வைத்தது.

சென்னையில் பேராசிரியர் மயிலை சிவமுத்து, தமிழ்த் தென்றல் திரு.வி.க., கவிஞர் வாணிதாசன் ஆகிய புலமைச் சான்றோர் களுடன் இவர் இடையறாத் தொடர்பு கொண்டிருந் தார்.

பாவேந்தர் பாரதிதாசனால், 'தமது மூத்த வழித் தோன்றல் இவர்தாம்' எனப் போற்றப்பட்டார். பேரறிஞர் அண்ணாவால் "திராவிட நாட்டின் வானம்பாடி" என அழைக்கப்பட்டார்.

**1949**ஆம் ஆண்டு பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர் களின் சீரிய தலைமையில் கலைச்செல்வி என்னும் நலத்தகை யாரைக் கலப்புத் திருமணம் செய்து கொண்டார்.

அப்பொழுது நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தனியாக எதிர்ப்பதைக் காட்டிலும் துணையோடு சென்று எதிர்ப்பது தான் வெற்றிக்குரிய போராட்டமுறை என்பதனால் தக்க துணை யோடு (துணைவியாரோடு) ஈடுபட்டார்.

திருமணம் முடிந்த பின்னர்ச் சென்னையிலிருந்து விலகி வந்து காரைக்குடியில் மீ.சு. உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரிய ராக அமர்ந்து 28 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார். "ஆணும் பெண்ணும் சரிநிகர்" என்ற பாரதியின் வாக்கை நிலை நிறுத்துவது போல் குமுதம், பாரி, அன்னம், குமணன், செல்வம், அல்லி என மகள்மார் மூவரையும், மகன்மார் மூவரையும் பிள்ளைச் செல்வங் களாகப் பெற்றுள்ளார்.

**1955**ஆம் ஆண்டில் குருதி உமிழும் கொடு நோய்க்கு இலக்கானார். 'பிழைப்பது அரிது' என்ற நிலை வந்துற்ற போது புதுக்கோட்டை அண்ணல் சுப்பிரமணியனார் தாயினும் சாலப் பரிந்தெழுந்து, நோய் நீங்கி நலம் எய்த மருத்துவர் வி.கே. இராமச் சந்திரனார் துணையோடு எல்லா வகையானும் உதவி புரிந்தார். அவ்வுதவி இயம்பத் தீரா ஏற்றமுடையது, புத்துயிர் கொடுத்த அவ்வித்தகரை தந்தையாகவே கருதி வருகிறார் கவிஞர். காலத்தினால் செய்த ஞாலத்தின் பெரிதாகிய அவ் வுதவியை நாடொறும் எண்ணி உருகுகின்றார்.

**1962**இல் சென்னை சென்று திரைப்படத்துறையில், "கண்ணாடி மாளிகை" என்ற திரைப்படத்திற்கு வசனம், பாடல்கள் எழுதினார். எனினும் திரைப்படத் துறையில் நடக்கும் சிறுமைகளைக் கண்டு வெறுப்புற்று, தம் இயல்புக்கு அத்தொழில் சிறிதும் ஒத்து வராதது கண்டு, மறு ஆண்டே தமிழாசிரியப் பணிக்கு மீண்டார்.

**1966**இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட தாகக் கல்வித்துறை யினரால் இவர்மீது வழக்கொன்று கொண்டு வரப்பட்டது. 'விசாரணை' நடைபெற்றது. அப்போது "இந்தியை எதிர்ப்பவன்தான் நான். அதற்கு என் பாடல்களே சான்று. ஆனால் இப்போது சாற்றப்பட்டிருக்கும் குற்றங்கள் பொய் யானவை. என்மீது பழி சுமத்துவதற்காக இட்டுக் கட்டப் பட்டவை" என்று வாக்குமூலம் கொடுத்தார். ஆய்வுக்குப் பின்னர் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

இளமைக் காலத்தில் முருகனைப் பாடுவதே முத்தமிழ் கற்றதன் பயன் என்றிருந்த இவர் **1940**-க்குப் பிறகு சமுதாயச் சூழல்

- நாடு - மொழி இவற்றையே பாடிவருகின்றார். சூழ்நிலையின் தாக்கமும். சுயமரியாதை இயக்க வேட்கையும், பாவேந்தர் பால் கொண்ட பற்றும் கடவுள் மேலிருந்த கருத்தை மாற்றிக் காலத்தின் தேவையைப் பாடவந்த கவிஞராக ஆக்கிவிட்டன.

கலப்புமணத்தின் தேவையைப் பற்றி கவிதை பலபாடிய இவர் தாமும் கலப்புமணம் செய்துகொண்டு தம் பிள்ளை கட்கும் கலப்புமணம் செய்வித்துத் தம் கொள்கைக்கு வெற்றி தேடித் தந்துள்ளார். "அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்" என்னும் வள்ளுவன் வாக்கைத் தோல்வியுறச் செய்த பெருமை இவர்க் குண்டு.

சாதிசமயங்களுக்குள் ஆட்படாமை - நன்றி மறவாமை - நட்பைப்பேணல் - கொள்கைப் பிடிப்பு - குறிக்கோள் வாழ்வு - உதவும் உள்ளம் - ஒட்டார் பின் செல்லாமை - ஆசிரியர்ப் போற்றல் - ஆகியன இவர்தம் இயற்பிற் சில.

எத்தனையோ இடர்ப்பாடுகளும், இக்கட்டுகளும் வந்த போதும், தாம் கொண்ட கொள்கையில் தடம் புரளாமல் தன்மானக் குன்றமாக விளங்குபவர். அரசவைப் பதவிகள் நாடி வந்தபோதும், தம்மை நிறம் மாற்றிக் கொள்ளாது அப்பதவி களைப் புறக் கணித்தவர். விளம்பரத்தை விரும்பாதவர். எளிமை வாழ்வை விரும்புபவர்.

"சங்கப் புலவர் தம் பாடலே பாடல்" என்பதில் அழுத்த மான நம்பிக்கை உடைய இவர் பாட்டுலகில் பாரதி யாரைப் பாட்டனாகவும், பாரதிதாசனாரைத் தந்தையாகவும் கருதிக் "குலமுறை கிளத்தும்" கொள்கையுடையராக விளங்குகிறார்.

பெரும்பாலும் 'தன்னை மறந்த லயம் தன்னில்'இருக்கும் இயல்பினார்; 'புட்டி'களின் துணையால் அன்று; எட்டியவரை சிந்திக்கும் இயல்பினால். கனவிலும் கவிதை பாடுவது என்பது இவருக்கே உள்ள தனித்திறனாகும். கனவிற்பாடிய கவிதையை மறுநாள் காலையில் எழுந்து வரிமாறாமல் எழுதிவிடும் இவரது ஆற்றல் வியப்புக்குரியது; இஃது இயற்கை வழங்கிய அருட் கொடை என்றே கூறல் வேண்டும்.

குடியரசு, திராவிடநாடு, நம்நாடு,முரசொலி, மன்றம், தென்றல், எழில் மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு தலைசிறந்த இதழ்கள், இவர்தம் எழுத்தோவியங்களைத் தாங்கி வந்துள்ளன.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர்தம் நூல்கள் பாடநூல்களாக வைக்கப்பட்டுள்ளன. பல்வேறு பல்கலைக் கழகங்களில் இவர்தம் கவிதை நூல்கள் **‘முனைவர்’** பட்டத் திற்காகவும், **‘எம்.ஃபில்’** பட்டத்திற்காகவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன.

**‘முடியரசன்’** வாழ்க்கை வரலாற்றை, **‘இந்திய இலக்கியச் சிற்பிகள்’** எனும் வரிசையில் **‘சாகித்திய அகாதமி’** வெளியிட்டுள்ளது. முடியரசன் நூல்கள் தமிழ் நாட்டரால் நாட்டுமையையாக்கப்பட்டுள்ளன.

**“அழகின் சிரிப்பு”** என்ற இவர்தம் கவிதை 1950 ஆம் ஆண்டு **கோவையில்** நடந்த முத்தமிழ் மாநாட்டில் முதற் பரிசுக்குரியதெனப் பாவேந்தர் பாரதிதாசனால் தேர்ந்தெடுக்கப் பெற்ற சிறப்பினையுடையது. 1966 இல் **“முடியரசன் கவிதைகள்”** என்ற நூலும் 1973 இல் **“வீரகாவியம்”** என்ற நூலும் தமிழக அரசின் பரிசிலைப் பெற்றன. சிறப்புக்குரிய பல பாடல்கள் சாகித்திய அகாதெமியால் இந்தியிலும், ஆங்கிலத் திலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. கன்னடத்திலும், சோவியத் மொழியிலும் இவரது கவிதைகள் பல மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

1966 இல் பறம்புமலையில் நடந்த பாரி விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் இவர்க்குக் **‘கவியரசு’** என்னும் பட்டம் வழங்கிச் சிறப்புச் செய்தார். 1973 ஆம் ஆண்டு, **தமிழ்நாடு அரசு**, ‘நல்லாசிரியர் விருது’வழங்கிச் சிறப்பித்தது. 1979 ஆம் ஆண்டு பெங்களூர் உலகத் தமிழ்க்கழகத்தினர் இவரை அழைத்துப் பொன்னாடை அணிவித்து பொற் பேழையும் வழங்கினர். மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரின் விருப்பத்திற்கிணங்க, நெய்வேலி, ‘பாவாணர் தமிழ்க் குடும்பத் தினர்’ பாராட்டு விழா எடுத்துச் சிறப்பித்தனர். இதுபோலவே இவர்பாற்பயின்ற மாணவர் சிலர் இவர்தம் மணிவிழா நாளன்று(7-10-1979) பொன்னாடை போர்த்துப் பொற்கிழி வழங்கி மகிழ்ந்தனர். சிவகங்கையில், கவிஞர் மீரா, பாரதியார் நூற்றாண்டு விழாவில், ‘பொற்குவை’ அளித்து மகிழ்ந்தார். 1980ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக்கழக மாநில இலக்கிய அணி, கவிஞரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவினை சென்னையில் நடத்தியது. அப்பொழுது கழகத்தின் சார்பில் டாக்டர் கலைஞர் அவர்கள் பத்தாயிரம் வெண் பொன் பொற் கிழியும் **‘கவிப்பேரரசர்’** எனப் பட்டமும் வழங்கிப் பாராட்டிச் சிறப்புச் செய்தார். 1983ஆம் ஆண்டு தமிழகப் புலவர்குழு **“தமிழ்ச் சான்றோர்”** என்னும் விருது வழங்கிச் சிறப்பித்தது.

*1993ஆம் ஆண்டு அனைத்து இந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில், தலைவர் விக்கிரமன், எழுத்தாளர்களுடன் கவிஞரின் இல்லத்திற்கு வந்து நிதி வழங்கிச் சிறப்புச் செய்தனர். 1993ஆம் ஆண்டு, கரூரில்* **‘இந்திராணி இலக்கியப் பரிசு’,** *இவரின்* **‘பூங்கொடி’** *காப்பியத்திற்கு வழங்கிச் சிறப்பித்தனர். 1993ஆம் ஆண்டு சென்னையில்,* **“அரசர் முத்தைய்யவேள் பிறந்தநாள் நினைவுப் பரிசு” ஐம்பதினாயிரம்** *வெண் பொன் பொற்கிழி, அண்ணாமலை அரசர் நினைவு அறக் கட்டளை யினரால் வழங்கிக் கவிஞரின் தமிழ்ப்பணி சிறப்பிக்கப் பட்டது.*

*1994ஆம் ஆண்டு* **‘ராணா விருதும்’ பத்தாயிரம்** *வெண் பொன் பொற்கிழியும் ஈரோடு தமிழ் இலக்கியப் பேரவையினர், கவிஞரின் தமிழ்ப் பணிக்காக வழங்கிச் சிறப்பித்தனர். 1996ஆம் ஆண்டு, அகில இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தினர்,* **‘கல்வி உலகக் கவியரசு’** *எனப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தனர். 1997ஆம் ஆண்டு, கவிஞர் பயின்ற மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில், பழைய மாணவர் பாராட்டு விழா வரிசையில், முதன்முதலாக இவர்க்குப் பாராட்டு விழா நடத்தி, ‘பொற்குவை’ வழங்கிச் சிறப்பித்தனர்.*

**‘பாவரசர் முடியரசனாரின் தமிழ்த் தொண்டு’** *என்ற ஆய்வு நூல், முனைவர் மு. இளங்கோவன் என்பாராலும், ‘முடியரசன் படைப்புகள்’ என்ற ஆய்வு நூல் முனைவர் சிரீகுமார் என்பாராலும், ‘பூங்கொடியும் மணிமேகலையும்’ என்ற ஒப்பாய்வு நூல் முனைவர் மு. நிலாமணி என்பாராலும் எழுதப்பட்டு வெளிவந்துள்ளன.*

*‘கவியரசர் முடியரசனார் முத்தமிழ் மன்றம்’ என்னும் பெயரில், ஈரோட்லும் ‘கவியரசர் முடியரசன் அவைக்களம்’ என்னும் பெயரில் காரைக்குடியிலும் இலக்கிய அமைப்புகள் தமிழ்த் தொண்டாற்றி வருகின்றன.*

*எல்லா நம்பிக்கைகளிலும் மேலானதாக அவர் கொண்டிருப்பது “என்றும் நானோர் இளைஞன்” என்ற நம்பிக்கையே. இந்த நம்பிக்கை சுவையும், பயனும் முதிர்ந்த பல கவிதைகளை மேலும் தரும். என்று நம்புவோமாக.*

# முன்னுரை

மொழிவளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு, இல்லறந் துறந்து, தன்னலம் வெறுத்துப் பொதுநலம் ஒன்றே பேணித் தன் வாழ்வையே கொடுக்க வல்ல பெண் மகளொருத்தி நம்தமிழகத்துக்கு வேண்டுமென எண்ணினேன். அவ்வெண்ணத்தின் விளைவே இப்பூங்கொடி.

சமயங்கட்கெல்லாம் தனித்தனிக் காப்பியம் பெற்று மிளிரும் நம் தாய்மொழி. மொழிக்காக ஒரு காப்பியம் பெறுவதும் ஆக்கந் தானே!

மொழிநலங்கருதி முற்பட்டுவரும் இப்பூங்கொடி, இக்காலத்து நிகழ்ச்சிகள் பலவற்றை உள்ளத்தில் இறுத்தி ஊருக்கு உரைத்து நிற்பாள்.

உலகம் அவற்றைச் செறாது, வெறாது சிந்திப்பதாக. அவள் நடைபற்றிக் காய்தல் உவத்தல் அகற்றி, நடுநின்று உண்மை உரைப்பதாக.

அன்பன்.

முடியரசன்

# கதைச் சுருக்கம்

தமிழகம், எங்கும் விழாக் கோலத்துடன் பொலிந்தது; பொங்கற் புதுநாள் அனைவர் உள்ளத்தையும் மகிழ்வித்துக் கொண்டிருந்தது. பகலும் இரவும் கலை நிகழ்ச்சிகள் சிறப்புற் றோங்கின. ஆனால், அருண்மொழியும் அவள் மகள் பூங்கொடியும் இசையரங்கேற வாராமையால் ஊரார் பலவாறு பேசினர். இதனால் வருந்திய வஞ்சி, தன்மகள் அருண்மொழிக்குத் தேன்மொழி வாயிலாகச் செய்தி கூறியனுப்பினள். மலையுறை யடிகளுடைய குறளகத்திற் சேர்ந்த அவள், இத் துறையையே வெறுத்து வாராது நின்றனள். அருண்மொழி தன்தோழியாகிய தேன்மொழியிடம் தன் கணவன் வடிவேல் படுகொலை யுண்டதைக் கூறக் கேட்டுக் கொண்டிருந்த பூங்கொடி தேம்பி யழுதனள். அருண்மொழி, அவ்வழுகையை மாற்றப் பூங்கொடியைப் பூங்காவிற்கு அனுப்பினள். தோழியாகிய அல்லியும் உடன் சென்றாள்.

பூங்காக் காட்சிகளை இருவரும் கண்டுகளிக்கும் பொழுது பூங்கொடிமேற் காதல்கொண்ட கோமகன் அங்கு வருவதறிந்து, அஞ்சிய பூங்கொடி, ஆங்கிருந்த படிப்பகத்தினுட் புகுந்தாள். வெளியில் நின்ற அல்லியிடம், தன் உளக்குறிப்பை அவன் புலப்படுத்த, அவள் மறுத்துரைத்துப் பூங்கொடியின் துறவுள்ளத்தை எடுத்துரைத்தாள். கோமகன் ஆசைதணியானாகி யகலத், தாமரைக்கண்ணி அங்கே வந்தனள். அவள் இவ்விருவரின் நிலையறிந்து, முன்வந்த வழியே செல்லாது முத்தக்கூத்தன் கல்லறைவழியே செல்லுமாறு பணித்து, அவன் வரலாறும் கூறிப் பூங்கொடியைக் கடல் நகர்க்கு வருமாறு மொழிந்தகன்றனள்.

பூங்கொடியின் நினைவொடு போகிய கோமகனிடத்துத் தாமரைக்கண்ணி சென்று, இடித்துரை கூறி மீண்டனள். தாமரைக் கண்ணி கூறியவாறு, பூங்கொடி கடல் நகர்க்குச் சென்று, சொன் மழை பொழிந்து, கயவர்வீசிய கல்லடிபட்டும் அஞ்சாது பணி புரிந்தனள். இடைவிடாப் பணியால் திருந்திய மாந்தர்தம் வேண்டு கோட் கிணங்கிப் பூங்கொடி கடல் நகரிலே தங்க, தாமரைக்

கண்ணி மட்டும் மீண்டனள். அந்நகருக்கு வந்த இலக்கியர் என்னும் நாவலர், பூங்கொடியைக் கண்டு தம் முன் வரலாறு ரைத்து, அவளுக்கு ஊக்கமூட்டித் திருக்குறட்குத் தெளிவுரையும் கூறி, விடை கொண்டனர்.

தாமரைக்கண்ணி இரண்டாம் முறையும் மீண்டும் கடல் நகருக்கு வந்து, பூங்கொடி பால் கோமகன் செய்யும், தமிழ்ப்பணி யுரைத்துப் பன்மொழிப் பயிற்சி பெறப் பணித்து, எழுச்சியூட்டித் தொல்காப்பிய விளக்கம் மொழிந்து மீண்டனள். பூங்கொடி அந்நகரில் தங்கியிருக்கும் பொழுது, தழிழேடுகள் தேடித் தொகுக்கும் பணியை மேற் கொண்ட நாவலூர் அமுதம் என்னும் மூதாட்டி, ஆங்கு வந்து, இவளை வாழ்த்திப் பாராட்டிக் கலைமகள் நிலையத்தி லிருந்து தான் பெற்ற இசையுங் கூத்துங் கூறும் இருபெருஞ் சுவடிகளை ஈந்தனள். பூங்கொடி மகிழ்ந்து வணங்கிச் சுவடிகளுடன் தாயகம் மீண்டனள்.

மீண்ட பூங்கொடி மலையுறையடிகளிடம் நிகழ்ந்தவை கூறி, மீனவன் என்பான் விடுத்துச் சென்ற இருபெருஞ் சுவடி களையும் நாவலூர் அமுதம் தந்தமையையும் மொழிந்து நின்றனள். அடிகளார் மகிழ்ந்து, மாந்தர்க்கு எழுச்சியூட்ட, மீண்டும் இசைப்பணி புரிய எழுமாறு பணித்துப் பொதுப்பணிக்கு வேண்டும் பண்புகளையும் விளக்கி வாழ்த்தியருளினர். மேலும் அவர் மீனவன் வரலாற்றையும் கூறியருளினர்.

“நெல்லூர் என்னும் ஊரில் பொன்னி என்பவள் தன் தந்தையை மீறி வில்லவன் என்பானைக் கலப்புமணஞ் செய்துகொண்டனள். அவள் ஆண்மகவொன்றைப் பெற்று மறைந்தனள். வில்லவன் மனம்நொந்து, குழந்தையை ஒருவரிடம் கொடுத்து, உலகை வெறுத்துச் சென்றுவிட்டான். கற்றுவளர்ந்த அவ்விளைஞனே மீனவன். அவன் புரட்சிமனப்பான்மையுடையவனாய். விளங்கினான் ஒருநாள் சிலரால் தாக்குண்டான். பழமையில் ஊறிய மாந்தர், இவனை வளர்ப்போர்க்குப் பல தொல்லைகள் தந்தனர். தன்னாலன் றோ இத்தொல்லைகள் இவர்கட்கு நேர்கின்றன என எண்ணிய மீனவன் யாரும் அறியா வகையில் புறப்பட்டுக் கூடல் நகரினை அடைந்தான்.

கூடல் நகரில் மீனவன் பணிபுரிந்து வருங்கால், அங்கிருந்த தமிழ்ச் சங்கத்தில் ஓர் இசைச் சுவடி கிடைக்கப் பெற்றான். அதன் துணையால் இசை பரப்பும் நாளில், ஏமகானன் என்னும் வடபுலத் திசை வல்லான், தங்கத்தேவன் ஏவலால் மீனவனிடம் வந்து, வடநாட்டிசை பயிலச் சொன்னான். மீனவன் மறுத்து எள்ளி

நகையாட வெட்கித் திரும்பிய ஏமகானனின் தூண்டு தலால் சீற்றங் கொண்ட தங்கத்தேவன் மீனவனைக் கொலை செய்ய முயன்றான். அத்தீமையிற்றப்பிப் பிழைத்த மீனவன், கூடலைவிட்டு வேறிடஞ் சார்ந்தனன். எனினும் கொடியோன் ஏவத் தீயோர் சிலர் அவனைக் கொலை செய்துவிட்டனர். அவன் இறக்கு முன் இசைச் சுவடியைக் கலைமகள் நிலையத்திற் சேர்க்குமாறு பணித்தனன். அச்சுவடி பூங்கொடியாகிய நின்பால் வந்துற்றது. இதன் துணையால் மீண்டும் இசைப்பணி புரிக" என அடிகள் உரைத்துச் சென்றனர்.

அருண்மொழியும் இசைவு தந்து, இசைச் சுவடியின் விளக்கத்தை எழிலி என்னும் மாதரசியிடம் சென்று பெறுமாறு பணித்தனள், பூங்கொடி, எழிலியின் வரலாறறிய விழைந்தனள். அடிகளும் கூறுவாராயினர்; "கொடுமுடியில் பிறந்த எழிலி இசைத்துறையில் ஒப்புயர்வின்றி விளங்கினாள். அப்பொழுது புகழ்பெற்ற கூத்தன் ஒருவனைக் கலப்புமணம் செய்து கொண்டாள். ஒருசமயம் கூத்தின் பொருட்டு அயல்நாடு சென்று திரும்புங் கால், புயலால் மரக்கலம் உடைய, அருகில் இருந்த தீவை அவன் அடைந்தான். தப்பிப் பிழைத்த சிலர், கூத்தன் இறந்ததாக எழிலியிடம் கூற, அளவிலாத் துன்பம் அடைந்திருந்தாள். தீவினுள் நுழைந்த கூத்தன் அத்தீவின் தலைவன்பால் தன் திறமை காட்டிப் பரிசில் பல பெற்று ஊர் திரும்பினன். திரும்பிய அவனைக் கண்டு எழிலி அளவிலா உவகை எய்தினள். அப்பெருமாட்டியிடம் இச்சுவடியிற் சொல்லிய செய்தி களைத் தெரிந்து கொள்க" என்றனர்.

பூங்கொடி எழிலிபாற் சென்று இசை நுணுக்கமும் யாப்பிலக் கணமும் தெளிந்து, இருதுறையிலும் வல்லவளாக விளங்கினாள். இதுகண்டு மகிழ்ந்த அடிகளார் இசைப்பள்ளி ஒன்றனை நிறுவிப் பயிற்றும் பொறுப்பைப் பூங்கொடிபால் ஒப்படைத்தனர். இப்பணி நடைபெறுங்கால் சண்டிலி என்னும் வடபுலப் பெண்ணொருத்தி இசை பயில வந்தனள். அவளும் ஆர்வத்தால் அத்துறையில் மேம்பாடடைந்தனள். அவள் முன் பொருகால் தென்னாட்டு மலைவளம் காணவந்து, பொதிகையில் கணவனோடு தங்கியிருந்தனள். அங்கே இசைக்செல்வி ஒருத்தியின் தேவார இசைகேட்டு மயங்கித் தமிழ் இசையை வேட்டுத் தனக்கு அவ்விசையைப் பயிற்றுமாறு வேண்டினள். அவ்விசைச் செல்வி பூங்கொடியிடம் செல்க என ஆற்றுப்படுத்த இங்கு வந்து சேர்ந்தனள். பயின்று முடித்த சண்டிலி வேங்கை நகர்க்கு வருமாறு பூங்கொடியை வேண்டினள். இவளும் இசைந்து அடிகளிடம் ஒப்புதல் பெற்று, வடபுலம் சென்று இசைப்பணி புரிந்தனள்.

மணவாழ்வு வெறுத்த பூங்கொடியை நினைந்து வருந்திய வஞ்சி, கோமகனை அடைந்து, அவனைத் தூண்டி, அவனுக்கு மீண்டும் காம உணர்ச்சியை உண்டாக்கி அவனை வேங்கை நகர்க்கு அனுப்பினாள். அவன் இசை பயில்வான் போன்று, பூங்கொடிபாற் சென்று தன் உள்ளக்குறிப்பைப் புலப்படுத்தினன். அவள் அறவே வெறுத்துக் கூறி அனுப்பிவிட்டாள். தோல்வி கண்ட கோமகன் எவ்வாறேனும் இவளை அடைவதாக வஞ்சினம் கூறிச் சென்றான். அந்நகரில், இசையில் பெரு விருப்பங்கொண்ட பெருநிலக்கிழார் என்பவர் பூங்கொடியின் இசைப்புலமையைக் கேள்வி யுற்று அவளுக்கு அழைப்பு விடுத்தனர். அவளும் தனித்து இங்குவந்து பலவகை இசையும் பாடி மகிழ்வித்தனள். மகிழ்ந்த அவர், ஆடலிலும் பாடலிலும் சிறந்திருந்து இறந்துபோன தன் மகளைப் போலவே விளங்கும் இவளையும் மகளாகவே கருதிப் பூங்கொடிக்கு உதவ நினைத்தனர். அதன்படி பூங்கொடியின் வேண்டுதலால் மிகப் பெரிய நூலகம் ஒன்று நிறுவ இசைந்தனர்.

இசைபயிலும் சண்டிலியைக் காண வந்திருந்த அவள் கணவன் துருவன், அம்மாளிகையின் ஒருபால் தங்கியிருந்தனன். அந்நள்ளிரவில் கோமகன் பூங்கொடியின் அறையை நோக்கிப் பதுங்கிப் பதுங்கி நடந்தான். இதனைக் கண்டு ஐயுற்ற துருவன், தவறுதலாக சண்டிலியின் அறையுட் புகுந்த கோமகனைக் கொலை செய்துவிட்டுச் சண்டிலி யோடு ஓடி மறைந்தான். பெருநிலக்கிழாரிடம் விடைபெற்றுத் திரும்பிய பூங்கொடி, கோமகன் கொலையுண்டு கிடப்பதைக் கண்டு அஞ்சிப்பதறிக் கிழாரிடம் சென்றாள். கொலைச் செய்தி யறிந்த ஊர்காவலர் இங்கு வந்து ஆய்ந்தனர். அப்பொழுது கிழாருடன் பூங்கொடி வர, அவளை ஐயுற்ற காவலர் சிறைப்படுத்தினர். செய்தியிதழின் வாயிலாக இதனையறிந்த துருவன் சண்டிலியோடு அறமன்றத் திற்கு வந்து, உண்மையைக் கூறி அவளை விடுவித்தான்.

அருண்மொழியும் அடிகளும், பூங்கொடி சிறைப்பட்ட செய்தியறிந்து விரைந்துவந்து அவள் விடுதலை பெற்றதறிந்து மகிழ்ந்தனர். பூங்கொடி, ஒருவர்க்கொருவரை அறிமுகஞ் செய்தாள். கிழார் அருண்மொழி முகத்தை உற்றுநோக்கிக் கலங்க, அடிகளார் அதன் காரணம் வினவினார். அதற்கு அவர், ‘அருண்மொழி முகம் என் கடந்தகால நிகழ்ச்சிகளை நினை வூட்டியது’, என்று சுவரில் மாட்டிய படமொன்றைக் காட்டினார். கிழாரும் அவர் மனைவியும் சேர்ந்துள்ள படம் அது. அருண் மொழி முகமும் அப்படத்திலுள்ள பெண் முகமும் ஒன்று போலிருந்தன. யாவரும் திகைத்தனர். ‘இவள் பெயர் என்ன?’ என்று அருண்மொழி வினவினாள். பெருநிலக்கிழார்

'நான் வாணிகத்தின் பொருட்டுக் காழகம் செல்லும் பொழுது கப்பலில் இவளைக் கண்டேன். எங்கள் விழிகள் கலந்தன. பின்பு காழகத்து இசையரங்கில் அவள் இசைகேட்டு மயங்கி அவளையே மணந்தேன். சில ஆண்டுகளில் பெண் மகவொன்றை ஈன்று உயிர் துறந்தாள். அத்துயரைக் குழந்தையின் முகம்பார்த்து மாற்றி வந்தேன். அம்மகளும் கட்டிளம் பருவத்தே காலன் வாய்ப் பட்டனள். என் மனையாள் பெயர் ஏலங்குழலி' என்று விடைதந்தனர். இதுகேட்டு அலறிய அருண்மொழி, 'அவள் என் உடன் பிறந்தவளே; இளமையில் எங்களைப் பிரிந்தாள்' என்று முன்னைய வரலாறு உரைத்து, 'இப்பூங்கொடியும் உங்கட்கு மகள் முறையே ஆவாள்' என்றனள். அனைவரும் மகிழ்ந்து, சிலநாள் அங்கு உறைந்து. நால்வரும் மணிநகர்க்குப் புறப்பட்டனர். வழியில் கோட்டை நகரில் இறங்கிக் கோனூர் வள்ளலைக் கண்டு மகிழ்ந்தனர்.

கோனூர் வள்ளலின் மாளிகையில் மயில்வாகனரைக் காணும் பேறும் பெற்றனர். அவர் பதினான்கு ஆண்டுகள் ஆய்ந்து எழுதிய யாழ் நூல் ஒன்றனைப் பூங்கொ விளக்கமும். கூறினார். பின், மயில்வாகனர் அறிவுரைப்படி பூங்கொடி அயல் நாடுகள் பலவுஞ் சென்று, தமிழின் சிறப்பை உணர்த்தி, ஆங்காங்குள்ள அறிவியல் நூல்கள் பலவுங் கொண்டு தமிழகம் திரும்பினாள். புதுப்புது நூல்கள் படைத்தாள். தமிழ்மொழி குறித்து எதிர்ப்புரை பகர்வார் பலருடனும் சொற்போர் புரிந்து தமிழுக்கு வெற்றி தேடித் தந்தாள்.

தமிழகத்தே மொழிப் பற்றுடையார் பலரும் கூடி, மாநாடு கூட்டி, மொழி காக்க அறப்போர் தொடுப்பதென்று முடிவு செயதனர். அறப்போர் தொடங்கியது. அதனால் அருண்மொழி முதலாகப் பலரும் சிறை ஏகினர். பூங்கொடியும் பொங்கிய உணர்வால், பூரிப்புடன் சிறையகம் புகுந்தனள். சிறையில் அப்பெரு மாட்டி நோய்வாய்ப் பட்டாள். நோயின் கொடுமை மிகுதிப்பட, மருத்துவமனைக்கு அவளை எடுத்துச் சென்றனர். அங்கும் நோய் தணிந்திலது. இதனைக் கண்ட அரசு விடுதலை ஆணை பிறப்பித்தது. அவ்வாணை வருமுன், பூங்கொடியின் உயிர் அவள் உடலிலிருந்து விடுதலை பெற்றது.

# பூங்கொடி

## தமிழ்த் தெய்வ வணக்கம்

தாயே உயிரே தமிழே நினைவணங்கும்
சேயேன் பெறற்கரிய செல்வமே - நீயே
தலைநின்றாய் இவ்வுலகில் தாள்பணிந்தேன் நீயிங்
கிலையென்றால் இன்பமெனக் கேது.

பாவால் தொழுதேத்திப் பாரில் நினையுயர்த்தும்
ஓவாப் பணிசெய்ய உன்னுகின்றேன் - நாவாழும்
மூவா முதலே முழுமைபெறும் செம்பொருளே
சாவா வரமெனக்குத் தா.

தென்பால் உகந்தாளும் தெய்வத் திருமகளே
என்பால் அரும்பி எழுமுணர்வை - அன்பால்
தொடுத்தே அணிதிகழச் சூட்டினேன் பாவாய்
அடிக்கே எனையாண் டருள்.

# படைப்பு

என் பிள்ளைமைப் பருவத்திலேயே
எனக்குக் கவிதை யுணர்வை
ஊட்டியூட்டி வளர்த்தவரும்
என் தாய் மாமனுமான காலஞ் சென்ற
**கி.துரைசாமி** அவர்கட்கு
இந்நூலைப் படைத்து வணங்குகின்றேன்.

முடியரசன்.

# 1. விழாவயர் காதை

### தமிழகச் சிறப்பு

அலையெழு நெடுங்கடல் ஆடை உடீஇய
நிலமகள் தனக்கு நிறைமதி முகமெனும்
நாவலந் தீவின் நாடியாய் விளங்கும்
பாவலர் புகழ்தரு பண்டைத் தமிழகம்
மேவலர் அணுகா வீரங் கெழுமிய
காவலர் மூவர் கயல்புலி வில்லெனும்
கொடிமூன் றுயர்த்திக் கோலோச் சியது;
சங்கம் நிறீஇத் தமிழ்மொழி ஓம்பிப்
பொங்கும் புகழ்வரப் பொலிந்தநன் னாடு;
**'யாதும் ஊரே யாவரும் கேளிர்'என்**
றோதி ஓதி உயர்ந்ததோ டன்றி
வருபவர் தமக்கெலாம் வணங்கி வரவுரை
தருவது தொழிலாய்த் தான்கொண் டதுவே;

### பொங்கல் வந்தது

அயலவர் மொழிக்கெலாம் ஆளுகை தருதல்
தவறென உணரார் தாய்மொழி ஈங்குச்
சிறுகச் சிறுகச் சீரிழந் தேகுதல்
அறியக் காணார் அயர்ந்தனர்; அந்நாள்
பொங்கல் நாளெனும் மங்கலத் திருநாள்
எங்கணும் மகிழ்ச்சி இலங்கிட வந்தது;

---

உடீஇய - உடுத்த, மேவலர் - பகைவர், கெழுமிய - பொருந்திய, கோலோச்சியது - செங்கோல் செலுத்தியது, நிறீஇ - நிறுவி, கேளிர் - உறவினர், ஆளுகை - ஆட்சி, இலங்கிட - விளங்கிட.

**அறிக்கை விடுதல்**

கட்சி சமயங் கருதிடா நல்லோர்
நச்சி ஒருசிலர் நாட்டு மக்கட்கு
ஆய்ந்து வரைந்ததோர் அறிக்கை அனுப்பினர்;

**விழாக் கொண்டாடுக**

'தமிழர் திருநாள் தைமுதல் நாளாம்
அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்
உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள்
சளைப்பிலா முயற்சி தருபயன் பெற்றுப்
புதுமை இன்பம் பூணும் நன்னாள்
இதுவே பெருவிழா எனக்கொண் டாடுக;
ஆங்காங் குறையுநர் அயலவர் பண்புகள்
நீங்கிய திருநாள் நினைந்திதைப் பேணுக;
பிறபிற பண்புகள் பேணிய போதும்
நமக்கென மொழியும் நாளும் உளவென
உலகம் அறிய உணர்த்துவம் வாரீர்;

**நகரை அணிசெய்க**

பலவகைத் தோரணம் பாங்குடன் நாற்றுமின்
வளர்குலைக் கமுகும் வாழையுங் கட்டுமின்
கிளரொளி மாடங் கிளைபடு குடிசை
யாங்கணும் யாங்கணும் ஓங்குக இன்பம்;

**ஒற்றுமை பரப்புக**

எத்திசை நோக்கினும் எழுப்புக மேடை
தத்தங் கொள்கை தவிர்த்து நாடும்
மொழியும் வளம்பெற முன்னுவ தொன்றே
வழியெனக் கருதி வழங்குக பேருரை;

---

நாற்றுமின் - தொங்கவிடுவீர்.

முத்தமிழ் ஒலியே முழங்குக யாண்டும்
சிறுசிறு பகையைச் சிந்தைவிட் டகற்றுக
ஓரினம் நாமென உன்னுக பெரிதே.

**வாழிய வாழிய**

காரினம் மழையைக் கரவா தருள்க;
பசிப்பிணி வறுமை பகைமை நீங்கி
வசைக்கிலக் கிலதாய் வளர்க அரசியல்;
செல்வங் கல்வி சிறந்துமிக் கோங்குக
வாழிய பொங்கல் வாழிய திருநாள்'
என்னுமிவ் வறிக்கை எங்கணும் பரந்தது;

**பொங்கற் கொண்டாட்டம்**

பொழிபனி கழியப் பொங்கலும் வந்தது;
எழில்பெறச் செய்தனர் இல்லந் தோறும்
வெண்ணிறச் சுண்ணம் விளைத்தது தூய்மை;
கண்கவர் முறையிற் கட்டினர் தோரணம்;
வண்ணப் புத்துடை வகைவகை பூண்டு
கன்னல் துண்டினைக் கடித்திடும் சிறுமகார்
தெருவினில் ஓடித் திரிந்தனர் யாண்டும்;
கருவிழி மகளிர் கடும்புனல் ஆடித்
தறிதரும் ஆடை தரித்தனர் ஆகி
நெய்வழி பொங்கல் செய்ம்முறை செய்து
கைவணம் காட்டிக் காதலர் மகிழப்
படைத்தனர் பிறர்க்கும் பகிர்ந்து கொடுத்தனர்;
கடைத்தெரு வெங்கணும் களிகொள் ஆட்டம்;

---

யாண்டும் - எங்கும், உன்னுக - நினைக. கார் - மேகம், கன்னல் - கரும்பு, சிறுமகார் - சிறுவர்கள்.

## ஏறு தழுவினர்

கவைபடு கூரிய காளையின் கொம்பிடைத்
துவைபடத் தழுவிச் சுற்றிய துணிமணி
அவிழ்த்தன ராகி ஆர்த்தனர் காளையர்;
அன்பிற் குரிய ஆடவர் காளையை
அஞ்சில ராகி நெஞ்சுரங் காட்டிக்
குழுவினர் நடுங்கத் தழுவுதல் கண்டு
வஞ்சியர் களித்தனர் வாழ்த்தொலி கூவினர்;

## கலை நிகழ்ச்சி

அறிஞர் ஒருபால் ஆய்வுரை நிகழ்த்தினர்,
கலைபயில் கூத்தினைக் கண்கவர் அரங்கில்
இலைநிகர் எனுமா றேற்றினர் கலைஞர்;
இசையொலி கடலொலி பிறக்கிட எழுந்தது,
வசையெனப் பிறமொழிப் பாடல்கள் வழங்கிலர்
தமிழே இனிமைத் தமிழே இசைத்தனர்,
மணிநகர் எங்கணும் மாபெருந் திருநாள்
அணிபெறத் திகழ்ந்தது ஆர்ப்பொலி யுடனே.

---

கவைபடு - வளைந்த, துவைபட - அழுத்தமுற

# 2. பழியுரை காதை

### வஞ்சியின் கவலை

முத்தமிழ் காக்கும் முதற்பணி பூண்ட
நத்தும் வடிவேல் நன்மணம் புணர்ந்த
பத்தினித் தெய்வம் பாங்குயர் அருண்மொழி
இத்தரை உய்ய ஈன்றருள் மகளாம்
தத்தை பூங்கொடி தாயொடு மங்கலத்
தைத்திரு நாளில் தமிழிசை வழங்க
வாராத் துயரால் மயங்கிய வஞ்சி
சோரா நின்றனள்; தன்மகட் டோழி
தேன்மொழி யைக்கூஉய்த் திருநகர் கூறும்
தீமொழி அருண்மொழிக் குரையெனச் செப்பினள்;

### தேன்மொழி செல்லல்

அவ்வுயிர்த் தோழியும் அருண்மொழி நிலைக்கு
வெவ்வுயிர்த் தேங்கும் வினையினள் ஆதலின்
பூங்கொடி தன்னோ டருண்மொழி வைகும்
பாங்குடை இல்லிற் புகுந்தனள் பாங்கி;
அருண்மொழி மேனி அழிநலங் கண்டு
மருண்மனங் கொண்டு 'மங்காய்! நின்னை
இவ்வூர் மாக்கள் இகழ்ந்துரை கூறினர்;

---

கூஉய் - அழைத்து, வைகும் - தங்கும், மருள் - மயக்கம், மாக்கள் - மக்கள்.

### அருண்மொழியின் இசைப்புலமை

செவ்விய இசைநூல் இவ்வுல குள்ளன
அவ்வள வும்பயில் அறிவினள்; பிறமொழி
இசைபல முயன்று வசையற வுணர்ந்து
நசையுடன் ஆய்ந்து நம்தமிழ் இசைக்கே
ஆக்கம் தந்தவள்; அரியதோர் இசைப்புனல்
தேக்கிய கலைக்கடல்; தெள்ளிய இசையால்
உலகை வென்றவள்; உயர்ந்தவள் குரலால்
குழலும் யாழும் கொட்டம் அடங்கின;
பாடும் முறையாற் பாவை பாடுவள்;
ஆடாள், கோணாள், அங்கக் குறும்புகள்
நாடாள், அந்த நல்லிசை செல்வி
வாயிதழ் விரியின் வானிசை கேட்கும்;
சேயிதழ் மலர்க்கை தாளச் சீர்இடும்;
அன்னவள் காணா அரங்கம் இல்லை;
பொன்மிகக் குவித்தாள் புகழோ மிகுத்தாள்;

### ஊரார் பழிமொழி

இசைத்தொழில் புரியும் இவள்இத் தொழிலை
வசைத்தொழில் என்று வெறுத்திடல் என்கொல்?
செருக்கினள் கொல்லோ? செல்வம் மிகவாய்ப்
பெருக்கினள் கொல்லோ? என்றுரை பேசி
ஏளனம் செய்தனர்' என்ற தேன்மொழிக்கு

### அருண்மொழி அலருக்குக் கூசாமை

அருண்மொழி நகைத்தனள் அருளினள் சிலசொல்;
'பொதுப்பணி புரிவோர் புகழ்வும் இகழ்வும்
நினைத்திடல் வேண்டும் ஒருநிகர் எனவே;
ஆருயிர்த் தோழி! அந்நாள் வடிவேற்

---

நசை - விருப்பம், கொட்டம் - செருக்கு, நாடாள் - விரும்பாள், வானிசை - உயர்ந்த இசை, * செம்மல் - சிறந்த ஆடவர், * கொழுநர் - கணவர்

பேருடைச் செம்மலைப் பேணிஎன் காதற்
கொழுநர் என்று கொண்டபின் ஊரார்
இழிசொல் எத்துணை ஏசினர் அறியாய்?
கலப்பு மணத்தைக் கடிந்துரை யாடினர்;
கலைத்தொழில் புரிந்தேன் கற்பினைப் பழித்தனர்;
மலைத்திலேன் சிறிதும், மனமுங் கூசிலேன்;

### வள்ளி குறிக்கோள் வாழ்வினள்

அவர்முதன் மனையாள் அரும்பெறல் வள்ளி,
எவர்துயர்ப் படினும் எழுந்துடன் சென்று
துன்பம் நீக்கலில் இன்பங் கொள்வாள்;
என்பும் பிறர்க்கே எனுங்குறி வாழ்வினள்;
பொதுநலத் தொண்டே புந்தியிற் பதிந்தவள்;
எதுசரி எனமனம் ஏற்குமோ அதனைத்
துயர்பல நேரினும் துணிவுடன் ஆற்றும்
அயர்விலாக் கணவர் அரும்பணிக் கியைந்தவள்;
அடிமை வாழ்வில் அருவருப் புற்று
விடுதலை வேட்டு வீறுற் றெழுந்த
நல்லவன் ஒருவனை நாய்மகன் சுடுங்கால்
ஒல்லென ஓடி ஒப்புயர் வில்லாள்
தன்னெஞ் சேற்றுத் தான்மடிந் தனளே!

### வள்ளியின் மகளே பூங்கொடி

வன்னெஞ் சினர்அவ் வள்ளியின் வாழ்வை
இகழ்ந்ததும் அறிவேன்; என்வயி றீன்ற
மகளே யாயினும் வள்ளியின் மகளே
பூங்கொடி என்று பொருந்தினேன் ஆதலின்
ஆங்கவள் தன்னை இசைத்துறை அறுத்துப்
பாங்குடன் பொதுநலப் பணிக்கே ஆக்கினென்;

---

என்பு - எலும்பு, புந்தி - மனம்,
இயைந்தவள் - பொருந்தியவள்.

## வடிவேல் படுகொலை

ஆங்ஙனம் அன்றியும் அரும்பெறற் காதலர்
நிலத்தினில் மடமை நிறைந்திடல் கண்டு
பகுத்தறி வூட்டும் பகலவன் ஆவர்;
சொல்லின் செல்வர், சோர்விலர், தொண்டர்,
அல்லும் பகலும் ஆருயிர்த் தமிழே
வெல்லும் வகையால் வீரம் விளைத்தவர்;
நல்லவர் இவரை நரிக்குணம் விஞ்சிய
கொல்லும் பகைக்குணம் கொண்டோர் ஒருசிலர்
தூண்டுதல் செய்யத் துணிவுடன் கூடி
நீண்ட புளிமரக் கிளைதனில் நேயரை
அந்தோ தூக்கி ஆருயிர் வவ்வினர்;
இந்தவெந் நிலையில் இசைத்தொழில் புரிவதோ?

## மலையுறை அடிகள் வருகை தருதல்

வெந்துயர் வாட்ட வேலரின் நினைவால்
மனநலி வெய்தி மனையுறை நாளில்,
நினையா நிலையில் நீளருட் செல்வர்
மலையுறை யடிகள் வந்துநின் றருளினர்
துயரம் நீங்கச் சொற்றனர் சிலசொல்;

## அடிகளார் அறிவுரை

'மாதே! பிறப்பும் மாய்வும் இயற்கை;
யாதே முயலினும் தடுத்திடல் அரிதே!
பெறலருங் கொழுநன் பிணியால் மாண்டிலன்
பிறரெவ ரும்பெறாப் பெருநிலை பெறவே
ஆருயிர் ஈந்தனன் அவனோர் வீரன்;
வீரப் பெருமகன் விடுபணி தொடர்ந்து
புரிந்தனி ராயின் பொருந்திய துயரம்

---

விஞ்சிய - மிகுந்த.

முறிந்திடும்; அவனுளம் நிறைந்திடும் ஆதலின்
முயன்றுறு செல்வம் முத்தமிழ்க் கல்வி
உயர்ந்திட உதவுக, உழைப்பும் நல்குக,

### உழைப்பினை உதவுக

கோவிலில் தமிழொலி குடிபுக வேண்டி
மேவிய விருப்பால் மேலோர் சிலரொடு
ஒல்லும் வகையால் உழைத்தும், ஊர்தொறும்
சொல்லியும் வருதல் தொழிலெனக் கொண்டுளேன்;
அச்செயல் ஆற்ற அரிவையர் சிலரும்
நச்சின ராகி உழைப்பினை நல்கின்
மெச்சிடும் வெற்றி மேவுதல் திண்ணம்,
என்றனர் யானும் எழிற்பூங் கொடியும்
ஒன்றிய உணர்வால் ஒப்புதல் தந்தோம்;
சென்றுநீ தாய்க்கும் பிறர்க்கும் செப்'பெனச்
சென்றனள் தேன்மொழி செயலற வுற்றே.

---

நச்சினராகி - விரும்பி

# 3. பூங்கா புக்க காதை

## பூங்கொடி அழுகை

தேன்மொழிக் கருண்மொழி செப்பிய துயருரை
ஆன்றரு பாலெனும் அருட்பா திளைத்திடும்
பூங்கொடி செவியிற் புகுந்தது; புகுதலும்
ஓங்கிய பெருவளி உற்றிடு துகிற்கொடி
படபடத் தாலெனப் பதைத்தனள் நெஞ்சம்;
மடமை யகற்ற மனங்கொளீஇ நிலத்துக்
கடமை யாற்றுழிக் கைதவ மாந்தரால்
பெற்றோ ரீங்குப் பட்டவெந் துயரால்
உள்ளிற் புண்ணாய் உருகிய குருதி
வெள்ளப் புனலாய் விழிவழி வழிந்தது;
கண்ணீ ரிடைவிரி கருவிளை மலரென
எண்ணும் படிக்கிரு கண்களும் இலங்கின;
சுமையாய்த் துயரம் சுமந்திடற் கியலா
அமயத் திருப்போர் அழுதிடல் இயல்பே;
அழுதிடல் ஏனெனின் அப்பெருந் துயரைக்
கழுவும் ஆற்றல் கண்ணீர்க் குளதென
நம்புவர்; அதனால் நலிவுங் குறைகுவர்;
பூங்கொடி தனக்கோ பொங்கிய துயரம்
நீங்கிற் றிலது நெஞ்சம் விம்மத்
தேம்பித் தேம்பித் தெரிவை அழுதனள்;

---

ஆன் - பசு, அருட்பா - திருவருட்பா, பெருவளி- பெருங்காற்று, கொளீஇ - கொண்டு, கைதவம் - வஞ்சகம், உள் - மனம். தெரிவை - பெண்.

## பூங்கொடி அழுகையை அருண்மொழி மாற்றுதல்

பூங்கொடி கண்ணீர் புத்தகம் நனைத்திட
ஆங்கது கண்ட அருண்மொழி வெதும்பிக்
கண்ணீர் மாற்றிக் கவலையை ஆற்ற
எண்ணினள் குறுகி, 'ஏனோ கலங்கினை?
மக்கள் கலக்கம் மாற்றிடல் ஒன்றே
தக்கதென் றெண்ணிச் சார்ந்தனம் ஈண்டு;
நாமே கலங்குதல் நன்றோ? நம்பணி
ஆமோ பூங்கொடி! அவலம் விட்டொழி
மலர்வனம் சென்று மாற்றுக கவலை
அலர்பூங் காவுள் ஆறுதல் கிட்டும்;

## பூம்பொழில் தந்திடும் ஐம்புல இன்பம்

பலர்முகம் கண்டும், பாட்டொலி கேட்டும்,
சிறுவர் ஆடிடும் சிரிப்பொலி கேட்டும்,
நறுநீர் அருந்தி நளிகனி உண்டும்,
மலர்மணம் நுகர்ந்தும், வருசிறு தென்றல்
தளிருடல் வருடித் தருநலம் பெற்றும்
களிமிகு மனத்தொடு திரும்'பெனக் கழறினள்;

## பூங்கொடியின் அழகு

உடனுறை தோழி அல்லி உரைப்போள்
'பூங்கொடி நல்லாள் பொற்பின் செல்வி,
தேங்கெழில் இளமை செறிதரு சிற்பம்,
சிற்றிடை கொடியைச் சிரிக்கும், பிறையெனும்
நெற்றியிற் புருவம் வில்லினை நிகர்க்கும்,
அவ்வில் லடியில் அம்பென இருவிழி
செவ்விதின் நிற்கும், செவ்வா யிதழில்
புன்னகை மின்னும், பொலிவுறச் சுருள்பட

குறுகி - நெருங்கிச்சென்று, ஈண்டு - இங்கு குறளகம், அவலம் - பெருந்துயர், நளிகனி - குளிர்ந்தகனி, கழறினள் - சொல்லினள், பொற்பு - அழகு.

பின்னலில் இணையாப் பிரிந்துள கருங்குழல்
நுதலிடைக் கிடந்து நுடங்கும்அக் காட்சி
கவிஞன் ஓவியன் கற்பனை தூண்டும்,
நடைக்கோர் உவமை நவிலவும் ஒல்லுமோ?

**உலுத்தர் தொல்லை**

கடைத்தெரு வழியே காரிகை தனியாய்
ஏகின் சிற்றினம் ஏதம் விளைக்கும்;
நாகிளம் பருவ நல்லியல் மாதர்
உறுதுணை யின்றி ஊரில் வெளிச்செலின்
நரியென வேட்டை நாயெனத் தொடர்ந்தே
ஊறுகள் செய்யும் உலுத்தர் பல்கினர்
மக்கட் பண்பு மங்குதல் கண்டோம்
தெக்கணம் இப்படித் தேய்வது நன்றோ?

**அல்லியின் வரலாறு**

வளநகர் ஈங்குநான் வந்தது கேளாய்
களமர் கெழுமிய கண்கவர் பொழில்சூழ்
மயில்நகர் எனும்பேர் மருவிய நகருள்
கோசிகப் பேரினன் குலக்கொடி யாவேன்;
மாசி மாமகத் தண்புனல் ஆடும்
ஆசை துரப்ப ஆணை கோரினேன்;
தந்தை தடுத்தும் தவிரரும் ஆர்வம்
உந்த அவருரை உதறித் தனிமை
அஞ்சிலேன் ஆய்விலா நெஞ்சினேன் சென்றேன்;
ஒருமகள் ஆதலின் உருத்துத் தடுக்கா
திருந்தனர், ஆங்கோர் இடுக்கண் நேர்ந்தது;

---

பொலிவு - அழகு. நுதல் - நெற்றி, நுடங்கும் - அசையும், நவில - கூற, சிற்றினம் - கயவர்கூட்டம், ஏதம் - துன்பம், நாகு - இளமை, உறுதுணை - ஏற்றதுணை, ஊறு - துன்பம், உலுத்தர் - கயவர், பல்கினர் - பெருகினர், களமர் - உழவர், துரப்ப - செலுத்த.

### வெருகன் நய வஞ்சகம்

நீறுறு நெற்றியன் நிகரிலாச் செல்வன்,
ஏறெனப் பொலிவுறும் இளைஞன் அழகன்,
காண்போர் மயங்கும் காட்சியன் உலகில்அவ்
ஆண்போல் ஒருவனைக் காணுதல் அரிது,
பிறர்மனங் கவரப் பேசும் வன்மையன்,
அறமுறு செயலே ஆற்றுவான் போல
எண்ணும் வகையில் இருப்பவன் வெருகன்
நண்ணி என்னை நயவஞ் சகமாக்
கடத்திச் சென்றான் கதறியும் பயனிலை
விடலை தமியளை வீழ்ந்திடச் செய்தனன்;
அவன்மொழி நம்பி அவன்வழிப் பட்டேன்;
தவலரும் வாழ்வு தக்குமென் றிருந்தேன்;
என்னலம் உண்டான் எண்ணம் முடிந்ததும்
உன்னிலன் அறத்தை ஒளிந்தனன் ஓடி;
செல்வமும் வேடமும் செய்பிழை மறைக்கும்,
மாசுறு கற்பை மறைப்பது யாங்ஙனம்?

### யானும் உடன் செல்வேன்

இழிவும் ஏசலும் ஆடவர்க் கில்லை
பழியும் நலிவும் பாவையர் தமக்கே;
ஆதலின் பூங்கொடி ஆங்கவள் தனித்துப்
போதல் சரியிலை யானுடன் செல்வேன்;

### இருவகைப் பூங்கா

மேலும் வடதிசை மேவிய பூங்கா
தேளும் பாம்பும் என்னச் செப்பிடும்
கொடியவர் செல்லும் கூடம தாகும்;
அன்பும் பண்பும் ஆர்ந்தவர் நிறையும்

---

உருத்து - சினந்து, இடுக்கண் - துன்பம். விடலை - திண்ணியன், தக்கும் - நிலைபெறும்.

தென்புலப் பொழிற்கே செல்லுதற் குரியள்'
என்பன கூறி எழுந்துபூங் கொடியொடு
காவண மறுகுகள் கடந்துபல் பொருள்பகர்
ஆவண வழியே படர்ந்தன ளாக;

**கண்டோர் கவலை**

வழியிற் காண்போர் விழிவாங் காமல்
'எழில்நிறை யிவளை இல்லறப் படுத்தா
தல்லல் நிறைதொண் டாற்றுப் படுத்தினள்
கொடியள் இவள்தாய் கொடியள்' என்று
வடிகண் ணீரர் வருந்தி அரற்ற,

**பொழிலுட் புகுதல்**

அடிமலர் படிமிசைப் பொருந்தப் பூங்கொடி
ஓவியம் என்ன ஒசிந்து நடந்து,
காவியம் வல்லான் கற்பனை பெருக்க
எழுதரு சோலை எழில்காண் புறவே
பழுதறு பாவை நுழைந்தனள் பொழிலே.

---

காவணம் - பந்தல், மறுகு - தெரு, ஆவணம் - கடைத்தெரு, படிமிசை - நிலத்தின்மேல், ஒசிந்து - அசைந்து, எழுதரு - உயர்ந்த, பழுதறு - குற்றமற்ற, பொழில் - பூங்கா.

# 4. படிப்பகம் புக்க காதை

### இயற்கைக் காட்சிகள்

நங்கையும் தோழியும் நளிமலர்ச் சோலையுள்
தங்கிய எழில்எலாம் தனித்தனி கண்டனர்;

### தாமரைக் காட்சி

'செங்கதிர்ச் செல்வன் வெங்கதிர் புகுதாப்
பொங்கிய நிழல்செறி பூம்பொழிற் கயத்துள்
அடுத்தஓர் இரவலன் அகக்குறிப் புணர்ந்து
கொடுத்தலால் மகிழ்ச்சி கூர்முகம் நோக்கி
மகிழ்வால் விரியும் வள்ளல் மனம்போல்
அகவிதழ் முறுக்கவிழ்ந் தலர்ந்த தாமரை
இலைசூழ் மலர்கள் எழிலினைப் பாராய்!
ஊடல் கொண்ட ஒண்டொடி முகம்போல்
வாடிக் கவிழ்ந்த மலர்களும் காணுதி!

### கொடிமலர்க் காட்சி

செடிகள் மரங்கள் சிரித்து மலர்ந்திடக்
கொடிகள் நோக்கிக் கூடிக் குலாவத்
தாவிப் படர்ந்து தாமும் நகைத்தன,
வண்ணப் பூக்கள் வகைவகை மலர்ந்து
கண்ணைப் பறிக்கும் காட்சியைப் பாராய்!

---

நளி - குளிர்ந்த, புகுதா - புகாத, ஒண்டொடி - ஒளிபொருந்திய வளையலணிந்த பெண், வதியிடன் - தங்குமிடம்

**வண்டுக் காட்சி**

புதிதாய் வருவோன் பொருந்திய நண்பன்
வதியிடன் அறிய வாயில் தோறும்
புகுந்து வினவிப் போதல் போலத்
தகுந்த மலர்தொறும் தண்மது வுண்ணக்
குடைந்து குடைந்து கொட்புறும் வண்டினை
நடந்து மெலிந்த நங்காய் நோக்குதி!
தென்புறந் தருமொரு தென்றல் மலர்தொறும்
அன்புடன் தழுவி அசைந்து மெல்லென
நம்முடல் வருடி நலந்தரல் நுகர்வாய்!

**புற்றரைக் காட்சி**

பைம்புற் பரப்புப் பசும்படாம் விரித்தெனத்
தோன்றும், இடையிடைத் துளிர்விடு செடிகள்
ஈன்ற மலர்வகை எழில்பெற வரைந்த
சித்திர வகையை ஒத்திடல் காணாய்!

**பொய்கைக் காட்சி**

இந்நாள் விடுமுறை எனுஞ்சொற் செவியுறத்
துள்ளிக் குதிக்கும் பள்ளிச் சிறாரென
வெள்ளைக் கயல்கள் விடுபுனற் பொய்கையில்
தாவிக் குதிக்கும், தவஞ்செய் கொக்கு
மேவிப் பற்ற முயன்றும் மீன்பெறாது
ஏங்கிநின் றிரங்குதல் காண்'என அல்லி
பூங்கா எழிலும் பொய்கையும் காட்டப்
பூங்கொடி அவ்வெழிற் பூவனம் காண்புழி,

**கோமகன் முகுந்தனை வினவல்**

அவ்வூ ராங்கண் அரிதின் முயன்றுறு
பெருநிதிக் கிழவன் பெட்புறு மைந்தன்
கோமகன் என்பான் கோடுயர் மாட

கொட்புறும் - சுழலும், படாம் - துணி, சிறார் - சிறுவர்கள். பெட்பு - விருப்பம்.

மாமறு கோரம் வருவோன் எதிரில்
வாடிய முகத்தன் வருதுயர் மனத்தை
மூடிட முகுந்தன் முன்வரு வோனை
'வீதியில் என்னெதிர் வருந்தினை வருவோய்!
ஏதம் உற்றது யாதென் றுரை' என,

**முகுந்தன் துயரம்**

'மாதர் பூங்கொடி மலர்வனம் புகுவோள்
வழிஎதிர்ப் படலும் வடிவேல் உற்ற
வெந்துயர் நெஞ்சில் வேலெனத் தைக்க
நொந்துழல் மனத்தேன் நும்வரல் அறியேன்
சிந்தனை நினைவொடு செல்லுதல் உற்றேன்
யானுறும் இடும்பை இஃதே' என்றனன்;

**கோமகன் ஆவல்**

மானிகர் விழியாள் மலர்வனம் புகுசொல்
தேனெனப் பாய்ந்தது திருமகன் செவியில்;
'ஒண்டொடி அவள்மன ஒப்புதல் பெற்றுத்
தண்டமிழ் நிகர்க்கும் தையல் கொழுநன்
ஆவேன் யான் 'என ஆவல் துரப்பக்
காவிற் புகுந்துள பாவையைக் காண்பான்
வில்விடு அம்பென விரைந்தனன் கோமகன்;

**பூங்கொடி வெருவுதல்**

புகுவோன் றன்னைப் பூங்கொடி நோக்கி
'இகுளை! இம்மகன் என்மேற் காதல்
மிகுமனத் தானென மேலொரு நாளில்
தேன்மொழி அனையிடம் செப்பக் கேட்டுளேன்
யானிவண் செய்வது யாது' என நடுங்கினள்;

---

தையல் - பெண் (பூங்கொடி), கா - சோலை. இகுளை - தோழி! அனை - அன்னை, இவண் - இங்கு.

**படிப்பகம் புகுதல்**

அல்லி வெருவி ஆங்குள படிப்பகம்
அதனுட் புகுகென அரிவையைக் கடத்தித்
தான்வெளிப் புறத்தே தனிமையில் நின்றனள்;

**கோமகன் காமவுரை**

காமம் என்னுங் கடுவிட நாகம்
செக்கர் மாலைத் தென்றலின் இசையால்
பக்கம் நின்று படம்விரித் தாடித்
தீண்டஅப் பெருமகன் சிறுகுணம் மேவி
நீண்ட உயிர்ப்பொடும் நெருங்கி வருவோன்
கனிமொழி அல்லியைக் கண்களில் நோக்கித்
'தனிவெளி நின்றாய்! தந்திரம் அறிவேன்;
நனிஎழில் நங்கைஎன் காதல் நலத்தை
உணரும் ஆற்றல் உற்றனள் கொல்லோ?
புணர்மணம் கொள்ளாள் பொதுநலம் பேணி
இளமை கழித்திடல் ஏனோ? வாழ்வெனும்
குளம்பெறு மலராம் கூடிய இளமை;
மலர்மணம் வீச மனங்கரு தாமல்
அலரின் கொடியை அறுத்திடல் நன்றோ?
இன்பத் துறவு துன்ப விடுதலை
ஈயுந் திறத்ததோ? இதழ்கள் எத்துணை
ஆயிரம் இருப்பினும் தோயுறும் மதுவைக்
காத்திட வல்லதோ பூத்தநற் றாமரை?
ஆர்த்திடும் சுரும்பினம் அருந்துதல் உறுதி;
பொறிகளின் கதவைப் பூட்டி வைப்பின்
நெறிதடு மாறி நெஞ்சங் கலங்கும்;

---

வெருவி - அஞ்சி, அரிவை - பெண் (பூங்கொடி), செக்கர் - சிவந்த, உயிர்ப்பு - மூச்சு.
பொறிகள் - மெய் முதலிய ஐம்பொறிகள்.

### கொழுநன் ஆவேன்

கொழுகொம் பின்றிப் பூங்கொடி தவித்து
விழுவது பொறேனாய்க் கொழுநன் ஆவேன்
எனுமுயர் நினைவால் இரங்கி வந்துளேன்;
நின்பூங் கொடியோ நேரிசைக் குலத்தாள்
என்பெரு நிலையினை இசைத்தால் உடன்படும்;

### உடன்படச் செய்க

குறளகம் விடுத்துக் குமரன் என்னைப்
பெறுமணங் கொள்ளப் பெட்டனள் ஆயின்
அளப்பருஞ் செல்வம் அனைத்தும் ஈவேன்;
களைத்துடல் இளைக்கக் கருதா தென்றன்
காதற் கடலைக் கடந்திட அவளை
மாலுமி யாக்கி மகிழ்ந்திடக் குறித்தேன்;
வேலெனும் விழியாய்! வேண்டினென் நின்னை
மதியுடம் படச்செய்!' எனும்அம் மாற்றம்
செவியுற நெஞ்சம் செயலறக் கலங்கி
நவையறச் சிலசொல் நவின்றனள் அல்லி;

### அல்லியின் அறிவுரை

'செல்வக் கோவே! சீர்சால் கல்வி
மல்குறு நினக்கு மங்கையர் அறிவுரை
குறிப்பது நன்றன் றாயினும் குறிப்பேன்;
விருப்பிலா மகளிரை விழைவது முறையோ?
கருத்தொரு மித்தால் காதல் சிறக்கும்;
ஒருபால் அன்பால் உறுபயன் ஒன்றிலை;
சிறுவர் கூடிச் சிற்றில் இழைத்து
மறுகணம் சிதைத்து மகிழ்வுறல் போலத்
திருமணம் செய்து திரிவது பேதைமை;

---

பொறேன் - பொறுக்கமாட்டேன், பெட்டனள் - விரும்பினள், நவை - குற்றம்.
மல்குறு - நிறையும், விழைவது - விரும்புவது.

அறிவுடை மாந்தர் அதனை ஒவ்வார்;
நல்லியல் மாதர் நலம்பெறு வாழ்வைச்
செல்வச் செருக்கால் சேர்வுறு பிறப்பால்
வெல்லக் கருதின் விளைவது வேறு;
சொல்லக் கூசேன் மெல்லியல் மாதரார்
பிள்ளைப் பூச்சிகள் அல்லர் பெரியோய்!
காமங் கதுவக் கருத்தினை விடுப்பின்
நாமங் கேடுறும் நல்லறந் தீயும்
தீமை பற்பல சேர்வது திண்ணம்;
மாதரார் உளப்பாங் கியாதென உணர்ந்து
காதல் மேற்கொளல் கடமை யாகும்;

**காமங் கடந்தவள்**

காமம் என்னும் கள்வன் றனக்கே
புகஇடம் கொடாஅள் பூட்டி, நிறைஎனும்
காப்பமைந் திருத்தலின் கற்பெனும் மாமணி
காத்திடல் வல்லாள், கருத்தினில் வைப்பாய்!
என்னுயிர்ப் பாங்கி இல்லற வாழ்வினை
உன்னுதல் துறந்தே ஓங்குயர் பொதுப்பணி
ஒன்றே உயிர்ப்பென உவப்புடன் பூண்டனள்
இன்றே அவள்பால் எழுமனம் விடுக’!
என்றவள் உரைத்த இவ்வுரை அவன்மனம்
பொருந்தா முன்னர்ப் பூங்கொடி உருவம்
விருந்தா கியதே கோமகன் விழிக்கே.

ஒவ்வார் -உடன்படார், கதுவ - பற்ற, நாமம் - பெயர் புகழ், கொடாஅள் - கொடுக்கமாட்டாள்.

# 5. தாமரைக்கண்ணி தோன்றிய காதை

### கோமகன் கலக்கம்

கோமகன் விழியிற் குலமகள் படுதலும்
காமங் கதுவிய கருத்தின னாகிப்
படிப்பகம் புகுதப் பார்த்தனன்; 'அடஓ!
சித்தமும் விழியும் சேர்ந்து பதிந்திடப்
புத்தகம் பயில்வோர் பொருந்திடன் அன்றோ!
புத்தகம் புரட்டும் புல்லென் ஓசையும்
உரவோர் உயிர்க்கும் ஓசையும் அன்றி
அரவம் சிறிதும் அறியா இடமாம்;
அறிவை வளர்க்கும் ஆய்வுரை நூல்பல
நிறைதரும் அவ்வகம் தூய்மை நிலையம்;
கொள்கைச் சான்றோர் குழுமும் நூலகம்;
உள்ளிற் செல்லுதல் ஒவ்வா தன்றோ!
சீரியோர் பலரும் சீறுவர் இகழ்வர்
வேறிடங் கூடுவென்' எனமனம் வெதும்பி

### கோமகன் அல்லியை வினவல்

அகல்வோன் அல்லி அணிமுகம் நோக்கி
'நகைமுக நங்காய்! என் நலிவினைக் காணுதி!
இளையள் என்னை ஏற்றருள் வாள்கொலோ?
உளையும் எனக்குயிர் உவந்தளிப் பாள்கோலொ?
எத்திறத் தாள்நின் இளங்கொடி? உரை' எனச்
சித்தங் கலங்கிச் செப்புவள் அல்லி,

புல் - ஒலிக்குறிப்பு, அரவம் - ஒலி, குழுமும் - கூடும், உளையும் - வருந்தும்.

## அல்லியின் மறுமொழி

'எத்தனை முறைநினக் கியம்புவென் பெரும!
வித்தக! விண்மீன் வலையினிற் சிக்குமோ?'
தத்தை கொடுஞ்சிறைக் கூண்டுள் தங்கிட
விழைதல் உண்டோ? விடுவிடு காமம்!
மழைமுகில் தொடுதர வானுயர் கோவில்
அழுக்கும் இழுக்கும் பெருகி ஆங்குப்
புழுக்கள் நெளிதரல் போலச் செல்வர்
நெஞ்சில் தீக்குணம் நெளிந்தன போலும்;
வெஞ்சினங் கொள்வாள் நின்முகம் நோக்காள்
வஞ்சி குறிக்கோள் வாழ்வினள் ஆதலின்
விஞ்சுங் காமம் விடுவிடு' என்றனள்;

## அல்லியின் வரலாறு வினவல்

'புயலைத் தடுக்கவோர் பொறியும் உளதோ?
மயலை விடுக்க மதியுரை புகன்றனை!
கயல்விழி! நன்' றெனக் காமுகன் நகைத்து,
'மடம்படு மாதே! மற்றொன்று வினவுவல்
வடபுலத் திருப்போன் வளநிதி மிக்கோன்
வெருகன் எனும்பெயர் மருவிய ஒருவன்
பெறுமனை நீயெனப் பேசிடும் இவ்வூர்
அவனை நீங்கி ஆயிழை யிவளொடு
சிவணிய தென்னை? செப்புக' எனலும்,

## அல்லியின் வரலாறு

வளர்பெரு நிதியோய்! வாழ்கநீ பெரும!
தளர்வுறும் நின்மனம் தகாநெறி ஒரீஇ
நல்வழிப் படர்க! நானிவண் உற்றது

---

தத்தை - கிளி, வஞ்சி - பெண் (பூங்கொடி), பொறி - கருவி, மயல் - மயக்கம், ஆயிழை - ஆய்ந்தெடுத்த அணிகலனுடைய பெண் (பூங்கொடி), சிவணியது - பொருந்தியது, ஒரீஇ - நீங்கி.

செல்வக் கோவே செப்புவென் கேண்மோ!
மகப்புனல் ஆட மயில்நகர் விடுத்துத்
தகப்பன் தடையைப் பொருட்படுத் தேனாய்
வருமெனை மறித்து வஞ்சகஞ் செய்தனன்;
வெருகன் தன்னுரை முழுதும் மெய்யென
நம்பிய என்பால் நலம்நுகர்ந் ததற்பின்
வெம்பி அழிந்திட வீதியில் விடுத்துக்
காணா தேகினன்; கலங்கஞர் எய்தி
நாணி என்னூர் நண்ணே னாக,

## அல்லி தந்தையின் அன்பு

அழலோம் பாளன் அறநெறிச் செல்வன்
பழமறை வல்லான் பார்ப்பன முதுமகன்
தாயிலாக் குறையைத் தவிர்க்குந் தந்தை
என்னைக் காணான் இரங்கிப் புலம்பித்
தென்றிசைக் கடல்வரை தேடித் திரும்பி
வருவோன் இங்கே உறுமெனைக் கண்'டிவண்
எங்ஙனம் வந்தனை என்மகள்?' என்றே
பொங்கிய கண்ணீர் என்றலைப் பொழிந்து,
பிழைமணம் பட்டுப் பெருநெறி பிழைத்து
வழுவினேன் ஆயினும் வளர்மகப் பற்று
நிறைந்தவன் ஆதலின் நீங்கி நடவான்
புரந்திட எண்ணிப் பூசுரர் மனைதொறும்
இரந்துண வெடுத்தும் என்னைப் பேணினன்;

## வைதிகக் கொடுமை

ஆறாக் கவலை அரித்திட வருநோய்
தீராத் துயரால் திரிவோன் ஒருநாள்
அந்த ணாளர் மனைதனை அணுகிச்

கலங்கஞர் - மிகுந்தவருத்தம், நண்ணேன் - பொருந்தேன், அழலோம்பாளன் - வேள்விசெய்வோன், பிழைமணம் - பிழைபட்ட திருமணம், புரந்திட - காத்திட, பூசுரர் - பார்ப்பனர்,

செந்தண்மை வேண்டிச் செயலிலான் நிற்கஅச்
சேரி வாழுநர் சீறி 'வைதிகம்
மாறி நடந்த மங்கை எம்அகம்
குலவுதல் ஒவ்வோம் குலம்பழு தாயினள்
விலைமகள் தந்தைநீர் வேதியர் தாமோ?'
என்றெமை ஏசி இகழ்ந்தனர்; அதனால்

## குறளகம் புகுதல்

நிறைநீர் விழியேம்; நெடுநகர் ஈங்கே
உறையுநர் கருணை உளமுளோர் இலரோ?
புரக்குநர் இலோமெனப் புலம்புதல் கேட்ட
அறத்து வழிப்படூஉம் நெஞ்சினன் ஒருவன்
தாயினும் மேலாம் நோயுறும் தந்தை
வீய்நிலை கண்டுளம் வெதும்பி இரங்கித்
தோள்மிசைத் தழீஇத் தொண்டுளம் பூண்ட
வாழ்நாள் உடையார் மலையுறை யடிகள்தம்
குறளகம் தனிலெமைக் கொண்டுய்த் தனனே;

## மலையுறை அடிகள் மாண்பு

அவர் தாம்
குறள்நெறி வாழும் கொள்கையர், அறிஞர்
ஒழுக்கம் உயிரென ஓம்பும் செம்மல்,
வழுக்கியும் தீதுரை வழங்காப் பெரியார்;
கல்வித் தொண்டே கடவுள் தொண்டெனக்
கல்வி வளர்ந்திடக் கழகம் கண்டவர்;
பல்வகை நூல்பயில் படிப்பகம் நிறுவியோர்
கவிஞர் பலருயிர் காத்தருள் வள்ளல்
புவியில் மேம்படு புலவரின் புரவலர்

---

உறையுநர் - வாழ்பவர், செந்தண்மை - அருள் அறத்துவழிப்படூஉம் - அறவழிநடக்கும், வீய்நிலை - அழியும்நிலை, தழீஇ - தழுவி, உய்த்தனன் - சேர்த்தனன், ஓம்பும் - பேணும்.

மூடச் செயல்கள் மொய்த்துவந் துறுத்தலால்
வாடிக் கிடக்கும் மங்கையர் வாழ்வில்
புத்தொளி வீச நத்தின ராகி
அரிவையர் மன்றம் அமைத்தவர், செல்வர்!

**குறளகத்தின் பணிகள்**

தம்பெரும் உழைப்புத் தருமுயர் நிதியும்
தம்பினும் அன்பால் தருபெரும் பொருளும்
குவித்துக் கண்டதே குறளகம்; அதுதான்
தவிப்போர்க் கருளும், சாதியால் தாழ்நிலை
வகித்துளோர் தமக்கு வாழ்வினை நல்கும்,
அகத்தும் புறத்தும் அன்பே நிறையும்,
கசடறக் கற்றோர் கண்டநல் உண்மைகள்
திசைஎலாம் பரவத் தெளிதமிழ் நூல்கள்
பற்பல ஆக்கிப் படைக்கும், அதாஅன்று
தமிழ்மொழி ஒன்றேஇத் தரணி ஆள
அல்லும் பகலும் அரும்பணி ஆற்றும்;

**அடிகள் அடைக்கலம் அருளல்**

நல்லறம் எவைஅவை நயந்திடும் அவர்எம்
அல்லல் கண்டதும் அரும்பினர் கண்ணீர்
துடைப்பேன் துயர்எனத் துடைத்தனர் அந்நீர்;
உடைப்பெருஞ் செல்வம் உற்றேன் போலக்
களித்தேன் தாயின் கருணையைக் கண்டேன்;
உளத்தே நிறையும் உவப்புடன் குறளகத்
தொண்டுகள் புரியும் தோகை இவளிடம்
விண்டுளம் நண்பு கொண்டுளேன் யான்' என;

நத்தினர் - விரும்பினர், தம்பினும் - தம்தம்பி, வகித்துளோர் - அடைந்துளோர், கசடு - குற்றம்,
அதாஅன்று - அதுமட்டுமன்றி,

**கோமகன் அகலுதல்**

‘அல்லி! நின்வர லாறு தெரிந்தேன்
மெல்லியல் இவளை வஞ்சியின் துணையால்
அடைவேன்’ எனவுரைத் தகன்றனன் கோமகன்;

**பூங்கொடியின் கடுமொழி**

படிப்பகம் விடுத்துப் பாவை போந்து
‘தடித்திடும் உளத்தன், தகவிலா நெறியன்,
காவா நாவினன், காமுகன், நல்லன
மேவா வாழ்வினன், மெல்லியல் தம்பால்
நிறையெனும் காவல் நிலைப்பதை அறியான்,
குறைமதி யாளன், கொடியன் ஒழிந்தனன்;
இத்தகு காமம் இல்லா தொழிக!
இத்தகும் ஆடவன் இருந்திடப் பெறுமேல்
பொல்லா நாடெனப் புகலுவர் மேலோர்
நல்லாய் உணர்’எனப் பூங்கொடி நவில்வுழித்

**தாமரைக்கண்ணி வருகை**

தாமரைக் கண்ணி தண்மலர்க் காவுள்
வருவோள் ‘தமிழ்மொழி வாழ்க! வாழ்க!
வருவோர் எவர்க்கும் வணங்காத் தமிழே!
உலக மொழியுள் உயர்ந்தாய் என்கோ!
அலகிலாக் காலங் கண்டாய் என்கோ!
சங்கம் வளர்த்தாய் சான்றோர் பலரால்
பொங்கும் புகழ்நூல் பூண்டாய் என்கோ!
ஆயிரம் பகைதாம் ஆர்ப்பரித் தூறினும்
தூவென இகழ்ந்து தோள்வலி காட்டி
எழிலர சோச்சும் தமிழே என்கோ!

---

தோகை - மயில்போன்ற பூங்கொடி, நண்பு - நட்பு. காவா - காவாத, மேவா - பொருந்தாத, மெல்லியல் - பெண்கள், நிறை - கற்பு, நவில்வுழி - சொல்லுமிடத்து, என்கோ - என்று சொல்வேனா?,

கடல்பொங் கலையில் கறையான் வாயில்
சுடர்எரி நாவில் சுழிபடும் ஆற்றில்
தப்பிப் பிழைத்த தமிழே என்கோ!
உன்னுயர் பெருமை உரைத்திட ஒருநா
தன்னால் இயலேன்' எனஅத் தையல்

### அந்தி வந்தது

பாடின ளாகப் பையென மாலை
கூடிவந் துற்றது; கூடடை பறவை,
மணியொலி கேளா மாணவச் சிறுவர்
அணியணி யாக ஆர்ப்பது போலப்
பலபட இரைந்தன பசுமரந் தோறும்;
குலவிய தம்பணி ஆற்றிய கொழுநர்
அயர்வொடு வருவரென் றதனை ஆற்றிட
நகைமுக மாதரார் வழிவழி நோக்கினர்;
நாடொறும் பயிலும் நங்கையர் பாட்டொலி
மாட மிசைதொறும் மலர்ந்து பரந்தன;
கால்விரல் சதிசொலக் கைவிரல் மொழிசொல
நூலிடை நுடங்க நுதல்வியர் வரும்ப
நீள்சடைப் பின்னல் நெளிந்துபின் துவளப்
பாவையர் ஆடல் பயிலும் அரங்கில்
மேவிய ஒலியும் மிடைந்து பரந்தன;
முழவொலி யாழொலி முடுகி எழுந்தன;
குழலியர் முன்றில் கோலஞ் செய்தனர்;
ஆவலொடு திரும்பும் ஆவினங் கண்டு
தாவின கன்றுகள்; தளிர்விரல் மாதரார்

---

தூ - இகழ்ச்சிக்குறிப்பு, எரிநா - தீச்சுடர். பையென - மெதுவாக, அயர்வு - சோர்வு, பரந்தன - பரவின, துவள - அசைய, மிடைந்து - நெருங்கி,

வீடுகள் தோறும் விளக்கெடுத் தனரால்;
ஆடிடுஞ் சிறுவர் ஆசாற் காண்டலும்
பாடொலி அடங்கிப் பதுங்குதல் என்ன 165
வகைவகைப் புள்ளினம் வாயொலி ஒடுங்கிப்
புகுந்திட அந்திப் பொழுதுவந் ததுவே. 167

---

முடுகி - விரைந்து. குடிலியர் - மங்கையர்

# 6. கல்லறை காண் காதை

## நிலவும் உடுவும்

மாலைப் பொழுதில் மேலைத் திசையில்
நீலப் பச்சை கோலச் சிவப்பு
மஞ்சள் முதலா வண்ணங் குழைத்துச்
செஞ்சுடர்ப் பரிதி சென்றனன்; இரவெனும்
ஓவியன், மாதர் ஒளிமுகந் தீட்ட
நீல வான நெடுந்திரை தன்னில்
கோல வட்டம் குறித்தனன், அதனை
ஞாலம் நிலவென நவின்று மகிழ்ந்தது;
நுதலிற் புரளும் சுருள்குழல் வரைய
நுதலி ஒருபுறம் நுண்ணிதின் வரைந்தனன்;
களங்கப் பட்டது கண்டனன் நெஞ்சம்
துளங்கிக் கனன்று தூரிகை வீசி
உதறினன்; கிண்ணம் ஒன்றனிற் பட்டுச்
சிதறிய வெண்ணிற வண்ணம் சிரித்திட
அதனை உடுவென அறைந்தனர் உலகோர்;
வண்ணஅவ் வுடுக்களும் வட்ட நிலாவும்
கண்ணுங் கருத்தும் களிமிகப் பொழிலகம்
வெண்ணிறங் கொள்ள ஒளிக்கதிர் வீசின;

---

பரிதி - கதிரவன், ஞாலம் - உலகம், குழல் - கூந்தல், நுதலி - கருதி, துளங்கி - கலங்கி, கனன்று - சினந்து, தூரிகை - எழுதுகோல், உடு - விண்மீன், அறைந்தனர் - கூறினர்.

### தாமரைக்கண்ணி வினவல்

அவ்விடை அவண்வரும் ஆரணங் காகிய
செவ்விய நெஞ்சினள் திருநிறை செல்வி
பொதுப்பணி பலநாள் புரிந்து துயர்பல
விருப்புடன் ஏற்றவள் விடுதலை வேட்டவள்
தாமரைக் கண்ணி தமிழ்மொழி வாழ்த்திப்
பூமலர் மேனிப் பூங்கொடி தன்னொடு
நின்றிடும் அல்லி நிலாமுகம் நோக்கி,
'நின்றீர் நுமக்கு நேர்ந்தது யாது?' என
நிலாமுக அல்லி நிகழ்ந்தது கூறலும்,

### தாமரைக்கண்ணி அறிவிப்பு

'கோமகன் ஆயிழை இவள்மேற் கொண்ட
காமந் தணிந்து கழிந்தனன் அல்லன்;
படிப்பகம் இதனுள் பழுதுகள் புரியின்
அடுத்தவர் ஒறுப்பர் ஆதலின் புறத்தே
வருமிடைக் காண்பான் வழியிடை ஒதுங்கி
இருத்தலுங் கூடும் இதுநீர் ஓர்ந்து
திருத்தகு நல்லீர், தெருவழிச் செல்லேல்
பொழிலின் பின்புறம் பொருந்திய ஒருசிறு
வழியுள தவ்வழி மருங்கிற் செல்லின்
சுடுகா டொன்று தோன்றும்; ஆண்டுக்
கடுநவை உறாஅது; கலங்கேல், அந்நெறி
தாண்டிச் செல்'கெனத் தாமரைக் கண்ணி
வேண்டி நின்றனள்; விளங்கிழை அல்லி

### அல்லி அஞ்சுதல்

'பிணஞ்சுடு காட்டில் பேயினங் குழுமி
நிணங்கொளத் திரிதலால் கொடுந்துயர் நேர்ந்திடும்

---

ஒறுப்பர் - தண்டிப்பர், ஓர்ந்து - உணர்ந்து, மருங்கு - பக்கம், கடுநவை - கொடிய தீங்கு, உறாஅது - நிகழாது, நிணம் - கொழுப்பு, பகருதி - சொல்லுவாய்.

யாங்ஙனம் செல்லுகேம்? யாருந் துணையிலேம்!
பாங்குற நன்னெறி பகருதி' என்றனள்;

### தாமரைக்கண்ணி தெளிவுபடுத்துதல்

'பேயென ஒருபொருள் உண்டெனப் பேசுதல்
ஆயிழை! பேதைமை ஆகும் அறிகதில்!
மனவலி மிக்கார் மருளார்; இருளில்
மனவலி குறைந்தார் மருளுவர்; ஆதலின்
கட்படு பொருளெலாம் கருநிறப் பேயாய்
முற்படும், வாய்சொல மொழிதடு மாறும்,
செயலறச் செய்யும், வியர்வுறும், நடுக்குறும்,
மயலுறக் கண்ணொளி மங்கிட இருளும்,
அச்சம் நெஞ்சில் அறையும், அதுதான்
பேயென உலகம் பேசும்; உரமுளார்
ஆயும் அறிவுளார் அஞ்சார் ஆதலின்
இவ்வழி நீவிர் ஏகுதிர்! ஏகின்
செவ்விய நெஞ்சுரம் சேரும் நுமக்' கெனக்

### முத்தக்கூத்தன் கல்லறை

'கலக்கந் தருசுடு காட்டில் நெஞ்சுரம்
சேருவ தெங்ஙனம்? செப்புதி' எனலும்,
'கூறுவென் கேண்மின் கூர்மதி யுடையீர்!
மொழிக்குயிர் ஈந்தநல் முத்தக் கூத்தன்
பளிக்கறைப் புதைகுழி பாங்குடன் மிளிரும்,
அதனைக் காணின் அச்சம் தொலையும்,
மதமுறு கொடியர் மனச்செருக் கொழிக்க
நெஞ்சுரம் ஏறும்; நிமிர்ந்து நடப்பீர்!
வஞ்சனை மாக்கள் வண்டமிழ் மொழிக்கு

ஆயிழை - அல்லி, கட்படு - கண்ணில் தோன்றும், அறையும் - அடிக்கும், ஏகுதிர் - செல்லுக, கேண்மின் - கேளுங்கள், கூர்மதி - கூரிய அறிவு, பளிக்கறை - பளிங்கு அறை, மதமுறு - ஆணவம் கொள்ளும், கொடியர் - கொடியவர்.

நஞ்சினை ஊட்ட நாட்டில் மறைந்துளார்;
அவர்தம் கொடுஞ்செயல் அழித்திட வேண்டின்
முத்தக் கூத்தன் கல்லறை முன்போய்
நத்தித் தொழுதால் நரம்புரம் ஏறும்,
குருதியில் உணர்ச்சி கொதிக்கும், நும்மினப்
பெருமையை அழிப்போர் பிறக்கிடச் செய்வீர்!
நாடும் மொழியும் நலம்பெற வேண்டிக்
கூடும் நீவிர் கூத்தன் செயற்றிறம்
பூணுதல் வேண்டும் பூவையீர்! ஆதலிற்
காணுதல் வேண்டுமக் கல்லறை' என்றனள்;

**முத்தக் கூத்தன் வரலாறு கூறுதல்**

'நல்வழி புகன்றோய்! நன்றி யுடையேம்
கல்லறை புகுந்த காளைதன் திறம்எமக்கு
அருளுதல் வேண்டும் ஆயிழை' எனலும்,
'பிறைநுதல் நல்லீர்! பெட்புடன் கேண்மின்!

**பிறமொழி புகுதல்**

நம்நாட் டகத்தே நயமிலாப் புன்மொழி
திணிப்பதற் கொருசிலர் செய்தனர் சூழ்ச்சி;
துணுக்குற் றெழுந்தனர் தூயநல் மனமுளோர்;
தாய்மொழி வளர்ச்சி தளர்ந்தஇந் நாட்டில்
நோய்என மடமை நுழைந்து பரந்தது;
எழுத்தும் அறியார் படிப்பும் உணரார்
கழுத்திற் பிறமொழி கட்டுதல் நன்றோ?
என்றநல் லுரையை இகழ்ந்தனர் ஆள்வோர்;

குருதி - இரத்தம், பிறக்கிட - புறமுதுகிட, பூவையீர் - பெண்களே, காளை - முத்தக்கூத்தன், ஆயிழை - தாமரைக்கண்ணி, கேண்மின் - கேளுங்கள், துணுக்குற்று - அச்சமுற்று.

### நெஞ்சங் கனன்றது

கன்றிய நெஞ்சங் கனன்றது; தமிழர்
பொறுக்கும் அளவே பொறுப்பர்; மீறின்
ஒறுத்ததன் பிறகே ஓய்வும் உணவும்
நினைவர்; இதுதான் நெடுநாள் இயல்பு;
கனலும் புனலும் கரைமிகின் தடுக்க
உலகில் ஒருபொருள் உளதென அறியோம்;

### மான வுணர்ச்சி

மூக்கினை வருடின் மூங்கையும் சினப்பான்;
காக்கும் உயிரினும் மேம்படு கனிமொழி
தாய்மொழி யதனைத் தகவிலார் குழுமி
ஆய்வஞ் சனையால் அழிக்க முனையின்
ஊமையிற் கீழாய் உறங்கிக் கிடப்பரோ?

### அறப்போர்

போர்ப்படை திரண்டது போர்ப்பறை ஆர்த்தது;
கோற்படை வீரரைக் குவித்தனர் அரசினர்;
அஞ்சிலர் நெஞ்சில் ஆண்மை ஏறினார்
வஞ்சினம் சாற்றினர் வாகை சூடவே;
மானம்மீக் கூர்ந்தவர் மறியல் செய்தனர்;
கூனல் நெஞ்சினர் கொடுங்கோல் செலுத்தினர்;
அடித்தனர் துரத்தினர், அடவி நாப்பண்
துடித்திடக் கொண்டுபோய் விடுத்தனர்; புலிவாய்
தப்பிப் பிழைத்துத் தாய்மார் பல்லோர்
அப்பணி மீண்டும் ஆற்றினர்; அவர்தமைக்
கொடுஞ்சிறைக் கூட்டுள் கொடுங்கோல் அடைத்தது;

---

கனல் - தீ, புனல் - நீர், கரைமிகின் - எல்லை கடந்தால், மூங்கை - ஊமை, கோற்படை வீரர்- ஊர்காவலர், மீக்கூர்ந்தவர் - மேம்பட்டவர், கூனல் - குறுகிய, அடவி - காடு, நாப்பண் - நடுவில்

### குருதி சிந்தினர்

தொடும்பணி எதையும் துணிவுடன் ஆற்றக்
கடும்புயல் என்னக் கனன்றெழும் காளையர்
கொடியுடைக் கையர் கூடி எழுந்தனர்;
தடியடி தாங்கினர் தரையிற் செந்நீர்
சிந்தினர் மொழிப்பயிர் செழிப்பான் வேண்டி;
குருதி கண்டும் உறுதி குலைந்திலர்
முறுகி எழுந்தனர்; மூண்டெழும் மக்கள்
உணர்ச்சியும் அதனோ டுள்ளெழும் எண்ணமும்
பணத்திமிர்க் கடங்கும் பான்மைய அலவே!

### சிறையும் சிந்தையும்

கிளர்ந்தெழு வீரரைக் கொடுஞ்சிறைக் கிடத்தின்
தளர்ந்திறும் புரட்சிஎன் றுளந்தனிற் கொண்டோர்
சிறையகந் தொறுமிடம் இலாமல் அடைத்தனர்;
சிறையகம் வீரர்தம் சிந்தையை அழிக்குமோ?
குறைமதி யாளர்தம் கொள்கை அஃதாம்;
சிறையகம் போலச் சிந்தனை வளர்க்கும்
உறைவிடம் மற்றொன் றுலகில் உளதோ?
எண்ணமும் கருத்தும் எலியோ? பொறியுள்
நண்ணிய பின்னர் நசுக்க ஒல்லுமோ?

### உண்ணா நோன்பு

எண்ண இயலா இளைஞர் தம்முள்
உண்ணா நோன்பினை ஒருவன் மேற்கொள
அஞ்சிய அரசினர் அதட்டினர் அவனை;
நஞ்சையும் கொள்கைக்கு நயந்துண் டோர்பலர்
காட்டிய நெறிகள் கண்டோ னாதலின்
ஊட்டிய உணவை உமிழ்ந்தனன் மேலோன்;
உயிர்பெரி தன்றே! உயர்ந்தது கொள்கை!
அயரினும் இவ்வுணா அருந்தேன் என்றனன்;
அடித்தனர் அவனை, அருந்தேன் என்றனன்;

செழிப்பான் - செழிக்க, இறும் - அழியும்.

அடித்தனர் அவனை, அஞ்சேன் என்றனன்;
அடித்தனர் அடித்தனர் அடித்தே கொன்றனர்!

### முத்தக் கூத்தன் கொலை

அந்தோ அந்தோ! ஆவி துறந்தனன்;
நொந்தஅப் பிணத்தை மூடிய கல்லறை
சுடுகாட் டாங்கண் தோன்றும்; அதுதான்
உடுவான் நிலவால் ஒளிபெற் றிலங்கும்;
சித்தம் கலங்கேல், அதன்முன் செல்லின்
முத்தக் கூத்தன் முழுவலி வாய்க்கும்' என்
றுரைத்ததற் பின்னர் ஒள்ளிழை மேலும்

### பூங்கொடி கடல்நகர் செல்ல இசைதல்

'இசைத்துறை வல்லாய்! இரைகடல் நாப்பண்
கடல்நகர் என்னும் ஒருநகர் உளதவண்
மடமையில் மூழ்கிய மக்கள் மலிந்துளார்;
அப்பெரும் மடமை அகற்றுதல் வேண்டும்
ஒப்பிலா நீயும் உடன்வர இசைவு
தருதி' என்றனள் தாமரைக் கண்ணி;
உவப்புடன் பூங்கொடி ஒப்புதல் தந்து
சவக்குழிக் கல்லறை சார்வுறும் வழியே
அல்லிபின் தொடர ஏகினள் அவளே.

ஒள்ளிழை - தாமரைக்கண்ணி, இரைகடல் - ஒலிக்கும் கடல்.

# 7. கடல்நகர் புக்க காதை

### கோமகன் துயிலாமை

மலர்மலி காவுள் மங்கை பூங்கொடியின்
அலர்விழி அருளும் அந்தீங் கிளவியும்
பெறாஅது கோமகன் பெயர்ந்தோன் அக்கொடி
மறாஅது தன்னை மணங்கொள வழிவகை
உன்னி உன்னி உறங்கா திருந்தனன்;
கன்னியர் நினைவுறின் கண்படை ஒல்லுமோ?

### கதிரவன் எழுச்சி

இருளின் கால்சீய்த் தெழுந்தனன் பரிதி;
மருள்கெட மக்கள் இமைகள் மலர்ந்தனர்;
தெருள்நிலை கண்டனர்; தேய்ந்த உணர்வெலாம்
புதுநிறை வெய்தப் பூரித் தெழுந்தனர்;
கோமகன் ஒருவனோ கொடுந்துயர்ப் படுத்தும்
காமங் கதுவக் காலையின் எழுச்சி
அறியா னாகி அயர்ந்து கிடந்துழித்

### கோமகனுக்கு அறிவுரை

தாமரைக் கண்ணி தனிமையில் அணுகி
'நின்போற் செல்வர் நெறிதடு மாறி

---

அந்தீங்கிளவி - அழகிய இனியசொல், பெறா அது - பெறாமல், பெயர்ந்தோன் - சென்றவன், மறாஅது - மறுக்காமல், உன்னி - நினைத்து, கண்படை - உறக்கம், கால்சீய்த்து - அழித்து, தெருள் - தெளிவு, கதுவ - பற்ற, வன்பாய் - வன்முறையாக.

வன்பாய்ப் புகுதல் வரன்முறை யாமோ?
மொழிவளம் பெறவும் மூடச் செயலால்
இழிநிலை யுற்றோர் எழுச்சி பெறவும்
தொண்டுகள் ஆற்றும் தூயவள், இல்லறம்
பெண்டுகட் குரித்தெனப் பேசினும் பூங்கொடி
வேம்பென வெறுப்பவள், வியனுல கதனில்
மேம்படு தமிழே மேவிய மூச்சாய்
வாழும் குறிக்கோள் வாழ்வினள்; அம்மகள்
சூழும் தொழிற்குத் துணைசெயல் இன்றி
ஊறுகள் இயற்றல் ஒவ்வுமோ?' என்றனள்;

**கோமகன் மறுமொழி**

'ஊறுகள் இயற்ற ஒருப்படேன் தாயே!
துணைசெய நினைந்தே தோகை அவட்குத்
துணைவன் ஆகத் துணிந்தேன்' எனலும்,

**மீண்டும் இடித்துரை**

'செல்வ! நன்றுரை செப்பினை! அறிவைக்
கொல்வது ஒக்கும்நின் கூற்று! நின்னை
நயவாப் பெண்டிரை நாடுதல் சிறுமதிச்
செயலாய் முடியும், சிந்தித் துணர்மதி!
பொருள்வலி ஒன்றால் புந்தியை இகழேல்!
அருளும் அன்பும் அமைதியை நாட்டும்!
மற்றோர் தமக்கும் மனமென ஒரு பொருள்
உற்றதை உணர்க! நின்மனம் ஒன்றே
விழைந்து பெறஎனின் விளையாட் டுப்பொருள்
அல்லர் மகளிர்! அறியாய் கொல்லோ?'
என்றறி வுறுத்தி ஏகும்அவ் வன்னை,

---

வியன் - அகன்ற, சூழும் - மேற்கொள்ளும், ஒருப்படேன் - உடன்படமாட்டேன், நயவா - விரும்பாத

## பூங்கொடி கடல்நகர் அடைதல்

பூங்கொடி தன்பாற் போஒய்க் 'கடல்நகர்த்
தேங்கிருள் நீக்கும் கடப்பா டுடையேம்
எழு'கெனச் செப்ப, ஏந்திழை அவளொடும்
அழகிய அல்லி மலையுறை யடிகள்
அருண்மொழி முதலோர் அன்புடன் விடைதரச்
சுருளலை எழுப்பும் கருநிறக் கடலுள்,
பகைபிளந் தோடும் பான்மையன் போல
மிகுபுனல் பிளந்து மிதந்து விரையும்
மரக்கலம் ஏறி, மணிநீர்க் கடல்தன்
புறத்தினில் சூழ்தரல் போன்று மடமை
அகத்தினில் சூழ்தர அல்லற் பாடுறும்
கடல்நகர்த் துறைமுகம் கண்டனள்; ஆயிடை
மடமை துடைக்கும் மனமுளோர் குழுமி

## பூங்கொடிக்கு வரவேற்பு

ஆழி அடங்க ஆர்ப்பொலி எழுப்பினர்,
வாழி எனுமொலி வான்முக டுற்றது,
கதிரோற் கண்ட கடிமலர் போலப்
புதியோர்க் காணலும் பொலிந்தன முகமெலாம்,
உள்ளம் உவகை ஊற்றெடுத் தனவே,
கள்ளவிழ் மலராற் கட்டிய தெரியல்
சூட்டி மகிழ்ந்தனர், தோரண வகைகள்
காட்டிய வீதிகள் கடக்க வழியெலாம்
வண்ண மலர்கள் வாரி இறைத்தனர்,
கண்கள் இமைத்திலர் கண்டனர், இன்னியம்
செவிவழிப் புகுந்து சிந்தையை நிறைக்கப்
புவியிற் காணாப் புதுமை கண்டனர்;

---

போஒய் - சென்று, கடப்பாடு - கடமை, ஏந்திழை - பூங்கொடி, சூழ்தரல் - சூழுதல், ஆயிடை - அங்கு, ஆழி - கடல், முகடு - உச்சி, கடிமலர் - மணமிக்கதாமரை, கள் - தேன், தெரியல் - மாலை, இன்னியம் - இன்னிசை,

## பூங்கொடியின் சொன்மழை

இவ்வணம் ஊர்வலம் எழுந்திடல் நோக்கி
அவ்விய நெஞ்சினர் அஞ்சினர், அவரெலாம்
பொய்யும் புளுகும் துணையாய் வாழ்வோர்,
தெய்வப் பெயரால் தீங்குகள் இழைப்போர்,
பதுங்கி நின்று பார்த்தனர்; பூங்கொடி
ஒதுங்கிநின் றாரும் உணரும் வகையால்
விளக்கி உரைத்தனள், வீணுரை யின்றித்
துளக்கம் இலளாய்த் தொகுத்தும் வகுத்தும்
இடையறா தருவி இழிதரல் மான
நடைஎழில் காட்டும் நல்லதோர் சொன்மழை
பொழிந்தனள்; மக்கள் புதுமழை கண்டு
விளைந்தெழு பயிர்போல் விம்மிதம் கொண்டனர்,
குளிர்ந்தனர் நெஞ்செலாம், கொடும்அறி யாமைக்
களைகளைந் தெறிந்தனர், கருத்தினில் அடிமைத்
தளைகள் தறிந்தனர், விடுதலை தாங்கினர்;

## அரங்கின் தோற்றம்

மக்கட் பரப்பு வான்கடற் பரப்பென
மிக்குக் கிடந்தது, மேடைஓர் மரக்கலம்
போல விளங்கிப் பொலிந்தது, பூங்கொடி
மாலுமி என்ன மதர்த்து நின்றனள்,
கயல்புலி விற்கொடி கப்பற் கொடிபோல்
உயர்வான் மிசையே ஓங்கிப் பொலிந்தது,
அலையிடை மணியென ஆங்காங் கவிரொளி

---

அவ்விய - பொறாமையுற்ற. துளக்கம் - நடுக்கம், இழிதரல் - இறங்குதல், மான - போல, சொன்மழை - சொற்பொழிவு,

விம்மிதம் - பூரிப்பு, தறிந்தனர் - அறுத்தனர், மதர்த்து - பெருமிதமுற்று.

நிலைவிளக் கெரிந்து நீளொளி பரப்பின,
எங்கணும் அமைதி இலங்க ஐம்பொறி
பொங்கும் உணர்வெலாம் புதியதோர் உணர்வாய்க்
குவிந்தன மேடையில்; குள்ள நரிச்செயல்
பொதிந்த நெஞ்சினர் பொல்லாங் கிழைத்தனர்;

**சிறியர் செய்கை**

கற்களை வீசினர் காரிருள் இடைநின்
றற்பச் செயலென அறியார்; அறிஞர்
நெஞ்சிற் பதிந்த கருத்துரை நிலமிசை
விஞ்சிப் படர்வதை விரும்பாச் சிறியர்
புன்மைச் செயல்செயப் புறப்படல் படரிருள்
புன்மைக் கணத்தைப் புறங்காட் டச்செயும்
கதிரோன் தன்னைக் கையால் மறைக்கும்
மதியோர் செயலினை மானும்; அந்தோ!

**பூங்கொடியின் கனன்றுரை**

கற்கள் வீழலும் கண்கள் சிவந்தனள்
'எற்கெனை அழைத்தீர் இகழ்வதற் கோ?' என
நுவன்றனள் ஒருகல் நுதற்படச் செந்நீர்
சிந்திச் சிவந்தன மேடையும் ஆடையும்;
கனன்றனள் சொல்லினைக் கனலெனச் சிந்தினள்;
பெண்மையில் ஆண்மை பிறத்தலுங் கூடும்
உண்மை உணர்த்தினள் ஊரினர்க் கவ்விடை;
'சான்றீர் பெரியீர் சாற்றுவென் கேண்மின்!
ஆன்ற பெரும்புகழ்த் தமிழின் அருமை
கேடுறல் நன்றோ? கிளைபோல் வருமொழி
பீடுறல் கண்டும் பேதைமை பூணல்

கார் - கருமை, எற்கு - எதற்கு, நுவன்றனள் - கூறினாள், சாற்றுவென் - சொல்லுவேன்,
ஆன்ற - நிறைந்த, கிளை - உறவு,

மாண்பன் றென்றேன், மடமைச் சேற்றில்
வீழ்ந்து மடிதல் வேண்டா என்றேன்,
தாழ்வும் இழிவும் சாதியில் வேண்டா!
குலமும் தேவும் ஒன்றெனக் கொள்க;
நலந்தரும் இவைஎன நவின்றேன், ஈண்டை
ஏற்போர் உளரேல் ஏற்று வாழ்க!
ஏலா ராயின் இவணின் றொழிக!

**சொற்போர் புரிக**

பிழைஎனப் படுமேல் பேசுக அரங்கில்
கழைஇனி தென்றேன் கசக்குமென் பீரேல்
சான்றுடன் நிறுவுக, சால்பது வாகும்;
நான்தரு கருத்தினை மறுத்துரை நவிலுதல்
அறிவோர் கொள்கை; அதனை விடுத்துச்
சிறியோர் செயல்செய முனைதல் நன்றோ?
திறமிலார் செயலெதும் திருந்திய கொள்கை
உரமுளார் போக்கினை ஒதுக்குதல் இல்லை;

**ஞாலத்து இயற்கை**

நல்லன செய்வோர்க்கு நலிவே தருதல்
மல்லன்மா ஞாலத் தியற்கையே யாகும்;
உலகுக் குழைக்கும் உத்தமர் தம்மைச்
சிலுவையில் அறைந்தும் சிறையினில் அடைத்தும்
கொலைத்தொழில் புரிந்தும் குண்டுகள் பாய்ச்சியும்
நஞ்சுணச் செய்தும் நலிவுகள் தந்தும்
நன்றி கொன்றிடும் நல்லதோர் உயர்குணம்
இன்றுநம் மிடையே இறுகப் பிணைந்தது;
ஆதலின் இச்செயல் ஆற்றத் துணிந்தீர்!

---

பீடு - பெருமை, தேவு - தெய்வம், உளரேல் - இருப்பாராயின், கழை - கரும்பு, நிறுவுக - நிலை நாட்டுக, சால்பு - தக்கது, நலிவு - துன்பம், மல்லல் - வளப்பம்.

**பூங்கொடி துணிபு**

சாதல் உறுதி, சதைபடு இவ்வுடல்
கழுகு பருந்துகட் குணவாய்க் காட்டில்
அழுகிக் கிடக்கும், அத்தகு நிலையுடல்
என்னின மக்கள் எறிகல் பட்டுச்
செந்நீர் சிந்திச் செந்தமிழ் காக்க
மாய்தல் பெறின்நான் மனங்கொள ஏற்பேன்;

**சிந்தனை செய்க**

ஆய்தற் றொழிலோர் அறிவினுக் கெட்டாக்
காலங் கடந்தநும் தாய்மொழி வாழ
ஞாலம் வாழ நவின்றனென் சிலவழி,
ஒவ்வும் வழியெனின் உவப்புடன் கொள்க
செவ்விதன் றாயின் சிந்தித் தொதுக்குக'
எனவாங்கு
உணர்வு பொங்க உரையாற் றியபின்
மணமலர்ப் பந்தர் மருங்கிருந் தனளே.

ஞாலம் - உலகம், செவ்விது - சிறந்தது, பந்தர் - பந்தல்.

## 8. கடல்நகரில் தங்கிய காதை.

### நகரத்தார் வேண்டுதல்

தாமரைக் கண்ணி தன்னொடு வந்த
தோமறு பூங்கொடி தூயநல் லுரையால்
திருந்திய மனத்தினர் திரள்கொடு வந்தே,
'இருந்திடல் வேண்டும் இன்னும் சின்னாள்
நின்னுரை கேட்டோர் நேரிய ராகிப்
புன்முறை நீங்கிப் புந்தி தெளிந்து
மல்கிருள் அகல மதியொளி பெற்று
நல்லுணர் வெய்தி நலம்பெறல் திண்ணம்
ஆதலின் நங்காய்! அருளுதி, நின்னகர்ப்
போதல் ஒழிமதி!' எனுமுரை புகன்றனர்;

### இசைவு தருதல்

பக்கல் நிற்கும் கண்ணியைப் பார்த்தனள்
அக்கொடி தன்னுளம் அறிந்தவ ளாதலின்
தோமறு பணிசெயத் தூயவ ளாகிய
தாமரைக் கண்ணி தந்தனள் இசைவே;
ஆண்டிருந் தேகி அணிமலர்க் கண்ணி
மீண்டனள் மணிநகர்; மெல்லியல் அல்லி

---

தோமறு - குற்றமற்ற, திரள்கொடு - திரண்டு, நேரியர் - நல்லவர், புன்முறை - தீயவழி, புந்தி - மனம், மதி - அறிவு, ஒழிமதி - தவிர்க, கண்ணி - தாமரைக்கண்ணி

### அல்லி வினவல்

ஈண்டிய அன்புளத் தெழிற்பூங் கொடியைக்
காண்டல் விருப்பொடு கடுகி வந்தனள்;
தோழியைக் காணாள் துயர்படர் நெஞ்சினள்
'ஆழி நடுநகர் ஆங்கண் சென்றீர்!
நீயோ தமியள் நின்றிடல் கண்டேன்!
ஆயே! என்றன் ஆருயிர்த் தோழி
யாண்டுளாள் நிகழ்ந்தது யாதென் றுரை' என

### தாமரைக் கண்ணி நிகழ்ந்தன கூறல்

ஆண்டு நிகழ்ந்த அத்துணைச் செய்தியும்
மூண்டெழும் உணர்ச்சி முந்துற மொழிந்து 'இனும்
புகலுவென் கேட்டி! பூங்கொடி ஆற்றிய
தகவுரை கேட்டோர் அகமிக வுருகி
இன்னுஞ் சின்னாள் இருந்திடல் வேண்டும்
என்ன நயந்தனர்; எழிற்பூங் கொடியும்
ஆண்டுளார் பண்பொடு அவர்தம் அரசியல்
காண்டகு நெஞ்சினள் கனிவோ டிசைந்தனள்;
சின்னாள் இருந்து செந்தமிழ் பரப்பிப்
பின்னர் மீளுவள் பேதுறல் தவிர்நீ'
இன்னணம் தாமரைக் கண்ணி இசைத்தலும்

### அருண்மொழி மனநிலை

அல்லி வருந்தி அருண்மொழி தன்பாற்
புல்லி, அனைத்தும் புகன்றது கேட்டவள்
கலங்கினள் ஆயினும் 'கன்னித் தமிழின்
விலங்குடை படஅவ் வீரங் காட்டினள்;
வாழ்கஎன் மகளே! வாழ்கஎன் மகளே!
வாழ்கஎன் தமிழே! வாழ்கஎன் தமிழே!'
எனுமுரை கூறி இறுமாந் திருந்தனள்
மனமொழி செயலெலாம் மாசறத் திகழ்ந்தவள்;

---

ஈண்டிய - நிறைந்த, தமியள் - தனித்தவளாய், ஆயே - தாயே, நயந்தனர் - வேண்டினர்,
பேதுறல் - மயங்குதல், புல்லி - பொருந்தி, இறுமாந்து - செம்மாந்து,

## பூங்கொடி கலக்கம்

கல்லென் பேரூர் கடல்நகர் ஆங்கண்
புல்லர் வீசிய கல்லின் விசையால்
நல்லியற் பூங்கொடி நலங்குறைந் திருப்போள்
சேக்கையிற் சாய்ந்து சிந்தித் திருந்தனள்;
சிந்தனைத் திரையில் சென்றபன் னிகழ்ச்சிகள்
வந்து மறைந்தன; தந்தையின் நினைவும்
நொந்தஅவ் வுளத்தில் நுழைந்தது; ஐயகோ!
மொழிக்குறும் பகைமை முதுகிடப் பொருதனை!
இழுக்குறும் அடிமை இரிந்திட உழைத்தனை!
வழுக்களைந் தினத்தவர் வாழ்ந்திட மொழிந்தனை!
ஆயினும் அந்தோ அறிவிலார் கூடி,
நாயினும் கீழோர் நயவஞ் சகரால்
கொன்றனர் நின்னைக் கொடுமை! கொடுமை!
என்றெழும் உணர்ச்சி நெஞ்சினைக் கொன்றிடத்
துயரம் புனலாய்த் துணைவிழி வழியா
உயிரொடு வெளிவரல் ஒப்ப வழிந்தது;

## பூங்கொடி தெளிதல்

இத்துயர் கண்ட எழில்மதி முகிலுட்
புக்கது; பின்னர்ப் புத்தொளி வீசிச்
சிரித்தது வானில்; சிந்தனை நெஞ்சினில்
விரித்துள கவலை விரைந்து கலைந்திட
அடுத்த தறிவொளி, விடுத்தனள் இடுக்கண்;
உடுக்கணம் இதனை உற்று நோக்கின;
முத்தக் கூத்தனை மூடிய கல்லறை
சித்தத் தெழுந்தது சிலிர்த்தனள் உடலம்;
நினைதுயர் நீங்க நெஞ்சகம் சிரித்தனள்;
முனைவொடு பணிசெய முயன்றனள் நங்கை;

---

கல்லலென் - (ஒற்றளபெடை) 'கல்' என்னும் ஒலியுடைய, விசை - வேகம். சேக்கை - படுக்கை, பொருதனை - போரிட்டாய், இரிந்திட - விலக, வழு - குற்றம், முகில் - மேகம்.

## பூங்கொடியின் புகழ்மணம்

நாடொறும் அறிவுரை நயந்துரைத் திருந்தனள்
வீடுகள் தோறும் விருந்துக் கழைத்தனர்,
கேட்போர் பலராய்க் கிளைத்தனர் பல்கினர்,
வேட்போர் தொகையும் மிகவாய்த் திரண்டன,
ஒன்றே குலமெனும் உணர்வு விரிந்தது;
நன்றே செய்தனள் நம்முயர் தலைவி
என்றே தொழுதனர் இசைத்தனர் அவள்புகழ்;
உள்ளம் பொய்யா துழைப்பவர் எண்ணம்
எள்ளள வும்பிழை ஏலா தீண்டெனும்
கொள்கை நிலைத்திடச் செய்தனள் கொடியே.

வேட்போர் - விரும்புபவர், கொடி - பூங்கொடி.

# 9. திருக்குறள் கற்றுத் தெளிந்த காதை

### நாவலர் வருகை

அந்நகர் மக்கள் அறியா மையிருள்
வெந்நிட அறிவொளி விரித்தெழு செஞ்சுடர்ப்
பரிதி என்னப் பாவை விளங்க,
உரிமை வேட்கையும், உன்னும் பண்பும்,
உன்னிய தஞ்சா துரைக்கும் உரனும்,
முன்னூ லாகிய முத்தமிழ் வகைக்கும்
விரித்துரை திறனும், வியனுறு குறள்நூல்
உலகெலாம் பரவ உழைக்கும் செயலும்,
உடையார் அறிவுப் படையார் ஒருவர்
நடையால் உயர்ந்த நாவலர் அந்நகர்
வருமவர் பூங்கொடி வந்துள தறிந்து
பெரும்பே ராசான் அருங்குண அறிஞர்
திருமா மகளைத் தேடி வந்தனர்;

### பூங்கொடி நிகழ்ந்தன கூறல்

வணங்கினள் தொழுதனள் வாழ்த்தினள் எழுந்து
மணங்கமழ் மாலை சூட்டிப் ‘பெரியோய்,
நின்மொழி ஏற்று நெடுநாள் பயின்று
மன்னிய குறள்நூல் மாசறத் தெளிந்தேன்;
குறளகம் கண்டார் குமணன் போன்றார்
அருளறம் பூண்டார் மலையுறை யடிகள்
அவர்தம் துணையால் அறிவொளி பெற்றேன்;

---
வெந்நிட - புறமுதுகிட, உரன் - வலிமை, நடையால் - ஒழுக்கத்தால், உவர்நீர் - உப்புநீர்.

உவர்நீர்க் கடல்நகர் உவந்தீண் டுற்றேன்,
மொழியுணர் வூட்ட முனைந்தேன், சிலரால்
பழியுரை பெற்றேன், பகுத்தறி வில்லான்
எறிபெருங் கல்லால் இடர்பெரி துற்றேன்,
எனினும் பின்னர் என்னுரை விழைவோர்
நனிபெரு கினரால் நயந்திவண் இருந்தேன்'

**நாவலர் ஆறுதல் உரை**

எனுமுரை கேட்ட இலக்கிய நாவலர்
'அன்னாய்! உலகில் அறிவொளி பரப்ப
முன்னுவோர்க் கெல்லாம் முதல்வர விதுவே;
தொல்லைகள் பொறுத்துத் தொண்டுகள் ஆற்றின்
எல்லையில் இன்பம்; எடுத்தது முடியும்;
வெற்றி வெற்றி விளைவது கண்டோம்;
உற்றநின் துயரால் உளமது கலங்கேல்
ஆற்றுக தொண்டே ஆற்றுக தொண்டே;

**நாவலர் தலைமேற் கல்**

நேற்றோர் அவையில் நிகழ்த்தினென் பேச்சு,
பொல்லாங் குடையார் புழுங்கினர் நெஞ்சம்
கல்லார் நல்வழி நில்லார் புல்லார்,
குழப்பம் விளைத்துக் கூட்டங் கலைத்தனர்,
விளங்கொளி அவித்தனர் வீணர், ஒருசிலர்
பாறைக் கல்லொடு பக்கம் வந்தனர்,
வீரச் செயலென விழைந்தனர், தலைமிசை
ஓங்கினர், அவ்வுழி உற்றொரு தோழர்
தாங்கினர் அதனைத் தடுத்து நிறுத்தினர்,
தடுத்திரார் ஆயின் தலைதூள் ஆகும்,
உடலும் உயிரும் உலகுக் காக்கினென்,
இடரினைக் கண்டு தொடைநடுக் குறுதல்
மடமை அன்றோ? மதியிலார் செயலது,

முன்னுவோர் - நினைப்பவர், எல்லையில் - அளவில்லாத.

### நாவலரின் முன்னை நிகழ்ச்சி

யான்புரி அலுவலில் ஏன்விலக் குற்றேன்?
மீன்புலி கயலால் மேம்படு தமிழக
விடுதலை குறித்து விளம்பினேன்; தமிழ்மொழி
கெடுதலை இன்றிக் கிளர்ந்தெழப் புகன்றேன்,
இவையே யான்செய் தவறென இயம்பி,
நவைஎனப் பழிஎன நாணார் விலக்கினர்;

### நாவலர் ஊக்கமூட்டல்

மதுப்பூங் குழலி! 'மாநிலத் தித்துயர்
பொதுப்பணி புரிவோர்க்குப் புதுவ தன்றே!
விதுப்புறேல் நின்பணி வீறுற் றோங்கும்'
என்றவர் ஊக்கினர்; இவ்வுரை கேட்டாள்;
'நன்றுநன் றைய! நான்அய ரேன்இப்
பணியே உயிராப் பாரில் கொண்டுளேன்;

### உலகியல் நிலைமை

உலக மாந்தர் நிலைதான் என்னே!
நிலையிலாக் கொள்கை, நேர்மை இன்மை
கலையெனக் கொண்டனர்; கருதின் ஒருநாள்
பெரியார் அறிஞர் என்றெலாம் பேசுவர்;
மறுநாள் மாறி 'மதியே இல்லார்,
சிறியார்' எனப்பழி செப்புவர் அந்தோ!

### தொண்டர்தம் பெருமை

நல்லன செயலே நாளும் ஆற்றும்
வல்லமை பூண்டு வழுவிலாக் குறள்நெறி
பரப்பிக் கடவுட் பள்ளியில் பைந்தமிழ்
சிறக்கப் பணிபுரி சீரியோர் மலையுறை
அடிகள் தம்மை, அறியார் கூடி

---

கிளர்ந்தெழ - வளர, நவை - குற்றம், புதுவது - புதியது, நாணார் - நாணம் இலராய், விதுப்புறேல் - அஞ்சாதே

நாத்திகர் என்று நவிலுதல் கண்டோம்;
வேத்திய லாளரும் வீண்துயர் தந்தும்
கண்டின் சுவையைத் தொண்டிலே கண்டனர்;
தொண்டர்தம் பெருமை சொல்லவும் போமோ!
என்ற மொழிப்பொருள் உணர்ந்தேன் ஐய!

**பூங்கொடியின் உறுதிமொழி**

நின்றன் பெருமையும் நீணிலம் அறியும்;
எத்துயர் வரினும் எடுத்த பணியே
இலக்கெனக் கொண்டுநீ இயங்கலால் அன்றோ
இலக்கியர் என்றோர் விருதினைத் தந்தனர்;
பேரா சிரியப் பெரியோய்! நின்போல்
யாரே செயல்செய வல்லார்? யானும்
நின்வழி கொண்டேன், நிலையாய் நிற்பேன்,
என்பெரு வாழ்வை ஈந்தனென் பணிக்கே'
எனுமொழி கூறி இருந்தனள் ஆங்கே;

**குறளுரை தெளிதல்**

'மனமிக நல்லாய்! வாழிய பெரிதே!
உலகப் பெருநூல் ஓதி உணர்ந்தனை!
கலகப் பொருளுரை கடிகதில் அம்ம!
புத்துரை பலப்பல காணுதி! யானும்
ஒத்த வகையால் உணர்ந்தநல் உரைசில
கூறுவென் கேண்மோ' என்றுரை கூறத்
தேறினள் செல்வி தெளிபொருள் உணர்ந்தே
வீறுகொள் செம்மல் விடைகொண் டனரே.

---

வேத்தியலாளர் - அரசியலார், கண்டின் - கற்கண்டின், நீணிலம் - பேருலகம், இலக்கு - குறிக்கோள், விருது - பட்டம், கடிகதில் - நீக்குக, செம்மல் - சிறந்தோர்.

# 10. தொல்காப்பியம் உணர்ந்த காதை

### குறளுரை பரப்புதல்

நற்பொருள் உணர்ந்த பொற்கொடி குறளின்
சொற்பொருள் தெளிந்து சூழ வருவார்க்கு
உணர்த்தும் பணியை உவப்புடன் பூண்டனள்;
கணக்கில் அடங்கார் கற்று நடந்தனர்,
இணர்ப்பூங் குழலாள் இவ்வணம் இருந்துழித்

### தாமரைக்கண்ணி வருகை

தாமரைக் கண்ணி தந்தனள் வருகை;
காமரு பூங்கொடி கடிதின் எழீஇத்
தூமன மகிழ்வால் தொழுதனள் தழீஇ
நீராற் கண்ணை நிறைத்துப் புகழ்மொழி
கூறா நின்றனள்; கூறிய நங்கையை
ஆரத் தழுவி அப்பெரு மாட்டி
வீரத் திருமகள் வாழிய என்றனள்;

### பூங்கொடி வினவல்

'ஊரில் புதுமை உற்ற துண்டுகொல்?
அன்னையும் தோழியும் என்பிரி வாற்றி
நன்னல மோடவர் துன்னினர் கொல்லோ?
உரையாய் தாயே' என்னலும் 'உன்னைத்

---

காமரு - அழகுமிக்க, கடிதின் - விரைவில், எழீஇ - எழுந்து, தழீஇ - தழுவி, துன்னினர் - அமைந்தனர், திரை - அலை, திருத்துவான் - திருத்த.

## தாமரைக்கண்ணி மறுமொழி

### அருண்மொழி நிலைமை

திரைவாய்க் கடல்நகர் திருத்துவான் வேண்டித்
தனியே விடுத்ததால் தையலர் இயல்பான்
நனிகலங் கினர்பின் நலிவு துடைத்துச்
செந்தமிழ் காக்க வந்தவள் என்மகள்,
எந்த இடும்பையும் ஏற்றிட வல்லாள்,
பகைஎறி வடிவேல் பைந்தமிழ் காக்கும்
குகைவதி புலிபெறு குலக்கொடி அவளாம்,
அவன்வழி வந்தவள் அஞ்சாள் பகையைக்
கவண்விடு கல்லால் கலங்குதல் செய்யாள்,
என்று தேறினள்' எனுமுரை கேட்டு
நின்றவள் 'என்தாய் வாழிய' என்றனள்;

### கோமகன் நிலைமை

'குலக்கொடி இன்னுங் கூறுவென் கேட்டி!
கலக்குறு நெஞ்சினன் காமம் விஞ்சிய
கோமகன் சிலரொடு குழுமி ஆங்கண்
பாமக னாகிய பாவலன் பெயரால்
படிப்பகம் நிறுவிப் பணிபூண் டொழுகினன்;
உடைப்பெருஞ் செல்வன் ஆதலின் ஊரார்
தடைக்கல் இட்டிலர்; தமிழின் பெருமை
முடுக்குகள் தோறும் முழங்குதல் கண்டேன்'
எனுஞ்சொற் கேட்டுளம் எழுச்சி கூர்ந்து
மனங்கொளும் மகிழ்வின் வாழ்த்தினள் பூங்கொடி;

### பொதுப்பணி வேடர்

'இருஇரு செல்வி! இளையோன், தமிழ்க்குப்
புரிபணி உளத்தில் பூத்த தன்றே!
தந்நலம் வேண்டும் தணியா ஆர்வலர்

---

இடும்பை - துன்பம், வதி - தங்கும், கூர்ந்து - மிகுந்து, இளையோன் - கோமகன்,
ஆர்வலர் - ஆவலுடையவர்.

பொதுநலம் புரிவோர் போலப் பேசுவர்;
மதுநலங் கண்ட வண்டென மக்களும்
மதிமயக் குற்று வாழ்த்தொலி எழுப்புவர்;
புதுநிலை எய்துவர் புகழ்பொது மக்களால்;
மேனிலை எய்தலும் மிதிப்பர்அம் மாந்தரை;
நானிலம் இவ்வணம் நடந்திடல் கண்டோம்;

**கோமகன் வஞ்சகப் பணி**

இளையோன் றானும் இவ்வழி செல்லும்
உளமே உடையோன், தன்னலம் ஒன்றே
குறியா வைத்துக் குழைந்து பொதுப்பணி
புரிவோன் ஆயினன், பூங்கொடி நின்னை
வஞ்சித் திருந்து வதுவை புரிதலை
நெஞ்சத் தழுத்தி நின்றனன் காணுதி!
தமிழ்ப்பணி எனின்நீ தலைபணி வாய்என
மனப்பால் குடித்து மகிழ்ந்தனன்' என்றனள்;

**பூங்கொடி வருந்துதல்**

'ஐயகோ தமிழே! ஐயகோ தமிழே!
செய்ய தொண்டுளம் சிலரே கொண்டனர்;
உன்பெயர் சொல்லித் தந்நலம் நுகர்வார்
நின்னலம் சிறிதும் நினையார் உளரே'
என்றுளம் ஏங்கி இனைந்தனள் இளங்கொடி.

**தாமரைக்கண்ணி அறிவுரை**

'இன்று பொதுப்பணி எளிதென எண்ணேல்!
உள்ளமும் உயிரும் உணர்வும் தமிழென
உள்ளுவோன் எவனோ அவனே தமிழன்!
தமிழ்தமிழ் என்றுரை சாற்றுவோர் எல்லாம்
தமிழ்காப் போரென நினைப்பது தவறு;

நுகர்வார் - அனுபவிப்பார், உள்ளுவோன் - நினைப்போன்.

### இருவகைப் பகை

பொதுப்பணி புரிவோய்! புந்தியில் ஒன்றுகொள்
எதிர்ப்படு பகையை எளிதில் வெல்லலாம்;
சதிச்செயல் புரிந்து நண்பாய்ச் சார்ந்து
சிரித்துச் சிரித்துச் செய்வ தெல்லாம்
மறைத்துப் பகைக்கும் மனத்தை வெல்வது
பரிக்கொம் பாகும் பாவாய்! தமிழ்க்கும்
அகப்பகை புறப்பகை ஆயிரண் டுண்டென
மிகப்புரிந் தாற்றின் மேம்படும் நின்பணி;

### பன்மொழி பயிலெனல்

பூங்கொடி நின்புகழ் பூவுல கெங்கும்
ஓங்கிய தாதலின் உன்னொடு சொற்போர்
ஆற்ற நினைவோர் ஆங்காங் கெழுவர்;
வேற்று மொழிகள் விரைவில் பயில்நீ!
தெலுங்கு கன்னடம் தென்மலை யாளம்
ஒழுங்கு பெறநீ ஓதுதல் வேண்டும்!
பழம்பெரு மொழியுள் ஒன்றெனப் பகுக்கும்
வழங்குதல் இல்லா வடமொழி முதலா
நெருநல் முளைத்திவண் வருமொழி வரையில்
மறுவறப் பயின்று மாற்றார் வாயைத்
திறவா வண்ணம் செய்திடல் வேண்டும்!
அவ்வம் மொழியார் ஒவ்வும் வகையில்
செவ்விதின் உரைப்பாய் செந்தமிழ்ப் பெருமை;

### எழுச்சி யூட்டல்

அவரவர் மொழியில் உயர்பொருள் காணின்
தவறறப் பெயர்த்துத் தாய்மொழிக் காக்கு!
தாய்மொழி விடுத்துப் பிறமொழி விழைவோர்
ஆய்வுரை கேட்கின் அவர்செருக் கடக்கு!
பிழைபடத் தமிழைப் பேசியும் எழுதியும்

---

பரி - குதிரை, பாவாய் - பூங்கொடியே, நெருநல் - நேற்று, மாற்றார் - பகைவர்.

பிழைப்போர்க் காணின் பேரறி வூட்டு!
பழிப்போர் இங்கே பிழைப்போர் அல்லர்
அழித்தேன் என்றெழும் சிறுத்தைகள் கூட்டம்
நாட்டினில் பல்கிட நல்லுரை வழங்கு!
கோட்டமில் மனத்தாய்! குக்கலின் செயல்போல்
இலக்கண நூலை இழித்தும் பழித்தும்
குரைத்தால் அவர்தம் கொட்டம் அடக்கு!

**பொருள்நூல் உணர்த்தல்**

தொல்காப் பியமெனும் ஒல்காப் பெருநூல்
நல்கிய தாய்மொழி நாளும் வாழிய!
எழுத்தின் இயலும் சொல்லின் இயலும்
வழுக்களைந் துணர்ந்தனை! வாழ்வியல் கூறும்
அகம்எனப் புறம்என வகைபெறு பெருநூல்
உலகிற் பிறமொழி உரையாப் பொருள்நூல்
திறமுனக் குணர்த்துவென் செவ்விதிற் கற்பின்
அறிவுரம் பெறுமே, ஐவகை இலக்கணம்
உணர்வார் மொழியில் உயர்வார்' என்று
துணர்மலர்க் கொடிக்குத் தொல்காப் பியநூல்
முழுமையும் ஓதி முடித்தனள் தாமரை
விழியாள் கொடிபால் விடைபெற்றனளே.

---

கோட்டம் இல் - குற்றம் இல்லாத, குக்கல் -நாய்.

ஐவகை இலக்கணம் - எழுத்து, சொல்,பொருள்,யாப்பு,அணி, துணர் - கொத்து,

தாமரை விழியாள் - தாமரைக்கண்ணி.

# 11. ஏடு பெற்ற காதை

### பொழிலில் பூங்கொடி

தாமரைக் கண்ணி தவிர்ந்த பின்னர்த்
தோமறு தமிழ்க்குத் தொண்டுகள் ஆற்றப்
பூமியிற் பிறந்த பூங்கொடி ஒருநாள்
பொழில்நலங் காணும் விழைவினள் செல்வுழி,

### மூதாட்டி வருகை

மழைமுகங் கண்ட மயிலென ஒருத்தி
நரைமூ தாட்டி நல்லன எண்ணிப்
புரையறு செயலே புரிவது காட்டும்
முகத்தினள், கல்வி முற்றிய அறிவினள்,
அகத்தினில் அன்பு நிறைந்தவள் ஆங்கே
எதிர்ப்பட் 'டாயிழாய் யார் நீ?' எனலும்,

### பூங்கொடி தன் வரலாறு கூறல்

'முதிர்பரு வத்தாய்! மொழிகுவென் கேளாய்!
உலகந் தோன்றி ஊர்ந்து வளர்ந்து
பிள்ளைப் பருவத்துப் பேசிய மொழியாம்
வெல்லத் தமிழ்மொழி வெல்லப் பணிபுரிந்
தறிவொளி விளங்க ஆற்றினர் தந்தை;
குருடு படுமதிக் குழுவினர் சதியால்
மாண்ட வடிவேல் மனைவிளக் கருண்மொழி
ஈன்ற மகள்யான் என்பெயர் பூங்கொடி.

---

தவிர்ந்த - நீங்கிய,செல்வுழி - செல்லுமிடத்து புரை - குற்றம், ஆயிழாய் - பூங்கொடி, ஆற்றினர் - செய்தனர்.

### இல்லறம் தவிர்ந்தமை கூறல்

தனித்தொரு மகள்இத் தரணியில் வாழ
நினைத்தல் பலபிழை நிகழ்வதற் கேதென
உலகம் மொழிதல் உண்மையே யாயினும்
நிலவிய பொதுப்பணி நேர்வோர் தமக்குத்
தடையாம் இல்லறம் தவிர்ந்தேன்; நெஞ்சுரம்
உடையார் எந்தை உழைத்தஅப் பணியே
தலையாக் கொண்டேன் தையால்! மணஞ்செயின்

### குடும்பக் கவர்ச்சி

உலைவாய்ப் பட்ட இரும்பென உருகி
வளைந்து நெளிந்து வாழ்தல் வேண்டும்;
குழந்தை கணவன் குடும்பம் என்றெலாம்
எண்ணம் விரியும், இடும்பைகள் பெருகும்;
தன்னல மறுப்பெனும் நெருப்பினுள் மூழ்க
உன்னுங் காலை உளந்துணி யாதே!
அன்னாய்! அதனால் துறந்தனென் இல்லறம்;

### கடல்நகர் வந்தமை கூறல்

இயல்பினில் வாய்த்தது இத்துற வுள்ளம்,
மயலொரு சிறிதும் இல்லேன்; மலையுறை
அடிகள் குறளகம் அண்டினேன், உய்ந்தேன்;
கடிகமழ் தாமரைக் கண்ணிதன் துணையால்
இந்நகர் வந்திவண் இறுத்தனென், அதன்றலைப்
பன்னரும் பெருமைப் பழந்தொல் காப்பியப்
பொருள்நூல் உணர்ந்தேன்; புகன்றேன் என்னிலை;
அருள்விழி! நீயார் அறை'கென மொழிதலும்,

---

உய்ந்தேன் - பிழைத்தேன், கடிகமழ் - மணங்கமழும், இறுத்தனென் - தாங்கினேன்,
அதன்றலை - அதன்மேலும், பன்னரும் - கூறஇயலாத.

## மூதாட்டி தன் வரலாறுரைத்தல்

வந்தவள் மகிழ்ந்துதன் வரலா றுரைக்கும்;
'முந்திய தமிழ்மொழி தந்தநல் இலக்கியச்
செல்வம் பற்பல சிதைந்தும் குறைந்தும்
புதைந்து கிடப்பவை புகுந்து புகுந்துஅப்
புதைபொருள் தேடும் பணியினைப் பூண்டேன்,
நல்லநல் லேடுகள் நனிவரப் பெற்றும்
அல்லும் பகலும் செல்லும் சிதலும்
சுவைத்துச் சுவைத்துச் சோர்ந்தபின் எஞ்சிய
குறைபடும் ஏடுகள் குவிந்தன அந்தோ!
தமிழுக் குறுபகை எத்தனை தாயே!
அமுதத் தமிழே! அன்னாய் ! வாழி!
அவையெலாம் திரட்டி அரியதோர் நூலகம்
நவையற நிறுவி நடத்துதல் என்பணி,
நாவலூர் அமுதம் என்றெனை நவில்வர்;

## வாழ்த்தும் பாராட்டும்

ஆவல் தமிழில் அளவிலா துற்றனை!
குறள்நூல் தொல்காப் பியநூல் இரண்டும்
மறுவற உணர்ந்தோர் தெருளறி வுறுவர்,
வாழ்கநின் னுள்ளம்! வாழ்கநின் துறவு!
உன்போல் துறவுளம் உடையவர் ஒருசிலர்
அன்பால் தமிழின் ஆக்கங் கருதித்
துயரெது வரினும் துச்சமென் றெண்ணி
அயர்வில ராகி ஆற்றத் துணியின்
உயர்தனிச் செம்மொழி உலகினில் ஓங்கும்;

---

செல்,சிதல் - கறையான் வகை, துச்சம் - நிலையின்மை,

### கலைமகள் நிலையம்

அண்மையில் ஓரூர், அவ்வூர் அரசன்
கண்ணெனக் கருதிக் கலைநூல் பலவும்
தொகுத்தொரு நூலகந் தொடங்கி நிரல்பட
வகுத்து வைத்தனன், வகைவகை ஏடுகள்
நிறைந்தன அதன்பேர், கலைமகள் நிலையம்,
மறைந்தனன் கலையுணர் மன்னன், அவ்வூர்
அயலவர் ஆட்சியிற் சிக்கிய ததனால்
செயற்படல் இன்றிச் சிதைந்தது நூலகம்;
வீடுகள் தோறும் ஏடுகள் தேடிப்
பாடுகள் உறும்யான் பயன்தரும் எனநினைந்
தோடினென் ஆங்கே தேடினென் ஏடுகள்;

### சிதைந்த சுவடிகள்

தென்மொழி வடமொழி தெலுங்கு முதலாப்
பன்மொழி ஏடுகள் பற்பல கண்டேன்,
ஓவியம் சிற்பம் மருத்துவம் ஒண்டமிழ்ப்
பாவினில் உரைக்கும் ஏடுகள் கண்டேன்,
வானநூல் ஏடும் வகைவகை கண்டேன்,
ஊனம் இலாத தொன்றும் இல்லை;
முதலும் முடிவும் காணாச் சுவடிகள்,
சிதலும் மண்ணும் சிதைத்த சுவடிகள்
கண்டேன் கண்டேன் கலங்கினென் உள்ளம்;

### எரிந்த ஏடுகள்

அண்டையில் நின்ற அந்நூல் நிலையப்
பணியாள் தன்பாற் பரிந்து வினவினென்,
இன்னும் உளவோ ஏடுகள் என்னவும்
'அன்னாய்! ஏடுபல் லாயிரம் இருந்தன,
வெந்நீர் வேண்டி விறகென அவற்றை

---

நிரல்பட - வரிசையாக. பாடுகள் - துன்பங்கள், ஊனம் - குறை.

எரித்தோம்' என்றனன்; துடித்ததென் மனனே;
எரிந்தஅவ் வேடுகள் எத்தகு நூலோ!
கலைமகள் தமிழைக் காப்பதிப் படியோ!
கொலைமிகு நெஞ்சர் கொடுமைதான் என்னே!
வெந்நீர் பாய்ச்சி, மிகுபயன் நல்கும்
கன்னல் தமிழ்ப்பயிர் கருகிட முனைந்தனர்;
என்னே!என்னே! இவர்தம் மதிதான்!
மடமை என்கோ? கொடுமை என்கோ?
படம்விரி யரவுக்குப் பசுப்பால் வார்த்தோம்!
உடனுறை வாழ்வும் உவந்ததற் களித்தோம்!

**மனத்துயரம்**

அச்சகத் தொழிலோன் அவன்மனை யாட்டி
மகப்பெறு நிலையில் மிகப்பெருந் துயரால்
வருந்துதல் கேட்டு விரைந்தவன் தொழிலைத்
திருந்த முடித்து வரும்பொருள் பெற்று
வீடு செல்ல விழைந்தவன் எடுக்கக்
கூடும் எழுத்துக் குலைந்து சிதறி
வீழ்ந்திடக் கண்டு வெதும்புதல் போல
என்மனம் கலங்கி ஏடுகள் பார்த்தேன்;

**இருபெருஞ் சுவடிகள்**

கூத்தும் இசையும் கூறும் இருநூல்
ஏத்தும் படியாய் என்விழிப் பட்டன;
வாழ்த்துக் கூறி மகிழ்ந்தவை புரட்டினேன்;
நெருப்பாற் புண்படு நெஞ்சம் வேதுபெற்
றிருப்பது போல இன்பம் விளைந்தது;
இசையும் கூத்தும் தமிழில் இலைஎனும்
வசைமொழி கூறி வருவோர் மடமை
தொலைக்கஇவ் விருநூல் துணைசெயும் எனநான்
விலைக்குப் பெற்றவ் வேடுகள் கொணர்ந்தேன்;

---

அரவு - பாம்பு,

### மூதாட்டி சுவடிகள் தருதல்

நானிவை பிரித்துப் பயிலும் நாளில்
மீனவன் என்னும் மேலோன் கையன
இந்நற் சுவடிகள் என்ப துணர்ந்தேன்;
மின்னற் கொடியே! மிகுபயன் தருமிவ்
வேடுகள் நின்பால் இருந்திடல் நலமாம்;
கூடிய ஆண்டெனைக் கூடிய ததனால்
இவைநீ கைக்கொண் டியற்றுக நற்பணி;

### பூங்கொடி சுவடிகள் பெறுதல்

நவையிலாய்! நின்னூர் ஆங்கண் நாடொறும்
அன்பாற் பணிபுரி மலையுறை யடிகள்
தம்பால் இவற்றின் தகவெலாம் கேட்குவை'
என்றவள் உரைத்தலும் இளையவள் மகிழ்ந்து
'நன்றுநன் றன்னாய்' என்றவள் மொழிந்து
வணங்கித் தொழுது வாங்கினள் செங்கையில்;

### பூங்கொடியின் பூரிப்பு

அணங்கிற் கின்பம் அகத்தினிற் பொங்க
அன்னாய்! என்னுயிர் அன்னாய்! தமிழே!
ஒன்னார் மனமும் உருக்குந் தமிழே!
அகப்பகை புறப்பகை கடந்தாய் தமிழே!
தகப்பன் தாயெனத் தகுவழி காட்டி
மிகப்பல் லறநூல் மொழிந்தாய் தமிழே!
உலகம் வியக்க ஒப்பிலாக் குறளால்
கலகம் தவிர்ப்பாய் கன்னித் தமிழே!
இறக்கும் வரைநின் பணியே யல்லால்
துறக்கமொன் றுண்டெனத் துணியேன் தமிழே!
இடுக்கண் வருங்கால் துடைப்பாய் தமிழே!
மொழிவளம் மிகுந்தாய் முதன்மைத் தமிழே!

---

கையன - கையிலிருந்தன. அணங்கு - பூங்கொடி, ஒன்னார் - பகைவர், துறக்கம் - வீடுபேறு,

பழியிலா நின்னைத் தொழுதக வல்லது
வாழ்த்துதற் கென்வாய் வகையறி யாதே'

### பூங்கொடி தாயகம் மீளல்

இவ்வணம் பலபட இசைத்து, முதுமை
கவ்விய அன்னையைக் கைகுவித் தேத்திப்
பவ்வங் கடந்து பாவை பூங்கொடி
பிரிவாற் கலங்கிப் பேதுறும் நெஞ்சத்
தருண்மொழி வதியும் ஆயிடைத் தோன்றித்
துயரங் களைந்து தூயநற் றமிழால்
இயலுங் கூத்துநூல் இசைநூல் காட்டி,
'நமக்கிவை துணையாம் நாட்டில் தமிழிசை
முழக்குதற் கினிநாம் முயலுதல் வேண்டும்;
தடுப்பார் தமக்குக் கொடுப்போம் ஓலை
படிப்பார் அறிவர் பைந்தமிழ் இசையை'
என்றாங் கிருந்தனள் இவ்வுரை மொழிந்தே.

பவ்வம் - கடல்.

# 12. மலையுறையடிகள் வாழ்த்திய காதை

### பூங்கொடி மலையுறையடிகளை அடைதல்

தாயும் தோழியும் தன்னுடன் தொடர
ஆயும் அறிவினர் நரைமுதிர் யாக்கையர்
சாயா நாவினர் தங்கிடன் குறுகிக்
காயாப் பூங்கொடி கண்ணீர் மல்க
மலையுறை யடிகள் மலரடி வணங்கிக்

### பூங்கொடி நிகழ்ந்தன கூறல்

காற்றலை வீசும் கடல்நகர்ப் புக்கதூஉம்,
ஆங்கவள் சிலரால் அருந்துயர் பெற்றதூஉம்,
தீங்கினை எதிர்த்துத் திருத்தி வென்றதூஉம்,
அழுக்கிலா வாழ்க்கை ஆசான் றன்பால்
திருக்குறள் கற்றுத் தெளிந்து நின்றதூஉம்.
பொருள்நூல் முழுதும் திரிபற உணர்ந்ததூஉம்,
அருள்விழி நாவலூர் அமுதத் தம்மை
விறலுறு தமிழன் மீனவன் கையன
பெறலருஞ் சுவடிகள் பெட்புடன் ஈந்ததூஉம்,
ஏந்தல் மீனவன் இயல்பினை மலையுறை
அடிகள் தம்பால் அறிகஎன் றறைந்ததூஉம்
முடிய வுரைத்து முகிழ்த்தசெங் கையினள்
படிமிசை நின்றனள் பழுதறு பூங்கொடி;

---

யாக்கையர் - உடலினர், திரிபற - மயக்கம் அகல, விறலுறு - வலிமையுறும்,
பெட்புடன் - விருப்புடன், ஏந்தல் - சிறந்தோன், முகிழ்த்த - கூப்பிய, படிமிசை - நிலத்தின் மீது.

**அடிகளார் அறவுரை**

மலையுறை யடிகள் மனங்களி கூர்ந்து,
‘கலைபயில் செல்வி! கல்லா மாந்தர்
நாட்டிடை மிகுதலின் நலிவுகள் மல்கின,
ஆட்டினம் ஆயினர் ஆதலின் அவர்பால்
கல்வித் தொண்டே கடவுள் தொண்டெனச்
சொல்லுதல் வேண்டும் மெல்லியற் பூங்கொடி!

**கல்விப் பயன்**

ஓதிய கல்வி உயர்வினை நல்கும்
சாதியில் உயர்வு தாழ்வுகள் சாய்க்கும்
குடிக்குயர் வாக்கும்,கொடுமைகள் போக்கும்,
பிடித்துள பேதைமைப் பிணியினைத் தொலைக்கும்,
அடிமைத் தளைகனை அறுக்கும், உலகில்
படிறு செய்திடப் பார்ப்பார் தமக்கிடம்
இல்லா தொழிக்கும், இன்பம் பயக்கும்,
பொல்லா வினைகளைப் புதைக்கும்,நாளும்
மான வுணர்வினை வளம்பெற வளர்க்கும்,
ஆன கல்வி, அவலக் கவலை
கடத்தற் கொருமரக் கலமும் ஆகும்;

**கற்றார் செய்தொழில்**

மடக்கொடி நல்லாய்! மாநிலத் திந்நாள்
கல்விப் பணியே காத்திடல் வேண்டும்;
நல்லஇச் செயலால் நம்மனோர் அறிவொளி
எய்திடப் பெறுவர்; எய்திய காலை
உய்வகை அறிவர்; உணர்வும் பெறுவர்;
எப்பொருள் ஆயினும் மெய்ப்பொருள் காண்பர்;
தப்பெதும் புரியார்; தாய்மொழி அன்பும்

---

கல்லா -கற்காத, ஆட்டினம் - ஆடுகள். படிறு - வஞ்சனை, உய்வகை - முன்னேறும் வழி.

இயல்பினில் வாய்க்கும்; இந்தநல் லன்பால்
மயலறி வொழித்து மாண்புகள் ஆக்குவர்;
பிறமொழி தமிழிற் பெருகுதல் காணின்
அறவே ஒதுக்குதற் காவன இயற்றுவர்;

**மொழிக் கலப்பு**

செம்பொன் றன்னொடு செம்பு கலந்தால்
அம்பொன் அணிகள் அமைத்திடல் ஒல்லும்;
கலவா விடினோர் கலன்செய இயலா;
ததுபோற் பிறமொழி அகற்றுதல் கருதின்
தமிழ்வள ராதெனச் சாற்றுவர் சிலர்தாம்;
அமிழ்தம் இனிக்க அச்சு வெல்லம்
கலப்போர் உலகிற் கண்டோ மில்லை;
உலப்பிலாத் தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி
கலப்பிலா தியங்கும், கற்றவர் அறிவர்;
செம்பு கலந்தணி செய்வதும் இயற்கை,
செம்பும் மிகவே சேர்த்திடப் பெறுமேல்
கலன்செய அப்பொன் பலன்படா தொழியும்;

**இசையுங் கூத்தும் பரப்புக எனல்**

நலமிகு நல்லாய்! நற்றமிழ் வளரப்
புலம்புலஞ் சென்று புரிகநற் றிருப்பணி;
மங்கை! கேளினி மற்றொன் றறைகுவென்
துய்ப்போர்ப் பிணிக்கும் தொன்மைசேர் இசைநூல்,
மெய்ப்பா டனைத்தும் மேவிய கூத்துநூல்
எத்துணை எத்துணை இருந்தன தமிழில்!
அத்துணை நூலும் அழிந்தன கடலால்
எனநாம் இரங்கி அயருங் காலை,
கனவெனக் கட்டுக் கதையெனக் கழறியும்

உலப்பிலா - அழிவில்லாத, பிணிக்கும் - தன்வயமாக்கும்,

புலவோர் தம்மைப் பொல்லாங் குரைத்தும்
அலறுவோர் சிலருளர் அருகிய அறிவினர்
அவருரை பொய்யென ஆக்குக நங்காய்!
சுவடியின் துணையாற் சொல்லுக மெய்ம்மை;

**தமிழினமும் குரங்கினமும்**

தமிழிற் பற்றுதல் தவறுவோர் தம்மையும்
தமிழினம் என்றே சாற்றுதல் கண்டோம்;
தாய்க்குரங் கொருகிளை தாவுங் காலை
தாய்மடி பற்றுதல் தவறுமேல் குட்டியைக்
குரக்கினம் தம்மொடு கொள்ளா தொழிக்கும்;
மரக்கிளை வாழும் மந்தியின் மானம்
நமக்கிலை அந்தோ! நாமோ மாந்தர்!
மானம் பரவுதற் கானவை இயற்றுக;

**தாய்மையும் பொதுப் பணியும்**

பிணியுறு குழவியின் பெருந்துயர் கண்டு,
தணிவறு காதல் தாய்மனம் உருகிப்
பிணியற மருந்துகள் பெட்புடன் ஈய,
அறியாக் குழவி அலறுதல் போல,
அறியா மைப்பிணி அகற்றுதல் வேண்டிப்
பெரியோர் நல்லுரை பேசுதல் கேட்டுச்
சிறியோர் மருளுவர் சீறுவர்; அவர்தமைப்
பொதுப்பணி புரிவோர் ஒதுக்குதல் இன்றித்
தாய்மைப் பண்பே தாங்குதல் வேண்டும்;
சேய்நலங் கருதிய தாய், மருந் துணல்போல்
உலகம் நலம்பெற உறுதுயர் வரினும்
விலகா ததனை விழைந்திடல் வேண்டும்;

---

அருகிய - சுருங்கிய. குரக்கினம் - குரங்கினம்,குழவி - குழந்தை, தணிவறு-நீங்காத.

### காணாப் புதுமை

ஆய்பொற் றொடியே, அறிகதில் அம்ம!
தகுமிசை யரங்கில் தாய்மொழி விடுத்துப்
புகுமொழி இசைத்திடும் புன்மையை உலகில்
யாண்டுங் காண்கிலை ஈண்டுக் காண்குவை;
மீண்டுந் தமிழிசை வேண்டும் எனினோ
மொழிவெறுப் புணர்ச்சி என்றதை மொழிகுவர்;
பழுதுறு மதியர் பான்மையஃ தன்றோ?
அகப்பகை தமிழை அழிப்பதைக் காணுதி!!
செகுத்ததை ஒழித்துச் செந்தமிழ் பேணுதி!

### தொண்டர்க்கு வேண்டுவன

தொண்டுபூண் டார்க்குத் தூயநல் லுளனும்,
கண்டவர் பழிப்பாற் கலங்கா உரனும்,
துயரெது வரினும் துளங்கா நிலையும்,
அயரா உழைப்பும், ஆயும் அறிவும்,
தந்நல மறுப்பும், தகவும் வேண்டும்
இந்நல மெல்லாம் ஏற்றொளிர் நீயே;

### இருளும் தொண்டும்

விளக்கிடை நின்றான் வீங்கிருள் புகுவோன்
துளக்கம் கொள்வன்; துணைவிழிப் புலனும்
ஒளியிழந் தொருபொருள் உணரா திருக்கும்;
கழியிருள் அதனுள் கடந்தனன் செல்லின்
வழியதும் புலனாம் ஒளியுங் காணுவன்;
பொதுநலம் புரிவோர் நிலையதும் இதுவே;
முதன்முதற் புகுவோர்க்கு மலைப்பே முந்துறும்,
மலைப்பும் இளைப்பும் மதியா ராகி
உழைப்போர், வருதுயர் ஒன்றுங் காணார்;

---

கழியிருள் - மிகுந்த இருள்,

அரிதாய் மலைப்பாய்த் தோன்றிய அப்பணி
சிறிதாய் எளிதாய்ச் செயற்படும்; அதனால்
என்மொழி யாவும் ஏற்றுளம் பதித்துத்
தென்மொழி உயரத் தேன்மொழி, தொண்டுசெய்!

### இசைப்பணிக்கு எழுக எனல்

இசைத்தமிழ் முழக்குக எங்கணும் பெரிதே!
வசைத்தொழில் புரிவோர் வாய்தனை அடக்குக!
இசைப்பணி புரிதல் இனிநமக் கேலாது
வசைத்தொழில் ஈதென வாளா விருந்தனை!
திசைத்திசைச் சென்று செந்தமிழ்ப் பாட்டின்
இசைத்திறன் காட்டுதி இனிநீ தாயே!
நின்னுயிர் பெரிதோ? தென்மொழி பெரிதோ?
இன்னுயிர் ஈந்தும் இசைத்தமிழ் பேணித்
தோமறு பணிசெயத் துணிந்தெழு நீ' என,

### அடிகளார் வாழ்த்து

ஆம்என மொழிந்தனள் ஆய்தொடி அரிவை;
'தாய்க்குலம் வாழ்க! தமிழினம் வாழ்க!
ஏய்க்கும் தொழில்போய் ஏர்த்தொழில் வாழ்க!
வாழ்கநின் னுள்ளம்! வாழ்கநின் தொண்டு!
வாழ்கபல் லாண்'டென வாழ்த்தினர் அவரே;
அருண்மொழி அன்னையும் அல்லியும் அடிகள்
தருவிடை பெற்றுத் தனியே கினரே.

தேன்மொழி - பூங்கொடி. வாளா - செயலின்றி.

# 13.மீனவன் வரலாறுணர்ந்த காதை

### அடிகளார் கூறத்தொடங்குதல்

இசையியல் இயம்பும் ஏட்டுச் சுவடி
வசையிலா நினக்கு வழங்கிய மீனவன்
தன்றிறம் கூறுவென் தயங்கிழை! கேளாய்,
நின்பெரும் பணிக்கும் நீள்பயன் விளைக்கும்;

### குறியிடத்திற் காதலர்

நெல்லூர் என்னும் நல்லூர் ஆங்கண்
கழனி வினைபுரி களமர் குடிதனில்
எழில்நிறை செல்வி இடுபெயர்ப் பொன்னி
நல்லவள் ஒருத்தி, கொல்லுலைத் தொழில்புரி
வில்லவன் என்னும் விடலை தன்னொடு
அறியாக் காதல் வாழ்வின ளாகிக்
குறியிடம் ஒருநாள் கூடினள் நிற்க;

### அலர் பரவியது

நெறியிடை ஏகும் நெடுமகன் ஒருவன்
கண்டனன் அவர்நிலை காதல் அறியான்,
அண்டையர் மறைசெயல் அறிவதும் தீமை
அதனைப் பலர்க்கும் அறைவதும் தீமை;
இதனை உணரான் எதிர்ப்படு வோர்க்கெலாம்
புதுமை கண்டவன் போலதை விளம்ப
மனைதொறும் அம்மறை வாயிடம் பெற்றது
நினையா வகையிற் பனையாய் வளர்ந்தது;

---

தயங்கிழை - பூங்கொடி, கழனி -வயல், களமர் - உழவர், விடலை - சிறந்த ஆடவன்,
நெறியிடை - வழியில், நெடுமகன் - மூடன், மறை - இரகசியம்.

### ஊரார் வாய்

பாரோர் அறிய ஒருபொருள் பரப்ப
ஊரார் வாய்போல் ஒன்றிலை உலகில்
உ'ற்றொரு மறையை மற்றவர்க் குரைக்க
முற்படும் மாந்தர் கற்பனை என்னே!
கேட்டிடும் ஒன்றைக் கண்கால் படைத்து
நாட்டிடை நடமிட நற்பணி புரிகுவர்;

### தந்தையின் சீற்றம்

மறைபிறர் அறிய மலர்ந்தஅவ் வலர்மொழி
குறையிலாக் களமர் குலமகன் செவிபுகத்
தணியாச் சினமொடு தன்மகட் கூஉய்த்
'துணியாச் செயல்செயத் துணிந்தனை! என்குல
அணையாப் பெருமையை அணைத்தனை பேதாய்!
நினைகுவை நீயிப் பழிசெய என்றே
நினைந்தேன் அல்லேன் முனைந்தாய் கொடியாய்!
மேதியிற் கீழென மேலோர் நினைக்கச்
சாதி கெடுக்கச் சதிசெய் தனையே!
வீதி சிரிக்க விளைத்தனை சிறுசெயல்!

### இற்செறித்தல்

பெற்றான் ஒருவன் உற்றான் என்றும்
சற்றே நினைந்திலை! சாற்றுதல் கேள்,இனிப்
புறச்செல வொழிப்பாய்! போற்றுதி மானம்!
அறச்செயல் விடுத்துநீ அகலுவை யேல்,என்
கதிர்அரி வாள்உன் கழுத்தினை அரியும்,
மதியொடு நட!என் மானமே பெரி'தென
இடிபடப் பேசி இற்செறித் தனனே;

---
நினைகுவை - நினைப்பாய், மேதி - எருமை, புறச்செலவு - வெளிச்செல்லல்,
இற்செறித்தனன் - வீட்டிலடைத்தான்.

**தடைபடாக் காதல்**

கொடிபடர் முல்லையின் வெடிமலர் மணத்தைக்
கூர்முள் வேலியாற் காத்தலுங் கூடுமோ?
ஏர்முனை பாறையில் எவ்வணம் உழுதிடும்?
நேர்வரும் பகையால் நின்பெருங் கொள்கை
சீர்பெற் றோங்கிச் செழிப்புறல் போலப்
பொன்னியின் காதல் பொங்கிப் பொலிந்தது;

**பொன்னியின் செயலறு நிலை**

இந்நிலை வதனால் ஏங்கி மெலிவது
கண்டனன் தந்தை; கடிதினில் இவள்மணம்
கண்டமை வேன்எனக் கொண்டுளங் கருதி
முயல்வுழி, இச்செயல் முழுவதும் உணர்ந்த
கயல்விழி இரங்கிக் கண்ணீர் மல்கிச்
செயலறக் கிடந்தனள் மயலது மிகவே;

**பொன்னி காதலனிடம் செய்தி கூறல்**

இணைந்துயிர் மாய இடங்கொடா ளாகி
நினைந்தொரு முடிவு நேர்ந்தனள் மனத்தே;
விடிந்தால் திருநாள் விரைவினில் அனைத்தும்
முடிந்தே எழுவேன் எனமனம் முடுகும்
தையற் றொழிற்வலான் தாளென இரவில்
தையல் மலரடி விரைந்தன தனிமையில்;
வல்லவன் காதலன் வதியிடன் குறுகி
வில்லவன் றன்பால் நிகழ்ந்தன விளம்பலும்;

**வில்லவன் புலம்பல்**

'அந்தோ! நின்னை அயலவன் மணஞ்செயின்
நொந்தே சாவேன் நொடிப்பொழு தினியிரேன்
இந்த உரைசொல வந்தனை யோ' என
வெந்துழல் மனத்தினன் வில்லவன் புலம்ப,

---

முடுகும் - விரையும்,

### பொன்னியின் துணிபு

'உயிரனை யாய்!நீ உணரா துரைத்தனை!
துயரம் விட்டொழி! துணைவன் நீயே
அயிரேல்! நின்னை அடைடே யனாயின்
கயிறே துணையெனக் கருத்தினிற் கொண்டுளேன்'
என்றனள் பொன்னி; இவ்விடை கேட்டு,

### வில்லவன் எழுச்சி

'நன்றுரை புகன்றனை! நமக்கேன் சாவு?
வென்றுல காள்வோம்; வீணரை எதிர்ப்போம்;
நினைப்பெறின் உலகை நினையேன் மதியேன்;
முனைத்தெழு பகையை முறிப்பேன் சிரிப்பேன்;
நின்னுளம் யாதோ! என்னுளம் வாழ்வோய்!'

### உடன் போக்கு

என்னலும், மின்னலின் இடையினள் துவண்டு
கன்னலின் மொழியாற் 'கருத்துரை வெளிப்பட
உரை' எனத், தலைவன் 'உடன்போக்'கென்றனன்;
'விரைவாய்!விரைவாய்! விடுதலை பெறுவோம்;
மீன்,புனல் வாழ வெறுப்பதும் உண்டோ?
ஏன்உனக் கையம்? எழுவாய் தலைவா!
நின்தாள் நிழலே என்பே ரின்பம்'
என்றவள் செப்ப, இருவரும் அவ்வயின்
ஒன்றிய உணர்வால் உடன்போக் கெழுந்தனர்;

### தந்தையின் மானவுணர்வு

துன்றிருட் கணமெலாம் சென்றிடக் கதிரோன்
ஒளிமுகங் காட்டி உலகெலாம் விளக்கக்
களமர்தம் குலமகன் கண்விழித் தெழுவோன்
தன்மகட் காணான் தணியாச் சினமிகப்
'புன்மகள் தன்னிலும் என்குல மானம்
ஒன்றே பெரிதாம்' என்றே இருந்தனன்;

---

அயிரேல் - ஐயப்படாதே , அவ்வயின் - அவ்விடம்,

### பொன்னியின் செல்வன்

ஒன்றிய உணர்வால் உடன்போக் கெழுந்தோர்
சென்றொரு சுரநகர் சேர்ந்தனர்; ஆங்கண்
வாழும் நாளில் மகப்பே றுறுங்கால்
ஆண்மக வுயிர்த்தவள் ஆவி துறந்தனள்;
ஊண்புசி யானாய் உழலுமவ் வில்லவன்
புரிமனை காதற் பொன்னி நல்லவட்
பிரிவினை ஆற்றான் பெற்ற அம் மகவை
உறுமக வில்லா ஒருவன் பாற்படுத்
தேகினன் வெறுத்தே; இன்னுயிர் நீத்த அப்
பொன்னியின் செல்வன்இம் மீனவன், பூங்கொடி!

### கலை பயில் தெளிவு

நன்மக விதனை நயந்து வாங்கியோன்
தன்மனை யாளும் தாம்பெறு பேறெனக்
கண்ணென மணியெனக் காத்து வளர்த்தனர்;
எண்ணும் எழுத்தும் எழிலோ வியமும்
பண்ணும் பிறவும் பழுதிலா துணர்ந்தே
செவ்விய நடையினன் செந்தமிழ் வல்லுநன்
அவ்வூர் மக்கள் அறிஞன்என் றியம்ப.

### கோவிலில் மீனவன்

வாழ்வோன் ஒருநாள் வானுயர் கோவில்
சூழ்வோன் உட்புகச் சொற்றமிழ் கேட்டிலன்
வழிபா டியற்றி வாழும் அவர்பால்
'இழிவாம் இச்செயல்! இனிமேல் தமிழால்
வழிபாட் டுரையை வழங்குக' என்னலும்,

---

துன்றிருள் - நிறைந்த இருள். பேறு - செல்வம், உயிர்த்தவள் - பெற்றவள், ஊண் - உணவு, உழலும் - வருந்தும், ஆற்றான் - தாங்காதவன், செவ்விய நடை - நல்லொழுக்கம்

## மறியல் போராட்டம்

'நெறியன் றாம்' என நிகழ்த்தினர் மறையோர்;
மறியல் செய்தனன், மற்றவர் கூடிச்
சிறியன் இவன்தான் செருக்குற் றானெனத்
தூணிற் கட்டினர்; 'தூய்தமிழ்ப் பெரியீர்!
வீணில் தவறுகள் விளைத்திட முனைந்தீர்!
உருவுகண் டெள்ளேல்! ஒருபொருள் யார்வாய்க்
கேட்பினும் மெய்ப்பொருள் காண்பதே அறிவாம்,
கோட்பகை ஒன்றே மேற்பட நினைந்து
நாணுச் செயல்செயல் நற்றமிழ் மரபோ?'

## மீனவனைப் பழித்தல்

என்றனன்; அவ்விடை இருந்தவர் ஒருவர்
'நன்று நன்றடா! மரபினை நவிலக்
கூசினை யல்லை! குலவுநின் மரபோ
ஏசலுக் குரியது! வேசியின் பிள்ளை!
சாதி கெடுத்தவள் தந்தைசொல் விடுத்தவள்
வீதியில் நின்றவள் விடுமகன் நீயோ
எம்பெரு மரபை இகழ்ந்துரை கூறினை?
வம்பினை விலைக்கு வாங்கினை சிறியோய்!'
என்றிவை கூறி ஏளனம் செய்தனர்;

## மீனவன் வெஞ்சினம்

'பெரியீர்! ஏளனப் பேச்சினை விடுமின்!
சிறியேன் தீங்கு செய்ததும் உண்டோ?
அன்னையைப் பழித்தீர் ஆணவப் போக்கால்,
என்னைப் பிணித்தீர் இலையேல் நும்முடல்
துண்டு துண்டாத் துணிப்பென், பிழைத்தீர்!

---

உருவு - உருவம், எள்ளேல் - இகழாதீர், கோட்பகை - கொள்பகை,

### காதல் ஒரு குற்றமா?

கண்ட தவறென் காரிகை கற்பில்?
ஒருவனை உளத்தால் உன்னினள், எதற்கும்
வெருவிலள், அவனே விழைமண வாளன்
என்றவன் துணையை ஏற்றனள் காதலில்
வென்றனள், பொன்னி,வீரத் தாயென
நின்றவள் கற்பின் நிறைதனை இகழ்ந்தீர்!

### குணமிழந்தாள் நும் மகள்

கணவனை இழந்த காரிகை நும்மகள்
குணமிழந் தாளிதைக் குவலயம் அறியும்
கருவுற் றாளெனக் கண்டதும் நெஞ்சம்
வெருவுற் றிழைத்த வினையெலாம் மறந்தீர்!
கிணறே உரைக்கும்நும் கீழ்மைக் குணமெலாம்,
உணரா தும்மை உயர்வா நினைத்தீர்!
கொடும்பழி யஞ்சாக் குலத்தினில் தோன்றி
மிகும்பொருள் ஒன்றால் மேலவர் போல
நாடகம் நடித்தீர்! நல்லவள் கற்பில்
கேடுரை கிளந்தீர்! கிளறேல் என்சினம்!

### சாதி ஏது

சாதி என்றொரு சொல்லினைச் சாற்றினீர்
ஆதியில் நம்மிடம் அச்சொல் இருந்ததோ?
பாதியில் புகுந்தது பாழ்படும் அதுதான்;
தொழிலாற் பெறுபெயர் இழிவாய் முடிந்தது;
அழியும் நாள்தான் அணிமையில் உள்ளது;
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குமென் றோதிய
திருக்குறள் உண்மைநும் செவிப்புக விலையோ?
கதிரும் நிலவும் காற்றும் மழையும்
எதிரும் உமக்கும் எமக்கும் ஒன்றே!
தவிர்த்தெமை நும்பாற் சாருதல் உண்டோ?
கபிலர் அகவல் கண்டதும் உண்டோ?

---

பிணித்தீர் - கட்டினீர். குவலயம் - உலகம்,

### காலம் அறிந்து கருத்தை மாற்றுக

சாதிப் பெயர்சொலித் தாழ்வும் உயர்வும்
ஓதித் திரியின் உலகம் வெறுக்கும்;
பிறப்பால் தாழ்வுரை பேசுவீ ராயின்
சிறப்பால் நீவிர் செப்புநும் முன்னையர்
மூலங் காணின் ஞாலஞ் சிரிக்கும்;
காலங் கருதிக் கருத்தினை மாற்றுமின்';
தோலா நாவினன் துணிந்திவை கூறி,
வேட்டங் கருதிக் காட்டகம் போகிக்
கோட்டுக் களிற்றொடு கொடும்போர் விளைத்து
மீண்ட வேங்கையின் நீண்டுயிர்ப் பெறிய,

### முதியோன் தூண்டுதல்

மூண்ட சீற்றத்து முதியோன் கொதித்துப்
'பெருமறை மந்திரம் பிழைஎனப் பிதற்றும்
சிறுமகன் நாத்திகன் செருக்கினைப் பாரீர்!
இன்றெனைப் பேசினன் இவனைநாம் விடுத்தால்
நாளைநும் பழிக்க நாணான் நடுங்கான்
கோழை எனநமைக் கொண்டனன் போலும்;
தொழுதகு முன்னையர் வழிமுறை பிழைஎனப்,
பழுதுரை கூறிய பாவியைப் பொறுத்தீர்!
ஆத்திகப் பெரியீர்! ஆண்டவற் பழித்தனன்
ஆத்திரம் கொண்டிலீர் அஞ்சினீர் கொல்' என;

### கயவர் தாக்குதல்

முரடர் சிலர்அம் மீனவன் முகத்தில்
குருதி சிதறக் குத்தினர்; மயக்குறக்
கட்டவிழ்த் தேகினர்அக் கருணை மாந்தர்;
சுட்டாற் செம்பொன் கெட்டா போகும்?

---

கதிர் - கதிரவன். தோலா - தோற்காத, வேட்டம் - வேட்டை, கோடு - தந்தம்,

முட்டாள் தடுக்க முற்படின் பயணம்
தொட்டார் குறியிடம் விட்டொழி வாரோ?
மயங்கினன் கிடக்கும் மகன்றனை வளர்த்தவன்
புயங்களிற் சுமந்து தன்மனை புகுந்தனன்;

### வளர்த்தவள் வாய்மொழி

வயங்கிழை நல்லாள் வாய்விட் டலறித்
'துரும்பும் படாஅவகை விரும்பி வளர்த்தேன்
குறும்பர் இவ்வணம் கொடுந்துயர்ப் படுத்தவோ?
அந்தோ அந்தோ' என் றழுவோள் முன்னர்
நொந்துழல் உடலினன் நுண்ணிதின் உயிர்க்கக்
கண்ணீர் மல்கிக் கசிந்துளம் உருகிப்
புண்ணீர் துடைத்துப் பொருந்திய மருந்திட்
டாற்றி, 'என்துயர் ஆற்றினை மகனே!
ஏற்றுள இப்பணி இனிமேல் வேண்டா
நமக்கேன் ஊர்ப்பகை? நல்லது கெட்டது
சுமப்பவர் நாமே! சொல்வது கேள்' எனத்

### மீனவன் உணர்ச்சி மொழி

'தாயே வரைத்தேன் தாம்பெற முயலுநர்
ஈயின் தாக்குதல் ஏற்பதும் வேண்டும்;
குலவுநன் முத்துக் குளிப்பவர் கடல்மிசை
அலைவரல் காணலும் அடங்குவோர் இல்லை;
தேனும் முத்தும் மானும்நம் செந்தமிழ்;
யானும் அதனை நயந்துளேன் ஆதலின்
அலைக்கும் ஈக்கும் அஞ்சேன், என்பணி
நிலைக்கும் வெல்லும் நீமனங் கலங்கேல்'
எனவாங்கு
உரைத்திவன் இருக்க ஊர்க்குறு மாக்கள்

---

முட்டாள் - முள்தாள். படாஅவகை - படாமல்,

## ஊரவர் தொல்லை

துரைத்தனம் செய்தனர் தொல்லைகள் தந்தனர்;
வளர்த்தவர் அவற்றால் வாடி வதங்கினர்;
இடுக்கண் இவர்க்குறல் என்னா லன்றோ?
துடுக்கர் புன்செயல் தொலைவதெந் நாளோ?
விடுத்திவ் வூரின் வெளிப்படல் நன்றென,

## மீனவன் கூடல் அடைதல்

ஈண்டிய இருளில் எவர்கணும் படாவணம்
பாண்டிநன் னாட்டுப் பழம்பெரும் மூதூர்
கூடல் நகரினைச் குறுகினன் சென்று
பாடல் சான்றஅவ் வையைப் பதியுள்
ஓவியத் திறனும் உயர்இசைத் திறனும்
காவியப் புலமும் காட்டி நல்லோர்
யாவரும் நயந்திட மேவினன் அவனே.

---

வரை - மலை, குறுமாக்கள் - தீயவர், துரைத்தனம் - அதிகாரம். புலம் - அறிவு

## 14. சுவடியின் மரபு தெரிவுறு காதை

### கூடலில் மீனவன் பணி

ஆங்கவன் றனக்குப் பூங்கொடி நல்லாய்!
தீங்கொன் றுற்றது செப்புவென் கேண்மோ!
கேட்குநர் உள்ளம் கிளர்ந்தெழும் பாடல்,
நோக்குநர் மயக்கும் நுண்கலை ஓவியம்,
கள்ளின் சுவைதரு காவியம் முதலன
வள்ளலின் வழங்கினன் வருவோர்க் கெல்லாம்;
அவ்வவர் திறனும் அறிவும் விழைவும்
செவ்விதின் ஆய்ந்துணர்ந் தவ்வவர்க் குரியன
பயிற்றினன், பயில்வோர் பல்கினர் நாடொறும்;

### மாணவன் ஐயம்

செயல்திறம் நற்பயன் செய்துவரு காலை
'இசையும் கூத்தும் இயம்பும் தமிழ்நூல்
நசையுறும் ஓவியம் நவில்நூல் உளவோ?
ஒருநூ லாயினும் உருவொடு காண்கிலேம்;
எனவோர் ஐயம் எழுப்பினன் ஒருவன்;

### தமிழின் பகைகள்

மனநலி வுற்று மற்றவற் குரைப்போன்
'பலப்பல அந்நூல் படைத்தது தமிழ்மொழி
நிலைத்திடு சான்றுகள் நிறைதலும் காண்குவை;
நெருப்பும் நீரும் செருத்தொழில் புரிந்தன;
உருக்குலைந் தொழிந்தன ஓங்குயர் நூல்பல;
ஆடிப் பெருக்கில் ஆற்றொடு விடுத்தனம்;

---
கேட்குநர் - கேட்பவர், நோக்குநர் - காண்பவர், செரு - போர்,

தேடிச் சுவைத்தன செல்லுப் பூச்சிகள்
எஞ்சின ஒருசில! நஞ்சினுங் கொடியர்
வஞ்சினங் கொண்டென அழித்தனர் மாய்த்தனர்;

**சங்கப் புதையல்**

இத்தகு பகைஎலாம் எதிர்த்துத் தப்பின
பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும்,அச்
சங்கப் புதையலும் சாமி நாதத்
துங்கன் உழைப்பால் தோண்டி எடுத்தோம்;
சிற்றூர் யாங்கணுஞ் சென்றுசென் றோடிப்
பெற்றஅவ் வேடுகள் பெருமை நல்கின;
இத்தொகை நூல்களும் புத்தக உருவில்
வாரா திருப்பின் வளமிலா மொழிஎன
நேரார் பழித்து நெஞ்சம் மகிழ்வர்;
நல்லோன் தந்தனன் நம்புதை பொருளெலாம்,
செல்லார் குழுவும் சிதைக்கா தொழிந்தது;

**சிலம்பின் சான்று**

நல்லோய்! இசையும் நாடகச் சுவடியும்
வல்லோன் விழிக்கு மறைந்தன போலும்!
அகப்பட் டிருப்பின் ஆணவப் பேச்சைத்
தகர்த்தெறிந் தொழிப்பேன்; சுவடிகள் தவறினும்
அந்நூல் தமிழுக் கிலையென் றறைதல்
அளப்பே யாகும் அவ்வுரை நம்பேல்!
அளப்பரும் புகழ்நூல் சிலப்பதி கார
உரைதரும் ஆசான் அடியார்க்கு நல்லான்
புரையற உரைத்தது புலமுளோர் அறிவர்;

**பழந்தமிழ் இசைகள்**

யாழும் குழலும் எழுப்பிய இசைதான்
வாழும் தமிழோ? வருமொழி இசையோ?

---

சாமிநாதன் - திராவிடக் கலாநிதி உ. வே.சாமிநாத ஐயர், நேரார் - பகைவர்,
செல்லார்குழு - கறையான் கூட்டம். அளப்பு - பிதற்றல், அளப்பரும் - கூறமுடியாத, புலம் - அறிவு

அவ்விசைக் கருவிகள் ஆய்ந்து கண்டவர்
செவ்விய தமிழர்; சிறந்தஇக் கருவிகள்
எப்பொருட் டியற்றினர்? இசைப்பொருட் டன்றோ?
பாணன் பாடினி பாடற் றொழிலோர்
மேனாள் ஈண்டு மேம்பட வாழ்ந்தனர்;
அவர்தாம்
எம்மொழிப் பாடல் இசைத்தனர்? ஆய்ந்துணர்!
திணைகள் ஐந்தெனச் செப்பிய முன்னோர்
இணையும் வகையால் பண்ணும் இசைத்தனர்;
இசைஎலாம் மறந்தே இலைஎனல் முறையோ?

**மீனவன் கலங்கல்**

ஆதலின் நம்பால் அனைத்தும் இருந்தன;
ஏதிலர் நம்மை இகழ்ந்துரை யாட
நோதகச் சிலபல தீதுற் றழிந்தன;
அந்தோ உலக அரங்குக் கொளிசெயும்
நந்தா விளக்கே! நாமிசைப் பாவாய்!
மண்ணக முதல்வி! எண்ணுநர் தலைவி!
நண்ணுவ தேனோ நலிவுகள் நினக்கெனக்
கண்கலங்கி நெஞ்சம் புண்ணடைந் திருப்ப,

**வந்தவன் -வாய்மொழி**

ஆங்கோர் பெருமகன் அவனுழை வந்து
பாங்குடன் அவனுளப் பாடுணர்ந் துரைக்கும்;
'அயரேல் மீனவ! அறைகுவென் கேள்நீ!
பயில்தரு மறவர் பாண்டிய மரபினர்
சங்கம் நிறுவித் தண்டமிழ்ச் சுவடிகள்
எங்கெங் குளவோ அங்கெலாம் துருவித்
தொகுத்து வைத்துளார்; மிகுத்தஅச் சுவடிகள்
பகுத்துப் பார்ப்பின் பண்ணும் கூத்தும்
வகுத்துக் கூறுநூல் வாய்க்கவும் கூடும்';

---

நோதக - வருந்த, நந்தா - அழியாத, திணைகள் - குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல், ஏதிலர் -அயலார், எண்ணுநர் - நினைப்பவர், அவனுழை - அவனிடம், உளப்பாடு - மனத்துயர், துருவி - ஆராய்ந்து.

**மீனவன் சங்கம்புகுதல்**

செவியில் இவ்வுரை தேனெனப் பாய்ந்தது;
குவிபடு கையாற் கும்பிட் டெழுந்து
சங்கம் புக்குத் தமிழே டனைத்தும்
பொங்கும் மகிழ்வால் பொன்னியின் செல்வன்
நுண்ணிதின் நோக்கினன் கண்களி கொள்ளச்
சுவடியொன் றுற்றது துள்ளிக் குதித்தனன்;

**மீனவன் எக்களிப்பு**

தவலரும் உவகை தன்னகம் நிறைக்கக்
குழந்தை யாகினன்; இருகை கொட்டி,
இழந்ததைப் பெற்றேன் இனித்துயர் இல்லைஎன்
றாடினன் பாடினன் அவையகம் மறந்தே;
தேடிய சுவடி ஓடிவந் துறலால்
வாடிய அவன்மனம் கூடித் தளிர்த்தது
துயரக் கடலுள் மூழ்கித் துடிக்கும்
அமயத் தொருமரக் கலமென அவற்குச்
சுவடி துணைசெயச் சோர்வகன் றனனே;

**மீனவன் செம்மாப்பு**

'என்தாய்ப் பழிப்போர் இனியிரார் உலகில்,
பொன்றாப் புகழ்நூல் புகுந்ததென் கையில்,
இசையும் கூத்தும் இலங்கிய தமிழோ
வசைபெறக் காண்பது? வையகம் எங்கும்
முழக்குவென் முழக்குவென் முத்தமிழ்ப் பெருமை,
சழக்கர் பகைஎலாம் தவிடெனப் பொடியென
ஆக்குவென், எதிர்ப்பெலாம் நீக்குவென், மாசினைத்
தீக்கிரை யாக்கித் தேனிசை பாடுவென்',
என்றவன் செம்மாந் தேறென எழுந்தனன்;

தவலரும் - குறையற்ற, பொன்றா - அழியாத, சழக்கர் - கயவர்.

### பகைவர் அடக்கம்

கூடல் நகரெலாம் கொற்றவன் தமிழிசைப்
பாடல் ஒலியே பரந்தது கண்டு
வாயடங் கினரே வாதுகள் செய்தோர்;
தாயினும் மேலாத் தமிழினை விழைவோன்
இசையின் இயலெலாம் இசைத்தவன் இருப்புழித்

### ஏமகானன் பாராட்டுரை

திசைதொறும் சென்று தன்புகழ் நிறீஇ
விருதுபல கொண்டு வெற்றிக் களிப்பொடு
வருவோன் ஒருவன் வடபுலத் திசைவலான்
ஏம கானன் எனும்பெயர் பூண்டோன்
தோமறு மீனவன் தொண்டும், தமிழிசைப்
புலமையும், அவன்பெரும் புகழும் செவிமடுத்துக்
கலைமலி காளையின் கண்முன் தோன்றி
'உரவோய்! இளமையில் ஒருதனி நின்றே
இரவாப் பகலாத் திறமுடன் ஆற்றும்
நின்னிசைப் பணிக்கு நெடிதுவந் தனனே,

### வடபுலத்திசை பயில்க எனல்

என்னிசைப் பயிற்சியும் எளிதாய் நினக்கு
வருமா றுரைக்க மனங்கொண் டுன்பால்
வருதல் உற்றேன்; வடபுலத் திசையும்
ஒருங்குடன் சேரின் ஒளிரும் நின்புகழ்;
அருங்குணம் ஆன்றோய்! விரும்புதி யோ'என,

### மீனவன் ஏளனம்

வயிறுபுண் ணாக வாய்விட்டுச் சிரித்துக்
'குயிலின் குரலொடு கோழியின் குரலும்

---

விருது - பட்டம், பரிசு; செவிமடுத்து - கேட்டு, உரவோய் - அறிஞ! இருப்பு - இருந்தவிடத்து, கலைமலி - கலைமிகுந்த, காளை - மீனவன், ஒளிரும் - விளங்கும்.

இணையின் என்னாம்? இந்நாள் வரையும்
துணைவிழி மூடித் தூங்கிய மாந்தர்
கண்விழித் தெழுந்து கருத்துடன் தமிழிசைப்
பண்தொடுத் திசைக்கப் பயிலுங் காலை
மீட்டும் மற்றோர் இசைபுக விழையின்
காட்டும் ஆர்வம் கருகிச் சாகும்;
அரும்பிய ஆர்வம் அணிமல ராகி
விரிந்து நறுமணம் வீசுதல் ஒன்றே
என்குறிக் கோள்' என எடுத்துரைத் தனனே;

**தங்கத் தேவனிடம் ஏமகானன் முறையிடல்**

மின்பொறித் தாக்குதல் மெய்யுற் றான்போல்
பின்புறம் நோக்கிலன் பேசா நாவினன்
ஏகினன் வடபுல ஏம கானன்;
போகிய அவ்விசைப் புலவன் தானுறை
தங்கத் தேவன் தன்மனை குறுகிச்
'சிங்கம் என்னையிச் சிறியோன் பழித்தனன்;
என்னிசை இகழ்ந்து தன்னிசை புகழ்ந்தனன்;
நின்னுரை கேட்டேன் நெளிந்ததென் மானம்!
எந்நகர்ச் செலினும் எற்பணிந் தேற்றனர்;
இந்நகர் ஒன்றே இகழ்வுரை தந்தது;
தங்கத் தேவ! தலைகவிழ் நிலையில்
தொங்கச் செய்தனை! துளைத்தனை நெஞ்சம்'
செங்கண் சிவக்கச் செப்பினன் இவ்வணம்;

**தங்கத் தேவன் கொதிப்புரை**

'வடபுலப் பெரியோய்! வாட்டம் தவிர்தி!
வடமொழி வெறுத்து வழுத்தமிழ் கோவிலில்
இடம்பெற முயலும் இழிமகன் செருக்கினை
அடக்கிட அழைத்தேன், கோவிலில் தமிழ்புகல்

எற்பணிந்து - என்னைப் பனிந்து

விடத்தகு செயலோ? தடுத்திடல் வேண்டும்;
மந்திர மொழியை வடமொழி தவிர்த்து
செந்தமி ழாற்சொலின் செத்து மடிகுவர்;
கோவிலைத் தொலைக்கஇக் குறுமகன் இப்பணி
மேவினன் போலும், மிடுக்கினைத் தொலைப்போம்;
தேவ பாடையின் சிறப்பினை நாட்டுவோம்;
யாவரும் என்பெயர் கேட்டால் நடுங்குவர்,
பிறப்பால் இழிந்தோன் எதிர்த்துனைப் பேசினன்!
இறப்பே அவன்இனி எய்துதல் வேண்டும்' என்
றழுக்கா றுள்ளமும் அயலவன் சினமும்
இழுக்குறு செயல்செய எழுந்தன; ஒருநாள்

**மீனவன் தாக்குதல்**

அருகமை சிற்றூர் ஆண்டு விழாவில்
பெருமழை என்னச் சொன்மழை பொழிந்து
வருமவன் மீனவன் வண்டியை இருளில்
ஊர்க்குறு மாக்கள் தாக்கினர்; அவனைத்
தீர்த்திட எண்ணித் தீட்டிய வாளால்
வெட்டினர்; ஆனால் விளைந்தது வேறு!
கட்டிளங் காளையர் தட்டுவண்டி யோட்டிக்
கொட்டி முழக்கிக் கூஉய்வரல் கேட்டு
விட்டுவிட் டோடினர் விலங்குச் செயலோர்;
வந்த காளையர் வாரி யணைத்து
நொந்த உடலின் நோவினை அகற்றிக்
கூடல் நகரிற் கொண்டுய்த் தனரே;

**வருந்திய மீனவன் வேறிடம் சேறல்**

'வேடன் கட்படு வெண்புற வானேன்!
பாடும் தமிழைப் பரப்புதல் பழியோ?

---

குறுமகன் - சிறியவன், தேவபாடை - ஆரியமொழி.கட்படு - கண்ணில்படும்;

கூடி எங்கும் கொலைசெய் மாக்கள்
தேடி அலையத் தொடங்குதல் கண்டேன்;
காடும் நாடும் ஒன்றெனக் கண்டேன்;
உயிர்ப்பலி உறுதி, ஓரிடம் தரியேன்;
செயிர்த்தோர் என்னைச் செகுத்தொழிக் காமுனம்
ஊரூர் ஓடி உயரிசை பரப்பிப்
பாரோர் ஏற்கப் பணிபுரிந் தழிவேன்'
என்றம் மீனவன் ஏகினன் விரைந்தே;

### தங்கத்தேவன் வஞ்சினம்

தங்கத் தேவன் தகவல் அறிந்ததும்
'எங்குஅத் தீயவன் ஏகினும் ஓயேன்;
யாங்குறின் என்ன? வேங்கையின் பகையைக்
கிளறி விட்டவன் கேடுறல் திண்ணம்;
உளறித் திரியுமவ் வுலுத்தன் தலைதனைக்
கொய்தமை வேன்' எனக் கூறி முடிக்கக்

### ஏமகானன் தூண்டு மொழி

கைதவன் ஏம கானக் கயவனும்
'நிற்பகை கொண்டோர் நெடுநாட் பிழையார்
சொற்பகை கொள்ளத் துணிந்தனன்; நின்னைச்
சிங்கத் தேவனெனச் செப்பக் கேட்டுளேன்;
தங்கத் தேவ! தயங்கேல் வினைமுடி'
எனமுடி போட்டவன் ஏகினன்; இப்பால்

### மீனவன், பகைக்கு இரையாதல்

ஊர்தொறும் ஊர்தொறும் உழைத்துவரு மீனவன்
பேர்மிகப் பெற்றனன்; பின்பொரு நகரில்
காரிருள் இரவிடைக் கண்ணயர்ந் திருந்துழி,
சூரியுட் கையினர் துணிமறை முகத்தினர்

---

செகுத்து - அழித்து, முனம் - முன்பு, செயிர்த்தோர் - பகைவர். கைதவன் - தீயவன், சூரி - கைக்கத்தி,

ஈரிரு மாக்கள் இருள்நிறை மனத்தினர்
மானவன் மீனவன் மார்பிடை அந்தோ!
ஈனவர் செயலினை எவ்வணம் இயம்புவல்!

**ஆவிபிரிதல்**

குருதிக் காட்டிற் குப்புறக் கிடந்தவன்
பெறலருஞ் சுவடியைப் பேணிக் கலைமகள்
நிலையஞ் சேர்க்கப் பணித்தபின் நெட்டுயிர்
கலைமலி தமிழுக் காக்கிக் களித்தனன்;

**அடிகள் இசை பரப்பப் பணித்தல்**

அப்பெருஞ் சுவடி!ஆயிழை நல்லாய்!
தப்பரும் வீரன் தன்கையில் வாளென
நின்பால் உற்றது, நீஇதைப் பரப்பி
அன்பால் வெல்'கென அடிகள் நவில
நன்றெனப் புகன்று நங்கைஏ கினளே.

தப்பரும் - குறிதவறாத.

# 15. இசைத்திறம் உணர எழுந்த காதை

### அடிகளார் ஆணை

பூங்கொடி யாகிய பொற்புடைச் செல்வி
ஆங்கண் மீண்டதும் அருண்மொழிக் குரைப்போள்
'மீனவன் திறமெலாம் விளம்பித் தமிழால்
ஆன நல்லிசை யாண்டும் பரவிடச்
சுவடியின் துணையால் தொண்டியற் றென்று
தவறிலா அடிகள் சாற்றினர்' என்றனள்;

### அருண்மொழியும் இசைதல்

'ஆம்என் மகளே!அதூஉஞ் சாலும்
தோமறு தமிழிசை துலங்குதல் வேண்டி
மீண்டும் அப்பணி மேவுதல் வேண்டும்;
பூண்டநல் லன்பரைப் பூரியர் கொலைசெய
ஈண்டிய துயரால் இசைத்தொழில் துறந்தோம்;
இவ்வணம் நம்மனோர் இசைப்பணி வெறுத்திடின்
செவ்விய அவ்விசை சீருறல் யாங்ஙனம்?
துயரால் துறத்தல் தன்னல மாகும்
அயரா உழைப்பால் அப்பணி புரிகுவம்
எண்ணி எண்ணி இம்முடி பேற்றேன்;
அண்ணலும் அம்முடி பறைந்தன ராகலின்
இன்னே அதனை இயற்றுதல் வேண்டும்;
கொன்னே வாழ்நாள் குறைவது கண்டோம்
விழுங்கி உறங்கிப் பிணியால் மூப்பால்
விழுந்து மாய்தல் வீணே யாதலின்

அதூஉம் - அதுவும், சாலும் - பொருந்தும், பூரியர் -கயவர், கொன்னே - வீணாக.

புதுமைச் சுவடியின் பொருளெலாம் தெளிந்து
போதல் நன்'றெனப் புகன்றனள் அருண்மொழி;

**பூங்கொடி வேண்டுதல்**

'அன்னாய்! சுவடியின் அரும்பொருள் அனைத்தும்
என்னால் ஆய்தல் எவ்வணம் இயலும்?
இசையின் திறனும் இயலின் திறனும்
நவையற உணர்ந்த நல்லோர் தாமே
இதன்றிறம் முழுவதும் எளிதின் அறிகுவர்;
அதனதன் வகைஎலாம் அறிந்தனை நீயே
முதன்முதல் இதன்பொருள் மொழிக' என்றனள்;

**எழிலியிடம் செல்க எனல்**

'உயிர்நிகர் மகளே ஒன்றுரை கேண்மோ!
இயலிசைத் திறமெலாம் என்னினும் மிகவே
கற்றாள் நிறைபுகழ் பெற்றாள் ஒருத்தி
உற்றாள் கொடுமுடி ஊரினள் அம்மகள்
அறிவின் உரனும் ஆய்வின் திறனும்
செறியும் இயல்பினள் செம்மை வாழ்வினள்
நரைமூ தாட்டி நம்போற் பொதுப்பணி
புரிவது தொழிலாப் பூண்டவள்; அவள்தான்
எழிலி என்னும் ஏழிசைச் செல்வி;
அன்னவள் தன்பால் அணுகி இதன்பொருள்
பழுதற உணர்க! பைந்தமிழ் இசைமுறை
கெழுதகும் அன்பால் கிளத்துவள் அம்மகள்;
என்பாற் கற்ற இன்னிசைத் திறனும்,
அன்பாற் கற்ற ஆய்முறைத் திறனும்
உன்பால் அமைந்த உருக்குங் குரலும்,
முன்பே முறுகி எழுநல் லார்வமும்
உடையாய் ஆதலின் உறுபயன் ஒருதலை;

கொடுமுடி - ஊரின் பெயர், கெழுதகும் - பொருந்திய, கிளத்துவள் - சொல்லுவள், ஒருதலை - உறுதி

தடையாய் வருவன உளவேல் தவிரும்;
எழுவாய்! எழுவாய்! இன்றே எழுவாய்!
தொழுவாய் அவளைத் துணையென நினைவாய்!
வழுவா மகளே! வாழிய பெரிதே'
என்றவள் வாழ்த்தி இருந்தனள் ஆங்கண்;

**அடிகளார் வருகை**

நன்று நன்றென நங்கையும் இயைந்தனள்;
அவ்வுழி அடிகள் வருகை தந்தனர்
செவ்விய மங்கையர் செங்கை கூப்பி
நிற்றலும் அவர்தமை நேரியர் வாழ்த்திப்
'பொற்றொடி யீர்!நாம் புறக்கணிப் பாக
விடுதல் தகாது விழிப்பினி வேண்டும்,
முடுகி எழுந்து முயலுதல் வேண்டும்,
மீண்டும் இசைப்பணி மேவுதல் ஒன்றே
காண்டகு செயலாம்; கருதா தொழியின்

**இசைப் பகைவர்**

தமிழின் பகைவர் தாமே புகுந்து
நமதிசை மறைப்பர், நாளும் பிறமொழி
இசையே பாடி ஏற்றமும் பெறுவர்,
இசையும் பொருளும் இனியநல் வாழ்வும்
அடைதல் ஒன்றே அவர்குறி யாதலின்
தடையும் செய்குவர்; 'தமிழில் இசையிலை,
பாட்டிசைத் துறையில் 'பாஷைச்' சிக்கல்
நாட்டுதல் நன்றோ? நாதம் ஒன்றே
நோக்குதல் வேண்டும், மொழிவெறி நுழைப்பது
குறுமனப் பான்மை, விரிமனங் கொள்க'
என்றெலாம் கதைப்பர்; இவ்வுரை கேட்டோர்
ஒன்றும் ஓரார்; உயரிய கல்வி

---
கதைப்பர் - பொய்சொல்வர், ஓரார் - உணரார்.

கற்றார் சிலரே; கற்றார் தம்முளும்
சிந்தித் துணர்வார் சிலரினும் சிலரால்
வந்தித் தவ்வுரை வாயென ஏற்பார்;
நேரிய நம்சொலைச் சீரிய தன்றெனக்
கூறிப் பல்வகைக் குறைகளும் புணர்த்துவர்;

**தமிழிசை தழைக்கும்**

ஆதலின் அன்னாய்! அத்துறை அனைத்தும்
ஏதிலர் தமக்கே இரையா காமல்,
தாய்மொழி மானம் தமதென நினையும்
ஆய்முறை தெரிந்த ஆன்றோர் தாமும்
உயிரெனத் தமிழை உன்னுவோர் தாமும்
செயிரறத் தமிழைத் தெளிந்தோர் தாமும்
புகுந்து தமிழிசை போற்றுதல் வேண்டும்;
தகுந்தோர் புகின் அது தழைத்திடல் ஒருதலை;

**கூத்தும் பரவுக**

கூத்தும் அவ்வணம் கூர்மதி யாளர்
காத்துப் போற்றின் கைம்மேற் பலனாம்;
உயர்தமிழ் மூன்றனுள் ஒன்றென நினையார்
மயலறி வுடையார் மறந்தனர் வெறுத்தனர்;
கல்லா மாந்தர் கையகப் பட்டது;
நில்லா தொழிந்தது நீள்புகழ் பட்டது;
கற்றோர் பலரும் முற்றுகை யிடின்அது
நற்றமிழ் மரபாய் நாட்டினிற் பரவும்;

**அடிகளார் விழைவு**

ஆதலின் அருண்மொழி! அரும்பெறற் பூங்கொடி
ஓதல் வேண்டும் உயர்தமிழ் இசையை;

---

வந்தித்து - வணங்கி, வாயென - உண்மையென, புணர்த்துவர் - சேர்ப்பர், ஏதிலர் - பகைவர், செயிர் - குற்றம்.

தெருவெலாம் ஊரெலாம் சென்று நாடெலாம்
உருகும் இசைத்தமிழ் ஒலித்து முழக்கி
வெல்லுதல் ஒன்றே விழைந்தனென்; அதன்றலை

### அடிகளார் வினவுதல்

சிந்தனைக் கருத்தளாஅய்ச் செந்தமிழ்ப் பாட்டால்
பிந்திய மக்களைப் பேணலும் ஆகும்;
ஏற்றுள நம்பணி எளிதினில் வெல்லும்;
சாற்றிய மீனவன் தான்விடு சுவடியும்
வேற்றிடன் புகாஅது விளைபயன் நல்கப்
பூங்கொடி கையிற் புகுந்தது நல்லாய்!
ஈங்குன துளம்யாது?' என்றலும் உரைப்போள்

### அருண்மொழி விடை

'பெரியீர்! நும்மொழி பேணுதல் ஒன்றே
அறிவோம் யாங்கள், ஆதலின் என்மகள்
நெறிமுறை பிறழா நேரிசைச் செல்வி
கொடுமுடி தந்த கோமகள் எழிலி
என்பாள் உழைச்செலீஇ இசையின் நுணுக்கம்
முன்போய்ப் பெறுகென மொழிந்துளேன், அவளும்
அன்பால் இயைந்தனள்' என்னலும், பூங்கொடி

### எழிலியின் திறம் வினவுதல்

'குறள்நெறி வழுவாக் கொற்றவ! எழிலி
திறன்முழு தறியும் விழைவினேன்' என்றனள்;
'அழியாப் புகழ்மிகுத் தடங்கி வாழும்
எழிலி திறமெலாம் இயம்புவென் யா'னென
விழிமலர்ப் பூங்கொடிக்கு விளம்பினர் அவரே.

---

புகாஅது - புகாமல், செலீஇ - சென்று.

## 16.எழிலியின் வரலாறறிந்த காதை

### இசைச் செல்வி

கன்னித் தமிழின் நன்னலங் காப்போய்!
தன்னலம் விழையாத் தையல் எழிலிதன்
திறமுனக் குணர்த்துவென் செவ்விதிற் கேண்மோ!
அறமனச் செல்வி, அழகின் விளைநிலம்
எழிலி எனும்பெயர்க் கியைந்தவள், அவள்தான்
இசையால் உறுபே ரிசையாள், பிறமொழி
இசையே பாட இசையாள், தமிழில்
ஒன்றெனும் இயலும் ஓதித் தெளிந்தவள்,
மன்றினில் நிறைவோர் மகிழ்ந்திடப் பாடலில்
ஒன்றிய பொருளின் உணர்வொடு பாடி
இசைவய மாக ஈர்க்குந் திறத்தினள்,
நரம்பிசை பிழையாக் குரலால் நெஞ்சம்
உருக இன்னிசை ஓதும் பெற்றியள்;

### எதிர்ப்பெலாங் கடந்தாள்

மெல்லிசைத் தமிழின் மேன்மை விரும்பாச்
செல்வர் சிலரும் செய்தி இதழரும்
மொழிவெறி கொண்டாள் எனப்பழி மொழிவது
தொழிலாக் கொண்டனர் தொல்லைகள் தந்தனர்;
புன்கண் ஒன்றும் பொருளெனக் கருதிலள்;
தன்கண் வருவாய் தழைவது வேண்டிலள்;
அதனை விழைவோர் தாமே அஞ்சுவர்?

---

எழிலி - அழகி, இசையால் - பாட்டால், இசையாள் - புகழுடையவள், மன்றினில் - அரங்கினில், ஈர்க்கும் - கவரும், செய்தி இதழர் - பத்திரிகையாளர், புன்கண் -துன்பம், தன்கண் - தன்னிடம்.

எதையும் அஞ்சிலள் எடுத்தநற் பணியில்
ஆக்கமும் கேடும் அணுகுதல் உண்டென்
றூக்கமும் உரனும் மீப்பட லாயினள்;
அயலி லிருந்தே அழிவினை வித்தும்
பயனில பேசும் பதர்சிலர் ஒழிய
மயல்ஒழிந் தாரெலாம் மதித்தனர் போற்றினர்;
தளிர்க்கும் அவள்புகழ் தகைப்பார் இல்லை;
முளைப்பவர் எவரும் முகங்கவிழ்ந் தேகினர்;
இவ்வணம் இசையால் ஏற்றம் பெற்றனள்;

**காதல் மணம்**

அவ்வுழை ஒருவன் அழகிய கூத்தன்
ஆடல் வல்லான் அதனதன் நுணுக்கம்
நாடிய புலத்தான் நாடெலாம் வியந்து
'நிகரிலை இவற்கென நிகழ்த்துநற் பெயரோன்
புகழில் மிதப்போன், பூவை எழிலியை
மலர்மண மாலை சூட்ட விழைந்தனன்;
கலைஞர் இருவர் கருத்தும் ஒன்றின;
கூத்தும் பாட்டும் குலவி மகிழ்ந்தன;
ஏத்தும் புகழோ எழுந்தது திசைஎலாம்;

**கூத்தன் அயல்நாடு செல்லுதல்**

மண்டிய புகழை மாந்திய மாந்தர்
தெண்டிரை கடந்த திசையினில் வாழ்வோர்
கண்டு மகிழக் கருதின ராகி
வேண்டி அழைத்தனர் விரைந்தனன் கூத்தனும்;
ஈண்டிருந் தாள்இசை எழிலி தனித்தே;
ஆழி கடந்தவன் ஆடற் றிறமெலாம்
ஊழியல் முறையால் உணரக் காட்டினன்;
'கண்டிலாப் புதுமை கண்டனம்' என்று
கண்டவர் புகழ்ந்து கைப்பொருள் நல்கப்

---

மீப்படல் - மேம்படல், தகைப்பார் - தடுப்பார், முளைப்பவர் - தோன்றுபவர், இவற்கு - இவனுக்கு, மண்டிய - நிறைந்த, தெண்டிரை- கடல், ஊழியல் முறை - நூலின் முறை, கண்டனம் - கண்டோம்.

### மரக்கலம் உடைதல்

புகழும், பொருளும் மிகவரப் பெற்றே
அகநிறை களிப்பால் ஆழ்கடல் மிசையே
மீள்வோன், பெருவளி மிடல்கொடு தாக்க
நீள்கலம் உடைந்து நெடுங்கடல் மூழ்கலும்;

### கூத்தன் ஒரு தீவை அடைதல்

பாய்மரம் சிதறிய பகுமரம் பற்றி
ஓய்விலா அலைகள் உந்தி உதைப்பக்
கடுங்கண் மறவர் கல்லா மாந்தர்
கொடுங்கள் உண்டியர் குழீஇ வாழும்
மொழிபெயர் தீவின் கழிபடு கரையில்
விளிவில னாகிச் சார்ந்தனன் கூத்தன்;

### எழிலியின் துடிப்பு

‘பெயருங் கூத்தன் பெருவளி தன்னால்
உயர்கலம் மூழ்கி உயிர்துறந் தான்’ என
உயிர் பிழைத் துய்ந்தோர் வந்தீங் குரைத்த
கொடுமொழி செவிப்படக் கொடுவரிப் புலிவாய்ப்
படுதுயர் மானெனப் பதைத்தனள், கதறினள்;
துடித்தனள், துவண்டனள், துடியிடை கண்ணீர்
வடித்தனள், ‘என்னுடை வாழ்வில் வீசிய
பெரும்புயல் விளைத்த துயரம் பெரிதே!

### எழிலியுன் புலம்பல்

மாலுமி இல்லா மரக்கலம் ஆகிப்
பாழும் இடர்க்கடல் வீழும் தனியேன்
எவ்வணம் உய்குவென்? யாதுநான் செய்குவென்?

---

பெருவளி - புயல், மிடல் - வலிமை, கலம் - மரக்கலம், பகுமரம் - மரத்துண்டு, உண்டியர் - உணவினர், குழீஇ - கூடி, மொழிபெயர் - மொழிமாறிய, கழி - உப்பங்கழி, விளிவிலன் - இறக்காதவன், கொடுவரி - வளைகோடு,

கவ்விய இத்துயர் கடப்பது யாங்ஙனம்?
பிரிவெனும் பெருஞ்சுறா பேழ்வாய் காட்டி
விரைவினில் வந்தெனை விழுங்கிடும் அந்தோ!
இசையொலி பரவிட இன்புறுங் காலை
வசையிலா யாழில் வடிநரம் பறுந்ததே!
கூடி மகிழ்ந்த கூத்தும் இசையும்
வாடி வதங்கி வாழ்விழந் தனவே!
பண்ணொலி இழந்தது பாடல் அந்தோ!
கண்ணொளி இழந்தது கருவிழி அந்தோ!
கொழுநன் இழந்தேன்! கொழுநன் இழந்தேன்!
உழலும் வாழ்வும் உயிரும் வேண்டேன்!'
எனுமொழி புலம்பி, இணைதுயர் நலியக்

**எழிலியின் மெலிவு**

கண்படை கொண்டிலள், கருதிலள் உணவைப்
புண்படு நெஞ்சம் பூண்டனள்; அதனால்
பண்ணும் இசையும் பரிவுற் றேங்கக்
கண்ணும் மனமும் கவலை தேங்க
உயிரும் உடலும் நலிந்து மெலிந்தனள்;

**வானொலிச் செய்தி**

'ஊர்பெயர்ந் தேகிய உயர்பெருங் கூத்தன்;
சூர்வளி தாக்கத் தொலைகலப் பட்டோன்;
ஊர்திரை உந்த ஒடிமரம் துணையாக்
கல்லா மாந்தர் கடுங்கண் மறவர்
பல்லோர் வாழும் பழுவூர்ப் பாக்கம்
சார்ந்துளன்' என்று சாற்றிய வானொலி
வாய்மொழி கேட்டோர் வந்துடன் புகலத்

---

கவ்விய - பற்றிய. பேழ்வாய் - திறந்தவாய், கண்படை - உறக்கம், சூர்வளி - புயல், ஊர்திரை - ஊரும், ஊன் - உடல்.

### எழிலியின் களிப்பு

தழலில் உருகும் நெஞ்சம் தளிர்த்தனள்,
உயிரும் தளிர்த்தனள், ஊனெலாம் தளிர்த்தனள்,
பயிரை விளைத்தோன் பயனெதிர் நோக்கும்
பான்மைய ளாகிப் பண்ணுயர் எழிலி,
வாழ்க்கைத் துணைவன் வரவெதிர் நோக்கி
வீழ்த்திய துயரம் விலகிட இருந்தனள்;

### கூத்தன் பழுவூர்த் தலைவனை அடைதல்

அடைகரை சேர்ந்து விழுமகன் றன்னை
மிடைமணற் பரப்பின் இடையினிற் கண்டோர்
பழுவூர்த் தலைவன் பக்கலிற் சேர்த்தனர்,
கொழுவிய தலைமகன் கூத்தன் நிலைகண்
டிரங்கிய நெஞ்சினன் இவன்பசி களைவோன்
நறுங்கனி பலவும் நல்கின னாகப்

### தலைவன் வியப்பும் வினாவும்

பசியும் தளர்வும் நீங்கியோன் பழுவூர்
வதியும் பிறமொழி மாந்தர் தம்முடன்
அவர்மொழி பேசிட, அவ்வூர்த் தலைவன்
உவப்பும் வியப்பும் உற்றன னாகித்
'தவறிலா துரைத்தனை எமது தாய்மொழி!
யாங்ஙனம் உணர்ந்தனை? ஈங்கெமக் குணர்த்துதி!
ஆங்கிலம் வடபுலத் தாரிய மொழிகளால்
தீங்குவந் துறுமென நின்னுடைத் தேய
மாந்தர் பலரும் மற்றைய மொழிகளைக்
காந்திய நெஞ்சொடு கனன்று வெறுத்துரை
கூறுவர் என்றே கூறக் கேட்டுளேம்;
ஆயினும் நீயோ அழகுற எமது
தாய்மொழி புகன்றனை யாங்ஙனம் உணர்ந்தனை?
ஈங்கெமக் குணர்த்துதி' என்னலும் உரைப்போன்

---

மிடை - நெருங்கிய, கொழுவிய - வளமிக்க, காந்திய - கொதிக்கும்.

## தமிழரின் பரந்த மனப்பான்மை

'வருவிருந் தோம்பும் பெருந்திறல் உடையோய்!
வருமொழி தமக்கெலாம் வணங்கி வரவுரை
தருவது தொழிலாக் கொண்டது தமிழகம்;
அயன்மொழி பலவும் ஆய்ந்து தெளிந்து
மயலற மொழியும் மாந்தர் பற்பலர்
எம்முடை நாட்டினில் இலங்கிடல் காணுதி!
எம்மொழி யாயினும் எம்மொழி என்றதை
நம்பும் இயல்பினர் நாங்கள்; இந்நிலை
அறிகதில் ஐய! அமிழ்தெனும் தமிழை
மறந்தும் பிறமொழி மதிக்கும் பெற்றியேம்;
ஆயினும் தமிழை அழிக்கும் கருத்தின்
சாயல் காணினும் தரியேம் எதிர்ப்போம்;

## பிறமொழி பயில்வோர்

மொழியியல் ஆய்வோர் முந்நீர் வணிகர்
எழிலுறுங் கூத்தர் இவ்வகை மாந்தர்
பன்மொழிப் பயிற்சி பாங்குறப் பெறுவர்;
என்தொழில் கூத்தென ஏற்றுளேன் ஆதலின்
அயன்மொழி சிற்சில அறிந்துளேன் அன்ப!

## தமிழகத் கிளர்ச்சி

உரிமை வாழ்வை உவந்தனர் என்னினப்
பெருமை உணர்ந்த பெரியோர், அதனால்
உணர்ச்சியும் எழுச்சியும் ஊட்டினர்; ஊட்டத்
தளர்ச்சி நீங்கித் தமிழக மாந்தர்
வளர்ச்சி நாடிக் கிளர்ச்சிகள் செய்தனர்;

---

எம்மொழி - எந்தமொழி, எம்மொழி - எமதுமொழி, தரியேம் - பொறுக்கமாட்டோம், முந்நீர் -கடல்,

### சிற்றினத்தின் சூழ்ச்சிகள்

தமிழர் உயர்வைத் தகைக்கக் கருதிப்
பழியும் பொய்மையும் பகர்தல் நாணா
இழிமதிக் கூட்டம் எம்செயல் கண்டே
அவ்விய நெஞ்சில் அச்சமும் சேர
எவ்வகை யேனும் தமிழியல் எழுச்சியைக்
கொல்லும் நோக்கொடு குழுமிய சிற்றினம்
ஒல்லும் வகையாற் பல்வகைப் பழியைச்
சொல்லித் தீர்த்தது சூழ்ச்சிகள் விளைத்தது;

### பொய்ம்மொழி நம்பேல்

சூழ்ச்சியால் அயன்மொழி ஆட்சியைப் பரப்பிடப்
பாழ்ச்செயல் புரிந்தது; பகைமனங் கொண்டெமைக்
குறுமனம் என்று குறைகள் சொற்றது;
பிறமொழி வெறுக்கும் பெற்றியர் என்றது;
உடனிருந் தழிக்கும் நோய்நிகர் மாந்தர்
கொடுமனம் உடையோர் விடுபொய் மொழியை
நண்ப! மெய்யென நம்பேல்; எம்முயர்
பண்பினை நடுநிலைப் பாங்கினர் ஏத்துவர்'
எனஅக் கூத்தன் எடுத்தியம் பினனால்;

### தலைவன் மகிழ்வும் வேண்டுகோளும்

மனமிகக் களித்த பழுவூர்த் தலைவன்
கூத்தன் உரைத்திடும் கொள்கைகள் போற்றி
'நாத்துணை யாகிய நாவல! ஈங்கிவண்
காத்துனைப் போற்றிடக் கருதினம்; எம்முழைச்
சின்னாள் வதிந்து சிறியேம் மகிழ
நன்னூல் ஒன்றின் நலமுரைத் தேகுதி!
கூத்தின் திறமெலாம் பாத்திடும் விழைவினேம்

அவ்விய - பொறாமையுற்ற, சொற்றது - சொல்லியது, எம்முழை - எம்மிடம்,

ஆயினும் நின்குழு அனைத்தும் இழந்து
பாய்மரம் துணையாப் பற்றிவந் துற்றனை;
ஆதலின் நன்னூல் அறநூல் ஒன்றினை
ஓதுதி எமக்கு' என உரைத்தன னாகக்

**கூத்தன் திருக்குறள் உரைத்தல்**

கூத்தனும் இசைந்து குலவி மகிழ்ந்தனன்;
பாத்திறம் காட்டும் பாவலன்; நாவலன்,
தீத்திறம் யாவும் தீர்த்திடும் ஆசான்,
உலகம் உய்ந்திட உயர்நிலை எய்திடப்
பலபொருள் பொதிகுறட் பாவினைத் தந்தனன்;
எப்பா லவரும் ஏத்தும்அம் முப்பால்
செப்பிய பொருளறம் தப்பா துரைத்து
மெய்ப்பால் அனைத்தும் விளக்கினன் கூத்தன்;

**பழுவூர் மாந்தர் அறநெறி தெளிதல்**

எஞ்சா துணர்த்திய எழிலறம் அனைத்தும்
நெஞ்சாற் கொண்டனர்; நிறைமொழி மாந்தன்
வள்ளுவன் ஓதிய வாய்மைகள் கண்டனர்;
தெள்ளிய தமிழியம் தேர்ந்தனர்; அன்பை
உள்ளிய பழுவூர் உறையும் மாந்தர்;

**பழுவூரார் பரிசில் அளித்தல்**

நன்னூல் மொழிந்திடும் நவைதவிர் அறமெலாம்
பன்னூற் கூத்தன் பகர்ந்திடக் கேட்டுக்
கழிமிகு மகிழ்வினர் நிறைபடு நிதியம்
அரும்பொருள் பலவுடன் அளித்தனர் போற்றப்
பெரும்புகழ் விஞ்சிடப் பெயர்ந்தனன் கூத்தன்;

---

பாத்திறம் - பாடல் திறம். தமிழியம் - தமிழின் கொள்கை,

## பிரிந்தவர் கூடுதல்

கருங்கடல் கடந்தனன் கலந்தரு துணையால்
தாயகம் கண்டனன் தளிர்த்தனன் மனனே;
வேயனை தோளி மீளுறுங் காதலற்
காணலும் நீள்துயர் களைந்தனள் ஆங்கே;
பேணிய கூத்தும் பெரும்பே ரிசையும்
நீணில மாந்தர் நெஞ்சங் களிகொள
மீண்டும் மலர்ந்தே யாண்டும் பரவின;
எழிலிதன் வாழ்வில் எழிலி ஆயினள்;

## பூங்கொடி எழிலிபால் எழுதல்

தொழுதகும் அந்தத் தூயவள் பாங்கில்
எழுக ! இசையின் நுணுக்கம் யாவும்
பழுதற உணர்க! பரப்புக பாரில்!
என்றனர் அடிகள் எழுந்தனள் அவளே.

---

வேயனை தோளி - எழிலி.

# 17. எழிலிபாற் பயின்ற காதை

### பூங்கொடி எழிலியின் இல்லம் அடைதல்

ஆங்ஙனம் புகன்ற அடிகள்தம் வாய்மொழி
பூங்கொடி ஏற்றுளத் திருத்தினள் போந்து
கொடுமுடி நல்லாள் குலவிய தமிழிசை
நெடுமனை குறுகி நின்றன ளாக,

### பூங்கொடி அறிமுகம்

'வல்லான் கைபுனை ஓவியம் போலும்
நல்லாய்! என்மனை நண்ணிய தென்னை?
இளங்கொடி யார்நீ?' என்றனள் எழிலி;
உளங்கொள அறிமுகம் உரைத்தனள் தன்னை
அடிகள்தம் ஆணையும் அறைந்தனள் பூங்கொடி;

### எழிலி பாடம் பயிற்றல்

இசையின் அரசி ஈங்கிவள் விழைவுணர்ந்
திசைந்தனள், இசையின் இலக்கண நுணுக்கமும்,
பாடல் திறனும், பாடும் முறைமையும்,
ஏடுரை வகையும், இசைத்தொழில் புரிதலால்
பட்டுணர் அறிவும், பாங்குடன் குழைத்து
மட்டவிழ் கோதை மனங்கொள ஓதினள்;

### இசைக்கருவிப் பயிற்சி

குழலும் யாழும் முழவும் முதலாப்
பழகும் கருவியின் பான்மையும் பயிற்றினள்;
மீனவன் சுவடியின் மேம்படு பொருளெலாம்

---

போந்து - சென்று, பட்டுணர் அறிவு - அனுபவ அறிவு, மட்டவிழ் கோதை - பூங்கொடி,

ஞானமீ தூர நாள்பல ஆய்ந்து
குறைவறத் தெருட்டினள் கொடுமுடி நங்கை;

### எழிலியின் உள்ளக்களிப்பு

நிறைவுறும் அறிவொடு நேரிய நடையுறும்
இளையாள் திறமெலாம் எழிலி நன்குணர்ந்
திவளால் இசைத்தமிழ் இசையுறல் திண்ணம்;
தவலரும் இப்பணி தரணியில் ஆற்றிட
என்பின் ஒருவரும் இலரே எனமனம்
துன்பின் ஆழ்ந்து துவளுங் காலை
அந்நலி வகற்றிட ஆயிழை வந்தனள்;
என்னினும் மேம்பட ஏற்றமுற் றிலங்குவள்,
பைந்தமிழ் இசைத்தொழில் பரம்பரை அறாஅது;
பைந்தொடி நெடுநாள் வாழிய பெரிதென
நெஞ்சொடு வாழ்த்தி நெடிதுவந் தனளே;

### பூங்கொடி இசையரங்கேறுதல்

பாவை ஏறிய பாட்டரங் கனைத்தும்
நாவை மீறிய நற்புகழ் எய்தினள்;
கேட்டார்ப் பிணித்துக் கேளார் தாமும்,
வேட்ப இசைக்கும் வியத்தகு குரலும்,
பொருளொடு புணர்த்துப் புந்தியிற் படியத்
தெருள்தரச் சுவையொடு செப்பும் முறையும்,
உயர்த்தும் தாழ்த்தும் விரித்தும் சுருக்கியும்,
வியக்கும் முறையாற் பண்தரு விறலும்,
தாளமும் இசையும் தவறா வகையில்

---

மீதுர - மேலும்வரை, தெருட்டினள் - தெரிவித்தனள். அறாஅது - அற்றுப்போகாது, பிணித்து - கவர்ந்து, கேளார் - கேளாதவர் (பகைவர்), வேட்ப - விரும்ப.

காலமும் இடமும் கலையா நிலையில்
இணைந்தும் பிணைந்தும் இசைக்கும் திறனும்,
குழைந்து பயன்தரு கொள்கையும் கலந்து
விழைந்து மாந்தர் வியந்திடப் பாடி
இசைப்பணி புரிந்தனள் எழில்வளர் பூங்கொடி;

**யாப்பியல் பயில்கென எழிலி கூறல்**

நசைத்தமிழ் இசைத்திறம் நன்கறி வுறுத்திய
எழிலி மீண்டும் இளையவட் கூஉய்க்
'கழிமிகு புலமை பெற்றனை காரிகை!
பாடல் யாக்கும் பாங்கும் கசடற
நாடிநீ பயிலுதல் நயந்தனென் செல்வி!

**கவிதை குவிதல் வேண்டும்**

யாண்டும் கவிதை யாத்திட முனைவோர்
வேண்டும் மளவில் விரிந்திடல் கண்டோம்;
ஆயினும் சிலரே அறிவுடைப் புலவோர்;
தாயினும் மேலாம் தமிழ்மொழி ஓங்கிட
நவையறு கவிதை குவிந்திடல் வேண்டும்;

**கல்லாக் கவிஞர்**

கவியெனும் பெயரால் கற்பனை செய்து
புனைவோர் அனைவரும் புலவோர் அல்லர்,
துணைசெயும் யாப்பும் தொட்டவர் அல்லர்,
எழுத்தும் சொல்லும் பழுத்தவர் அல்லர்,
முழுக்கப் பொருளும் முடித்தவர் அல்லர்,
பழுதிலா அணியும் படித்தவர் அல்லர்,
ஐவகை இலக்கணம் அனைத்தும் இன்றிச்
செய்யுள் எழுதி உய்வோர் பலரே!

## தமிழைப் பழிக்க விடுவதோ!

இவர்தம் பாடல் எழிலுற அச்சுச்
சுவடி வடிவில் சுற்றுதல் கண்டோம்;
விடுத்தஇச் சுவடிகள் அடுத்திவண் வருமவர்
படித்தவர் விழியிற் படுமேல் நம்மைப்
பழிப்பவர் ஆவர்; பைந்தமிழ் வளர்ச்சி
இழித்துரை கூறுமா றிருந்ததே என்பர்;
செழித்துயர் தமிழைப் பழித்திட நாமே
விடுத்திடல் நன்றோ? விளம்புதி மகளே!
நிலைத்திடுங் கவிதை தொடுத்திடுங் காப்பியம்
விளைத்திடல் வேண்டும் பலப்பல இன்றே,
அருமைத் தமிழ்க்கிஃ தாக்கப் பணியாம்,
தரும்நமைத் தலைமுறை தலைமுறை வாழ்த்தும்;

## போலிக் கவிதைகள்

போலிக் கவிஞர் புனைபவை புனைக!
வேலி யிடினும் விளைபவை விளையும்;
பயனும் பண்பும் பழுநிய நூல்கள்
வியனுற வெளிவர முயலுதல் வேண்டும்;
புதியநம் சுவடிமுன் போலிச் சுவடிகள்
கதிரோன் முன்னர்க் கைவிளக் காகும்;
நாளைய உலகம் நந்தமிழ் ஏத்தும்;

## மன்னுபுகழ் நிறுவுக

பாளை விரிநகைப் பாவாய்! நின்பாற்
பல்வகைப் புலமை படிந்திடல் கண்டேன்;
நல்லிளம் பருவத்து நாலுந் தெரிந்தனை!
நால்வகைப் பாவும் நன்கனம் யாத்தல்

---

பழுநிய - நிறைந்த, மன்னா - நிலைபெறாத, மன்னுதல் - நிலைபெறல்,

கைவரப் பெறுதியேல் கன்னிநீ பூண்டுள
செய்கைக் குறுதுணை சேர்க்கும், அவ்வினை
அரிவை நினக்கும் அரியதொன் றன்று,
சிறிதின் முயலினும் தேர்ந்து தெளிகுவை;
மன்னா உலகத்து மன்னுதல் வேண்டின்
தன்புகழ் நிறுவிடத் தலைப்படல் வேண்டும்;
நின்னுளம் யாதென நிகழ்த்துதி' என்னலும்;

**பூங்கொடி இசைவு தருதல்**

'அன்னையிற் சால அன்புளம் காட்டி
என்புலம் ஓம்பி இலங்கிட அருளினை!
நின்பணி அஃதேல் நேருதல் அன்றி
மறுமொழி கூற யானோ வல்லேன்?
மறையுமென் வாழ்வு வளர்தமிழ்ப் பணிக்கே
என்றுளம் கொண்டேன் என்பணிக் கஃதும்
நன்றெனின் இன்னே நவிலுதி தாயே'

**காவியப் பாவை**

என்றலும், எழிலி யாப்பின் இயலும்
பாவும் வகையும் பாவின் இனமும்
யாவும் உணர்த்திக் காவியத் துறையில்
வல்லமை பயிற்றினள், நல்லவள் அதன்றலை
இசைத்துறைப் பாடலும் இயற்றிடச் செய்தனள்;
கற்பனைத் திறனும் கவிதை வளமும்
பொற்புடன் அணிகலம் பொலிந்திடப் புனையும்
காவியத் தலைவிஎன் றிவளைக் கழறிடப்
பாவியல் வல்ல பாவை யாகினள்;

---

நிகழ்த்துதி - சொல்லுவாய், நேருதல் - உடன்படல்,

## புகழ்மணம் பரவுதல்

கற்றவர் மெச்சிடக் கவியரங் கேறினள்,
குற்றமில் மீனவன் நற்றமிழ்ச் சுவடியின்
துணைகொடு தமிழிசைத் தொண்டுகள் ஆற்றினள்;
இணையிலை இவட்கென யாவரும் ஏத்திடப்
பட்டி மண்டபம் பாங்கறிந் தேறினள்;
எட்டிய திவள்புகழ் இருநிலம் அனைத்தும்;
இவ்வணம் மொழிப்பணி இயற்றிப் பொதுநலச்
செம்மனம் உடையாள் சிறந்தனள் பெரிதே.

---

இருநிலம் - பெருநிலம்.

# 18. இசைப்பணி புரிந்த காதை

### அருண்மொழி மகிழ்ச்சி

எழிலி பயிற்றிய இசைத்திறம் பூண்ட
விழிமலர்ப் பூங்கொடி வியன்புகழ் ஊர்தொறும்
பரவிப் பரவிப் பாரகம் அடங்கலும்
விரவி மலர்ந்து விளைந்தது நற்பயன்;
தான்புனை கவியைச் சான்றோர் ஏத்திட
ஈன்றநற் கவிஞன் ஏமுறல் போல
ஈன்றாள் அருண்மொழி இவள்புகழ் செவிப்பட
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே;

### எழிலியின் மகிழ்ச்சி

இசையின் அரசியாம் எழிலிதன் கொழுநன்
விசையுறு மரக்கலம் சிதைவுறு காலை
விளிவில னாகி மீளுதல் கண்ட
காலையின் மிகவே களிகூர்ந் தனளே;

### அடிகள் விழைவு

குறளகங் கண்ட மலையுறை யடிகள்
உறுபுகழ் பூங்கொடி உறுவது காணலும்
நெஞ்சம் குளிர்ந்து நேரிழை வாழ்த்தி
‘வஞ்சி! தமிழிசை வளர்வான் வேண்டி
நிலையம் ஒன்று நிறுவுதல் விழைந்தனென்;
பலரும் வந்திவண் பயிலிகள் ஆவர்;
இசைகெழு தமிழின் ஏற்றம் உணர்வோர்
திசைதொறும் திசைதொறும் சென்றிசை பரப்புவர்;

---

பாரகம் - உலகம், அடங்கலும் - முழுவதும், ஏமுறல் - மகிழ்தல், ஞான்றினும் - பொழுதினும், காலையின் - பொழுதைவிட, பயிலிகள் - பயிற்சியாளர்கள், இசை - புகழ். தழிஇய - தழுவிய,

கொள்கை தழீஇய நல்லிசைப் பாடல்
உள்ளங் கவர்வன தெள்ளிதின் யாக்கும்
நற்றிறல் உடையாய் நங்கைநீ யாதலின்
சொற்றமிழ்க் கொள்கை முற்றவும் தொகுத்துப்
பகுத்தறி வூட்டும் பாடல்கள் புனைந்து
வகுத்தவை பயிற்றின் வந்திவண் பயில்வோர்
நாடெலாம் பரப்புவர் நம்முயர் கொள்கை;

**இசையின் இருபயன்**

ஈடிலா இப்பணி இருபயன் விளைக்கும்;
பகைவர் மறைத்த பழந்தமிழ் இசைத்திறன்
பகலவன் கதிரொளி பரவுதல் போலப்
புத்துயிர் பெற்றுப் புவிமிசை யாங்கணும்
மெத்தவும் பரவி மேம்படும்; அதன்றலை
விளக்கொளி இன்றி வீங்கிருள் மூழ்கித்
துளக்குறும் மாந்தர் நிகர்த்தன ராகி
உளத்தொளி யின்றி ஓங்கிருட் கிடந்து
நொந்திடும் மாந்தர் உய்ந்திட யாண்டும்
சிந்தனைச் சுடரொளி வளர்ந்திடும் அன்றோ?'
என்றன ராக இயைந்தனள் பூங்கொடி;

**தமிழிசைப் பள்ளி**

நன்றுளங் கொண்ட குன்றுறை யடிகள்
இமிழ்கடல் வரைப்பில் தமிழிசை கூட்டும்
கமழ்மணம் பரவக் கண்டனர் பள்ளி;
பள்ளித் தலத்துள் பயிற்றும் பொறுப்பினைக்
கள்ளிதழ்க் கோதை கருத்துடன் ஏற்றனள்;
நாற்றிசை வாழுநர் பாட்டிசை வேட்டுக்
கோற்றொடி தன்னுழைக் குழுமின ராகப்
பொன்னியின் செல்வன் புகழ்பெறு மீனவன்

யாக்கும் - இயற்றும், வரைப்பு - உலகம், உழை - இடம்.

பன்னரும் துயரப் பாடுகள் அடைந்து
தேடிக் கொணர்தரும் பீடுயர் ஏடு
நாடிப் புகலும் நற்றமிழ் இசையின்
நுணுக்கம் அனைத்தும் நுவன்றனள் இருந்துழி;

**சண்டிலி வருகை**

மணக்கும் தென்றல் மாமலை எழிலும்,
கோடை தவிர்க்கும் குளிர்மலைப் பொழிலும்,
நீடுயர் தண்ண்ணிய நீல மலையுடன்
கண்டுளங் குளிர்ந்த காரிகை ஒருத்தி
சண்டிலி என்பாள் சார்ந்து வணங்கித்

**சண்டிலி வேண்டுகோள்**

'தமிழிசை வளர்க்கும் தையாஅல் நின்னுழை
அமிழ்தம் நிகர்க்கும் அவ்விசை பயிலும்
ஆர்வங் கொண்டுளேன் ஆதலின் அருள்நலங்
கூர்விழி யாய்நின் குழுவினுள் எனையும்
சேர்த்தருள் செய்'கெனச் சேயிழை வேண்டலும்,

**பூங்கொடி அருளல்**

'வருக தோழி வாழ்கநின் வேட்கை!
வருவோர் தமக்கெலாம் தமிழிசை வழங்குதல்
தொழிலாப் பணியாத் தொடங்கினம் இதனை;
பிழையாப் பயனும் விளையா நின்றது
கண்டுளங் களிக்கும் காலை எம்முழைச்
சண்டிலி நீயும் சார்ந்தனை வாழி!
அயன்மொழி பேசும் அரிவைநீ யாயினும்
வியன்பெருங் காதல் விருப்பொடு வந்தனை.
பயிலுங் குழுவினுள் பாங்குடன் நீயும்
குயிலிசை பயில்'கெனக் கூறினள் பூங்கொடி;

---

தண்ண்ணிய - குளிர்ந்த (ஒற்றளபெடை) தையாஅல் - பூங்கொடியே!, சேயிழை - சண்டிலி.

### சண்டிலி இசைப் பயிற்சி

மூளும் அருள்மன முத்தமிழ்ச் செல்வி
நாளும் நாளும் நல்லிசை யமிழ்தம்
வாரி வாரி மகிழ்ந்தனள் வழங்கலும்,
நேரிழைச் சண்டிலி நிமிர்ந்தெழும் அவாவினள்
காய்பசி வருத்தக் கடுந்துயர் உழந்தோன்
வாய்புகும் உணவினை மகிழ்ந்துண விரையும்
ஆர்வலன் என்ன ஆஅர மாந்தினள்
சோர்விலள் வைகலும் சொல்லிசை பயின்றனள்;

### பூங்கொடி பாராட்டல்

தமிழிசை பயிலும் தணியா வேட்கையள்
தமிழக மாந்தரும் தம்முள் வியக்க
முன்னணி எய்திய மொய்குழல் மொய்ம்பினை
முன்னின் றுணர்ந்த மென்னடைப் பூங்கொடி
'நின்குரல் மென்குரல் நன்குரல் ஆதலின்
மென்மொழி இசைக்கு மெருகுறல் கண்டேன்;
பண்ணிசைப் பயிற்சியில் பகரரு முயற்சியும்
திண்ணிய நெஞ்சும் திரிபிலா வேட்கையும்
நண்ணினை யாதலின் நலமுயர் தோழி,
எண்ணிய எண்ணியாங் கெய்தினை வாழி!

### சண்டிலி வரலாறு

ஒன்றுனை வேண்டுவல், உன்வர லாற்றினை
இன்றுணர் விழைவினென் என்பால் உரைத்திடல்
நன்றெனின் நவிலுதி' என்னலும் நங்கை
தூமென் கொடியைத் தொழுதனள் உரைக்கும்,
'கோமகள் நினக்குக் கூறுதல் என்கடன்;

---

காய்பசி - கொடும்பசி, ஆஅர - நிறைய, மொய்குழல் - சண்டிலி, மொய்ம்பினை - திறத்தை, பகரரு - கூற இயலாத.

விந்தங் கடந்தொரு வியனகர் உண்டு
நந்தலில் செல்வ நலத்தது வளத்தது'
அந்தம் மிகுந்தது எந்திரத் தொழிலது,
தந்தை அவ்வூர்த் தலைமகன் ஆவர்,
செந்தமிழ் முதலாச் செம்மொழி பலவும்
சிந்தித் தாயும் திறனும் உடையார்;
முந்தை நகர்க்கு மொழிபெயர் அளகை;
அந்நகர் வாழ்வேன், அன்புறு கொழுநன்
தன்னொடு தென்திசைத் தண்மலை எழிலெலாம்
காணிய வந்தனென்; கண்கவர் நெடுமலை,
சேணுயர் முகிலினம் சென்றிடை தழுவும்
நீலப் பெருமலை, நீடுயர் சாரல்
கோலத் திருமலை, கோடைக் கொடுமையைச்
சோலைச் செறிவால் தொலைத்திடு முதுமலை
இன்னன பலகண் டின்புறும் எல்லையில்

**பொதிகைக் காட்சி**

தென்திசைப் பொதியில் காணிய வந்தேன்;
முடியும் நடுவும் முகிலினம் படர்தரக்
கொடிபடர் சந்தனக் கடிமணம் அளாவிச்
சில்லெனுந் தென்றல் மெல்லென வீச
நல்லிளஞ் சாரல் நயந்திடத் துளிப்ப
அலரும் மலரும் அடருங் கடறும்
பலவும் குலவி நிலவும் மாமலைக்
காட்சியும் மாட்சியும், கடும்புனல் அருவியின்
வீழ்ச்சியும் கண்டவை வாழ்த்தினென் வாழ்த்தினென்
தென்மலைச் சிறப்பினைச் செப்புதல் எளிதோ?

நந்தலில் - அழிவில்லாத, அந்தம் - அழகு,சேணுயர் - மிக உயர்ந்த, முகில் - மேகம், நீலப்பெருமலை - நீலமலை, திருமலை -திருப்பதி, கோடைமலை - கோடைக்கானல், அடரும் - நெருங்கும், கடறு - காடு,

கன்மலைக் காப்பியம் யாத்திட முனையின்
பொதியம் ஒன்றே போதும் தோழி!

**அருவிக் காட்சி - புலியருவி**

போர்ப்பறை சாற்றிடும் ஆர்ப்பொலி என்ன
வேர்க்குலம் பேர்த்து வீறுற் றார்த்துக்
கல்பொரு திறங்கும் மல்லலம் அருவிகள்
நல்லன பலவும் நயந்தினி தாடினேன்;
கண்டார் வியந்திடக் கைபுனைந் தியற்றிய
தண்டாது பாயும் தண்புலி யருவியில்
கொண்டான் தன்னொடுங் கூடி யாடினேன்;

**பேரருவி**

பொங்குமா கடலெனப் பொங்கிட வீழ்ந்து
தங்கா திழிதரும் விரிபே ரருவியில்
கங்குலும் பகலும் கணவனும் யானும்
ஆடியும் ஓடியும் ஆர்த்தும் நகைத்தும்
பாடியும் கூடியும் பன்முறை ஆடினோம்;

**சண்பக அருவி**

தண்முகை அவிழும் சண்பக அடவி
எண்ணரும் மலர்களை இறைத்திட வாரித்
தடதட ஒலியொடு தாவி இறங்கிப்
படர்தரு சண்பக அருவிப் பாங்கரில்
நின்றும் இருந்தும் நிலவிய இன்பில்
ஒன்றிய உளத்தேம் உலகினை மறந்தோம்;

**தேனருவி**

வான முகட்டின் வாய்திறந் திறங்குதல்
மான வீழ்ந்திடும் தேன்சுவை அருவியின்

---

யாத்திட - இயற்றிட. மல்லல் - வளப்பம், தண்டாது - தடையின்றி, கங்குல் - இரவு, மான - போல,

ஓங்குயர் தோற்றமும் ஒய்ய்யெனும் ஓசையும்
பாங்கினன் எருத்தையும் செவியையும் வருத்தின;
வானுற நிவந்த வால்வெண் ணிறத்தூண்
தானது என்னத் தயங்கி நின்றிடும்;
விலங்கினம் அன்றி வழங்குதல் இன்மையின்
கலங்கினென் ஆயினும் காணாஅ இன்பமும்
அலைவுறும் மனத்தில் அளப்பரும் அமைதியும்
நிரம்பிய தாதலின் நெடும்பொழு திருந்தேன்
திரும்பவும் நினையின் அரும்பிடும் அந்நிலை;

**சிற்றருவி**

சிற்றருவி என்று செப்பிடும் ஒன்று
மற்றொரு பாங்கரின் உற்றது கண்டு
பற்றொடு சென்று பைம்புனல் ஆடினம்;
உருவம் சிறிதென உள்ளினென் நிற்ப
அருவியின் வேகம் அறியா என்றன்
கூந்தலும் ஆடையும் குலைத்துடன் வீழ்த்த
இடுக்கண் வருங்கால் இமைப்பில் வந்துடன்
தடுக்கும் நட்பினை நிகர்க்கும் கைகள்
உடுக்கையைக் காத்தன; உருவுகண் டெள்ளுதல்
வடுப்படு செயலெனும் வாய்மொழி உணர்ந்தேன்;

**ஐந்தருவி**

செந்தமிழ் ஒன்றே தெலுங்குடன் கன்னடம்
சந்தம் மிகுமலை யாளம் துளுவென
வந்தது போல வாய்ந்ததோர் அருவி
ஐந்து கிளையாய் ஐந்தருவி என்னத்
தவழ்ந்திடல் கண்டு தனித்தனி அவற்றிற்
சிவந்திட விழிகள் சிலபொழு தாடினம்;

ஒய்ய்யெனும்- ஒலிக்குறிப்பு, எருத்து - பிடர். நிவந்த - நிமிர்ந்த, வால் - தூய.

## மாலைக் காட்சி

இங்ஙனம் இனிமையில் இருந்துழி ஒருநாள்
பொங்குமா கடலெனப் பொங்குபே ரருவியில்
துங்கநீ ராடித் துணையுடன் கூடிக்
குறும்பலா வடியில் இருந்தனென்; ஆங்கண்
செங்கதிர் மேலைத் திசையினில் மறைய
மாலைக் காதலன், மண்மகள் போர்த்த
சீலை யாகிய செழுமிள நாற்றினை
வாலைக் குறும்பென வளரிளந் தென்றற்
கைகொடு வருடி அலைத்திடல் கண்டும்,
கடுவனும் மந்தியும் கனிவகை கொடுத்துத்
தொடுவதும் விடுவதும் தொடர்ந்துடன் ஓடிக்
கிளைதொறும் தாவித் திரிவது கண்டும்,
மென்சிற கொலியால் வீணையின் இசைத்து
நன்மணம் பரப்பும் பன்னிற மலர்தொறும்
நறவம் மாந்திடும் வண்டினம் கண்டும்,
பறந்தும் இருந்தும் பாடும் புள்ளினம்
விருந்தெனச் செவிவிழிக் கிருந்தன கண்டும்,
நகைத்துரை யாடிக் களித்தவண் இருக்கத்

## நிலவுக் காட்சி

தொகைப்படு விண்மீன் மினுக்கிட வானில்
வெண்மதி வட்டம் விட்டொளி கான்று
தண்புனல் கானம் தளிர்கொடி யாவும்
வெள்ளிய ஒளிமயம் விளைத்தது கண்டோம்;
அள்ளிய விழியால் ஆர வுண்டனம்
உள்ளந் துள்ளிய உவகைப் பாங்கினைத்
தெள்ளிதின் இயம்பத் தெரிகிலேன் தோழி!

---

வாலை - இளமை, நறவம் - தேன், மாந்திடும் - பருகும், புள்ளினம் - பறவைகள், கானம் - காடு.

**பாட்டின் மகிழ்ச்சி**

உள்ளெழும் உணர்ச்சி உந்தி எழலால்
பைந்தொடீ! முன்பே பாடுந் திறனும்
இயைந்துளேன் ஆதலின் வாய்விட் டிசைத்தேன்;
மயங்கிய துணைவன் வாயிசை கேட்டு
வியந்துரை கூறி நயந்தனன் ஆக
எற்புகழ்ந் துரைத்த இசைமைத் திறலால்
முற்படு செருக்குள் மூழ்கி இருந்தேன்;

**இசையொலி கேட்டல்**

யாழொலி யோவென யாண்டிருந் தோஒரு
மெல்லிசை நல்லிசை மெல்லென வந்தது;
மெல்லிய அவ்விசை மென்கால் தன்னொடு
மிதந்து படர்ந்தென் செவியகம் புகுந்தது;
புகுந்தஅவ் விசையாற் புலமெலாம் ஒன்றாய்ச்
சொக்கிய விழியும் சோர்வுறும் மொழியும்
உடையே னாகி உணர்வு தளர்ந்திடும்
நடையே னாகி நல்லிசை வருதிசை
மருங்கினை நாடி நெருங்கினேன்; ஆங்கண்

**இசையணங்கு**

மருங்குல் கொடியாய் மதியம் முகமாய்க்
கருங்கண் குவளையாய்க் காட்டும் ஒருமகள்
இனிய காட்சியள் இசைமழை பொழிந்து
தனிய ளாகித் தனைமறந் திருந்தனள்;
செவியுள் இசையும் சேலிரு விழியுள்
அவளின் உருவும் அகத்துள் மகிழ்வும்
நிறைந்திடப் பெற்றேன் நின்றேன் அவள்முன்;

---

ஏற்புகழ்ந்து - என்னைப்புகழ்ந்து மென்கால் - மெல்லிய காற்று, புலமெலாம் - ஐம்புலன்கள், மருங்குல் - இடை.

அகமும் முகமும் அருள்நிறை விழியும்
உகந்தும் மலர்ந்தும் உற்றெனை நோக்கி
வருக வருகென வாய்மலர்ந் தருளினள்;
தூயவள் தன்னைத் தொழுதவண் இருந்து
தோயும் நின்னிசை தாயே ஈங்கெனை
ஈர்த்த தெனநான் இயம்பலும், இன்னிசை
வார்த்தனள் மீண்டும்; மகிழ்ந்திசை பருகி

**சண்டிலியின் புகழ்மொழி**

'அன்னைஎன் மொழியுள் அமைந்தநல் லிசையும்
தொன்மை மொழியுள் தோன்றிசை சிலவும்
ஒல்லும் வகையான் உணர்ந்துளேன் ஆயினும்
உள்ளமும் உணர்வும் உருகிட இன்ப
வெள்ளம் பாயும் வியனிசை இதுபோல்
இந்நாள் எல்லை யாண்டும் கேட்டிலேன்;
என்நா சிறிதால் எவ்வணம் புகழ்வேன்?

**சண்டிலி வேண்டல்**

இதன்றிறம் சிறிதெனக் கியம்புதி கொல்லோ?
பதமிது வன்றேல் பைந்தொடி பொறுத்தருள்'
எனநான் பணிவுடன் இயம்பினே னாக,
அனநடை புன்னகை அரும்பினள் இயம்பும்;

**தமிழிசைச் சிறப்பு**

'மனமொழி செயலினை வயப்படச் செய்யும்
தனியொரு செயற்றிறம் தமிழிசைக் குண்டு;
கொடுந்தொழில் விலங்கும் கடுவிட அரவும்
படிந்திடச் செய்யும் பாங்கிதற் குண்டு;
மூவாத் தமிழில் மொழியிசை வளர்க்கும்
தேவா ரப்பண் தெரிந்தொன் றிசைத்தேன்

ஈர்த்தது - இழுத்தது, பதம் - சமயம், அனநடை - அன்னநடை.

அவ்விசை கேட்டுளம் அதனுட் கூட்டினை!
செவ்விய அந்நூல் திறமெடுத் துரைப்பின்
**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே'**
என்றுளம் அன்பால் இளகிட மொழிந்தனள்;

### சண்டிலியை ஆற்றுப் படுத்தல்

நன்றுரை கேட்டு நயந்துளம் மகிழ்ந்தே
'உன்மொழி யிசைஎனக் கோதுதி யோ?' என
'என்னால் இயம்புதல் இயல்வதொன் றன்று
மின்னேர் இடையாய் மேம்படு செல்வர்
தக்கார் அறவோர் தகுகலை யறிவின்
மிக்கார் பலரும் தொக்குடன் வாழும்
மணிநகர் என்னும் அணிநகர் உளது
பணிபுரி தொழிலே அணியெனப் பூண்டுள
மலையுறை யடிகள் நிலைபெற நிறுவிய
கலையகம் அந்நகர்க் கண்ணதுஅப் பள்ளியில்
இசைக்கே இசைதரும் பெற்றியள் எமதுதென்
திசைக்கே விளக்கந் திகழ்ந்திடத் திகழ்பவள்
இளங்கொடி பூங்கொடி எனுந்திரு வாட்டி
உளங்கொள இசையை ஓதும் பணியினள்
அவளுழைச் செல்கநின் ஆவல் நிறைவுறும்'
என்றெனைப் பணிக்க ஈங்கிவண் வந்தேன்;

### சண்டிலியின் துணிந்துரை

தணியா வேட்கை தணித்தனை! செல்விநின்
பணியால் தமிழிசை பாருல கெங்கும்
இணையிதற் கிலையென ஏற்றமுற் றோங்கும்
துணிவோ டிதனைச் சொல்லுதல் வல்லேன்

---
தொக்கு - சேர்ந்து,

சிறியவள் எனக்குச் செந்தமி ழிசைபால்
முறுகிய ஆவலின் முழுதுணர்ந் தனனால்;

### சண்டிலியின் அழைப்பு

பிரிவினை யறியாப் பெருமனக் கொழுநன்
பெரிதுறு விழுமமோ டிங்கெனைப் பிரிந்தோன்
விரைவினில் வரூஉம் விறலி! எனக்கிசை
ஊட்டிய தலைவீ! ஒன்றுனை வேண்டுவல்
பாட்டியல் பயில வேட்டவர் பலர்வட
நாட்டிடை வேங்கை நகரினில் வதிவோர்
ஊட்டுவோர் ஆங்கண் ஒருவரும் இன்மையின்
வாட்ட முறுவது வருங்கால் உணர்ந்தேன்;
அரிவைநீ அருளுடன் அந்நகர்க் கேகுதல்
புரிகுவை யாயின் பெரும்பயன் வரும்' எனப்
பரிவுடன் சண்டிலி பகர்ந்து வணங்கினள்;

### வேங்கை நகரில் பூங்கொடி

சரியென இசைந்தெழு தன்னிகர் பூங்கொடி
அடிகள் திருவடி அன்பொடு வணங்கித்
துடியிடைச் சண்டிலி துணையொடு போந்தவள்
ஓங்ககல் நெடுந்தெரு வேங்கைமா நகருள்
நிலவொளி வீசும் நெடுநிலை மாடம்
பலர்புகத் திறந்த பகுவாய் வாயில்
மாளிகை புகுந்து மகிழ்வுடன் தங்கி
மீளி மீனவன் மீட்டநற் சுவடியின்
துணையொடு தோன்றித் தொழுதவண் இருந்தே
இணையிலா வளத்தன் இளகிய மனத்தன்

---

வரூஉம் - வருவான். ஓங்ககல் - நீண்டகன்ற, பகுவாய் - பெரியவாயில், மீளி - சிறந்தவன்,

பசிதின வருந்திய பைதன் மாக்கட்கு
நசையொடு பெருஞ்சோறு நல்குதல் என்ன
இசைபயில் பசியால் இரப்போர் தமக்கெலாம்
காரிகை உவந்த கனியிசை யமுதம் 290
வாரி வாரி வழங்கினள் பெரிதே 291

பைதல் - வருத்தம்.

# 19.கோமகன் மீண்டும் தோன்றிய காதை

### வஞ்சியின் ஏக்கம்

பூங்கொடி அளவிலாப் புகழ்நிலை யுறினும்
தேங்கெழில் சிதைவுறத் திருமணம் இன்றிக்
கொஞ்சும் இளமை கொன்னே கழிய
அஞ்சுபொறி அடக்கிய அறவோர் போல
நெஞ்செழுங் காதலை நெருப்பினில் பொசுக்கிப்
பிஞ்சிற் பழுத்த பேதை ஆயினள்;
எவ்வணம் இயம்பினும் எத்துணை மொழியினும்
செவ்விய அவள்நிலை சிறிதும் பிறழ்ந்திலள்
என்னே இவள்மனம் இருந்த வாறே!
பின்னே வாழ்விற் பேதுறு வாளே
எனநினைந் தேங்கி இடருறூஉம் வஞ்சி

### வஞ்சி தேன்மொழியிடம் புலம்பல்

தேன்மொழி யாகிய தெரிவையை விளித்து,
'மீன்விழி மாதே! வியனிலத் தியாண்டும்
இந்நிகர் கொடுமை எவ்வுழி அறிதி?
தன்பெருங் கொழுநன் தனிமகன் வடிவேல்
வன்புடை வஞ்சரால் மாய்ந்தன னாக
என்னொரு திருமகள் எழிலுறும் அருண்மொழி
மாயாத் துயரால் மாழ்குதல் கண்டு
வீயாத் துன்புள் வீழ்ந்தேன்; என்மகள்,
ஓயாக் கவலை ஒழிப்பான் வேண்டித்

---

கொன்னே - வீணே, அஞ்சுபொறி - ஐந்துபுலம்.

மாழ்குதல் - வருந்துதல், ஒழிப்பான் - ஒழிக்க.

தேயாப் பெருமனைச் செல்வமும் வாழ்வும்
மறந்தன ளாகி மலையுறை யடிகள்
திருந்திய குறளகம் சேர்ந்தனள்; என்னுளம்
வருந்திய துரைத்திட வாயொன் றீங்கிலை;
அடுக்கடுக் காகத் தொடுத்தெனைச் சார்ந்த
இடுக்கட் சுமையைப் பொறுத்துளேன் ஆயினும்
துடுக்கி என்மகள் துளிர்பூங் கொடியை
விடுக்கில ளாகி வெந்துயர்க் குழியில்
படுத்தினள் அந்தோ பாவி மடமகள்!
கருங்கல் இடறிய கால்விரல் ஒன்று
பெரும்புண் ணாகி வருந்துங் காலைக்
கொடுந்தேள் அதனிடைக் கொட்டிய தென்று
நெடுந்துயர் அடைவுழிக் கொடும்பட அரவம்
தீண்டிய தென்னத் தேங்கிய கவலைக்
கூண்டுடல் ஆகிக் குலைந்தேன் தோழி!

### பூங்கொடியின் எழில் நலம்

ஆறாத் துயரால் அருண்மொழி துறந்தவண்
சேரா நின்றனள் சேர்கதில் லம்ம!
வாழ்வின் நலமெலாம் வகைவகை சுவைத்து
மூழ்கும் பருவத்து முதிரா இளமையள்,
அழகும் ஒளியும் அழியா ஓவியம்,
பழகும் மொழியோ பழச்சுவை மானும்,
துளிர்த்தும் தளிர்த்தும் தூமலர் பூத்தும்
கிளைக்கும் மரந்தழீஇ மணக்கும் பூங்கொடி,
விழியின் மலர்ச்சியை வியந்துரை யாடலூர்
மொழியும் உளதோ? முகமொரு முழுநிலா,
நடைக்கும் இடைக்கும் நல்லதோர் உவமை
படைக்கும் ஆற்றல் பாவல புலவர்க்கும்

துடுக்கி - துடுக்குக்காரி, மானும் - போலும், தழீஇ - தழுவி, பாவல - பாடல்வல்ல,

அரிதினும் அரிதே! ஆயிழை நீயும்
தெரிகுவை அந்தத் தெரிவையின் நலமெலாம்,
மூக்கும் விழியும் நோக்குநர் உளத்தைத்
தாக்கும் இயல்பின, தகதக ஒளியின,
வார்த்தபொற் சிலைகொல்! வடியாச் சிலைகொல்!
பார்த்தவர் இவ்வணம் மயங்குவர் பைந்தொடி!

**பருவம் பாழ்படுவதா?**

சிறியவள் இல்லறச் செந்நெறிப் படாஅது
பருவமும் உருவமும் பாழ்படப் புறநெறி
கருதின ளாகிக் கழிவது முறையோ?
தேடருங் குறிஞ்சித் தேனினைப் பாழ்செயும்
மூடரும் உளரோ? முக்கனி யாகிய
தேமாங் கனியும், தீஞ்சுவைப் பலவும்,
கொழுங்குலை வாழைச் செழுங்கனி யதுவும்
அழுங்கல் எய்திட விழுந்து புழுதியில்
நைந்து சிதைவதில் நன்மையும் உளதோ?
ஐந்து பொறியிவள் அடக்கவும் வல்லளோ?

**கடப்பருங் காமம்**

இல்லறத் திருந்துநல் லின்பந் துய்த்தபின்
நல்லஇவ் வுலகினை நஞ்சென வெறுத்துச்
செல்லும் துறவரும் சிற்சில போழ்து
கொல்லும் காமங் கோட்பட் டுழன்றும்
அல்லன புரிந்தும் அலைவுறல் கண்டோம்;
ஒருநலம் உணரா துறைபவள் இவளை
வருமிளம் பருவம் வருத்தா தொழியுமோ?
பழிக்கும் வினைகளை இழைக்கும் வழிகளில்
நுழைத்திடும் அந்தோ! நுண்ணிடை மகளை;

---

ஆயிழை - தேன்மொழி. படாஅது -செல்லாமல், கோட்பட்டு - கொள்ளப்பெற்று,

## ஆசை கெடுத்தனள்

குடிதழைத் திடவரூஉம் குலக்கொடி இவளென
நெடிதுநினைந் திருந்தேன் கொடியவள் ஆயினள்,
பரம்பரை அறுந்திடத் திறம்பினள் குழம்பினள்,
நரம்பறும் யாழென நலிந்தனள் மெலிந்தனள்;

## வேட்புறுங் கோமகன்

கற்றோர் மற்றோர் கணக்கிலாச் செல்வம்
உற்றோர் இவள்மணம் ஒன்றே வேட்டுக்
கடைவிழி நோக்கிக் காத்துக் கிடப்போர்
படைஎனு மாறுளர்; பரிவுறும் அவருள்
செல்வமும் இளமையும் சேர்ந்தெழில் பொங்கும்
நல்லவன் கலைபயில் வல்லவன் ஒருவன்
கோமகன் என்னும் குறியுடை யானவன்
பூங்கொடி நலமுண வீங்கிய வேட்கையன்
தாங்கருங் காமம் ஓங்கின னாகி
உடலும் பொருளும் உயிரும் ஈயக்
கடவன் அவனை மடவனென் றொதுக்கினள்;
அப்பெருஞ் செல்வனை ஒப்பின ளாகித்
தப்பருங் காதல் தடத்தினில் நீந்தித்
துணையுடன் இருந்தே தொண்டுகள் ஆற்றின்
இணையிலை இவட்கென இருநிலம் ஏத்தும்;

## வஞ்சியின் வஞ்சினம்

பிணைவிழி மாதின் பெறலரும் இளமை
அணையிலாப் புனலென ஆகிட ஒவ்வேன்;
இவள்நலம் விழையும் இளவல் கோமகன்
தவள மாளிகை சார்ந்தவற் கொண்டு

---

வரூஉம் - வரும். திறம்பினள் - மாறினள், உண - உண்ண, பிணை - பெண்மான், தவளம் - வெண்ணிறம்.

குறளகம் நீக்கிக் கொணர்வேன் அவளை:
பெருமகன் தன்பால் பேதையைப் படுத்தல்
அறமெனக் கொண்டேன், அதுமுடித் தமைவேன்;
படுத்தே னாயின் பாழுயிர்ச் சுமையை
விடுத்தே அமைவேன் வெற்றுரை அன்'றெனத்
தொடுத்துரை கூறித் துணைவிழி சிவக்க
உயிர்ப்பும் செயிர்ப்பும் உற்றன ளாகிப்
பயனுடை நெடுந்தெரு பலவுடன் கடந்து
வியனுயர் மாளிகை விறலி கண்டனள்;

**வஞ்சி கோமகனைச் சார்தல்**

வெண்சுதை பூசிய கண்கவர் மாமனைக்
கண்புகுந் துள்மனைக் காட்சியை வியந்தனள்;
முன்னுள மலர்மணம் முகந்து தென்றல்
படர்தரு மெல்லிய பவர்நுனி யசைத்துச்
சுடர்விடு மாடச் சுவர்கடந் துட்புகச்
செய்வினைச் சித்திரப் படாஅம் போர்த்த
துய்யவெண் பஞ்சணைத் தூமலர்க் கட்டில்
இருந்தோன் திருந்தடி பொருந்திநின் றேத்தினள்

**கோமகன் பூங்கொடியின் நலம்வினவல்**

வந்தவண் ஏத்திய வஞ்சிக்கு வரவுரை
தந்து மகிழ்ந்து தான்பெரு களிப்பால்
நல்லெயி றிலங்க நகைத்தவன் 'வஞ்சீ!
மெல்லியல் அருண்மொழி மேவிய நற்பணி
அல்லல் இன்றி ஆற்றுநள் கொல்லோ?
என்னுளம் இருளுறச் செய்தஅவ் விளங்கொடி
முன்னிய பொதுப்பணி முட்டின் றோ'என,

---

செயிர்ப்பு - சினம் பவர் - பின்னியகொடி, படாஅம் - துணி (விரிப்பு), எயிறு - பல்வரிசை, முட்டின்று - தடையில்லை.

## வஞ்சியின் தூண்டுதல்

'ஒருதனி ஓங்கிய திருவுடைப் பெரும!
பெருகிய துயரால் பேதுறுத் தினளுனை
என்னையும் மயக்குறுத் திடர்க்கடல் வீழ்த்தினள்;
நின்னையும் நின்மனம் நிறைந்துள மின்னையும்
பின்னிய அன்பால் பிணைந்தவ ராக்கி
வதுவைக் கோலம் கண்டுநான் வாழ்த்த
முதுமைப் பருவத்து முறுகிய ஆவல்
கனவாய் வெறுமொரு நினைவாய்க் கழிவதோ?
இனைவுறும் என்மனம் மகிழ்வுறல் என்றுகொல்?
நம்பி நினக்கொரு நங்கையும் அவளே!
நங்கை அவட்கொரு நம்பியும் நீயே!
நீமுனைந் தெழுவையேல் நேரிழை நின்னுழைக்
காமுறல் திண்ணம் கடிதினில் விரைக.
கடிமணம் கொண்டு படிமிசை வாழ்'கென;

## கோமகன் நிகழ்ந்தன கூறல்

இழுக்கல் நிலத்திடை இடர்ப்பட் டேகுவோன்
வழுக்கல் தவிர்க்க வாய்த்தகோல் இவளென
வஞ்சிக் குரைப்போன், முகுந்தன் வாய்மொழி
தன்செவி கேட்டுத் தென்புலப் பொழிலுட்
பூங்கொடி காண்பான் போய்ப்புகுந் ததூஉம்,
தாங்கா வேட்கை தாங்குவோன் றன்னைக்
கண்டு வெரீஇக் கற்றோர் பலர்தாம்
மண்டும் படிப்பகம் மங்கைபுக் கதூஉம்,
மெல்லியல் அல்லியை மேவி விருப்பைச்
சொல்லி மணம்பெறத் துடித்துநின் றதூஉம்,
ஆங்கது கேட்ட அல்லி தெளிவுடன்
பூங்கொடி நிலையினைப் புகன்றிருந் ததூஉம்,

வதுவை - திருமணம். படிமிசை - நிலத்தின்மீது, காண்பான் - காண, வெரீஇ - அஞ்சி, மண்டும் - நிறையும்,

மங்கையின் மாற்றம் மதித்திடல் இன்றி
அங்குள படிப்பகம் அதனுட் புகுந்திட
விரையும் காலை விஞ்சிய அறிவினர்
நிறையிடம் அதுவென நினைத்தகன் றதூஉம்,
அகன்றபின் அல்லியை அணுக, வெறுத்துஅவள்
புகன்றுபின் நல்லுரை புகட்டி நின்றதூஉம்,
துளக்குறு நெஞ்சம் துணையே யாக
விளக்கிலா இருளில் வெய்துயிர்ப் புடனே
புல்லிதழ் மென்மலர் பொதுளிய பஞ்சணை
கல்லென வருத்தக் கண்படை பெறாஅது
பொழுதுபுலர் காறும் புரண்டிருந் ததூஉம்,
எழுகதிர்ச் செல்வன் எழில்முகம் காட்டத்
தோமறு செல்வி தாமரைக் கண்ணி
காமம் கெடுத்திடக் கழற்றுரை மொழிந்ததூஉம்,
எஞ்சா துரைத்தபின் 'ஏழிசை வல்ல
வஞ்சீ! இன்னுமவ் வளரிளம் பூங்கொடி
நெஞ்சுவிட் டகன்றிலள் நிலைத்தனள் ஆயினும்
நெஞ்சு கொடுக்கிலள் நிலையாய் நின்றனள்;
கொஞ்சும் கிளிமொழி கொடும்நினை வதனால்
துஞ்சுவ தன்றித் துணைசெய் வோரை
இன்னும் காண்கிலேன்' என்றவன் இயம்ப;

**வஞ்சியின் ஆறுதல்மொழி**

'கொடுமொழி யிதனைக் கூறேல் பெரும!
விடுதுயர்! இனியுன் வேட்கை நிறைவுறும்
அஞ்சுதல் ஒழிமதி! ஆர்துணை என்றோர்
வெஞ்சொல் மொழிந்தனை! வஞ்சிஎன் துணையால்

மாற்றம் - மறுமொழி. பொதுளிய - நிறைந்த, கண்படை - உறக்கம், பெறாஅது - பெறாமல், கழற்றுரை - இடித்துரை, துஞ்சுவது - இறப்பது.

அழகிய பூங்கொடி ஆர்வம் தழைத்திடக்
கொழுகொம் பென்றுனைத் தழுவிட வரூஉம்;
காமம் ஒதுக்கிய கடவுளும் ஈங்கிலை
ஏமம் அஃதே ஈண்டுயிர் தமக்கெலாம்;
கடவுளும் மாந்தரும் கண்டுணர் காமம்
இன்றெனின் உலகும் உயிரும் இன்றாம்;
அவளும் நீயும் அதன்வழிப் படாஅது
தவிர்தல் ஒல்லுமோ? தலைவ ஒன்றுகேள்!

**வஞ்சியின் எழுச்சியுரை**

கருதிய காதற் களந்தனில் நீதான்
ஒருமுறை இறங்கினை, திரும்பினை வறிதே!
காதல் எளிதெனக் கருதினை போலும்
சாதல் எய்தினும் சலியா துழைப்பின்
விரும்பிய வெற்றி அரும்புவ துறுதி;
நால்வகை முயற்சியும் நயவா தொருமுறை
தோல்வி கண்டுளம் தொய்ந்தனை யாயின்
ஆண்மை என்றதை அறைதலும் உண்டோ?
நாண்மடம் பூண்ட நங்கையர் தம்மனம்
எளிதாய் இசைந்திடின் பெண்மையும் ஏது?
மறுத்தும் வெறுத்தும் மாறியும் சீறியும்
தடுத்தும் உரைப்பதே தையலர் இயல்பு;
தொடுத்து முயன்றால் தோள்புணை யாகக்
கொடுத்தல் உறுதி; கோமகன் நீயும்
அடுத்தடுத் தவள்பால் அணுகுதல் வேண்டும்;
தோல்வி கண்டுளம் துவளுவை யாயின்
பால்மொழி நின்பால் பரிவுறல் யாங்ஙனம்?
மறுத்தனள் அவளென உரைத்தனை இளைஞ!
ஒருத்தி யவள்முனம் ஒருமுறை யேனும்

ஏமம் - இன்பம். அரும்புவது - கிடைப்பது, பால்மொழி - பூங்கொடி.

கருத்தினை விளக்கிக் கழறிய துண்டோ?
அவள்கருத் துன்பால் அறைந்ததும் உண்டோ?
மூங்கை நிலையில் மொழியா திருந்துபின்
ஆங்கவள் நெஞ்சம் அளித்திலள் என்றே
வீண்குறை கூறினை; தனிமையில் அவளைக்
காண்கிலை வீணில் கலங்குதி மடவோய்!
ஆதலின் அறிவ! அவள்பாற் செல்லுதி!
எத்திறத் தவள்மனம் உவக்கும் எனவுணர்ந்து
அத்திறத் தானே அணுகுதி பயன்தரும்;
பெண்மனம் என்பது கன்மனம் அன்றே
உண்மையின் விரும்பும் ஒருவனைக் காண்புழி
வெண்ணெயின் உருகும் தன்மைய தாகும்;
ஐயா! நீயும் அவள்பாற் சென்று
பொய்யா மனத்துப் பூத்துள காதலை
எய்யா துரைத்தனை யாயின் அந்தக்
கொய்யாக் கனியைக் கொய்திடல் ஆகும்;
ஓய்யென விரை' கெனக் கோமகற் குரைத்தலும்;

### கோமகன் எழுச்சி

திரியின் பிழம்பு சிறிது சிறிதாக்
குறுகி அணைந்து மறையும் நிலையில்
குறைதிரி தூண்டிக் குறையா நெய்யும்
ஊற்றிட நிமிர்ந்தொளி ஓங்குவ தென்னச்
சாற்றிய காமம் தளர்ந்திறும் நிலையில்
வீற்றிருந் தோனை விறலி தூண்டி
ஒல்கா ஆசையை ஊட்டின ளாகக்
கொல்லும் காமம் கொழுந்துவிட் டெழுந்து
செல்லும் குருதியில் சேர்ந்துடல் கனல,
'ஒருவர்நெஞ் சொருவர் உற்றறி கில்லேம்;
அறியாப் பிழைக்கும் உரியவன் யானே;

---

எய்யாது - சளைக்காமல், ஒய் - விரைவுக்குறிப்பு. ஒல்கா - அடங்காத,

இருவர் மனமும் இவ்வணம் துயருறல்
சரியிலை; இன்றே சார்ந்தவட் குரைப்பேன்;
யாண்டுளாள் பூங்கொடி? யாங்ஙனம் அணுகுதல்
வேண்டும்? விறலீ! விளம்புதி கொல்லோ?'
என்றுளம் ஏங்கி இரங்கினன் வேண்ட,

### பூங்கொடியை அடையும் வழி

'வேங்கை நகரெனும் வியன்பெரு நகரினுள்
பூங்கொடி புகுந்து புதுமைத் தமிழிசை
ஆங்கண் வருவோர்க் கன்புடன் பயிற்றி
நின்றனள்; நீயும் சென்றவட் குறுகி
ஒன்றிப் பழகி உயர்தமிழ் இசைபயில்
குழுவில் இடம்பெறு, கொக்கென நடந்திரு,
பழகுறும் பாவையின் நற்பதம் நோக்கி
நழுவா வகையில் நயந்துரை மொழிந்திடு,
அழகிய அவளுடல் ஆடவன் நினக்கு
விருந்தாம் நிலையில் வென்று திரும்புதி!
பொருந்தா மனமும் திருந்திய தாகிப்
பொருந்தும் மணம்பெறப் பூவை தன்னொடு
திரும்புநன் னாளைத் தேர்ந்தெதிர் நோக்கிக்
கண்படை பெறாது காத்திவண் கிடப்பேன்
திண்மன முடையாய் செல்லுதி' என்றனள்;

### கோமகன் பூங்கொடியைச் சார்தல்

வஞ்சி உரைத்தவை செஞ்சொல் எனக்கொண்டு
எஞ்சாச் செல்வன் எளிமைய னாகி
வேங்கை நகரில் பூங்கொடி தன்பால்
தேங்கிய ஆர்வலன் சேர்ந்தனன்: ஒரு நாள்

---

கனல - எரிக்க. குறுகி - அடைந்து  பூவை - பூங்கொடி,

தமியள் தானே நின்றவள் முன்னர்க்
குறுகினன் சென்று 'கூர்விழி நல்லாய்!
ஒருமொழி நின்பால் உரைத்திட விழைந்தேன்:

### திருமணங் கொள்கெனச் செப்பல்

சிறியவள் நீதான் திருமணம் பெறாஅது
துறவுளம் கொண்டு குறளகம் புக்க
காரணம் என்கொல்? கடிமணம் கொள்ள
ஆரணங் குன்னை அகத்தினில் நிறுத்தி
நாடொறும் தொழூஉம் ஆடவர் உளரெனச்
சேடிய ரேனும் செப்பிலர் கொல்லோ?
வாடிய இளங்கொடி வாழ்வை வெறுத்தது
முறையன் றெனினும் உரிமைஎன் றாகும்;
ஆயினும் பிறராம் ஆடவர் தம்மை
ஆயுள் முழுதும் அனலிடைப் புழுவென
வீயுறச் செய்வது வேல்விழி முறையோ?
சேயிழை! என்மொழி சினவா திதுகேள்!
கன்னியர் என்போர் காதலை மதிக்க
முன்னுதல் வேண்டும் முரணின ராயின்
பெண்மைக் கிழுக்கெனப் பேசுமிவ் வுலகம்
எண்ணித் துணிக' என்றனன் கோமகன்;

### பூங்கொடியின் மறுமொழி

பூங்கொடி அவன்மனம் புரிந்தன ளாகி
'வீங்கிய மனத்து விறலோய் கேண்மோ!
மலர்தொறும் நன்மணம் மற்றவர் செயற்கையால்
நிலவுதல் இல்லை இயற்கையின் நிலைமை;

---

தொழூஉம் - தொழும், வீயுற - அழிய. முரணினர் - மாறுபட்டனர்

திருமண நினைவும் செயற்கையில் தோன்றி
வருவதும் இல்லை, மனத்தின் இயற்கை;
இல்லறம் ஒருபெரும் நல்லறம் இதனை
அல்லறம் எனநான் அயர்த்தும் புகலேன்;
தனிமை வாழ்வினும் துணையுடன் வாழ்வதே
இனிமை எனப்புவி இயம்பக் கேட்டுளேன்,
ஆயினும் பொதுப்பணி ஆற்றுவோர் சிற்சிலர்
தோயுமிவ் வின்பம் துறப்பது மேலென
ஆயும் புலத்தால் அறிந்துளேன் எனினும்
காவியும் மணியும் கடுவிலங் குரியும்
பூவிரி கானும் பூண்டேன் அல்லேன்,
உள்ளத் தெழூஉம் உணர்ச்சிகள் அடக்கி
உள்ளம் துறந்தேன் உலகம் துறந்திலேன்,
எள்ளத் தனையும் எழுச்சியில் விழா அது
தெள்ளத் தெளிந்து திருமணம் ஒரீஇ
இனமும் மொழியும் ஏற்றமுற் றோங்க
மனம்வைத் துழைத்திட வாழ்வு கொடுத்துளேன்,
அருளறம் பூண்டது குறளகம், ஆதலின்
தெருளும் அனையொடு சேர்ந்தவண் உறைவேன்;

**ஒருதலைக் காமம்**

நிறைஎனப் படுவது இருதிறத் தார்க்கும்
பொதுவென நினையாப் புன்மனம் தாங்கி
ஆடவர் திரியின் யானென் செய்வல்?
ஒருதலைக் காமம் உடையவர் தாமே
வருதுயர்க் கடலுள் மடிவது திண்ணம்
மற்றவர் மனத்தை மதியா ராகிச்
சுற்றுதல் இழிதகைத் தொழிலே அன்றோ?

---

உரி - தோல் ஆடை, கான் - காடு, எழூஉம் - எழும்,
விழாஅது - விழாமல், ஒரீஇ - நீக்கி.

## காதற் கொடுமைகள்

காதல் என்றுல கோதும் பெயர்தான்
ஏது வாக இயற்றும் கொடுமைகள்
எத்துணை எத்துணை! கானல்நீர் இதனை
நத்தின ராகி நலிவது பேதைமை;
பெண்மை பெண்மைஎனப் பேசி மகளிரைக்
கண்ணை மறைத்துக் கருவியென் றடிமையென்
றெண்ணுங் கொடுமை ஏகுவ தெந்நாள்?
காமங் கடந்த காரிகையர் தம்மைத்
தீமனம் கொண்டோர் பழிமொழி செப்பிக்
காப்பிலாப் பொருளெனக் கருதிக் கவர்ந்திட
மோப்பம் பிடிக்க முயலும் கள்வர்
பல்கினர்; இளையோய்! பண்பிலா இம்மொழி
சொல்லுதல் இனிமேல் தொலைகநீ பெரும!
எண்ணித் துணிந்ததே இப்பணி' எனச்சொலக்

## கோமகன் ஏக்கம்

கண்ணும் முகமும் கருத்துத் தலைகவிழ்த்
துள்ளம் கலங்கி உறுநடை தளர்ந்து
பிறிதொரு பாங்கர்க் குறுகின னாக,
முறுகிய காமம் குறைந்திலன் இவன்எனக்
கருதிய பூங்கொடி கலங்கிய மனத்தள்
ஆடவர் மனநிலை அறிகுநர் யாரெனத்
தோடலர் மாலை சூடிய சண்டிலி
துணையிற் பிரியா திருந்தனள் அவளே.

---

காப்பிலா - காவலில்லாத, தோடலர் - இதழ்விரிந்த.

# 20. பெருநிலக்கிழார் வாழ்த்திய காதை

### கோமகன் வஞ்சினம்

கலங்கிய கோமகன் கனலும் நெஞ்சினன்
இலங்கிழை நல்லாள் எழில்விழிப் பூங்கொடி
சொல்லிய மாற்றம் சுடுநெருப் பாகிக்
கொல்லுவ தென்னக் கொடுந்துயர்ப் படுத்தப்
பொறாஅ மனத்தினன், புந்தி மயங்கி
மறாஅ மனத்தொடு மணங்கொள இயைவள்
எனாஅ நினைந்தேன் எற்பழித் தொதுக்கினள்;
தருக்கிய பூங்கொடி செருக்கினை யடக்கி
வருத்துமவ் வொருத்தியை வாழ்க்கைத் துணையெனக்
கொள்ளா தொழியேன் என்றுளங் கொளீஇச்
செல்லா நின்றனன்; சென்றவன் ஒருநாள்

### சண்டிலியை வேண்டல்

சண்டிலி தன்பாற் சார்ந்தனன் குறுகிக்
கண்டினை நிகரிசை கைவல பூங்கொடி
விண்டுரை யாடிய வெந்துயர்க் கொடுமொழி
தண்டா துரைத்துத் 'தையாஅல் அவள்மணங்
கொண்டா லன்றிக் கொண்டுயிர் வாழேன்;
சிறுமகள் அவளுழைச் செலீஇய என்னுளம்
பெறுவழி யறியாது பேதுறு வேனைக்
காத்தல் நின்கடன், கடிமணங் கொள்ளப்
பூத்தநல் லிளங்கொடி புந்தியை மாற்றி
என்பாற் படுத்'தென இரந்துரை கூறினன்;

---

பொறா அ - பொறுக்காத, மறா அ - மறுக்காத, எனா அ - என்று, எற்பழித்து - என்னைப் பழித்து கொளீஇ - கொண்டு, கண்டினை - கற்கண்டினை. தண்டாது - குறையாது. தையாஅல் - சண்டிலியே, செலீஇய - சென்ற.

### சண்டிலி இடித்துரை

'பெண்பாற் குழலும் பெரியோய்! திருமணம்
வன்பாற் பெறுதல் வரன்முறை யன்றே!
ஆசை யரும்பா அரிவையின் நெஞ்சில்
பேசிய காதற் பெருங்கனி பறிக்கக்
கூசினை யல்லை, கொடுமதி விடுமதி;
பாலுணர் வகற்றிய பாவையின் நல்லுளம்
காலள வேனும் கருத்திற் கொண்டிலை,
விழையா ஒருத்தியை விழையா நின்றனை,
பிழையாம் அதனைப் பேணி அகன்றிலை,
கிட்டா தாயின் வெட்டென மறத்தலைக்
கற்றா யலைநீ, காளைப் பருவம்
பெற்றாய் அதன்மனம் பெற்றாய் கொல்லோ?
பாலையில் தண்புனல் பருகிட முனைந்தனை,
காலையை இரவெனக் கருதி அலைந்தனை,
கொல்லும் காமத்துக் கோட்படா தொழிமதி,
அல்லும் பகலும் அரும்பெரும் பணியில்
செல்லும் மகளின் செந்நெறிப் புகுந்து
செல்லல் விளைத்திடல் தீதினும் தீது' என
நல்லறி வுறுத்தினள் நங்கைஅச் சண்டிலி;

### கோமகன் வியப்பு

கள்ளவிழ் கோதை கழறிய உரைகேட்
டுள்ளமும் உடலும் புழுங்கின னாகிக்
கள்ளுண் டான்போற் கலங்கினன் செல்வோன்,
'காவியம் வல்லான் கற்பனை தூண்டும்
ஓவியம் என்ன உருவம் உடையள்,
பாலும் பழமும் பஞ்சணை மலரும்
நாலும் விழையும் நல்லிளம் பருவம்,

அரும்பா- முளைக்காத, விடுமதி - விடுக. செல்லல் - துன்பம்,

லேலும் வாளும் மானும் விழியள்,
காமக் கோட்டத்துக் கடவுட் சிலையிவள்
வாமக் காளையர் வழிபடு தெய்வம்,
இத்தகு நலத்தள் எழில்வளர் பூங்கொடி
எட்டுணை யேனும் எண்ணிலள் காமம்,
பெட்டவர் பலராய்ப் பெருகினும், இவளோ
விட்டனள் காமம், இவள்செயல் வியப்பே!
பலரொடு கலந்தும் பொதுநலம் புரிந்தும்
அலையும் இம்மகள் ஆசை துறந்தனள்,
நிலையும் திறம்பிலள், நினைப்பரும் வியப்பே!'
என்றுளம் வியந்தனன் ஏகுவோன் மனத்துச்

**கோமகன் கொதிப்பு**

சுடுநெருப் பாகிச் சுடர்விடு காமம்
படர்ந்து விரிந்த பான்மை போலச்
செக்கர் படர்ந்து சிறந்தது வானில்;
வெட்கி மீளும் விடலையின் விரிமுகம்
செக்கச் சிவந்து தெளிவிழந் ததுபோல்
மேலைத் திசையில் மெல்லெனச் செல்லும்
மாலைக் கதிரவன் மறைமுகங் காட்டினன்;
மாமலர்ப் பூங்கொடி மையலைப் பெறாஅக்
காம வேகங் கடுகித் தாக்குறத்
துடிதுடித் தாடும் நெஞ்சகம் போலக்
கடிதடித் தேகும் கடுங்கால் மோதலின்
படபடத் தாடின பைந்தளிர்ப் பரப்பு;
கூந்தலைப் பல்வகைக் கோலஞ் செய்தும்,
மாந்தளிர் மேனியில் மணியணி பூண்டும்,
கண்ணும் புருவமும் கருமை தீட்டியும்,

---

வாமம் - இளமை. எட்டுணை - எள்ளளவு, திறம்பிலள் - மாறுபட்டிலள், செக்கர் - சிவப்பு, விடலை - கோமகன். பெறாஅ - பெறாத, கடுங்கால் - கடுங்காற்று.

வண்ண ஆடைகள் வகைவகை உடுத்தும்,
ஒப்பனை முடித்த ஒண்டொடி மகளிர்
கப்பிய காதற் கணவரொடு கூடி
மலர்வனம் புகூஉம் மனங்கவர் காட்சி
அலைவுறும் அவன்மனத்து அனலாய்க் கனற்ற
ஊதுலைக் குருகின் வெய்துயிர்த் தேகினன்;

### மாளிகையில் இசை முழக்கம்

பண்ணும் இசையும் பயில்வோர் ஒலியும்,
தண்ணுமைக் கருவி தந்திடும் முழக்கும்,
தெரிதரு யாழில் விரிதரும் இசையும்,
முறிதரு கருவிகள் மோதுநல் லொலியும்,
காய்வேங் குழலின் கனிந்தநல் லிசையும்,
ஆய்நூற் புலவர் அறைந்தநாற் கருவியும்,
கற்பார் மிடற்றுக் கருவியுங் கலந்து
பொற்புடன் வழங்கும் புத்திசை வெள்ளம்
மாடமிசைப் பிறந்து மறுகிடைப் பரந்தது;
ஆடவர் பெண்டிர் அவ்விடை வழங்குநர்
செவியகம் பாய்ந்து சிந்தை நிறைந்தது;
புவியகம் யாங்கணும் புகழ்மணம் மலர்ந்தது;

### மாந்தர் வியந்துரை

சுரிகுழற் பூங்கொடி சொற்றமிழ் இசையை
மறுகிடைக் கேட்குநர் வழங்குதல் தவிர்த்துச்
செயல்மறந் தாங்கண் சிந்தையும் உருகிக்
கயல்விழி இசையின் கற்பனைத் திறனும்
பயில்வார்க் கோதும் பாங்கின் திறனும்
நல்லிளம் பருவத்துப் பல்வகை இசையில்
வல்லவ ளாகிய வகையும் கண்டு

கப்பிய - நிறைந்த, ஊதுலைக்குருகு - துருத்தி, தண்ணுமை - மத்தளம், முறி - வெண்கலம். மறுகிடை - தெருக்களில்.

வியந்துரை கூறி வியனகர் மாந்தர்
நயந்தன ராகி நல்கினர் வாழ்த்தொலி;
வாய்விட் டுரைத்து வாழ்த்திய மாந்தருள்
தோய்மகிழ் மனத்துத் தூயோர் ஒருசிலர்
கலைப்பணி ஒன்றே தலைப்பணி என்று
நிலைத்ததம் பொருளெலாம் நீரென இறைத்துப்
பேரின் புறூஉம் பெருநிலக் கிழார்பால்
நேரிற் சென்று நேரிழை இசைத்திறன்
கூறுதும் என்று கூடினர் ஏகி,

**பெருநிலக்கிழார் மாளிகை**

வங்க வினைஞரும், வச்சிரத் தச்சரும்,
கொங்கக் கொல்லரும், குளிர்மலை யாளரும்,
தமிழக வினைஞர் தம்மொடு கூடிப்
புகழ்பெறு மாறு புதுமையின் இயற்றிய
கண்கவர் வனப்பிற் கைவினை முற்றிய
விண்தவழ் முகப்பும் வியன்பெரு வாயிலும்,
வெண்சுதைப் பாவை விளங்கிடும் அரணும்,
ஒள்ளிய சாந்து வெள்ளிய நிலவொளி
அள்ளி இறைக்கும் அழகுறு மதிலும்,
திரள்பெருந் தூணிற் செய்வினைப் போதிகை
மருள்படச் செய்யும் மனங்கவர் சித்திர
விதானப் பரப்பொடு விளங்குநல் மண்டபத்து

**ஆடல் அரங்கு**

கண்ணுள் வினைஞர் கைத்திறத் தியற்றிய
வண்ண ஓவியம் வகைவகை துலங்கும்
எண்ணருந் திறத்த எழினிகள் நாலப்
பின்னரும் முன்னரும் பேரொளி காலும்

---

விதானம் - உள் மேற் கூரை, கண்ணுள் வினைஞர் - ஓவியம் வல்லார் எழினி - திரைச்சீலை, நால - தொங்க.

பன்னிற விளக்கம் பாங்குற விளங்கக்
கற்பனை தோற்கக் கண்கவர் முறையில்
பொற்புடன் அமைத்த பொன்னிற அரங்கில்
ஆடற் கூத்தும், அவிநயக் கூத்தும்,
நாடகக் கூத்தும், நல்லிசைப் பாட்டும்
கண்டுங் கேட்டுங் களிப்பினில் திளைத்துத்
திண்டும் அணையும் சேர்தரும் அமளியில்
விலைபெறு பட்டும் விரிமலர் இதழும்
குலவிட அதன்மிசைக் கொற்றவன் என்ன
எழில்பெற இருக்கும் பெருநிலக் கிழார்முன்
தொழுதவண் வந்தோர் சொற்றனர் சிலசொல்;

**வந்தவர் செய்தி கூறல்**

'இசையும் கூத்தும் நசையுடன் பேணும்
வசையிலாப் பெரும, வாழ்கநின் உள்ளம்!
தமிழகச் செல்வி, தண்டமிழ்ப் புலத்தி
அமிழ்தெனும் இசையில் அளப்பருந் திறத்தி,
தொண்டுளம் பூண்டவள், தோகை அவள்முகம்
கண்டவர் தொழுதிடும் கருணை நிறைந்தவள்,
புண்ணியத் திருவினள், பூங்கொடிப் பெயரினள்,
நண்ணிஇத் திருநகர் நயந்திடும் வகையால்
பண்ணிசை பரப்பும் பணியினள் உரவோய்!
ஈங்கவட் கூஉய் இன்னிசை கேட்டுப்
பாங்கறிந் தவட்குப் பரிசிலும் நல்கிச்
சீரும் சிறப்பும் செய்வன செய்து
போற்றுதல் நும்போல் பொருளுணர் மாந்தர்
ஆற்றிடுங் கடன்'என ஆர்வலர் இசைத்திடப்

---

புலத்தி - புலமைமிக்கவள், ஆர்வலர் - அன்பர்,

## பெருநிலக்கிழார் அழைப்பு

பெருநிலக் கிழவரும் பெரிதுளம் மகிழ்ந்தே
'அருளுளங் கொண்டவள் ஆற்றுநற் பணியைப்
பிறரும் வியந்து பேசிடக் கேட்டுளேன்,
நெருநல் மாலை நேரிழை அவளைக்
கண்டுரை யாடக் கருதினேன், ஆயினும்
தொண்டுளம் பூண்டஅத் தோகையைக் காண்கிலேன்;
ஒல்லையிற் காண்குவென், உயரிசை கேட்குவென்
ஒல்லும் வகையான் உறுதுணை புரிகுவென்'
என்றுளங் கனிய இசைத்தவர் ஒருநாள்
துன்றுநல் லன்பால் தூயவள் வருகையை
விழைந்தன ராகி விடுத்தனர் ஓலை;
குழைந்துளம் உருகிஅக் குலக்கொடி இயைந்து

## மாளிகைக் காட்சி

வருவோள் நீளுயர் மாமதில் வாயில்
மருவா நின்றவ் வழியுட் புகுமவள்
பட்டின் இயன்ற பசும்படாம் போர்த்தென
வெட்டுறும் பசும்புல் விரிதரை கண்டும்,
புற்றரை அதனிடைப் பொலிவுற விளங்கிடும்
சிற்றுளி வல்லான் செய்வினை முற்றிய
கற்சிலை ஆங்காங்கு அமைந்தன கண்டும்,
காண்பார் மருளக் கைவலான் இயற்றிய
மாண்பார் சுதையின் பாவைகள் கண்டும்,
எழுப்பிய சுவரென எண்ணிட இருபுறம்
செழித்தவை ஒழுங்குறத் தறித்திடும் செடிகள்
வரிசையின் அமைந்த வனப்பினைக் கண்டும்;
சுரும்பினம் விரும்பா அரும்புகள் மிடைந்திட

---

நெருநல் - நேற்று, ஒல்லையில் - விரைவில், படாம் - துணி, கைவலான் - வல்லவன், தறித்திடும் - வெட்டிவிடப்பட்ட,

நரம்பின் இசைஎன முரலும் வண்டினம்
முந்துற மொய்த்து நறுந்தேன் முகக்கப்
பந்தியின் அமைந்த பல்வகை மலர்கள்
வியன்மணம் பரப்பி விரிந்துள கண்டும்,
கயல்மீன் பிறழ்ந்து கள்ளவிழ் மலர்மிசைத்
துயிலுவ தென்னக் கிடந்துபின் துள்ளிப்
புனலிடை மீண்டும் புகுந்து திரியும்
செய்குள மாகிய பொய்கை கண்டும்,
நெய்யும் வினைஞர் நேர்த்தியின் இழைத்த
நூலின் இழையினும் நுண்கொடி படர்ந்து
நாலும் பந்தரின் நன்னலங் கண்டும்,

### கிழார் முன் பூங்கொடி

அகத்தும் முகத்தும் ஆர்தரும் உவகை
மிகுத்தன ளாகி மேலுயர் பொழிலின்
நாப்பண் நிறுவிய நலம்பல பழுநிய
காப்பமை மாளிகை கண்டனள் புக்குக்
கூப்பிய கையினள் வாழ்த்திய வாயினள்
மூப்பினை அறிய முடியா முகத்தின்
பெருநிலக் கிழவர் முன்னர்க் குறுகினள்;

### பெருநிலக்கிழார் வேண்டல்

பெறலரும் பொருளைப் பெற்றால் என்னப்
பெருமகிழ் வெய்திப் பெரியவர் வாழ்த்திப்
'பெண்மையின் உருவே! கண்ணின் மணியே!
புண்ணிய மகளே! பூங்கொடி அன்னாய்!
பண்ணிசை நுகரும் பரிவுடன் அழைத்தனென்,
என்செவி குளிர என்னகம் மகிழ
நின்னிசை வார்க்க நேரிழை ஒல்லுமோ?

---

முரலும் - ஒலிக்கும், நாலும் - தொங்கும், ஆர்தரும் - நிறையும், நாப்பண் - நடுவில், பழுநிய - முதிர்ந்த,

புதுமைச் சுவடியிற் பொதிந்துள உண்மைகள்
முதுமை யுற்றேற்கு மொழிகதில் லம்ம!'
எனவாங்கு
இரப்பார் போல இயம்பின ராக.

### பூங்கொடி பாடுதல்

'பரப்புதல் இசையைப் பணியெனக் கொண்டுளேன்,
புரப்பது கடனெனப் பூண்டுளீர் நீவிர்,
தனியள் எனக்குத் தந்தநும் ஆணை
இனிதெனக் கொள்வேன், இயலும் வகையான்
தெரிந்தன கூறிச் செல்லுதல் என்கடன்,
பெருந்தனம் உடையீர் பிழைபொறுத் தருள்க'
என்றவள் பணிந்துரை இயம்பி மீனவன்
தொன்று முதிர்ந்த தூயநன் மொழியாம்
தமிழிசை மீண்டும் தரணியில் தழைக்கத்
தந்தநற் சுவடியின் தகவெலாம் உரைத்துப்
புந்தியிற் பதியப் பொதிந்துள நுணுக்கம்
முறைமுறை தெரித்தும் இடையிடை இசைத்தும்
நறைபழுத் தொழுகும் துறைத்தீந் தமிழின்
பழம்பெரும் பாடல் பாங்குடன் பாடியும்
முழங்கிசை வல்ல முத்துத் தாண்டவர்
வழங்கி யருளிய வளர்தமிழ்ப் பாட்டும்,
அரும்பெறல் இசைவல அருணா சலக்கவி
திறம்பட நல்கிய தீந்தமிழ்ப் பாட்டும்,
விரும்பிய சமநிலை வேத நாயகர்
தரும்பழச் சுவைநிகர் தண்டமிழ்ப் பாட்டும்,
என்றிவர் அனையார் இசைத்துறை வித்தகர்
துன்றுநல் லுணர்வில் துய்த்துப் பாடிய
தென்றமிழ்ப் பாட்டும் தெள்ளிதின் இசைக்க,

புரப்பது - காப்பது.

## பெருநிலக்கிழார் வாழ்த்துரை

ஏந்திய மலரில் இன்சுவை நறவம்
மாந்திய வண்டென மனங்களி கூர்ந்து
விழிபுனல் ததும்பி வியந்துரை கூற
மொழிதடு மாறும் முதியவர் எழுந்து
'வாழிய நெடுநாள்! வாழிய நெடுநாள்!
யாழின் இசையோய் வாழிய நெடுநாள்!
ஏழிரண் டாண்டுகள் என்மனத் துறுத்திய
பாழிடர் போக்கினை! பாவாய் வாழிய!'
எனமனத் தெழூஉம் உணர்ச்சியின் இயைந்த
வாழ்த்துரை வழங்கி மகிழ்ந்தனர் பெரிதே.

---

எழூஉம் - எழும்.

# 21. நூல்நிலையம் அமைத்த காதை

### பூங்கொடி வேண்டல்

‘வாழிய என்றெனை வாழ்த்திய பெரியீர்!
ஏழிரண் டாண்டுகள் இடரொன் றுளதெனக்
கூறிடக் கேட்டுளம் கொடுந்துயர் உற்றேன்;
மாறிய தவ்விடர் எனும்அம் மாற்றம்
தொடுத்துடன் மொழிந்தீர் அடுத்துளம் மகிழ்ந்தேன்;
படுத்திய அவ்விடர் பாவைநான் உணர
எடுத்து மொழிய இயலுமோ பெரும!’
என்றிளம் பூங்கொடி இரங்கினள் வேண்ட,

### மகள் வரலாறு

‘நன்று கனிமொழி நவிலுவென் கேண்மோ!
உருவும் எழிலும் உன்போல் ஒருத்தி,
பருவம் நிறைமகள், பாவிஎன் மடமகள்
உருவளர் முழுமதி ஒப்பத் திகழ்ந்தனள்,
ஆடலும் பாடலும் அவட்குயிர் ஆகும்,
ஏடவிழ் கோதை எனக்குயிர் ஆகும்,
நாடிய துறையில் நன்கனம் தேர்ந்து
பாடுங் குயிலாய், ஆடும் மயிலாய்,
வீடகம் எல்லாம் பாடகம் சிலம்ப
ஊடகம் குளிர உவந்து திரிந்தனள்;

---

ஏடு - பூவிதழ், நன்கனம் - நன்கு, பாடகம் - மகளிர் காலில் அணியும் ஒரு வகை அணி, சிலம்ப - ஒலிக்க, ஊடகம் - உள்மனம்.

## மகட் பிரிவு

ஒருநாள்
பாட்டியல் வழுவாப் பண்ணொலி அடங்க
மீட்டிய யாழும் கூட்டினுள் முடங்க
உடலும் உயிரும் ஒருங்குடன் நடுங்கப்
படரிருள் அகத்தில் பரவிய தந்தோ!
சுடரொளி அவிந்தது துயரெனை அணைந்தது,
தாங்கருந் துயரத் தடங்கடல் மூழ்கி
நீங்கா உயிர்ப்பொறை தாங்கி நாளெலாம்
உண்ணலும் உறங்கலும் எண்ணிலே னாகி
மண்ணகத் திருந்து வாழும் காலை,
காலம் என்னும் கோல மருத்துவன்
ஞாலத் தியற்கை நன்கனம் உணர்த்தி
மாறா மனப்புண் மாற்றின னாகத்
தேறினேன் ஆயினும் சிந்தையில் அவளுரு
மாறிய தில்லை; மனத்தவள் விழைந்த

## நினைவுச் செயல்

ஆடலும் பாடலும் அளாவிய இன்னொலி
வீடகம் எதிர்ந்து விரவிட நினைந்து
நாடொறும் அவ்வொலி நான்செவி மடுக்கத்
தேடரும் செல்வம் வாரித் தெளிப்பது
தொழிலாக் கொண்டுளேன், தூயவள் நீஎன்
விழியிடைப் படலும் மீண்டனள் என்மகள்
என்னும் உணர்வே என்னுளத் தெழுந்தது;

## வேண்டுவது உரை எனல்

புண்ணிய மகளே! பூங்கொடி அன்னாய்!
பெண்மையின் உருவே! கண்ணின் மணியே!
மாதமிழ்ச் செல்வி! வாழிய நெடிதே!
யாதுநீ வேண்டினும் என்பால் உரைத்தி

---

அணைந்தது - தழுவியது, தாங்கரும் - தாங்க இயலாத பொறை - சுமை,

தீதென நினையேல் செவ்விதிற் கொள்'கென
மாதவள் தன்பால் ஓதினர் அக்கிழார்;

**பூங்கொடி நன்றி கூறல்**

'தகவுடைப் பெரியோய்! தந்தாய் அன்பினை
மிகுபொருள் அதனின் வேறொன் றில்லை,
உளத்தெழும் அன்பும், உணர்ச்சியின் வாழ்த்தும்,
பெறத்தகும் அளவு பெற்றபின் எனக்குக்
கொளத்தகு பொருளெது? வளத்திரு மிகுத்தோய்!
நன்றி யுடையேன்' என்றவள் கூறலும்,

**தந்தாய் எனுஞ்சொல் தந்த மகிழ்ச்சி**

'தந்தாய் எனுஞ்சொற் புகன்றனை தாயே!
நந்தா விளக்கே! நான்பெறும் மகிழ்ச்சிக்
கெல்லையொன் றுரைக்க இயல்வதொன் றில்லை;
அன்பின் விளைந்த அம்மொழி கேட்டுளம்
இன்பில் திளைத்தேன் ஏழிரண் டாண்டின்
முன்னர்க் கேட்டஅம் மொழியினை நின்வாய்
மொழிந்திடக் கேட்டேன் மீண்டும் அதனை
மொழிகதில் லம்ம! மொழிகதில் லம்ம!
செந்தா மரைமுகச் செல்விநீ மொழிந்த
'தந்தாய்' எனுஞ்சொல் தந்தபே ரின்பம்
எத்துணை! எத்துணை! எவ்வணம் புகழ்வேன்!'
என்றுளம் கசிய இணைவிழி கசிய
நின்றனர் ஆங்கண்; நேரிழை உருகித்

**பூங்கொடி ஆறுதல் புகலுதல்**

தந்தை வடிவேல் நினைவுளந் தாக்குறத்
'தந்தாய்! தந்தாய்! தணிகநின் துயரம்;
எந்தாய்! எந்தாய்! எனைநின் மகளெனத்

---

தந்தாய் - கொடுத்தாய், இன்பில் - இன்பத்தில், எந்தாய் - எம் தந்தையே,

தந்தேன் தந்தேன் தவிர்கநின் கவலை;
உலகிற் பிறந்தோர் ஒருநாள் மறைதல்
நிலைஇய இயற்கை; நீக்கலும் அரிதே
உறவின் பாற்செலும் உளத்தெழும் அன்பினைப்
பிறரிடைச் செலுத்தும் பெற்றிமை வாய்ப்பின்
உற்றவர் பிரிவினிற் பெற்றிடும் மனநோய்
அற்றிடும்; இஃதென் பட்டறி வாகும்;'
எனவிழி ததும்ப இசைத்தனள் பூங்கொடி;

### கிழார் மகிழ்ந்து வாழ்த்துதல்

மனமிகக் களித்த மாபெருஞ் செல்வர்
கைவிரல் கொண்டு கண்மலர் துடைத்து
மெய்ம்மயிர் சிலிர்த்து 'மீண்டஎன் மகளே!
வாழிய நெடிதே! வாழிய மகளே!
சூழிடர் தொலைத்தனை! சுடரொளி துலக்கினை!
வாழ்வை மறுமுறை வளம்பெறச் செய்தனை;

### வேண்டுவன கொள்க எனல்

இளங்கொடி நினக்குயான் செய்யற் பாலதென்?
விளங்கிட உரைத்தருள் வேண்டுவ திதுவென;
எப்பொரு ளாயினும் அப்பொருள் ஈவேன்;
ஒப்பிலாச் செல்வி! உண்மையின் உரைக்கின்
'ஈதல்' எனுஞ்சொல் ஏற்புடைத் தன்று;
தீதுதீர் செல்வமும் செழுமனை யாவும்
நின்பொருள், வேண்டுவ நீயே கொள்க'
இன்பினில் திளைத்தவர் இவ்வணம் புகல,

### பூங்கொடி மறுத்தல்

'அன்புடைப் பெரியோய்! பொதுப்பணி ஆற்றிட
என்பும் பிறர்க்கென எடுத்துளேன் வஞ்சினம்

நிலை இய - நிலைத்த, பட்டறிவு - அனுபவம், என்பும் - எலும்பும்.

எனக்கென ஒருபொருள் எதற்கினி ஐய!
மனக்கினி யாய்!எனை மன்னித் தருள்'கெனத்
தனக்கென வாழாஅத் தையல் மொழிந்திட,

### கிழார் மீண்டும் வேண்டல்

'ஆருயிர் மகளே! அவ்வணம் உரையேல்,
சீரிய நின்பணி செயற்பட வேனும்
கோரிய என்மொழி கொண்டருள் செல்வீ!
மீறிய அவாவின் வேண்டுவல், யாதெனக்
கூறுக நீ' எனக் குறையிரந் தனரே;

### நூலகம் அமைக்கப் பூங்கொடி வேண்டுதல்

பெருமகன் உளத்து வருவிருப் பகற்ற
ஒருவழி யறியாள் ஒப்பின ளாகித்
'திருமிக வுடையாய்! செயிரறு கொடையாய்!
ஒருபெரும் நூலகம் ஊரிடை நிறுவக்
கருதுவ துடையேன், காணும் அதுதான்
தென்மொழி முதலாப் பன்மொழிச் சுவடிகள்
நன்மை தருவன நாடித் தொகுத்தே
யாண்டும் இதற்கிணை இல்லெனு மாறு
பூண்டநற் புகழொடு பொலிவுறல் வேண்டும்;

### தனித்தனி இடங்கள்

தொன்னூல் பலவும் துறையறி புலவர்
அந்நூல் துருவி ஆய்வுரை கண்டு
நன்னூல் பலப்பல நல்குதற் பொருட்டும்,
கற்பனை வல்ல காவியப் புலவர்
சொற்பொருள் பொதிந்த தொழுதகு காப்பியம்
பற்பல படைக்க முற்படும் பொருட்டும்,

மனக்கு - மனத்துக்கு, கோரிய - வேண்டிக்கொண்ட, துருவி - ஆராய்ந்து.

நுழைபுலம் தரூஉம் நூலகம் அதனுள்
எழிலும் அவர்தமக் கேற்றநற் பொருளும்
கழிமிக நிரம்பிய கண்கவர் இடங்கள்
தனித்தனி அமைத்துத் தருதலும் வேண்டும்
கனித்தமிழ் தழைக்கஓர் கருவி ஆகும்
எனத்தகும் நினைவால் ஈண்டிது புகன்றேன்;

### நூலகத்திற்கு மாளிகை தர வேண்டுதல்

ஈங்குநின் னுரியன எண்ணில மாளிகை
ஆங்கவை தம்முள் ஓங்கிய நூலகம்
ஆக்கிட ஒன்றனை அளித்திடல் நின்கடன்
தேக்கிய நிதியும் செறிந்துள தறிவேன்;
ஈதற் பண்பும் இயல்பான் அமைந்தனை,
ஆதலின் நுலகத் தரும்பெரும் பணிக்குப்
பொறுப்புடன் அருளும் பொருளும் அளித்து
விருப்புடன் காக்க வேண்டுவல் யானே,
இஃதென் விழைவாம்' என்றனள் பூங்கொடி;

### கிழார் உறுதியளித்தல்

'அஃதுன் விழைவெனின் ஆகுக அவ்வணம்
நன்று நினைப்பின் அன்றுசெயல் வேண்டும்;
இன்றே முடிப்பேன், இரவென நின்றேன்,
காலை புலர்ந்ததும் கடிதினில் முடித்து
நாளை நூலகம் நடுவூர் ஆங்கண்
மிளிரக் காண்குவை; மேம்படும் நின்மனம்
குளிரக் காண்பதென் குறிக்கோள் ஆகும்'
எனுமொழி இயம்ப இளங்கொடி மகிழ்ந்து
நனிமிகு நன்றி நவின்றே கினளே.

தரூஉம் - தரும்.

# 22. கோமகன் கொலையுறு காதை

### சண்டிலியின் கணவன் வருகை

மழைவளர் சாரல் மாமலைப் பொதியில்
குழலின் இனிய குரலிசை கேட்டுத்
தன்வய மிழந்து தமிழிசை வேட்டுப்
பயிலும் ஆர்வம் மீக்கூர் பாவை
அயில்வேல் விழியள் மயிலியல் சண்டிலி
பிரிவினைப் பொறாஅன் பேதையின் கணவன்
துருவன் என்பான் தோகையைக் காணும்
ஆர்வல னாகி அணிதிகழ் மாடஞ்
சேர்தரு மறுகுகள் செறிந்தெழில் விளங்கும்
வேங்கை நகரெனும் வியனகர் புகுந்தோன்,
ஆங்கண் ஓங்கிய அகல்வாய் மாளிகை
வதியிடன் குறுகிஅம் மங்கையைக் கூடிப்
புதுமகிழ் வெய்திப் பூரிப் புற்றனன்;

### சண்டிலி நிகழ்ந்தன கூறல்

ஓதும் பொருட்டாற் காதலற் பிரிந்த
மாதும் கொழுநன் வரவால் தழைத்த
நெஞ்சினள் அவற்கு நிகழ்ந்தன கூறுவோள்
பஞ்சியின் மெல்லடிப் பாவை பூங்கொடி
வஞ்சியின் அருளால் வளர்தமி ழிசையில்
விஞ்சிய புலமை விளங்கிடப் பெற்றதூஉம்
பயிற்றிய பூங்கொடி பழகிய முறையதூஉம்,
செயற்றிறம் பழுநியோள் செம்மனத் தொண்டும்

---

மீக்கூர் - மேம்பட்ட, பொறாஅன் - பொறுக்கமாட்டாதவன், பழுநியோள்- முதிர்ந்தவள்,

பண்பும் அன்பும் பண்ணிசைத் திறனும்
மன்பதை உரைபுகழ் மாண்பும் பிறவும்
எஞ்சா துரைத்தனள்; இசைத்தவை கேட்டோன்
நெஞ்சால் மகிழ்ந்து நேரிசைச் செல்வியைக்

**துருவன் பூங்கொடியைக் காண விழைதல்**

காண்டல் விருப்பொடு காரிகை நோக்கி
'யாண்டுளாள் அம்மகள்? யானவள் பணிக்கு
நன்றியும் வணக்கமும் நவிலுதல் வேண்டும்'
என்றவற் கம்மகள் இயம்புவோள் 'அன்ப!

**சண்டிலி மறுமொழி**

பழுதறு கலைக்கே பொழுதெலாம் ஆக்கிக்
கழிபே ருவகை காணும் பெரியர்
இருநிதிக் கிழவர் பெருநிலக் கிழார்பால்
சுரிகுழற் பூங்கொடி சொல்லுரை யாட
ஏகியோள் இன்னும் ஏனோ மீண்டிலள்!
பாயிருள் நீங்கப் பகலவன் தோன்றிக்
காய்கதிர் வீசுங் காலைப் பொழுதத்துக்
காண்குதும் இனிநீ கண்படை கொள்'கெனச்
சேண்படு நகர்வரூஉம் செழுநிதித் துருவன்
பாங்க ரமைந்தவோர் பாயல் விரித்த
ஓங்குபே ரறையகத் தொருபா லணைந்தனன்;

**நிலவின் தோற்றம்**

வானகப் பள்ளியில் மாணவக் குழுவென
மீனினம் ஆங்காங்கு மிடைந்து விளங்கிடப்
பொருட்டிறந் தெருட்டும் ஆசான் போலவும்
அருட்டிறம் வேண்டி அவரவர் குறையை
விரித்துரை செய்வான் வியனகர் வாயிலில்

மன்பதை -மக்கள், பாயிருள் - பரவிய இருள், பொருட்டிறம் - பொருள்திறம், அருட்டிறம் - அருள்திறம்,

குழுமுங் குடியென உடுவினம் அணிசெயத்
தொழுதகும் அரசன் தோற்றம் போலவும்
இருட்பகை ஓட்டும் எண்ணரும் விண்மீன்
செருப்புலம் நோக்கிப் புறப்படும் மறவர்
திறப்பட அணியணி வகுத்திடல் மான
முறைப்படுத் தியக்கும் முதல்வன் போலவும்
ஒளியும் அளியும் உருவும் நிறைமதி
வெளிபடர் விண்ணக மறுகினில் போந்தது;

## நிலவின் செயல்

பாரி லின்பம் பயந்தவோர் பொருளே
மாறித் துன்பம் வழங்கலுங் கூடும்
பரிசினை விளக்கும் பான்மைய தாகித்
திரியும் மதியம், விரிமலர்ப் பாயற்
கவவுக் கையர் காதலர் தமக்குத்
திவவுக் கோல்யாழ் தெளிநரம் பிசைபோல்
தவமகிழ் வூட்டத் தண்ணொளி வீசிப்
பிரிந்தவர் தம்மைப் பெருந்துயர்க் கடலுள்
வருந்திடச் செய்து வாயுலைக் குருகின்
வெய்துயிர்ப் பெறிய வெந்தழல் சிந்திக்
கைவிரித் தெங்குங் கலையெழில் வழங்கி,
மண்ணகம் நோக்கும் வளர்முகங் காட்டி
விண்ணகப் பரப்பில் மெல்லென நகர்ந்தது;

## கோமகன் புலம்பல்

பாயலில் நெளியும் படுதுயர்க் கோமகன்
காயும் நிலவைக் கண்ணிமைப் பிலனாய்
நோக்குழி நோக்குழி நெட்டுயிர்த் ததனை
வீக்கிய துயரோன் விளித்து ‘வானச்

செருப்புலம் - போர்க்களம், அளி - கருணை, கவவு - தழுவிய,
திவவு - நரம்புக்கட்டு, தவமகிழ்வு - மிகுந்த மகிழ்வு, காயும் - கோபிக்கின்ற,

சேக்கையில் என்போற் சிந்தை குலைந்து
நீக்கிய துயிலொடு நிலைதடு மாறிப்
போக்கொழிந் தனைகொல்? புகலுதி திருமதி!
விண்ணகத் திருப்பினும் மண்ணகத் திருப்பினும்
கண்ணிய காமங் கதுவப் பட்டார்
கண்ணுறக் கொழிந்து கண்ணீர் பொழிந்து
புண்ணுறல் யாண்டும் புதுவதன்று போலும்!
என்னிற் பெரிதே இடர்ப்பா டுற்றனை!
நின்னிற் பிரிந்தோன் நிகழ்த்திய துயரால்
எண்ணிப் பொழிந்த கண்ணீர்த் துளிதாம்
விண்ணிற் சிதறும் வெண்மீன் கொல்லோ?
நின்னை இகழ்ந்தனன் நீவிழை யொருவன்,
என்னை இகழ்ந்தனள் யான்விழை யொருத்தி,
விழைந்தவர் தம்மை வேட்டுளங் கொளாஅது
குழைந்து தளர்ந்திடக் கொடுந்துயர்ப் படுத்துதல்
இழிந்தவர் செயலாம்' எனப்பல புலம்பித்

**திங்களிற் பூங்கொடி**

திங்களை நோக்கினன் நோக்கிய திங்களில்
செங்கயல் மீன்விழி பொங்கெழிற் பூங்கொடி
வஞ்சியின் முகமலர் வடிவினைக் கண்டனன்;
நெஞ்சினில் விஞ்சிய நீள்படர் காமம்
பஞ்சினில் தீயெனப் பற்றிப் படர்ந்தது;
உடுத்திரள் சூழ்தர உயர்பெரும் வானில்
நடுப்பட நின்றொளி நல்கிடும் அம்புலி,
படிப்பவர் சூழ்தரப் பண்ணிசை யரங்கிற்
படைத்திடும் பூங்கொடி பான்மையிற் றெரிதரக்
கற்பனைப் பெருக்கில் மூழ்கிக் களித்தனன்;
முற்படு காதல் நினைவே முகிழ்த்தது;

ஒளிவிடுகின்ற, கண்ணிய - கருதிய, உறக்கு - உறக்கம்,

## கோமகன் கற்பனை

கருமுகில் உடீஇய நிலவெனுங் காதலி
இருளிடை வான மறுகினில் நின்று
காதலற் காணுங் கழிபே ரவாவொடு
பேதலித் தாங்கண் பெருமூச் செறியக்
காற்றெனுங் காதலன் கள்வழி மலர்மணம்
போற்றித் தன்னுடற் பூசி வந்தனன்;
கொழுநற் காணலுங் கூசி அன்னவள்
எழிலி எனுந்துகி லெடுத்துப் போர்த்துத்
தன்முகம் மறைத்துத் தயங்கி நின்றனள்;
வீசுகை கொண்டதை விலக்கின னாகப்
பேசுகை யின்றிப் பெண்மையின் நகர்ந்தனள்;
தூசு பற்றினன் தொடர்ந்திடுங் காதலன்
மாசறு மேகலைக் காசுடன் முத்தும்
வீசிச் சிதறி வீழ்ந்தன வானில்
வீழும் அவையே மின்னும் உடுவெனச்
சூழும் அவ்விடைச் சுடர்விட் டெரிந்தன;
எனவாங்கு
கற்பனை வடித்துக் கவிதையும் முடித்து
நிற்பவன் நெஞ்சில் நேரிழை உருவம்
பொற்புட னாடல் புரிவது கண்டனன்;

## கோமகன் காம எழுச்சி

இரவுங் குளிரும் எரிதழல் மூட்ட
வருமந் நிலவு வாரிநெய் யூற்ற
வாடையுந் தென்றலும் மாறி மாறி
நீடவை வீசலால் நெஞ்சினிற் கனன்று
சுடர்விட் டெரிந்தது சொலற்கருங் காமம்;

உடீஇய - உடுத்த, தூசு - ஆடை.

கோமகன் அடங்காக் காமுகன் ஆயினன்;
நிறையும் பண்பும் இருகரை யாகச்
செறிபுனல் நிகர்க்கும் நெறிபடு காமம்
உறுகரை கடந்தது முறைமையும் இகந்தது;
பொங்கிய வெள்ளம் புகாவழிப் புகுந்தது;
'தங்கிடன் புகுவேன் தையலை நகுவேன்
எங்கவள் தப்புவள்? என்மனம் ஒப்புவள்
ஆசை பகர்வேன் அவள்நலம் நுகர்வேன்
ஏசிய அவளினி என்கை தவறாள்'
எனமனத் தெண்ணி எழுந்து நடந்தனன்;

**நள்ளிரவில் கோமகன்**

நள்ளிராப் பொழுதிற் கள்ளனை நிகர்ப்போன்;
மெல்லென நடந்து நல்லவள் வதியிடன்
மனத்துணி வுடனே மயங்கினன் செல்வோன்
தனைத்தெரி யாவகை தயங்கித் தயங்கிப்
புறமும் அகமும் புழுங்கி வியர்க்க
உடலும் உளமும் ஒருங்குடன் நடுங்க
நெஞ்சினில் துடிப்பும் நெட்டுயிர்ப் பொலியும்
விஞ்சும் முறையில் வெடவெடத் தேகினன்;

**துருவன் தொடர்தல்**

ஒதுங்கியும் பதுங்கியுஞ் செல்லுமோ ருருவம்
அரவப் படாஅவகை அடியெடுத் தேகினும்
துருவப் பெயரோன் துயிலா விழியில்
தெள்ளிதிற் றெரிதரத் துள்ளி எழுந்தவன்
கள்ளச் செயலோன் கட்படா வகையில்
மெல்லத் தொடர்ந்தனன் மேவிய இருளில்;

அரவம் - ஓசை, படாஅவகை - படாமல்.

### கோமகன் ஓர் அறையுட் புகுதல்

பழிசெய அஞ்சாக் கழிமிகு காம
வழியினிற் செல்வோன், வருவதும் ஓரான்
ஆண்டோர் அறையின் அடைகத வொன்றைத்
தீண்டினன் கதவம் திறந்தது கண்டோன்
'என்வர வறிந்தே இடுதாழ் இட்டிலள்,
தன்மனம் முகிழ்த்த தணியாக் காதலை
எவ்வணம் மறைத்தனள், இளையோள்? வியப்பே;'
இவ்வணம் நினைந்துளங் கவ்விய மகிழ்வால்
உட்புகுந் தாங்கண் ஒருத்தியைக் கண்டனன்
வெட்கினன் வியர்த்தனன் விழித்தனன் துடித்தனன்
மட்கிய முகத்தினன் வாயிதழ் மடித்தனன்
செய்வதொன் றறியான் சிலைபோல் நின்றனன்;

### துருவன் ஐயப்பாடு

மைமன முடையான் மதியிலி நிழல்போல்
தொடர்ந்து பின்வரும் துருவன், அவ்விடை
இடம்படும் அறையுள் இளையோன் புகுதக்
கண்டோன் ஐயமும் கடும்படர் சினமும்
கொண்டோ னாகிக் கொடுவரி நிகர்த்துக்
கதவிடை ஒருபாற் கரந்தனன் நிற்க;

### எழுந்தவள் சீற்றம்

மதர்விழி மாதவள் மலரணை விடுத்தே
ஒய்யென எழுந்தவள் ஒளிமுகஞ் சிவந்து
கைதவன் நிற்றலைக் கண்டுளஞ் சினந்து
'விழையா மகளை விழையா நின்றனை,
இழிவாம் இச்செயல் இயற்றிடத் துணிந்தனை,

---

மட்கிய - மங்கிய, மைமனம் - குற்றமுள்ள மனம், கொடுவரி - புலி, கரந்தனன் - மறைந்து, கைதவன் - ஒழுக்கம்கெட்டவன்.

நாணா மதியினை நங்கையர் வாழ்வில்
மாணா வினைசெய மனங்கொண் டனை,நீ
பொருந்தாக் காமம் பொருந்தா தென்று
திருந்தா வுனக்குச் செப்பிய வெல்லாம்
மறந்தாய் கொல்லோ? மதர்த்தனை கொல்லோ?
இரவிடை ஒருமகள் தனியிடன் குறுகக்
கரவுளங் கொண்ட காமுகன் நீதான்
உரமிக வுடையாய்! ஒண்டொடி மாதர்
மரமென மண்ணென மதித்தனை கொல்லோ?
அரிவை யிகழ்ந்தனை! அறிவை யிகழ்ந்தனை!
தெரிவை விரைவினில் தெரிவை திறமெலாம்
இன்னே ஏகுதி இவ்வுழை யகன்றே
கொன்னே வளர்ந்தனை கொடியோய்' என்று
மின்னேர் இடையாள் வெகுண்டுரை கூறக்

**கோமகன் காமவுரை**

'கண்டன மொழியாய்! காயும் விழியாய்!
சண்டிலி நின்பாற் சாற்றுவ துடையேன்
கொண்டுள காதல் விண்டுளேன் அறிவாய்,
ஒண்டொடி மறுப்பின் உயிர்பெரி தன்றே!
நொடிநொடி யாக மடிவது தாளேன்,
விடியுமுன் காதல் விருந்துண் டமைவேன்,
எத்துணைத் தடுப்பினும் இனிப்பொறேன் நெஞ்சில்
அத்துணை உணர்ச்சி அழலாய் எரித்ததே;
உறுபசி கொண்டோன் உண்டியின் ஒப்புதல்
பெறுவதும் உண்டோ? பெரும்பசி கொண்டேன்;
உண்டியும் அருகி லுறுவது கண்டேன்
உண்பது தடுப்பார் ஒருவரும் ஈங்கிலை'
என்றுரை கோமகன் இழிமொழி கேட்டுத்

---

மாணா - தகாத, தெரிவை - தெரிவாய், தெரிவை - பெண், கண்டன - கண்டிக்கும், கற்கண்டு போலும், காயும் - கோபிக்கின்ற, ஒளிபொருந்திய.

**துருவன் கோமகனைத் தாக்குதல்**

தன்றுணை யாகிய சண்டிலி கற்பினைச்
சென்றுண முனைந்தனன் என்றுளம் அயிர்த்துக்
கன்றிய நெஞ்சினன் கனல்படு கண்ணினன்
துன்றி எழுந்தனன் துருவன், புலியெனப்
பாய்ந்தனன் அவன்மேற் சாய்ந்தனன் கோமகன்;
காய்ந்திரு கைகொடு காமுகன் முகத்தில்
முழுவலி யாலவன் மோதினன் தாக்கினன்;

**இருவரும் போரிடல்**

விழுமவன் தானும் வேங்கையிற் சீறி
எழுதரக் கனன்றுடன் இருவரும் பொருதனர்;
அழிவது யாரென அறியா வகையிற்
புழுதியிற் புரண்டனர் புழுங்கினர் அழுங்கினர்;

**துருவன் கொலை செய்தல்**

கழிமிகு காமங் கனன்றெழு மார்பிற்
குழிபட ஓச்சிக் கொடுவாள் செலுத்திப்
பறித்தனன் துருவன்; பறித்தஅவ் வாள்நுனி
கண்ணீர்த் துளியெனச் செந்நீர்த் துளிகளை
மண்ணிற் கிடந்தோன் மார்பினிற் சிந்த,
விரிபடு மார்பில் வேட்கைப் பெருக்கெனக்
குருதிப் பெரும்புனல் கொப்பளித் ததுவே;

**சண்டிலி கதறல்**

அந்நிலை காண அஞ்சிய மெல்லியல்
நன்மலர்க் கையால் தன்முகம் புதைத்துக்
கூஉய் அழுதனள், கொடுமை என்றனள்,
ஆஅய்புலம் இன்றி அடாஅது செய்தனை!
எனப்பல கூறி இரைந்தனள் இரங்கினள்;
மனத்திகில் கொண்ட மணாளன் மலைத்தனன்;

---

ஆஅய்புலம் - ஆராயும் அறிவு, அடாஅது - தகாதது,

### கோமகன் முடிவுரை

செந்நீர்க் காட்டிற் சீரழிந்து கிடப்போன்
புண்ணீர் வடிந்து பொங்கிய வாயிதழ்
பூஉங் கொடிஎனப் பூஉங் கொடியெனக்
கூஉம்பி யசைந்தன, குளிர்ந்ததவ் வுடலம்;
தேஎம்பி யழுதன திங்களும் வானமும்;

### துருவன் ஓடிமறைதலும்

ஐயமுஞ் சீற்றமும் ஆட்கொண் டமையால்
வெய்யவ னாகி வீண்கொலை புரிந்து
செய்வதொன் றறியாது திகைத்திடுந் துருவன்
பெய்வளை யாளொடும் உய்வகை கருதிக்
காணா தேகிக் கரந்தனன் விரைந்தே.

---

பூஉங் கொடி - பூங்கொடி, கூஉம்பி - குவிந்து, தேஎம்பி - தேம்பி.

# 23. சிறைப்படு காதை

### பூங்கொடி வருதல்

பெருநிலக் கிழவர் பெட்புடன் மகிழ்ந்தே
அருளிய வாழ்த்தும் அவ்வூர் நாப்பண்
ஞாலங் காணாக் கோலங் கொண்ட
நூலகம் அமைக்க நுவல்மொழி உறுதியும்
பெற்றநற் பூங்கொடி குற்றமில் மனத்துள்
உற்றெழு மகிழ்வால் சொற்றமிழ் இசைதரு
மாட மாளிகை மன்றினுட் புகுதரக்
கூட வாயிலில் குருதி கண்டனள்;

### பூங்கொடி மயக்கம்

கண்டவள் நடுங்கிக் கால்தடு மாறிச்
'சண்டிலி சண்டிலி' என்றுரை சாற்றியும்
கண்டிலள் அவளைக் கடும்பே ரமைதி
கொண்டு திகழ்ந்தது கோவுயர் மாளிகை;
அஞ்சிய ஒண்டொடி ஆங்காங் கோடித்
துஞ்சவள் அவளெனத் துருவினள் யாண்டும்
காண்கில ளாகிக் கலங்கிய அம்மகள்
தூண்களி னிடையே துணுக்குற நோக்கினள்;
மணமக னாகும் மனத்தொடு வந்தோன்
பிணமக னாகிப் பிறிதுறக் கிடந்த
கொடுமை காணலுங் கோவெனக் கதறிச்
சுடுதழல் மிதித்தெனத் துவண்டு சுருண்டு
மயங்கி விழுந்தனள் மண்மிசை யாங்கே;

## மயக்கந் தெளிந்து புலம்பல்

மயங்கிருள் தெளிய வைகறை வந்துற
வயங்கிணர்க் கொடிநிகர் மயங்கிய பூங்கொடி
சற்றே தெளிவுறச் சட்டென எழுந்து
'பற்றா மாக்கள் பகைமுடித் தனர்கொல்?
எற்றால் இந்நிலை இம்மகன் உற்றனன்?
உற்றார் எவரும் உறாஅ விடத்துச்
செற்றார் இவனைச் செகுத்தனர் அந்தோ!
துணையாந் தோழியும் யாங்குத் தொலைந்தனள்?
அணையாப் பெரும்பழி அணையும் அந்தோ!
இசைக்கென வந்தவன் இறந்தனன் என்னும்
வசைக்கிலக் காக வாய்த்ததிந் நிலையே!

## செய்தித்தாள்களின் செய்கை

கொலைத்தொழில் ஒன்றே கலைத்தொழி லாகத்
தலைப்பிடுஞ் செய்தித் தாள்களும் உண்டே!
நாண்சிறி தின்றி நாட்டினில் உலவி
வீண்பழி சுமத்தும் வெள்ளை இதழ்களும்
நாடொறும் தெருவில் நடமிடல் உண்டே!
கூடுமிவ் விதழ்கள் 'கொலைகொலை' என்றே
பாடும் பாடும் பாரெலாம் பாடும்
வசைப்பணி புரியும் வாய்க்கிது விருந்தே!
இசைப்பணிக் கீதோர் இழுக்கே யன்றோ?

## கோமகனை நினைந்திரங்கல்

பரிவுக் குரியன் பாவம் இம்மகன்!
முறுகிக் கிளர்ந்து மூண்டெழு காமம்
பெருகிப் படர்ந்து பெட்புற் றென்னைத்
திருமணஞ் செய்வான் திரிந்தனன் பலநாள்;

---

பற்றாமாக்கள் - பகைவர், எற்றால் - எதனால், உறாஅ - பொருந்தாத. செகுத்தனர் - அழித்தனர்

பண்ணிசை ஆய்ந்து பயின்றிடக் கருதி
உண்ணிறை அவாவொடு நண்ணினன் ஈண்டு
மண்ணிரை யாக மாய்ந்தனன் அந்தோ!
எண்ணிய தொன்றும் ஏற்றிலன் பாவி!
வேட்டவன் ஒருநாள் விழைவினை என்பாற்
காட்டினன் குறிப்பால்; கடிந்துரை கூறுவேன்
'ஒருதலைக் காமம் உடையவர் தாமே
வருதுயர்க் கடலுள் மடிவது திண்ணம்'
என்ற அம்மொழி இன்று பலித்ததோ?
அன்றது மொழிந்தமைக் கின்று வருந்துவல்'
என்று பலப்பல இரங்கிப் புலம்பி,

**கிழாரிடம் முறையிடல்**

உறுதுணை யாகிய பெருநிலக் கிழார்பால்
அறைகுவல் விரைந்தே என்றாங் கணுகித்
தன்னையும் பண்ணையும் முன்னி வந்தவன்
பன்னிய செய்தியின் பான்மை முழுவதூஉம்,
மேனாள் தொட்டு மெல்லியல் அவன்மொழி
ஏலா தியாவும் எதிர்த்துரை புகன்றதூஉம்,
காதலின் பெயராற் கரையிலான் இவனால்
ஏதம் விளையினும் விளையுமென் றெண்ணிச்
சண்டிலி சூழ்துணை கொண்டு நின்றதூஉம்,
வண்டென அலைவோன் வாளிற் படுகொலை
யுண்டு மனையினில் ஒருபாற் கிடப்பதூஉம்,
உறுதுணை யாகிய ஒண்டொடி சண்டிலி
பெருமனை நீங்கிப் பெயர்ந்து போயதூஉம்
அரிவை யாவையுந் தெரிதர வுரைத்து
வருபழி யஞ்சி வாடி நின்றனள்;

---

அறைகுவல் - கூறுவேன், பன்னிய - கூறிய. கரையிலான் - கட்டுப்பாடில்லான்

**கிழாரும் உடன்புறப்படல்**

பெருநிலக் கிழார்அப் பேதையைத் தேற்றி
'மருளுதல் தவிர்கஎன் மகளே! ஒன்றும்
வெருவுதல் வேண்டா, வேண்டுவ செய்வல்;
வருகுவென் யானும் வஞ்சி நின்னுடன்
எழு'கெனக் கூறி எழுந்தனர் ஆங்கே;

**காவலர் வருதல்**

பண்ணும் இசையும் பயில்தரு மாளிகைக்
கண்ணொரு கொலைவினை நிகழ்ந்தென் றறிந்த
காவற் படையினர் கடுகி வந்தனர்;
ஏவல் மாக்கள் இருவரை வினவினர்;
மாளிகை முழுமையும் சூழுறும் அறைகளும்
வாளிற் படுமகன் வடித்தசெங் குருதி
தோய்ந்து காய்ந்து தூணிடைக் கிடக்கும்
உடலும் பிறவும் உற்று நோக்கினர்;
காவற் றலைவர் கற்போர் தம்மை
'நீவிர் அறிந்தன நிகழ்த்துக' என்றனர்;

**மாணவன் கூற்று**

'கொலைபடு கோமகன் கலையிசை வேட்டுப்
பலநாள் எம்முடன் பயின்றனன் அறிவோம்;
ஈதொன் றன்றி வேறொன் றறியோம்;
தீது நிகழ்வில் ஏதும் தெரியோம்;
எமக்கிசை யூட்டுங் குலக்கொடி யாகிய
மடக்கொடி பூங்கொடி மற்றவள் தோழி
சண்டிலி என்பாள் தன்னுடன் கூடி
விண்டொட நிவந்த வியன்பெரு மாளிகை
வதிவதும் அறிவோம் வாய்மையிஃ தாகும்;
மதிலரண் சூழும் மாமனை யிதனுள்

எதிரிகள் எவரும் எளிதிற் புகார்' என
மாணவர் தம்முளோர் மாணவன் இயம்பக்

**காவலர் குறுக்கு வினா**

கரவிலா துரைத்ததைக் கேட்டஅக் காவலர்,
'அரண்படு மாளிகை ஆதலின் ஈண்டு
முரணியோர் உட்புக முடியா தென்றனை,
அவ்வா றாயின் அவனொடு முரணியோர்
எவ்வெவர் என்றெமக் கியம்புதி' என்றனர்;

**மாணவன் மறுமொழி**

முற்படு மாணவன் 'முரணியோர் உண்டெனல்
கற்பனை யாகும்; காப்பமைந் துளதால்
மற்றவர் புகுந்து செற்றனர் என்று
சொற்றிட இடமிலை; சொல்லுமென் கருத்தைச்
சுற்றி வளைத்து மற்றொரு பொருளைப்
படைத்திட வேண்டா பணிவுடன் வேண்டுவல்'

**காவலர் குறுக்கீடு**

எனவாங்கு
முடிக்குமுன் காவல் முதல்வர் மறித்துத்
'துடித்த லின்றிச் சொல்லுக, உண்மை
கிடைக்குமென் றெண்ணிக் கிளறுவ தெம்கடன்;
மற்றவர் தம்மால் மாண்டிலன் என்றால்
தற்கொலை என்று சாற்ற நினைந்தே
இவ்வணம் புகன்றீர் எனுங்கருத் துடையேன்
ஒவ்வுவீ ராயின் உரைமின்' என்றனர்;

**மாணவன் ஏக்கவுரை**

'எவ்வா றவ்வணம் இயம்புவல் ஐயா!
செவ்விதிற் றெரியும் செயப்படு கொலையைத்

தற்கொலை என்று சாற்றுதல் தகுமோ?
எற்கெனை யிங்ஙனம் இடையிடை மறித்துப்
பற்பல வினவிப் பாடுறச் செய்கிறீர்?
எனக்கும் கொலைக்கும் எவ்வகைத் தொடர்பும்
மனத்தும் நினைக்க வழியிலை; என்மொழி
அனைத்தும் வாய்மை அறிகதில் ஐய!'
எனப்புகல் மாணவன் ஏங்கி நின்றனன்;

**காவலர் கனிவுரை**

'உம்மை ஐயுறும் உள்ளம் எமக்கிலை
மெய்ம்மை தெரிவான் விடுத்தனென் இவ்வினா;
கடுமொழி யன்றிது கனிமொழி யாகும்
விடுகநும் அச்சம் விளம்புக மெய்யே;
அன்பொடு வினவும் ஐய வினாக்கட்
கின்புடன் விடைகள் இறுப்பது நும்கடன்;
துன்புகள் நும்மைத் தொடரா; உறுதி;
வன்பகை இறந்தோற்கு வாய்த்ததும் இல்லை;
பின்பவன் தற்கொலை புரிந்ததும் இல்லை;
செயப்படு கொலையெனச் செப்பலும் செய்தீர்;
நயத்தகும் மன்றினுள் நல்லவள் பூங்கொடி
சண்டிலி தன்துணை கொண்டு வதிவதும்
விண்டனிர்; இவற்றால் விளங்குவ தென்னை?
ஒண்டொடி மகளிர் ஒருவர்மேல் ஐயம்
உற்றனிர் கொல்லோ? மற்றிவர் இருவரும்
குற்றம் புரிதல் கூடுமென் றெண்ணம்
பெற்றனிர் கொல்லோ? தெற்றென மொழிக!'

---

தெரிவான் - தெரிய.

## மாணவன் துடிப்பு

என்றுரை கேட்டோன் 'ஈதென் கொடுமை?
நன்றுரை புகன்றீர்! நானதற் கொருப்படேன்
கொன்றெனைச் சிதைப்பினும் கூறேன் அம்மொழி;
பயிற்றிய தாயின் பால்முகம் நோக்கின்
அயிர்த்தலும் ஒல்லுமோ? ஐயகோ அடாஅது!
பாழ்மகன் இறந்தும் பழியினைத் தந்தனன்;
ஆழ்கடல் உலகில் அவள்நிகர் பெண்மகள்
சூழினும் காண்கிலம்; தூயவள் தனக்குத்
தாழ்வுகள் வருதல் தகுமோ ஐய!
ஊழ்வினை என்றொன் றுளதெனச் செப்புவர்
பாழ்வினை யிந்தப் பழிமொழி வடிவிற்
சூழ்ந்தது கொல்லோ? சூழ்ந்தது கொல்லோ?'
என்றவன் அரற்றி யிரங்கித் துடிக்க;

## காவலர் நயவுரை

'யாது நிகழ்ந்த திங்ஙனம் அரற்றினை?
தீதுதீர் செயலி தேன்மொழி பூங்கொடி
யாதும் பழியுறாள்; வேதனை விட்டொழி;
ஆழ்கடல் உலகில் அவள்நிகர் பெண்மகள்
சூழினும் காண்கிலம்; தூயவள் தனக்குப்
பாழ்மகன் இறந்தும் பழியினைத் தந்தனன்
என்றனை யன்றோ? இறந்தும் தந்தனன்
என்றதன் உட்பொருள் இயம்புதி கொல்லோ?
இறந்தோன் உயிருடன் இருந்த காலை
அறந்தேர் தெரிவைக் காற்றிய பழியினைத்
திறந்துளம் உரை' எனத் தெரித்தனர் காவலர்;

## இருந்தும் பழி இறந்தும் பழி

'இசைதெரி வேட்கையன், இவனவள் பாற்கொளும்
நசைபெரி துடையன், நாளுமந் நினைவால்
உருகி உருகி மருகுவன், அவளை

---

அடாஅது - தகாது, செயலி - செய்கையினள்,

மருவுதல் ஒன்றே வாழ்வின் குறியன்,
ஒருவுதல் நேரின் உயிரும் வேண்டிலன்,
இரவலன் போல இடையிடை அவள்பாற்
குறுகுவன் தன்னுளக் குறிப்பினை விளம்புவன்;
இல்லறம் அறவே வேண்டிலா இம்மகள்
புல்லும் இவனைப் பொருட்படுத் திலளே,
ஆயினும் உண்மை அறியார் சிலர்சிலர்
தாயினை அலருரை சாற்றுதல் அறிவேன்,
இருந்தும் பழிமொழி இயற்றினன் பாவி'
இறந்தும் அம்மொழி ஏற்றினன் பாவி'
என்றுரை கூறி மாணவன் இருந்துழிக்

**பூங்கொடி கிழாருடன் வருதல்**

கன்றிய நெஞ்சொடும் கலையுணர் கிழாரொடும்
வந்து நின்றனள் வழுவிலாப் பூங்கொடி;
நொந்தவள் முகத்தினை நுண்ணிதின் நோக்கி
முந்துறக் காவல் முதல்வர் வினவினர்;

**காவலர் வினாவும் காரிகை விடையும்**

'ஈண்டிவ் விளையோன் கோமகன் என்பான்
மாண்டமை பற்றி மங்கையுன் விளக்கம்
வேண்டுவல் பூங்கொடி விளம்புக'என்னலும்,
'நெருநல் மாலை பெருநிலக் கிழாரின்
பெருமனை புகுந்து பெரியவ ரவரொடு
நெடிதுரை யாடி நேரிசை பாடி
விடியுமுன் னிரவில் மீளும் பொழுதிற்
படிமிசை இவனுடல் படிந்தது கண்டு
துடிமன முடையேன் தோழியைக் கூஉய்
வயங்கிழை காணாது வழியொன் றறியாது
மயங்கி வீழ்ந்தனென் மற்றொன் றறியேன்'

---

ஒருவுதல் - நீங்குதல், வயங்கிழை - சண்டிலி.

என்பது கேட்டோர் 'இவற்கும் நினக்கும்
முற்பகை யுண்டோ?மொழிக' என்றனர்;
' பொதுப்பணி பூண்டேற்குப் புன்மைப் பகைமை
'எதற்கு? நிலமிசை எவரும் பகையிலேன்'
'கொலையுணும் இம்மகன் கொடியிடை நின்பாற்
பலமுறை வந்து பழகலும் உண்டோ?'
'ஆம்அவன் பலகால் அணுகுவன் என்பால்
தோமறும் இசைபயில் தொழிலோன் ஆதலின்';
'எழில்மிகும் நின்பால் இளையோன் காதல்
விழைந்ததும் உண்டோ? மொழிந்ததும் உண்டோ?'

### கிழார் குறுக்கீடு

இவ்வுரை கேட்டாங் கிருந்திடுங் கிழவர்,
'செவ்விய இவட்குச் சிறுமை யூட்டும்
அவ்வினா வெழுப்புதல் அடாஅது காவல!
ஒவ்வும் முறையால் உண்மை ஓர்க'
இவ்வணம் கடிந்துரை இயம்பின ராகப்

### பூங்கொடி கலங்கா மொழி

'பொதுநலம் ஒன்றே புரிபவர் எவர்க்கும்
இதுபோல் இடுக்கண் இடையிடை வரலும்
அதுதான் எளிதின் அகலலும் இயற்கை;
சினவேல் ஐய! சிறுமைகள் நமக்கேன்?
வினவுக பெரும, வினவுக பெரும!'

### வினா விடை தொடர்தல்

'எழில்மிகும் நின்பால் இளையோன் காதல்
விழைந்ததும் உண்டோ? மொழிந்ததும் உண்டோ?';
'ஆம்ஆம் என்னை அம்மகன் விழைந்ததும்
காம மொழிகள் கழறியதும் உண்மை'
என்றவள் செப்ப, 'இசைந்ததும் உண்டோ?

மன்றல் புரியநின் மனமொப் பினையோ?'
என்றவர் வினவ, 'இல்லற வாழ்வே
வேண்டிலே னாகி விழைந்திப் பொதுப்பணி
பூண்டுளேன் ஆதலின் புல்லும் அவன்மொழி
பொருளெனக் கொளாஅது போயினென்' என்றனள்;
'ஆங்ஙன மாயின் அவன்றன் போக்கைத்
தீங்கெனக் கருதிச் செற்றம் அவன்பாற்
கொண்டதும் உண்டோ? கொடியன் இவன்எனக்
கண்டு வெறுத்ததும் உண்டோ? உரை'என
'அவனுரை மறுத்துளேன் அவனை வெறுத்திலேன்
சினமொழி தொடுத்துளேன் செற்றம் படைத்திலேன்
ஆணும் பெண்ணும் அவரவர் கருத்தைக்
காணும் பொழுது கழறுதல் இயல்பு
விழைவோர் மற்றவர் விருப்பினைக் கேட்டல்
பிழையோ? உரிமை, என்றது பொறுத்தேன்'

**பூங்கொடி சிறைப்படல்**

என்றவள் செப்பினள்; ஏந்திழை மாற்றம்
நின்றவர் செவியில் ஒன்றிய தெனினும்
'கொன்றவர் யாரெனுங் குறிப்பறி காறும்
காவலில் வைப்பதெங் கடமையும் ஆகு'மென்
றொருபிழை யறியாப் பெருமகள் அவளைச்
சிறைசெய் தனரே முறையின் பெயரால்;
குறைசெய் தனரே! குறைசெய் தனரே!

---

கொளாஅது - கொள்ளாது. ஏந்திழை - பூங்கொடி.

# 24. சிறைவிடு காதை

### பெருநிலக் கிழார் வருந்துதல்

சிறைபட் டாங்கட் செல்வோள் முகத்து
மறைப்பரு கவலை வெளிப்படல் கண்டு
மாளாத் துயரால் வதைந்திடுங் கிழவர்
'வாளா இனியிரேன் வருவது வருக!
நாளை மீட்பேன் நங்காய் கவலேல்'
என்றுதம் விழியில் இறங்குநீர் துடைத்து
நின்றவர் 'அந்தோ நேர்மைக் கிடமிலை,
நல்லவை செய்தார்க்கு நலிவிலை என்றும்
அல்லவை செய்தார்க்கே அழிவுகள் என்றும்
சொற்றன யாவும் வெற்றுரை யாகும்;
முற்றா இளங்கொடி முள்நுனி யளவும்
குற்றம் புரிந்திலள் கொடும்பழி வந்ததே;
எற்றோ உலகியல்!' என்றவர் ஏகினர்;

### ஊரவர் பழித்தல்

இசைஇசை எனச்சொலி ஏய்த்தனள் ஊரை!
வசையென நாணாள் மணவினை நாடாள்
துறவினள் போலத் தொண்டெனும் பெயரால்
இரவிடை நிகழ்த்தும் இழிசெயல் எத்தனை!
ஒருநாள் வெளிவரும் உண்மை என்றனர்;
எழில்நிறை உருவமும் இளமைப் பருவமும்
கழிமிக வுடையவள் காரிகை யிவள்தான்!
கலைதெரி பெயரால் கட்டிளங் காளையர்

எற்றோ - எத்தன்மைத்தோ?

பலர்பலர் அவ்விடைப் பயில்வோர் உளரால்
துறவும் தூய்மையும் தொலைவினில் ஓடி
மறையும் அன்றி வாழுமோ என்றனர்;
பாயும் புலியும் பசும்புல் வாயும்
காயழல் தீயும் தூயநற் பஞ்சும்
நெருங்குமேல் விளைவதை நீணிலம் அறியும்;
உறுகேழ் வரகினில் ஒழுகும் நெய்யெனில்
கேட்பவர் மதியும் கேடுறின் நம்புவர்;
நாட்பட விளங்கும் நயவஞ்சம் என்றனர்;
பசுப்போல் இருந்தனள் பாவி இவள்தான்
வெறுக்குங் கொலைத்தொழில் விளைத்தனள் என்றனர்;
நல்லவர் கெட்டவர் நாமுண ராவகை
உள்ளனர், என்ன உலகமிஃ தென்றனர்;
பெண்ணுருக் கொண்டுள பேயிவள் என்றனர்;
பெண்குலங் கெடுக்கும் பெற்றியள் என்றனர்;
இவ்வணம் ஊரார் இடுபழி கூறினர்;

## நல்லோர் வருந்துதல்

இவட்கோ இப்பழி! இழைத்தவர் எவரோ!
அவட்கோ கொடுஞ்சிறை! அடஓ கொடுமை!
ஆவின் இயல்பும் அடங்கிய பண்பும்
மேவிய மெல்லியற் கொடிக்கோ கொடுமை!
சொல்லும் செயலும் நல்லன புரிவோள்
கொல்லுந் தொழிலைக் குறிப்பளோ? கொடுமை!
செந்நெறிப் படரும் சேயிழை யிவட்கே
இந்நிலை வருமெனின் என்னே வுலகம்!
பெண்மைப் பண்பிற் கிலக்கணம் இவளே
உண்மைக் கழிவினை உலகந் தந்ததோ!
இரவும் பகலும் இனியநற் பணியே

---

புல்வாய் - மான்.

புரியும் இவட்கோ புன்மொழி? கொடுமை!
வழுவாத் துறவும் வாய்மையுந் தூய்மையும்
தொழிலாக் கொண்டவள் துயருறல் நன்றோ!
கலைபுரி யிவளோ கொலைபுரி செயலினள்?
இலைமதி அவர்க்கென இயம்புதல் சாலும்!
பலர்பலர் கூடிப் பண்பினர் இன்னன
சொலுமொழி வாயினர் சோர்ந்து நின்றனர்;

**இரவின் ஆட்சி**

கனவிலும் தீமை கருதா நல்லவட்
கினைதுயர் இவ்வணம் ஏற்படல் காணா
எரிகதிர்ச் செல்வன் ஒளிமுகங் குன்றி
வருந்திக் குடதிசை மறைந்தன னாகச்
சுருள்படு பழுதை விரிபட அரவென
மருள்படச் செய்யும் மாலைவந் துற்றது;
கதிர்மதி காணாக் காரிரு ளாட்சி
எதிர்மறைப் பொருளாய் எங்கும் படர்ந்தது;
'வந்தநம் ஆட்சியை வாழ்த்துவம் வாரீர்!
இந்தநல் லாட்சியை எதிர்ப்பவர் ஈங்கிலை
எதிர்ப்போர்க் காணின் ஒழிப்போம் வாரீர்!
மதிப்போம் மதிப்போம் மயங்கிரு ளாட்சி!
இருளின் ஆட்சி என்றும் வாழ்'கென
ஆந்தையும் கூகையும் அலறின! அலறின!

**சிறையினுட் பூங்கொடி**

காரிரு ளாட்சியிற் கட்டுணும் மாந்தர்
கூரிய நெடுவேல் கொளுவிய காவலர்
இருநிலம் மருவிய இருதிணை எனப்படும்
பொருள்கள் யாவும் புவிமிசைச் சோர்ந்தன;
நெஞ்சினை வருத்தும் நெடுந்துயர் ஒன்றும்,

துஞ்சுத லொழிந்த துணைவிழி யிரண்டும்,
வஞ்சியின் மனத்து வளர்தமிழ் மூன்றும்,
சூழ்மதிற் சிறையினுட் சோரா திருந்தன;
தாழ்குழல் ஆங்குத் தனியிருந் தனளே;

**கதிரவன் தோற்றம்**

கொடுங்கோ லாட்சி நெடும்பகல் நில்லாது;
மடம்படு மாந்தர் மதியொளி பெறுங்கால்
படும்படும் அந்தக் கெடும்பரின் ஆட்சி;
உயிர்வரின் உக்குறள் ஓடுதல் போலக்
கதிர்வர வறிந்து காரிருள் ஓடிப்
பதுங்கி மறைந்தது, பகலவன் வளர்ந்தான்;

**அறமன்றத்தில் பூங்கொடி**

மறமிகு காவலர் வயங்கிழை தன்னை
அறங்கூ றவையத்து நிறுத்தின ராகத்
திறம்பா வுரையினர் செவ்விய மனத்தினர்
கோல்போல் ஒருபாற் கோடா நடுவர்
பால்போல் முகத்துப் பாவையை நோக்கிக்
குற்றஞ் சாற்றினர்; மற்றவள் மறுத்துச்
'செற்றேன் அல்லேன் செந்தமிழ் ஆணை;
உற்றஇக் கொலையில் ஒருதொடர் பில்லேன்;
அற்றைப் பொழுதில் அவணிலேன் ஆதலின்
ஒன்றும் அறிகிலேன்; உண்மையிஃ' தென்றனள்;
சிறைசெய் காவலர் சிற்சில வினவினர்;
மறைசெய் தறியா மங்கையுஞ் செப்பினள்;

**கிழார் சான்று கூறல்**

அவ்வுழை வந்துறும் அரும்பெறற் செல்வர்
கவ்விய துயரினர் கலங்கிய விழியினர்

உயிர் - உயிரெழுத்து, உக்குறள் - குற்றியலுகரம், கோல் - தராசு.

பெய்வளை விடுதலை பேணிய நிலக்கிழார்
அவையம் நோக்கி 'ஆயிழை இவள்தான்
நவையறு செயலினள் நன்மனத் தாட்டி
கோதை இவட்கும் கோமகன் கொலைக்கும்
யாதும் தொடர்பிலை யான்நன் கறிவேன்;
கொலைநிகழ் பொழுதில் இலைஅவள் அவ்விடை
என்மனை யகத்துள் இசையமு தளித்துப்
பின்னிர விற்றான் பேதை மீண்டனள்'
என்னலும், நடுவர் எடுத்துரை கூறினர்;

**நடுவர் தீர்ப்பு**

'மாமனை யகத்து மங்கை இசைத்ததை
ஆமெனக் கொள்ளுதும்; ஆங்கவள் மீண்டபின்
கோமகன் கொலையுணல் கூடும் அன்றோ?
மீளுமுன் நிகழ்ந்ததை மெய்ப்பிக்க ஒன்றிலை;
மூளும் பகையும் முனிவும் அவன்பாற்
கொண்டவள் இவளெனக் குறிப்புகள் ஈண்டுள;
சண்டிலி என்னுந் தையலுங் காண்கிலள்
ஆதலின் இருவரும் அப்பெருங் கோமகன்
சாதலைக் குறித்தனர் என்பதே சாலும்;
அன்றெனின்
இருவருள் ஒருவர் மற்றவர் செயலுக்
குறுதுணை என்பதே உறுதி யாகும்;
ஒறுத்தற் குரியர் இவளும் அவளும்
சிறையகம் இம்மகள் செல்க; அம்மகள்
மறைபுலம் நாடிச் சிறைசெயல் வேண்டும்';

**பூங்கொடி மனத்துயர்**

தீர்ப்புரை பெற்றவள் சிறையகம் புகுவோள்,
யார்க்கொரு தீங்கும் இழைத்தே னல்லேன்,
என்மொழி காக்க ஏற்றிடும் பணியில்

புன்மையும் இன்னலும் புகுமேற் பொறுப்பேன்,
இறப்பே எனினும் சிரிப்புடன் ஏற்பேன்,
மறப்பரும் வன்பழி வாய்த்ததே! கெட்டேன்!
எனப்பல நினைந்தே இரங்கினள் பூங்கொடி

**துருவன் துணிவு**

அறங்கூ றவையம் அளித்த தீர்ப்பும்
அறந்தேர் அரிவை அருஞ்சிறை பெற்றதும்
செய்தி இதழ்கள் தெள்ளிதின் உரைக்க
நையும் உளத்தினள் சண்டிலி கண்டு
கொழுநற் குரைத்தனள்; கொலைசெய் துருவன்
‘வழுவிலா அவட்கோ வந்ததிப் பழி’யெனக்
கழிபடர் உறுவோன், ‘கரந்துறை வாழ்வு
நாமினி மேற்கொளல் நன்றிலை, அதன்றலை
தூமொழி யுறுபழி துடைப்பது நம்கடன்,
காவலர் நம்மைக் காணா முன்னர்
மேவுதும் அவையகம் விளம்புதும் வாய்மை’
என்பன கூறி இன்றுணை தன்னொடும்
என்படும் படுக! எனுந்துணி வுடனே
முற்பட அவையக முதல்வர்ச் சார்ந்து,

**துருவன் நிகழ்ந்தன கூறல்**

விளிவுறுங் கோமகன் நளியிருட் புக்கதூஉம்;
ஒளிவுடன் செலலால் ஐயம் உற்றதூஉம்,
அறியா வகையில் அவற்பின் தொடர்ந்ததூஉம்,
உரியவள் சண்டிலி உறைவிடம் அவன்புக்
கழல்மிகு காம மொழிபல புகன்றதூஉம்,
தழலெனக் கொதித்துத் தான்சினங் கொண்டதூஉம்,
கைதவன் அவனெனக் கருதித் தொலைத்ததூஉம்,
மெய்ம்மை தெரிந்து விரைந்தவண் பெயர்ந்ததூஉம்,

கொலைநிகழ் பொழுதத்துக் குலக்கொடி இலாததூஉம்
கலைமகள் அவட்கொரு களங்கம் இலாததூஉம்,
அஞ்சா தனைத்தும் எஞ்சா துரைத்து
நெஞ்சால் மகிழ்வோன் நேரிழை பூங்கொடி
விடுதலை வேட்டனன்; வியன்பே ரவையத்து
நடுநிலை பிறழா நடுவர் மகிழ்ந்து,

**பூங்கொடி விடுதலை**

'முடிநிலை அறியா முதிர்ந்தெழும் உணர்ச்சியிற்
படுகொலை புரியினும் பாவை யிவட்குக்
கெடுதலை விழையான் முடிவினைப் போற்றுவென்;
இடுபழி ஏற்றவள் விடுதலை அடைகுவள்'
என்னலுந் துணையொடும் இளையோன் களித்தனன்;
நென்னல் மூடிய நெடுஞ்சிறைக் கதவம்
இன்னே திறந்தது, மின்னே ரிடையாள்
பொன்னே அனையாள் பூங்கொடி மீண்டனள்;
நன்னர் வினையே நாடிப் புரிவோர்க்
கின்னல் வரினோர் இமைப்பினில் இரியும்
என்னும் உண்மை இசைத்தது போல
ஒலியிட் டாங்கண் ஓய்ந்ததக் கதவே.

நென்னல் - நேற்று, நன்னர் - நல்ல, இரியும் - நீங்கும்.

# 25. கிழார்திறம் அறிந்த காதை

### நிலக்கிழார் பூங்கொடியை வேண்டல்

பழியும் சிறையும் நீங்கிய பாவையை
வழியெதிர் நின்று வரவுரை கூறிக்
கழிபே ருவகைக் களிப்பொடு நிலக்கிழார்
தம்முயர் மாமனைக் கம்மகள் தன்னையும்
உடன்கொண் டேகி 'என்றுமென் னகத்தில்
இடனுண் டாதலின் ஈண்டுநீ உறைக!'
என்னுங் கனிமொழிக் கியைந்தன ளாகி
மின்னும் பிறைநிகர் நன்னுதல் அரிவை,

### பூங்கொடி நன்றி மொழி

'ஐயநின் னன்புக்கு யாதுகைம் மாறு
செய்வதென் றறியேன், திகைப்புறு கின்றேன்;
முனம்நினை யறியேன் எனினும் உன்பால்
இனம்அறி யாவணம் எழுந்ததோ ரன்பு
தழைத்ததென் னுளத்தே; தந்தையின் உறவை
விளைத்ததித் தொடர்பு வீய்ந்தஎன் றந்தை
இல்லாக் குறையை இல்லா தொழித்தனை;
நில்லாப் பழியால் நெடுஞ்சிறை புக்குப்
பொல்லாத் துயராற் பொன்றுங் காலை
நடுக்குற்ற நின்மனம் நன்குயான் அறிகுவல்;
இடுக்கண் களைய எடுத்தநன் முயற்சியும்
தெற்றென உணர்குவென்; சிறுமகள் எனக்குநீ

வீய்ந்த - இறந்த பொன்றுங்காலை - அழியும்போது, தெற்றென - தெளிவாக.

உற்றுழி உதவிய ஒருபெருங் கருணைக்கு
நாளும் நாளும் நன்றியறி வுடையேன்;
வாழும் பொழுதெலாம் வணங்குத லன்றி
ஏழை யாதுநான் இயம்புவல் ஐய!'

### கிழார் முகமன் வேண்டா எனல்

எனுமொழி கேட்ட கனிமொழிக் கிழவர்
'நனிமிக நல்லாய்! நானிலத் தின்றுதான்
பெற்றோர் தமக்குப் பெறுமகள் நன்றி
சொற்றது கேட்டேன்; மற்றவர் போல
மதித்தனை கொல்லோ? உற்றவர் என்று
குறித்தனை யாயின் விடுத்திடு முகமன்'
எனுமொழி கூறி இனிதிருந் தனரால்;

### அருண்மொழி அடிகளொடு வருதல்

குலக்கொடி கோமகன் கொலைகுறித் தாளெனச்
சிறைப்பட லாயினள் எனுங்கொடுஞ் செய்தி
நாளிதழ் காட்ட நடுநடுக் குற்று
வாளிற் போழ்ந்தென மனத்துய ரெய்திய
அன்னை யாகிய அருண்மொழி ஆங்கண்
'என்னிளங் கொடிக்கோ இப்பழி நேர்ந்தது!
வன்பழி சூட்டிய வன்கணர் எவரோ?
தாய்மொழி காக்கும் வாய்மை மாந்தர்
வீய்துயர் எய்தி வீண்பழிக் காட்படல்
விரிநீர் உலகத்து விதியோ' என்று
சொரிநீர் விழியர் துயருறும் மொழியர்
பெரியோ ராகிய பீடுயர் அடிகள்
தாந்துணை யாகத் தடமனை சூழ்தரு
வேங்கை நகரினை விரைந்தெய் தினளே;

---

முகமன் - மதிப்புச்சொற்கள், போழ்ந்து - பிளந்து, வன்கணர் - கொடியவர்,

### விடுதலைப் பேறறிந்து மகிழ்தல்

வீங்கிய துன்பினர் ஆங்கண் வினவிப்
பூங்கொடி பழியிலள் பூட்டிய சிறையகம்
திறந்தது, விடுதலை பிறந்தது, பண்பாற்
சிறந்தவர் நிலக்கிழார் பெருந்துணை யாக
நன்னுதல் அவர்மனை நண்ணினள் எனச்சிலர்
பன்னுதல் கேட்டுப் பாவையும் அடிகளும்
புயலிற் சிக்கிய மரக்கலம் ஊர்வோர்
வியனலை உந்த விடுகரை சேர்ந்தார்
உள்ளம் போலத் துள்ளிய உவகை
வெள்ளம் பொங்க விம்மும் நெஞ்சினர்
பெருநிலக் கிழவர் உறுமனை குறுகி
மறுவறு பூங்கொடி மதிமுகங் கண்டனர்;

### அருண்மொழி வாழ்த்து

கலங்கிய கண்ணினள் காலடி வீழ
இளங்கொடி உடலை இருகையால் எடுத்தனள்;
உச்சி மோந்தனள் மெச்சினள் வாழ்த்தினள்
வைத்தகண் வாங்கிலள் 'வயிற்றினில் பால்தனை
வார்த்தனை மகளே வார்த்தனை' எனுமொழி
சேர்த்தனள் அருண்மொழி; செம்பொருள் அடிகள்

### அடிகளார் வாழ்த்து

'பழியெனுங் கருமுகில் பாவையாந் திங்களை
வழியினில் மறைத்தது, கழிபடர் இருள்எம்
உளத்தினிற் பரந்து வளைத்த தாயினும்
கணத்தினில் முகிலிருள் காற்றிற் பறந்தன;
வாழிய மகளே! வாழிய மகளே!
வளர்தமிழ்ப் பணிக்கு வருமிடர் பலவாம்,

---

துன்பினர் - துன்பத்தினர், நன்னுதல் - பூங்கொடி, பன்னுதல் - சொல்லுதல், பாவை - அருண்மொழி.

தளர்மனங் கொள்ளேல், தாயே நம்முயிர்
இழப்பினும் இழப்போம் இனியநந் தாய்மொழி
வளர்ப்பதே நங்கடன் வாழிய மகளே!
உயிரும் உடலும் ஒழிவன வாயினும்
செயிரறு நம்பணி செந்தமிழ்க் காகின்
உயரிய புகழொடு ஒண்டமிழ் வாழும்,
வாழிய வாழிய வண்டமிழ்த் தொண்டே!'
எனப்பல கூறி இயன்மொழி வாழ்த்து
மனத்தொடு வாழ்த்தினர் மலையுறை யடிகள்;

**நிலக்கிழார்க்கு அறிமுகஞ் செய்தல்**

அவ்வுழை நிலக்கிழார் அணுகின ராகச்
செவ்விய பூங்கொடி சென்னி தாழ்த்தி,
'ஈங்கிவள் என்னை ஈன்றவள் ஆவள்
பாங்குயர் அருண்மொழிப் பெயரினள் ஐய!
தாங்கிய துயரொடு தாயிவள் இருந்துழி
நீங்கிட அத்துயர் நின்றருள் புரிந்தவர்,
குறளகம் என்னும் அருளகங் கண்டவர்,
குறள்நெறி திறம்பாக் கொள்கையர் இவராம்,
கலைபல பரவ வழிபல கண்டவர்
மலையுறை யடிகள் எனும்பெயர் மருவும்
இவரே எளியளை இத்துறைப் படுத்தினர்,
கவலை தவிர்ந்திட நல்வழி காட்டினர்,
தாயின் மனமும் தந்தையின் நிலையும்
ஏயும் பெருமகன் எம்முயர் தலைவரென்'
றிருவர் தம்மையும் அறிமுகஞ் செய்தனள்;

சென்னி - தலை,

### கிழாரை அறிமுகப் படுத்துதல்

'வருக! வரு'கென வரவுரை கூறி
இருகை கூப்பி இன்முகங் காட்டி
'அமர்க அமர்'கென அவ்வுழை அமர்த்தித்
தமரென மகிழத் தாமும் இருந்தனர்;
இருந்திடும் கிழவரை இருவர்க்கும் விளக்கினள்;
'பெருந்தனம் உடையவர்,பேணிய பண்பினர்,
விருந்தெதிர் கொள்ளும் விழைவினர், என்பால்
உழுவ லன்பும் உறவென எண்ணிப்
பழகும் பண்பும் கெழுமும் பெரியார்,
பொழுதெலாம் கலையிற் பொருந்தும் நெஞ்சினர்,
யாங்கணும் காண்கிலா ஓங்குயர் நூலகம்
ஈங்கொன் றமைத்திட யான்விழைந் தியம்ப,
மாபெரும் மாளிகை மனமுவந் தீந்தனர்,
சிறையகம் புகுந்துயான் துயருறுங் காலை
உறுதுணை யாகி உதவிய நட்பினர்,
விடுதலை பெற்று வெளிப்படூஉம் என்னை
உடனழைத் திம்மனை உறைக என்றனர்,
முனம்மகள் இழந்த முதியவ ராதலின்
எனைமக ளென்றே எண்ணிடும் அருளினர்,
பெருநிலக் கிழாரெனும் பெயரினர் இவ'ரென
அனைத்தும் எடுத்துரைத் தாயிழை நின்றுழித்

### நிலக்கிழார் வியப்பும் திகைப்பும்

திகைத்தவ ணிருக்கும் தெரிவை அருண்மொழி
முகத்தினை முகத்தினை முதியவர் நோக்கி
வியப்பும் திகைப்பும் விளங்கா ஐயமும்
மனத்தினுள் தோன்ற மயங்கி யிருந்தனர்;

---

தமர் - தம்முடையவர், உழுவலன்பு - ஒப்பற்ற அன்பு.

## அடிகளார் வினவுதல்

இமையா நாட்டத் திருந்திடும் பெரியரை
அமைந்தநன் மனத்தர் அடிகளும் நோக்கி
'அருண்மொழி யாகிய அரிவையின் முகத்தை
மருளுறப் பார்த்து மயங்கிய தென்னைகொல்?
அகத்துப் பொருதெழும் அளப்பருங் குழப்பம்
முகத்தினில் கண்டேன் முற்றவும் உணர
எமக்கவை கூற இயலுமேல் இயம்புக!
மனக்குறை மாறும் மற்றவர்க் குரைப்பின்
இனத்தவ ரென்றே எம்மையும் எண்ணுக!'
என்றுளங் கனிய இசைத்தன ராகக்

## கலக்கத்திற்குக் காரணம்

கன்றிய மனத்துக் கலையறி கிழவர்
'நன்றறி வுடைய நாவல ரேறே!
இன்றுநீர் இருவரும் எழுந்திவண் வரலால்
தொன்று பழகிய தொடர்பும் உறவும்
உடையேன் போல உள்ளங் களித்தேன்;
காரண மில்லாக் கலக்கமும் முளைத்தது;
யாரென அறியா அருண்மொழி யின்முகம்
பாரினில் நிகரிலை எனும்படி வாழ்ந்து
கழிந்தஎன் நாளிற் படர்ந்த நினைவெலாம்
சுழிந்து சுழிந்து தோன்றிடச் செய்தது;
நங்கையின் குளிர்முகம் நாளெலாம் பழகிய
துங்க முகம்போல் தோன்றுதல் கண்டேன்
பூங்கொடி முகமோ பூமியில் நாளும்
ஏங்கிடச் செய்தஎன் இளமகள் முகம்போல்
தேங்கெழில் பொங்கித் திகழ்வதுங் கண்டேன்;
அடங்காக் களிப்பும் அறியாத் திகைப்பும்
விளங்காத் துயரும் உளந்தனிற் கொண்டேன்;'

---

தொன்று - பழமை,

### நிழற்படங்கண்டு நிற்றல்

என்றிவை கூறி 'என்னுடன் வருக'
என்றவர் தனியறை ஒன்றனைத் திறந்து,
கிழாரும் அவர்மனைக் கிழத்தியும் இணைந்த
வண்ணம் பொலியும் கண்கவர் எழிற்படம்
முன்சுவர் தன்னிற் பொலிவது காட்டக்
கண்டஅம் மூவரும் கண்விழித் தயிர்த்தனர்
விண்டிட அறியார் வியர்வியர்த் திருந்தனர்;
மலைத்து நின்றிடும் மலையுறை யடிகள்,
கலைத்திறங் காட்டும் காரிகை படமும்,
நிலைத்துச் சிலையாய் நிற்பவள் முகமும்,
வேற்றுமை யின்றித் தோற்றுதல் கண்டு
கோற்றொடி முகத்தின் குறிப்பை நோக்கினர்;
அசையாப் பூங்கொடி, அன்னையின் முகமும்
நசைசேர் படத்தில் நங்கையின் முகமும்
பெருநிலக் கிழாரின் பேசா முகமும்
திரும்பத் திரும்பத் திகைத்து நோக்கினள்;

### அருண்மொழி வினாதல்

அருண்மொழி விழியும் அருகினில் நிற்கும்
பெருநிலம் உரியவர் இருவிழி யும்புனல்
பெருகி வழிந்தது; பெரியரை நோக்கிப்
'பெருமனம் உடையீர்! கிழத்தியின் பெயரை
அருளுதி ராயின் ஆறுதல் பெறுவேன்'
இவ்வணம் அருண்மொழி இரந்துரை கூறச்

---

மனைக்கிழத்தி - மனைவி, விண்டிட - கூற, மலைத்து - திகைத்து, தோற்றுதல் - தோன்றுதல்
கோற்றொடி - அருண்மொழி, நசை - விருப்பம்,

## நிலக்கிழார் மறுமொழி

'செவ்விதின் அனைத்துஞ் செப்புவல் கேண்மோ!
கொவ்வை யிதழினள், கூரிய விழியினள்,
கவ்வும் வகையாற் கனியிசைத் தொழிலாள்,
தென்னகம் பிறந்தவள், என்னகம் நிறைந்தவள்,
கன்னலின் அனையாள், காதல் மனையாள்
என்னிளம் பருவத்து முன்னம் ஒருநாள்
வாணிக முறையாற் காழகம் செல்வுழித்
தோணியில் அவளுருத் துணைவிழி விருந்தாக்
காணலும் என்னுளங் கவர்ந்தனள்; மறுநாள்
காழக நகரின் கலைதெரி அரங்கில்
ஏழிசை வல்லவள் இசையினைக் கேட்டேன்
காதலும் கலையும் கனிந்திடத் தனியிடம்
குறித்துப் பலநாட் கூடிப் பழகிஅவ்
வொருத்தியை மணந்தென் உயிரின் மேலா
மதித்து வாழ்ந்தேன்; மணந்தவள் காதற்
பரிசில் எனஒரு பச்சிளங் குழவி
தருகையில் என்னைத் தணியாத் துயரில்
உருகிடச் செய்துயிர் ஒடுங்கினள்; யானும்
மறுமணம் புரியா மனத்தினேன் ஈன்ற
சிறுமியின் முகத்துச் சிரிப்பினைக் கண்டு
துயரம் மறந்து துணைவிழி யிமைபோல்
அயர்வொன் றின்றி அவளைப் புரந்தேன்;
கட்டிளம் பருவங் கண்டனள் அவளும்
விட்டுப் பிரிந்தனள்; வேதனைக் கடலுள்
மூழ்கிக் கிடந்தேன்; முதிராப் பூங்கொடி
ஆழ்துயர் துடைத்தனள், அவளென் மகளென
உறுதி எடுத்தேன் உறுதுயர் விடுத்தேன்,
இறுதி விரைவினில் எய்துவ துறுதி,

---

கனிஇசை - கனிந்த இசை, அனையாள் - போன்றவள், காழகம் - பர்மா, அயர்வு - வருத்தம்,
புரந்தேன் - காத்தேன், முதிரா - முற்றாத, இறுதி - இறப்பு,

பெறுநிதி அனைத்துமிப் பேதையின் பணிக்கே
தருவதென் றெண்ணி அறுதியும் செய்தேன்;
காதல் மனையின் பெயர்சொல மறந்தேன்
ஏலங் குழலி' என்றவர் செப்புமுன்

### அருண்மொழி அரற்றுதல்

'ஆ'வென் றலறிய அருண்மொழி மீண்டும்
கூவி யழுதனள்; குறளகத் தலைவர்
அறவுரை கூறி ஆறுதல் தந்தனர்;
செறிதொடி அருண்மொழி செங்கை கூப்பிப்
'பொய்யிலை பொய்யிலை என்மகள் பூங்கொடி
ஐயநின் மகளே! ஐயநின் மகளே!
மெய்யிது மெய்யிது மேலோய்! நன்மகள்
சேரிடஞ் சேர்ந்தனள், சேல்விழி நின்மகள்'
என்பன கூறி இருவிழி பொழிந்தனள்;

### அடிகள் வினாதல்

முன்புள அடிகள் மென்மொழி விளித்துத்
'துன்புளங் கொண்டோ தூமொழி புலம்பினை?
அன்புளம் துயரினை ஆற்றுதல் அரிதே!'
என்பது கேட்ட இடருறும் அருண்மொழி

### முன்வரலாறு கூறுதல்

'புலம்பினே னல்லேன் நிகழ்ந்ததை எண்ணிக்
கலங்கினேன் பெரும! நலங்கிளர் பூங்கொடி
நிலங்கிழார் மகண்முறை நேரிதின் உரியள்,
மேலும் விளம்புவென் மேலவர் கிழத்தி
கோலம் மிகுந்தவள் ஏலங் குழலி
ஒருவயிறு தந்த உடன்பிறப் பாட்டி,

---

அறுதி - முடிவு, துன்புளம் - துன்ப உள்ளம், தூமொழி - அருண்மொழி,
மகண்முறை - மகள் உறவு, நேரிதின் - நேர்மையாக, உடன்பிறப்பாட்டி - உடன்பிறந்தவள்,

சிறுபரு வத்தே செந்தமி ழிசையில்
பெருகிய புலமையள் பேணும் புகழினள்
ஈழம் முதலா இசையமு தளிப்போள்
ஆழி கடந்து காழகம் சென்றனள்;
சென்றவள் இவரை ஒன்றிய மனத்து
மன்றல் புரிந்தனள், மணிநகர் மறந்தனள்;
காதலும் கலப்பும் கலந்தஇம் மணத்தைத்
தீதெனக் கடிகுவம் எனமனங் கொண்ட
தவ்வை யவளென் தாய்க்கொரு முடங்கல்
கவ்விய துயரொடு வரைந்தது தவிர
யாண்டுளாள் என்பது யாதொன் றறியேம்;
ஆண்டுபல வாயினும் அவள்நிலை சிறிதும்
அறிய கில்லேம், அரிவைநம் பூங்கொடி
தெரியச் செய்தனள் பெரியவர் மகளிவள்'
எனுமிவை யனைத்தும் இயம்பி நின்றனள்;

**உறவறிந்து மகிழ்தல்**

இனைதுயர் நீங்கிய இருநிலக் கிழவர்
'மகளே மகளே வாவென் மகளே!
ஏலங் குழலிக் கிளையாள் மகளே!
ஞாலம் பிழைக்க உழைக்கும் நங்காய்!
உரிமை மகளே! உள்ளந் தழைக்க
வருமென் மகளே வாவென் மகளே!'
இருகை நீட்டி இவ்வணம் மொழிந்தனர்;

**பூங்கொடி தொழுது மொழிதல்**

பொழிகண் ணீரினள் பூங்கொடி மகிழ்ந்து
தொழுதடி வீழ்ந்து 'விழுமிய அன்பால்

---

ஈழம் - இலங்கை, மன்றல் - திருமணம், கடிகுவம் - கண்டிப்போம், தவ்வை - தமக்கை, வரைந்தது - எழுதியது, இனைதுயர் - வருத்துயர், இளையாள் - தங்கை.

எனைமக ளெனநீர் ஏற்றனிர் ஐய!
முனம்நம துறவினைக் கனவிலும் அறியோம்;
இயல்பினில் அம்முறை யிருந்திடப் பெற்றோம்;
மயல்தரும் துன்பம் மடிந்தது நம்மிடை;
தந்தை யின்றித் தவிக்குமென் குறையும்
நுந்தம் மகளிலா வெந்துயர்க் கொடுமையும்
இன்றோ டொழிந்தன என்னுயிர்த் தந்தாய்'

### நிலக்கிழார் வாழ்த்துதல்

என்றாள் கைம்மலர் இறுகப் பற்றித்
தம்மிரு விழியொடு சார்த்திச் சார்த்தி
'இம்மையின் பயனை இன்றே நுகர்ந்தேன்
நம்மையொன் றாக்கிய நற்றமி ழிசையை
வாழ்க வாழ்கென வாழ்த்துவம் வாரீர்!
வாழ்க மகளே! வாழிய தமிழ்!' என
வாழ்த்திய நிலக்கிழார் வண்டமிழ்த் தொண்டராம்
மலையுறை யடிகள் மலர்முகம் நோக்கித்
தலைதனைத் தாழ்த்தி தகவுடன் வணங்கினர்;

### அடிகளார் வாயுறை வாழ்த்து

'பெரியீர் வாழ்க! பேதைநும் மகளென
உரியீர் வாழ்க! உறவும் ஓங்குக!
புதியநும் உறவு பொதுப்பணி புரியும்
சிறியவட் குறுதுணை செய்தல் வேண்டும்;
இளங்கொடி! நினக்கொன் றியம்புதல் கடனாம்,
வளங்கொளும் இவரொடு வாய்த்தஇத் தொடர்பால்
மகிழ்ச்சியில் மைந்துறும் மங்கைநின் பணியில்
இகழ்ச்சி கொள்ளா திலங்குதல் வேண்டும்;
நம்மனோர் தந்தையும் தாயும் தமிழே,

---

வெந்துயர் - கொடுந்துயர், மலர்முகம் - மலர்ந்தமுகம்.

அம்மொழிப் பணியே ஆற்றுதல் வேண்டும்
செம்மனக் கொடியே சீருடன் வாழிய!'
எனவாங்கு
வாயுறை வாழ்த்து வழங்கினர் அடிகள்;

### இருவரும் உறுதி கூறுதல்

தந்தையும் மகளும் தாழ்ந்து பணிந்து
'முந்தை முறையில் முரண்பா டில்லை,
மொழிப்பணி புரிய முட்டொன் றில்லை
விழிப்பொடு பணியில் நடப்பது திண்ணம்,
உளத்தெழும் உறுதி இசைத்தனம்' என்றனர்;

### அனைவரும் மணிநகர் மீளுதல்

அடிகளும் அருண்மொழி அன்னையும் மகிழ்ந்து
கொடியிடை மகளை யிருவிழி குளிர
நோக்கி வாழ்த்துரை நுவன்றனர்; அன்பு
தேக்கிய நிலக்கிழார் சின்னாள் உறைந்திட
வேண்டின ராக வியநகர்த் தங்கிக்
காண்பன கண்டு களிப்புடன் நால்வரும்
சேண்படு மணிநகர் சேர்தல் வேண்டிப்
பகலிற் போந்தனர் பயணங் குறித்தே.

# 26. யாழ்நூல் பெற்ற காதை

### வைகறைப் பொழுது

புலர்பொழு தத்து மலர்முகம் தோய்ந்து
வருமிள மென்கால் வரவுரை கூறக்
குறுமுகை தாங்கும் கொடியினம் பலவுடன்
சிறுநகை காட்டிச் செடியசைந் தாடத்
தளிர்பசும் புற்றலை தண்சிதர் உறைப்ப
நளிமலர் தோறும் நடம்புரி சுரும்பினம்
பலபல தொக்குப் பண்ணொலி மிழற்றப்
பலர்தொழ வரூஉம் பரிதியஞ் செல்வன்
விரிகதிர் நீட்டி விண்வெளி விளக்கச்

### கோட்டை நகரில் தங்குதல்

செறிதொடி அருண்மொழி சுரிகுழற் பூங்கொடி
தொடர்ந்துடன் பின்வரத் தொழுதகும் அடிகளும்
படர்ந்தெழும் அன்பால் பழுநிய கிழாஅரும்
கோட்டை நகரினைக் கூடின ராகிக்
கோட்டமில் மனத்தர் கோனூர் வள்ளல்
வீட்டினில் விருந்தாய் வேட்டுடன் புக்கனர்;

### கோனூர் வள்ளல் வரவேற்றல்

புக்கவர் தம்மைப் பொலிமுகங் காட்டித்
தக்க இன்னுரை தந்துளம் மலர்ந்து
மிக்க மகிழ்வால் மேம்படு வள்ளல்
வருக வருகென வரவுரை கூறி
இருகை கூப்பி இருக்கை யளித்தனர்;

---

மென்கால் - தென்றல், குறுமுகை - சிறுமொட்டு, சிதர் - துளிகள், உறைப்ப - சிதற, சுரும்பினம் - வண்டுக்கூட்டம், தொக்கு - கூடி, மிழற்ற - இசைக்க, சுரிகுழல் - சுருள் கூந்தல், கிழாஅரும் - பெருநிலக்கிழாரும், கோட்டமில் - வஞ்சனை இல்லாத, வேட்டு - விரும்பி.

**கலந்துரையாடல்**

பெருநிலக் கிழவரின் பெட்புறும் நண்பர்
இருநிதிக் கோமான் ஈகை மனத்தினர்
புலவர்க் குதவும் புரவலர், கரவிலர்
குலனருள் சிறந்த கோனூர் வள்ளல்
நாட்படு நண்பரை நலமெலாம் வினவி,
மீப்படும் அடிகள் வியனுல குய்ய
ஏற்றுள பணியும், இளங்கொடி யாகிய
பூங்கொடி மங்கை பூண்டுள பணியும்
தெள்ளிதின் நிலக்கிழார் தெரிப்பக் கேட்டுக்
கள்ளவிழ் கோதையின் உள்ளத் துறுதியை
நயந்தும் வியந்தும் நன்கனம் புகழ்ந்தும்
பயன்மிகு தொண்டினைப் பலபட வாழ்த்தி
வருவிருந் தோம்பி வளமனை யிருந்துழி.

**மயில்வாகனர் வருகை**

ஒருமனப் பாடும் ஓம்பிய நெறியும்
விரிமொழிப் புலமும் ஒருங்குடன் பெற்றார்,
உரனெனுந் தோட்டியால் ஓரைந் தடக்கி
இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்,
குணமெனுங் குன்றின் கொடுமுடி நின்று
செயற்கருஞ் செயல்பல செய்திடும் பெரியார்,
கற்றவர் குழுமும் கடல்சூழ் ஈழம்
பெற்றவர், மொழிபல கற்றவர், நற்றவர்,
எழில்மயில் வாகனர் எனும்பெயர் பெற்றவர்
பொழிலிடைத் திகழும் வளமனை உற்றனர்;

---

புரவலர் - காப்பாளர், கரவிலர் - வஞ்சனை இல்லாதவர், நாட்படு - பல நாள் பழகிய, மீப்படும் - புகழ்மிகும், தெள்ளிதின் - தெளிவாக, ஓம்பிய - காத்த, உரன் - அறிவு, தோட்டி - அங்குசம், ஓரைந்து - ஐம்புலன்கள், இருமை - நன்மை தீமை, அறம்பூண்டார் - துறவு மேற்கொண்டார், கொடுமுடி - உச்சி. நற்றவர் - நல்லதவத்தினர்,

## அறிமுகஞ் செய்தல்

வளமனை வருமயில் வாகனர்க் காணலும்
உளமுறு மகிழ்வால் உடனெழுந் தோடி
நல்வர வேற்ற நலங்கிளர் வள்ளல்
அவணிருந் தோர்தமை அறிமுகஞ் செய்தனர்;
அவர்தமக் கிவரை அறிமுகஞ் செய்தனர்;
தாயும் அடிகளும் தையல்பூங் கொடியும்
தோயும் மகிழ்வால் தொழுதனர் ஆங்கண்;

## மயில்வாகனர் வாழ்த்துரை

'பூங்கொடி ஏற்றுள பொதுப்பணி நாட்டில்
ஓங்குயர் நலந்தரும் உயர்வுறும் நம்மொழி'
எனமயில் வாகனர் ஏற்றம் உரைத்து
மனமுறும் உணர்வால் வாழ்த்துரை கூறி
'இளங்கொடி யாகிய நலங்கிளர் பூங்கொடி!
விளங்குநின் பணிக்கு வியன்துணை யாக
யாழ்நூல் என்னும் இந்நூல் பெறுக!

## யாழ்நூலின் சிறப்பு

ஏழிரண் டாண்டுகள் இடர்பல துய்த்தும்
ஏழிசை யாழின் இயற்றிறம் யாவும்
நுண்ணிதின் ஆய்ந்து நுவல்வதிப் பெருநூல்;
நண்ணுமிம் முயற்சியில் நான்படு துயரம்
எண்ணினும் உடலுளம் எல்லாம் நடுக்குறூஉம்
ஆயிரம் ஆண்டுகள் அறியா வகையில்
வீயுறும் நிலையில் வீழ்ந்து கிடந்த
நற்றமிழ் யாழும் சொற்றமிழ் இசையும்
தெற்றென விளக்குந் திருவிளக் கிந்நூல்
செந்தமிழ்க் கிஃதோர் சீர்சால் பொற்பணி
இந்தநன் னினைவால் இடரெலாம் மறந்தேன்;

அடிகள் - மலையுறை அடிகள், ஏற்றம் - பெருமை, வியன் - பெரிய, நடுக்குறூஉம் - நடுங்கும், வீயுறும் - அழியும் பொற்பணி - அழகிய பணி.

### கோனூர் வள்ளலின் பேருதவி

முற்படும் இப்பணி முற்றுறா முன்னர்
எற்கொரு கொடுநோய் ஈண்டுவந் துற்றது;
நடத்தற் கியலா நலிவினுள் வீழ்ந்து
படுத்துழன் றேனைப் பரிவுடன் அணுகித்
தொடுத்திடும் இந்நூல் முடித்திட வேண்டிக்
குலவிய நற்புகழ்க் கோனூர் வள்ளல்
மலைநிகர் செல்வர் மனவளச் செம்மல்
இடனறிந் தாங்கண் உடனிருந் தருளிக்
கடனுணர்ந் தாற்றிய கைம்மா றறியாப்
பெரும்பே ருதவியின் பெற்றியை விளக்கக்
கரும்பின் மொழியாய்! கண்டிலேன் ஒருசொல்;'

### பூங்கொடி யாழ்நூல் பெற்று மகிழ்தல்

எனமொழிந் தவட்கொரு யாழ்நூல் ஈந்தனர்;
மனமிக மகிழ்ந்து மலர்க்கை ஏந்தித்
தொழுது வாங்கினள் துடியிடைப் பூங்கொடி
'முழுதுணர் பெரும! முத்தமிழ்த் தலைவ!
பழுதறும் இந்நூல் படைத்தநும் ஆற்றல்
தொழுதக வல்லது சொலுமுறை தெரியேன்;
தமிழிசைக் கிந்நூல் தற்காப் பாகும்;
இமிழ்கடல் உலகில் இசைக்கோர் அணிகலன்;
அமிழ்தம் பெற்றே னாகினென் வாழிய!

### வள்ளலைப் புகழ்ந்துரைத்தல்

கொடையாற் சிறந்த கோனூர் வள்ளல்
நடையாற் சிறந்த நம்மயில் வாகனர்க்
குற்றுழி உதவிய உயர்பெருந் தகைமையாற்

---

முற்றுறா - முடிவுறாத, எற்கு - எனக்கு, உழன்றேனை - வருந்திய என்னை, கடன் - கடமை, பெற்றி - தன்மை, துடியிடை - உடுக்கை போன்ற இடை. இமிழ்கடல் - ஒலிக்கும் கடல், நடை - ஒழுக்கம்,

கற்றவர் உலகம் கடப்பா டுடைத்து
நற்றவ முடையேன் யானும்' என்றனள்;

### புகழ்ந்துரைக்கு நாணுதல்

இவ்வுரை செவிமடுத் திருந்திடும் வள்ளல்
செவ்விய மனத்தீர்! சிறியஎன் பணியால்
எற்புகழ்ந் தேத்தல் இருவீர் தமக்கும்
பொற்புடைத் தன்று; புகழுரை தவிர்க!
செந்தமி ழன்னையின் சீர்சால் தவமகற்
கிந்தநற் கடன்செய இயைந்ததென் பேறாம்;
யார்க்கது வாய்க்கும்? எற்கது வாய்த்தது!
பார்க்குள் என்போற் பயன்பெற் றவரார்?
பெறலரும் பேறு பெற்றேன் போலப்
பெருமகிழ் வுறுமெனைப் பேணிநீர் புகழ்ந்தீர்!'

### இருவர்க்கும் கடன்

எனஇவை இசைக்க, இளமென் பூங்கொடி
'நுங்கடன் அஃதெனின் எங்கடன் இஃதாம்'
எனுமிம் மாற்றம் இறுத்தன ளாக
அனைவரும் களிப்பால் ஆர்த்து மகிழ்ந்தனர்;

### யாழ்நூல் விளக்க வேண்டுதல்

பனிமலர்க் கூந்தல் பைந்தொடி அரிவை
முனிவர் தம்பால் மொழிந்திவை வேண்டினள்
'வாழ்நாள் அனைத்தும் வளரறங் காப்போய்!
யாழ்நூல் முழுதும் நவையற உணரும்
ஆற்றல் உடையேன் அல்லேன் ஆதலின்
போற்றி அதன்றிறம் புகலுதி பெரும!'
என்பன கூறி இருந்தனள் ஆங்கண்;

---

பார்க்குள் - உலகில், இறுத்தனள் - சொல்லினள்.

**யாழ்நூல் விளக்குதல்**

அன்புளங் கொண்டார் அவள்மொழிக் கிசைந்து
'மன்பதைக் குணர்த்துதல் என்பணி யாகும்
மறைந்தஇக் கருவியின் மாண்புகள் யாவும்
திறந்தெரிந் துணர்வையேல் தெரிவைநின் பணிக்கே
அரண்செயும் ஆதலின் அறைகுவென்' எனமொழிந்

**யாழின் வகை யுணர்த்தல்**

தாயிரம் நரம்பான் அமைந்தநற் பேரியாழ்
தோயுறும் அமுதிசை பாய்வுறும் சீறியாழ்
மீன்போல் வடிவம் மேவிய மகரயாழ்
தேன்போல் நரம்பிசை தெரிக்கும் சகோடயாழ்
முளரியாழ் வில்யாழ் முதலன விளக்கிப்
பழகிய வீணையின் பான்மையும் உரைத்துப்

**யாழுறுப் புணர்த்தல்**

பண்ணுறும் யாழின் பல்வகை உறுப்பும்
முன்னைய அமைப்பும் முற்றுற உணர்த்தி
இலக்கியச் சான்றுகள் எடுத்தெடுத் திசைத்துக்
குலக்கொடி மாதவி கோவலன் அருகில்
கடற்கரை யமர்ந்து கானல் வரியாம்
மிடற்றிசை கலந்து மெல்விரல் வருடிய
அவ்வியாழ்க் கருவியின் அமைப்பும் இயம்பிக்
கவ்விசை நரம்புக் கருவி முதலாச்
செவ்விய நால்வகைக் கருவியும் செப்பிச்

**இசைநூல் இசைத்தல்**

சிற்றிசை பேரிசை செயிற்றியம் குணநூல்
முற்றிய சயந்தம் முறுவல் எனப்பல
சங்கத் திசைநூல் தனித்தனி சுட்டி,
இங்கச் சுவடிகள் இழந்தவும் கூறி,

---

மன்பதை - மக்கள், அரண்செயும் - துணைசெய்யும், தெரிக்கும் - இசைக்கும், முளரி - தாமரை, முற்றுற - முடிவுற, மிடற்றிசை - குரலிசை, நால்வகை - நரம்பு, தோல், துளை, கஞ்சம்.

**பண்முறை விளக்கல்**

நண்ணும் இசைநூல் நலமெலாம் உணரப்
பண்ணும் பண்ணியல் திறமும் பகர்ந்து
கண்புலர் காலை கடும்பகல் மாலை
வெண்மதி இரவாம் வேளையில் இசைக்கும்
பண்ணிவை, பொதுவிற் பாடும் பண்ணிவை
என்றாங்கு
எஞ்சிய யாவும் இனிதினில் நவின்று,

**இலக்கியத்தில் இசையுணர்த்தல்**

நெஞ்சினை யள்ளும் செஞ்சொற் சிலம்பில்
வேனிற் காதையும் வேட்டுவ வரியும்
ஆனினங் காக்கும் ஆய்ச்சியர் குரவையும்
பத்துப் பாட்டும் பரிபாட் டேடும்
வைத்துக் கிடக்கும் பண்வகை வகுத்து
நாவின் அரசர் நலந்திகழ் பிள்ளை
நாவலூர் நம்பியெனும் நற்றமிழ் வல்ல
மூவர் அருளிய தேவா ரத்தொடு
தேரும் செந்தமிழ்த் தேறல் மாந்திய
மாறன் திருவாய் மலர்ந்தருள் மொழியும்
அருண கிரியார் அருள்திருப் புகழும்
மருவிய பண்களில் வகையெலாம் தெரித்து,
வாழிய பாவாய் வாழிய தமிழால்!
வாழிய உலகம் வாழிய தமிழிசை!
எனவாங்கு
வாழ்த்தினர் எழில்மயில் வாகனர் அவளை;

---

நாவின் அரசர் - திருநாவுக்கரசர், பிள்ளை - திருஞானசம்பந்தர், நாவலூர் நம்பி - சுந்தரர், தேறல் - தேன், மாறன் - நம்மாழ்வார்,

## பூங்கொடி நன்றி புகலுதல்

'வாழ்த்துக பெரும! வாழ்த்துக பெரும!
காழ்ப்பும் பகையும் கடிதினில் விலகிப்
பார்த்தலம் யாண்டும் பைந்தமிழ் பரவும்
யாழ்நூல் என்னுமிவ் வோர்நூல் அளித்தனை
வாழ்நாள் அனைத்தும் வாழ்த்தி வணங்குவென்'
என்றவள் வணங்கி இனிதிருந் தனளே.

---

காழ்ப்பு - பொறாமை, பார்த்தலம் - உலகம்.

# 27. அயல்நாடு சென்று வந்த காதை

## மயில்வாகனர் பூங்கொடியை அயல்நாடு செல்ல வேண்டுதல்

ஒப்பிலா யாழ்நூல் செப்பிய பெருமகன்
கப்பிய அன்பினால் கனிமொழி நோக்கிப்
'பூங்கொடி! நினக்கொன்று புகலுவ துடையேன்
ஆங்கிலம் முதலா அயன்மொழி யாவும்
தீங்கற வுணர்ந்த தெளிதமிழ்ப் புலவரும்
தொல்கலை பலவும் தொகுத்தவை ஆயும்
பல்கலைக் கழகத்துப் பணிபுரி பெரியரும்,
மொழிநூல் வல்ல முதுபே ரறிஞரும்,
நுழைபுலங் கொண்ட நுண்மாண் கலைஞரும்,
உலக நாடுகள் பலவும் சென்று
கொழிதமிழ்ப் பெருமையைக் கூட்டி யுணர்த்தவும்,
மொழியயற் கலைகள் முட்டின் றுணரவும்,
தம்முட் குழீஇத் தமிழ்த்தூ தேகக்
குறித்தனர் செல்வி!அக் குழுவினுள் நீயும்
ஒருத்தி யாதலை உவந்ததென் மனனே;
தமிழுக் கிஃதொரு தனிப்பே ராக்கம்
இமிழ்கடல் வரைப்பும் ஏத்தும்நின் புகழை
நின்னுளம் யாதென நிகழ்த்துதி அம்ம!'

---

கப்பிய - நிறைந்த, கனிமொழி - பூங்கொடியை, நுழைபுலம் - ஆராயும் அறிவு, நுண்மாண் - நுண்ணிதாக மாட்சிமையுற்ற, கொழிதமிழ் - செழிக்கும் தமிழ், முட்டின்று - தடையின்றி குழீஇ - கூடி, குறித்தனர் - கருதியுள்ளனர். வரைப்பு - உலகம்,

## மலையுறையடிகள் மனமிசைக எனல்

என்னலும் அம்மகள் அன்னையை நோக்கி
முன்னுள அடிகள்தம் முகமும் நோக்கினள்;
குறிப்புணர் அடிகள் கொடிக்கிவை கூறினர்;
'பொறுப்புணர் மாந்தர் விருப்புடன் ஏற்கும்
அறப்பணி யிஃதாம் ஆதலின் இசைகுவை!
அலர்தொறும் அலர்தொறும் அஞ்சிறை விரித்துப்
பலமுறை சுழன்று பசுந்தேன் உறிஞ்சி
நலம்நுகர் சுரும்புபோல் நாடொறும் முயன்று
பலமொழி பயின்று பயன்றுய்த் தனையால்;
ஆங்காங் கணுகி அவ்வவர் கலையும்
ஓங்குயர் பண்பும் உணர்ந்தனை யாயின்
புதுமைக் கலைகள் தமிழிற் பூக்கும்,
அருமைத் தமிழும் அவ்விடை மலரும்,
உரிமை யனைத்தும் உன்மொழிக் கெய்தும்,
இதற்கொரு மறுப்பும் ஈன்றாள் உரையாள்
எதற்கும் கலங்கேல் இசைந்தெழு மகளே';

## பூங்கொடி இசைந்தெழுதல்

இம்மொழி கேட்ட செம்மனப் பூங்கொடி
'நும்மொழி நடத்தல் நோன்பெனக் கொண்டுளேன்!
நம்மொழி செம்மொழி நலம்பெறல் வேண்டி
இல்லறம் என்னலம் இன்னன துறந்தேன்;
நல்லறம் தமிழ்ப்பணி நாடொறும் இயற்றுங்
குறிக்கோள் வாழ்வினைக் கொண்டுளேன் அறிவீர்!
இறப்பினும் இப்பணி இயற்றியே இறப்பேன்,
என்மொழிக் குயர்வெனின் இன்னுயிர் ஈவேன்,
பன்மொழிப் பயிற்சி பைந்தமிழ் வளர்ச்சிக்
கொருதுணை யாகுமென் றுன்னிப் பெற்றனென்,
விரிநீர் உலகத்து வெளிநா டனைத்தும்

---

கொடிக்கு - பூங்கொடிக்கு, இசைகுவை - உடன்படுக, அலர் - மலர், அஞ்சிறை - உள்இறகு, சுரும்பு - வண்டு, நாடொறும் - நாள்தோறும், ஒருதுணை - ஒப்பற்ற துணை,

பரிவுடன் ஏகிப் பண்பும் கலையும்
தெரிதர வுணர்ந்து தென்றமிழ்ப் பண்பெலாம்
புரிதர வுணர்த்திப் புதுமைக் கலைகள்
ஆக்குவென் ஆக்குவென் அப்பெரு முயற்சியால்
தேக்குவென் பெரும்புகழ் தீந்தமிழ் மொழிக்கே,
இன்னே எழுவேன் எனக்கேன் கலக்கம்?
அன்னையும் வாழ்த்தி அனுப்புவள் என்னை;

**அனைவரிடமும் விடை வேண்டுதல்**

கண்டும் பாகும் கனியும் நிகர்க்கும்
தண்டமிழ் காக்கும் தொண்டுளம் கொண்ட
கோட்டை நகர்தரும் கோனூர் வள்ளலும்,
பாட்டுள் புதைந்த பழம்பெரும் யாழை
மீட்டும் கொணர்ந்த மேலவர் தாமும்,
உற்றுழி உதவி உறவின் முறையால்
பெற்றோ ராகிய பெருநிலக் கிழவரும்,
தந்தையாய்த் தலைவராய்த் தாழ்விலாச் செல்வராய்ச்
செந்தமிழ் மைந்தராய்ச் சிந்தையில் தூயராய்
வந்தருள் தந்தவர் வாய்மையில் நின்றவர்
குறளகங் கண்ட குன்றுறை யடிகளும்,
அருளுளங் கொண்ட அனைவரும் வாழ்த்திப்
பெருநிலம் யாண்டும் தரும்புகழ் நிறீஇ
வருகென உரைத்து வழங்குக விடையே'
உரையிவை கூறி உவப்புடன் இருந்தனள்;

**அருண்மொழியும் பிறரும் வாழ்த்துதல்**

அயல்நா டேகும் அரிவையைத் தழுவிக்
கயல்விழி அருண்மொழி கண்ணீர் மல்கி,

---

தெரிதர - தெரியுமாறு, புரிதர - புரியுமாறு, தேக்குவென் -நிறைப்பேன், இன்னே- இப்பொழுதே, மேலவர் - மயில்வாகனர், நிறீஇ - நிறுவி.

'வெல்கநின் பணியே வெல்கநம் தமிழே,
செல்கநீ யாண்டும் செந்தமிழ்ப் பண்பைச்
சொல்கநீ சொல்கநீ சோர்வுறேல் கண்மணி!
பல்கலைப் பொருளும் பயில்கநீ' என்றனள்;
ஆண்டுள பெரியரும் ஆயிழை வாழ்கென
மூண்டெழும் உணர்வினால் மும்முறை வாழ்த்தினர்;

**பூங்கொடியின் அயல்நாட்டுச் செலவு**

தமிழ்த்தூ தேகும் சான்றோர் குழுவினுள்
புகழ்த்திரு மகளாம் பூங்கொடி சார்ந்து
பயண மாகிப் பறந்தனள் வானில்,
அயலில் நின்றார் அனைவரும் மீண்டனர்;
வானிற் பறந்தும் மரக்கலம் ஊர்ந்தும்
வேனிற் பருவம் விழுபனிப் பருவம்
நானிலத் தோங்கும் நாடுகள் கடந்து
கடந்தாங் காங்குக் கடமைகள் ஆற்றிப்
படர்வோள் ஆயிடைப் பன்மொழிப் பயிற்சியும்,

**சான்மார் நாட்டில் பூங்கொடி**

தமிழ்நூல் மாட்டுத் தணியா வேட்கையும்,
நிமிர்மனச் செருக்கால் தமிழ்மொழி பழிப்போர்
இமிழ்கட லுலகில் எவரே யாயினும்
விருப்பும் வெறுப்பும் விடுத்துப் பழிமொழி
மறுத்துரை வழங்கும் பொறுப்புணர் பண்பும்,
உடையவர் இளையவர் உலகறிந் தொழுகும்
நடையவர் சான்மார் எனும்பெயர்க் குரியவர்
பெருந்துணை கொண்டு பெருநாட் டாங்கண்
விருந்தின ளாகி வேண்டிய பொருள்கள்
தெரிந்துளங் கொண்டு தெரிப்பன தெரித்துப்

படர்வோள் - செல்பவள் சான்மார் - ஜான்மார், இங்கிலாந்து நாட்டறிஞர், தெரிப்பன - விளக்குவன.

## கமிலர் நாட்டில் பூங்கொடி

பிறிதொரு நாடு பேணினள் செல்வோள்
அந்நாட் டாங்கண் அருந்திறல் அறிஞர்
தென்னாட் டவர்போல் திகழும் இயல்பினர்
தமிழின் நலந்தேர் தகவாற் பெரியர்
கமிலர் என்னுங் கற்றுணர் சுவைஞரைக்
கண்டுரை யாடிக் களிமகிழ் கூடித்
தொண்டொடு வாழ்வைத் தொடுத்தவள் இருந்தனள்;
அவர்தாம்
நறுந்தேன் மிதக்கும் நற்சுளை போல
அருந்துவோர் நெஞ்சினை அள்ளும் சுவைசேர்
செஞ்சொற் சிலம்பாம் செழுங்காப் பியமும்
விஞ்சுங் காதல் கொஞ்சும் வகையால்
அஞ்சு திணையால் அமைந்தநற் கலியும்
நாட்டுணர் வூட்டும் பாட்டுத் திறத்தால்
கூட்டுணர் வூட்டிக் கொடுங்கோல் சாய்த்துத்
தமிழுக் குய்வகை தந்தநற் பாரதி
அமிழ்தச் சுவைதேர் அருங்கவித் தொகுப்பும்
அனையன பிறவும் அவர்மொழிக் கேற்றி
இனியநற் பணிபுரி இயல்பினர், செயலினர்;
கமிலர் நாட்டிற் கற்பன கற்றுத்
தமிழர் நாட்டுத் தகவுகள் விளக்கி

## உருதின் நாட்டில் பூங்கொடி

மீள்வோள் உலகில் மேம்படு முறையால்
ஆள்வோர் நாட்டினை அணுகினள், ஆங்கு
மேலவர் கீழவர் வேற்றுமை யில்லை,
உயர்ந்தோர் தாழ்ந்தோர் ஒருவரும் இல்லை,

---

கமிலர் - கமில்சுவலபெல், செக்கோசுலேவிய; நற்சுளை - பலாச்சுளை, அஞ்சுதிணை - ஐந்திணை, கூட்டுணர்வு - ஒருமைப்பாடு, அனையன - அவைபோல்வன தகவுகள் - தகுதிகள்.

வறியரும் இல்லை உரியரும் இல்லை,
சரிநிகர் என்னும் சமநிலை கண்டனள்;
உடைமைகள் யாவும் உலகப் பொதுமை
தடையிலை எனநெறி தையல் கண்டனள்,
விண்வழிச் சென்று வெண்மதி கண்டு
மண்ணிடை உலவும் மாந்தரும் கண்டனள்,
வெண்பனி சூழுமவ் வியன்பெரு நாட்டில்
நண்பும் பண்பும் நற்றமிழ்ப் பயிற்சியும்
மருவிய தோழர் மாசறு புலவர்
உருதின் என்னும் ஒருபெயர் மாற்றிச்
செம்பியன் எனஒரு செந்தமி ழாக்கிய
நம்பியைக் கண்டனள்; நலம்பல செறிந்த
அப்பெருந் தேஎத்துச் செப்புந செப்பி
நற்பொருள் பற்பல நாடித் தொகுத்துக்

**ஏனைய நாட்டில் பூங்கொடி**

கற்பனைக் கெட்டாக் காலங் கண்ட
நற்றமிழ்ப் பணியே நாளெலாம் புரியும்
பொற்றொடி நங்கை புதுமை வளர்தரும்
நாடுகள் சென்றனள் ஏடுகள் தேடினள்
பீடுறு தமிழ்ப்புகழ் கூடுதல் உறுதி

**பூங்கொடி மீட்சி**

என்றுளம் மகிழ்ந்தே இருநீர்ப் பரப்பும்
துன்றிய நிலமும் தொலைவிண் வெளியும்
கடந்து மீண்டனள் கலைபயில் செல்வி;
இடம்படு மணிநகர் யாண்டும் ஆர்ப்பொலி
படர்ந்திட வாழ்த்துரை பாவை ஏற்றனள்;

---

தையல் - பூங்கொடி, உருதின் - ரூதின், உருசிய நாட்டறிஞர்; தேஎத்து - தேயத்தில், செப்புந - சொல்பவை, இருநீர்ப்பரப்பு - கடல். துன்றிய - பொருந்திய, இடம்படு - இடமகன்ற.

ஆயும் மலையுறை யடிகளும் பிறரும்
தோயும் மகிழ்வால் துள்ளினர் உள்ளம்

**புதுநூல் படைத்தல்**

நாடுகள் தோறும் நடந்தன விளக்கி
ஏடுகள் கொணர்ந்தன எவைஅவை துலக்கிப்
பொருளியல் நூலும் புதுப்புதுப் படைப்பும்
அறிவியல் நூலும் அருங்கவித் திரட்டும்
உளநூல் நிலநூல் உண்மைத் தத்துவம்
பலவர லாறும் படைத்தனள் தமிழில்
கலையெலாம் தமிழில் இலையெனுங் குறையினி
இலையெனச் செய்தனள் எம்முயர் தலைவி;
மூச்சும் பேச்சும் முத்தமிழ்க் காக்கி
ஏச்சும் பேச்சும் இடரும் துச்சம்
எனஅவை ஒதுக்கி மனமொழி செயலால்
அனைமொழி தமிழுக் கருஞ்செயல் ஆற்ற
வல்லவள் அவளே வாழிய மகளே.

---

துலக்கி - விளக்கி, அனைமொழி - அன்னைமொழி.

# 28. சொற்போர் நிகழ்த்திய காதை

### பல்வகை எதிர்ப்பு

பூங்கொடி யின்புகழ் யாங்கணும் ஓங்கிடத்
தாங்குதல் ஆற்றாத் தரியலர் புழுங்கி
ஏங்கிய மனத்தொடு எவ்வழி யாயினும்
ஆங்கவள் வளர்புகழ் அழிப்பான் வேண்டித்
தீங்குகள் பலவும் செய்திடுங் குழுவும்,
தொலைவில் மறைந்து தூண்டுவோர் தூண்ட
அலையும் மனத்தினர் ஆடும் பாவைகள்
நிலையிலாக் கொள்கை கலையெனப் பூண்டோர்
மலையும் நோக்கினர் மதியிலார் குழுவும்,
உண்மை நன்மை ஒன்றும் அறிகிலார்
எண்ணும் ஆற்றல் எதுவும் அறிகிலார்
மனத்தால் தீமை மதித்தலும் அறிகிலார்
இனத்தால் நல்லவர் எனினும் அறிவெனும்
சுடரறி யாமல் சூழிருள் மூழ்கி
மடமுறும் மனத்தினர் வஞ்சமில் குழுவும்,
மெய்ம்மை யுணர மேவுவார் குழுவும்,
தெய்வப் பணியால் உய்யும் குழுவும்
கொடுத்திடும் துயரெலாம் குலக்கொடி உதறினள்;
தொடுத்திடும் கணையென அடுத்தடுத் திருந்து
விடுத்தனர் வினாக்கள் வெருவிலள் பூங்கொடி;

---

தரியலர் - பகைவர், அழிப்பான் - அழிக்க, பாவைகள் - பொம்மைகள், மலையும் - தகராறுசெய்யும், உய்யும் - பிழைக்கும்.

### பிறமொழி வெறுப்பு நன்றோ?

'பிறமொழி வெறுத்தல் பேதைமை யாகும்
அறமன முடையோர் அவ்வணம் செய்யார்
குறுமன மிஃதாம் விரிமனம் வேண்டும்
யாதும் ஊரென ஓதிய நாமோ
தீதெனப் பிறமொழி செப்பித் திரிவது?
மோதும் பகைமை முகிழ்ப்பது நன்றோ?'
நல்லுரை இவ்வணம் நவில்வது போலச்
சில்லுரை சிலர்சிலர் செப்பித் திரிந்தனர்;

### பூங்கொடி மறுப்புரை

மறுப்புரை அவர்க்குக் கொடுத்திடும் பொறுப்பினள்
விரித்துரை வழங்கி விளக்கினள் இவைஇவை;
'அகத்தும் பிறமொழி வெறுத்திடல் அறிகிலம்
பகுத்தறி வுடையோம் பண்பும் உடையோம்
வேண்டும் மொழிகளை வேண்டுவோர் பயின்றீங்
கீண்டி யுறையுநர் எண்ணிலர் அறிக!

### குறுமனம் அன்று

குறுமன மென்றும் விரிமன மென்றும்
சிறுமன முடையோர் செப்புவ கொள்ளேல்!
தனியொரு மாந்தன் தன்னலம் பேணின்
முனியத் தகுமது குறுமன மாகும்;
தன்னல மறுப்பது விரிமன மாகும்,
முன்னவர் பேணிய மொழியும் நாடும்
மன்பதை முழுமைக் குரியன வன்றோ!
அன்புளங் கொண்டோர் அவற்றைப் பேணின்
தென்படும் குறைஎன்? தெளியா மாந்தர்
குறுகிய மனமெனக் குளறுவர் நம்பேல்!

விரிமனம் - பரந்தமனம், முகிழ்ப்பது - உண்டாவது, உறையுநர் - வாழ்பவர், எண்ணிலர் - கணக்கிலாதவர், செப்புவ - சொல்பவை, மாந்தன் - மனிதன், முனிய - வெறுக்க, பேணாஅர் - பேணாதவர்.

### பிறமொழி வெறுப்பன்று

பெறுபுகழ்த் தாய்மொழி பேணாஅ ராகி
வருமொழி வாழ்த்தி வரவுரை கூறுநர்
அறமன முடையரென் றறிவுளோர் பகரார்;
பிறமொழி தீதெனப் பேசலும் அறிகிலம்
உரியநம் மொழியே உயர்வுறல் வேண்டி
இரவும் பகலும் இடரிலும் முயல்வேம்;

### பகைமையும் அன்று

யாதும் ஊரெனில் எம்முடை ஊரகம்
தீதுறல் வேண்டுமோ? சீருறல் தீமையோ?
யாவரும் கேளெனில் யாயுடன் தந்தையும்
மேவருங் கேடுகள் மேவுதல் வேண்டுமோ?
அன்னவர் நலம்பெற ஆர்வம் பூணுதல்
புன்மையோ? பகையும் பூத்திடல் என்னையோ?

### சான்றோர் நெறியே

உலகப் புகழ்பெறு தலைவரும் கவிஞரும்
பலகற் றடங்கிய பண்புயர் மாந்தரும்
தாய்மொழி வேட்கை தணிந்திலர் துறந்திலர்;
ஆய்புலப் பாங்கினர் அறிகுவர் இதனை;
தமிழின் பகைவர் சாற்றும் மொழியினை
உமிழ்க! மெய்ம்மை உணர்க! எழுக'
என்பன கூறி எழுச்சி யூட்டலும்
மன்பதை சிந்தனை வளர்த்தது மனத்தினில்;

### இசைவாணர் எதிர்ப்பு

பாடும் துறையில் பழகிய மாந்தர்
தேடும் பொருளாற் சிறந்தோர் சிலர்தாம்

---

யாய் - தாய், மேவரும் - விரும்பத்தகாத, புன்மையோ? - இழிவோ? என்னையோ? - ஏனோ?, தணிந்திலர் - அடங்கினாரிலர்.

கூடிச் சிலசொல் குறித்தனர் ஆங்கண்;
'உள்ளம் உருக்கி ஒப்பிலா இன்ப
வெள்ளம் பெருக்கும் வியன்பே ரிசையில்
மொழியால் வேற்றுமை மூட்டுதல் நன்றோ?
இழிவாம் இச்செயல்; மொழியிங் கெதற்கு?
குழலும் யாழும் கொடுத்திடும் இசையில்
மொழியெது கண்டோம்? பழியெது கண்டோம்?
இசைவளந் தமிழில் யாண்டுக் கண்டோம்?
இசையுணர் வுடையார் எம்மொழி யாயினும்
நசையுடன் ஏற்று நடப்பது கண்டோம்;
மொழிவெறி விடுத்து முயல்வதே முறை'என
வழிவகை கூறி வம்புகள் பேசினர்;

### பூங்கொடி மறுமொழி

சினந்தெழும் உணர்ச்சியின் செற்றம் அடக்கி
மனந்தெளிந் தரிவை மாற்றம் கொடுத்தனள்;

### குயிலும் காகமும்

'கூவும் குயில்தன் குரலாற் பாடும்;
காகம் தன்குரல் கொண்டே கரையும்
இரவற் குரலைப் பெறுவது காணேம்;
பறவையின் இயல்பைப் பகுத்தறி வுளநாம்
அறிவதும் இல்லேம்; தெளிவதும் இல்லேம்;
நமக்குள மொழியை நாடுதல் தவிர்த்துப்
பிறர்க்குள மொழியாற் பிதற்றுதல் உடையேம்;

### ஊனுயிர் உருக்கும் பாட்டு

உருகும் இசையால் உள்ளம் என்றீர்!
பொருளும் உணரப் புரியும் மொழியால்
மருவிய பாடல் வழங்கும் இனிமையை
ஒருமுறை எண்ணுக! ஊனும் உயிரும்
நெஞ்சுடன் குழைந்து நெக்குநெக் குருகி
விஞ்சுபே ரின்ப விளைவினில் திளைக்கும்

---
செற்றம் - சினம், மாற்றம் - மறுமொழி, நெக்குநெக்குருகி - மிக இளகி,

### யாழும் குழலும் போதுமோ?

குழல்தரு மிசையில் மொழியிலை என்றீர்!
அழகிது நும்மொழி; அவ்விசை சாலுமேல்
மிடற்றிசை வேண்டுமோ? வேறொரு மொழியில்
தொடுத்திடும் பாடலும் தொகையுடன் பாடுவோர்
கூட்டமும் வேண்டுமோ? குழல்முத லாகக்
காட்டும் அவ்விசைக் கருவிகள் சாலுமே!

### அயலிசை பாடுவோர்

தமிழ்விழை யாரும் தம்வயிற் றுணவே
அமிழ்தெனத் தேடி அலைந்துழல் வாரும்,
உரிமை வாழ்வினைக் கருதகில் லாரும்
அடிமை வாழ்வினி லமைதிகொள் வாரும்
தமிழறி வில்லாத் தமிழருந் தாமே
அயன்மொழி யிசையே அரங்கினிற் பாடுவர்
மயலுணர் வுடையீர்! மற்றொன் றறைகுவல்

### தமிழிலா இசையில்லை?

எம்மொழி யாயினும் இசையினி லேற்போர்
நம்மொழி ஒதுக்குதல் நன்றுடைச் செயலோ?
ஏற்போர் ஏற்க? இசையுணர் பெரியீர்!
காற்கூ றறிவாற் கழறுதல் தவிர்க!
இசைவளந் தமிழில் இலைஎனப் பிதற்றல்
வசையுமக் காகும்; வாய்மதம் ஒழிக!
முத்தமிழ் என்றொரு முறைவைப் புளதை
மெத்தவும் மறந்தீர்! மெய்ம்மையை இகழ்ந்தீர்!
நெஞ்சறி பொய்யை நிகழ்த்துதி ராயின்
பஞ்சென அதுதான் பறப்பதிங் கொருதலை;

---

சாலுமேல் - போதுமெனில், காற்கூறு - கால்பங்கு, வாய்மதம் - வாய்ச்செருக்கு. ஒருதலை - துணிவு

## இதுவா மொழி வெறி?

பழியுரை நாணாப் பண்புள பெரியீர்!
மொழிவெறி எனவொரு மொழியினை மொழிந்தீர்
உரிமை விழைவது வெறியெனக் கூறும்
பெருமை நும்பால் உறைவது கண்டேன்;
நரிமனம் இஃதென நவின்றிட நாணுவல்;
வெறியுணர் வுளதேல் விளைவன வேறு!
முறையொடும் அறிவொடும் முறையிடு கின்றோம்;
நெறியறிந் தொழுகும் நேர்மையை வியந்திலீர்!
புரைபடும் நும்முளம் புலப்படச் செய்தீர்!
செந்தமிழ் மொழியொடு செற்றம் என்கொலோ?
வந்துடன் தாய்மொழி வளர்த்திடக் கூடுக!
முந்துநம் தமிழிசை மொய்ம்புறப் பாடுக!'
செவ்விதின் இவ்வணம் செப்பின ளாக
அவ்விய நெஞ்சினர் ஆங்காங் கமைந்தனர்;

## கோவிலுள் தமிழ் மொழி

'வழிபடு துறையிலும் வண்டமிழ் வேண்டுதும்;
இழிநிலை போதும்; இறைவன் திருமுனர்
எம்முயர் மொழியே இசைத்திடல் விழைகுதும்'
இம்மொழி கேட்டோர் எரியெனக் கனன்றனர்;

## தமிழ் வழிபாட்டுக் கெதிர்ப்பு

'கோவிலில் தமிழா? கொடுமை! கொடுமை!
நாவினில் இதுசொல நடுக்குறூஉம் எம்முளம்!
முன்னோர் நம்மினும் முழுமதி யுடையர்
அன்னோர் நெறியினை அழித்திட முயல்வதோ?
முந்திய மொழிகளுள் மூத்ததே ஆயினும்
மந்திர வலிமை செந்தமிழ்க் குளதோ?
இடமிகு கோவிலுள் இறைவன் முன்னர்க்
கடவுண் மொழியே கழறுதல் வேண்டும்;

மந்திர மொழியாம் மறைமொழி விடுத்துச்
செந்தமி ழோதின் தெய்வம் உவக்குமோ?'
தேவரின் தூதுவர் ஏவலர் போலிவை
கூவினர்; மேவலர் கொள்ளும் வகையாற்
சான்றுடன் மறுமொழி சாற்றுவள் பூங்கொடி;

## தமிழர் வழிபடு மொழி எது?

'ஈன்றவட் பழிக்கும் இயல்பினை ஏன்றுளீர்!
தமிழக வரைப்பில் தாய்மொழி ஆட்சி
திகழுதல் வேண்டும்; தேவுறு கோவில்
விலக்குடைத் தன்று; மயக்குறல் என்கொல்?
கலைக்கோர் உறைவிடம் கட்டியோர் தமிழர்
உள்ளுறை கடவுளும் உரியவர் நமக்கே
அள்ளுற வணங்குவோர் அயலவர் அல்லர்
இறைவினை புரிவோர் ஏதிலர் அல்லர்
முறைஎது? வழிபடு மொழிஎது? புகல்வீர்!

## முன்னோர் நெறிதான்

முன்னோர் நெறியினில் முரண்பா டென்றீர்!
முன்னோர் யாரென முடிந்த முடிபாச்
சொன்னோர் யாரே? முன்னோர் அவரினும்
முற்பட வாழ்ந்தவர் எப்பெய ருடையார்?
அப்பெரு முன்னோர் ஆண்டவன் மாட்டுச்
செப்பிய மொழிஎது? செந்தமி ழன்றோ?
திருவாய் மொழியெனத் திருவா சகமென
இறைவா! இறைவா! என்றவர் ஓதிய
திருவாய் மொழிஎது? தீந்தமி ழன்றோ?
அவரெலாம் முன்னோ ரல்லரோ? இறைவன்
செவிதனில் அம்மொழி சேர்ந்ததும் இலையோ?

---

ஏன்றுளீர் - ஏற்றுள்ளீர், அள்ளுற - வாயுற,

## மந்திர வலிமை தமிழ்மொழிக்குண்டு

அரவணி இறைவனை ஆரூர் நம்பி
இரவிடைப் பரவைபால் ஏவிய தெம்மொழி?
இடங்க ருண்ட இளஞ்சிறு மகனை
உடம்பொடும் உயிரொடும் உய்வித்த தெம்மொழி?
ஒடுங்கிய எலும்பினை உருவெழில் குறைவிலா
மடந்தையின் வடிவா மாற்றிய தெம்மொழி?
அருமறை வினைஞரால் அடைபடு கதவம்
திருமறைக் காட்டில் திறந்ததும் எம்மொழி?
கணிகணன் முன்செல மணிவணன் அடியிணை
பணிதிரு மழிசையர் பதறினர் பின்செலப்
படப்பாய் அணைமேல் பாற்கடல் மிசையே
கிடப்போன் தன்மனைக் கிழத்தியும் உடன்வர
அரவணைச் சுருட்டோ டாங்கவர் தொடர்ந்து
பரிவுடன் ஓடப் பண்ணிய தெம்மொழி?
அம்மொழி நம்மொழி! அத்துணைப் பெருமையும்
செம்மையின் எமக்கெலாம் செப்பியோர் நீவிர்
இன்றிவை மறந்தீர்! எதிர்ப்புரை கிளந்தீர்
கன்றிய மனத்தாற் கரவுரை புகன்றீர்!
மந்திர வலிமை செந்தமிழ்க் கிலையெனில்
இந்தநல் லருஞ்செயல் எவ்வணம் இயலும்?

## கடவுளர் விரும்பும் மொழி

கடகரி உரியன் கடும்புலி யதளன்
சடையினை மறைத்து மணிமுடி தரித்து
விடைக்கொடி விடுத்துக் கயற்கொடி எடுத்து
விடவர வொழித்து வேம்பலர் முடித்துத்

---

ஆரூர் நம்பி - சுந்தரர், பரவை - பரவை நாச்சியார், இடங்கர் - முதலை, கதவம் - கதவு, சுருட்டு - (படுக்கைச்) சுருள், கரவுரை - வஞ்சனை மொழி, கடகரி - மதயானை; உரியன், அதளன் - தோலாடையன், விடைக்கொடி - எருதுக்கொடி, வேம்பலர் - வேப்பம்பூ,

தொடுகழல் மாறன் வடிவொடு வந்ததூஉம்,
மடவரல் மனையாள் மலைமகள் உமையாள்
தடாதகைப் பெயரினைத் தாங்கி வந்ததூஉம்,
மயில்மே லமர்வோன் அயில்வே லுடையோன்
எழில்சூழ் மதுரை எழில்நக ரதனுள்
உக்கிர குமர னுருவொடு வந்ததூஉம்,
தெக்கண மொழியாம் தீந்தமிழ்ச் சுவையைக்
கூட்டுண வெழுந்த வேட்கையால் என்றே
பாட்டினில் குருபரர் பாடி வைத்தனர்;
வடக்கினில் நின்றோன் வரன்முறை யாகக்
கடுக்கவின் கண்டன் தென்றிசை நோக்கி
அடுக்க வந்துவந் தாடுதல் ஏனெனின்
தொடுக்கும் பழந்தமிழ்ச் சுவையினை மாந்தவே,
அறைந்தனர் இவ்வணம் அருட்பரஞ் சோதி;
கண்ணுதற் கடவுள் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்து பசுந்தமிழ் ஆய்ந்தனன்;
வாத வூரன் ஓதிய வாசகம்
தீதுறா வண்ணம் தென்னா டுடையவன்
ஏட்டில் எழுதி நாட்டிற் களித்தனன்;
அர்ச்சனை பாட்டே ஆதலின் நம்மைச்
சொற்றமிழ் பாடெனச் சுந்தரன் றன்பால்
பற்றுடன் சென்று பைந்தமிழ் வேண்டினன்;
வழிபடு தமிழை விழைகுவர் இறைவரென்
றெழிலுற உணர்த்திட இவையிவை சான்றாம்;
முன்னோர் சொன்ன முடிபினைக் கொள்க!
பின்னோர் நம்மைப் பேணுதல் வேண்டும்'
சொற்போர் இவ்வணம் பற்பல நிகழ்த்திக்

---

மாறன் - பாண்டியன், மடவரல் - இளமைமிகும், குருபரர் - குமரகுருபரர், கடுக்கவின் - நஞ்சின் அழகு, கண்டன் - கழுத்தினன், பரஞ்சோதி - திருவிளையாடற் புராண ஆசிரியர், கழகம் - தமிழ்ச்சங்கம், வாதவூரன் - மாணிக்கவாசகர்.

கற்போர் மற்றோர் களிப்பாற் போற்ற
மாந்தர் மனத்தில் மதியொளி ஏற்றினள்;

### ஆள்வோர்க்கு அறிவுரை

ஏந்தும் புகழ்சூழ் இளங்கொடி துணிவுடன்
அரசியல் ஆயத்து முறைபுரி வோர்க்கும்
குறையெலாம் உரைத்தனள் உரிமையும் வேண்டினள்
'துறைதொறும் துறைதொறும் தூயநற் றமிழே
ஆட்சி புரியும் மாட்சிமை வேண்டும்
ஆட்சியின் பெயரால் அயன்மொழி புகுதலைச்
சான்றோர் வெறுப்பர் தமிழகம் மறுக்கும்
ஆன்றமைந் தடங்கிய அறவோர் கொதிப்பர்
ஆதலின் அரசியல் ஆயத் துள்ளீர்
மேதகு பெரியீர் ஆவன புரிக'
என்று பலகால் எடுத்தெடுத் திசைத்தும்
நன்று புரிந்திட நயந்திலர் அவரே.

# 29. அறப்போர் நிகழ்த்திய காதை

### முத்தமிழ் மாநாடு

கலைமிகு தமிழ்மொழி காக்கும் நோக்கொடு
மலையுறை யடிகள் மாநாடொன்று
மணிநக ரென்னும் மாநக ரதனுள்
அணிபெறக் கூட்டினர்; அப்பே ரரங்கில்

### பன்னாட்டறிஞர் பாராட்டுரை

பைந்தமி ழுணர்ந்த பற்பன் னாட்டினர்
ஐந்தெனும் இலக்கண அமைப்புறும் செந்தமிழ்
மேன்மையைப் பான்மையை மேம்படு புலத்தால்
ஆய்ந்தவை கூறி அதன்நலம் பரப்ப
வாய்ந்தவும் உரைத்துத் தோய்ந்தனர் களிப்பில்;
பன்னாட் டிசையும் பகுத்துணர்ந் தாய்ந்தோர்
தென்னாட் டிசையின் திறமெலாம் வியந்தே
எந்நாட் டெங்கணும் இதுபோற் காண்கிலேம்
எனஅவர் தம்முள் ஒருசிலர் உரைத்தனர்;
குவளை நிகர்க்கும் கூர்விழி யிணையால்,
பவழ இதழால், பைந்தளிர் விரலால்,
பொற்புடை நுதலால், புருவச் சிலையால்,
உட்குறிப் புணர்த்தும் மெய்ப்பா டனைத்தும்
தெற்றென விளக்கித் தெரிவையர் ஆடுங்
கலையெழிற் றிறமெலாம் பலபடப் புகழ்ந்தனர்;

---

உட்குறிப்பு - மனக்குறிப்பு.

## தென்னாட்டார் தெளிவுரை

முத்தமிழ்க் காவலர், மொழித்துறை ஆய்வினர்,
புத்தமு தென்னப் புதினம் படைக்குநர்,
செந்தமிழ்க் காவலர், சிந்தனைப் பாவலர்,
பைந்தமிழ் நாவலர், பன்மொழிப் புலவர்,
பல்பொரு ளுணர்ந்த பண்டகர், அருள்நெறி
மல்கிய துறவற மாண்பினில் உறையுநர்,
குறள்நெறி ஓம்பிக் குடியர சோங்க
அறநெறி காக்கும் அரசியல் அறிஞர்,
பிறபிற கட்சிகள் பேணுநற் றலைவர்,
பல்வகைச் சமயப் பாங்கினில் ஓங்கிய
நல்வகைப் பொருளுணர் நற்றமிழ் வல்லவர்,
இசையின் அரசர், ஏழிசை வல்லவர்,
நசைமிகு திரைப்பட நடிகர், பல்வகை
ஏடுகள் நடாத்தும் இயல்பினர் யாரும்
கூடினர் தத்தம் கோட்பா டனைத்தும்
நாடும் வகையால் நன்கனம் விளக்கினர்;
அவரவர் கோட்பா டறைந்தன ராயினும்
தவறியும் தமிழின் தன்மை குறைத்திலர்;
வழியும் முறையும் வகைபல வாயினும்
மொழியின் உயர்வே முன்னினர் அவர்தாம்;

## நான்கு முடிபுகள்

கவரும் முறையால் கனிமொழி காக்க
அவரவர் நோக்கில் அறைந்தவை யாவும்
உவகையிற் கேட்ட உயர்பே ரடிகள்
தொகுத்தவை கூட்டி வகுத்தனர் நால்வகை;
'இருப்பவை யனைத்தும் உருச்சிதை யாமற்
கருத்துடன் பேணிக் காத்திடல் வேண்டும்;
இருப்பது போதும் எனநினை யாமல்;
புதுப்புது நூல்கள் படைத்திடல் வேண்டும்;

பண்டகர் - டாக்டர் பட்டம் பெற்றவர், நடாத்தும் - நடத்தும், கோட்பாடு - கொள்கை,

அயன்மொழி புகுந்திவண் அல்லல் கொடாஅவகை
மயலர வொழித்து மதியினைத் துலக்கித்
தடுத்துக் காக்கும் தறுகண் வேண்டும்;
தொடுக்கும் தமிழ்க்குத் துறைதொறும் ஆட்சி
கொடுத்திடல் வேண்டுமென் றடிகள் கூறினர்;

**பூங்கொடியின் மகிழ்ச்சி**

பூங்கொடி யாகிய பொற்றொடி நங்கை
ஆங்கண் எழுந்தனள் அவள்சில மொழிந்தனள்;
‘சமயம் கட்சி சாதியோ டரசியல்
அமையுந் தொழிலால் ஆர்த்தெழு பகைமை
இமயம் போலது எதிருள தாயினும்
கருதா ததனைக் கடிதினில் ஒதுக்கி
ஒருதாய் மக்கள் உணர்வே ஓங்கி
வருகை புரிந்தீர் வாழிய பெரியீர்!
நெடுநாட் கனவை நினைவெனச் செய்தீர்!
பிறப்பால் வழக்கால் பேசும் மொழியால்
இனத்தால் தமிழர் எனுமொரு நினைவே
கருத்தாற் கொண்டுளோம் காலம் நமதே!
தாய்மொழி காக்கும் தணியா வேட்கை
சேய்கள் நம்பாற் செம்மையிற் கிளர்ந்தது;
வாகையும் சூடுவோம் வளர்தமிழ் பாடுவோம்
ஓகையில் ஆடுவோம் ஓங்குக ஓங்குகவே!’

**இனி ஆற்றவேண்டிய பணி**

‘நாடொறும் நாடொறும் நாடெலாம் போந்து
பாடியும் பேசியும் பட்டி மன்றத்துச்
சொல்லமர் ஆடியும் சொல்வன சொல்லி
நல்லதோர் ஆர்வம் நாட்டிடை மூட்டவும்

மயலரவு - மயக்கம், தறுகண் - துணிவு, ஓகை - உவகை, நாடொறும் - நாள்தோறும்.

மொழியுணர் வூட்டவும் முயன்றனம்; பொங்கிப்
பொழியும் ஆர்வமும் புத்துணர் வெழுச்சியும்
பெருக்கெடுத் தோடும் பெற்றிமை கண்டோம்;
உருக்கொள அதுதான் ஒருநெறிச் செல்லத்
திருப்பலும் வரன்முறைப் படுத்தலும் நங்கடன்
ஆக்கப் பணியில் அதனைத் தேக்கி
ஊக்கப் படுத்துதல் ஒன்றே இனிமேல்
ஆற்றப் படும்பணி யாகும்; ஆதலின்

**செயற்குழு அமைக்கவேண்டுதல்,**
**பன்மொழிப் பயிற்சிக்குழு**

செயற்குழு பலவகை சீர்பெற அமைத்துச்
செயற்பட வேண்டுவல்; செந்தமிழ் நூல்களை
அயன்மொழி பலவுளும் அமைத்திடல் வேண்டியும்
நயனுள மொழிகளுள் நல்லன காண்புழிப்
பயனுறப் பெயர்த்துப் பைந்தமிழ் ஆக்கவும்
உலக மொழிகள் பலவும் பயில
இலகும் அறிவினர் இணைந்ததோர் குழுவும்,

**இலக்கியம் பரப்புக் குழு**

தொல்காப் பியமும் தூயநற் குறளும்
பல்கிய பொருள்செறி பாட்டுந் தொகையும்
நாலடி முதலா நயனுரை நூலும்
தோலெனும் வகைப்படும் தொடர்நிலைச் செய்யுளும்
கல்லா மாந்தர்தம் கருத்துட் பாய்ச்ச
வல்லார் சொல்லில் நல்லார் குழுவும்,

**புதுநூல் படைப்புக் குழு**

முன்னோர் நெறியின் முரண்பா டின்றிப்
பன்னூல் ஆக்க உன்னுவோர் தாமும்

---

நங்கடன் - நம்கடமை, பாட்டு - பத்துப்பாட்டு, தொகை - எட்டுத்தொகை நூல்.

பின்னோர் நம்மைப் பேணும் வகையால்
நன்னூல் ஆக்க நயப்போர் தாமும்
பொருளால் நடையால் புதுப்புது முறையால்
உரையால் கவியால் வரைவோர் தாமும்
அறிவியல் நூல்கள் ஆய்வுரை நூல்கள்
செறிவொடு பிறபிற செய்வோர் தாமும்
நிறைபுல மாந்தர் நெருங்கிய குழுவும்,

**வழூஉக் களைவோர் குழு**

ஆவணத் தெருவினில் அரசியல் துறைகளில்
கோவிலில் செய்திகள் கொடுத்திடும் இதழ்களில்
மேவிய திரைப்பட மாகிய உலகில்
எழுத்தில் பேச்சில் எவ்வெத் துறையிலும்
வழுக்கள் களைந்து வண்டமிழ் வளர்ப்போர்
தொகுப்பாய்ப் பணிசெயும் தொண்டர்தம் குழுவும்,

**அறப்போர் ஆற்றுங் குழு**

புதியதோர் மன்பதை பூத்திட வேண்டி
அறிவியல் பயிற்றிடும் அரும்பெறற் பள்ளியில்
புரிவியல் மொழியால் போற்றுநம் மொழியால்
புகட்டிட வேண்டிப் போரிடுங் குழுவும்,
தாய்த்திரு நாட்டில் தண்டமிழ்க் கெதிராய்
ஏய்ப்பவர் புகுத்திடும் எம்மொழி யாயினும்
மேய்ப்பவர் மருளக் காழ்ப்பகை சிதற
அறப்போர் தொடுக்கும் ஆண்மையர் தமிழ்மொழி
புரப்போர் பலராய்ப் போரிடுங் குழுவும்
அமைத்திடல் வேண்டும்; அறப்போர்க் குழுவுள்
உயிரும் உடலும் உவப்புடன் ஈவோர்
அயர்வும் தளர்வும் அச்சமும் விடுத்தோர்

---
புரிவியல் - புரிகின்ற.

இடம்பெறல் வேண்டும்; இவ்வணம் அமைத்துக்
கடமை உணர்வும் கட்டுப் பாடும்
உடையராய்ப் பணிசெயின் உலகில் நம்மொழி
ஒருமொழி யாக ஓங்குதல் ஒருதலை'
என்றுரை யாற்ற, ஈண்டிய பெரியோர்
நன்றுநன் றென்றே நயந்தனர் ஆர்த்தனர்;

**அடிகளார் போர்முழக்கம்**

மன்றினில் இருந்த மலையுறை யடிகள்
ஒன்றிய வுணர்ச்சியும் உள்ளத் தெழுச்சியும்
துன்றிய மனத்தராய் நன்றுணர் புலவோர்
குழுவுடன் ஆய்ந்து வழிமுறை தெரிந்து
குழுபல அமைத்துக் கூறினர் சிலசொல்
'தென்மொழி நிலைமை தெற்றென விளக்கி
மன்பதைக் குரைத்தோம்; மன்பதை சார்பில்
எவ்வெவ் வகையால் இயம்புத லொல்லுமோ
அவ்வவ் வகையால் ஆள்வோர்க் கியம்பியும்
தாய்மொழிக் குரிமை தந்திலர் அதனால்
ஆய்ந்தபின் அறப்போர் ஆற்றத் துணிந்தனம்;
போரிட முனைந்து புகுவோர் கேண்மின்!
ஆருயிர் கொடுப்ப தறப்போ ராகும்
வேறுயிர் எடுப்பது மறப்போ ராகும்;
அதனதன் பெற்றிமை அறிகதி லம்ம!
முதற்போர் புரிய முனைந்தனம் இன்றே;
போரெனில் உயிர்பல போதலும் இயல்பே;
சீரிய இப்பெரும் போரினில் புகுவோர்
யாரென யாரென இயம்புதிர் இன்றே;
இருப்பதும் ஒருயிர் இறப்பதும் ஓர்முறை
தடுத்திட ஒல்லுமோ? சாவதும் ஒருதலை;
விடுக்குமவ் வோருயிர் வீணிற் செலவிடா

தடுத்தநம் தாய்மொழி அரியணை வீற்றிடத்
தொடுத்திடும் போரில் விடுத்திடத் துணிக!
துணிவோ ரெவரோ அவரே வருக!
துணிவில ராயின் தொலைவிற் செல்க!

### நாட்டவர்க்கு வேண்டுகோள்

செல்வோர் தாமும் செய்வதொன் றுளது
வெல்போர் கருதி விடுதலைப் படையினர்
சிறையகம் புகுந்தும் உறுதுயர் அடைந்தும்
கையுங் காலும் மெய்யும் சிதைந்தும்
நையும் உயிரொடு நடைப்பிண மாகியும்
ஆளுநர் செயலால் அல்லற் பட்டுழிக்
கோளும் குறையும் கூறித் திரியாது
கண்ணீர் ஒருதுளி காட்டுக; இலையெனில்
உண்ணிறை பரிவொடும் ஒருமொழி புகல்க!
அந்நிலை தானும் ஆற்றீ ராயின்
செல்லல் எமக்குச் செய்யா தமைக!
அல்லன கூறுதல் அறவே விடுக!'
என்பன கூறி யிருந்தனர் ஆங்கண்;

### போர்க்கொடி உயர்த்தல்

புலிநிகர் வீரர் பொற்றொடி மகளிர்
கலைமலி தமிழைக் கற்றறி புலவர்
எவ்வகைத் துயரும் ஏற்றிடும் திறலோர்
அவ்வயின் யாம்யாம் ஆருயிர் ஈகுதும்
என்றுரைத் தெழுந்தனர் எடுத்தனர் வஞ்சினம்
துன்றிய ஆர்ப்பொலி துளைத்தது விண்ணை;
செங்கண் மறவர் சீற்றமும் ஏற்றமும்
பொங்குதல் கண்டுளம் பூரித் தெழுந்து

---

கோள் - புறங்கூறல், செல்லம் - துன்பம் அவ்வயின் - அவ்விடம்.

பற்பல அணிகள் பகுத்தனர் அடிகள்
பொற்புடன் போற்றினர் போர்க்கொடி ஏற்றினர்;

**எங்கணும் மறியல்**

அருண்மொழி ஒருபால் அடிகள் ஒருபால்
விரிமலர்ப் பூங்கொடி வேறொரு பாலும்
உரிமை விழையுநர் ஒவ்வொரு பாலும்
அணியணி யாக ஆங்காங் கணுகிப்
பணிவும் கனிவும் துணிவும் பூண்டு
அரசியல் அலுவல் ஆற்றும் மனைதொறும்
பரசுங் கோவில் பள்ளிகள் தோறும்
பாடம் பயிற்றும் பள்ளிகள் தோறும்
பாடும் அரங்கம் பயிலிடந் தோறும்
மறியல் செய்தனர்; மருண்டனர் ஆள்வோர்;
வெறியொடு காவல் வீரரை ஏவினர்;

**அனைவரும் சிறைப்படுதல்**

ஏவிய காவலர் எத்துணை வெருட்டியும்
சாவது துணிந்தவர் சற்றும் விலகிலர்;
அடித்தும் பிடித்தும் அச்சப் படுத்தியும்
பிடித்த கொள்கையிற் பிறழ்ந்திலர் மறவர்;
வீரர் சீறினர் விலங்கொடு வந்தனர்
போரறம் புரிந்திடும் பூங்கொடி முதலா
நேரறம் பூண்டிடும் நீள்புகழ் அடிகளும்
கட்டில் அடங்காக் காளையர் கூட்டமும்
மட்டு வார்குழல் மங்கையர் ஈட்டமும்
நிறைகுண மங்கையாம் அருண்மொழி அன்னையும்
சிறையகம் புகுதச் செந்தமிழ் காக்க
விலங்குடைக் கையராய் வீதிகள் பலவும்
கலங்கலில் மனத்தராய்க் கடந்தனர் நடந்தே.

---

பரசும் - வணங்கும், ஈட்டம் - கூட்டம்.

# 30. சிறையகம் புகுந்த காதை

### ஊரவர் உரையாடல்

தாய்கை விலங்கைத் தறிப்பான் வேண்டித்
தங்கை விலங்கைத் தாங்கினர் செல்வோர்
அஞ்சில ராகி அகமுகம் மலர்ந்து
நெஞ்சும் ஏறி நிமிர்ந்தநன் னடையராய்ப்
போதல் கண்ட பொன்னகர் மாந்தர்
வீதியின் மருங்கில் வெற்றிப் பேரொலி
ஆர்த்தனர் ஒருசிலர்; அவர்புகழ் கண்டுளம்

### அறப்போர் நாடகம்

வேர்த்தவர் சிலர் ‘இது வீண்படு முயற்சி
இவரால் தமிழ்மொழி ஏற்றம் உறுமோ?
எவரால் தமிழுக் கிடுக்கண் நேர்ந்தது?
தவறே எண்ணித் தம்பெயர் ஒளிர
அறப்போர் நாடகம் ஆடினர்’ என்றெலாம்
பரப்பினர் பழிமொழி பண்பிலாத் தொழிலினர்;

### வென்றிப் போர்

நெடும்புகர்த் தமிழ்மொழி நீணிலத் தோங்கக்
கடமுணர் இவரே காத்திட வல்லார்!
அடவோ இவர்தம் அரும்பெரும் முயற்சி
கெடுமோ? இங்குக் கிளைபோற் புகுமொழி
தடுத்து நிறுத்தத் தக்கார் யாருளர்?
அடுத்த துயரெலாம் அகமகிழ் வுடனே
மடுத்துத் தந்நலம் விடுத்தனர் ஆ! ஆ!

தங்கை - தம் கை, ஒளிர - விளங்க, கடம் - கடமை,

தொடுக்குமிவ் வறப்போர் கொடுக்கும் வென்றியே'
என்றநல் லுரைகளும் இடையிடை மிடைந்தன;

### மகளிர்க் கடுக்குமோ

'மகளிர்க் கித்துணை மனச்செருக் காகுமோ?
தகவுடைத் தொழிலோ! தன்றுணை, மக்கள்,
இல்லறம், குடும்பம் என்றுளங் கொளாஅது
மெல்லிய மாதர் மீப்படு செயலிற்
செல்லுதல் அறமோ? சீச்சீ இழிவாம்;
தெருவிடை இவ்வணம் தெரிவையர் விலங்குடன்
வருவது நாணுத் தருவ'தென் றரிவையர்
அறிவுரை போற்சில அறைந்தனர் ஆங்கண்;

### மகளிர் வீரம்

'ஆடவர் போல அரிவையர் தாமும்
நாடும் மொழியும் நமதென எண்ணிப்
பாடு படுமிவர் பண்பினைப் போற்றுதும்;
விஞ்சுந் துயரினை வீறுட னேற்கும்
வஞ்சியர் நெஞ்சுரம் வாழ்த்துதும் வாழ்த்துதும்;
நெடும்பகை தமிழுக்கு நேர்ந்ததே என்று
குடும்பப் பணியாக் குறித்தறப் போரிற்
பங்கு கொண்டதோர் பாங்கினை ஏத்துதும்;
மங்கையர் இவரென மதித்தலு மின்றிச்
செங்கை பிணித்துத் தெருவிடை யிழுத்துச்
செல்லுமோ ரரசும் செங்கோ லரசோ?
நல்லார் எவரும் நாணுந் தகைத்' தெனப்
பல்லார் குழுமிப் பாவையர் கூறினர்;

---
வென்றி - வெற்றி, மிடைந்தன - கலந்தன, தன்றுணை - கணவன், நாணுத்தருவது - நாணம்தருவது.

## பித்தர் செயல்

கற்றவர் சிலர்தாம் மற்றிவர்க் கண்டு
'வெற்றொலி என்படும்? விளைபயன் ஒன்றிலை;
பற்றுளம் உடையரேல் பைந்தமிழ் கசடறக்
கற்றுளந் தெளிக! மற்றவர் தமக்கும்
ஐயந் திரிபற அதனை விளக்குக!
செய்யுந் தொழிலிது செந்தமிழ்க் காக்கம்;
நையும் வகையால் நலிவுகள் எய்திக்
கையில் விலங்குடன் கடுஞ்சிறை புகலால்
வையம் புகழும், வாழ்வுகள் நலியும்;
முத்தமிழ் வளர்க்க முயல்வான் வேண்டிப்
பித்தர் செயலினைப் பேணுதல் முறையோ?
எத்துணைப் பயன்தரும் இச்செயல்' என்றனர்;

## உரிமைப் போர்

'கசடறக் கற்றனர் கற்றவை உரைத்தனர்
நசையினை ஊட்டினர் நற்றமிழ் வளர்த்தனர்;
ஆயினும் உரிமையும் அதற்குரி நிலையும்
ஏயும்நன் மதிப்பும் ஈண்டதற் கிலையே!
உரிமையும் நிலையும் ஒடுங்கி வருங்காற்
பெருமையும் பிறவும் பேசிப் பயனென்?
அரசியல் நெறியால் அயன்மொழி புகுமேல்
வருமொழி ஒன்றே வளம்பெறும் செழிப்புறும்;
செந்தமிழ் ஆட்சி சிறப்புறல் யாங்ஙனம்?
இந்த நிலையினை எண்ணியோர் இவர்தாம்
எத்தகு துயரும் ஏற்போ ராகி
முத்தமிழ் வளர்க்க முனைந்தனர்; தமிழின்
பித்தராய்ப் பத்தராய்ப் பேணினர் அறப்போர்

---

முயல்வான் - முயல.

இத்தகு நெறியும் இன்றுள நிலையில்
வேண்டுவ தொன்றே விளைபயன் உறுதி;
வரும்நம் பரம்பரை வாழ்வினை வேண்டிப்
பொருமிவர் முயற்சியைப் போற்றுதல் வேண்டும்' என்
றாயும் அறிவினர் அறைந்தனர் புகழ்ந்தனர்;

### சோற்றுக் கவலை

அறநெறி பிறழா அறப்போர் வீரரை
அரசியல் வாதிகள் அறைந்தனர் சிலசொல்
'உடனிலை ஓம்பவும் உயிர்நிலை பெறவும்
உடனடித் தேவை உணவே யன்றோ?
சோற்றுச் சிக்கல் மாற்றும் வழியைச்
சாற்றுவ தன்றி மாற்று நெறியில்
மக்களைத் திருப்புதல் மடமை யாகும்;

### ஆட்சியில் ஆசை

சிக்கலை வளர்க்கும் நற்கலை வல்லார்
மொழியைக் காக்க முற்படு வார்போல்
வழிவகை செய்துதம் வாழ்வைப் பெருக்கினர்;
ஆட்சியில் இவர்க்கோர் ஆசை தோன்றலால்
மாட்சிமை யில்லாச் சூழ்ச்சிகள் செய்தனர்;
நாட்டை யாளும் நற்றிறன் தெரியார்
கேட்டினிற் செலுத்துவர் கீழ்நிலைக் காக்குவர்;
நாட்டவர் இவரை நம்புதல் ஒழிக'
என்றெலாம் பழித்தும் இழித்தும் உரைத்தனர்;

### சோறும் மொழியும்

'உயிர்நிலை பெறவும் உடலினை ஓம்பவும்
வயிறு நிறைக்கும் வாயுணா வேண்டும்;
வேண்டுவ தில்லென விளம்பினர் எவரோ?

---

உணா - உணவு

மூண்டெழு விலங்கு முதலா வுள்ளவும்
என்பு மில்லாப் புன்புழு முதலவும்
அன்புடன் முயல்வ தவ்வுணாப் பெறவே;
புழுவும் விலங்கும் மொழியறி வில்லன;
தொழுதகு பிறப்பெனத் தூயவர் ஓதிய
விழுமிய மாந்தர் மொழியறி யுடையரால்
விலங்கினும் புழுவினும் வேற்றுமை தெரிய
நலங்கிளர் மொழியினை நயந்தனர் ஓம்பிட;
ஓம்பும் முயற்சியில் உறுதுயர் அடைந்து
தேம்பும் வாழ்வில் சிதைந்தவர் பலர்பலர்;

**குடியரசு கொடுத்த உரிமை**

ஆட்சியில் ஆசை அரும்புதல் தீதோ?
மாட்சிமை யின்றெனின் மற்றவர் அங்கே
பற்றுதல் விடாஅது சுற்றுதல் ஏனோ?
பாரா ளுரிமை பரம்பரைச் சொத்தோ?
யாரா கினுமவ் வாட்சியில் அமரக்
குடியர சாட்சி கொடுத்துள துரிமை;
ஆளும் நற்றிறம் அமைந்தவர் இவரென
வேளை வருங்கால் விளங்குத லுறுதி;

**அறப்போர் வெல்லும்**

இன்றிவர் அறப்போர் இயற்றிய ததற்கோ?
நன்றறி மாந்தர் நவிலார் அங்ஙனம்;
பொய்ம்மை எத்தனை புகலினும் நிலைக்குமோ?
மெய்ம்மை எத்துணை மறைக்கினும் அழியுமோ?
அறப்போர் வெல்லும் அன்னை மொழியை
மறப்போர் ஆட்சி மண்ணினுட் செல்லும்'
எனச்சில தலைவரும் இயம்பினர் ஆங்கண்;

விடா அது - விடாமல்

## சிறையகம் புகுந்தனர்

மனத்தொடு பட்டது மறைத்த லின்றி
அனைத்தும் வெளிப்பட அறைந்தன ராகி
ஒட்டியும் வெட்டியும் உரைபல நிகழ்த்திப்
பட்டி மன்றெனப் பலர்பலர் நிற்க,
அறப்போர் நிகழ்த்திய அரிவையர் தாமும்,
குறட்பே றுடையார் குன்றுரை யடிகளும்
இறப்பே எனினும் ஏற்போம் என்ற
வரிப்போத் தனையரும் வாழ்த்தொலி யுடனே
சிறைக்கோட் டத்துட் சென்றனர் சிரித்தே.

---

வரிப்போத்து - புலி

# 31. விடுதலைக் காதை

### சிறையும் விடுதலை வீரரும்

கருங்கற் சுவரும் இரும்பின் கம்பியும்
திருந்திய நெஞ்சகம் பொருந்திய உணர்ச்சியைப்
பிரித்திட வல்ல பெற்றிமை யுற்றவோ?
குறித்தநற் கொள்கையர் கொடுஞ்சிறைக் கொட்டிலுட்
கிடப்பினும் நாடும் கிளர்ந்தெழும் அவரும்
தனித்தனி பிரிந்திடத் தகுவரோ? விடுதலை
வேட்டெழும் வீரர்தம் ஏட்டினில் அந்நிலை
காட்டுதல் கூடுமோ? கேட்டதும் இல்லை;
பூங்கொடி யுளத்துப் பூத்தநல் லார்வம்
யாங்ஙனம் அகலும்? ஓங்கி வளர்ந்தது,

### பூங்கொடி புலம்பல்

இனிமை மிகுதமிழ் இயம்பும் வாயினள்
தனிமை தருதுயர் தாங்கி யிருப்பவள்,
நனிமிகும் உணர்வொடு நவின்றனள் இவையிவை,
'முன்னர் ஒருநாள் மூடிய சிறையுள்
தன்னந் தனியாய் இன்னலிற் கிடந்தேன்
செய்யாப் பழியைச் செய்தேன் என்று
பொய்யாற் சிறையுட் புகுத்தினர் கவன்றேன்;
இன்றென் தாய்மொழி இடுக்கண் துடைத்திடும்
நன்றமர் நடாத்தி நானிலம் அறியச்
சென்று புகுந்தேன் சிறையகம்; அதனால்
ஒன்றும் மகிழ்வால் உளங்களிக் கின்றேன்;

---

ஒன்றும் - பொருந்தும்

## உரிமை பெறுமுன் இறவேன்

நன்று புரிவோர் நலிவுறல் இயல்போ?
தூய்தமிழ் வாழத் தொண்டுகள் புரிந்தேன்,
தாய்மொழி வளரத் தந்தேன் வாழ்வு,
நல்லற மென்ற இல்லறந் துறந்து
சொல்லறம் பூண்டு சுற்றினேன் யாண்டும்,
கல்லெறி பட்டுக் காயம் உற்றேன்,
இடுபழி யேற்றேன் இருஞ்சிறைப் பட்டேன்,
கெடுவழி செல்லாது நடுநிலை பிறழாது
அடுபகை நீக்க அறப்போர் தொடுத்தேன்,
உயிரும் ஈய உறுதி பூண்டுளேன்,
இயலிசை கூத்தெனும் என்தமிழ் உரிமை
எய்துமுன் இறக்க ஏலேன் தாயே!

## எதை நான் எண்ணுவேன்

செய்தஎன் பணியெலாம் சீர்பெறுங் கொல்லோ?
வைதலும் வாழ்த்தலும் வழங்கியோர் தாய்மொழி
தழைத்திடச் சேர்ந்துடன் உழைத்திடு வார்கொலோ?
தனிப்பகை நீங்கி ஒருப்படு வார்கொலோ?
நற்றமிழ் ஈங்குக் கொற்றம் புரியக்
கற்றவர் மற்றவர் கலந்துழைப் பார்கொலோ?
பகுத்துணர் வூட்டிப் பைந்தமிழ் கூட்டி
அகத்துள் ஏற்றிய அணையா விளக்கம்
நின்றொளி வீசி நிமிர்ந்தெழுங் கொல்லோ?
இன்றுள நிலையில் எவரைநான் எண்ணுவேன்?

கொற்றம் - அரசு.

### ஒவ்வொரு வகையினர்

ஒவ்வொரு தமிழரும் ஒவ்வொரு வகையினர்
ஒவ்வொரு வகையும் ஒவ்வொரு நிலையின;
ஒவ்வொரு நிலையும் உன்னுதல் தன்னலம்;
தன்னலம் தவிர்ந்து தமிழ்நலங் கருதித்
தண்டமிழ்க் குரிமை தந்தனர் என்னும்
ஒளிதெரி யாமுனம் உயிர்பிறி தாக
வழிவரு மோவென அழிதுய ருற்றேன்;

### நின் கடன்

அன்னை மொழிக்கே அரியணை வேண்டும்
என்னும் ஆசை என்னைப் பிணைத்தது;
நின்மக ளாசை நிறைவுறச் செய்வது
நின்னை யல்லால் பின்னை எவர்கடன்?
சூழ்நிலை யொன்றும் துணையெனக் கொளாது
வாழ்நா ளெல்லாம் வண்டமிழ் மொழிக்கே
உழைத்துழைத் திருந்தேன் உறுபயன் என்கொல்?

### பொற்காலம் பூக்குமோ?

மழைத்துளி கண்ட வான்பயிர் போல
முளைத்ததோர் உணர்ச்சி! தழைத்தது தாய்மொழி!
புதியபொற் காலம் பூத்தது! நாட்டில்
முதியரும் இளைஞரும் மூண்டெழுந் தார்த்தனர்!
என்றுமுள தென்றமிழ் என்னும் வாய்மொழி
நின்று நிலைத்தது எனுநிலை வருங்கொலோ?'
என்றுபல புலம்பி இருவிழி சோர;

---

பின்னை - பின்பு.

## பூங்கொடி நோய்வாய்ப்படல்

'வரும்வரும்' என்றுசிறையகம் திறந்தே
ஒருமகள் வந்தவண் உணவொடும் நின்றனள்;
திருமகள் உணவினைத் தீண்டவும் செய்திலள்;
வருமகள் வருந்தி வஞ்சியின் உடம்பைத்
தொட்டனள்; தழலாய்ச் சுட்டது மெல்லுடல்;
சட்டெனக் காவலர்க் குற்ற துரைத்தனள்;

## மருத்துவ மனைக்கு விலங்குடன் செல்லல்

வெப்பு நோயின் வேகம் ஏறி
ஒப்பிலாள் படுதுயர் உணர்ந்த காவலர்
குற்றம் புரியா நற்றமிழ் மங்கையைப்
பற்றும் விலங்கொடு பற்றினர் சென்று
மருத்துவ மனையிற் கிடத்தினர் அந்தோ!

## துவண்டனள் பூங்கொடி

ஒருத்தியின் நல்லுடல் உருக்குலைந் திருந்தது;
சிரித்தசெவ் வாயிதழ் விளர்த்துக் கிடந்தது;
செந்தமிழ் பேசிச் சிவந்தஅவ் வாய்தான்
அந்தம் இழந்து நொந்து கிடந்தது;
குழலோ யாழோ குரலோ என்னும்
அழகிய இசைதரும் மிடறெழில் சிதைந்தது ;
குழலின் காடு குலைந்து பறந்தது;
பிறையினைப் பழித்துப் பேசிய நுதலெழில்
குறைந்ததோ மறைந்ததோ கூறுவ தறிகிலேம்;
குவளைக் கண்கள் கூர்மை யிழந்தன;
தவழும் அருளொளி இருளில் தணிந்தது;
படர்ந்த பூங்கொடி பரிதியின் கொடுமை
தொடர்ந்து தாக்குறத் துவண்டது போல
மடந்தை உடலம் நுடங்கிக் கிடந்தது;

---

அந்தம் - அழகு, மிடறு - கழுத்து.

### ஆள்வோர் ஆணை

மருத்துவர் பலப்பல மருந்துகள் தந்தனர்;
நெருப்பெனச் சுடுநோய் நெகிழ்ந்திட வில்லை;
ஒருநாள் இருநாள் ஓடி மறைந்தன;
மறுநாள் வெப்பம் சிறிதே தணிந்தது;
தணிந்து தணிந்து தண்ண்ணெனக் குளிர்ந்தது;
முனிந்து சிறையுள் மூடிய அரசு
கனிந்துளம் நெகிழ்ந்து கடுநோ யுற்ற
பூங்கொடி தன்னைப் பூட்டிய சிறையகம்
வாங்குக என்ன வழங்கிய தாணை;

### தமிழணங்கின் தோற்றம்

அவ்விடை எவரோ ஆயிழை தன்பாற்
செவ்விதிற் சிலசொல் செப்புதல் போலச்
செவியிற் படலால் செந்தமிழ்ச் செல்வி
குவியிமை திறந்து கூர்ந்து நோக்கினள்;
காலிற் சிலம்பும் கையில் வளையும்
நூலிற் சிறிய நுண்ணிடை தன்னில்
மணிமே கலையும் மார்பில் மணியும்
அணிமிகு செவியில் அரியகுண் டலமும்
அணியும் ஒருத்தி ஆயிடை நின்றவள்;

### தமிழணங்கின் உணர்ச்சிமொழி

'என்னுயிர் மகளே! பொன்னிகர் மகளே!
நின்னலங் கருதிலை, என்னலங் கருதினை;
உண்டுஞ் சுவைத்தும் உயிர்வாழ் உலகில்
தொண்டுகள் புரிந்தே துவண்டனை நாளும்;
பெருத்த உடலினைப் பேணுவா ரிடையே
கருத்தினை வளர்த்தாய்! பொறுப்பினை வளர்த்தாய்!
உணவினை வேண்டி உழல்வா ரிடையே
உணர்வினை ஊட்டி ஊட்டி வளர்த்தனை;

என்மகார் தாமே ஒன்னா ராயினர்;
நின்னால் எனக்கு நீணிலத் துரிமை
இன்னே வாய்க்குமென் றெண்ணி யிருந்தேன்;
கொன்னே கழிவதோ மின்னே' என்றனள்;
தன்னே ரில்லாத் தையல் பூங்கொடி,
அன்னா யெனுஞ்சொல் அரைகுறை யாகச்
சொல்லா முன்னர்த் துணைவிழி கசிந்தது;
நல்லாள் விழிமலர் நனைந்தது குவிந்தது;

**விடுதலை விடுதலை**

விடுதலை ஆணைத் திருமுகம் ஏந்தி
நெடுமகன் ஒருவன் நின்றனன் ஆங்கண்;
மருத்துவர் ஆங்கே மனமுவந் தோடி
ஒருத்தியின் முகத்தை உற்று நோக்கினர்;
விடுதலை விடுதலை விடுதலை என்றனர்;
உடலெனுஞ் சிறையுள் ஒடுங்கிக் கிடந்து
படுமுயிர் சென்றது விடுதலை பெற்றே!

காதைகள் 31
வரிகள் 5243

---

மகார் - மக்கள். ஒன்னார் - பகைவர், இன்னே - இப்பொழுதே, கொன்னே வீணே.

# வீரகாவியம்

# நன்றியுரை

கோபிச்செட்டிப் பாளையத்தைச் சார்ந்த பாரியூர் நஞ்சக் கவுண்டன் பாளையத்து நல்லாக் கவுண்டர் இல்லத்திலிருந்து 7-6-1966-இல் இந்நூலை எழுதி முடித்தேன். அவ்வமயம் அவர்தம் துணைவியாராகிய வணக்கத்திற்குரிய வேலம்மாள் அவர்கள் காட்டிய தாயன்பும் துணைபல புரிந்த மக்களின் பேரன்பும் என்றும் நினைவுகூரத் தக்கன.

இந்நூலை அச்சிட்டு வெளிக்கொணர்ந்த என் தந்தைக்கு நிகராய அண்ணல் சுப்பிரமணியனார் அவர்கட்குயான் என்றும் உரியேன்.

நூல் அச்சேறுங்கால் அனைத்து வகையானும் துணை புரிந்த என் இளவல்மார் புலவர் ஆ.பழநி, புலவர் முத்துசம்பந்தன் இருவர்மாட்டும் நன்றி கலந்த அன்பினேன்.

காரைக்குடி
அக்தோபர் 1970

அன்புள்ள,
முடியரசன்

# இந்நூலைப் பற்றி

*காதல், வீரம், கையாற்றவலம் முப்பெருஞ் சுவையும் இப்பெருங்காப்பியத்தில் முகிழ்த்து நிற்கும். காதலும் அவலமும் கரையென நிற்க வீரப்பேராறு வீறாட்டுப் பாயும். காவியம் எங்கும் கன்னல் தமிழே மேவிடும். படிக்கத் தொடங்கின் இடையில் நிறுத்தும் எண்ணம் எழாது!*

## காப்பிய உறுப்பினர்

| | | |
|---|---|---|
| மதலைக்கோ | - | மூவகநாட்டு வேந்தன் |
| மாவேழன் | - | மூவகத்தின் படைத்தலைவன்; உலகவீரன் |
| வெண்கோடன் | - | மூவகத்திற்குட்பட்ட வெண்ணகரத் தலைவன் |
| மானத்தி | - | வீரமிக்க வெண்ணகரத்துப்பெண் |
| கோவூரன் | - | மாவேழன் துணையால் முடி பெற்றவன். |
| வெண்பூதன் | - | மதலைக்கோவின் பகைவன் |
| நம்பியன் | - | மதலைக்கோவின் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அமைச்சன். |
| பெருங்கனகன் | - | நாவலநாட்டு வேந்தன். |
| வயத்தரசன் | - | நாவலத்துக்குட்பட்ட வயந்த நகரத்தரசன். |
| வேல்விழி | - | வயத்தரசன் மகள். |
| முறுவலன் | - | மாவேழனுக்கும் வேல்விழிக்கும் பிறந்த மகன்; கோளரி என்னும் சிறப்புப் பெயரினன். |
| மாவலியன் | - | பெருங்களகன் படைத்தலைவர்; |
| தடவலியன் | | கோளரிக்குத் துணையாக வந்தவர். |
| இளவேலன் | - | கோளரிக்கு உறவினர்; மெய் காப்பாளன்; |

# தமிழ் வாழ்த்து

மலரனைய திருவடியில் சிலம்ப ணிந்து
மணியொளிரும் மேகலையை இடைக்க ணிந்து
பலர்புகழ்சிந் தாமணியை மார்பிற் பூண்டு
பார்புரக்கும் திருக்குறளே செங்கோ லாகக்
குலவுபுகழ்த் தூதுமுதல் தொண்ணூற் றாறு
குறுநூல்கள் பணிந்துநின தேவல் செய்ய
நலமுயர்நற் றொகைநூல்கள் ஆயம் ஆக
நன்கமைதொல் காப்பியமாம் கட்டில் ஏறி,

பாவலர்தம் நெஞ்சமெலாம் ஆட்சி செய்யும்
பைந்தமிழே நின்வாயிற் புறத்தே நிற்கும்
காவலன்யான்; ஆண்டறியேன் எனினும் நின்றன்
காவலன்யான்; எனையாளும் அம்மே உன்றன்
கோவிலுறும் வாயிலன்யான்; பெருமை முற்றும்
குறித்துரைக்கும் வாயிலன்யான்; அதனால் என்றன்
பாவிலுறும் சொல்லிலெலாம் எழுத்தி லெல்லாம்
பாட்டுவெறி யூட்டியருள் அன்னாய் நன்றே.

## காட்சிப் படலம்

காணத்தால் இயல்வளைகள் விளங்கும் செங்கை
கச்சுக்குள் ளடங்காமல் அழுங்கும் கொங்கை
பாணத்தால் வடித்தெடுத்த விழியின் ஓரம்
பாய்ந்துழல்வோன் இவ்வனைத்தும் கண்டான் வீரன்.

இயல் – 27

–காட்சிப் படலம் 104.

# இயல் - 1

**முனைப்பாலும் நினைப்பாலும் பகைமை விஞ்சி**
**மூவகமும் நாவலமும் முரணி நிற்கும்.**

விண்தொட்டு முகில்மணந்த மலைமு கட்டின்
வெண்ணிறத்துப் பனித்திரள்கள் உருகி நீராய்ப்
பண்பட்ட இசையெழுப்பி அருவி யாகிப்
பாறையெலாம் முழவொலிக்கப் பாய்ந்து வீழ்ந்து
மண்தொட்டுச் சென்றுநில மகளைக் கூடும்;
மனமகிழப் பொன்கொழித்து வளங்கள் காட்டும்;
தண்ணிட்டு லிரைந்துசெலும் புனலா றென்னும்
தனிப்பெயரைத் தாங்குமது வையங் காக்கும். 1

காக்கின்ற புனலாற்றின் தென்பு றத்தே
கடிமதில்சூழ் மூவகமென் றொருபேர் தாங்கும்
தேக்குபுகழ்த் திருநாடுவிளங்கித் தோன்றும்;
திசையெட்டும் அந்நாட்டை வணங்கி நிற்கும்;
பூக்கின்ற மலர்தோய்ந்து தென்றல் வீசப்
பொழிநறவந் திரண்டோடும் பொழில்கள் சூழும்;
தேக்குமணி மாளிகைகள் நிவந்து நிற்கும்
தெருவனைத்தும் நீண்டகன்றே எழிலைக் கூட்டும். 2

கலகலவென் றொலித்துமரம் தலைய சைக்கக்
காற்றுலவுங் கனிச்சோலை சூழும் நாடு;
சலசலவென் றார்த்தருவி இறங்கும் சாரல்
சந்தனமும் அகில்தேக்கும் காட்டும் நாடு;

---
தண்ணிட்டு - குளிர்ந்து, நறவம் - தேன். நிவந்து - உயர்ந்து. கடிமதில் - காவல் பெருந்திய மதில்.

நிலமுழுதும் செந்நெல்லும் செங்க ரும்பும்
நீள்கமுகு வாழையொடு செழிக்கும் நாடு;
பலவளமும் கெழுமிநலம் ஓங்கும் இந்தப்
பழநாட்டை ஆண்டிருந்தான் மதலைக் கோமான். 3

வளம்பொலிந்து நிலங்கொழிக்கச் செய்யும் ஆற்றின்
வடபுலத்தே நாவலநா டென்று சான்றோர்
விளம்புகின்ற பேர்படைத்த பெருநா டொன்று
விளக்கமுறு தொல்புகழாற் சிறப்புற் றோங்கும்;
களம்புகுந்து திறங்காட்டி வாகை சூடிக்
களிக்கின்ற தொகைமறவர் சூழும் நாட்டில்
இளம்பருவப் பெருங்கனகன் செங்கோ லோச்சி
இணையில்லாச் சூழ்ச்சியினால் மேன்மை பெற்றான். 4

இனத்தாலும் மனத்தாலும் பண்பாட் டாலும்
இருவேறு நெறியினவாய் இயங்க லானும்,
தனத்தாலுங் குணத்தாலும் வேறு பட்டுத்
தனித்தனியே ஆட்சிமுறை நடத்த லானும்,
முனைப்பாலும் நினைப்பாலும் பகைமை விஞ்சி
முரண்பட்டுப் பலகாலும் சமரே வேண்டும்
வினைப்பாலிற் கொலைப்பாலில் மூழ்கி மூழ்கி
விளம்பியஅவ் விருநாடும் மகிழ்ந்து நிற்கும். 5

படைத்தலைமை ஏற்றுள்ளோர் தனித்தி றத்தால்
பயிற்சிமிகு போர்த்திறத்தால் வெற்றி தோல்வி
படைத்திடுதல் இருபுறத்தும் மாறி மாறிப்
பகலிரவு சுழல்வதுபோல் இங்கு மங்கும்
அடிக்கடிசென் றலமந்து திரியும் மீளும்;
ஆதலினால் ஒருநாட்டில் ஏற்றங் காணும்;
கிடைத்ததுவும் மறுநாளில் மாற்றங் காணும்;
கீழ்மேலாய் மேல்கீழாய்ச் சுழலும் நாடே. 6

கெழுமி -பொருந்தி. சமர் - போர்
அலமந்து - சுழன்று.

# இயல் - 2

**முழுவலியன் மாவேழன் என்னும் வீரன்**
**மூவகத்தின் படைத்தலைமை பூண்டு நின்றான்.**

அக்காலை மூவகத்தின் படைந டாத்தும்
ஆணழகன் பலகளிற்றின் வலிமை மிக்கான்;
எக்காலும் போர்க்களமே இருப்பாக் கொண்டான்
ஏறனையான் மாவேழன் எனும்பேர் பூண்டான்;
மிக்காரும் ஒப்பாரும் காணாச் செம்மல்
மேவலரை நடுக்குறுத்தும் இமையா நோக்கன்;
புக்காரும் வெலற்கரியன்; அவன்பேர் கேட்டால்
பூவேந்தர் நடுநடுங்கிப் பதுங்கி நிற்பர். 7

மூவகமே அவன்வணங்கும் அன்னை யாகும்;
முதல்மகனாம் மன்னவனே தந்தை யாவன்;
சேவகரே மனம்விழைந்த சுற்ற மாவர்;
சிரிப்பொளிரும் இடைமருவும் செவ்வாய் வாளின்
நாவகமே காதலியின் இதழ்க ளாகும்;
நள்ளார்தம் கூர்வாளால் முகத்தும் மார்பும்
பாவியமேல் விழுப்புண்ணே முத்த மாகும்;
பகைவருடல் நிறைகளமே மெத்தை யாகும். 8

கூர்வேலும் வாய்வாளும் பகையைத் தாக்கிக்
குவிக்கின்ற உடலங்கள் சிந்தும் செந்நீர்
பார்மேவி ஒன்றாகி ஓடும் ஆற்றின்
பரப்பதுவே அவன்குதித்து நீந்தும் வெள்ளம்;
ஏர்போலும் ஒருகருவி இடித்துத் தாக்கி
எழுகின்ற கூக்குரலே யாழின் பாட்டு;
சேர்காலை இருவாளும் எழுப்பும் ஓசை
செவிக்கினிய முழவோசை அவனுக் காகும். 9

மேவலர் - பகைவர்.புக்குஆரும் - யாரும் புகுந்து. ஒளிரும் - விளங்குகின்ற நாஅகம் - விளிம்பு. நள்ளார் - பகைவர். பாவிய - படர்ந்துள்ள.

ஆடரங்கம் போர்க்களமே அவனுக் காகும்
ஆர்த்துவரும் மறப்படைகள் பொம்மை யாகும்;
கூடரங்கில் வெட்டுண்ட பகைப்பு லத்தார்
குறையுடலம் எழுந்தெழுந்து குதிக்குங் காட்சி
நாடகங்கள் போலவற்கு மகிழ்ச்சி நல்கும்;
நாளெல்லாம் இஃதொன்றே தொழிலாக் கொண்டு
நாடனைத்தும் பணிவித்தான்; மூவ கத்தின்
நற்பெயரே மிகுவித்தான்; புகழ்கு வித்தான்.

---

பார் - நிலம்.

# இயல் - 3

**மூவகத்தின் வலிமைமிகப் பொலியக் கண்டு**
**நாவலத்துப் பெருங்கனகன் நாணி நின்றான்.**

மூவகத்தின் பெயரோங்கி வலிவும் ஓங்கி
முன்னிற்கும் பகையின்றித் தலைமை தாங்கிப்
பூவகத்துப் பொலியுமதன் பெருமை கண்டு
புழுங்கிமனம் வெதும்பிஅழுக் காறு கொண்ட
நாவலத்துப் பெருங்கனகன் நாண முற்றான்;
நாடோறும் அந்நினைவால் வாட லுற்றான்;
நோவகத்துப் பெருகிவரப் பகைவர் நாட்டை
நுண்மதியால் வெல்லுதற்கு நினைத்தான் கேட்டை. 11

'தோள்வலிமைப் படைசெலுத்தும் தலைவன் வேழன்
துணையிருக்க மூவகத்து மதலைக் கோவை
ஆள்வலிமை மிக்கிருந்தும் போரில் வெல்லல்
அரிதாகும்; மன்னனுக்குத் துணைநிற் பானைச்
சூழ்மதியாற் பிரித்தொதுக்கல் வேண்டும்; இன்றேல்
தோன்றலவன் உயிர்தானே பிரிதல் வேண்டும்;
நாள்வரு'மென் றுண்ணினைந்து வேந்த னோடு
நட்புரிமை பெருங்கனகன் பூண்டு நின்றான். 12

---

பூ - உலகம் நோவு - வருத்தம் உண்ணினைந்து - உள்நினைந்து.

# இயல் - 4

**மன்னவன் மொழியால் மனமிகப் புலந்து**
**பன்னரும் வேழன் படர்ந்தனன் பிரிந்தே.**

ஆட்டாளுந் திறமில்லான் மதியு மில்லான்
அரியணையில் அமர்தகவு மில்லா னேனும்
நாட்டாண்மை பெற்றிருந்தான் மதலைக் கோமான்;
நடத்தையெலாம் பெயருக்குப் பொருந்தி நிற்கும்;
காட்டாளி வலிமைக்குக் காட்டாய் நின்று
கருதலரை வெருவுறுத்தும் மாவே ழற்குக்
கூட்டாளி எனவிருப்பான் ஒருகால்; பின்னர்க்
குணமாறிப் பகையாளி போல நிற்பான். 13

கூடுவதும் மாறுவதுந் தொழிலாக் கொண்ட
கொற்றவன்பாற் படைத்தலைவன் சினந்து தன்னூர்க்
கோடுவதும் சான்றோர்கள் சந்து செய்ய
உளமிரங்கி மீளுவதும் வழக்க மாகும்;
ஏடுவிரி மலர்த்தொடையல் மார்பின் மன்னன்
'என்பிழைக்கு வருந்துவல்யான்' என்று ரைக்கும்;
நீடுபுகழ்ப் பெருவீரன் நாட்டின் காதல்
நெடிதோங்கி நின்றமையாற் குறைபொ றுக்கும். 14

வருபொருளை ஆய்ந்துணரா மன்னன் ஓர்நாள்
வாய்காவா துரைத்தமையாற் பிணங்கி வேழன்
"ஒருபொழுதும் ஈங்கினிநான் உறைதல் வேண்டேன்;
ஒன்னார்தம் படைநாப்பண் சிக்குங் காலம்
வருபொழுது தன்மடமைக் கிரங்கி வேந்தன்
வாய்விட்டுப் புலம்புவதைக் காண்பேன்" என்று
தரியலர்க்குக் கூற்றாவோன் பரிமா வேறித்
தனிமையொடு கடிநகரின் நீங்கிச் சென்றான். 15

---

ஆட்டாளும் திறம் - நிருவகிக்கும் ஆற்றல்.ஆளி- யாளி என்னும் விலங்கு. காட்டு - எடுத்துக்காட்டு. கருதலர் - பகைவர். சந்து - சமாதானம். தொடையல் - மாலை.

சினந்தெழுந்த படைமுதல்வன் புரவி ஏறிச்
    செல்நெறியுந் தேர்கிலனாய் மனத்தின் போக்கில்
வனங்கடந்து வழிகடந்து புனலா றென்னும்
    வளநதியுங் கடந்திருபால் இயற்கை காட்டும்
மனங்கவரும் எழிலெல்லாங் கண்டு துய்த்து
    வயந்தநகர்ப் புறத்தொருபாற் சார்ந்து, மேக
இனந்தவழும் மலைச்சாரல் நண்ணி, ஆங்கண்
    இழிதருமோர் அருவியினைக் கண்டு நின்றான். 16

---

வருபொருள் - எதிர்காலச் செய்தி. ஒன்னார், தரியலர் - பகைவர். நாப்பண் - நடு. பரிமா - குதிரை. கடிநகர் - காவல்நகர், தேர்கிலனாய் - ஆராயாதவனாக. இழிதரும் - இறங்கும்.

# இயல் - 5

**வழிபல கடந்து வருமா வேழன்**
**கழிமிகு களைப்பாற் கண்ணயர்ந் திருந்தான்,**

வழிகடந்த தளர்வகற்றி, வேட்டம் ஆடி,
வருத்துபசி களைந்தொருபால் ஆலின் நீழல்
விழிகுவிந்து துயிலுமுனம் பரிமு கத்து
வீக்குகடி வாளமொடு சேணம் மாற்றிக்
கழிமிகுந்த நடையலுப்புக் களைவான் வேண்டிக்
கட்டவிழ்த்துப் புற்றரையில் மேயச் செய்து,
வழியடர்ந்து கொடிபடர்ந்த கான கத்தில்
வட்கார்தம் எல்லை தனிற் கண்ண யர்ந்தான். 17

மேய்கின்ற அப்பரிமான் அவற்குத் தோழன்;
மெய்வலியும் மனவலியும் மிக்க தாகும்;
பாய்கின்ற வேகத்திற் காற்றை விஞ்சும்;
பாரிலதை நிகர்க்கின்ற பரியொன் றில்லை;
மேய்கின்ற பொழுதத்தும் அவனை நோக்கி
மென்புல்லைச் சுவைத்திருக்கும்; கதிரோன் மேற்கில்
சாய்கின்ற வேளைவரக் கனைத்த வண்ணம்
சரிவிலது திரிந்ததுவே அங்கு மிங்கும். 18

வீக்கு - கட்டிய, வட்கார் - பகைவர்.

# இயல் - 6

**மாவேழன் ஏறிவந்த பரிமா தன்னை**
**வயந்தநகர்ப் பெருவீரர் கவர்ந்து சென்றார்.**

வயந்தநகர்ப் பெருவீரர் சிலர்தாம் கூடி
மலைச்சரிவின் நெறியிடையே வருவோர் ஆண்டு
வயங்கெழுமும் ஒருபரிமான் கலனை யின்றி
வாய்பற்றுங் கடிவாளக் கட்டு மின்றி
நயந்துபசும் புன்மேய்ந்து திரியக் கண்டார்;
நல்லியல்சேர் இவுளியதன் தோற்றங் கண்டு
மயங்கினராய்க் கவர்ந்துசெலக் கயிறு வீசி
மடக்கினர்அம் மாமடங்கல் மடங்க வில்லை. 19

திடங்காணும் அம்மறவர் திரண்டு நின்று
திறமுழுதும் பயன்படுத்தி முயன்றா ரேனும்
அடங்காது தப்பியது வேழன் பாய்மா;
ஆசைமனம் அடங்காமல் எழுந்து விட்டால்
படும்பாடு படுவரன்றி விட்டார் யாரே?
பாய்புரவி பற்றுதற்கே முனைந்து நின்றார்;
கடன்காரன் இரக்கமிலார் நடுவில் நின்று
கலங்குதல்போல் அப்பரிமான் கலங்கக் கண்டார். 20

சுருக்கிட்டு வலித்தார்கள்; கனன்று சீறித்
துள்ளுபரி கனைத்தமையால் வீரர் அஞ்சி
வெருக்கிட்டு விரைந்தார்கள்; பதுங்கி நின்று
வெற்றிகொள வஞ்சனையாற் சூழ்ந்து வந்தார்;
'செருக்குற்ற புரவிதனை அடக்க லின்றித்
திரும்புகிலோம்' எனவுரைத்துக் கயிறு வீசிப்
பெருங்குற்ற தோள்வலியாற் பிணித்தி முத்தார்;
பெரும்பொழுது போராடிக் களைத்த தாங்கே 21

---
வயம் - வெற்றி, கலனை - சேணம். இவுளி - குதிரை.
மாமடங்கல் - சிங்கம் போன்ற குதிரை.

கொய்யுளையாற் பொலிபுரவி முகத்தான் மோதிக்
கொட்புற்றுக் கொட்புற்றுப் புறங்கால் கொண்டு
மெய்யுளைய உதைத்துதைத்துத் துள்ளித் துள்ளி
மேவலர்தம் பிணிப்பகற்ற இயலா தங்குச்
செய்வழியும் அறியாமற் களைத்த லுத்துத்
திகைப்புறுங்கால் அவ்வீரர் இறுகக் கட்டி
மெய்ந்நலிய வயந்தநகர்க் கீர்த்துச் சென்றார்;
மேலவனைப் பிரியாமா பிரிந்த தந்தோ! 22

வலித்தார் - இழுத்தார், கொய்உளை - வெட்டிவிடப்பட்ட பிடரிமயிர்
கொட்புற்று - சுழன்று.

# இயல் - 7

**மாவேழன் மனமுடைந்து பகைவர் நாடாம்**
**வயந்தநகர் தனிற்புகுந்தான் பரிமா வின்றி.**

களைத்துறங்கும் பெருவீரன் கண்வி ழித்தான்;
கடுநடைய புரவிதனைக் காணா தங்கு
விளித்ததன்றன் பெயர்கூறிக் கூவி நின்றான்;
விடையொன்றுங் கேட்டிலனால்; உரத்து மீண்டும்
உளைப்பரிமா தனைப்பலகால் அழைத்தா னாக,
ஒருகுறிப்பும் காலடியின் ஒலிப்பும் கேளான்;
தளைப்பறியா மறப்புரவி அடிச்சு வட்டின்
தடம்பற்றி நடந்தப்பால் தேடிச் சென்றான். 23

ஒருமுறைநான் அழைப்பினுமென் குரலைக் கேட்டே
ஓடோடி என்பால்வந் தருகில் நிற்கும்
அரும்புரவி யாங்குளதோ எனவ ருந்தி
அந்நெறியே ஏகுமவன் வழியின் நாப்பண்
மருவுபரி அடிக்குளம்பும் வளைத்து நின்ற
மாந்தர்தம தடிச்சுவடும் துதைந்து தோன்ற,
மருவலர்தாம் கவர்ந்தனரென் றெண்ணி நெஞ்சம்
வருந்தினனாய்ச் சுவடுபடும் நெறியிற் சென்றான். 24

'ஏறுபரி ஒன்றிலனாய்ச் சூழ்ந்து செல்லும்
ஏவலருங் காவலரும் இல்லா னாகி
வீறுபெறும் மாவீரன் தனிமை எய்தி,
வீதிவழி தளர்நடையான் வருகின் றா'னென்

---

தளைப்பு -கட்டு, துதைந்து - நெருங்கி,

றூறுபடப் பேசுவரே! மாற்றார் என்னை
உருக்குலைந்த தோற்றத்திற் காண நேரின்
வேறுபட எள்ளிநகை செய்வ ரே!நான்
வீணருக்குப் பழிப்பொருளா ஆனேன் அந்தோ! 25

எளியர்சிலர் பொருதிவனை வீழ்த்தி வீட்டே
இவன்பரிமா தனைக்கவர்ந்தார் போலும் என்றும்
துளியளவும் பிரியகிலாப் புரவி காக்குந்
துணிவிலன்நம் அரசெதிர்க்க வலனோ என்றும்
இளிவரலுக் கிவனொருவன் என்றுங் கூறி
ஏளனங்கள் புரிகுவரே! எனவ ருந்தி
ஒளிகுறையும் முகமுடையான் பரிமா தேடி
ஒன்னலர் தம் நாட்டகத்துப் புகுந்து சென்றான். 26

ஒன்னலர் - பகைவர்

# இயல் - 8

**வயந்தநகர் புகுந்துவரும் மாவே ழற்கு**
**வரவுரைத்தே எதிர்கொண்டான் வயந்த நாட்டான்.**

தனக்குவமை எவருமிலான் தறுக ணாளன்;
தணப்பரிய வெகுளியினான் தனிய னாகி,
மனக்கவலை மீதூர ஊர்தி யின்றி,
மாவேழன் வயந்தநகர் புகுந்த செய்தி,
தனைத்தொழுது மன்னன்பால் ஒற்றர் கூறத்
தார்வேந்தன் வயத்தரசன் விரைந்தெ ழுந்து
சினக்களிற்றின் வலியுடைய வேழன் றன்னைச்
சென்றெதிர்கொள்மனத்தினனாய் நடந்தான் ஆங்கே 27

படைமறவர் புடைசூழச் சென்ற வேந்தன்;
பாரடங்கப் போர்தொடங்கி வென்ற வீரன்
நடைதளர்ந்து துணையிழந்து வருதல் கண்டு
நல்வரவு பலவுரைப்போன், 'வீரர் வீர!
தொடைபுணர்ந்த மலர்மாலை நினக்குச் சூட்டித்
தொழுகின்றேன், எதிர்பாரா வரவு கண்டு
மடைதிறந்த வெள்ளமென இன்பம் பாய
மனங்களித்தேன்' எனமுகமன் உரைத்து நின்றான். 28

---

தணப்பு அரிய - நீங்காத, முகமன் - புகழ்மொழி

# இயல் - 9

**புரவியை வேண்டிப் புகுந்திடும் வேழன்**
**விரவிய அவன்பால் வெகுண்டுரை கூறினன்**

சினமடங்கல் அனையவன்மா வேழன் கொண்ட
சினமடங்க வில்லை; அவன் உருத்து நோக்கி,
'மனமகிழ்ந்து வரவுரைக்கும் மன்னா! நின்றன்
மதிக்குடைக்கீழ் வாழ்ந்திருப்போர் கள்வர் தாமோ?
புனநிழலில் நானயர்ந்து துயிலும் போழ்து
புகுந்துசிலர் என்புரவி கவர்ந்து வந்தார்;
எனதுயிரின் அனையபரி மீட்டுச் செல்ல
இவண்வந்தேன்; விரைந்ததனைக்கொணர் தல்வேண்டும். 29

விரைந்ததனைக் கொணர்ந்திலையேல் மன்னா நீதான்
வீண்பழிக்கே ஆட்படுவை; என்றன் நெஞ்சில்
நிறைந்தெழுமென் சினத்தீக்கு முன்னர் நிற்கும்
நிலைமையினை எய்திடுவை' எனக்க னன்றான்;
கரைந்தசின மொழிகேட்ட வயந்தர் வேந்தன்;
கசந்துமன முளைந்தாலும் மறைத்து நின்றான்
உறைந்தபகை குறைந்திருநாட் டரசும் அப்போழ்
தொருமையுடன் வாழ்வதனால் பொறுமை கொண்டான். 30

மடங்கல் - சிங்கம், உருத்து - சினந்து, புனம் - காடு, இவண் - இங்கே, உளைந்தாலும் - வருந்தினாலும்,

# இயல் - 10

**வயத்தரசன் விருந்தயரப் பணிந்து வேண்ட
மாவேழன் சினந்தணிந்து மனமிசைந்தான்.**

பொறுமையுடன் இவைமொழிவான், 'வீரமொன்றே
பூணாகக் கொண்டொளிர்வோய்! தவிர்க சீற்றம்;
தெறுபுரவி யாண்டுளதே எனினும் நாட்டில்
தேடியதைக் கொணர்விப்பேன்; வருந்தல் வேண்டா;
உறுவலிசேர் நின்பரிமா பிரிந்த செய்தி
உரைத்ததன்பின் தானறிவேன்; பாய்மா தேடத்
திறமுடையார் நாற்புறமும் செலப்ப ணிப்பேன்;
சென்றவர்தாம் கைக்கொண்டே மீள்வர் மேலோய்! 31

கொற்றமுறப் பொருவலியோய்! தேடிச் சென்றோர்
கொய்யுளைய புரவியொடு மீளுங் காறும்
பற்றுடனென் அரண்மனைக்கே எழுந்து போந்து
பாங்குபெற விருந்தினனாய்ச் சின்னாள் வைகிச்
சுற்றமெனக் கருதிஎனைப் பெருமை செய்க!
தோழமையை வளர்த்திடுக! வருக' என்று
கொற்றவனவ் வீரனிடம் கனிந்து நோக்கிக்
குளிர்மொழிகள் பலகூறிப் பணிந்து நின்றான். 32

பற்றலர்தாம் தன்னெதிரில் பணிந்து நிற்பின்
பகைவிடுத்து நகைத்துரிமை பூணல் வீரம்
உற்றவர்தம் கடனாகும்; அதனால் வேழன்
உளங்கனிந்த வயத்தரசன் வேண்டுகோளால்
செற்றமது தவிர்ந்தவனாய் மூரல் பூத்துச்
செழுமனையில் விருந்தயர இசைவு தந்தான்;
கொற்றவன்றன் உள்ளமெலாம் மகிழ்வு பொங்கக்
கோவிலுக்கவ் வேலானை அழைத்துச் சென்றான். 33

---

தெறு - பகைவரை அழிக்கின்ற, கொற்றம் - வெற்றி, கொய்உளை - கொய்யப்பட்டபிடரிமயிர்.
பற்றலர்- பகைவர், மூரல்பூத்து - புன்னகைசெய்து

பாரகத்தை நடுங்குறுத்தும் மடங்கல் போன்றான்
பகரரிய பெருவீரன் வருகை கேட்ட
ஊரகத்து மாந்தரெலாம் குழுமி யாண்டும்
உவகையொடு வாழ்த்தொலிகள் எழுப்பி நின்றார்;
தாரடுத்த மார்பகத்தான் களிற்றின் மேலான்
தலைநிமிர்ந்த தோற்றத்தான் வலமாச் சுற்றிக்
காரடுத்த தலைவாயி லுட்பு குந்தான்;
கண்விழித்துக் கண்டவர்கள் வியந்து நின்றார். 34

குழுமி - கூடி, தார் - மாலை, கார்- மேகம்.

# இயல் - 11

## வயத்தரசன் தருவிருந்தில்
## மாவேழன் மகிழ்ந்திருந்தான்

வருகைதரும் வீரனுக்குப் பெருவி ருந்து
வைத்திருந்தான் வயவேந்தன், கற்றோர் மற்றோர்
பெருமைமிகு படைத்தலைவர் வணிக மாந்தர்
பெருஞ்செல்வர் இவரனையார் குழுமி வந்தார்;
பருவஎழில் நன்மாதர் நடனங் கண்டும்
பருகுவன உயரியன அருந்தி நின்றும்
இரவதனிற் பெரும்பொழுது களிப்பில் மூழ்கி
இன்பமெனும் கடற்பரப்பில் அவன்தி ளைத்தான். 35

உள்ளிருக்கும் குருதிஎலாம் சொட்டச் சொட்ட
உடலங்கள் கூத்தாடும் போரே கண்டோன்
கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் மாத ரார்தம்
களிநடனங் கண்டிருந்தான்; கைகள் கொட்டி
நள்ளிரவுப் பொழுதுவரை மகிழ்ந்தி ருந்தான்;
நயந்துரைகள் பலபேசி அவன்பால் நட்புக்
கொள்ளலுக்கு வந்தவரை அன்பால் நோக்கிக்
கொலைவேலான் உரையாடித் துயிலச் சென்றான். 36

குருதி - இரத்தம் கள் - தேன்

# இயல் - 12

**மாவேழன் விருந்தயர்ந்து கட்டிலின்மேல்**
**மயங்குகையில் எழிலணங்கை ஆங்குக் கண்டான்.**

பஞ்சணையில் மென்தூவி பரவத் தூவிப்
பனிமலரின் இதழ்பரப்பிச் சித்தி ரத்தால்
விஞ்சுமெழிற் கட்டிலில்வெண் துகில்வி ரித்து
விரையகிலின் புகைநிறைத்துத் தோர ணங்கள்
துஞ்சும்அறை எங்குமெழில் விளங்கப் பண்ணித்
துய்யமணி ஒளிவிளக்குத் தொங்கக் கட்டிச்
செஞ்சுவைய தேறல்வகை அருகில் வைத்துச்
செய்வனசெய் தகன்றாரங் கேவல் மாதர். 37

வன்மைமிகு திண்டோளன் வயமா வீரன்
வண்ணஎழிற் கட்டில்மிசை அமர்ந்தான்; தென்றல்
மென்மைமிகு துகிலசைத்துச் சாள ரத்துள்
மெல்லெனவந் துடல்வருட, வானத் திங்கள்
புன்மையிருள் பலகணியுட் புகுதா வண்ணம்
பொலிவுறவே தண்கதிர்கள் செலுத்தி நிற்கத்
தன்மையினைக் கண்டுள்ளம் மகிழ்ந்தி ருந்தான்;
தனைமறந்து விழிகுவிய அணையிற் சாய்ந்தான். 38

நறவருந்திக் களித்தமையால் மயக்கங் கொண்டு
நனவிழந்து மெய்ம்மறந்து துயிலுங் காலை
மறமுயர்ந்த விரிமார்பன் அருகி ருந்த
மதுக்கிண்ணம் விழுந்துருளும் அரவங் கேட்டே

மென்தூவி -அன்னத்தின் மெல்லிய இறகு. துகில் - ஆடை.
விரை - மணம் துஞ்சும் - தொங்கும் தேறல் - மது. வயம் -வெற்றி,
சாளரம் - சன்னல். வருட - தடவ, பலகணி - சன்னல்.

உறவெழுந்து கண்துடைத்து நிமிர்ந்தான்; ஆங்கண்
ஓவியத்துப் பாவையென ஒருத்தி நின்றாள்;
திறமிகுந்த உளம்நடுங்க உடல்வி யர்க்கத்
திகைத்திருந்தான் பகைப்புலத்தும் திகைப்பே யில்லான் 39

இவளனைய எழில்மகளை உலகில் யாண்டும்
இதன்முன்னர் அவ்வீரன் கண்ட தில்லை;
குவளைவிழி கொவ்வையிதழ் பவழ மேனி
கொண்டவளை அழகுருவை இன்று கண்டான்;
தவளநிறத் துகிலுடுத்த தையல் நோக்கித்
தலைகுனிந்தாள் கடைக்கணித்தாள் இதழின் ஓரம்
தவழுமெழிற் புன்னகையைக் காட்டி நின்றாள்;
தனையிழந்தான் கனவிதுவோ எனநி னைந்தான். 40

அரவம் - ஒலி, தவளம் - வெண்மை.

# இயல் - 13

**விழிவேலால் தாக்குண்ட வேழன் ஆங்கே**
**விளம்பரிய காதலெனும் நோயில் வீழ்ந்தான்.**

விழிக்கடையால் அவன்விழியைத் தாக்கி, நெஞ்சில்
வேதனையை உருவாக்கி நின்ற பாவை,
விழித்திமையா முனம்மறைந்தாள்; மறைந்தா ளேனும்
வீரன்றன் மனத்தகத்து நிலைத்து நின்றாள்;
வழிக்கதவந் திறந்தகல்வாள் காற்சி லம்பும்
வளையொலியும் இருசெவிவிட் டகல வில்லை;
பழச்சுளையின் செவ்விதழில் தவழ்ந்த மூரல்
பார்வையைவிட் டணுவளவும் மறைய வில்லை. 41

கற்பனையில் அவையெல்லாம் மீண்டும் மீண்டும்
காட்சிதரக் கனிந்துருகிப் புலம்பும் வீரன்,
'பொற்பதுமை இவள்தானோ? வடிவ மென்ன
பூங்கொடியோ? முழுமதியோ இவள்மு கந்தான்?
முற்படுமவ் விளையமகள் என்னை வென்றாள்!
முழுவலியும் இழந்திங்குத் தளர்ந்து விட்டேன்;
பற்பலபோர் வென்றிருந்தும் இவ் ணங்கின்
பார்வைக்கு மனமுடைந்து தோற்று விட்டேன்! 42

புள்ளுறங்கும் நள்ளிரவில் யாரு மிங்குப்
புகுதரிய தனியறையில், அச்ச மின்றிக்
கள்ளருந்தித் துயில்வேன்முன் வந்து நின்ற
காரிகையார்? எப்பொருட்டால் இங்கு வந்தாள்?
உள்ளிருந்து புறத்தகல்வாள் என்றன் நெஞ்சை
உடன்கொண்டு நீங்கினளே! கொவ்வைச் செவ்வாய்
வெள்ளெயிற்றின் ஒளிசிறிதே இதழில் மின்ன
விரியாமல் விரித்துநகை செய்து சென்றாள்!' 43

மூரல் - புன்னகை. வெள்ளயிறு - வெள்ளியபற்கள்

என்றுபல நினைந்திரங்கி உழலும் வீரன்,
ஏந்திழையின் கருமேகச் சுருளின் கூந்தல்
ஒன்றுமலர் ஒன்றங்கு நிலத்திற் கண்டான்;
ஓடோடி உவந்ததனை எடுத்து மோந்து,
வென்றகன்ற எழிலணங்கின் நினைவே விஞ்சி,
விழிமூடிக் கற்பனையில் மிதந்து சென்றான்;
துன்றமரின் புறப்பொருளே வாழ்வாக் கொண்டோன்
துறைசெறிந்த அகப்பொருளின் வாயில் கண்டான் 44

காதலெனும் அகம்புகுவோர் இமைகள் என்னும்
கதவுகளை மூடாராய் இமையா நாட்டம்
பூதலமேற் பெற்றிடுவர்; இரவில் கட்டிற்
புழுவாகப் புரண்டிடுவர்; வெய்து யிர்ப்பர்;
சாதலினுங் கொடுந்துயரில் உழல்வர்; ஈது
தண்கடல்சூழ் ஞாலத்தின் இயற்கை யன்றோ?
வேதனையில் உழல்வீரன் உறக்க மின்றி
வெய்துயிர்த்துப் புரண்டிருந்தான் பஞ்சின் சேக்கை 45

சாதலுக்குத் துணைபோகும் சமரே கண்டோன்
காதலுக்குத் துணையாகும் உயிரைக் கண்டான்;
வீதலுக்குத் துணைபோகும் வேலே கண்டோன்
விழைவுக்குத் துணையாகும் விழியைக் கண்டான்;
வேதனைக்குத் துணைபோகும் களமே கண்டோன்
விண்வெளிக்குத் துணையாகும் நிலவைக் கண்டான்;
காதினிக்கப் போர்முரசின் ஒலியே கேட்டோன்
கடுந்தனிமைப் பெருமூச்சின் ஒலியைக் கேட்டான். 46

குறையிரவும் சிறிதேனும் நகர்த லின்றிக்
குடியிங்குக் கொண்டதென உணர்வு கொண்டான்;
நிறைமதியின் தண்கதிர்கள் பகைவர் வீசும்
நெடுவேல்க ளெனப்பாயத் தளர்ச்சி கொண்டான்;
விரைமலரின் இதழ்களெலாம் உடலு றுத்தி
வெப்புறுத்தித் துயர்ப்படுத்த வெறுப்புங் கொண்டான்;
அறைமதில்கள் சிறைமதில்போல் விளங்கக் கண்டான்;
அரும்பிவரும் காதலெனும் நோயில் வீழ்ந்தான். 47

---

ஒன்றும்மலர் - பொருந்திய மலர். விஞ்சி - மிகுந்து துன்றுஅமர் - நெருங்கியபோர். புறப்பொருள் - வீரம் துறை - பலவகைத்துறைகள் பொருந்திய. அகப்பொருள் - காதல். நாட்டம் - விழி. சேக்கை - படுக்கை. சமர் - போர். வீதல் - இறப்பு.

# இயல் - 14

**வேழன்றன் துயர்நீக்க வந்தான் போல**
**வெங்கதிரோன் இருள்நீக்கி விரைந்து வந்தான்.**

இன்னலுறும் பிணியாளன் துயரந் தீர்க்க
இனியமொழி வழங்கவரும் நண்பன் போலப்
பன்னரிய பெருங்காதற் பிணிப்புண் டாங்கண்
பைதலுறும் மாவேழன் நிலைமை காணத்
துன்னுமிருள் செகுத்தெழுந்து கீழை வானில்
சுடர்க்கதிரோன் முகங்காட்டி விரைந்து வந்தான்;
மன்னவரும் பணியவரும் ஆற்றல் கொண்ட
மாவீரன் வெய்துயிர்த்துப் புரண்டி ருந்தான். 48

நீலநிறப் பட்டாடை விரிப்பைப் போலும்
நெடுங்கடலாம் எழிற்பாயல் நீங்கி வெய்யோன்
கோலமுகஞ் சிவந்தெழுந்தான்; வீரன் றானும்
கொய்ம்மலர்கள் வதங்கிவிழும் அணையின் நீங்கி,
ஞாலமுற வெறுத்தனன்போல் நிலத்தை நோக்கி
நடுசிலைபோல் நெடும்பொழுது தனித்தி ருந்தான்;
வேலவன்பின் நிலமளப்பான் போலெ ழுந்து
வியனறையில் நடைபயின்றான் அங்கு மிங்கும். 49

பைதல் - துன்பம், செகுத்து - அழித்து பாயல் - படுக்கை,
வியனறை - பேரறை.

# இயல் - 15

**மாவேழன் உற்றபெருஞ் சோர்வு கண்டு**
**வயத்தரசன் நற்றுணையாய்த் தேற்றி நின்றான்.**

நெடும்புலத்தைச் சூழ்ந்திருந்த கங்குற் போது
நீங்கினுமவ் வெவ்வேலான் நெஞ்சந் தன்னைத்
தொடும்பருவ உணர்ச்சியது விலக வில்லை;
துயர்ப்படுத்தி இரவெல்லாம் கதிர்கள் வீசிச்
சுடும்நிலவு வானத்தின் அகன்ற போதும்
துயிலறையில் மயிலனையாள் வந்து தோன்றிக்
கொடுந்துயருள் அவன்மூழ்கக் காட்டிச் சென்ற
கோலமுகம் மனத்தினின்றும் அகல வில்லை. 50

போராடிப் போராடிப் புறமே கண்டோன்
புதியதொரு போர்க்களத்தை அகத்தே கண்டு,
போராடிக் களைத்துவிட்டான்; ஆற்ற லெல்லாம்
போய்மடியத் தனித்திருந்தான்; பின்னர்க் காலை
நீராடிக் கடன்முடித்துத் திருவோ லக்கம்
நிகழரங்கம் சென்றிருந்தான்; அரச னோடும்
சீராடிப் பயிலவரும் செல்வ ரோடும்
சிரிப்போடு சொல்லாடி மகிழ வில்லை. 51

முகஞ்சுருங்கி ஒளியின்றிப் பார்வை தன்னில்
முனைப்பின்றி யிருப்போனை வேந்தன் நோக்கி,
அகங்கனிந்து 'விருந்தயர்ந்த வேளை தன்னில்
அன்ப!நினை வருத்துகுறை நிகழ்ந்த தோ'என்
றிகலுடையான் றனைவினவ, 'இல்லை யில்லை
எள்ளளவு குறையொன்றும் நிகழ வில்லை,
புகலரிய நிறைகண்டேன்' எனந கைத்துப்
புகன்றாலும் அந்நகைப்பில் உயிரே யில்லை. 52

கங்குல் - இரவு, திருவோலக்கம்- அரசவை

உள்ளத்தைக் கவலைக்ககுத் தந்து விட்ட
    உண்மையினைக் கண்சொல்ல உணர்ந்த மன்னன்,
'துள்ளிச்செல் வேகத்தில் இணையே யில்லாத்
    துணைப்பரியை இழந்ததுயர் கொல்லோ' என்று
மெள்ளத்தன் வாய்திறந்து மொழிய 'ஆம்! ஆம்!
    மேவுமொரு பொருளிழந்த இழப்பே போல
உள்ளத்தில் ஒருணர்வு கவ்வி நின்றே
    உறுத்துவதால் இந்நிலையை உற்றேன்' என்றான். 53

'நிமிர்தோளாய் என்னாட்டில் இழப்பே யில்லை;
    நின்துணையை நான்தருவேன் கவலை கொள்ளேல்!
தமராக நினைக்கொண்டேன்; நின்க லக்கம்
    தவிர்ப்பதுவே எனதுகடன்; புரவி தன்னை
எமர்தேடி ஈங்குய்ப்பர்' என்றான் மன்னன்;
    'என்துணையை எனக்களித்துத் துயர்க ளைந்தால்
குமுறுமென துளமமைதி கொள்ளும்' என்று
    கூர்வேலிற் கூர்மதியான் கூறிச் சென்றான். 54

இகல் - வலிமை, தமர்- உறவினர், எமர் - எம்மவர்.

# இயல் - 16

**காதலெனும் கூர்வாளுக் கிலக்காய் நின்று**
**கண்துயிலா திரவெல்லாம் கிடந்தான் வேழன்.**

பாடுபடும் உலகுக்கு மாலை சூட்டிப்
பகலோன்றன் பணிமுடித்து மேலை வாயிற்
கூடுமுனம் இரவென்னும் அரசி வந்து,
கோலநெடு வானரங்கில் நிலவு மங்கை
ஆடுநடங் கண்டிருந்தாள்; வீரன் றானும்
ஆரணங்கின் மாலையணிந் திமைகள் ஒன்றாய்க்
கூடுவதை மறந்திருக்கத் தனிமை என்னும்
கூர்வாளுக் கிலக்காகிக் கலங்கி நின்றான். 55

கலங்கியுளம் தடுமாறும் வீரன் றன்னைக்
களங்கமுறும் வெண்மதியம் இரக்க மின்றி
இலங்கொளியால் வெப்புறுத்த, வெம்மை தாங்கா
தேங்குமவன் தளர்பொழுதை உற்று நோக்கிப்
புலங்கிளறும் நலங்கெழுமும் தென்றற் காற்றுப்
புகுந்துநனி மெய்வருடிப் புண்ப டுத்த,
வலங்கொண்ட திண்டோளான் வதங்கி யங்கு
வழியின்றித் தவிக்கின்றான் அணையின் மீது. 56

வளங்கெழுமும் நாவலநாட் டாட்சி பெற்ற
வாள்வேந்தன் பேரரசன் இவன்பேர் கேட்டால்
உளங்கலங்கி நடுநடுங்கி வியர்த்து வீரம்
ஒடுங்கிநிற்பன்; ஆயினுமந் நாட்டுத் தென்றல்

---

மாலைசூட்டி - மாலைப்பொழுதைச் சூட்டி, மாலை அணிந்து - மயக்கத்தைப் பெற்று,
வெப்பு - சூடு ,புலம்கிளறும் - புலன்களைக் கிளறிவிடும்.

இளங்காற்றுக் கிவன்தோற்றுச் சாய்ந்து விட்டான்;
ஈதென்ன விந்தையடா! மெலிய ரேனும்
களங்கண்ட வீரரையும் வெல்வர் போலும்
காரிகையார் கடைவிழியில் சிக்கி விட்டால். 57

தண்மதியும் பகையாகி, மலர்கள் நீவித்
தாவிவரும் மென்காலும் பகையே யாகி
வண்மலரின் இதழ்பகையாய்ப் பஞ்சின் சேக்கை
மலரணையும் பகையாகித் தன்னி ரண்டு
கண்ணிமையும் பகையாகிப் பொருந்தா தங்குக்
கலங்கிஎழிற் கட்டின்மிசைப் புரள்வோன் நெஞ்சம்
புண்படுவ தாரறிவார்? ஆற்று தற்குப்
போயொருசொல் மொழிவாரார்? தனிக்கி டந்தான். 58

---
மென்கால் - தென்றல்

# இயல் - 17

**காதல்தரும் ஓவியத்தின் எழிலைக் கண்டு**
**கலங்கிமனம் வெதும்பியவன் புலம்பி நின்றான்.**

வலைப்பட் அரியேறு போன்று காதல்
வயப்பட்டுச் செயலற்றுத் துயிலு மின்றி
அலைப்புண்டோன் நெஞ்சத்தில் தோன்றும் எண்ணம்
ஆயிரமாய் ஆயிரமாய்ச் சுழலும் வேளை
கலைப்பொலிவு நிறைந்தொளிரும் உருவக் கன்னி
கட்டழகி ஒருத்தியவண் தோன்றக் கண்டான்;
உலைக்குருகின் வெய்துயிர்ப்போன், முன்னாள் கண்ட
உருவமது முறுவலித்து நிற்கக் கண்டான். 59

உருவினுக்கும் முறுவலுக்கும் கடைக்கண் காட்டும்
ஒளியினுக்கும் மனமுடைந்தோன் வியந்து சென்று
மருவுதற்குக் கையிரண்டும் நீட்டி நின்றான்;
மயக்கத்தின் விளைவினுக்கு நாணி நின்றான்;
பெருமகற்குத் தோல்விதரும் உருவம் உண்மைப்
பெண்ணன்று; வினைவல்லான் கைவண் ணத்தால்
வருமுருவம் எனவுணர்ந்து தளரும் வீரன்
வாட்டமெலாந் திரண்டுருண்ட வடிவ மானான். 60

நெருநலிர விடைவந்து தன்னுள் ளத்தில்
நிலைத்துவிட்ட பெண்ணணங்கென் றெண்ணிச் சென்று
மறுகுமவன் ஏமாற்றம் உற்றா னேனும்
மங்கையவள் எழிலெல்லாம் வடித்துக் காட்டும்

---

உலைக்குருகு- கொல்லுலைத்துருத்தி. முறுவலித்து - புன்னகைசெய்து ,வினைவல்லான் - ஓவியம்வல்லான்.
நெருநல் - நேற்று.

திருவுருவப் படமதனில் வைத்த கண்ணைத்
திருப்பாமல் இமைக்காமல் விழித்து நோக்கி
இருவிழியும் கனியிதழும் நிலவை வென்ற.
எழில்முகமும் சுருள்குழலும் வியந்து நின்றான். 61

'பனிவிழிகள் நாணத்தின் குழைவு காட்டிப்
பருகுமெனைப் பாடுறுத்தித் துயரில் வாட்டும்;
கனியிதழ்கள் பவளத்தின் செம்மை காட்டிக்
காணுகின்ற என்னுளத்தில் வெம்மை கூட்டும்;
நனிபொழியும் எழில்முகத்தை, முறுவல் பூக்கும்
நளினத்தை, விழிக்கடையைச் சாயல் தன்னை
வனையுமவன் பரிசில்பெற வரைந்தா னல்லன்;
வாட்டிஎனைத் துயர்ப்படுத்த வனைந்தான்' என்றான். 62

நளினம் - இங்கிதம். வனையுமவன் - ஓவியன்

# இயல் - 18

**இவ்வுருவத் தெழிலாள்யார் என்றான் வேழன்**
**இளவரசி காணென்றாள் வந்த தோழி.**

ஓவியத்தில் உயிர்வைத்த உரவோன் தன்முன்
ஒருதெரிவை வந்தங்கு வணங்கி நின்றாள்;
'காவியத்தின் தலைவினத் தோற்றம் நல்கிக்
கண்கவரிவ் வோவத்தாள் யாவள்' என்றான்;
'நீவியக்க நிற்குமிவள் எங்கள் மன்னன்
நேயமகள், நானவட்குத் தோழி, இந்தக்
கோவிலுக்குள் கோதையிவள் அழகுத் தெய்வம்,
குலமகளாம் இவளனையார் யாண்டும் இல்லை.!' 63

என்றமொழி செவிப்படலும் நெஞ்சின் மீறி
எக்களித்து வருங்களிப்பால் அவளை நோக்கி,
'இன்றுனது கன்னல்மொழி கேட்டு நெஞ்சம்
எல்லையின்றிப் பூரிக்கக் காணு கின்றேன்;
நின்றனுடை இளவரசி எழிலுக் கெங்கும்
நிகரிலையோ? ஆரணங்கோ? அடவோ விந்தை!
மன்றலினுங் கொண்டிலளோ? பருவம் யாதோ?
மாதவட்குப் பெயர்யாதோ? மொழிவாய் தோழி.' 64

வெவ்வலியன் இவ்வண்ணங் கனிந்தி ரங்கி
வினவுதலும், தான்விழைந்து வந்த எண்ணம்
செவ்வையுடன் எளிதில்நிறை வேறும் என்று
சிந்தித்து விடைபகர்வாள், 'மூரல் ஊறுங்

---

கன்னல் - கரும்பு, மன்றல் - திருமணம்

கொவ்வையிதழ் காணுங்கால், பெண்மை விஞ்சு
    கோதையர்க்கும் வாயூறும்; விழிகள் கண்டால்
நவ்வியினம் வணங்கிவரும்; தோள்கள் காணின்
    நங்கையரும் மயங்கிடுவர் தமைம றந்தே! 65

நாடாளும் பலமன்னர் மணப்பான் வேண்டி
    நான்நீஎன் றடுத்தடுத்தெம் நாட்டில் வந்து
கூடாரம் அடித்ததுதான் மிச்சம் அந்தோ!
    கூடாகி ஓடாகித் தம்மூர் மீண்டார்;
கூடாது திருமணமே எனம றுத்துக்
    கோலமயில் இளவரசி கூறி விட்டாள்;
சூடாத மலர்பூத்த பருவ மங்கை
    சூடுபெயர் வேல்விழியாம் ஐய!' என்றாள். 66

நவ்வி - மான்

# இயல் - 19

**வெறுப்பெதற்குத் திருமணத்தில் என்றான் வேழன்**
**வீரனுக்குக் காதலியாம் என்றாள் தோழி.**

'திருமணமே கூடாதென் றேன்வெ றுத்தாள்?
சீரிளமைப் பேரெழிலைப் பாழ்ப டுத்தத்
திருமகள்தான் ஏன் நினைத்தாள்? தேனும் பாலும்
தெருமண்ணில் சிந்திவிட நினைவா ருண்டோ?
நறுமணமார் ஒருமலரைக் கசக்கி வீசும்
நல்லவரைக் கண்டதிலை; பேதை என்னும்
ஒருபெயரை நிலைநாட்டப் பேதுற் றாள்கொல்?
உலகியலுக் கொவ்வாத செயல்மேற் கொண்டாள்' 67

திகைத்தவனிவ் வணமுரைக்கத் 'தேனும் பாலும்
தெய்வவழி பாட்டுக்கே வைத்தாள் ஐய!
முகைத்துவிரி மலர்தன்னைக் கசக்க வில்லை
முனம்விழைந்த பூசைக்கே பேணிக் காத்தாள்;
நகைத்தவளைப் பேதைஎன நவிலல் நன்றோ?
நலமிகுந்த பெண்மைக்கோர் சான்றாய் நின்றே
அகப்பொருளின் உயர்பண்பைப் போற்றிக் காக்க
ஐம்புலனுக் காளாகா திருந்தாள்' என்றாள். 68

'உன்மொழியின் உட்பொருளை உணரும் ஆற்றல்
உடையனலேன், தெள்ளிதின்நீ விளங்கக் கூறின்
என்மனமும் தெளிந்திடரின் நீங்கும் என்றான்;
ஏங்குமவன் உள்ளத்தைப் புரிந்த தோழி,
'மின்னொளிரும் நெடுவேலோய்! எங்கள் செல்வி
மிக்காரும் ஒப்பாரும் இல்லா னுக்குத்
தன்மனத்தைத் தந்தமையால் அவனை யன்றித்
தார்சூட மணம்புரிய இசைந்தா ளல்லள். 69

---
முகைத்து - மொட்டாகி

வீரத்தின் உறைவிடமாய் விளங்கும் வீரன்
வியன்புகழைப் போர்த்திறனை அழகை யெல்லாம்
சேரத்தன் இருசெவியால் நாளும் கேட்டுச்
சிந்தைக்குள் அவனைஒரு தெய்வம் ஆக்கி,
நேரத்தை எதிர்நோக்கி நிற்கின் றாள்தன்
நிகரில்லா இளமைஎழில் படைப்ப தற்கே;
நேரிற்கண் டறியாதாள் அவனை நேற்று
நீள்விழியாற் கண்டுமனங் குளிர்ந்து நின்றாள். 70

காண்போமோ காணோமோ என்று நாளும்
கலங்கிமனங் குமைந்துடலம் மெலிந்து வந்த
நாண்பாவை நெருநலவன் திருவோ லக்கம்
நண்ணுங்கால் கண்குளிர உளம்பூ ரிக்கச்
சேண்மேவு கன்னியர்தம் மாடம் நின்று
சேல்விழியால் அவனெழிலைப் பருகி நின்றிவ்
வாண்போல யாவருளார் எனவி யந்தே
அவளைமறந் தியம்பினள்காண்' என்றாள் தோழி. 71

---

சேண் - உயரத்தில்

# இயல் - 20

**இளவரசி மனங்கவர்ந்த வீரன் இந்த**
**வேழன்தான் எனமொழிந்தாள்; அவன்ம கிழ்ந்தான்**

'மங்கையவள் மனக்கோயிற் றெய்வ மான
மாவீரன் யாவனவன்? மன்றல் கொள்ள
இங்கவன்போற் பேறுடையான் ஒருவ னில்லை;
ஏங்குதற்குப் பிறந்தவரை ஏங்க விட்டாள்;
பொங்கிவரும் எழிலுருவப் பூவை நெஞ்சுட்
புகுந்தவனோர் நிகரில்லா வீரன் என்றாய்!
எங்குளனோ அவ்விளைஞன்? போரில் என்றன்
எதிர்நிற்கும் நெஞ்சினனோ? மொழிக' என்றான். 72

'ஒருநாளும் தோல்வியவன் கண்ட தில்லை;
உருத்தெழுந்தோர் நெடுநேரம் நின்ற தில்லை;
வெருவாத மன்னரிலை அவன்பேர் கேட்டால்;
வெற்றிமகள் அம்மறவன் தோளே வேட்டாள்;
மருவாரைப் புறங்கண்ட வீர னேனும்
மாதரசி ஒருத்திக்குத் தோற்று விட்டான்;
பெருவாளை வயல்தாவும் மூவ கத்துப்
பெருநாடே அவன்நாடாம்' எனமொ ழிந்தாள். 73

என்றமொழி செவிபுகுதா முன்னர் வீரன்
இருவிழியும் சிவந்தெழுந்தான் 'என்றன் நாட்டில்
வென்றியல தொன்றறித லின்றி எங்கும்
விஞ்சுபுகழ் கொண்டுவரு மென்னை வெல்லும்

வேட்டாள் - விரும்பினாள், மருவார் - பகைவர்.

வன்றிறலன் இன்றுளனோ? என்றன் வாளின்
வாய்மழுங்கிப் பொன்றியதோ? அவன்பேர் கூறாய்!
நின்றன்முனம் கொன்றுடலைக் கிழிப்பன் கூறாய்!
நிலைகுலையா வீரத்தின் ஆணை' என்றான். 74

'மூவகத்துப் பெருநாட்டின் வீரன் என்றாய்
மொய்குழலி! காதலைநான் இழந்து விட்டுப்
போவதற்கு மனமிசைவேன்; என்றன் வீரம்
புல்நுனியின் அளவேனும் குறைவ தென்றால்
சாவதற்கும் நான்தயங்கேன்; என்னின் மிக்க
தறுகணன்யார்? யாதவன்பேர்? நொடியிற் கூறு;
பூவகத்து வாழ்வானை விண்ண கத்துப்
போய்ப்புகுதச் செய்வித்து மீள்வேன்' என்றான். 75

'அப்பெயரை நின்முன்பு கூறல் நன்றோ?
அஞ்சுகின்றேன்; பெண்மைக்கு முறையு மன்று;
தப்பெனவே உலகுரைக்கும்; மேலும் நீதான்
தரியலர்க்குக் கூற்றாவாய் உண்மை; ஆனால்
ஒப்பரிய இளவரசி உளங்க வர்ந்த
ஒருவனை நீ என்செய்ய இயலும்?' என்றாள்;
'செப்புகஅப் பெயரென்றால் ஏதே தோநீ
செப்புகின்றாய்' எனஇடிபோல் முழங்கி நின்றான். 76

செப்புகின்றேன் உண்மைநிலை சினவேல் ஐய!
சீயங்கள் பலகுழுமி எதிர்நின் றாலும்
உட்புகுந்தே விளையாடி அவற்றை யெல்லாம்
ஒவ்வொன்றா எடுத்தெறியும் ஆற்றல் மிக்கான்;
இப்புவியின் இளவரசி காதல் நெஞ்சில்
இடங்கொண்ட பேறுடையான் யாவன் என்றே
துப்பறியத் துடிக்கின்றாய்! நின்னை யன்றித்
தொல்லுலகில் யாவருளார் வீரன் என்றே'. 77

பொன்றியதோ - அழிந்ததோ, தறுகணன் - வீரன்.
சினவேல் - கோபிக்காதே. சீயம் - சிங்கம்.

எனமொழிந்த தோழியுரை கேட்டான் வீரன்
　　இறும்பூது மீக்கூர நிலைத்து நின்றான்;
முனமெழுந்த சினமடங்கி, ஆங்கு நின்ற
　　மொய்குழலி முகம்நோக்கி நகைத்துக் கையால்
தினவெழுந்த தோள்தட்டி ஆர்த்த ஓசை
　　திசையெங்கும் மோதிஎதிர் ஒலிக்கக் கேட்டான்;
முனமடைந்த வென்றிகளிற் காணா இன்பம்
　　மொய்ம்புடையான் நெஞ்சத்துட் புகுதக் கண்டான். 78

இறும்பூது - வியப்பு　மீக்கூர - மேம்பட.

# இயல் - 21

**காதலியைக் காண்பதற்கு விழைந்தான் வேழன்**
**கரையருகே வாவென்று பணித்தாள் தோழி.**

'எனைவிழைந்தாள் இளவரசி என்ற செய்தி
இதுகாறும் உரையாமல் ஏனோ தாழ்த்தாய்?
நினைவிழந்து துயரடைந்து வாடச் செய்தாய்!
நீமொழிந்த மறைமொழியால் சோர்வே தந்தாய்!
உனையிரந்து வேண்டுவல்மற் றொன்று தோழி!
உளங்கவர்ந்த எழில்மகளைத் தனித்துக் காண
முனையுமெனக் குதவுதல்நின் கடனே யாகும்;
முப்பொழுதும் எப்பொழுதும் மறவேன்' என்றான். 79

'துடிக்கின்ற பெருவீர! என்னை யிங்குத்
தூதனுப்பித் தன்கருத்தை நின்பாற் கூறிக்
கிடைக்கின்ற நல்விடையைக் கொணர்க என்று
கிள்ளைமொழி இளவரசி விடுப்ப வந்தேன்;
பிடிக்கடங்கு துடியிடையாள் நினைவா லிங்குப்
பேதுற்றுத் தவித்தனை நீ; அதனாற் சொல்லி
முடித்துவிட மனமின்றி மனத்தின் ஆழம்
முழுதுணர உரையாடி நின்றேன் ஐய! 80

மனத்திலவள் நினைத்தவணம் வீரன் நின்னை
மணம்புரியும் பேறடைந்தாள்; வாழி எங்கள்
அனத்தைவெலும் நடையழகி' என்றாள் தோழி;
'அவளினுமோர் பெரும்பேறு நானே பெற்றேன்

பிடிக்கு - கைப்பிடிக்கு. துடி - உடுக்கை.

எனப்புகலின் அதுபொருந்தும்! நினைத்த தைத்தான்
இளவரசி அடைகின்றாள்; நினையா ஒன்றை
எனக்களித்த வாய்ப்பன்றோ பெரிது! வாழ்வில்
இனையதவம் உடையரிலர்' என்றான் வீரன். 81

'பேறுடையார் இருவருந்தாம்! காதற் போரில்
பிழையின்றி இருவருமே வாகை கொண்டீர்!
மாறுடைய கருத்தில்லை; நாளை மாலை
மலர்ப்பொழிலுள் உறுபொய்கைக் கரையின் பாங்கர்
ஏறனையாய்! எங்கள்குலத் தலைவி நிற்பள்;
ஏகுவையேல் அவண்காணல் கூடும்' என்று
கூறியவள் விடைகொண்டு மீண்டாள்; வேழன்
கொடுமிரவு விடைபெறலை நோக்கி நின்றான். 82

பாங்கர் - பக்கம், அவண் - அங்கே.

# இயல் - 22

**மாவேழன் காதலைத்தன் தோழி கூற**
**மனமகிழ்ந்தாள் இளவரசி துள்ளித் துள்ளி.**

வழியின்மேல் விழிசெலுத்தி வரவு நோக்கி
வளரிளமைக் கனவுகளில் மிதந்து நிற்கும்
விழியழகி இளவரசி திருமுன், தூது
வென்றியுடன் மீண்டவளும் வந்து நிற்க,
அழிபசியன் அமுதுண்ண விரைதல் போல
ஆர்வமுடன் துடித்தெழுந்து தோள்கள் பற்றி
'எழிலறிவு மிகுதோழி! கனியோ? காயோ?
எடுத்துரைப்பாய் அவருரைத்த வெல்லாம்' என்றாள். 83

'தோள்பற்றிப் புகழ்ந்துரைத்தோய்! என்பால் மாற்றம்
சொல்லும்நிலை அவற்கில்லை; நின்க ருத்தை
வாள்பற்றும் அவன்பால்முன் எடுத்து ரைக்கும்
வாய்ப்பொன்றும் எனக்கில்லை' என்னா முன்னர்த்
தேள்கொட்டி முடித்ததுபோல் துடித்து வஞ்சி,
'தீவினையேன் காதலுங்கைக் கிளையோ? அந்தக்
கேள்பற்றி வாழ்வதுதான் வாழ்வே யன்றிக்
கெடுவாழ்வு யான்வேண்டேன் மாய்வேன்'என்றாள். 84

'உரைத்தமொழி திரித்துணர்ந்தாய் அதனால் நெஞ்சம்
உழலுதியால்; புலம்புதியால் பேதாய்! காதல்
ஒருத்தியுனை விழைவதிலே மாற்ற மொன்றும்
உயர்வேழற் கிலையென்றேன்; முன்பே நெஞ்சில்

---

அழிபசி - மிக்கபசி கைக்கிளை - ஒருவர்மட்டும் விரும்புதல், கேள் - உறவு.

பொருத்தியுனை நினைந்திரங்கிக் கவல்கின் றானால்
போயொருசொல் புகன்றிடவாய்ப் பில்லை என்றேன்;
அருத்திமிகு காதலினால் நின்னைக் காணும்
ஆவலினால் துடிக்கின்றான் வீரன்' என்றாள். 85

வாடுகின்ற உயிராட்குத் தோழி சொன்ன
வாய்மொழிகள் அமுதாகி உடல்சி லிர்க்க
மாடுநின்ற தோழியினைத் திணறும் வண்ணம்
மகிழ்ச்சியினால் அணைத்திறுகக் கட்டிக் கொண்டாள்;
பாடுகின்ற குயிலானாள், விரித்த தோகைப்
பச்சைமயில் அவளானாள், வெற்றி வாகை
சூடுகின்ற வீரனுக்குத் துணையே ஆனாள்;
தூமலரின் பஞ்சணைவீழ் கொடிபோல் ஆனாள். 86

வீழ்ந்தவளப் பஞ்சணையுட் புரண்டாள், ஆடை
விலகுவதும் உணராமல் உருண்டாள், வண்ணம்
சூழ்ந்ததலை யணையுள்முகம் புதைத்தாள், மீண்டும்
தோகைஎழுந் தாடியின்முன் நகைத்தாள், நின்று
தாழ்ந்தவிழ்ந்து சரிகுழலை முடித்தாள், நெற்றி
தரித்தநறுந் திலகத்தை வடித்தாள், தோளின்
வீழ்ந்தொதுங்கும் ஆடையினைத் திருத்தி நெஞ்சம்
விம்மவரும் மகிழ்ச்சியினால் சிரித்து வந்தாள். 87

'கன்னியர்தம் நெஞ்சத்திற் குடி யிருக்கும்
காதலரைப் பெற்றுவிடின் வெறியில் மூழ்கித்
தந்நிலைமை மறந்துமனம் மகிழ்வர் போலும்!
தான்செய்வ தின்னதென உணரா திந்த
மின்னிடையும் தனைமறந்து களிப்பில் மூழ்கி
மிதக்கின்றாள் திளைக்கின்றாள் என்னே விந்தை!
பன்னரிய வெற்றியினால் உலகம் காட்டும்
பரிசிதுதான் போலு'மென வியந்தாள் தோழி. 88

அருத்தி - ஆசை, மாடு - பக்கம், வடித்தாள் - ஒழுங்குசெய்தாள். பரிசு - இயல்பு,

வியந்திருக்கும் தோழியின்பால் ஓடி வந்து
    விளையாட்டுப் பிள்ளைஎனக் கன்னங் கிள்ளி,
'நயந்தவனை நானடையும் பேறு பெற்றேன்;
    நற்றவத்தின் பயன்நுகரும் வாழ்வு பெற்றேன்;
உயர்ந்ததொரு பேறிதன்மேல் உண்டோ? தோழி!
    ஒளிவிளக்கை என்னுளத்தில் ஏற்றி விட்டாய்!
பயந்தவரும் இசைந்துவரச் செய்தல் நின்றன்
    பாரமடி நேரமிது நல்ல' தென்றாள். 89

பயந்தவர் - பெற்றோர்,

## இயல் - 23

**பொய்கைக் கரைதனிலே--மாலைப்**
**பொழுது வருகையிலே--வேழன்**
**செய்கை எலாமுணர்ந்தே -- சென்று**
**தேர்ந்திடு கென்றுரைத்தாள்.**

'உயிரனையாய்! எனைக்கவர்ந்த காத லற்கண்
டுரையாட வேண்டுமென உள்ளம் சற்றே
மயலடையா நின்றதடி; நாணம் வந்து
மறுத்துரைத்துங் கேட்கவிலை நானென் செய்வேன்!
கயல்விழியோ உள்ளத்தை முந்தும் போலும்
கண்டன்றித் துயிலில்லை என்று நிற்கும்;
செயலறியேன் எதைச்சொல்வேன் எதைத்த டுப்பேன்
செந்நெறியோன் றுரைப்பதுநின் கடனே' என்றாள். 90

பொறுமையுடன் உரையனைத்துங் கேட்ட தோழி
புன்முறுவல் செய்துசில மொழிவாள், 'அன்னாய்!
நறுமலரின் மணமாலை சூடும் நுங்கள்
நடுவினில்யான் ஊசலென ஆடு கின்றேன்;
மறுபகலின் கதிரவன்போய் மறையும் வேளை
மலர்வனத்து வாவியின்பால் வேழன் தன்னை
வருகவெனச் சொல்லிவந்தேன்; ஆங்கு நின்கை
வரிசையெலாம் காட்டுதி' என் றகன்று சென்றாள். 91

மயல் - மயக்கம், வாவி - பொய்கை

# இயல் - 24

**மாலைப் பொழுதின் வருகை நோக்கி**
**ஏனைப் பொழுதை இகழ்ந்தனள் வேல்விழி.**

'கடையாமம் வருமுன்பே என்பொ ருட்டால்
கதிர்காட்டி விடிந்துவிடிற் குறைந்தா போகும்!
படையாகத் தென்றலுடன் வாடை வந்து
படுத்துவதேன்? மெல்லியலார்க் கிரங்கும் நெஞ்சம்
கிடையாதோ இக்கொடிய பாவி கட்கு?
கேளின்றித் தனித்துழலும் ஒருத்தி யின்பால்
இடையறவே ஒருசிறிதும் இல்லை யாக
இடர்தரின்யான் என்செய்வல்?' என்று ழன்றாள். 92

'கொடுமிரவுக் கெத்துணைதான் வலிய நெஞ்சம்;
கொல்வதெனக் கொண்டதுவோ கொடிய வஞ்சம்;
விடிவதற்கு மனமின்றி நிலைத்து நிற்கும்;
வெண்ணிலவின் துணைகொண்டு கனலைக் கக்கும்;
சுடுகதிரோற் கென்னகுறை செய்து விட்டேன்!
துங்கமுகங் காட்டாமல் தூங்கு கின்றான்!
கடுகிவரும் நினைவிலனோ? கருணை யில்லான்
கடமையினை மறந்தனனோ? வெய்யோன்'என்றாள். 93

புகழுரையும் இகழுரையும் உலக மாந்தர்
புகல்வனதாம் பொருளுரையோ மேல வர்க்கு?
தகவுடையர் அவ்வெல்லாம் மனத்துட் கொள்ளார்
தம்பணியைக் காலத்தில் ஆற்றிச் செல்வர்;
பகலவனும் வேல்விழியாள் நொந்து ரைத்த
பழிமொழிக்குச் செவிகொடுத்தல் இலனாய்ச் சேந்து
தகதகவென் றொளிர்ந்தெழுந்து கடமை யாற்றத்
தங்கமயம் ஆக்குகிறான் கிழக்கு வானை. 94

---

கேள் - துணைவன், வெய்யோன் - கதிரவன் கொடியவன், சேந்து - சிவந்து.

வான்வெளியிற் செந்நிறத்தைப் பகலோன் பூசி
வையத்தில் ஒளிபரப்பத் திகழ்ந்து வந்தான்;
தான்விழையும் காதலனும் தனது வாழ்வைத்
தங்கமய மாக்கிஒளி யூட்டும் என்ற
தேன்வழியும் நினைவதனுள் மூழ்கி மூழ்கித்
திருமகளும் பஞ்சணைவிட் டகன்று போந்து,
மான்வளையும் தோட்டத்துப் பொய்கை யாடி
மலர்சூடி விளையாடி மகிழ்ந்து வந்தாள். 95

'காலைஎனும் பொழுதகன்று போன பின்னர்க்
கடும்பகலும் நெடிதகன்ற பின்ன ரன்றோ
மாலைஎனும் பொழுதுவரும்! இவ்வி ரண்டும்
மனமிரங்கித் தொலையாவே! நின்றி ருக்க
வேலைஒன்றும் இல்லெனினும் மாறி மாறி
வினையியற்ற வல்லனபோல் நிலைத்து நிற்கும்;
மாலையுளங் கொண்டமையால் கலங்கும் மங்கை
மனம்வெம்பிப் பொழுதெல்லாம் வைது நின்றாள். 96

மாலை - மயக்கத்தை

# இயல் - 25

**காதலர் நெஞ்சம் களிப்புறச் செய்யும்**
**போதலர் மாலைப் பொழுதும் வந்தது.**

கருத்தொருமை கொண்டிருவர் தம்முட் கூடிக்
கலந்துளத்தைப் பரிமாறுந் தலைக்கூட் டத்திற்
குருக்கமுடன் துடித்திருக்கும் பொழுதில், நாமேன்
ஊறாக நின்றிருக்க வேண்டு மென்று
கருத்ததனிற் செய்யவனும் நினைத்தான் போலக்
கடுகிவிரைந் தோங்குமலைத் தொடர்ப்பு றத்தே
உருக்கரந்து கதிர்சுருக்கி மறைந்து விட்டான்;
உலகியலின் திறமுணர்ந்தோர் செயலே செய்தான் 97

களவியலில் பயின்றுவரும் காத லர்க்குக்
காலமெலாந் துணைநிற்கும் மாலைக் காலம்,
உளவியலை நன்குணர்ந்தோன் செய்கை போல
உணர்ச்சியினால் ஒன்றுபடும் இருவர் தம்முட்
பழகிடவந் துதவியது; மயங்கும் அந்தி
பாரெங்கும் பரவியது; காமுற் றாரின்
இளமையுளம் சிறகடித்துப் பறந்து செல்ல
இறகொடுக்கி அடங்கினவே புள்ளி னங்கள். 98

# இயல் - 26

**மாதரசி வேல்விழியை ஆங்குக் கண்டு**
**மாவேழன் சிலையென்று மயங்கி நின்றான்.**

பாங்கியுரை மலர்ப்பொய்கைப் பாங்கர் வேழன்
பறந்துவந்தான்; அன்னவனைக் காண்பான் வேண்டி
ஏங்கிமுனம் ஆங்குவந்த நங்கை நோக்கி
எழுந்தொருபால் நிலம்நோக்கி நாணி நின்றாள்;
தேங்கெழிலின் அவ்வுருவைக் கண்ட வீரன்,
'திகைத்தன்று சித்திரத்தைக் கண்டேன்; இன்று
பாங்குடைய சிலையுருவைக் காணு கின்றேன்;
பாவையைத்தான் காணுகிலேன் இன்னும்' என்றான் 99

குழலேந்தும் மலர்த்தொகையும், பிறையை வெல்லும்
குறுநுதலும், கரியசிறு புருவ வில்லும்,
அழகேந்தும் விழிமலரும், செவ்வா யென்னும்
அல்லியுடன் முகமலரும் வியந்து நோக்கி,
'விழவேந்தி ஊர்வலமாத் தேரில் செல்லும்
விந்தைமிகு பொற்சிலைபோல் இதனைச் செய்தே
நிழலேந்தும் பைந்தருவின் அடியில் சிற்பி
நிற்கவைத்த காரணமென்? தவறே செய்தான்! 100

கைம்மலராற் பற்றியுள தாம ரைப்பூக்
காண்பவரை மயக்குறுத்தும் வண்ணம் சிற்பி
செய்ம்முறையை என்னென்பேன்! சிலையின் வாயில்
சிவப்பூட்டிச் செய்தஇதழ் அடஓ விந்தை!
பொய்ம்மையிலை உயிருடைய பெண்ணே என்று
புகன்றிடுவர் நோக்குநர்தாம்; தொட்டு ணர்ந்தே
மெய்ம்மையினை உணர்ந்திடுவர்; இதனைச் செய்தான்
மேன்மையினை எவ்வண்ணம் புகழ்ந்துரைப்பேன்? 101

---

குழல் - கூந்தல். நுதல் - நெற்றி. தரு -மரம்.

மாலைவரும் எனவுரைத்த குறியி டத்தில்
    மன்னவன்றன் குலக்கொழுந்தைக் காண வில்லை;
பாலைநிகர் மொழியுடையாள் வாரா தேகின்
    பாலைநிகர் வாழ்வாகும் என்றன் வாழ்வு!
மாலையவள் நிற்பளெனச் சொன்னாள் தோழி
    மயக்குறுத்தும் சிலையைத்தான் மொழிந்தாள் போலும்!
மாலைஎனைச் சூட்டுவளென் றெண்ணி நின்றேன்
    மாலைஎனக் குண்டாக்கி நின்று விட்டாள்!' 102

எனப்புலம்பும் ஏறனையான் நிலைமை கண்ட
    இளவரசி நகைத்துவிடத் திகைத்தான் வீரன்;
மனக்குழப்பம் மிகவாகிச் சிலைசி ரித்த
    வகையென்ன எனும்வியப்பால் உற்று நோக்கித்
தனக்குவந்த மயக்குக்கு நாணி விட்டான்;
    தையலிவள் மையல்தரும் சிலைபோல் நின்றாள்
எனக்கலங்கிப் பினர்த்தெளிந்து நெருங்கிச் சென்றான்;
    இறும்பூது கொண்டுயிர்த்து நிலைத்து நின்றான். 103

---

இறும்பூது - வியப்பு

# இயல் - 27

**போதலர் நறுமணப் பொய்கைக் கரையில்**
**காதலர் நெஞ்சம் கலந்து மகிழ்ந்தன.**

நாணத்தால் மிகச்சிவந்து தோன்றும் கன்னம்;
நகைதவழ்ந்து விளையாடி இதழ்கள் மின்னும்;
காணத்தான் மீனெனக்கண் பிறழ்ந்து பாயும்;
காளையவன் நோக்குவதால் மருண்டு சாயும்;
காணத்தால் இயல்வளைகள் விளங்கும் செங்கை;
கச்சுக்குள் அடங்காமல் அழுங்கும் கொங்கை;
பாணத்தால் வடித்தெடுத்த விழியின் ஓரம்
பாய்ந்துழல்வோன் இவ்வனைத்துங் கண்டான் வீரன். 104

'நாளொன்றில் சிலைவடிக்கும் ஆற்றல் மிக்கோன்
நனிவிழைந்து திங்கள்பல சிந்தித் தாய்ந்து,
தாளென்றும் இடையென்றும் மார்பம் என்றும்
தன்னைநிகர் முகமென்றும் விழிகள் என்றும்
தோளென்றும் ஒவ்வொன்றும் பலநா ளாகத்
தொன்முறையில் வழுவாமல் படைத்துத் தந்த
வாள்வென்ற விழியழகுச் சிலையே! நின்றன்
வாய்மலர ஏன்சிரித்தாய்? என்றான் வேழன். 105

'ஏன்சிரித்தாய் எழிற்சிலையே என்னை நோக்கி'
எனவினவும் வீரனுக்கு நின்ற பாவை
தேன்வடித்த மொழியொன்றும் புகன்றா ளல்லள்;
திருந்தடியால் ஈரடிகள் பெயர்ந்து சென்றாள்;
'நான்விடுத்த சொல்லுக்கு விடையே யில்லை
நங்கையுனைச் சிலையென்று விளித்த தாலோ?
மான்கொடுத்த மருட்பார்வை பெற்ற வட்கு
மனமிலையோ மொழியிலையோ வாய்ம லர்த்த?' 106

காணம் - பொன்

என்றுரைத்துப் பின்தொடர்வோன் அவள்செங் கையில்
இலங்குமலர்த் தாமரையை நோக்கு வான்போல்
'ஒன்றிநிற்கும் அவ்விரண்டு மொட்டும் வேண்டி
உனையிரப்பன் மகிழ்ந்தளிக்க வல்லாய் கொல்லோ'
என்றவற்கு மொட்டிரண்டும் ஈய வந்தாள்;
'ஈதன்றே என்னுளத்து வேட்கை! என்னுள்
நின்றிருக்கும் மலரேனும் தருவாய்' என்றான்;
நேரிழையாள் மலரொன்று கொடுக்க வந்தாள். 107

'சேயிழையுன் கைம்மலரை விழைந்தே னல்லேன்
செங்கயல்கள் பிறழ்மலரே வேண்டு கின்றேன்;
ஈயிதனை இல்லைஎனின் செம்மை தோயும்
இதழிரண்டு தந்தாலும் போதும்' என்றான்;
வேயிணையும் தோளியிதழ் கொய்தா ளாக
'விடுவிடுஅவ் விதழ்தன்னைக் கொய்ய வேண்டா
சேயிதழில் வழிதேனே வேண்டு' மென்றான்;
சிற்றிடையாள் மொழிக்குறிப்பைப் புரிந்து கொண்டாள். 108

'பித்தரெனக் கலங்கிமனம் மாறி மாறிப்
பேசுவதேன்? நகைமொழியோ? குறும்புச் சொல்லோ?
நத்துவதை உரைக்காமல் தடுமாற் றத்தால்
நடுங்குவதேன்? பேதையர்பால் வீரர் காட்டும்
வித்தையிதோ வேண்டுவதை உறுதி செய்து
விளம்புதியேல் தடையில்லை தருதற்' கென்றாள்;
புத்தமுத மொழியிதனைச் செவியிற் கேட்டுப்
பூரித்தான் அம்மொழியால் மயங்கி விட்டான். 109

'பித்தத்தின் வேகந்தான் பேசு கின்றேன்;
பேதையுன தெழிலுருவைக் கண்ட பின்பே
சித்தத்தின் நிலைகலங்கிச் செயல்க லங்கித்
தெரிவையுனை நினைந்திரங்கி மயங்கி நின்றேன்;
முத்தமிழின் சுவையனைத்தும் நின்வாய்ச் சொல்லில்
முகிழ்த்துவரக் காணுவதால் தெளிவுங் கொண்டேன்;
நத்துவதிப் பூங்கொடியே வேறொன் றில்லை
நல்குதியேல் வானுலகும் வேண்டேன்' என்றான். 110

வேய் - மூங்கில். சேயிதழ் - சிவந்த இதழ் 107, 108 - இருபாடல்களும் காதற் குறிப்பை நயம்பட உரைக்கின்றன.
நத்துவது - விரும்புவது

'ஈவாருங் கொள்வாரும் இங்கே யில்லை
உரிமைதனைக் கொள்வற்கோர் தடையு மில்லை;
பூவாருங் கொடிக்குரியை நீயே என்று
பூண்டுள்ளேன் ஒருறுதி; கண்ட ஞான்றே
நீவேறு நான்வேறென் றெண்ண வில்லை!
நீங்கியது நானெனதென் றெண்ண மன்றே
கூவாத குயிலொன்று கூவக் கண்டேன்
குழைவாக மனமின்று குளிரக் கண்டேன். 111

நாளுக்கு நாளுன்னை நினைந்தி ரங்கி
நான்மெலிந்து வாழ்ந்திருந்தேன்; வாடும் என்றன்
தோளுக்குத் தோள்கொடுக்க வந்து நின்றாய்!
துணைவினஎ உரியமணங் கொள்க' என்றாள்;
'வாளுக்கும் வேலுக்கும் தோற்ற தில்லை
வட்கார்தம் வில்லுக்குந் தோற்ற தில்லை
நீளக்கண் வேலுக்குத் தோற்று விட்டேன்
நீயுரைத்த சொல்லுக்குந் தோற்றேன்'என்றான். 112

'வேல்விழியென் றுனக்கிட்ட பெயர்பொ ருந்தும்
வெலற்கரிய எனைவென்ற கார ணத்தால்;
சேல்விழிநின் துணையின்றி உலக மில்லை
செந்தமிழே நீயின்றி வாழ்வே யில்லை;
நூல்புரைமெல் லிடையணங்கே எனக்கு நின்னை
நுந்தைதர உடன்படுமோ? விழையும் எற்குப்
பால்வழியும் மொழிபுகலும் நின்னை என்பால்
பரிந்தளித்தால் அவனைஎன்வாய் வாழ்த்தி நிற்கும். 113

மாவேழன் எவர்பாலும் கெஞ்சி நின்று
மனம்விட்டுப் பொருளொன்று கேட்ட தில்லை
பூவேறும் தாழ்குழலி! நின்ம ணத்தின்
பொருட்டாக நுந்தையின்பால் இரந்து நிற்பேன்;
கோவேலன் மறுத்துரைப்பின் போரே மூளும்;
குமுறிஎழும் வீரத்தால் மணமே சூழும்;
நாவீறு வஞ்சினத்து மொழியாக் கொள்க!
நாளைக்கு முடிவொன்று காண்பேன்' என்றான். 114

பூஆரும் - பூநிறைந்த, ஞான்று - பொழுது, வட்கார் - பகைவர்,

# இயல் - 28

**தந்தையிடம் இசைவுபெற முடிவு செய்து**
**தணியாத காதலொடு பிரிந்து சென்றார்.**

'புலரட்டும் முடிவொன்று காண்பேன்' என்று
புலியனையான் புகன்றமொழி கேட்டுப் பூவை
'மலரட்டும் மணமுரசம் என்ப தல்லால்
மருவட்டும் போர்முரசென் றுரைத்தல் நன்றோ?
பலரட்டுக் குவிப்பதிலா மணநாள் வேண்டும்?
பற்றிருக்க உறவிருக்கப் பரிவி ருக்க
மலரொட்டும் மணமாலை சூடி நிற்க
வழியிருக்க அதைவிடுத்துப் பகையா வேண்டும்? 115

போருக்கு முனைந்துவிடின் ஒருபால் தந்தை!
புலியனைய காதலன் நீ மறுபால் நிற்பை!
யாருக்கோ இழப்பென்று நினைத்தாய் போலும்!
எனக்கதிலோர் மணநினைவா மகிழ்வா தோன்றும்?
ஊருக்கும் பழிப்பாகும்; அதனால் நானே
உயிர்த்தோழி துணைகொண்டு தந்தை யின்பால்
நேருக்கு நேருரைத்து மணமு டிக்க
நேயமுடன் இசைவுபெற முயல்வேன்' என்றாள். 116

'உனையடைய வேண்டுமெனும் நோக்கம் ஒன்றே
உந்துவதால் என்னியல்பால் உரைத்து விட்டேன்;
எனையடைய உனக்கிசைவு தந்தை தந்தால்
எனக்கதன்மேல் பேறுண்டோ வெல்க' என்றான்;

---

அட்டு - கொன்று

மனையடையும் நேரம்மிக ஆயிற் றென்று
 மதிவந்து முகங்காட்டப் பிரிந்து செல்லத்
தினையளவும் மனமிலராய் விலகிச் சென்றார்;
 திருமணத்து நினைவுடனே துயிலச் சென்றார். 117

நஞ்சுமிழும் முழுமதியை வானிற் கண்டார்;
 நலிவுதரும் தென்றலெனும் காற்றைக் கண்டார்;
பஞ்சணையின் பெயராலே விரித்து வைத்த
 பாழ்நெருஞ்சிப் பரப்பினையே அங்குக் கண்டார்;
விஞ்சுமணப் புகைபரவ, வெய்து யிர்த்து
 விடும்புகையாய் அதுபரவிச் சூழக் கண்டார்;
வெஞ்சரமாய்ப் பூச்சரங்கள் தெரியக் கண்டார்;
 விழிகுவியாக் கனவுலகில் மிதந்து சென்றார். 118

**காட்சிப்படலம் முற்றும்.**

சரம் - அம்பு

# திருமணப் படலம்

**பூமருவு மணமாலை பூண்டு நெஞ்சுட்**
**புகுந்திருவர் ஒருவரென ஆகி நின்றார்**
**தாமரையும் மணமுமென இல்ல றத்தில்**
**தாமிணைந்தோர் அணிகலனாய் விளங்கி நின்றார்.**

இயல் - 39

-திருமணப்படலம்163.

# இயல் - 29

**பழகிய காதலர் படுதுயர் நீங்கிடப்**
**பொழுது புலர்ந்தது புள்ளினம் ஆர்த்தன.**

துயிலுக்கும் காதலுக்கும் தொடர்பொன் றுண்டோ?
துணைவனைத்தான் பெறும்வழியை உன்னி யுன்னி
மயலுக்குள் விழுந்துழல்வோள் உறக்க மின்றி
மலர்ப்பாயல் துவண்டுவிழப் புரண்டி ருந்தாள்;
மயிலுக்கு மணமாலை சூட்டு தற்கு
மன்னவன்றன் விடைகாணத் தவிக்கும் வீரன்
வெயிலுக்கு மன்னவன்றன் வரவு நோக்கி
விழித்திமையான் காத்திருந்தான் விடியு மட்டும். 119

இருளுக்குள் துயில்மடியில் அயர்ந்தி ருக்கும்
இருநிலத்தின் சோர்வகற்ற எழுந்த வெய்யோன்
கருநிறத்துக் கடலகத்துக் கதிர்க்கை நீட்டிக்
கண்கவரும் எழிலோடு கீழை வானில்
குருநிறத்துச் செவ்வொளியாற் கோலஞ் செய்தான்;
குரல்வகைய புள்ளினங்கள் இயம்போ லார்த்துச்
சிறகடித்துப் பறந்தனவான்; மலர்க ளெல்லாம்
சிந்துபனி யாற்குளிர்ந்து பொலிந்த யாண்டும். 120

உன்னி - நினைத்து. குரு - அழகிய நிறம். இயம் - வாத்தியம், பொலிந்த - பொலிந்தன.

# இயல் - 30

**தந்தையின்பால் தூதுரைத்து மீள்க என்று**
**தலைத்தோழி தனையனுப்பி நின்றாள் மங்கை.**

படியினுக்குள் புதுமலர்ச்சி பரவக் கண்டு
பாவைமனம் புத்துணர்ச்சி நிரம்பக் கொண்டாள்;
கொடியிருக்கும் மலரனைத்தும் கூந்த லுக்குள்
குடியிருக்கும் படிவைத்தாள்; தோழி தன்னைக்
கடிதழைத்தங் கருகமர்த்தி நெருநல் மாலை
கரைகாணாக் கனவுலகில் வீர னோடு
கொடிபிடித்துக் கற்பனைத்தேர் ஊர்ந்த வெல்லாம்
குறையாமல் சிதையாமல் உரையா நின்றாள். 121

'எனையளித்த தந்தைக்குச் செய்தி சொல்லி
எதிர்மறையால் விடையின்றி உடன்பா டாக்க
முனைவதுநின் கடனாகும்; நீநி னைத்தே
முயலுவையேல் முற்றாகும் எச்ச மில்லை;
நினைவிடுத்தால் எனக்குதவ யாரே உள்ளார்?
நேரிழையே நின்பெயரை வாழ்த்தி நிற்பேன்
வினைமுடித்துத் திரும்'பெனவேல் விழியு ரைத்தாள்;
வேண்டுதியோ உடன்படுமெய்' என்றாள் தோழி. 122

'கலக்கத்தாற் குழம்புமெனை விளங்கக் கூறிக்
கனிமொழியால் தெளிவுறுத்த முனைத லின்றி,
இலக்கணத்தாற் குழப்புகின்றாய்! புரிந்து கொள்ள
இந்நிலையில் இயலுவதோ?' என்றாள் செல்வி;

---

படி - பூமி நெருநல்-நேற்று 122ஆம் பாடலில் இலக்கணச் சொற்கள் நயம்பட வந்துள்ளன.

'குலக்கொழுந்தே! உயிரிரண்டு கூடுங் காலைக்
கூட்டுவிக்கும் உடன்படுமெய் போல உங்கள்
இலக்குடைய உயிரிரண்டைக் கூட்டு விக்கும்
எழில்மணத்தை அப்பெயராற் குறித்தேன்' என்றாள். 123

'புணர்ச்சிக்கு விதிசொல்ல வல்லாய்! எங்கள்
புணரியற்கும் விதிசெய்ய வேண்டும்; தந்தை
உணர்ச்சிக்கு வயமாகி மறுக்கா வண்ணம்
உரைக்குமுறை யாலுரைத்து, வீரனுக்கே
இணர்த்தொடையல் நான்சூட்டி மணமே கொள்ள,
இசைவிப்பாய்; என்னுயிர்நின் கையிற் றந்தேன்;
துணர்க்கொடியின் இடையுடையாய்! தூதுசென்று
துணைதருமோர் மங்கலச்சொற் கொணர்க' என்றாள். 124

---

உடன்படுமெய் - இரண்டு உயிரைச் சேர்த்து வைக்கும் மெய்யெழுத்து, புணர்ச்சி இலக்கணப்புணர்ச்சி புணரியல் - தலைவன் தலைவியர் கூட்டம் இணர்த்தொடையல் - பூங்கொத்து மாலை துணர் - பூங்கொத்து.

# இயல் - 31

**வேந்தன்பால் தூதுரைக்கச் சென்ற தோழி**
**வேல்விழிக்கு மணமுடிக்க வேண்டி நின்றாள்.**

மாதுக்குத் தந்தைவயத் தரசன் பாங்கர்
மாவேழன் வேல்விழியின் மணமு டிக்கத்
தூதுக்கு நேர்ந்துசெலும் தோழி, மன்னன்
துய்யமணி மண்டபத்தில் தனித்தி ருக்கும்
போதுக்கு வந்தெதிரே தொழுது நின்றாள்;
புன்னகையால் வாழ்த்தியவன் அவளை நோக்கி,
'யாதுக்கு வந்தனைநீ? நின்னு ளத்தில்
என்விழைந்தாய்? விளம்புதியேற் பெற்றாய்' என்றான். 125

'உரைபிறழாச் செங்கோன்மை உடையோய்! என்றன்
உள்ளத்தை உரையாமுன் பெற்றாய் என்றாய்;
கரையறியாப் பேருவகை நெஞ்சிற் பாயக்
காண்கின்றேன் என்கருத்து முற்றிற் றென்றே;
விரைபிரியா மலர்பூத்துக் குலுங்கும் முல்லை
வியன்கொடிதான் படரஒரு கொழுகொம் பின்றித்
தரைதனிலே கிடந்திடுமேல் வளர்ச்சி யுண்டோ?
தவித்திருக்கக் காண்பதுதான் நமக்கும் நன்றோ? 126

இளமைஒரு நிலையுடைய பருவ மன்றே;
இருநிலத்தில் அப்பருவம் உயர்ந்த தொன்றாம்;
வளமையினை நுகர்ந்தின்பம் துய்த்த லின்றி
வறிதொழிய விட்டுவிடல் இயல்பும் அன்று;
களமர்வயல் பருவத்தே பயிர்செய் யாரேல்
கண்காணப் பயனொன்றும் தருவ தில்லை;
களகளவென் றாழியினுள் மழைபொ ழிந்தால்,
கானகத்து நிலவெறிந்தால் எவர்க்கு நன்மை?' 127

விரை - மணம் களமர் - உழவர்

கொற்றவன்முன் பற்பலவும் விதந்து தோழி
கூர்மதியால் உரைத்தவெலாம் கேட்டி ருந்தோன்
'கற்றறியும் சான்றோர்தம் அறிவா னாய்ந்து
கழறுதல்போல் ஏதேதோ மொழிந்து நின்றாய்;
உற்றவுன துளம்புகல மறந்தாய் போலும்
உண்மைசொலத் தயங்குவதேன்? நோக்க மென்ன?
சுற்றிவளைத் துரைப்பதினி வேண்டா என்பால்
துணிந்ததனை மொழிந்திடுநீ அஞ்சேல்' என்றான். 128

'அருள்பொழியும் விழியுடையாய்! பருவம் வந்த
அரிவையர்தம் வாழ்வுக்குத் துணையைத் தேடி
மருளுறுவ தியல்பன்றோ; மங்கை யர்க்கு
மணநாளே திருநாளாம்; அந்நன் னாளைத்
தருவதுநின் கடனாகும்; அதனை வேண்டித்
தண்குடையோய் நின்னிடம்யான் வந்தேன்' என்றாள்;
'சுருள்குழலி! நீவிழையும் ஒருவ னுக்கே
துணையாவாய் எனமகிழ்ந்து சொன்னான் மன்னன். 129

தந்தையினும் பரிவுடையோய்! மாலை சூடத்
தவிக்குநிலை எனக்கில்லை; குலம்த ழைக்க
வந்தவளை வேல்விழியை அவள்வி ழைந்த
வாள்வீரன் ஒருவனுக்கு மணமு டிக்கச்
சிந்தையினில் நான்விழைந்தே வேண்டி நின்றேன்;
சிறியவளென் வேண்டுதலைச் செவியில் ஏற்று
நுந்தைகுலம் தழைத்துயர்ந்து வளர்வான் வேண்டி
நுண்ணிடைக்குத் திருமணநாள் குறிக்க' என்றாள். 130

'பொன்மகளே! ஆண்மகவு பெற்றே னல்லேன்
பொற்பதுமை என்னஒரு பெண்ணைப் பெற்றேன்;
என்மகட்கு மணமுடித்தால் நெடுநாள் நெஞ்சில்
இருந்துறுத்தும் கலிதீர்க்க அவள்வ யிற்றில்
நன்மகவு பலபிறக்கும் என்றி ருந்தேன்;
நனவனைத்தும் பகற்கனவாச் செய்து விட்டாள்;
மன்னிலத்து மன்னர்பலர் வேண்டி வந்தும்
மணங்கொள்ள மறுத்தனளே' என்றான் வேந்தன் 131

எறிந்தால் - வீசினால், கலி - துன்பம்.

# இயல் - 32

**மணமகன் யாரென அறியா மன்னன்**
**கனலெனச் சீறிக் கடுமொழி பகர்ந்தான்.**

மன்னவன்றன் உரைகேட்ட தோழி 'ஐய!
மன்றலுக்கு மனமொப்பி விட்டாள் தையல்'
என்னலுமவ் வயத்தரசன் களிப்பின் மூழ்கி,
'என்னோற்றேன் இனியமொழி இதனைக் கேட்க!
மின்னனைய இடையுடையாள் எழிலுக் கேற்ற
மேலவனைத் தேர்ந்தெடுத்து மணமு டிப்பேன்;
நன்னகருள் மணமுரசம் விரைவில் கேட்பாய்;
நலியுமென்றன் கலியகன்ற தின்றே' என்றான். 132

'கன்னிமகள் வாழ்க்கைக்குத் துணையைத் தேடிக்
கலங்குநிலை நினக்கில்லை; தன்ம னத்தே
உன்னியுளள் ஒருவனைத்தான்; அவனோ பாரில்
ஒப்பரிய செப்பரிய வீர னாவன்;
மன்னவநீ அன்னவற்கு மகளைத் தந்தால்
மாநிலத்துப் பெருமையெலாம் நின்னைச் சாரும்';
என்னுமொழி செவிபுகுதா முன்னர் வேந்தன்
'எந்நாட்டிற் கரசனவன் இயம்பு!' கென்றான். 133

'நாட்டினுக்கோர் அரசனலன்; நாடாள் வோர்க்கு
நற்றுணையாம் அமைச்சுமலன்; அவரை யெல்லாம்
ஆட்டிவைக்கும் பெருவலியன் அழகன் வீரன்
அன்னவற்கே தன்மனத்தைப் பறிகொ டுத்தாள்;

என்னோற்றேன் - என்னதவம் செய்தேன்.

சூட்டுதற்கு மணமாலை அவனை யன்றித்
தொல்லுலகில் எவருமிலர்' என்றாள்; மன்னன்
வாட்டமொடு, 'நங்குலத்து மரபை மீறி
வழக்கமிலாச் செயல்புரிய நினைந்தாள் கொல்லோ? 134

இவளழகில் மனமயங்கித் தவங்கி டக்கும்
இளவரசர் பலரிருந்தும் மதியா ளாகி,
எவனொருவன் தனைநினைந்தோ மறுகு கின்றாள்?
இகழ்ச்சிசொலும் பான்மைக்கோ இடங்கொ டுத்தாள்?
தவறுசெயும் துணிவிவட்கு வந்த தேயோ?
தன்னிளமைப் பருவத்தால் விளைந்த தேயோ?
எவருடைய தூண்டுதலால் இதனைச் செய்ய
ஏந்திழையிங் கொருப்பட்டாள்?' எனக்க னன்றான். 135

மீண்டுமவன் விழிசிவந்து, 'மன்ன ருக்குள்
மீக்கூர்ந்த புகழுடையான் ஒருவற் றோர்ந்து
பூண்டருதோள் புணர்மாலை சூடச் செய்வேன்;
போபோஅவ் விளையாட்கும் இதனைக் கூ'றென்
றாண்டுமுறை செயுமன்னன் ஆணை யிட்டான்;
அப்பனெனும் முறைமறந்தான்; தோழி அஞ்சி,
'ஆண்டகைநின் சொல்லுக்கோர் அட்டி யுண்டோ?
ஆயினுமென் பணிந்துரைக்குச் செவியீ' கென்றாள். 136

மீக்கூர்ந்த - மேம்பட்ட. பூண்தருதோள் - அணிகலன்களையுடைய தோள்.

# இயல் - 33

**சீறிய மன்னன் சினத்தீ யதனை**
**ஆறிடச் செய்தனள் அறிவுடைத் தோழி.**

அஞ்சித்தன் மொழிபுகல்வாள் அருள்பொ ழிந்த
அரசன்றன் முகக்குறிப்பை நோக்கி நோக்கி,
'வஞ்சிக்குத் தாயில்லாக் குறையே தோன்றா
வண்ணமிது நாள்வரையும் வளர்த்த நீயோ
வெஞ்சினத்து மொழிபுகன்றாய்! அவள்தன் வாழ்வை
வீணாக்க விழைகின்றாய்! செற்றம் ஒன்றே
நெஞ்சகத்துப் புகவிடுவோர் நீதி காணார்:
நேர்மைக்கும் இடமளியார்; பகையே கொள்வர். 137

உயிராக ஒருவனைத்தன் மனத்தி னுள்ளே
உறவாக மதித்திருக்கும் ஒருத்தி யின்பால்
அயலானை மணக்கவென எடுத்து ரைத்தால்
அவளுடல்தான் மணமேடை வந்து சேரும்;
இயமாரும் மணமுரசம் ஆர்த்தல் கேளோம்;
இரங்கலொலி ஒன்றன்றி எதுவும் கேளோம்;
அயில்வேலோய்! தண்ணளியும் கொண்டுள் ளாய்நீ!
ஆய்ந்தொன்று மேற்கோடல் சால்பாம்' என்றாள். 138

'காதலெனின் ஆணைக்குக் கட்டுப் பட்டுக்
கருகிவிடும் பொருளன்றாம்; எதிர்த்து வந்து
தீததனை நெருங்குமெனில் தளிர்த்து நிற்கும்
தெய்வீகத் தன்மையது வாய்ந்த தென்றே
ஓதலிலே வல்லவர்கள் உரைப்பர்; அந்த
உண்மையினை நீயுணர மறுத்து நிற்பின்
சாதலிலே போய்முடியும்; குலம கட்குச்
சாக்காடு தரநினைந்தால் நின்பா' டென்றாள். 139

இயம் - வாத்தியம். அயில்- கூரிய. தண்ணளி - கருணை.

'நேரிழையே என்மனத்தை உருக்கி விட்டாய்!
நெறிதடுமா றாவண்ணம் திருப்பி விட்டாய்!
ஆருயிர்போல் வளர்த்தவளைத் தகுதி யில்லா
ஆருக்கோ கொடுப்பதெனின் பெற்ற நெஞ்சம்
கூரெரியின் மெழுகாகி நையு மன்றோ?
குழம்புமெனை என்செய்யக் கூறு கின்றாய்?
சீரெதுவோ அதுசெய்ய ஒப்பு கின்றேன்;
சிறியவட்கு மணமுடிந்தாற் போதும்' என்றான்.

# இயல் - 34

**வேல்விழி காதலன் வேழுன் றானெனச்**
**சேல்விழித் தோழி செப்பினள் அவற்கே.**

'மங்கையர்க்குள் அரசியென விளங்கும் நின்றன்
மகளுளத்தைக் கவர்ந்தானோர் காளை என்றால்
இங்கவனைத் தகுதியிலான் எனநி னைக்க
இயலுவதோ? அவளைத்தான் எளிய ளாக
எங்ஙனம்நீ நினைந்தனையோ? மணமே வேண்டா
திருந்தமகள் இளவரசி காதல் கொண்டு
கொங்கலரும் மலர்த்தொடையல் சூட்டு தற்குக்
குறிக்கொண்டாள் எனினதுதான் புதுமை யன்றோ? 141

பேரரசர் அரிதின்முயன் றாலுங் கிட்டாப்
பெரும்பேறு நீபெற்றாய்! வேந்த ரெல்லாம்
வீரனிவன் பெயர்கேட்பின் நடுங்கி நிற்பர்;
வெலற்கரிய வலியுடையான்; களிறு சூழ்ந்து
பாரதிரப் போரெதிர்ந்து வரினும் அஞ்சான்
பாய்ந்தவற்றைப் பரபரவென் றிழுத்துச் சாய்த்துக்
காரதிரும் இடியேறென் றார்த்து நிற்பான்;
கட்டழகும் கட்டுடலும் ஒருங்கே பெற்றான். 142

கற்பாறை பலவுருட்டி, நெடிதின் ஓங்கு
கருமரங்கள் அடிபெயர்த்துச் சீறிப் பாய்ந்து,
முற்போகும் கான்விலங்கை எதிர்த்துத் தாக்கி,
முழுவலியும் கெடஇழுத்து, வாகை சூடி
நிற்பாரின் பேரொலிபோல் ஆர்த்துச் செல்லும்
நிறைவெள்ளப் போக்குடைய புனலா றென்னும்
சொற்பேரால் வழங்கிவரும் ஆற்றின் தென்பால்
சூழ்மதில்சேர் மூவகமே அவன்நா டாகும். 143

---

கொங்கு - தேன்

அரியணையும் செங்கோலும் மணிவி ளங்கும்
அணிமுடியும் வெண்குடையும் அவனுக் கில்லை;
உரிமையுடன் ஆட்சிசெய நாடும் இல்லை;
உண்மைநிலை இதுவெனினும் அவற்றை யெல்லாம்
அரசர்தமக் களிப்பதுவும், தற்ப கைத்தால்
அழிப்பதுவும் அவன்கையில் இலங்கும் வாளே;
அரியனையான் மாவேழன் என்னும் பேரான்;
அரசருள்ளும் அவன்போல்வார் யாரே உள்ளார்? 144

பெருந்திறலன் அவனுக்கே மாலை சூட்டப்
பெட்புடன் மனத்தகத்தே உறுதி பூண்ட
முருந்தனைய நகையுடையாள் பிழையோ செய்தாள்?
மொய்ம்புடையான் அவன் தகுதி இலனோ? சொல்வாய்!
விருந்தினனாய் நங்கோயில் அகத்து வைகும்
வேழன்றன் உறவுபெற விழையாய் கொல்லோ?
திருந்தயில்வேல் மன்னநின துள்ளம் யாதோ?
தெள்ளிதின்நீ ஆய்ந்தெனக்குச் செப்பு' கென்றாள். 145

முருந்து - மயிலிறகின் அடிப்பகுதி

# இயல் - 35

**துணையாவோன் வேழனெனத் தோழி சொல்ல**
**மணநாளை முரசறைய மன்னன் சொன்னான்.**

'மணமகனாய் மருமகனாய் மாலை சூட
மாவேழன் வருமென்றால் மறுப்பா ருண்டோ?
நிணமருவு நெடுவேலான் பெயரைச் சொன்னால்
நீணிலத்துக் குறைசொல்ல எவரே உள்ளார்?
மணமலர்சூழ் நெடுங்குழலாள் இவனை எய்த
மாதவமே செய்திருத்தல் வேண்டும்; வேந்தர்
கணமுழுதும் இவனிழலில் வாழும் போது
களிறனையான் தகுதிக்கோர் குறைதான் ஏது? 146

என்மகளோ பிழைசெய்வாள்? இல்லை! இல்லை!
என்குலத்துப் பெருமையினை உயர்த்தி விட்டாள்!
பொன்மலரில் நறுமணமே தோன்றிற் றென்னப்
பூவையிவள் மனத்தெழுந்த ஆர்வ மெல்லாம்
தன்னளவிற் கைக்கிளையாய் விடுமோ என்று
தயங்குகிறேன்; மாவேழன் இசையா னாகின்
மின்னனையாள் வேல்விழியின் நெஞ்சில் துன்பம்
மிடைந்துவிடும் வாழ்வுமொரு கான லாகும்.' 147

என்றிரங்கும் மன்னனுக்குத் தோழி சொல்வாள்,
'இளவரசி பெறுங்காதல் இரண்டு நெஞ்சம்
ஒன்றுபடும் ஐந்திணையாய் விளங்கிற் றைய!
ஒருமகளாம் வேல்விழியை மணக்கும் நாள்தான்
என்றுவரும் என்றேங்கு கின்றான் வேழன்;
எள்ளளவுங் கவலற்க; இசைவும் தந்தான்;
மன்றல்கொள இவ்வணங்கை மறுப்பா ருண்டோ?
மாதவங்கள் செய்தவற்கே வாய்க்கும்' என்றாள். 148

---
நிணம் - கொழுப்பு ஐந்திணை - பொருந்திய அன்பு, மன்றல் - மணம்

இசைந்தானவ் வெலற்கரிய வீரன் என்ற
    இனியமொழி கேட்டளவில் அமிழ்தம் ஆர
மிசைந்தான்போல் மகிழ்ந்தானவ் வயந்தர் வேந்தன்;
    மீளியவன் இசைவுபெற முயன்றார் யாரோ?
ஒசிந்தொசிந்து நடைபயிலும் வேல்வி ழிக்கும்
    ஒள்வேலான் தனக்குமிடை நின்று கூத்து
நசைந்தவணம் நடத்தியவள் நீதான் என்று
    நன்குணர்ந்தேன் நின்மொழியால்' என்றான் மன்னன். 149

'வேல்விழியின் தன்மனமும் இமையா வீரன்
    வேழன்றன் மனமுமொரு நிலையில் நின்று
நூல்வழியே கோத்தனபோல் இணைந்த வென்றால்
    நூல்வல்லார் ஊழெனவே நுவல்வர்; ஆனால்
கோல்வழுவாய்! பழிஎன்மேற் சுமத்து கின்றாய்;
    கூர்ந்துணர்ந்து நோக்குங்கால் பருவக் கூத்தின்
மேல்விளைவே ஈதன்றி வேறொன் றில்லை;
    மீறியவர் இயற்கையினை யாரே?' என்றாள். 150

'அளப்பரிய நூல்பலவும் கற்றா ரேனும்
    அறிவொன்றும் அறியாத மற்றா ரேனும்
களப்பலிகள் பலகொடுத்த வலிய ரேனும்
    கனவகத்தும் போர்காணா மெலிய ரேனும்
உளப்படுத்தி உலகியலிற் சிறந்தா ரேனும்
    உறவறுத்துப் பற்றனைத்தும் துறந்தா ரேனும்
விளக்கரிய காதலெனும் கூத்துள் நின்று
    விளையாடா மாந்தரெங்கும் இல்லை' என்றாள். 151

தோழியுரை கேட்டரசன் நகைத்து நின்று
    'துடியிடையாள் மணமுடிக்க முயன்ற உன்னை
வாழியென வாழ்த்துகின்றேன்; நாளை யந்த
    மாவேழன் தனைக்கூடி அளவ ளாவி,
ஏழிசையின் இயமுழங்கச் சான்றோர் வாழ்த்த
    இளவரசி மணமாலை சூடும் நல்ல
நாழிகையும் மங்கலநன் னாளும் ஆய்ந்து
    நகருக்கு முரசறைந்து சொல்வோம்' என்றான். 152

மிசைதல் - உண்ணல். மீளி - வீரன், ஒசிந்து - வளைந்து நசைந்தவணம் - விரும்பியவண்ணம்.

# இயல் - 36

**மன்னவன் மொழியெலாம் வந்தவள் உரைத்திடக்
கன்னலின் மொழியாள் களிப்பில் மூழ்கினள்.**

விடைபெற்று நீங்குமவள் துள்ளிச் சென்று
வேல்விழிக்கு நிகழ்ந்தவெலாம் விளக்கி நின்றாள்;
தடையுற்று விடுமோதன் காதல் என்று
தவித்திருந்தோள் நற்செய்தி கேட்டு நெஞ்சில்
உடைபட்ட மடைபோல உவகை பொங்கி
உடலெல்லாம் பாய்வதுபோல் உணர்ச்சி கொண்டாள்;
இடைமட்டும் மெலிந்திருக்க எழிலைத் தாங்கும்
ஏனையுறுப் பத்தனையும் விம்மிற் றம்மா! 153

தான்விழைந்த மணமகனே கிடைத்து விட்டான்;
தனைப்பெற்றோன் மறுப்பொன்றும் உரைக்க வில்லை;
மான்விழைந்த பார்வையினாள் மனம்போல் வாழ்வு
வாய்த்தமையாற் பூரிப்புக் கொண்டு நின்றாள்;
மீன்வளைந்து விளையாடும் குளிர்த டத்துள்
மேவுமெழிற் றாமரைபோல் மலர்ந்தி ருந்தாள்;
தேன்விளைந்த காதலிலே வெற்றி கண்டால்
தெரிவையர்க்கு மேலுமொரு பேறும் உண்டோ? 154

# இயல் - 37

**ஆயிழையின் நெஞ்சமெலாம் மகிழ்வு பொங்க**
**ஞாயிறெனும் செங்கதிரோன் தோன்றி வந்தான்.**

எஞ்சிடுமப் பகற்பொழுது நீங்கிச் செல்ல
இடையிலொரு கங்குலெனும் நெடிய போழ்து
விஞ்சுமெழில் கொண்டவட்குப் பகையாய் வந்து
விடிவதற்கு மறந்ததுபோல் நின்ற தங்கே!
'நஞ்சனைய இவ்விரவு முன்ன ரெல்லாம்
நாடோறும் விரைந்துசெலும் இன்று மட்டும்
வஞ்சியெனை வாட்டுதற்கோ நிலைத்த' தென்றாள்
வாள்வீரன் மணச்செய்தி நோக்கி நின்றாள். 155

ஆயிழையின் மனத்தகத்தே அடக்கி வைத்த
ஆர்வமெலாம் திரண்டுருண்டு வடிவு கொண்டு
மாயிருநீர்க் கடற்பரப்பில் உருவு காட்டி
வருவதுபோற் செங்கதிரோன் கீழை வானில்
ஞாயிறென முகங்காட்டித் தோன்றி வந்தான்;
நங்கையவள் உள்ளமெலாம் ஒளிபெற் றோங்கிப்
பாயுவகை மீதூரத் தளிர்த்து நின்றாள்
பகலவற்கு வாயார நன்றி சொன்னாள். 156

---

மாயிரு - கரிய பெரிய.

# இயல் - 38

**வயத்தரசன் வேண்டுமொரு வாய்மொ ழிக்கும்**
**மாவேழன் மனமுவந்தே இசைவு தந்தான்.**

புலர்காலைப் பொழுதத்தின் வரவு கண்டு
பூரித்த வயத்தரசன் விரைந்து சென்று
மலர்மாலை வயங்கிருதோள் வேழற் கண்டு
மகளைமணங் கொள்கவென வேண்டி நின்றான்;
'நலமாரும் என்புரவி தேடி வந்தேன்
நான்தருவேன் நின்துணையை* என்று ரைத்தாய்!
பலர்சூழ உரைத்தமொழி வாய்த்த தைய!
பாவையைஎன் துணையாகக் கொள்வேன்' என்றான். 157

'பெருவலியன் ஒருவனைஎன் மருக னாகப்
பெறுவதன்மேல் மகிழ்வுளதோ? ஆனால் நீதான்
சிறியஒரு வாக்குறுதி தருதல் வேண்டும்;
சீறுபகை கொண்டிரண்டு நாடுந் தம்முள்
பொருநிலையை எய்துமெனில் இவள்தான் இந்தப்
பொன்னாட்டை விட்டகலல் கூடா' தென்றான்;
திருமகளை மருவுவதில் மயங்கி நிற்கும்
திண்ணியனவ் வுறுதிமொழிக் கிசைவு தந்தான். 158

*54ஆம் பாடலை நோக்குக.

# இயல் - 39

**முரசம் ஆர்த்தது முழவொலி கேட்டது**
**அரசன் மகளை அடைந்தனன் வேழன்.**

மணமகளாம் வேல்விழியை அணுகி நின்று
மன்னவனவ் வுறுதிமொழி கூறக் கேட்டுக்
குணமகளாம் அன்னவளும் இசைந்தா ளாகக்
கொற்றவனும் மகிழ்ந்தெழுந்து சான்றோர்ச் சார்ந்து
மணவறையை அமைப்பதற்கு நாள்கு றித்தான்;
மாநகரம் முழுமைக்கும் முரச றைந்து
தணவரிய மகிழ்வூட்டும் செய்தி சொல்லத்
தனைச்சூழும் அமைச்சர்க்கும் ஆணை யிட்டான். 159

மாந்தரெலாம் மணமுரசங் கேட்டுத் தங்கள்
மக்கள்திரு மணம்போல மகிழ்வு கொண்டார்;
வேந்தனுறை அரண்மனையும் மாடஞ் சேரும்
வீதிகளும் தாமுறையும் இல்லம் யாவும்
ஏந்துமெழில் கொண்டிலங்கத் தோர ணங்கள்
எடுத்தார்பூம் பந்தர்பல படைத்தார்; வண்ணச்
சாந்துவகை மதிற்பூசி நகர மெல்லாம்
சாற்றரிய ஒப்பனையாற் கோலஞ் செய்தார், 160

தெருவெல்லாம் புதுமணலைப் பரப்பிக் கோலஞ்
செய்திறத்தாற் புதுநகரம் படைத்து விட்டார்;
செருவெல்லாம் வென்றவனைக் கணவ னாகச்
சேயிழையாள் மணமாலை சூட்டும் நன்னாள்
வருவதனாற் சிறைக்கதவம் திறக்க என்று
வாள்வேந்தன் ஆணையிட்டான்; வாரி வாரித்
தருபொருளால் கற்றோரும் மற்றோர் யாரும்
தனிமகிழ்ச்சி கொளச்செய்தான் தானுங் கொண்டான். 161

குறித்தமண நாள்வரலும் கொற்ற வன்றன்
    கோயிலெலாம் தெருவெல்லாம் மக்கள் கூடிச்
சிரித்தமுகங் கொண்டங்கு நிறைந்து நின்றார்
    சேர்ந்தவருள் மன்னரென்றும் மக்கள் என்றும்
பிரித்தறிய முடியாமற் கலந்து நின்றார்;
    பெரும்புலவர் தம்வாயால் வாழ்த்தி நின்றார்;
விரித்தஇதழ் மலர்மாலை சூட்டி வேழன்
    வேல்விழியைக் கைப்பிடித்தான் துணையாக்கொண்டான் 162

மாமலையிற் பிறந்தஒரு மணியும், பூமி
    மண்ணுக்குள் புதைந்திருந்த பொன்னும் ஒன்றாய்த்
தாமருவி அணிகலனாய் விளங்கல் போலத்
    தனிமகளாம் வேல்விழியும் வேழன் றானும்
பூமருவு மணமாலை பூண்டு நெஞ்சுட்
    புகுந்திருவர் ஒருவரென ஆகி நின்றார்;
தாமரையும் மணமுமென இல்ல றத்தில்
    தாமிணைந்தோர் அணிகலனாய் விளங்கி நின்றார் 163

# இயல் - 40

**திருமண மாகிய இருவரும் நிலவிற்**
**பெறுபயன் துய்த்துப் பெருமகிழ் வெய்தினர்.**

வந்தயர்ந்த விருந்தினரும் பகலும் ஓய
மணங்கண்டு மேற்றிசையில் கதிரோன் சாயச்
சந்தனத்துப் பொதியமலைப் பிறந்த தென்றல்
தண்மலர்கள் பலநீவி உலவி நிற்கப்
பந்துருண்டு வந்ததென மதியம் வானில்
படர்ந்துவரும் முகிலுக்குள் தவழ்ந்து செல்ல
முந்துமிரு நெஞ்சங்கள் துடித்து நிற்க
முதலிரவு வந்ததுவே இன்பம் நல்க! 164

பூமணமும் புகைமணமும் துதைந்து சுற்றும்;
புகுமிடங்கள் ஒப்பனையாற் பொலிந்து முற்றும்;
தூமலரின் சரங்களெலாம் அசைந்தி ருக்கும்;
தூவியுடன் பூவிதழும் கலந்தி ருக்கும்
காமமுறு பஞ்சணையும் விரித்தி ருக்கும்;
கட்டிலொடு கண்ணாடி இணைந்தி ருக்கும்;
தாமரைபோல் அமைந்தஒளி விளக்கி ருக்கும்;
தண்ணியமென் தென்றல்வர வழியி ருக்கும்; 165

பாலிருக்கும், வகைவகையாய்ச் சுவைகள் நல்கும்
பழமிருக்கும், பக்கமெலாம் எழிலி ருக்கும்;
மேலிருக்கும் கூரையெலாம் வரைந்தி ருக்கும்
மேன்மைபெறும் ஓவியங்கள் நிறைந்தி ருக்கும்;
சேலிருக்கும் புனலலைகள் நெளிதல் போலத்
தென்றலிலே திரைச்சீலை அசைந்தி ருக்கும்;
வேலிருக்கும் விழியாளும் வேழன் றானும்
விரிந்திருக்கும் மாளிகையுட் புகுந்தி ருந்தார். 166

---

துதைந்து - நெருங்கி, தூவி - அன்னத்தின் மெல்லிறகு சேல் - கயல்

புகுந்தவர்தாம் புதுமைமிகும் உலகிற் சென்று
 புக்கவர்போல் அமர்ந்திருந்தார்; இருவர் நெஞ்சம்
தகுந்தகுமென் றாசையினால் படப டத்துத்
 தாளமிட உணர்ச்சிகொண்டார்; வடுவின் காயை
வகுந்ததெனும் விழியாலே அவன்ந லத்தை
 வாரியுண்டாள்; அவனுந்தன் விழிம லர்த்தி
நகுங்கமல முகத்தாளின் அழகை எல்லாம்
 நனியுண்டு மயங்கிமனங் களித்தி ருந்தான். 167

கையொன்றால் சேயிழையின் மென்தோள் பற்றிக்
 கன்னத்தை மற்றொன்றால் தொட்டான்; அந்தக்
கையொன்றா முன்னமவள் நாணங் கொண்டு
 காளையவன் தடந்தோளில் முகம்பு தைத்தாள்;
மெய்யொன்றும் பொழுதத்தில் இருவர் தாமும்
 மேனாளிற் கண்டறியா இன்பங் கண்டார்;
பொய்யென்றார் இவ்வாழ்வை அறியா மாந்தர்;
 புதுமையிது புதுமையிது என்று வந்தார். 168

காணாத இன்பத்தான் அவள்பாற் கொய்யாக்
 கனிகொய்தான்; முகஞ்சிவந்து பெண்மை நாணம்
பூணாகக் கொண்டவளும் கொழுநன் றன்னைப்
 பூங்கொடிபோல் தன்னுடலால் தழுவிக் கொண்டாள்;
'பாணாக வண்டார்க்கும் பொய்கைப் பக்கம்
 பார்த்தென்பாற் பூங்கொடியை வேண்டி நின்றீர்!
நாணாளும் நுமைப்பற்றிப் படர்ந்து வாழும்
 நல்லகொடி யாகிவிட்டேன் கொள்க' என்றாள். 169

பாலறியார் பழமறியார் ஆனால் அந்தப்
 பாற்சுவையும் பழச்சுவையும் நன்கு ணர்ந்தார்;
நூலறியார் கவிநுகரப் புகுதல் போல
 நுழையினும்பின் சொலற்கரிய இன்பங் கண்டார்;
வேலறிவான் வாளறிவான் எனினும் இன்று
 வேலறியாக் களங்கண்டான்; வெற்றி கண்டான்;
மாலவள்தன் விழிவேலால் தோற்புங் கண்டான்;
 வளர்நிலவுப் பயன்முழுதும் வாரி யுண்டான். 170

வடு - மாவடு, வகுந்தது - பிளந்தது, பாண் - பாடல், நாணாளும் - நாளெல்லாம் மாலவள் - இன்பமயக்க முடையவள்.

# இயல் - 41

**புணர்ந்து திகழ்ந்தேன் பூவையின் நலத்தை**
**உணர்ந்து புகழ்ந்தான் ஒண்டொடி மகிழ்ந்தாள்.**

'புலனைந்தாற் பெறுமின்பம் அனைத்தும் என்றன்
பூங்கொடிபால் நுகர்ந்ததனுள் திளைத்தேன்; நல்ல
குலனுவந்த நினைக்கண்டு கொண்ட காதற்
கொடுநோய்க்கு நீயேநன் மருந்தாய் நின்றாய்!
கலன்சுமந்த மென்தோளில் துயிலும் இன்பம்
கண்காணாத் துறக்கத்தை விஞ்சக் கண்டேன்!
நலனுகர்ந்து விலகுங்கால் சுடுதல் கண்டேன்
நண்ணுங்கால் தண்ணென்னும் விந்தை கண்டேன்! 171

நின்னலனை அறிதோறும் முன்னர் என்பால்
நின்றிருந்த அறியாமை கண்டேன்' என்று
பொன்னனையாள் புணர்ச்சியினால் மகிழ்ந்து ரைத்தான்;
புரிநகையில் முல்லையுடன் கொவ்வை கண்டேன்
மின்னுமொளி மேனியினில் தளிரைக் கண்டேன்
மீன்விழியில் குவளைமலர் மிளிரக் கண்டேன்
சின்னஒரு மின்னலிடை துவளக் கண்டேன்
செய்யமலர் நின்முகத்தில் மலரக் கண்டேன். 172

முகிலிடையே மலர்முல்லை கண்ட தில்லை
மொய்குழலில் அம்முல்லை மலரக் கண்டேன்;
துகிலுடைய மாங்கனியைக் கண்ட தில்லை
தோள்தொட்ட பின்னரதைக் கண்டு கொண்டேன்;
நகையுடைய முல்லைக்கு வரிசை யில்லை
நானின் றவ் வரிசைதனை நின்வாய்க் கண்டேன்;
புகலரிய இனிமைக்கு வடிவமில்லை
பூமகளே நின்னுருவில் அதனைக் கண்டேன். 173

---

கலன் - அணிகலன் துறக்கம் - சுவர்க்கம் செய்யமலர் செந்தாமரை முகில் - மேகம், துகில் - ஆடை, நகை - ஒளி.

வானத்து முழுமதிதான் நின்மு கத்து
    வடிவழகுக் கொப்பாகத் தவங்கி டக்கும்;
மீனத்து நடுவிலது மேன்மை பெற்றும்
    மேற்பொருந்தும் களங்கத்தால் உவமை யாகா
மானத்து நல்லுணர்வால் வெட்கி யங்கு
    மாமுகிலுட் புகுத்தொழிந்து போதல் காண்பாய்!
நானத்தும் எழிலுருவப் பாவாய்! நின்றன்
    நலத்தைஎலாம் எவ்வண்ணம் புகழ்வேன்' என்றான் 174

உணர்ச்சியினால் மெய்தழுவி என்றுங் காணா
    உலகினுக்கு மாவேழன் அழைத்துச் சென்று
புணர்ச்சியினால் அவன்திளைத்து மகிழ்ந்து ரைத்த
    புகழ்மொழிகள் அத்தனையும் மயங்கிக் கேட்டாள்;
உணற்குரிய நலமெல்லாம் உண்ட பின்னர்
    உவந்துதலம் பாராட்டி உரைத்த சொல்லால்
துணர்க்கொடியின் மெல்லிடையாள் துவண்டி ருந்தாள்
    தொல்லுலகைத் தன்னிலையை மறந்தி ருந்தாள். 175

புகழ்மொழிகள் தரும்மயக்கம் வேழன் தந்த
    புணர்ச்சியினால் வரும்மயக்கை விஞ்சி நிற்கும்;
புகழ்மொழிகள் தந்நலத்தை வெறுத்து விட்ட
    பொதுநலத்துத் தொண்டரையும் மயக்கு மென்றால்
வகிர்வடுவின் விழிமகளிர் நெஞ்சை மட்டும்
    வாட்டாமல் வளைக்காமல் விட்டா போகும்?
திகழ்மலர்கள் உதிர்ந்திருக்கும் அணையின் மீது
    திருமகளும் சொக்கியிமை குவித்தி ருந்தாள். 176

ஆண்மைக்கோர் உவமைசொலும் உலக வீரன்
    ஆணழகன் மாவேழன் என்னும் நம்பி,
வாண்மைக்கண் மாதரசி பாரில் இல்லா
    வடிவழகி வேல்விழியாம் நங்கை, அன்புக்
கேண்மைக்கோர் இலக்கியமாய் இல்ல றத்துக்
    கிழமைக்கோர் இலக்கணமாய் வாழ்ந்து வந்தார்
வேண்மைக்கோர் உறுபயனைக் காதல் வாழ்வின்
    விளைவுதனைக் கண்டுவக்கும் வாய்ப்பும் பெற்றார். 177

**திருமணப்படலம் முற்றும்**

மீனம்-விண்மீன்கள். நானத்தும்-நான் நத்தும், வாண்மைக்கண்-வாள்போன்ற மைபூசிய கண்கள். வேண்மை-விரும்புந்தன்மை.

## மகப்பெறு படலம்

**மாதவளும் துன்புற்ற பின்னே என்றும்**
**மாறாத இன்பத்தைப் பெற்றெ டுத்தாள்;**
**போதவிழும் மலர்முகத்தாள் தாய்மை கொண்டாள்;**
**பூங்கொடியில் அரும்பொன்று பூக்கக் கண்டாள்.**

இயல் - 51
- மகப்பெறு படலம். 228

## இயல் - 42

**மயங்கினள் ஒருநாள் மாது**
**வாடினன் வேழன்அப் போது.**

மாடத்து நிலவரங்கில் ஒருநாள், காதல்
மணிப்புறவாய் அவ்விருவர் மகிழும் போது
கூடத்துச் சென்றவள்வாய் குமட்டி நின்றாள்;
கொடுவேலான் பதைத்தோடித் தோள்கள் பற்றிப்
பீடத்தின் பஞ்சணையின் சேக்கை சேர்த்தான்;
பேதையதன் மிசைமயங்கிக் கொடிபோற் சாய்ந்தாள்;
வாடத்தன் காதலிக்கு வந்த தென்கொல்?
வாய்குமட்டி நின்றதென்கொல்? எனத்துடித்தான். 178

மெல்லியகால் சுரந்துசிறி ததைத்தி ருக்க
மேனியெலாம் பசந்ததுபோல் தளர்ந்தி ருக்க,
வல்லியவள் முகஞ்சிறிது செம்மை மாறி
வாட்டமுடன் விளர்த்திருக்கக் கண்டான்; போரிற்
கொல்லியலின் திறங்கண்டும் இளகா நெஞ்சன்
கோதையிவள் நிலைகண்டே இளகி விட்டான்;
வல்லினமும் மெல்லினத்தைக் கூடுங் காலை
வலிகுறைந்து மென்மைபெறல் உண்மை யன்றோ! 179

குளிர்புனலை மலர்முகத்தில் தெளித்தான்; சற்றே
குறைவுபட மயக்கொழிந்து தெளிந்தாள்; 'நின்றன்
தளர்நிலையைக் கண்டுள்ளம் நடுங்கி விட்டேன்
தளிர்மேனிக் கிந்தநிலை வந்த தென்கோல்?
விளரியதுன் முகமென்கொல்?' எனப்ப தைத்து
வினவியவற் 'கொன்றுமிலை' என்று சொல்லி,
முளரிமுகம் ஒருசிறிது கவிழ்த்து, நாணி,
முறுவலித்து, வேல்விழியாள் அகன்றாள் ஆங்கே. 180

முளரி - தாமரை.

காய்ச்சியநல் லாவின்பால் கொண்டு வந்து
கைக்கொடுத்தாள் உயிர்த்தோழி; பாலை வாங்கி
வாய்ச்சிறிது வார்த்தவுடன் கடிந்து கொண்டாள்;
வாழ்கின்றார் காதலர்தாம் எனது நெஞ்சுள்,
போய்ச்சுடுமென் றறியாயோ? விஞ்சும் சூடு
போகாமல் கொணர்ந்தனையே! போபோ என்று
வேய்ச்சிறுமென் தோளுடையாள் சினந்தாள் ஓர்நாள்;
வேறறிய வொண்ணாமல் ஒன்றி நின்றாள். 181

# இயல் - 43

**வேல்விழியாள் கருக்கொண்டாள் என்றறிந்த**
**வேழன்எனக் காண்மகவு பிறக்கு மென்றான்.**

மற்றொருநாள் மாடத்துத் தனித்தி ருந்து
மாவின்காய் ஒன்றெடுத்துப் பாவை தின்றாள்;
பற்றுடனே வேல்விழிபால் வந்த வேழன்
பார்த்ததனை நகைக்கஅவள் மறைத்துக் கொண்டாள்;
'முற்றியநற் கனியிருக்கக் காயை வேண்டும்
முழுமதியை என்னென்பேன்'! என்றா னாக,
நெற்றியிலே பாதிமதி யுடையாள் 'இந்த
நேரத்தில் காயொன்றே இனிக்கும்' என்றாள். 182

'கனியாத காயினிக்கும் நேர மொன்று
கண்டதிலை விந்தையிது' வெனந கைத்தான்
'இனிதாக மண்ணுடனே சாம்பர் தின்னும்
இந்நேரம் புளிப்பென்ன கைத்தா போகும்?
தனியான இன்புலகில் இருவேம் மட்டும்
தனித்திருந்தோம் மகிழ்ந்திருந்தோம்; நமது காதற்
கனியாக அன்புக்கோர் சின்ன மாகக்
காணுகின்றேன் என்வயிற்றில் மற்றோர் ஆவி. 183

தாயாகும் நிலையெனக்கு வாய்க்கும் பேறு
தந்தவற்கே சொல்லாமல் மறைத்து வைத்தேன்
காயாமல் பொறுத்தருள்க' என்றாள் மங்கை;
களிப்பதனாற் பெருமுழக்கம் செய்தான் வேழன்;
'சேயாக ஒருமகனை எனக்க ளித்தாய்!'
சிந்தைஎலாம் இனிக்கின்ற செய்தி சொன்னாய்!
ஓயாத பெருவலியன் மற்றோர் வீரன்
உலகத்தில் தோன்றுகின்றான்! வீரங் காப்பான். 184

---
முழுமதி - பேரறிவு (நகைக் குறிப்பு) சாம்பர் - சாம்பல். காயாமல் - கோபிக்காமல்

தந்தையென எனையாக்கும் இனிக்குஞ் செய்தி
　　தருவதற்கோ புளிக்கின்ற காயை யுண்டாய்?
கந்துமிகும் மாவேழற் கிணையாய் நிற்கும்
　　காளைநிகர் ஒருவீரன் எவனும் இல்லை;
விந்தைமிகும் அவனுக்கே மகனாய் வந்தோன்
　　வீரத்தால் எதிராவான் என்று பாரில்
எந்தமுகம் நோக்கினுமே கேட்கச் செய்யும்.
　　இணையில்லான் நின்வயிற்றில் வளரு கின்றான். 185

மனக்கினியாய்! மாவீரன் வாழ்க என்றே
　　வாழ்த்துகிறேன்' எனமீண்டும் முழங்கி நின்றான்;
'சினக்களிற்றின் மிகுவலியோய்! கற்ப னைத்தேர்
　　செலுத்துவதில் வல்லாய்நீ! புரவி வாங்க
நினைக்குமுனம் கசையொன்று வாங்கி விட்டாய்!
　　நெடிதுழன்று கருவுயிர்க்கா முன்னர் ஆண்தான்
எனக்கழறி போர்மறவன் ஆக்கி விட்டாய்!
　　எதிர்காலக் கற்பனையில் கவிஞன் ஆனாய்! 186

பெண்பிறவா தெனும்நினைவோ? யாரே கண்டார்?
　　பிறந்துவிடின் என்செய்வை? ஆணோ பெண்ணோ
கண்மணிபோல் நாம்வளர்ப்போம்; கட்டிக் காப்போம்;
　　காலமினும் ஐந்தாறு திங்க ளுண்டு
நண்பகலில் கனவெதற்குப் பிறகு பார்ப்போம்!
　　நங்கையிவை மொழிந்தவுடன் வேழன் சொல்வான்
'மண்புகழும் பெருவீரன் எனக்கு மைந்தன்
　　மாவீரன் தான்பிறப்பான் ஐய மில்லை. 187

பெரும்படையை எதிர்நின்று பொருது வென்ற
　　பேராற்றல் கண்டுலக வீரன் என்று
தரும்பெயரைப் பெற்றுள்ளேன்; இந்நாள் மட்டும்
　　தருக்கிஎதிர் வருவோரைக் காணு கில்லேன்;
அரும்புகழைப் பெரும்விருதைப் பிறருக் காக்க
　　அணுவளவும் ஒவ்வேனென் பரம்ப ரைக்கே
வரும்படிநான் செய்வதுதான் கடனும் ஆகும்;
　　வளர்கின்ற நின்கருவும் ஆணே' என்றான். 188

கந்து - வலிமை. கசை - சாட்டை. எதிராவான் - ஒப்பாவான்

# இயல் - 44

**மணிவயிற்றில் வளர்மகவு ஆணே என்று**
**மாவேழன் கற்பனைத்தேர் ஊர்ந்து சென்றான்.**

பிறந்தவுடன் அவனையிரு கையால் வாரிப்
பெட்புடன் நான் வழங்கிடுவேன் முத்த மாரி;
திறந்தஎன தகல்மார்போ டணைத்துச் சென்று
சீரியஎன் போர்க்களத்திற் கிடத்தி, மண்ணிற்
பிறந்தவனே! இம்மண்ணே உனக்கு வாழ்வு;
பெருவீரங் காட்டியிதைக் காத்தல் வேண்டும்;
இறந்தாலும் களத்தேதான் இறத்தல் வேண்டும்;
எனவாழ்த்தி வீரத்தை ஊட்டிக் காப்பேன். 189

மரத்தாற்செய் சிறுதேரும் குதிரை யானை
வகைகளுடன் விளையாடத் தருவேன்; மேலும்
உரத்தால்வெம் புலியோடும் சிங்கத் தோடும்
உடன்றுபொரச் சிறுவேலும் வாளும் ஈவேன்;
மறத்தோள்கள் திரண்டுருளும் பருவம் வந்தால்
மற்போரும் விற்போரும் வாள்சு ழற்றும்
மறப்போரும் திறத்தோடு பயிற்று விப்பேன்;
மாமல்லர் போர்க்களமே பள்ளி யாகும். 190

போர்க்களத்தில் தேரூர யானை ஏறப்
புரவிமிசைப் பாய்ந்தேறப் பயிற்று வித்துப்
பார்த்தலத்தில் இக்கலையில் இவனைப் போலப்
பார்த்ததிலை எனப்பகர வளரக் காண்பேன்;
ஆர்க்கின்ற அரியேறு பலவந் தாலும்
அஞ்சாது பொருதழிக்கும் ஆற்றல் கொள்வான்;
கார்க்களிற்றின் இடைப்புகுந்து துதிக்கை பற்றிக்
கரகரவென் றவன்கழற்றும் வலியன் ஆவான். 191

பெட்பு - விரும்பு. பள்ளி - பள்ளிக்கூடம். கார்க்களிறு - மேகம்போன்ற யானை

பண்டிளமைப் பருவத்தே எனது நாட்டில்
பாய்மதமா வெறிகொள்ள மக்க ளஞ்சக்
கண்டுடன்கைத் தண்டொடுசென் றதனைத் தாக்கிக்
கலங்கிஅது நிலந்தனிலே வீழ்ந்து சாகக்
கண்டவன்நான்; மைந்துடைய எனக்கு மைந்தன்
களங்களிலே எனைவிஞ்சும் வலிய னாகித்
தண்டுபல துண்டுபடப் பொருதுங் காட்சி
தணவாமல் கண்டுகண்டு மகிழ வேண்டும். 192

பெற்றெடுத்துப் புறங்காத்துப் பேணி, உள்ளப்
பெட்புடனே வளர்ப்பதுநின் கடனே யாகும்;
செற்றமொடு பொருகளத்து வீரர் தம்முட்
சீர்மைமிகு தலைவீரஞ் சான்றோன் என்ன
முற்றுபுகழ் பெற்றிடவே பயிற்று விக்கும்
முழுப்பொறுப்பும் எனக்கிருக்கும் கடனே யாகும்;
கற்றபடி உற்றமர்கள் பலமு ருக்கிக்
களிறெறிதல் காளைக்குக் கடனே யாகும். 193

வாள்பற்றிச் சுழன்றுசுழன் றவன்போர் செய்ய
வட்டமிடும் பொழுதத்தில் ஆர்ப்ப ரிப்பேன்;
தோள்தட்டிக் கெக்கலிப்பேன்' என்றே ஆர்த்தான்;
துய்யமணி மண்டபமே முழங்கிற் றம்மா!
வேள்விட்ட பெருமுழக்கால் அஞ்சிப் 'பேறு
விளையுமுனம் இம்முழக்கா' என்றாள் தோகை;
'வாள்சுற்றும் போர்க்களத்தில் சீறும் போதும்
மகிழ்பொழுதும் ஆர்ப்பரித்தல் என்வ ழக்கம்; 194

அஞ்சல்விடு வஞ்சியொரு வீர னுக்கே
அன்னையென ஆகியநீ நடுங்கல் நன்றோ?
கொஞ்சுமொழி மைந்தனுக்கு வீரப் பாலே
கொடுத்துமற மூட்டுவதுன் கடனே' என்றான்;
பஞ்சினுமெல் லடியுடையாள் அவன்சொற் கேட்டுப்
'பாவைஎன்றன் மணிவயிற்றில் வளரும் செல்வம்
அஞ்சுகம்போல் பெண்ணாகப் பிறக்க வேண்டும்;
அகலாமல் என்வயமே இருக்க வேண்டும்'. 195

தண்டு - போர்க்கருவி. சேனை. தணவாமல் - நீங்காமல். முருக்கி - அழித்து, அஞ்சுகம் - கிளி

என்றவள்தன் மனத்தகத்தே எண்ணிக் கொண்டாள்;
இரும்பனைய மாவேழன் நாள்கள் எண்ணித்
துன்றமரில் பொருதுவரும் மகனைக் காணத்
துயிலாத பெருங்கனவு கண்டி ருந்தான்;
என்றுவரும் என்றுவரும் அந்த நன்னாள்
எனவேங்கி இருவருமே நோக்கி நிற்க,
ஒன்றொன்றாய் நாள்வளர உரிய காதல்
ஒளிவிளக்கம் அவள்வயிற்றில் வளர்ந்த தம்மா! 196

# இயல் - 45

**நாவலத்தான் படையெடுத்த செய்தி கேட்டு**
**மூவகத்து மாவேழன் கொதித்தெ ழுந்தாள்.**

நாவலத்துப் பெருங்கனகன் பகைமை பூண்டு
நட்புரிமை விட்டொழித்துச் செருக்குக் கொண்டு
மூவகத்துட் பெரும்படையை ஏவி விட்டான்;
முனைத்தெழுந்து படையெடுத்து மதலைக் கோவும்
காவலுக்குப் புறப்பட்டான் என்ற செய்தி
களிறடக்கும் மாவேழன் செவியிற் கேட்டான்;
போவதற்குக் கொதித்தெழுந்தான் முகஞ்சி வந்தான்
பூரித்த தோள்தட்டி ஆர்ப்ப ரித்தான். 197

ஆர்ப்பரித்த ஒலிகேட்டு நங்கை வந்தாள்;
'ஆயிழையே! நானில்லாப் பொழுத றிந்து
போர்ப்படையை நாவலத்தான் எனது நாட்டிற்
புகுத்தியுளான் எனுஞ்செய்தி இன்று கேட்டேன்;
தேர்ப்படையால் வாட்படையால் எதிர்த்தா னேனும்
செருக்கடக்கிப் படைமடக்கிப் பிறக்கிட் டோடத்
தார்ப்புரவி செலுத்திப்போர் வென்று மீள்வேன்;
தரியலரைச் சிதறடித்துக் கொன்று மீள்வேன்'. 198

என்னுஞ்சொற் செவியுறலும் மலர்வி ழிக்குள்
இருக்கின்ற புனலெல்லாம் சோர விட்டாள்;
வன்னெஞ்சன் தோள்தழுவி விரிந்த மார்பில்
மலர்முகத்தைப் பதியவைத்து விம்மி நின்றாள்;
கன்னெஞ்சன் எனினுமவன் காதற் செல்வி
கண்ணீரால் கரைந்திளகி இரக்கங் கொண்டு,
'மின்னுஞ்சேல் விழியுடையாய் என்ன கண்டு
விம்முகின்றாய் வெம்புகின்றாய்? நிமிர்க! என்றான். 199

---

பிறக்கிடல் - முதுகுகாட்டல், தார் - முன்னணிப்படை சேல் - கயல்மீன்

மென்புறத்தைத் தைவந்து, கையி ரண்டால்
    மெல்லியலைக் கைப்பற்றி, அவள்மு கத்தைத்
தன்விரலால் மேல்நிமிர்த்திப் பிரிவை நெஞ்சம்
    தாங்காமல் கண்பொழியும் நீர்து டைத்தான்;
அன்புதவழ் இருவிழியால் அவளை நோக்கி
    அலர்பொதியும் கார்குழலைக் கோதி விட்டான்;
தன்புதிய வாழ்வுக்குத் துணையாய் நின்ற
    தையலுக்குக் கனிமொழிகள் பலவு ரைத்தான்.

---

தைவந்து - தடவி, கார்குழல் - கரியகூந்தல்

# இயல் - 46

**செருவினை வேட்டுச் சினந்தெழு வேழன்**
**பிரிவினை யஞ்சிப் பேதை புலம்பினள்.**

'பிரிந்துறைதல் ஆண்மக்கட் கெளிய செய்கை;
பேதையர்க்கோ கொழுநர்தமைத் தணந்து வாழ்தல்
வருந்தியமும் கொடுஞ்செயலாம்; கொழுகொம் பின்றி
வாடுகின்ற பூங்கொடியாய் வதிக என்றால்
பொருந்துகிற செயலாமோ? வயிறு வாய்த்த
பொழுதத்துப் பிரிந்துழலச் செய்தல் நன்றோ?
நறும்புனலை மீன்பிரிந்து துடித்தல் போல
நான்துணையை விட்டகன்று தவித்தல் நன்றோ? 201

களம்பலவும் சென்றுவந்தீர் வென்று வந்தீர்!
காலமெலாம் போரொன்றே குறியாக் கொண்டீர்!
குளம்படிந்து நீந்துதல்போல் போரில் நீந்திக்
குளித்தாலும் ஆசையினும் அடங்க வில்லை?
உளம்பொருந்துங் காதலிக்குத் தனிமை தந்தே
ஓடுதல்தான் வீரர்தமக் கழகோ? பாரோர்
விளம்புபுகழ் போதாவோ? எங்கும் வீரம்
விளைத்தவெலாம் போதாவோ?' எனத்து டித்தாள். 202

தணந்து - பிரிந்து. வயிறுவாய்த்தல் - கருக்கொள்ளுதல்.

# இயல் - 47

**தேறிய சிலமொழி செப்பிய வேழன்**
**ஆறுதல் கூறி அகன்றனன் ஆங்கே.**

'புகழுக்குப் போர்புரியச் செல்வே னல்லேன்;
புரிகின்ற காதலினும் கடமை ஒன்றே
மகனுக்குப் பெரிதாகும்; பிறந்த மண்ணின்
மானத்தைக் காப்பதென்றன் கடமை யாகும்;
இகழ்வுக்குத் திருநாட்டை விட்டு விட்டால்
எனையன்றோ எள்ளிநகை யாடி நிற்பர்!
தகைமிக்க தாயைமறந் தாலும் பிள்ளை
தாய்நாட்டை மறப்பதொரு கொடுமை யன்றோ? 203

பொருந்தலர்க்கென் பொன்னாடு பணிந்து விட்டால்
பொருவேழன் இருந்தென்ன மாய்ந்தா லென்ன?
வருந்தற்க! தாயகத்தின் துயர்த ணித்து
வந்திடுவேன் நின்துயரம் தணிப்ப தற்கே;
பொருந்தொழிற்குட் புகுந்துவிடின் இன்பம் காணும்
புலனுணர்ச்சி வாழ்க்கைநலம் அணுகா என்பால்;
விருந்தளிக்கும் அகத்துறைகள் நல்கும் இன்பம்
வீரமுறு புறத்துறையால் என்முன் தோற்கும். 204

மறக்குலத்து மாமகளே! உலக வீரன்
மாவேழன் மனைவிஎனில் கலக்கம் கொள்ளேல்;
திறற்களத்து வென்றிபெற வாகை சூடச்
சிரித்தமுகங் கொண்டென்னை வழிய னுப்'பென்
றுரக்களிற்றின் மிகுவலியன் விறைத்து நின்றான்;
உள்ளத்துள் இசையாளாய் இருந்த போதும்
மறுப்புரைக்க இயலாமல் சிரித்து நின்றாள்;
மாவேழன் அவள்கன்னம் சிவக்கச் செய்தான். 205

---
மகன் - வீரன்

'கண்திறந்து விடைதந்தாய், நின்றன் கொவ்வைக்
கனிதிறந்து மனந்திறந்து தந்தா யல்லை;
மண்பிறந்த காலத்தே வாய்த்த வீரம்
மாற்றலர்க்குக் காட்டுதற்கே செல்லு கின்றேன்;
பெண்பிறந்தால் இவ்வணியைக் கழுத்திற் கட்டு;
பெறுமகவு மகனானால் கையிற் கட்டு;
கண்பொழுதுங் களையாமல் அணிந்தி ருப்பின்
காளையவன் பெருவலியும் புகழுங் கொள்வான்.' 206

நயந்துரைகள் இவ்வண்ணம் பலவுங் கூறி,
நாட்படுமோர் பொன்னணியை அவட்க ளித்து,
வயந்தநகர் வீரர்சிலர் கவர்ந்து சென்று
வயத்தரசன் ஆணையினால் மீண்டும் தந்த
வயங்கெழுமு கடுநடைய பரிமா வேறி
வாள்வீரன் தன்திசையிற் பறந்து சென்றான்;
மயங்கியவள் கட்புலனுக் கெட்டுங் காறும்
மாவேழன் செலுந்திசையை நோக்கி நின்றான். 207

---

கண்பொழுது - இமைப்பொழுது. வயம் - வெற்றி.

# இயல் - 48

**பிரியாத் துணைவன் பிரிவால் வாடிப்**
**புரியாத் துயரொடு புலம்பினள் வேல்விழி**

உயிர்தளிர்ப்பச் செய்திருந்த கொழுநன் இன்றவ்
வுயிர்தவிக்கச் செய்தகன்று சென்றா னாகப்
பயிர்தவித்துத் துவள்வதுபோல் தளர்ந்தாள் நங்கை;
பாவையவள் பொழுதொன்று கழிவ தற்குள்
மயல்பழுத்துப் படும்பாடு பெரும்பா டாகும்;
மனங்கவர்ந்த காதலனை நினைந்தி ரங்கும்
மயிலவட்குத் துணைசெய்ய யாரே உள்ளார்?
மாதென்றும் பாராமல் பிரிவு கொல்லும். 208

தொடும்பொழுது மட்டுந்தான் தொடுவோர் தம்மைச்
சுடுநெருப்பைக் கண்டதுண்டு; என்றன் வாழ்வில்
விடும்பொழுது சுடுகின்ற நெருப்பொன் றுண்டு;
விந்தைமிகும் அவ்வொன்று காம மாகும்;
அடும்பொழுதும் மெல்லியநன் மாத ரைத்தான்
அளவின்றித் துயருறுத்தும் போலும்! இந்தக்
கெடுங்குணமேன்? கண்ணில்லை என்று மாந்தர்
கிளப்பதனால் கருணையொன்று மில்லை போலும்! 209

கண்ணில்லாக் காமத்தின் வெம்மை தாக்கக்
கணவன்றன் நினைவதனால் உருகும் நெஞ்சம்
புண்ணில்லாப் புண்பட்டுப் போன தாலே
புழுவானாள் மெழுகானாள் அந்தத் தீயில்;
எண்ணில்லாத் துயராலே நையும் பாவை
இரவென்றும் பகலென்றும் மாலை என்றும்
மண்ணில்லாப் பொழுத னைத்தும் மாறி மாறி
வந்துதுயர்ப் படுத்துவதால் புலம்பு கின்றாள். 210

அடும்பொழுது - வருத்தும் பொழுது. மண்நில்லா - உலகில் நிலைத்து நில்லாத.

'உறவுக்குத் துணையானான் இன்பந் தந்தான்
உழல்கின்ற பிரிவுக்கும் துணையாய் நின்றான்;
வரவுக்கு வழிநோக்கி ஏங்கும் என்றன்
வாழ்வுக்கு மலர்ச்சிதர வரும்நாள் என்றோ?
நறவுக்குச் சுற்றிவரும் வண்டே போல
நாள்முழுதும் எனைச்சுற்றிச் சுற்றி நின்றான்
செருவுக்குப் போய்விட்டான் தவிக்க விட்டுச்
செயலிழந்து துயிலிழந்து புலம்ப விட்டு. 211

மறைக்கின்றேன்; இந்நோயைப் பிறர்க்கு ணர்த்த
மாட்டாமல் தவிக்கின்றேன்; ஆயி னுந்தான்
இறைக்கின்ற நீர்போல ஊறி ஊறி
ஏறுவதைக் காண்கின்றேன்; நட்பா லன்பு
சுரக்கின்ற என்னிடமே இதுசெய் தாரேல்
சூழ்பகைமை கொண்டோரை என்செய் வாரோ?
பிறைக்கொன்றும் நுதலார்தம் பிரிவால் நேரும்
பெருந்துயரம் ஆடவர்க்கு வாரா தேயோ? 212

காதலரைக் கூடிமகிழ் பொழுதி லின்பம்
கடல்போலப் பெரிதாகும்; பிரிந்து விட்டால்
வேதனையோ கடலைவிடப் பெரிதாய்த் தோன்றும்;
வீரரவர் என்னோடு பயிலும் போதும்
போதனைய என்விழிகள் துயில வில்லை;
போர்புரியக் கருதியவர் பிரிந்து விட்டார்
ஆதலினால் இன்றுமவை துயில வில்லை;
அன்றவைதாம் கண்டதின்பம்; இன்றோ துன்பம்! 213

ஊரெல்லாம் உறைபவரைத் துயிலப் பண்ணி,
ஒருதனிமைக் கஞ்சியஇவ் விரவுப் போது
பாரெல்லாம் தேடியொரு துணைகா ணாமல்
பாவையெனைத் துணையாகக் கொண்ட தேயோ?
போரெல்லாம் வென்றவரென் னுடனு றைந்த
பொழுதெல்லாம் வெகுவிரைவில் இரவு செல்லும்;
வேரெல்லாம் வீழ்த்ததுபோல் நிலையா யின்று
விடியாமல் நெடுநேரம் தங்கிக் கொல்லும். 214

---

செரு - போர். வேர் வீழ்த்தல் - வேர்விடுதல்.

உள்ளத்தால் உவந்தென்னை விழையா ராகி
  உண்மைஎன நம்பும்வணம் சொல்லால் மட்டும்
கள்ளத்தால் காதலித்த கள்வ ரைத்தான்
  காணத்தான் போகத்தான் துடிக்கும் கண்ணை
எள்ளத்தான் வெறுக்கத்தான் நினைவு தோன்றும்;
  இருவிழியும் துயிலைத்தான் எய்தி நின்றால்
மெள்ளத்தான் வருங்கனவில் அவரைக் கண்டு
  விளம்பிடுவேன் துயரைத்தான் துயிலே இல்லை. 215

சிலபொழுது செயலிழந்து விழிகள் சோரும்;
  சிறியஒரு கனவுவரும்; கனவில் என்றன்
குலமகனும் தொடவருவான்; ஆர்வத் தோடு
  கொடுந்துயரைச் சொலஎழுவேன் மறைந்து போவான்;
நலமழியும் என்தோளில் உறைந்தி ருப்பான்
  நனவுடைய கனவதனில்; விழித்து நோக்கின்
புலனறிய முடியாமல் நெஞ்சுக் குள்ளே
  போய்ப்புகுந்து கொள்கின்றான்; யாது செய்கேன்? 216

தென்றலுனக் கென்னபிழை செய்து விட்டேன்?
  தீயாக வீசுகின்றாய்; கொழுநர் ஓர்நாள்
முன்றிலிடத் தருகிருந்து காதல் கொண்டென்
  முகத்தெழிலைப் புகழுங்கால் நிற்ப ழித்தார்
என்றதற்கோ முழுநிலவே நெருப்பே போல
  எரிகின்றாய் சொரிகின்றாய் அனலை அள்ளி;
கொன்றொழித்தாற் குற்றமிலை கொல்லா தென்னைக்
  குற்றுயிராக் கிடத்திடவோ விரைந்து வந்தாய்? 217

மருண்மாலைப் பொழுதேநீ அளிக்கத் தக்காய்;
  மங்கும்நிலை உனக்களித்த மாயன் யாரோ?
அருண்மாலை எனக்களித்த காதல் மன்னன்
  அயலாகிப் பிரிந்ததனால் மங்கி என்றன்
உருமாறி நிலைமாறிக் கலங்கு கின்றேன்;
  உனக்கொருவன் இவ்வண்ணம் செய்தான் போலும்;'
பொருண்மாறித் தடுமாறி இவ்வா றாகப்
  பொழுதெல்லாம் புலம்புவதே தொழிலாக் கொண்டாள். 218

---

எள்ள - இகழ, நிற்பழித்தார் - நின்னைப்பழித்தார். அளிக்க - இரங்க. அருள்மாலை - அன்புமயக்கம்.

# இயல் - 49

**ஆற்றுக என்றனள் ஆருயிர்த் தோழி;**
**ஏற்றிலள் அவள்மொழி இரங்கினள் வேல்விழி**

பொழுதனைத்தும் புலம்புகிற மங்கை நெஞ்சைப்
புரிந்தவளாம் தோழிவந்து, 'கருக்கொள் போழ்தில்
அழுதிருத்தல், உணமறுத்தல், துயில்வெ றுத்தல்,
அழகாமோ? பிரிவுதரும் துயரந் தாங்கித்
தொழுதிருத்தல் மங்கையர்க்குக் கடனே யன்றோ?
தூமொழிநீ சிறுமகவோ? மனத்தில் வைகும்
பளுவகற்று! பாலகனை எண்ணி நின்றன்
பரிதவிப்பை விடுபேதாய்!' எனக்க டிந்தாள். 219

'கலங்குகிற எனைக்குறைகள் கூறு கின்றாய்!
காதலியைக் கைவிட்டுப் பிரிந்து சென்று
கலங்கும்வணம் செய்தானே அவனை நீதான்
கடுகளவும் குறைசொல்லிப் பழித்தா யல்லை!
இலங்கிழையே! பரிவுடனே ஒருசொற் சொல்லி
இனைவுறுமென் பாலருளித் தூது விட்டால்
வலங்கெழுமும் வேழற்குக் குறைந்தா போகும்?
வஞ்சகற்கு வாயென்ன நொந்தா போகும்? 220

தண்ணளியொன் றில்லானைத் தறுக ணானைத்
தணிப்பரிய துயர்தந்து தணந்து சென்ற
கண்ணலனைச் சொல்வதற்கிங் கெவரு மில்லை;
கடிந்துரைக்க நானொருத்தி தான்கி டைத்தேன்;
எண்ணரிய தீவினையை நோவ தல்லால்
எவரிடம்போய் முறையிடுவேன்' என்ற ரற்றிப்
பண்ணமுத மொழியுடையாள் நொந்து கொண்டாள்
பாருலகை வெறுத்தவள்போல் உயிர்த்து நின்றாள். 221

பளு - சுமை. இனைவுறும் - வருந்துகின்ற. தணந்து - பிரிந்து. கண்ணலன் - கருணையிலான் உயிர்த்து - பெருமூச்செறிந்து.

# இயல் - 50

**வேழனைப் பழித்த தோழியை மறுத்து**
**வேல்விழி புகழ்மொழி விளம்பினள் உருத்து**

பொறுமையுடன் கேட்டிருந்த தோழி நெஞ்சுட்
புன்னகைத்து வேல்விழிக்குத் தகுந்த வண்ணம்
மறுமொழிகள் புகல்வதுபோற் பொய்ம்மை யாக
மாவேழன் இயல்பதனைப் பழித்து ரைத்தாள்;
'தறுகணன்பால் தண்ணளியும் இருக்கும் என்றால்
தாவுமுயற் குட்டிக்கும் கொம்பி ருக்கும்;
வெறியனவன் போருக்கே உரிய னாவான்
விளங்கிழையார் காதலுக்குத் தகுதி யாகான். 222

தினவெடுத்த திண்டோளன்; கண்ணும் மண்ணும்
தெரியாமற் சமர்விளக்கும் கூர்வாய் வாளன்;
சினமடுத்த மடங்கலெனக் கூச்சல் செய்வான்
சிந்தையிலே மென்மைக்கோர் இடந்தான் உண்டோ?
கனவகத்தும் மெல்லியல்நின் துயரங் காணான்;
கடுந்துயரக் கடலுக்குள் தள்ளி விட்டான்;
புனமடுத்த களிறனையான் மனமே யில்லான்;
பொய்யனவன்' எனஅவனை இயற்ப ழித்தாள். 223

'என்பால்நீ கொண்டிருக்கும் அன்பால் என்றன்
இன்பத்துத் தலைமகனை இகழேல் தோழி!
வன்பாகவ் வினியானைக் கருணை யில்லான்
வஞ்சமுளான் என்றெல்லாம் பழிகள் கூறேல்;
மென்பாலால் பிரிவதனைத் தாங்கும் ஆற்றல்
மேவாத தென்குற்றம்; வலிய னேனும்
அன்பாலே தலையளிகள் புரிந்த வெல்லாம்
அறிவாயோ நீதோழி! அவனென் செய்வான்? 224

பினற்றுகின்ற - புலம்புகின்ற

எனக்குமவன் தாய்நாடு தனக்கும் நெஞ்சுள்
இடமளித்தான் சமமாக; பெற்ற நாடு
தனக்குமொரு நிகர்பங்கே செய்து தந்தோன்
தாய்நாடு துயருறுங்கால் தரியா னாகி
முனைத்தெழுந்து களஞ்சேர்தல் முறைமை யன்றோ?
மூவகத்தான் பிரிவாற்ற இயலே னாகிப்
பினற்றுகின்ற நிலைக்கிரங்கி அவற்ப ழித்தாய்!
பேதையினி அப்பிரிவைப் பொறுப்பேன்' என்றாள். 225

# இயல் - 51

**பத்துத் திங்கள் முற்றிய பின்னர்**
**முத்துப் பிள்ளை பெற்றனள் அவளே.**

'பிரிந்தவனும் இவண்வருவான்; திங்கள் நான்கில்
பேரெழிலாய் மகன்வருவான்; பிரிவுத் துன்பம்
இரிந்தொழியக் கண்டின்பக் கடலுள் மூழ்கி
எந்நாளும் திளைத்திருப்பேன்' என்ற எண்ணம்
விரிந்துளத்திற் பொருந்துவதால் துயரந் தாங்கி
விரிதோகை மயிலனையாள் களித்தி ருந்தாள்;
சரிந்துமணி வயிறணிந்து மாதம் பத்துச்
சரியாக நிறைந்துவர வயவு கொண்டாள். 226

இடைவலியால் அவளுழன்றாள்; அவ்வ யாவால்
இணர்க்கொடிபோல் துவண்டுதுவண் டரற்றிநின்றாள்;
உடைநெகிழ வெய்துயிர்த்தாள்; வியர்த்தாள்; வாயால்
ஓவென்று குரலிட்டாள்; ஓங்கிக் கட்டில்
அடைவுறுமெல் லணையின்மே லடித்துக் கையால்
அதனைமிகப் பிசைந்தயர்ந்தாள்; மஞ்சம் பற்றிப்
பெடைமயிலாள் உடல்தளர்ந்து நெளிந்தாள்; பிள்ளை
பெறுவதன்முன் தாயர்படுந் துயரம் என்னே! 227

காதலனைக் கூடுங்கால் இன்பங் கண்டாள்;
கருவுற்ற நாள்முதலா உயிர்க்குங் காறும்
வேதனைகள் பலகொண்டாள்; இன்ப துன்பம்
வியனுலகில் மாறிவரும்; இயற்கை ஈதே;
மாதவளும் துன்புற்ற பின்னே என்றும்
மாறாத இன்பத்தைப் பெற்றெ டுத்தாள்;
போதவிழும் மலர்முகத்தாள் தாய்மை கொண்டாள்
பூங்கொடியில் அரும்பொன்று பூக்கக் கண்டாள். 228

இரிந்து - நீங்கி. வயவு - பேறுகாலத்துயர். பெடைமயில் -பெண்மயில்.

அன்புக்கோர் அறிகுறியாய்க் காதல் வாழ்வின்
அரியதொரு விளைபயனாய்ப் பிரிவு தந்த
துன்புக்கோர் அருமருந்தாய்ப் பிறந்த சேயைத்
துணைவிழியால் அருள்பொழிய நோக்கிப் பெற்ற
இன்புக்கோர் அளவில்லை; தாய்மை நெஞ்சம்
இருப்பவர்க்கே அதுபுலனாம்; மகிழ்வு ணர்ச்சி
என்புக்குள் பாய்வதுபோல் உணர்வு கொண்டாள்;
இடரனைத்தும் போயொழியப் பெற்றாள் அன்னை. 229

பெற்றமகன் தளிருடலைப் பஞ்சின் மென்மை
பெற்றிருக்கும் கைவிரலால் பூப்போல் தொட்டுக்
கற்றுணர்ந்த சான்றோரின் பாட லுக்குள்
கரந்திருக்கும் உட்பொருளை உணர்ந்தார் போல
உற்றஒரு மகிழ்ச்சியினால் சொக்கிக் காதல்
ஒள்வேலான் ஆண்மகனே பிறப்பான் என்று
சொற்றசொலை மனத்தகத்து நினைத்துக் கொண்டு
சூரனுக்கு வாழ்த்துரைத்தாள் தொழுதாள் அன்னை 230

கரந்து - மறைந்து. சொற்ற - சொன்ன.

# இயல் - 52

**வேல்விழிக்குப் பெண்மகவு பிறந்த தென்று**
**வேழனுக்கு வயத்தரசன் தூது விட்டான்!**

குலக்கொடியாம் தன்மகட்கு மகன்பி றக்கக்
கூர்மகிழ்வு வயத்தரசன் கொண்டா னேனும்
கலக்குறுத்தும் பெரும்பகையால் இரண்டு நாடும்
கடும்போரில் ஈடுபட்டு நிற்ப தாலே
பலர்க்குரைத்துத் திருநாள்கொண் டாட வில்லை;
பாலகன்றன் வெள்ளணிநாட் சிறப்பை எல்லாம்
இலக்கணநூற் பாவென்னச் சுருக்கிக் கொண்டான்;
இன்பமெலாம் மறைபொருளா அடக்கிக் கொண்டான். 231

ஒருமகனாம் முதல்மகன்றான் பிறக்கும் போழ்தே
ஓராண்டுப் பருவத்தன் போலி ருந்தான்;
நறுமலரின் மலர்ச்சிஎன முகம்ம லர்ந்து
நாளெல்லாம் சிரித்திருக்கும் கார ணத்தால்
முறுவலனென் றொருபெயரால் அழைத்து வந்தார்;
முன்பொழுதின் பின்பொழுது மேனி வண்ணம்
பெருகிவர வளர்ந்துவர ஒளிமி குந்து
பேரழகுப் பறழ்புலிபோல் வளர்ந்து வந்தான். 232

மகன்பிறந்த மகிழ்ச்சியினைத் தந்தை யான
மாவேழற் குணர்த்துவலென் றுள்ளங் கொண்டு
மகள்வயினவ் வயத்தரசன் எடுத்து ரைத்தான்;
மங்கையவள் அம்மொழிக்கு மறுப்பு ரைத்தாள்;
'மகனெனவே செய்திசொலி அனுப்ப வேண்டா
மைந்தனென அறிந்துவிடின் முறுவல் பூத்த
முகனிவனைத் தன்னகர்க்கே எடுத்துச் சென்று
முனைமுகத்துக் கிடந்திடுவான் போரில் வல்லான். 233

---
வெள்ளணிநாள் - பிறந்தநாள். முறுவலன் - புன்னகையுடையவன் பறழ்புலி - புலிக்குட்டி

வரைந்திருத்த கொழுநரெனை வரைந்து சென்ற
  வாட்டமினுந் தணியவில்லை; வேர்கொண் டோங்கும்
அருந்துயரம் சிறிதேனும் அறுந்து போக
  ஆற்றுமிவன் முகங்கண்டு வாழு கின்றேன்;
மருந்தனைய இவனையும்நான் பிரிந்து விட்டால்
  மாய்தலன்றி வேறில்லை; என்றன் வாழ்வின்
குருந்தனைய மலர்முகனைச் சுமந்து பெற்ற
  குலமகனை எவ்வணம்நான் பிரிந்து வாழ்வேன்? 234

தன்மகனைப் பெருவீரன் ஆக்கு தற்கே
  தணியாத விருப்புடையான்; அதனால் என்றும்
வன்மைமிகு போர்முறையே பயிற்று விப்பான்;
  வளர்ந்துவிடின் இவனுமவன் போல நாளும்
கொன்முறைய போர்க்களமே குடியாக் கொள்வான்;
  கொடியிடையாள் ஒருத்தியிவன் மனையாய் வந்தால்
என்னிலைபோல் அவள்நிலையும் ஆகும்; பாவம்!
  என்தந்தாய் உண்மைநிலை சொல்ல வேண்டா. 235

பெண்மகவு பிறந்ததெனப் பொய்ம்மை ஒன்று
  பேசுவதால் குற்றமிலை; யார்க்குந் தீங்கு
முண்ணுனியின் அளவேனும் விளைவ தில்லை;
  மொழியினொரு புரைதீர்ந்த நன்மை வாய்க்கும்;
கண்மணியை என்னுயிரைக் காப்ப தென்றால்
  களம்வதியும் காதலர்க்குத் தயக்க மின்றிப்
பெண்மகவே பிறந்ததென்று செய்தி சொல்லிப்
  பேதைமனம் தளிர்ப்பதற்கோர் உய்தி நல்கு!, 236

என்றிறைஞ்சி நின்றாளை இரங்கி நோக்கி
  'என்மகளே நின்மனம்போற் செய்வேன் அஞ்சேல்;
உன்றனுள மகிழ்வன்றி வேறொன் றில்லேன்;
  உன்மகனை நின்வயமே இருக்கச் செய்வேன்;
கன்றினைவிட் டகல்கின்ற ஆவின் தன்மை
  கனவகத்தும் வாராமல் காத்து நிற்பேன்'
என்றவட்கு மன்னவனும் உறுதி சொல்லி
  ஏவலரை வேழன்பால் அனுப்பி வைத்தான். 237

---

வரைந்து - மணந்து குருந்து - குருத்து முண்ணுனி - முள் நுனி. புரை - குற்றம், உய்தி - ஈடேற்றும்வழி.

# இயல் - 53

**வளர்மதி போல வளரும் முறுவலன்**
**பலர்புகழ் கோளரிப் பட்டம் பெற்றான்.**

பகைகொண்ட இருநாடும் உருத்தெ ழுந்து
    பகைப்புலத்து நின்றுவரும் கார ணத்தால்
முகைவிண்ட மலர்மாலை சூடும் நாளில்
    முன்னமவள் தந்தைக்குத் தந்த சொல்லால்
தகைகொண்ட மாதரசி தந்தை நாட்டில்
    தன்கொண்கன் தருபிரிவின் துயரந் தாங்கி
நகைகொண்ட முறுவலன்றன் முகமே நோக்கி
    நன்முல்லைப் பொருளுக்கோர் இலக்காய் நின்றாள். 238

வலியாலும் வடிவாலும் சிறிதும் அஞ்சா
    வகையாலும் வனப்பாலும் வாய்மு ழக்கும்
ஒலியாலும் நடையாலும் சிறப்புற் றோங்கி
    ஒப்பில்லா மாவேழற் கிணையே யாகப்
புலிபோலும் அவ்விளைஞன் மூன்றாம் நாளிற்
    பூத்துவரும் வளர்பிறைபோல் நாளும் நாளும்
பொலிவோடு கலையோடு வளர்ந்து வந்தான்;
    பூரித்து புதுமகிழ்வு கொண்டா ளன்னை. 239

தன்னொத்த பருவத்துச் சிறுவ ரோடு
    தான்கலந்து மகிழ்ந்துவிளை யாடும் போதும்
மின்னொத்துப் பொலிகின்ற வேலும் வாளும்
    வீசிஎறிந் தார்ப்பரிப்பான்; வீரங் காட்டும்

முகைவிண்ட - அரும்பு விரிந்த. கொண்கன் - கணவன். முல்லைப் பொருள் - முல்லைத் திணைக்குரிய உரிப்பொருள், (கணவனைப் பிரிந்து ஆற்றியிருத்தல்).

சின்னத்தை விழைவதைத்தான் அன்றே அந்தச்
சிறுவன்செயல் ஒவ்வொன்றும் காட்டி நிற்கும்;
பொன்னொத்த உடலழகன் வலிமை யோடு
புரிகின்ற அனைத்திலுமே முதன்மை கொள்வான். 240

பாய்ந்தோடும் விரைவுக்குப் புரவி தன்னைப்
பாருலகம் பொருளாக எடுத்துக் காட்டும்;
சாய்ந்தாடும் உளைப்பரிதான் இவனைச் சேர்ந்து
தன்விரைவை வெளிப்படுத்த ஓடுங் காலை
ஓய்ந்தாடும் கால்தளர்ந்தே உருண்டு வீழும்;
உறுகாற்றிற் கடிதேகி இவனே வெல்வான்;
தோய்ந்தாடும் பருவத்துச் செயல்க ளெல்லாம்
சொல்லரிய வியப்பினையே தந்து நிற்கும். 241

விளையாட்டுப் பருவமொரு சிறிதே ஏக,
விறன்மிகுத்த இளங்காளைப் பருவம் வந்து
முளைகாட்டி முகிழ்த்திருக்கத் தோளும் மார்பும்
முகமலரும் விழியிணையும் பொலிந்து நல்ல
களைகூட்டி நிற்க, உடல் தோற்றந் தானும்
கட்டிளமை கொண்டிலங்கக் கோட்டு வெற்பின்
முழைகாட்டும் அரியேற்றின் குட்டி போல
மொய்ம்புமிகு பெருமிதமும் கொண்டு நின்றான். 242

மரஞ்செறிந்த காடடர்ந்து விளங்கி ஓங்கும்
மலைச்சரிவில் இளைஞரொடு வேட்டம் போகி
உரஞ்செறிந்த விலங்கினத்தை எதிர்த்துக் கொல்ல
உவகையோடு திரிதருவான்; இவனைத் தாக்க
முறஞ்செவிய களிறுகளும் முழக்கங் காட்டும்
மொய்யுளைய அரியினமும் வருதல் காணின்
குறிஞ்சியகம் எதிரொலிக்க இடிபோல் ஆர்த்துக்
குதித்தவற்றின் மேற்பாய்ந்து கொன்று மீள்வான் 243

உளை - பிடர்மயிர். முழை - குகை. மொய்உளைய - மொய்த்த பிடரிமயிரிளையுடைய. குறிஞ்சியகம் - மலையகம்,

வேட்டைஎனிற் பெருவிருப்பம்; கான்வி லங்கின்
வேந்தனெனில் தனிவிருப்பம்; முழக்கம் ஒன்று
கேட்டுவிடின் உருமுழக்கம் இவனும் செய்வான்;
கிளர்ந்தெழுவான்; ஆதலினால் இளைஞ ரெல்லாம்
வேட்டெழுந்து படையென்னத் திரண்டு தம்முள்
வீரனிவன் தலைவனெனத் தேர்ந்து கொண்டார்;
காட்டுகின்ற பெருவலியால் கார்மு ழக்கால்
கண்டவர்தாம் கோளரிஎன் றழைக்க லுற்றார். 244

உரும் முழக்கம் -இடிமுழக்கம்.

# இயல் - 54

**தன்னைப் பெற்ற தந்தை யாரென**
**அன்னையின் பாலவன் அறிய வினவினன்.**

மதிலுயர்ந்த கோவிலுக்குள் பிறந்தா னேனும்
வனப்புமிகு காடுகளில் உறைந்த நேரம்
அதிகமெனத் திரிந்ததனால் தந்தை பற்றி
அறியாமல் வளர்ந்திருந்தான்; எனினும் ஓர்நாள்
மதியணிந்த நுதலாளை அணுகி, 'அன்னாய்!
மகனென்னைப் பெற்றெடுத்த தந்தை யாவர்?
வதியுமிடன் யாண்டுளதோ? இன்னும் இங்கே
வாராத தென்கருதி? விளங்கச் சொல்வாய். 245

உயிருடன்தான் உள்ளனரா? உள்ளா ரென்றால்
உனையின்றும் உள்ளாராய் இருப்ப தென்கொல்?
செயிருடன்தான் கைவிட்டுப் பிரிந்தார் என்றால்
சினங்கொள்ள நீசெய்த செயிர்தான் என்ன?
உயர்குடியாம் மன்குடியில் பிறத்தல் செய்யா
ஒருத்திஎனை மண்குடிலில் பெற்றாள் கொல்லோ?
துயருடையேன் எனைவளர்ப்புப் பிள்ளை யாகத்
தொட்டிலிலே பெற்றனையோ? உற்ற தென்கொல்? 246

எனைமகவாப் பெற்றானைக் காண்ப தென்றோ!
என்றேனும் காணும்நிலை வாரா தேயோ?
அனைவருமென் னிலைகண்டே எள்ளும் வண்ணம்
ஆயிற்றே! ஆதரவாம் தந்தை யில்லாத்
தனயனெனச் சொலும்பழியைப் பெற்றேன் அந்தோ
தலைகவிழச் செய்தனரே! வீர மெல்லாம்
முனைமழுங்கிப் பாழாக, வினையொன் றிங்கே
மூண்டெழுந்து துயர்ப்படுத்த வந்த தேயோ?' 247

---

உள்ளாராய் - நினையாராகி. செயிர் - கோபம், குற்றம் மன்குடி - அரசர்குடி, மண்குடில் - மண் குடிசை.

எனப்பலவும் கசிந்துருகிச் சொல்லி நையும்
    இளையவற்குத் தேற்றரவு சொல்லி, 'ஐய!
தினைத்துணையும் நின்முகத்தில் துயரம் ஒன்றும்
    தெரிந்ததிலை; இன்றதனை மதிமு கத்தில்
பனைத்துணையாக் காண்கின்றேன்; என்றும் மாறாப்
    பால்வண்ணச் சிரிப்பெங்கே? இந்தக் கோலம்
உனக்கெதற்கு? விட்டுவிடு! பெற்ற பிள்ளை
    உறுதுயரம் பொறுக்குமுரம் இல்லேன்' என்றாள். 248

'தந்தைபெயர் தெரியாத மைந்த னுக்குத்
    தரையிலொரு பீடுநடை மகிழ்ச்சி ஏது?
சிந்தைதனில் குழப்பங்கள் சூழும் போது
    சிரிப்பேது? வீரந்தான் விளைவ தேது?
வெந்துயரம் துடைக்கஉனக் கெண்ணம் உண்டேல்
    விளைந்தவெலாம் மறைப்பின்றிச் சொல்க! இன்றேல்
நொந்தழிய விட்டுவிடு! சாவ தற்கு
    நூறுவழி உண்டறிவேன்; என்றான் மைந்தன். 249

தேற்றரவு - ஆறுதல்

# இயல் - 55

**மாவேழன் பெற்றமகன் என்றாள் அன்னை**
**மைந்தனவன் சொலற்கரிய மகிழ்வு கொண்டான்.**

'கொன்றனைய இன்னாச்சொல் மற்றும் ஓர்கால்
கூறாதே நின்வாயால்' என்று, தன்முன்
நின்றவனை முகம்நோக்கி நெடிது யிர்த்து
நீர்மல்கப் புகல்கின்றாள், 'என்றன் சேயே
உன்றனையும் பிரிவதற்கோர் உள்ள மில்லேன்
உண்மையினை மறைத்திருந்தேன் மற்றொன் றில்லை;
நின்றொளிரும் கதிரவனை இரவு வந்து
நெடுநேரம் மறைத்தாலும் மறைந்தா போகும்? 250

தனக்குநிகர் எவருமிலாத் தறுகண் வீரன்,
தந்தைஒரு பிள்ளையடா நீ; இப் பாரில்
உனக்கெதற்குத் தலையிறக்கம்? பத்துத் திங்கள்
உளைந்துளைந்து சுமந்துயிர்த்துப் பெற்றேன் உன்னை;
மனக்கவலை ஏன்கொண்டாய்? உலகம் போற்றும்
மதிப்பன்றிப் பழிப்பொன்றும் வாரா துன்பால்;
சினக்களிற்றின் மகவுன்னைப் புகழ்வ தல்லாற்
சிறிதேனும் எள்ளுதலுக் கிடமே இல்லை. 251

பழுதொன்றும் இல்லாமற் புகழே கொண்டு
பாராளும் மன்னர்குலம் நீபி றந்த
தொழுதகுநற் குலமாகும்; உன்றன் தந்தை
தோகைஎனை வெறுத்தெங்குஞ் செல்ல வில்லை;
கொழுநரவர் மனம்வெறுக்கும் வண்ணம் நானும்
குற்றமொன்றும் மறந்தேனுஞ் செய்ய வில்லை;
அழகுதரும் மங்கலநாண் என்க ழுத்தில்
அணிசெய்ய வாழ்கின்றார் பகைவர் நாட்டில். 252

தாயகத்தைக் காப்பதற்கே தணந்து சென்றார்;
தரியலர்தம் போர்முனையில் படைந டாத்தப்
போயவர்க்குக் களமொன்றே நினைவில் நிற்கும்
போர்முடிந்து பகைதணியும் நாளில் தோன்றும்
தூயவர்க்கு நம்நினைவு; நீவ யிற்றில்
தோன்றிவளவர் பொழுதத்தே எனைப்பி ரிந்த
சேயவர்க்குப் பெண்பிறந்த தென்று பொய்ம்மை
செப்பியதே நான்செய்த பிழையாம்' என்றாள். 253

'ஏனம்மா பொய்ம்மொழிந்தீர்? மொழிந்த பின்னர்
என்னபயன் கண்டீர்நீர்? தந்தை யின்றி
நானம்மா துயர்கின்றேன்; எனக்குச் செய்த
நன்மைஎனக் கொண்டீரோ? விந்தை' என்றான்;
மீனம்போல் விழியுடையாள் அவனை நோக்கி
'மெய்ம்மொழியின் உனையங்கே அழைத்துச் செல்வார்;
கானம்போல் பாலையைப்போல் என்றன் வாழ்வு
காய்ந்துவிடும் என்றஞ்சிச் சொன்னேன்' என்றாள். 254

'இத்தனைநாள் இவற்றையெலாம் என்பாற் சொல்லா
தேன்மறைத்தீர்? இதற்கென்ன சொல்வீர்' என்றான்;
'வித்தகன்மா வேழற்கு மகன்நீ என்று
வேந்தனவன் பெருங்கனகன் அறியு மாயின்
எத்துயரும் விளைத்திடுவன் நினக்கென் றெண்ணி
ஈதறியா வண்ணமுனை வளர்த்தோம் ஐய!
அத்தனைநீ அறிகுவையேல் ஈங்கு வேந்தன்
அறியும்வகை பரவிவிடும் அதனால்' என்றாள். 255

'மாவேழன் மகனாநான் அம்மா! அம்மா!
மாவீரன் பெற்றெடுத்த மைந்தன் என்ற
நாவாழ்க வாழ்க'எனக் களித்து நின்று,
'நானிலத்துப் பெருமறவன் பெற்றான் என்று
கோவேந்தன் அறிந்தாலென்? குற்ற மில்லை;
கூறவொணாப் பெருமையலால் இழிவொன் றில்லை;
சாவாத புகழுடையான் பெற்ற பிள்ளை
தகவுடையன் தனிமறவன் என்ன வாழ்வேன். 256

சேயவர் - தொலைவில் உள்ளவர். துயர்கின்றேன் - துயரப்படுகின்றேன்,

பாருலகம் ஏத்துபுகழ் படைத்த வீரன்
பாலன்எனை இத்தனைநாள் காண வாராக்
காரணமென்? வியப்பன்றோ? ஒருகால் என்றன்
கவலைக்கு மருந்தாகப் பொய்ம்மை யாக
ஆறுதலை மொழிந்தனையோ? உண்மை சொல்ல
அறியாயோ? மனமிலையோ? ஈத னைத்தும்
யாருடைய கற்பனையோ? நம்பும் வண்ணம்
யாதொன்றும் புகலாயோ? அன்னாய்' என்றான். 257

'ஈன்றமகன் எனைநம்ப மறுத்து நின்றால்
எவ்வணந்தான் தெளிவிப்பேன்? உலகில் என்னைப்
போன்றமகள் ஒருத்தியினைக் கண்ட துண்டோ?
புதல்வனுக்கும் கொழுநனுக்கும் இடையில் நின்றே
ஆன்றதுய ருடையேனாய் ஊசல் போல
ஆடுகிறேன்; வாடுகிறேன்;' என்றுள் நைந்து
தேன்றுளியின் அனையஒரு நினைவு தோன்றத்
தெளிமனத்தள் இளையோன்பால் நவில லுற்றாள். 258

'கலங்குநிலை கொண்டுழலும் மைந்த! ஒன்று
கழறுகிறேன் இதனைக்கேள்! கருவில் நீதான்
துலங்குகிற பொழுதத்துன் தந்தை எற்குத்
துயர்தந்து பிரியுங்கால், மணிகள் மேவி
இலங்குமொரு பொன்னணியைக் கையிற் றந்தே
எழில்தவழும் வீரமகன் பிறப்பான், அந்த
வலங்கெழுமும் மகவுக்குக் கையிற் கட்டு!
வலிவுடனே பெரும்புகழும் வாய்க்கும் என்று, 259

பலபுகன்றார்; எனைத்தேற்றிப் போரை நோக்கிப்
பறந்தகன்றார்; அவர்தந்த அணியின் ஓர்பால்
குலமகனாம் தந்தைபெயர் பொறித்தி ருக்கும்;
கொடுத்தஅணி இதுகொள்க! இதனை என்றும்
விலகலிலாப் பூணாக அணிந்து பேணி
வென்றிகொண்டு திகழ்க'என மொழிந்து நின்றாள்;
உலகமெலாம் பெற்றான் போல் அதனை வாங்கி
உவகைமிகக் கையகத்தே அணிந்து கொண்டான். 260

# இயல் - 56

**படைதிரட்டி மூவகத்தை வெற்றி கொள்வேன்**
**பரியொன்று வேண்டுமென மைந்தன் கேட்டான்.**

'என்மதலாய்! உனையொன்று வேண்டு கின்றேன்;
இவ்வுண்மை தனைஎவரும் உணரா வண்ணம்
நின்மனமாம் சிறையகத்து வைக்க வேண்டும்
நின்னையும்நான் பிரிந்திருக்கச் சிறிதும் ஒவ்வேன்;
வன்மனங்கொள் கனகனுக்கும் நின்தந் தைக்கும்
வளர்ந்துவரும் குலப்பகைமை நெடுநா ளுண்டு;
நன்மையிலான் பழிவாங்க நினைத்தல் கூடும்;
நாடோறும் விழிப்புணர்வோ டிருத்தல் வேண்டும்.' 261

இவ்வண்ணம் முன்னிகழ்ச்சி அனைத்துஞ் சொன்ன
ஏந்திழையாள் திருவடிக்கு வணக்கஞ் செய்து,
'மெய்வண்ணம் என்வரலா றுரைத்த அன்னாய்!
மேவலர்தாம் நமக்கினிமேல் எவரு மில்லை;
கைவண்ணங் காட்டிடுவேன்; தந்தை போலக்
களங்களெலாம் போய்ப்புகுந்து வெற்றி கொள்வேன்;
செய்வண்ணம் அறிந்துலகம் புகழும் போது
தெரியாமல் என்னிலைதான் மறைந்தா போகும்? 262

எத்துணைதான் மறைத்தாலும் என்றன் போக்கால்
என்றேனும் வெளிப்படுதல் திண்ணம்; காட்டை
நத்துபுலிக் குட்டியின்பால் பூனைப் பண்பை
நயப்பதனால் பயனில்லை; எனினும் என்றன்
அத்தனைநான் காணும்வரை அடக்கிக் கொள்வேன்;
அன்னாய்நீ அஞ்சற்க! திட்ட மிட்டே
இத்தரையில் படைதிரட்டி வாகை சூடி
இணையாரும் இல்லைஎன வாழ்வேன் அம்மா! 263

மறங்செறிந்த நாவலத்து மாந்தர் தம்முள்
    மனவலிமை மிக்காரைத் தேர்ந்தெ டுத்துப்
புறஞ்செறிந்த துறையெல்லாம் பயிற்று வித்துப்
    பூவேந்தர் அஞ்சவரு படைதி ரட்டி,
உரஞ்செறிந்த மூவகத்தைத் தாக்கி, வீரர்
    ஓடோடப் புறங்கண்டு, நாட்டை ஆளும்
திறமிழந்த மன்னவனாம் மதலைக் கோவைச்
    சிறைசெய்து, சொல்லரிய வென்றி கொள்வேன். 264

ஆர்த்தெழுந்த போர்த்திறத்தைத் காட்டிப் பெற்ற
    அரியணையை எனைப்பெற்ற தந்தைக் கீந்து,
சேர்த்துன்னை அவ்வணையில் அமரச் செய்து,
    சேயென்றன் இருவிழியும் களிக்கக் காண்பேன்;
பேர்த்தெழுந்து மூவகத்தின் துணையுங் கொண்டு
    பேரரசன் பெருங்கனகன் படையைத் தாக்கிக்
கார்த்தொகையைக் கலைந்தோடச் செய்ய வல்ல
    காற்றேபோல் கழன்றடித்து வெற்றி காண்பேன். 265

தந்தைஒரு நாடாளத் தன்னே ரில்லாத்
    தனயனொரு நாடாளப் பாரில் எங்கும்
எந்தஒரு பகையுமிலை என்று போற்ற
    இருகதிர்போல் ஒளிசெய்ய ஆட்சி செய்வோம்;
முந்தைவரு மன்னரெலாம் விண்மீன் போல
    மொய்த்திருந்து பணிசெய்ய உலகம் எங்கள்
சிந்தைதரும் குறிப்புணர்ந்தே இயங்கக் காண்பேன்
    சீரெல்லாங் குவிந்தொன்றாய் வயங்கக் காண்பேன். 266

இன்றேநான் என்பணியைத் தொடங்கு கின்றேன்
    ஏற்றதொரு வயப்புரவி எனக்கு வேண்டும்;
குன்றேபோல் களிறனைய வலியும் பெற்றுக்
    கோளரியை விஞ்சுகின்ற வீரங் கொண்டு
நின்றேறிப் பாய்புலிபோற் பாய்ந்து செல்லும்
    நீர்மையெலாம் அப்பரிபெற் றிலங்க வேண்டும்;
சென்றேநான் வென்றிகொளச் சிந்தை கொண்ட
    செயலெல்லாம் நிறைவுபெற வேண்டும்' என்றான். 267

புறஞ்செறிந்ததுறை - போர்த்துறை. கார்த்தொகை - மேகக்கூட்டம்.

# இயல் - 57

**பரியினைப் பெற்றஅச் சிறியவன் விரைந்து**
**பொருபடை திரட்டிப் போர்செய முனைந்தனன்.**

ஆடிக்குள் காண்பார்தம் தோற்ற மெல்லாம்
அவ்வாறே தோன்றுதல்போல் தந்தை சாயல்,
நீடிக்கும் பெருவீரம், செய்கை, பண்பு
நினைவெல்லாம் அப்படியே ஒக்கின் றானால்;
தேடிக்கண் டின்புறவே தந்தை யின்பால்
செலநினைந்தான்; இவனைஇனித் தடுப்ப தென்றால்
மூடிக்குள் பெரும்புயலை அடக்கல் போலாம்;
முயல்கஅவன் வெல்கவென மகிழ்ந்து நின்றாள். 268

பணியாளன் ஒருவனைக்கூய்த் தேர்ந்தெ டுத்த
பரிபலவுங் கொணர்கவென ஆணை யிட்டாள்;
அணியாக வந்தவற்றுள் ஒன்றும் இந்த
அடலேற்றுக் கொப்பவிலை; மற்றோர் வீரன்
மணியான பாய்மாவொன் றங்குத் தந்து
'மாவேழன் புரவிக்குப் பிறந்த தாகும்;
இணையாக இதற்கொன்றும் இல்லை' என்றான்;
ஏறனையான் மகிழ்ந்ததன்மேல் ஏறிக் கொண்டான். 269

'என்னையினிப் பொருதுவெல யாரும் இல்லை;
எவருக்கும் அஞ்சுதலும் இனிமேல் இல்லை;
முன்னிவரும் புரவியிதன் மிசையி ருந்தே
மூவகத்தை வென்றிடுவேன்; மதலைக் கோவும்
தன்னுரிமை அரசிழப்பன்; எனது நெஞ்சின்
தணப்பரிய கனவுகளும் நனவாய்த் தோன்றும்
அன்னையுனை வணங்குகின்றேன்' எனமொ ழிந்தே
அடல்மிகுந்த படையொன்று திரட்டிச் சென்றான். 270

---

ஆடி - கண்ணாடி. கூய் - அழைத்து. அடலேறு - வெற்றிக்காளை போன்ற கோளரி. தணப்பரிய - நீங்காத.

வயத்தரசன் அவையகத்தே உளஓர் வீரன்
    வளங்கெழுமும் மூவகத்தை வெல்வான் வேண்டி
நயத்தெழுதல் ஊர்முழுதும் பரவக் கேட்டு
    நல்லஇளங் காளையர்கள் படையிற் சேர்ந்தார்;
வியத்தகுநற் செயலுக்கு மகிழ்ந்த மன்னன்
    விறன்மிகுதன் கவசத்தைத் தலைவற் கீந்து
பயக்கட்டும் பெருவெற்றி என்று வாழ்த்திப்
    பலமறவர் படைகளுடன் அனுப்பி வைத்தான். 271

**மகப்பெறுபடலம் முற்றும்.**

நயத்தெழுதல் - விரும்பியெழுதல். தலைவன் - படைத்தலைவனாகிய கோளரி.

# படையெழுச்சிப் படலம்

**நாவகத்துப் பெருமுழக்குஞ் செய்து வீரர்**
**நடைவகுத்துப் படைத்துணைவர் சூழச் சென்றார்**
**காவகத்துக் கொடுவிலங்கின் கூட்ட மெல்லாம்**
**கடுகிஒரு வழிநடந்த தென்னச் சென்றார்.**

இயல் - 72
-படையெழுச்சிப்படலம். 327

# இயல் - 58

**போரெடுத்து வந்தவனைப் புரிந்து கொண்ட**
**புன்மைமனப் பெருங்கனகன் துணைபோல் நின்றான்.**

அளப்பரிய வலியுடையான் தன்னோ டுற்ற
அடன்மிகுந்த வீரரொடும் புனலா றென்னும்
வளப்புகழ்சேர் நதிக்கரையின் ஒருபால் தங்க
வந்துள்ளான் எனுஞ்செய்தி நாவ லத்தான்
களத்தவையிற் போய்ப்புகுத, வேந்தன் சூழ்ந்து
கருதலரைப் புறங்காண உருத்தெ ழுந்த
குழக்களிற்றின் அனையானைக் கூற்ற மன்ன
கோளரியைப் புகழ்ந்தவற்குத் துணைகள் செய்தான். 272

முறுவலனாம் கோளரிதான் மொய்ம்பு மிக்க
மூவகத்து வேழனுக்கு மகனே என்று
மறைதெரியும் ஒற்றதனால் உணர்ந்து கொண்ட
மாமன்னன் தனித்திருந்து சூழ்ச்சி செய்தான்;
'உறுபகையால் எழுமிவனுக் குதவி செய்யின்
ஒள்வேலான் வேழனையே கொல்லல் கூடும்;
பிறகிவனை வஞ்சனையால் நஞ்சு தந்து
பெருந்துயிலில் கிடத்துவம்நாம்' என்றே கொண்டான். 273

கொண்டதொரு வஞ்சனையால் ஐயி ரண்டைக்
கூடிவரும் ஆயிரமாம் வீரர் சூழ்ந்து
மண்டுபெரும் படையொன்றைத் திரட்டித் தந்து
மாவலியன் தடவலியன் என்பார்க் கூவித்
'தண்டுகொண்டு கோளரிக்குத் துணையாய் நின்று
சமர்புரி'கென் றிருவர்க்கும் ஆணை யிட்டான்;
தொண்டுபுரி படைத்தலைவ ரவரை நோக்கித்
துணைபுரியச் செல்லுமவர்க் கொன்று சொல்வான். 274

குழக்களிறு - இளையயானை, மொய்ம்பு - வலிமை, மறை - இரகசியம். ஒற்று - உளவறிவார். தண்டு - சேனை,

'படைத்தலைமை கொண்டுள்ளீர்! வயந்தர் தந்த
பகைக்குரிய கோளரிதான் யாவன் என்று
படைத்துணர வல்லீரோ? நமது நாட்டின்
பகைவன்மா வேழனுக்கும் வயந்தன் பெற்ற
இடைக்கொடியள் வேல்விழிக்கும் பிறந்த செல்வன்;
இதுபிறர்க்கு மறைபொருளா வுள்ள தென்று
கிடைத்துளது செய்தியொன்று; போரில் வேழக்
கிழவனுக்கு நிகராவான் என்றும் சொல்வர். 275

நமதுபெரும் படைத்துணையும் இன்று பெற்றான்
நானிலத்தில் எவர்பொரினும் எளிதில் வெல்வான்;
எமனனைய மாவேழன் வாழ்வால் தோல்வி
ஏலாத மூவகத்தைத் தோற்கச் செய்வான்;
சமர்புரியும் மதலைக்கு வேழன் போலத்
தனிமதலை இவன்நமக்கு வாய்த்தான்; நல்ல
சமயமிது; இவ்வமரில் நமக்கே வெற்றி
சார்ந்துவிடும் ஐயமிலை திண்ணம் திண்ணம். 276

தந்தையையும் மகனறியான்; தந்தை யும்தன்
தனயனைக்கண் டறிந்ததிலை; அதனாற் போரில்
உந்திஎழும் உணர்ச்சியினால் நேரில் மோத
உடன்றெழுவர்; கிழமகனை வலித்துத் தாக்கி
நொந்துவிழ அவன்மகனே செய்து நிற்பான்;
நொடிப்பொழுதில் ஆர்ப்பரித்துக்கொன்றுந் தீர்ப்பான்;
எந்தஒரு துயருமிலை மூவ கத்தை
எளிதாகப் பணிவிப்போம் ஆட்சி கொள்வோம். 277

பின்னர்மகன் உண்மையுணர்ந் தெதிர்க்கு மாயின்
பெரிதில்லை நமக்கவனை அழித்தொ ழித்தல்;
முன்னமிவர் ஒருவரைமற் றொருவர் தம்முள்
முறைமையினை அறிந்துகொளா திருப்பி னன்றோ
சொன்னவெலாம் நிறைவேறும்! புரிந்து கொள்ளின்
தோன்றமரில் சமர்செய்ய வாரார்; நீவிர்
சின்னஒரு துளியேனும் அறியா வண்ணம்
சின்னவனைச் சூழ்ந்திருத்தல் வேண்டும்' என்றான். 278

பொரினும் - போர்செய்தாலும். மதலைக்கு - மதலைக் கோமானுக்கு.

மாமன்னன் எண்ணத்துக் குடந்தை யாக
　　மாவலியும் தடவலியும் இசைந்தா ராகி,
ஆமென்ன உறுதிமொழி தந்து நின்றார்;
　　அரசனொரு முடங்கல்வரைந் தவர்பால் தந்து,
போமென்ன, அப்பணியைத் தலைமேற் கொண்டு
　　போர்த்தலைவர் முறுவலன்பால் புக்கு நின்று
கோமன்னன் தந்ததிரு வோலை தந்தார்;
　　கோளரியும் விரித்ததனை நோக்க லுற்றான். 279

# இயல் - 59

**கனகனின் ஓலையைக் கண்ட கோளரி**
**மனமகிழ் வுறவே மலர்த்திப் படித்தனன்.**

'நாட்டின்பால் பற்றுடைய இளைஞர் ஏறே!
நாவலத்தின் மானத்தைக் காப்ப தற்கு
வேட்டெழுந்த உன்திறத்தை நாடு போற்றும்;
வெற்றியுடன் மீள்கஎன வாழ்த்து கின்றேன்;
கோட்டைஎழும் வெண்ணகரம், மூவகத்தின்
கோட்டருகில் வடதிசையில் விளங்கல் காண்பாய்!
கூட்டமொடு சூழ்ந்ததனை முதலில் தாக்கிக்
கோட்டையினை நின்வயமே ஆக்கிக் கொள்க! 280

பின்னருனக் கெளிதாகும்; மூவ கத்தின்
பிடியுனது கையகத்தே வந்து சேரும்;
நன்னரது வந்துவிடின் உலகில் எங்கும்
நலம்விளையும்; நலிவுதரும் போரே யில்லை;
பன்னரிய இதுநினைந்தே மறவர் சூழப்
படைத்தலைவர் இருவரையும் அனுப்பி யுள்ளேன்;
நின்னுடைய சொற்கேட்டுத் துணையாய் நிற்பர்;
நிகரில்லாப் போர்த்திறத்தர்' எனுஞ் சொற் கண்டான் 281

கோட்டருகில் - எல்லைப்பக்கத்தில்

# இயல் - 60

**வெறியோ டெழுந்த வீரப் படையினர்**
**வெண்ணகர்ப் புகுந்து விளைத்தனர் சமரே!**

பெருமன்னன் துணைபெற்ற மைந்தன் தன்னுள்
 பெருகிவரும் மகிழ்ச்சியினால் நன்றி சொன்னான்;
வருமுன்னம் இவனொன்று நினைந்தான்; வெற்றி
 வாய்க்குமுனம் அவனொன்று நினைந்தான்; ஆனால்
ஒருவன்றன் நினைவறிய முடிய வில்லை;
 உருத்தெழுங்கால் போரிலது தெரியும் நாளை;
செருமுன்னி எழுபடைகள் இரண்டுஞ் சேர்ந்து
 சேயோனைப் பின்தொடர்ந்தே அப்பாற் சென்ற. 282

படகுகளால் புனலாற்றைக் கடந்து சென்று
 படையிரண்டும் அக்கரையைச் சார்ந்து, தீயிற்
படமனைகள் பலவெரித்துக் கழனி யெல்லாம்
 பாழ்செய்து, மாந்தர்தமை அச்சு றுத்திப்
படபடவென் றார்ப்பெடுத்து நகருட் புக்க
 பாய்புலிகள் போலானார் வீர ரெல்லாம்;
அடகெடுக; வெறியொன்றே நிமிர்ந்தெ ழுந்தால்
 அழிவன்றி மற்றொன்றற் கிடமே யில்லை. 283

சேயேன் - இளைஞன்

# இயல் - 61

**வெண்ணகருட் படைபுகுந்த செய்தி கேட்ட**
**வெண்கோடன் சினந்தெழுந்து பாய்ந்து வந்தான்.**

பாய்புலிகள் நகருக்குட் புகுந்த காலைப்
பார்த்தனர்வெண் கோட்டையினை; உடன்றெ ழுந்து
போய்மதிலைத் தகர்க்களன ஓடி வந்தார்;
பொன்றலர் தாம் உட்புகுந்த செய்தி கேட்டுக்
காய்சினத்தன் வெண்கோடன் உருத்தெ ழுந்து
கருதலரைப் பொருதலறச் செய்வேன் என்று
பாய்புரவி மிசையேறிப் பாய்ந்து நாட்டுப்
பற்றதனால் பற்றாரைப் பற்ற வந்தான். 284

பரியேறி வருவீரன் பகைமுன் னின்று
'பற்றலரே! என்னுடன்போர் தனித்துச் செய்ய
வருவீரோ? பொருதற்கு வல்ல ராயின்
வருக'வெனத் தோள்தட்டி ஆர்ப்ப ரித்தான்;
அரியேறிவ் வறைகூவல் கேட்டு நின்றே
'அதிரவரும் மொழிபுகல்வோய்! யார்நீ? என்பால்
சரியாகத் தனிநின்று பொரவல் லாயோ?
தகுதுணிவும் பெறுதினனில் பொரவா' வென்றான். 285

'இளமகனே! வெண்கோடன் எனும்பேர் கொள்வேன்
இக்கோட்டைத் தலைவன்யான்; மாதர் தாமும்
களமருவிப் போர்செய்யும் வீரங் கொண்ட
கடிநகராம் வெண்ணகருள் வந்து நின்றே
உளறுமொரு துணிவுனக்கு வந்த தேயோ?
ஒருவரெனை இதுவரையும் அழைத்த தில்லை;
வெளிறுடைய உன்னுடலும் தலையும் வேறாம்;
வேலைஎடு! ஆவிவிட வாவா' என்றான். 286

பொன்றலர், கருதலர், பற்றார்- பகைவர். பொர - போர்புரிய கடிநகர் - காவல் பொருந்திய நகரம். வெளிறு - வலியற்ற தன்மை.

# இயல் - 62

**கோளரிக்கும் வெண்கோடன் தனக்கும் நேர்ந்த**
**கொடும்போரில் வெண்கோடன் தோல்வி யுற்றான்.**

வெண்கோடன் உரைத்தவெலாம் கேட்டு நின்ற
வீரமகன் வேலெடுத்தான் நகைத்தெ ழுந்தான்;
கண்மூடித் திறக்குமுனம் பாய்மா வேறிக்
கறங்கெனவே சுழன்றுசுழன் றார்ப்ப ரித்தான்;
நண்பாடும் பொழுதத்து நண்பர் போல
நண்ணாரிவ் விருவருமே நகைத்து நின்று
விண்ணாடும் மின்னொளிபோல் வேலை வீசி
விளையாடிப் பொருதனர்தம் திறமே காட்டி. 287

காலெடுத்துப் புரவிகளும் சுழலும் போது
களமெங்கும் மேலெழுந்து புழுதி சூழ,
வேலெடுத்து வாய்மடித்துக் கோடன் மார்பில்
வீரமகன் குறிபார்த்து வீசி விட்டான்
மேலுடுத்த வன்கவசம் வாய்பி ளக்க,
விரியகலத் தவ்வீட்டி தைத்த முந்த,
வாலுகத்துச் செங்குருதி சோர வீழ்ந்தான்
வாய்வீரம் பலபேசி வந்த வீரன். 288

புரண்டுவிழும் வெண்கோடன் கவச மார்பில்
பொற்கழலை வைத்தழுத்தி வாளை ஓச்சி,
மருண்டவன்றன் கழுத்தரிய முயலுங் காலை
மனம்மயங்கி முறுவலன்றன் தாள்கள் பற்றி
'வெருண்டஎனை விட்டுவிடு, கொல்ல வேண்டா,
வீரவுனை வேண்டுகிறேன்' என்று கெஞ்ச,
'இருண்டுவிடும் உன்வாழ்வென் றஞ்சி என்னை
இரக்கின்றாய் ஆதலினால் இறக்க வேண்டா. 289

கறங்கு - காற்றாடி. நண்பாடும்பொழுது - நட்புக்கொள்ளும் பொழுது, அகலம் - மார்பு. வாலுகத்து - வெண்மணலில்.

பணிவோரை ஒருநாளும் கொல்ல ஒவ்வேன்
பகைஎனினும் பிழைத்துப்போ!' என்று கூறிப்
பணியாளர் தமையழைத்துக் 'கோடன் கையில்
பற்றுவிலங் கணிவித்துக் கொண்டு செல்க!
துணிவாளன் இவனைஒரு காவல் செய்க!
துயரேதும் தாராமல் பேணு' கென்று
தணியாத திறலுடையன் ஆணை யிட்டான்;
தாள்பணிந்தவ் வேவலர்தாம் கொண்டு சென்றார். 290

பொருகளத்தில் நகர்த்தலைவன் தோல்வி கண்டான்;
பொருதலர்முன் இறந்திலனாய் இரந்தான் என்ற
அருவருக்கும் புன்மொழிகள் நகர மெங்கும்
அலராகிப் பரவியது; பெண்ணும் ஆணும்
'சிறுபகைவற் காற்றாமல் தோற்றுப் போன
சீரிழந்த வெண்கோடன், உயிருக் காக
உறுபகைக்குப் பணிந்துவிட்டான் மான மில்லான்
உலுத்த'னென ஊரெல்லாம் வெறுத்து ரைத்தார். 291

துணிவாளன் என்றது எள்ளற் குறிப்பு, அலர் - பழிமொழி

# இயல் - 63

**வெண்கோடன் சிறைப்பட்ட செய்தி கேட்டு**
**வீரமிகு தனியொருவன் பாய்ந்து வந்தான்.**

அம்பாரும் புட்டிலொன்று தோளில் தூங்க
ஆர்க்கின்ற சிலையொன்றை மலர்க்கை தாங்கத்
தெம்பாக ஓரிளைஞன் புரவி ஏறித்
தேர்கவசம் மெய்ம்மறையப் பூண்டு, தன்னை
முன்பாக அடையாளம் அறியா வண்ணம்
முகமூடி ஒன்றணிந்து, சினமே கொண்டு,
கொம்பூதி ஆர்ப்பரித்துப் போர்மேற் செல்லக்
கோட்டையின்முன் தனியொருவன் வந்து நின்றான். 292

'போர்தொடுக்க வந்துள்ளேன்; துணிவு கொண்ட
புகல்மறவர் எவரேனும் தனிய ராக
நேர்தொடுக்க வல்லீரேல் வருக! இன்று
நிகழ்போரில் கண்டிடுவோம் வெற்றி தோல்வி;
யார்தொடுக்க வருகின்றீர்? வாழ்வும் சாவும்
எனுமிரண்டுள் தலைக்கொன்று பகிர்ந்து கொள்வோம்;
ஊர்கொடுத்து வாழ்வெதற்கு? போரில் என்றன்
உயிர்கொடுத்தும் நகர்காப்பேன் வருக' என்றான். 293

---

அம்புஆரும்புட்டில் - அம்புக்கூடு, தூங்க - தொங்க, சிலை - வில், புகல் - மனச்செருக்கு

# இயல் 64

**கோளரியை எதிர்க்கவந்த கவச வீரன்**
**கூர்வேலால் தாக்குண்டு தரையிற் சாய்ந்தான்.**

‘வெண்ணகரில் செயல்வீரம் குறைந்த தேனும்
விளம்புகிற சொல்வீரங் குறைய வில்லை;
திண்ணியனாம் வெண்கோடன் வந்து நேற்றுச்
சிறையகத்து வதிகின்றான் அமரில் தோற்று;
பெண்ணனையான் இவன்வந்து வீரம் இன்று
பேசுகின்றான் வாய்கிழிய என்முன் நின்று;
நண்ணிவரும் மானொன்று புலியின் முன்னே
நாடகங்கள் ஆடுவதைப் பாராய் இன்னே! 294

என்பரியைக் கொணர்க’வென ஏறிக் கொண்டான்
ஏறனைய கோளரியன்; கோட்டை வீரன்,
முன்பழியைத் தீர்ப்பதற்கே ஈண்டு வந்தேன்;
முனைத்துவரும் என்பகழிக் கெதிரில் நிற்கத்
தென்புனது நெஞ்சகத்து நிலைத்து நின்றால்
தெரிகணையை எதிர்தாங்கஃ தில்லை என்றால்
பின்புறவே ஓடிவிடு! எனப்பு கன்று
பெரும்பகழி பலதொடுத்தான் நாணிற் பூட்டி. 295

கார்முகத்தின் தாரையெனக் கனன்று சிந்தும்
கார்முகத்தின் அம்புகளைத் தடுத்துத் தாங்க
ஏர்முகத்தன் தடுமாறிக் குனிந்தும் சாய்ந்தும்
இடையிடையே உடல்வளைந்தும் சுழன்றும் நின்றான்;
ஓர்முகத்தும் இவ்விளவல் இன்றே போல
உறுதுயரம் அடைந்ததிலை; எனினும் அன்னான்
போர்முகத்துச் சலிக்கவிலை; புலிபோல் நின்று
பொருமுறையைப் புகழ்ந்தவனைப் பொருது நின்றான் 296

பகழி - அம்பு கார்முகம் - 1 மழை 2வில். ஏர் - அழகு

நெடும்பொழுது பொருததற்பின் காளை நெஞ்சம்
    நிமிர்ந்தெழுந்தான் கனன்றெழுந்தான்; வேலைத்தூக்கி
விடும்பொழுது வழக்கம்போல் முழக்கஞ் செய்து
    விட்டெறிந்தான்; பட்டதிர்ந்தான் எதிர்ந்த வீரன்;
தொடுங்கவசம் கிழித்தகலம் தைத்த தவ்வேல்;
    துளைத்தழுந்தும் அதனைஒரு கையாற் பற்றிப்
பிடுங்கியவன் செங்குருதி சோர வீழ்ந்தான்;
    பீடுபடப் பொரவந்தோன் தரையிற் சாய்ந்தான் 297

பீடு - பெருமை.

# இயல் - 65

**சாய்ந்த வீரன் தையலென் றறிந்து**
**போந்தவட் கறிவுரை புகன்றுசிறை செய்தான்.**

சாய்ந்தவன்பால் அவ்விளவல் விரைந்து சென்று;
தன்வாளால் முகத்திரையை விலக்கி விட்டான்;
ஓய்ந்தவளோர் பெண்மகளே என்று கண்டான்;
ஒளிமுகத்தில் கயல்விழிகள் பிறழக் கண்டான்;
சாய்ந்தளகம் தோள்மிசையே புரளக் கண்டான்;
தாங்கரிய திகைப்புடனே வியப்புங் கொண்டான்;
காய்ந்தமரில் பெண்ணுடனோ பொருதோம் என்று
கைபிசைந்து தனதுமனம் வருந்தி நின்றான். 298

'மூவகத்துப் பாவையரும் படையிற் சேர்ந்து
முனைத்தெழுபோர் தொடுக்குவரேல் ஆண்பால் என்போர்
சாவதற்கும் அஞ்சாராய்ப் புரியும் வீரம்
சாற்றுதற்கும் எளிதாமோ? விந்தை! விந்தை!
ஏவகத்து விற்போரும் மற்றைப் போரும்
இவளின்மேற் பன்மடங்கு விஞ்சி நிற்பர்;
நாவகத்துச் சொல்லெல்லாம் கூட்டிச் சேர்த்து
நவின்றாலும் இவள்திறத்தை நவிலப் போமோ?' 299

எனவுளத்துச் சிந்திப்போன் அவளை நோக்கி,
'இயம்பரிய வீரத்தின் எழில ணங்கே!
தினவெடுத்த திண்டோளன் என்முன் தோற்றாய்;
சிறைசெய்தேன்; என்னையினித் தப்பிச் செல்லல்
கனவகத்தும் இயலாது; போரை வேட்டுக்
களமுற்றார் சிறையுறுதல் சமரிற் சாதல்
எனுமிவற்றுள் ஒன்றுறுதி; அறிவாய் நீயும்;
ஏன்வந்தாய் ஆய்வின்றி முனைய கத்தே? 300

---

அளகம் - கூந்தல், காய்ந்து - கோபித்து, ஏ அகத்து - அம்பைத் தன்னகத்தே கொண்ட.

அரிவைஎனப் பிறந்தனைநீ! செங்க ளத்தில்
 ஆடவரோ டமர்புரிதல் ஒல்வ தாமோ?
உரிமைஎனக் கூறுவைநீ! ஒவ்வேன் ஒவ்வேன்;
 உடலமைப்பின் இயல்புணர்ந்து நடத்தல் வேண்டும்;
அரியசெயல் பலசெய்தல் இயல்வ தேனும்
 அமர்புரிதல் முறையன்று பேதாய்' என்றான்;
புரிசமரில் பலர்முன்னர்த் தோல்வி காணப்
 புழுங்கினள்நெஞ் சழுங்கினளப் பூவை நல்லாள். 301

# இயல் - 66

**வஞ்சனை யுளத்தோடு வஞ்சியவ் வீரனைக்**
**கெஞ்சிவெண் ணகர்க்கண் வந்தருள் என்றனள்.**

சூழ்ந்தொன்று சிறையிருந்து தப்பிச் செல்லத்
தோகைமனங் கொண்டவளாய்த் தன்மு கத்தைச்
சூழ்ந்துள்ள திரையதனை நன்க கற்றிச்
சூரனையோர் கடைவிழியால் உற்று நோக்கத்
தாழ்ந்தநெடுங் கருங்குழலும், எள்ளின் மூக்கும்,
தண்ணியநற் பிறைநுதலும், புருவ வில்லும்,
ஆழ்ந்தபொருட் குறிப்புணர்த்தும் அகல்வேற் கண்ணும்
அரியேறு கண்டுளத்தை அவள்பால் தந்தான். 302

'முறுவலுக்கு முகந்தந்த மறவ ரேறே!
முனைமுகத்துப் பலமறவர் பொருதார் என்பாற்
புறமளித்துச் செலக்கண்டேன் முன்னர்; இன்றோ
புலியனையாய்! எனைவென்றாய்; போரில் வெல்லும்
திறமுனக்குப் பெரிதெனினும் என்போற் பெண்ணைச்
சிறைசெய்தாய் வென்றுவிட்டாய் என்று சொன்னால்
வரவுனக்குப் பழியல்லால் புகழே யில்லை;
வாய்மையிது; நினையினது வீர மில்லை. 303

பெண்ணோடு பொருதுயர்ந்தான் வெற்றி பெற்றான்
பிறங்குபுகழ் வீரமொடு கொண்டான் என்று
மண்ணாடு சொலும்விருது பெறுவ தற்கோ
மனம்வைத்தாய்; மாதென்னைச் சிறையில் வைக்க
எண்ணாதே; விட்டுவிடு; நினதே வெற்றி;
எங்கட்கும் பணிவதுதான் கடமை யாகும்;
நண்ணாரென் றெண்ணாமல் இனிமேல் எங்கள்
நகருக்குள் நீவருக! நலமே வாய்க்கும். 304

முறுவல் - புன்னகை. பிறங்கு - விளங்கு, விருது - சிறப்பு

பொரவந்த வெண்கோடன் சிறையுற் றேகப்
புதுத்தலைமை என்தந்தை பெற்றார் அன்றே;
கரவில்லை; முதியரவர் என்சொற் கேட்பர்
கன்னிஎன்பேர் மானத்தி என்பர்; நெஞ்சில்
உறவந்த நட்புறவால் என்பின் வந்தால்
உரியதொரு கோட்டையினை ஒப்ப டைப்பேன்;
பிறகிந்தச் சமரெதற்கு வாவா' என்று
பெடைக்குயிலின் இனியகுரல் கொண்டு சொன்னாள். 305

அவளெய்த வில்லம்பு தடுத்து நின்றோன்
ஆயிழையின் விழியம்பு தடுக்க லாற்றான்;
தவளநகைப் பொலிவுடனே இனிய சொல்லும்,
தனிநடையும், கொடியிடையும், நயஞ்செ றிந்து
தவழுமொழி வாயழகும், வீரப் போக்கும்
தறுகணுறுங் கோளரியை வென்று நிற்க,
இவனுமவ ளுடன்செல்ல இயைந்தா னாகி
எழில்வீரக் குலமகள்பாற் சிலசொல் சொல்வான். 306

'மறவர்குலப் பூங்கொம்பே! நயந்து சொல்லும்
மாற்றத்தை நம்புகிறேன்; மாற்றம் செய்யேல்;
சிறகிழந்த பறவைஎன நிற்கு முன்னைச்
சிறைதவிர்த்தேன் சொன்னசொலைக் காத்தல்வேண்டும்
உறநிவந்த கோட்டையினை அட்டி யின்றி
ஒப்படைத்துச் சொற்கேட்டுப் பணிதல் வேண்டும்;
பிறழுநிலை தென்படுமேல் எனது சீற்றம்
பேரழிவைச் செய்துவிடும் எழுக' என்றான். 307

கரவு - வஞ்சனை, தவளம் - வெண்மை, தறுகண் - அஞ்சாமை. மாற்றம் - சொல், மாற்றம் - மாறுபாடு. உறநிவந்த - மிகஉயர்ந்த.

# இயல் - 67

**மானத்தி உரைத்தமொழி உண்மை என்று**
**தான்நத்திப் பின்தொடர்ந்தான் தடந்தோள் வீரன்.**

சிறைவிடுத்தஅம்மகள்தான் சொன்ன வண்ணம்
　செய்வதென உடன்பட்டுத் தலைய சைத்து
விரைபுரவிக் குசைதொட்டுத் திருப்பி விட்டாள்;
　வில்விடுத்த அம்பெனவே அதுபாய்ந் தோட,
உறைவிடுத்த வாளேந்தி வயமா வேறி
　உரமுடையான் அவளைப்பின் தொடர்ந்து சென்றான்;
இரைபிடிக்க விரைந்துவரும் மீனைப் போல
　எழில்மகளைத் தொடர்ந்ததவன் இளைய உள்ளம் 308

சடைவிரிந்த கருங்குழலும், திரண்டு ருண்டு
　சாயல்மிகும் இருதோளும், புறத்தின் பாங்கும்,
இடைசுருங்கிப் பொலியழகும், குசையைப் பற்றி
　எழிலாகப் பரிசெலுத்தும் இயல்பும் நோக்கி,
இடையிடையில் அவள்திரும்பிப் பார்க்குங் காலை
　இளையவன்அவ் ஒருபாதி முகத்திற் சொக்கி,
நடைமெலிந்த புரவியினை நோக்கா னாகி,
　நனவிழந்து கனவுலகில் தொடர்ந்து சென்றான். 309

---

குசை - கடிவாளம், சாயல் - அழகு.

# இயல் - 68

**தையல் அவள்தான் தப்பிப் புகுந்தாள்**
**மையல் கொண்டோன் வஞ்சினம் மொழிந்தான்**

ஓங்குநிலைப் பெருவாயிற் கோட்டை முன்னர்
ஓடிவரும் மானத்தி நிலைமை கண்டே
ஆங்குறுவோர் பெருங்கதவைத் திறந்து விட்டார்;
அரிவையத னுட்பாய்ந்து புகுந்து கொள்ள
வீங்குநெடுங் கதவதனை மூடிக் கொண்டார்;
வீரமகன் அதுகண்டு வெளியில் நின்றே
ஏங்குமனத் துயரத்தைத் தாங்கி நின்றான்;
ஏமாற்றம் பெற்றமைக்கு நாணி நின்றான். 310

உட்புகுந்த அம்மகளும் மதின்மே லேறி
ஒருமகனாய் நிற்போனை விளித்து நோக்கிக்
கட்கமுடன் நிற்போய்நின் நாடு நோக்கிக்
கடிதுவிரைந் தோடுகநீ!' என்றாள் மங்கை;
வெட்கமுடன் பெருஞ்சினமும் கொண்ட காளை
'விரகுபுரிந் தெனைப்பழித்தாய்! பிழைத்தாய்! நாளை
மட்புகுந்து தூளாகும் நினது கோட்டை;
மாயத்தாய்! நின்னுடலும் கரியாம் தீயில். 311

நரிகண்டு பின்வாங்கச் சூழ்ச்சி செய்த
நயவஞ்சப் பேய்மகளே! என்றன் நெஞ்சை
வெறிகொள்ளச் செய்துவிட்டாய்! நாளை நேரும்
விளைவுகளை உணராமல் விதைத்து விட்டாய்!
கரிகொண்டு பரிகொண்டு படைகள் கொண்டு
காத்தாலும் என்சினத்தைத் தடுக்கல் ஆற்றாய்!
எரிகொண்டு வாயிலெலாம் தீயும்; எங்கள்
இடிகொண்டு கோட்டைஎலாம் சாயும்' என்றான். 312

---

கட்கம் - வாள். விரகு - தந்திரம்.

சினந்துரைத்த மொழியெல்லாம் கேட்ட நங்கை
செவ்வாயிற் கலகலெனச் சிரித்து நின்று,
'தனந்தனியாய் நிற்கின்றோய்! உனது நாட்டில்
தனக்குநிகர் இலையென்று தருக்க லாகும்;
வனந்திரியும் களிறனையான், எங்கள் நாட்டு
வாள்வீரன், படைத்தலைவன், உடன்றெ ழுந்தால்
இனந்தெரிய ஒண்ணாமல் உடலைக் கீறி
எடுத்தெறிவன் உயிர்தப்பிப் பிழைத்துப் போபோ! 313

வென்றுவிட மனப்பால்நீ பருகு கின்றாய்!
விளையாட்டுப் பிள்ளையென மறுகி நின்றாய்!
குன்றனையான் வெகுண்டெழுமேல் வீர ரெல்லாம்
குற்றுயிராய்க் கையிழந்து காலி ழந்து
பொன்றுநிலை எய்திடுவர் அந்தோ! நீதான்
புறங்கொடுத்து மீள்வைஎனில் உயிர்கள் தப்பும்;
சென்றுபிழை' என்றவளும் எள்ளி நின்றாள்;
சினமடங்கல் குமுறலுக்கோர் அளவே யில்லை. 314

பெண்ணொருத்தி இகழ்ந்துரைத்த இழிவும், வெற்றி
பெறும்நிலையில் மதியிழந்து பிறழ்ந்து காட்டும்
கண்ணசைவில் ஏமாற்றங் கொண்ட நாணும்,
கன்னியவள் சொன்னசொலில் பிழைத்த தாலே
உண்ணிவந்து வருசினமும் மாறி மாறி
உள்ளத்தை வாட்டுவதால் உழன்ற செம்மல்
எண்ணியதை வெளிப்படுத்திக் காட்டு வான்போல்
இருவிழியும் கனல்தெறிக்க நோக்கிச் சென்றான். 315

---

தனந்தனியாய் - தன்னந்தனியாகி. மீள்வை - மீள்வாய். உண்ணிவந்து - உள்நிவந்து - மனத்தில் மேலோங்கி. செம்மல் - தலைமைதாங்கும் கோளரி.

# இயல் - 69

**கோளரியின் வஞ்சினத்தைக் கேட்டோர் அஞ்சிக்**
**கூடியொரு சுருங்கைவழி தப்பிச் சென்றார்.**

வெஞ்சினத்தான் வெகுண்டுரைத்த வஞ்சி னத்து
வீரமொழி மானத்தி தந்தைக் கெட்ட,
அஞ்சுளத்து முதியனவன் காளை நாளை
அணுகுமுனம் வழிதேட வேண்டு மென்று
நெஞ்சகத்துச் சிந்தித்தான் வழியுங் கண்டான்;
நினைத்தவெலாம் தொகுத்தொருங்கே வரைந்த ஓலை
கஞ்சுகத்து மறவன்பால் தந்து, நாட்டுக்
காவலன்பால் தருகவெனப் பணித்த பின்னர், 316

மற்றவரை அழைப்பித்து நிலைமை கூறி,
'மாற்றலர்பாற் சிக்காமல் தப்பிச் செல்ல
உற்றதொரு சுருங்கைவழி புக்குச் செல்லின்
ஊர்கடந்து மூவகத்தை அடைத லாகும்;
சொற்றபடி வஞ்சினத்தை முடிக்கும் ஆற்றல்
சூரன்பால் உளதறிவீர்; இதை விடுத்தால்
முற்றுமழிந் தொழிந்திடுதல் உறுதி' என்றான்;
மொழியுமுனம் எல்லாரும் சுருங்கை புக்கார். 317

---

வஞ்சினம் - சபதம், அஞ்சுளம் - அஞ்சும் உள்ளம், கஞ்சுகம் - சட்டை நாட்டுக்காவலன் - மதலைக்கோ. சுருங்கை - சுரங்கம்.

# இயல் 70

**மறுநாள் கோட்டை வாயிலுட் புகுந்தோன்**
**பொருவாள் விழிமகட் கண்டிலன் புலம்பினன்.**

துயிலரசு செயுமிரவு புறந்தந் தோடத்
துதையிருளின் வாய்பிளந்து கதிரோன் தோன்ற
அயிலரசின் இலைவேலான் படைதி ரட்டி
ஆர்ப்பரித்து வெண்கோட்டை வாயில் சார்ந்தான்;
எயில்வளையும் நெடுங்கதவின் வாய்பி ளக்க
இடித்ததனுட் புலிபோலப் பாய்ந்து சென்றான்;
பயில்பவரங் கொருவருமே காணா னாகிப்
பகரரிய ஏமாற்றங் கொண்டு நின்றான். 318

காணாருங் கேளாருங் கூனர் தாமும்
கைகால்கள் முடமாகிச் செயல்செய் யாரும்
பேணார்தங் கோட்டைக்குள் இருக்கக் கண்டான்;
பேருலையின் வெய்துயிர்த்தான்; வீரம் ஒன்றே
பூணாகக் கொண்டவளைத் தனது நெஞ்சுட்
புக்கதனைக் கவர்ந்தவளைத் தேடித் தேடிக்
காணாமல் பதைபதைத்தான்; ஏதோ ஒன்று
கவ்வியது போல்மனத்தில் துடிது டித்தான். 319

இகழ்ந்துரைத்த மாற்றமெல்லாம் மறந்து போனான்;
எழிலணங்காம் அவள்மீது மையல்ஆனான்;
திகழ்ந்திருக்கும் அவளழகில் சொக்கி நின்று
சிறைப்பட்டான் இவனன்றி அவளோ இல்லை;
அகன்றிருக்கும் நெடுவேலால் காயம் செய்தான்
அவள்மார்பில்; அஃதாற மருந்தும் உண்டு;
வகிர்ந்திருக்கும் வடுவிழியால் பட்ட காயம்
மாறுதற்கு மருந்தின்றித் தவித்தி ருந்தான். 320

---

துதை - செறிந்த, அயில் - கூரிய, அரசின்இலை - அரசமரத்திலை, எயில் - மதில், பயில்வர் - வாழ்பவர். உலையின் - உலையைப்போல.

முனைமுகத்து மானத்தி தொடுத்து விட்ட
    மொய்ம்புமிகு கணையெல்லாம் தடுத்து விட்டான்;
நனைமுகத்து மலர்க்கணையைத் தடுத்தல் ஆற்றான்
    நலிவுமிகச் சுழன்றடிக்கும் புயலிற் சிக்கிக்
கனைகடற்கண் தடுமாறும் கலமே போலக்
    கையற்று நிலைகலங்கித் தளர்ந்தி ருந்தான்;
நினைவகத்து நில்லாமல் உழல்வோற் கண்டு
    நிகழ்ந்ததனை மாவலியன் வினவி நின்றான். 321

நனை - தேன். கனைகடல் - ஒலிக்கின்றகடல், கலம் - மரக்கலம். கையற்று - செயலற்று.

# இயல் - 71

**மானத்தி நினைவதனால் வாடு வோனை**
**மாவலியன் இடித்துரைத்து மறக்கச் சொன்னாள்.**

விடையெதுவும் துயருறுவோன் தாரா னேனும்
 விழைந்ததனைப் பளிங்கேபோல் எடுத்துக் காட்டும்
விடையனையன் முகத்துறுப்பால் கண்டு கொண்டான்;
 'வீரநினக் கொன்றுரைக்கக் கடவன் கேண்மோ!
கடைவிழியிற் கட்டுறுத்தும் மகளிர் கொண்ட
 கட்டழகும் பற்றுளமும், இன்று பூத்து
நடைமுறையில் இதழ்விரித்து நாளை வாடும்
 நலமுடைய மலரனைய இயல்பே கொள்ளும். 322

போர்விழைவோர் காதலெனும் மலருள் மூழ்கிப்
 பொன்றிவிழும் வண்டாகார்; போரில் வெற்றித்
தார்விழையும் நினைவுடன்தான் ஈங்கு வந்தோம்;
 தையலரால் கடன்மறந்து திரிதல் நன்றோ?
கார்விழையும் கூந்தலுக்கு மயங்கி நின்றோர்
 கடும்போரை வென்றதிலை; உண்மை வீரர்
ஏர்விழையும் காமமெனும் வலையிற் சிக்கி
 இடருக்குள் தாமேபோய் வீழ்ந்து சாகார். 323'

தலைவனென உனைநம்பி வந்தோம்; இங்குத்
 தரியலர்தம் நாட்டழகி ஒருத்திக் காக
அலையுமனம் நீகொண்டாய்! மூவ கத்தை
 அருஞ்சமரில் வென்றுவிடின் அதன்மேல் நீதான்
கலையுலகம் புகுந்திடலாம்; காதல் வாழ்வில்
 களித்திருந்து திளைத்திடலாம்; தடுப்பா ரில்லை;
மலைவரிய கோளரியின் வீர மெல்லாம்,
 மாண்பெல்லாம் வீணாகப் போதல் நன்றோ? 324

---
ஏர் - அழகு, மலைவரிய - எதிர்க்க முடியாத

வீரந்தான் விரும்புதியோ? காதல் ஒன்றே
 மேலாக விழைந்தனையோ? இரண்டில் ஒன்றைத்
தேருங்கால் மற்றொன்றை விடுதல் வேண்டும்;
 சேயிழையின் காதலொன்றே வேண்டு மென்றால்
பாரஞ்சும் கைவாளைத் தரையில் வீசு!
 பணிந்துவிடு மாற்றலர்க்கு! வீர மென்றால்
போரஞ்சாத் திறல்காட்டு! வாளைத் தூக்கு!
 புகல்மறவன் கோளரியின் பெயரை நாட்டு!''

# இயல் - 72

**மாவலி சொல்லால் மாறிய கோளரி**
**போர்வலி காட்டப் புறப்பட் டேகினன்.**

படைத்துணைவன் மாவலியன் சூடு தோன்றப்
பகர்ந்தவெலாம் செவிபுகுதத் தளர்வு நீங்கி,
விடைக்களிற்றின் அனையானோர் முழக்கஞ் செய்தான்;
'வெம்பகைக்குப் பணிந்திடுமோ வீரத் தோள்கள்!
படைக்கலங்கள் மோதட்டும்; போர்க்க ளத்தில்
பகைவருடல் வீழட்டும்; பார்த்த லத்தில்
முடைக்குருதி ஓடட்டும்;' எனப்ப கர்ந்து
முறுவலன்பல் நறநறெனக் கடித்து நின்றான். 326

'நாவலத்துக் கோளரியின் வீரம் வாழ்க!
நமைக்காக்கும் பெருங்கனகன் கொற்றம் வாழ்க!
மேவலர்க்குப் பணியாத திண்டோள் வாழ்க!
மிடலுடைய மறவர்குலம் வாழ்க' என்று
நாவகத்துப் பெருமுழக்கஞ் செய்து வீரர்
நடைவகுத்துப் படைத்துணைவர் சூழச் சென்றார்;
காவகத்துக் கொடுவிலங்கின் கூட்ட மெல்லாம்
கடுகிஒரு வழிநடந்த தென்னச் சென்றார். 327

# இயல் - 73

**வெண்கோட்டை நகர்த்தலைவன் விட்ட ஓலை**
**விரித்தொருவன் படித்திருக்க மன்னன் கேட்டான்.**

வெண்கோட்டைக் கஞ்சுகத்து மறவன் வந்து
வேத்தவையில் மதலைக்கோ தாள்ப ணிந்து
மண்போற்றும் மானத்தி தந்தை தந்த
வரைமுடங்கல் தந்திருக்க, வேந்தன் அங்குக்
கண்காட்ட அதுபெற்ற ஓலை நாய்கன்
காவலன்முன் அவையத்துப் படிக்க லுற்றான்;
'பண்போற்றும் புகழ்வேந்தே! வணக்கம்; உண்மை
பகர்கின்றேன் சினவாமல் செவிதந் தாய்க! 328

துளியேனும் அச்சமிலாச் சிறிய வீரன்
தோற்றத்தில் அரியேற்றை நிகர்க்கும் செம்மல்
விளிவேதும் அறியாத படைதி ரட்டி
வெண்கோட்டை பற்றுதற்கு முற்றி யுள்ளான்;
அளிவாழும் மலர்மாலைக் கனகன் தந்த
அணிவகுத்த பெரும்படையும் துணையாக் கொண்டான்;
எளியேனைப் பொறுத்தருள்க! ஒன்றும் செய்ய
இயலாமல் தவிக்கின்றேன் துணையே யின்றி. 329

வயந்தநகர்ப் பெருவீரன் தனித்துச் செய்யும்
வாட்போரில் முன்னிற்க எவரும் இல்லை;
நயந்திருக்கும் அவனுருவம் ஆற்றல் எல்லாம்
நம்நாட்டு மாவேழன் தனைநி கர்க்கும்
வயல்கொழிக்கும் வெண்கோடன் போரில் தோற்று
வலிவிழந்து சிறைப்பட்டான் என்றால் பாரோர்
வியந்திருக்கும் பெருவீரன் வலிமை எல்லாம்
விளம்புதற்கு யார்வல்லார்? எவரு மில்லை! 330

முடங்கல் - ஓலை. ஓலைநாய்கன் - அரசனுடைய கடிதப்போக்கு வரத்து அதிகாரி. விளிவு - அழிவு. அளி - வண்டு. வயம் - வெற்றி.

மீளியிவன் எதிர்நிற்கும் ஆற்ற லுள்ளார்
　வேழனன்றி ஒருவரிலர்; கோட்டை தன்னை
நாளையழித் தொழிப்பனென வஞ்சி னத்தான்
　நவின்றுள்ளான்; வேழனும்வந் துதவி செய்ய
வேளையிது போதாது; வீரன் வந்து
　விடலையொடு பொருவனெனக் காத்து நிற்பின்
ஆளியிவன் வாளுக்கே இரையாய் வீழ்வோம்;
　ஆதலினால் சுருங்கைவழி தப்பி விட்டோம்'. 331

மீளி - வீரன். விடலை - தலைவனாகிய கோளரி, ஆளி - சிங்கம் போன்ற விலங்கனைய கோளரி.

# இயல் - 74

**வேழனை அழைத்து விரைவினில் வருகென**
**ஆளினை மன்னன் அனுப்பினன் துடித்தே.**

முடங்கல்தரும் செய்திஎலாம் படிக்கக் கேட்டு
முனிந்தெழுந்த மதலைக்கோ, எதிர்த்து வந்த
அடங்கலரை ஒழிப்பதினி எவ்வா றென்றே
அமைச்சர்படைத் தலைவரையும் வினவி நின்றான்;
'மடங்கலினை நிகர்ப்பானை அடக்க வேண்டின்
மாவேழன் ஒருவன்தான் தக்கான் என்றார்;
தடங்கலின்றி வலிமைமிகு வேழன் இன்று
தண்டலத்தில் உறைகின்றான்' என்று சொன்னார். 332

மாமன்னன் தூதுவரை விரைந்து கூவி
மாவேழற் கொணர்கஎனப் பணித்து நின்று,
'கோமன்னன் நாவலத்தான் போர்தொ டுத்தான்;
குமரனொரு சிறுமகனே தலைமை பூண்டான்
நாமன்னும் வெண்கோட்டை பற்றிக் கொண்டான்;
நல்வலிமைக் கோடனையும் சிறையில் வைத்தான்;
ஏமன்னும் வில்லானுக் கெல்லாம் சொல்லி
இப்பொழுதே கொணர்க'வென ஏவி விட்டான். 333

---

அடங்கலர் - பகைவர், மடங்கல் - சிங்கம், தண்டலம் - வேழன் ஊர். ஏ - அன்பு.

# இயல் - 75

**விரைந்திவண் வந்த வீரன் அனைத்தும்**
**வேழன் றன்பால் விளம்பினன் எடுத்தே.**

சொல்லேந்தித் தூதுசெலும் வீரன், காற்றுத்
தோல்விபெற விரைகின்ற புரவி ஏறி,
மல்லேந்தும் திண்டோளான் வேழன் வைகும்
மாநகராம் தண்டலத்தை எய்தி யங்குக்
கல்லேந்தும் உடலானைக் கண்டு தங்கள்
காவலன்சொல் செய்திஎலாம் எடுத்துச் சொல்வான்
'வல்லேந்திப் பொருமறவ! நமது நாட்டை
வயப்படுத்தப் போர்தொடுக்க ஒருவன் வந்தான். 334

முறுவலனாம் கோளரிஎன் றொருபேர் தாங்கும்
மொய்ம்புடையன் வெண்ணகரைப் பற்றிக்கொண்டான்;
உறுவலிய கோடனையும் சிறையில் வைத்தான்;
உருவத்தால் உனைநிகர்த்தே விளங்கு கின்றான்;
தெறுசமரில் எனைப்பொருவார் மூவ கத்தில்
தேர்மறவர் எவரேனும் உளரோ என்று
தறுகணனாய் அறைகூவல் விடுத்து நின்று
தருக்குற்று வருகின்றான் நாடு நோக்கி. 335

செருக்குற்றுத் தருக்குமொழி பேசி வந்த
சீயத்தின் வலியானை அடர்த்துத் தாக்கி
வெருக்கொண்டு வெந்காட்டி ஓடப் பண்ணும்
விறலுடையார் நினையன்றி யாரோ உள்ளார்?
உருக்குற்ற நின்தோளால் தாக்குற் றாங்கே
உடன்றுவரும் அவ்விளைஞன் வீழ்தல் வேண்டும்;
நெருக்குற்று நாடுழலும் காலை ஈங்கு
நீயிருத்தல் முறையன்றாம்; எழுக வீர! 336

வல் - ஒரே காலத்தில் பலரை வீழ்ந்தும் வலிமை. சீயம் - சிங்கம், வெந்காட்டி - முதுகுகாட்டி, விறல் - வலிமை,

நாடுனது தோள்வலிமை நாடுங் காலை
    நமக்கென்ன எனவிருத்தல் நலமோ ஐய!
கேடுளத்தில் அறியாத மன்னன் உன்னைக்
    கிளந்ததனை மனத்திருத்தும் நேரம் ஈதோ?
ஈடுலகில் எவருமிலர் எனப்பு கழ்ந்த
    எம்வேழன் உயிருடனிங் கிருக்கும் போது
நாடுரிமை யிழந்தடிமை யாதல் நன்றோ?
    நண்ணாரும் இகழ்ந்துரைக்க வாழ்தல் நன்றோ? 337

காலமினித் தாழ்த்துவிடின் கொடிய மாற்றார்
    காலடியில் வீழ்ந்துவிடும் நமது நாடு;
ஞாலமுனை எள்ளிநகை யாடு மன்றோ?
    நாளொன்று போவதெனின் நாடு பாழாம்;
கோலமொடு வேலைஎடு! கூற்ற மென்னக்
    கோலைஎடு! வாளைஎடு! கவசம் தாங்கு!
வாலமொடு வருவோனைத் தொலைக்க வாவா!
    வாளுக்குந் தோளுக்கும் விருந்து கிட்டும்.' 338

கிளந்ததனை - சொன்னதை. வாலம் - சுட்டித்தனம்.

## இயல் 76

**கோளரி யாரென ஐயங் கொண்டு**
**காளையை வேழன் கழறினன் வியந்தே.**

எனவுரைத்த மொழிகேட்டு நின்ற வேழன்
எல்லையிலா வியப்புற்றுத் திகைத்து நின்றான்;
'கனவகத்தும் எனைப்பொருத நினைவோன் றன்னைக்
கண்டதிலை நாவலத்தில் இந்நாள் மட்டும்;
எனைநிகர்க்கும் ஏந்தலென நுவலு கின்றான்;
யாவனவன்? என்மனைவி வேல்வி ழிக்குத்
தனயனிலை பெண்மகவே பிறந்த தென்றாள்;
தந்துரைத்த மொழிபொய்யோ?பொய்யோ சொல்வாள்! 339

மகனென்றால் தனிமகிழ்வு கொள்ளுந் தாயர்
மகளென்று பொய்மொழியத் துணிவார் கொல்லோ?
மகனென்றால் எனைத்தேடி வாரா தின்னும்
மறைந்தங்கு வைகுவனோ? வந்தே சேர்வன்;
மகனென்றால் இவனன்றோ மகனே யாவன்;
மகவெனக்குப் பெண்ணாகப் பிறந்த தந்தோ!
மகனிவன்றான் யாவன்?யாண் டிருந்து தோன்றி
மல்லுக்கு வருகின்றான்? விந்தை! விந்தை!' 340

---

ஏந்தல் - பெருமையிற் சிறந்தோன்,

# இயல் - 77

**சிறுவன் அவனெனச் சிந்தையின் இகழ்ந்தோன்**
**உறுபகல் நான்கு விருந்தயர்ந் தேகினன்.**

'தென்புறத்து மூவகத்தைச் சிறிதென் றெண்ணிச்
சிறுமகனோ தாக்குதற்கு சீறி வந்தான்?
வன்புயத்து மாவேழன் வயமா வீரன்
வாழ்கின்றேன் எனும்நினைவை மறந்தான் போலும்!
முன்பெடுத்த போரிலெலாம் முதுகு காட்டி
மூச்செறியத் தோற்றோடிச் சென்றி ருந்தும்
பின்பெதற்குச் சிறியவனை அனுப்பு கின்றான்?
பெருங்கனகன் ஆட்சிக்கு முடிவு போலும்!' 341

எனப்பலவும் தன்னுளத்து நினைந்த வேழன்
இயம்பவரும் தூதுவனை இனிது நோக்கி,
'மனக்கவலை விட்டொழிக! போர்தொ டுத்த
மைந்தனொரு சிறுவனென மொழியா நின்றாய்;
தனக்கெனவோர் வலியில்லா வேந்தன் இந்தத்
தகையறியாச் சிறுவனுக்கோ எனைய ழைத்தான்?
நினைத்தெழின்நான் செருக்கடக்கி அவனை வீழ்த்த
நெடும்பொழுதா வேண்டும்? நொடிப்பொழுதே போதும்! 342

விருந்துண்டு களிப்போம்வா! இவனை மோதி
விளையாட்டாக் கொல்வ'னென எண்மை யாகப்
பருந்தனைய நோக்குடையான் பகர்ந்தி ருந்தான்;
பரியேறி வந்தமகன் வருந்திச் சொல்வான்,
'பொருந்தொழிலோய்! விருந்துண்ணும் நேரம் அன்று!
போர்தொடங்கும் முன்பாக விரைதல் வேண்டும்;
நிறைந்தபுனல் வருமுன்பே அணைகள் கோலி
நிறுத்துவதே கடனாகும்' என்றான் வீரன். 343

---

எண்மை - எளிது, கோலி - கட்டி

ஒல்லையில்நாம் செல்வமென உரைத்த மாற்றம்
　ஒன்றேனும் அவன்செவியிற் புகுத வில்லை;
எல்லையிலாக் களிப்புடனே ஆடிப் பாடி
　எக்களிப்பு மீதூர விருந்த யர்ந்தான்;
எல்லனையான் ஈரிருநாள் கழிந்த பின்றை
　இனிதெழுந்து போர்க்கோலம் பூண்டு நின்று
வல்லியம்போல் மறவர்புடை சூழ வந்தான்
　மாமன்னன் மதலைக்கோ நகரை நோக்கி. 344

ஒல்லையில் - விரைவில், எல் - சூரியன். வல்லியம் - புலி.

# இயல் - 78

**விரைந்து வந்திலன் வேழன் என்றாங்கு**
**எரிந்து சிறைசெய ஏவினன் மன்னன்.**

என்றுவரும் என்றுவரும் சென்ற வீரன்
    என்றேங்கும் மன்னவன்முன் வந்த தூதன்
நின்றரசன் தாள்பணிந்து 'வேழன் இங்கு
    நேரலரைப் பொருதொழிக்கச் சீற்றங் கொண்டே
ஒன்றிவுளி மீதேறி வருகின் றா'னென்
    றுரைத்தமொழி கேட்டுளத்துச் சினந்த வேந்தன்
'நன்றியிலன் என்சொல்லைப் புறக்க ணித்தோ
    நாள்கடந்து வருகின்றான் நாயிற் கீழோன். 345

மதித்திருப்பின் இத்துணைநாள் தாழ்த்தல் செய்யான்
    வாளொன்று கொண்டவனை வீழ்த்த போதும்
கொதித்திருக்கும் எனதுமன மாறா' தென்றான்;
    கொற்றவன்றன் சொற்கேட்டுத் தூதன் றானும்
மதித்துரைக்கும் அமைச்சவையும், ஆயத் தாரும்,
    மற்றுள்ள குழுவினரும் வருந்தி நின்றார்;
எதிர்ப்பிருக்கும் இவ்வேளை மன்னன் சொன்ன
    இழிமொழிகள் கேட்டுளத்தில் வெறுப்புங் கொண்டார். 346

குன்றொத்த திண்டோளான் கவசம் பூண்ட
    கொலைவேலான் மாவேழன், வேந்தன் ஆட்சி
மன்றத்துட் பீடுநடை யோடு வந்து
    மன்னவனைப் பணிந்திறைஞ்சி நின்றான்; உள்ளம்
கன்றத்தன் சினங்காட்டி மதலைக் கோமான்
    'காலந்தாழ்த் திங்குவரும் இவனைக் கொண்டு
சென்றந்தக் கொட்டிலுக்குள் அடைக்க' என்று
    திறமிக்க காவலனுக் காணை யிட்டான். 347

இவுளி - குதிரை

# இயல் - 79

**வேந்தன் சுடுசொல் வேழன் கேட்டதும்**
**காந்தும் மனத்தொடு கழறினன் வெகுண்டே.**

காவலன்றன் ஆணைக்கங் கஞ்சி நின்ற
காவலனும் சீயத்தை அணுகி வந்தான்;
மேவலர்தம் படைநடுக்கும் வேழன் சீறி
வீரனுக்கோர் அறைகொடுக்க, ஐயோ என்று
நாவலற மெய்யதிர மயங்கி வீழ்ந்தான்;
நாடாள்வோன் முகம்நோக்கிச் சூரன் சொல்வான்,
'காவலனே! நாட்டுக்கோர் பழியாய் வந்தாய்!
கருத்தில்லாய்! பொறுப்பில்லாய்! கடமை யில்லாய்! 348

என்னுயிரும் மதியாமல் போரில் உன்னை
எத்தனையோ முறைகாத்தேன்; அதற்கோ என்னைச்
சின்னவனைக் கொண்டவையில் இகழ்ச்சி செய்தாய்?
செருக்கொண்டு சீறிவரும் பகைவ ருக்கு
முன்னணுக மாட்டாமல் அஞ்சிச் சாகும்
மொய்ம்புடையோய்! வாய்மதமோ பேசு கின்றாய்?
உன்னையொரு கடுகளவும் அஞ்ச கில்லேன்;
ஒருவருக்கும் அடிபணியேன்; வீரங் கொள்வேன். 349

நாட்டின்பால் கொண்ட தொரு வேட்கை யாலுன்
நன்றியிலாச் செயலெல்லாம் பொறுத்து வந்தேன்;
மாட்டின்பால் கறக்காமல் பயனே நல்கும்
மடியறுக்க முனைகின்றாய்! எனைநீ யாட்டும்
ஆட்டம்போல் அடங்கியுனக் காடி நின்றேன்;
அஞ்சியன்று; தாய்நாடு போற்றும் ஆசை;
வாட்டும்போ தடங்குவதால் மன்னா! என்றன்
வலிமைஎலாம் ஓர்ந்திலையோ? உணர்வாய் நாளை. 350

---
அடவி - காடு

பொங்காமல் பொங்கிவரும் சீற்றங் கொண்டு
புரிந்தெழுந்து கைப்பற்ற நான்நி னைத்தால்
செங்கோலும் மணிமுடியும் நீய மர்ந்து
சீரிழந்த அரியணையும் என்பாற் சேரும்;
வெங்கோல! அரசிருக்கை கொள்ளும் ஆசை
விளைகின்ற தினையளவும் என்பால் இல்லை;
இங்காளும் அரசர்க்குப் பணிந்து போதல்
என்போன்றார் கடமைஎன அடங்கி நின்றேன். 351

முரசறைந்து போர்தொடுத்துப் பகைவன் வந்து
முறுக்குங்கால் ஆற்றாமல் தோல்வி கண்டே
அரசிழந்து நாடிழந்து செல்வம் நீங்கி
அடவிதனில் கோவூரன் அலையுங் காலைப்
பொரநினைந்தவ் வூரனுக்குச் சார்பாய் நின்று
புகுந்தபகை கெட்டொழிய வாகை சூடி
அரிநிவந்த இருக்கையினை அவனுக் கீந்தே
அணிமுடியும் கவித்ததைநீ அறியாய் கொல்லோ? 352

நீயணியும் இம்முடியும் நிலைத்த தைத்தான்
நினைந்தின்று சிறிதேனும் பார்த்தா யல்லை;
பேயனைய வெண்பூதன் பகைமை கொண்டு
பெரும்படையா லுனைஎதிர்த்தான்; அந்த நாளில்
தீயனைய சினமூண்டு செருக்க ளத்துச்
சேர்ந்திலனேல் பூதனுக்கோர் இரையா யன்றே
போயழிவை; எண்ணுகிலா ததும றந்தாய்;
புன்மைகளும் எனக்கிழைக்கத் துணிந்தாய் இன்றே! 353

பன்முறையும் நாவலத்துப் பகையை வென்றேன்
பார்காத்தேன் தாய்நாட்டுப் பற்றால் மன்னா!
புன்மொழிகள் பலபொறுத்தேன் அதனா லன்றோ
புழுவெனநீ நினைந்துசிறை செய்க என்றாய்!
நன்மைஎது வரினுமுன தவையில் நில்லேன்;
நன்றிக்குச் சிறிதேனும் தொடர்பே யில்லாய்!
வன்பகைவன் சூழ்கின்ற வேளை நீயே
வாளெடுபோ போர்தொடுநீ செல்வேன்' என்றான். 354

---
கோவூரன் - வேழனால் முடி பெற்றவன்

# இயல் 80

**வெகுண்டுசெலும் வேழன்பால் நம்பி என்பார்**
**விரைந்தணுகி அவன்சீற்றம் மாற்றி நின்றார்.**

வெகுண்டெழுந்த மாவேழன் பயணம் ஆனான்;
வேத்தவையிற் சான்றோராம் நம்பி என்பார்
தகுந்துணைவர் மனங்கலங்கி வேந்தற் சார்ந்து;
'சற்றேனும் மதியிலைநின் செய்கை தன்னில்;
புகும்பகைவன் எதிர்நிற்க எவரே உள்ளார்?
புலமின்றி வேழனுளம் நோகச் செய்தாய்!
நகுஞ்செயலே செய்தனை நீ ஒல்லை யிற்போய்
நன்மொழிகள் புகல்க'வென இடித்து ரைத்து, 355

விரைந்துசெலும் வேழன்பால் ஓடி நின்று
'வீரருக்குள் முதல்மகன் நீ; வெற்றிச் செல்வன்!
கரைந்துமனம் இரங்குதலே கடமை; வேந்தன்
கரைந்ததனைப் பொருட்டாகக் கருதல் வேண்டா!
நிறைந்தமதி யுடையவனோ நினது மன்னன்?
நீயறியாய் அவன்நிலையை? ஓர்த லின்றி
இரைந்துசில உளறுவதும் வெகுட்சி நீங்கின்
இனியபல கழறுவதும் உடையான் அன்றோ? 356

அனையனுரை கேட்டுளத்தில் புலந்து செல்லின்
அறிவுடைய நினக்கிதுதான் அழகோ? நாட்டை
முனைநுனியில் விடுப்பதுதான் முறையோ? உன்னை
முழுமையுடன் நம்புமெமைத் தவிக்கச் செய்தல்
தினையளவும் நலமாமோ? நீயே யன்றித்
தெறுபகையை எதிர்க்கவலார் யாரோ உள்ளார்?
எனையுணர வல்லாய்நீ! வீர ரெல்லாம்
இறந்தொழியக் கருதினையேல் செல்க இன்றே! 357

கரைந்து - உருகி. கரைந்ததனை - சொன்னதை

மன்னவன்பால் வெறுப்புற்ற ஒன்றால் வேழன்
    மாற்றலர்க்குத் தாயகத்தை விட்டான் என்று
சொன்னமொழி கேட்பதற்கோ செவிகள் கொண்டேன்
    சூரனினும் உயிருடனே வாழும் போதோ
பன்னரிய புகழ்நாடு பணிதல் வேண்டும்?
    பாரெல்லாம் வென்றவன்தான் வேழன் இன்று
முன்னமரில் போர்செய்ய வலிமை யின்றி
    முதுமைநிலை எய்தினனென் றுலகம் சொல்லும். 358

தாயகத்துப் பற்றிருப்பின் நினது சீற்றம்
    தணிந்தெழுந்து செருமுகத்துச் சீறிச் செல்க!
போயகத்து வாழ்வதொன்றே குறியாம் என்றால்
    புலம்பிவரும் என்மொழியை மீறிச் செல்க!
காயமுற்ற எழில்முகத்து வேழன் சென்ற
    களமெல்லாம் வென்றுவந்தான் இன்றோ எங்கள்
சீயமொத்த சிறுமகற்கே அஞ்சி விட்டான்
    சென்றுவிட்டான் என்றுலகம் தூற்றும்' என்றார். 359

---

புலந்து - ஊடி, முனை - போர்முனை.

# இயல் 81

**மாவேழன் சினந்தணிந்தான் மன்னன் றானும்**
**மனமகிழ்ந்தான் இனிதுரைத்தான் விருந்தும் தந்தான்.**

அஞ்சிவிட்டான் என்றமொழி கேட்ட வேழன்
ஆர்ப்பரித்தான் 'அறிவுடையீர்! யாருக் கச்சம்?
நெஞ்சுவிட்டுப் போகவிலை என்றன் வீரம்!
நெருப்பனைய வீரத்தைப் பழித்தல் வேண்டா!
தஞ்சமெட்டுத் திசைதேடிப் பகைவர் ஓடச்
சமர்செய்வேன் திறல்காட்டி வாகை கொள்வேன்;
விஞ்சிவிட்ட முதுமைஎன துடலுக் கன்றி
விளைந்துவரும் வீரத்துக் கில்லை' என்றான். 360

மன்னவனும் வந்தவனைக் கெஞ்சி நின்று
மன்றாடி 'நாடுனக்குச் சொந்த மன்றோ?
சொன்னமொழி பொறுக்க'எனக் குழைந்து நின்றான்;
சூரனுந்தன் மனமிளகி 'நாட்டிற் காக
முன்னமுரை இகழ்மொழியை மறந்து விட்டேன்;
மொழிகஉம தாணை'என வேந்து வந்தே
'என்னுயிரின் அனையோய்நின் வீரம் வாழ்க!
இனியமருக் கெழுவதலால் வேறொன் றில்லை. 361

பொழுதுபுலர்ந் தெழுங்கதிரோன் முகத்தைக் காட்டப்
போர்முரசம் நின்றார்க்கும்; படைகள் கூட்டி
விழுதுவிடும் பழுமரம்போல் நிற்கு முன்றன்
வீரமெலாம் பயன்படுத்தப் போர்மேற் செல்க!
தொழுதுவரும் தாயகத்தின் துயரம் போக்கத்
தோள்கொடுப்பாய்! பகைவர்க்குப் பாழ்கொ டுப்பாய்!
இழுதுபடும் விருந்துண்போம் வாவா இன்றே!'
எனமொழிந்து மறவனுடன் சென்றான் மன்னன். 362

**படையெழுச்சிப் படலம் முற்றும்**

---

தஞ்சம் - புகலிடம். பழுமரம் - ஆலமரம், இழுது - கொழுப்பு.

## போர்ப்படலம்

**மறமடுத்துத் தினவெடுத்து வலிமை கொண்டு**
**மாமடங்கல் இரண்டுடன்று பொருவ தென்னக்**
**குரலெழுப்பித் திறலெழுப்பிப் பொருதா ராங்கே**
**குழுமிவரும் வீரரெலாம் வியர்த்து நின்றார்.**

இயல் - 94
- போர்ப்படலம் 401.

# இயல் - 82

**மூவகத்தார் படையெடுத்து வரல றிந்து**
**முறுவலனாம் கோளரிதான் முகம லர்ந்தான்.**

விளர்த்துவரும் வானத்தைச் செம்மை யாக்கி
விரிகதிரோன் ஒளிப்பிழம்பாய் மேலெ ழுந்தான்;
வளர்த்துவரும் போர்த்திறமை மிக்க காளை
மாவலியோ டுலவிவரும் பொழுது, வான
விளக்கினையும் மறைப்பதுபோல் தூசி வெள்ளம்
வெளிவானிற் படரக்கண் டுசாவி நின்றான்;
தளத்துயரும் ஓரரங்கில் ஏறி நின்று
தன்துணையாம் மாவலியன் நோக்கிச் சொல்வான். 363

'கரைபுரண்டு வருகின்ற வெள்ளம் போலக்
கனன்றுபெரும் படையொன்று நம்மை நோக்கித்
திரைபுரண்ட கடலொலிபோல் ஆர்ப்பெ ழுப்பிச்
சீறியிவண் வருகின்ற'தென்று கூறத்
தரைவியந்த கோளரியும் ஏறி நின்று
தாங்கரிய கடலொன்று வருதல் கண்டான்;
கரைகடந்த மகிழ்ச்சியினால் உரத்துக் கூவிக்
கள்ளுண்டு களித்தான்போல் துள்ளிச் சென்றான். 364

---

உசாவி - வினவி. திரை - அலை. இவண் - இங்கே

# இயல் - 83

**பாசறைகள் இருபாலும் அமைந்த பின்னர்ப்**
**பகைப்புலத்துள் மாற்றுருவில் புகுந்தான் வேழன்.**

படையனைத்தும் திரட்டியணி வகுத்து நிற்கப்
பணித்துப்பின் தன்னாட்டுக் கொடியை நாட்டித்
தொடையுடுத்த மலர்மார்பன் அரிமா வன்ன
தோற்றத்தன் முறுவலன்போர்க் கொடிஎ டுத்தான்;
நடைதொடுத்த மூவகத்துப் படைஞ ரெல்லாம்
நாவலத்துப் படைக்கெதிரிற் சற்றே அப்பால்
படைதொகுக்கும் பாசறைகள் பலவ குத்துப்
பாராளும் மதலையனைச் சூழ்ந்து நின்றார். 365

இரவரசி நல்லாட்சி புரியுங் காலை
ஏறனைய மாவேழன் அணுகி வந்து,
'புரவலனே! முரசறைந்து செருக்க ளத்துப்
புகுமுன்னர்ப் பகைவலிகண் டறிதல் நன்றாம்;
உரமுடைய இளவலையும் நேரிற் காணல்
ஒருவகையிற் பயனுடைய செயலே யாகும்;
கரவுடையில் பகைமுனையிற் சென்று நானே
கண்டறிவல் விடைதருக' எனமொ ழிந்தான். 366

திண்டோளன் திறலெல்லாம் மதலைக் கோமான்
தெளிந்துணர்ந்தான் எனினுமவன் தனித்துச்செல்லின்
கண்டாரும் துயர்விளைக்க நேரும் என்று
கலங்கினனாய்த் 'துணையின்றித் தனித்துச் செல்வோய்!
வண்டாரும் பூஞ்சோலை யன்று வீர!
வட்கார்தம் உறைவிடத்துச் செல்லு கின்றாய்!
பண்டாளும் செருக்கின்றி விழிப்போ டேகிப்
படைத்தலைவ! வருக'வெனப் பணித்தான் மன்னன். 367

---

தொடை - மாலை. நடை - போர்ப்பயிற்சி. கரவுடை - மாற்றுடை. அறிவல் - அறிவேன். வட்கார் - பகைவர்,

மாற்றலர்தம் வீரன்போல் உடைய ணிந்து
    மாற்றுருவில் பகைப்புலத்துப் படைவெள் ளத்தில்
ஏற்றுடலன் பிறரறியா தொளிந்து சென்றான்;
    ஏந்தலுறை பாசறையை அறிந்து கொள்ள
ஆற்றகிலான் ஒவ்வொன்றும் உற்று நோக்கி
    அரியேற்றின் உறைவிடத்தைக் கண்டு கொண்டான்;
காற்றிலசை பாசறையின் திரையை நீக்கிக்
    கண்செலுத்திக் கூர்ந்ததனுள் நோக்கி நின்றான். 368

ஏற்றுடலன் - ஏறுபோன்ற உடலுடையவேழன். ஏந்தல் - கோளரி. ஆற்றகிலான் - முடியாமல்.

# இயல் - 84

**மறைந்துவரும் வேழனைஓர் வீரன் கண்டு**
**மனம்நோக உரைத்ததனால் கொன்று மீண்டான்.**

வலப்பக்கம் இளவேலன் மெய்காப் பாளன்
வருமுறவின் முறைபூண்டான் அமர்ந்தி ருக்க,
மலைப்புக்குத் துணைவந்த படைந டாத்தும்
மாவலியும் தடவலியும் இடத்தி ருக்க,
நலத்தக்க முறுவலனும் நடுவி ருக்க,
நயந்துபல மொழிந்திருக்குங் காட்சி கண்டான்;
'குலத்துக்கண் தோன்றிவரும் தோன்ற லுக்குக்
கூறவரும் உவமையிலை எனப்பு கழ்ந்தான். 369

பாசறையின் வெளிப்புறத்தில் மறைந்தொ துங்கிப்
பதுங்கிவரும் ஒருருவின் சாயல் மட்டும்
பேசலுறும் இளவேலன் விழியில் தோன்றிப்
பின்வாங்கக் கண்டுளத்தில் ஐய முற்று,
வாசலில்வந் தங்குமிங்கும் நோக்கி, எந்த
மாந்தனையும் காணாது மீள்வோன் சேணில்
வீசுமொளி விளக்கொன்றால் உருவின் சாயல்
விரைவதுகண் டுளவறிவோன் எனநி னைந்து, 370

'மறைந்தஞ்சிப் பதுங்கிவரும் வீரன் யாவன்?
மறமிருப்பின் எதிர்நிற்க வெளியில் நீவா!
கரந்திருக்கும் கோழைஎனில் பேசா தின்னே
கடிதில்விரைந் தோடிவிடு! பேதாய்' என்றான்;
நிறைந்தவலி வேழனுக்குக் கோழை என்ற
நெடுமொழிஓர் நெருப்பாகிச் சுடலும் தாவி
அறைந்தவனை மார்பகத்து மோதித் தாக்க
அப்பொழுதே இளவேலன் சாய்ந்து வீழ்ந்தான். 371

---
மலைப்புக்கு - போருக்கு, சேணில் - தொலைவில், சாயல் - நிழல்.

புறம்போந்த இளவேலன் இன்னும் இங்குப்
    போதருதல் புரிகிலனே! என்னோ! என்று
மறந்தோய்ந்த மாமல்லன் தேடு கென்று
    வயவருக்குப் பணியிட்டான்; தேடிச் சென்றோர்
நிறம்பாய்ந்த பேரடியால் குருதி சிந்தி
    நெடும்பிணமாய்க் கிடந்தானைத் தூக்கி வந்தார்;
'அறந்தேய்ந்து போனதுவோ? இருளில் யாரும்
    அறியாமற் கொலைசெய்த வஞ்சர் யாரோ? 372

பழிநாணாச் செயல்செய்ய மூவ கத்துப்
    பாராள்வோன் ஏவியுளான்; இதற்கு நாளை
வழிகாணா தவனைவிடேன்; வஞ்ச நெஞ்சன்
    வாய்விட்டுக் கதறும்வரை அடித்துக் கொல்வேன்;
இழிவான செயல்செய்யத் துணிந்தான் பாவி!'
    எனமொழிந்தான் வெஞ்சினத்துக் காளை யன்னான்;
விழிகாணா தொளிந்தங்கு வந்த வேழன்
    விரைந்தேகித் தன்னரசன் பாடி சேர்ந்தான். 373

இன்னே - இப்பொழுதே. மாமல்லன் - மற்போர்வல்ல கோளரி. வயவர் - வீரர், நிறம் - மார்பு, குருதி - இரத்தம், பாடி - பாசறை.

## இயல் - 85

**மன்னவன்பால் கோளரியை வியந்து வேழன்**
**மாற்றலனைப் புனைபெயரால் பொருவேன் என்றான்.**

மீண்டுவரும் மாவேழன் பகைப்பு லத்தில்
விளைந்தவெலாம் அரசனுக்கு விளம்பிப் பின்னர்,
'ஆண்டுவரும் மாமன்னா! வந்த ஏந்தல்
அடலேறு படுநடையன், அழகன், வீரன்;
ஆண்டவனைப் பொருவதெனில் அரிய ஒன்றே!
ஆயினும்நம் அணித்தலைவர் பொருத பின்னர்
வேண்டுமெனில் அமர்புரிய வருவேன் நானே;
வேறுபுனை பெயரோடு பொருது வெல்வேன். 374

படைகொண்டு வந்தவனோர் இளைஞன்; அந்தப்
பாலனொடு மாவேழன் பொருதல் நன்றோ?
விடைவென்ற தோற்றத்தன் என்பேர் கேட்பின்
வெலவெலத்துப் போராண்மை காட்டா தேகும்;
நடைகொண்டான் அஞ்சுமெனில் அவனு ளத்தே
நல்வீரம் அணுவளவும் தோன்றா தன்றோ?
தடையின்றி அவன்திறமை முழுதுங் காட்டிச்
சமர்செய்ய வேண்டுமென எண்ணங் கொண்டேன். 375

சிறுவீரன் பெருவீரங் காட்டிக் காட்டிச்
செயிர்த்தெழுந்து புரிகின்ற கோல மெல்லாம்
உறுபோரிற் கண்ணாரக் காணல் வேண்டும்;
உள்ளமெலாங் களிகொண்டு பொங்க வேண்டும்;
கறுவோடு பொருதவன்தன் ஆண்மை எல்லாம்
காட்டியபின் நான்வெல்லும் ஆசை யாலே
மறுபேரால் பொரநினைந்தேன்; மாற்றான் வீரம்
மதிக்கின்ற பெருங்குணமும் வேண்டும் அன்றோ?' 376

---
ஆண்டவனை - ஆண்டு + அவனை; ஆண்டு - அங்கே, விடை - காளை. செயிர்த்து - கோபித்து, கறு - கோபம்.

எனுமொழிக்கு மதலைக்கோன் தலைய சைத்தே
    இசைவளித்தான்; மறுத்துரைப்பின் புலந்து மீண்டும்
சினமெடுத்துச் சென்றாலும் செல்வ னென்றே
    செய்வதொன்றும் அறியாமல் எழுந்து சென்றான்;
தினவெடுத்த திண்டோளர் தருக்கி நின்று
    செயும்போரை எதிர்நின்று காண்பான் போல
முனமடுத்த இருளென்னுந் திரையை நீக்கி
    முகங்காட்டிச் செங்கதிரோன் எழுந்து வந்தான். 377

# இயல் - 86

**மாவேழன் பாசறையை வினவி நின்ற**
**மகன்றனுக்கு வெண்கோடன் மறைத்துச் சொன்னான்.**

சிறையிலுறும் கோடனைத்தன் னுடன்கொண் டேகிச்
சேணுயரும் அரங்கேறிச் செம்மல் நின்று,
நிறைகளிறு சூழவுயர் பாடி வீடும்,
நெருங்கியதன் வலப்பாலே நிமிர்ந்து நிற்கும்
திரைவளையும் பாசறையும், அப்பால் ஓர்பால்
செந்நிறத்த படைவீடும், சுட்டிக் காட்டிக்
'குறைவறவே எவ்வெவர்தங் கூட மென்று
குறித்தெனக்கு விளங்கவுரை வீர இன்றே! 378

விடுதலைநீ வேண்டுதியேல் இதனைக் கூறு!
விலங்ககற்றி உனைவிடுப்பேன்' என்றா னாக,
'நெடுமுடியின் மதலைக்கோன் தங்கும் பாடி
நீள்மருப்புக் களிறுபல சூழ்ந்த தாகும்;
அடுதொழிலோன் பெருவீரன் வேங்கை என்பான்
அதன்வலப்பால் தங்கியுளான்; அமைச்சன் சான்றோன்
கெடுதலையே அறியாதான் நம்பி என்போன்
கெழுமுவது செந்நிறத்த கூடம்' என்றான். 379

'கொடியுயர்த்தி ஆங்குளதே பச்சை வண்ணக்
கொட்டிலங்கே வைகுபவன் யாவன்?' என்ன,
'அடிபிடித்துச் சீனத்தன் தந்து சென்ற
அரியதொரு கூடாரம் ஆகும்; அங்குக்
குடியிருக்கும் வீரன்பேர் நினைவி வில்லை;
கொடுங்கூற்றம் அனையனவன்' என்று சொன்னான்;
படிறுரைக்க முனைகின்றான் இவனென் றையம்
படருவதால் பைப்பயநாம் அறிவம் என்று, 380

கோடன் - வெண்கோடன், சேண்உயரும் - மிகவுயர்ந்த, செம்மல் - கோளரி, படிறு - பொய்

‘பசுமையுடன் பளபளக்கும் பாடி வீடு
பணிவரிய மாவேழற் குரிய தன்றோ?
அசதியுனக் கழகாமோ? மொழிக’ என்ன,
‘ஆமாம்அப் பாசறையும் இதுவே போலப்
பசியதுதான்’ எனமழுப்பி நின்றா னங்கே;
பதுங்குகின்றான் உண்மைசொல எனவு ணர்ந்தோன்,
‘உசவுமெனக் குண்மைநிலை யுரைத்து, வீரன்
உறைவிடமுங் காட்டுதியேல் நன்றாம்’ என்றான். 381

‘யானுமவன் பாடியைத்தான் தேடு கின்றேன்
யாண்டுமது தோன்றவிலை; தன்ன கர்க்குப்
போனஅவன் இன்னுமிவண் வந்தா னல்லன்
போலுமெனக் கருதுகின்றேன்; வேழன் நெஞ்சில்
ஆனதுனி தணவாத கார ணத்தால்
அவ்வுழைநின் றகலாமல் இருத்தல் கூடும்;
கோனவனோ டடுத்தடுத்துப் பிணங்கி நின்று
குழப்புவது வழக்கம்’எனக் கூறி நின்றான். 382

அசதி - மறதி, உசவும் - வினவும், துனி - பகை, தணவாத - நீங்காத, உழை - இடம், கோன் - அரசன்.

# இயல் - 87

**வெண்கோடன் மறைக்கின்ற குறிப்பைக் கண்டு**
**விடலையவன் பரியேறிச் சென்றான் அங்கே.**

நம்பகிலாக் கோளரியன் சிறிது தட்டி
'நயவஞ்சம் மொழிந்திடுவோய்! உண்மை கூறின்
வம்புபடும் கலன்பலவாய்ப் பரிசில் கிட்டும்;
வாய்மறைத்தால் நின்னுயிரே போகும்' என்றான்;
'அம்புவிடு இப்பொழுதே! நின்பாற் சிக்கி
அலமருமென் னுயிர்போக அஞ்ச கில்லேன்;
வெம்புலியன் மாவேழன் பிழைத்தாற் போதும்;
மேவலர்பால் தாயகத்தைக் காப்பேன்' என்றான். 383

தந்தைபெயர் சொலக்கேட்டு நின்ற மீளி
தனிப்பகைவெண் கோடனுக்கோர் தீங்கும் செய்யான்,
உந்திவரும் ஆர்வத்தால் கவசம் பூண்டோன்
ஒப்பரிய வில்லேந்தி வாளுந் தாங்கி,
முந்திவரும் நடைப்புரவி ஏறி, நண்ணார்
முனைப்புலத்துப் பசியநிறப் பாடி நோக்கும்
சிந்தையொடு மிகவிரைந்து சென்றான் நேரில்
சென்றங்கு மெய்ம்மையெலாம் தெரிவான் வேண்டி. 384

வம்பு - புதுமை, கலன் - நகை, மீளி - கோளரி.

# இயல் - 88

**கோளரி மதலைக் கோவின் பாசறை**
**பாழுறச் செய்தனன்; பதறினன் மன்னன்.**

செலும்வழியில் மதலையுறை கூடங் கண்டான்;
சேர்துணையாம் இளவேலை மாய்த்த தெண்ணிக்
கொலும்நினைவால் அதைநோக்கிப் பாய்ந்தான்; அந்தக்
கோளரியின் கூக்குரலைக் கேட்ட வீரர்
கலமிழந்து, வேங்கையினைக் கண்ட மான்கள்
கலைந்தோடும் நிலைபோலச் சிதறிச் சென்றார்;
எலும்பதிர நகைத்தவனாய் வேந்த னைக்கண்
டெதிர்பொருதத் திறமிருப்பின் வருக' என்றான். 385

மன்னவனோ மறுமொழியோ புறத்து வாயில்
வாராத காரணத்தால் சினந்து செம்மல்,
'மன்னவனோ நீயுமொரு கோழை' என்று
வலிகொண்டு வல்லீட்டி வீசி விட்டான்;
சின்னபின்ன மாகியது கூடம்; மன்னன்
செயலொன்றும் அறியானாய் அஞ்சி யோடி
ஒன்னலனை ஓட்டுதற்கு வேழன் தன்னை
ஓடோடி அழைத்துவரப் பணித்து நின்றான். 386

---

மதலை - மதலைக்கோ, இளவேல் - இளவேலன், கலம் - படைக்கலம், ஒன்னலன் - பகைவன்,

# இயல் - 89

**அறைந்தனன் ஏவலன் அரசன் ஆணை**
**விரைந்தனன் பரிமேல் இவர்ந்திடும் வேழன்.**

கடிதினுனை வரப்பணித்தான் மன்னன் என்று
காவலன்வந் துரைத்ததனைக் கேட்டு வேழன்,
'முடிபுனையும் ஒன்றன்றிச் சிந்தித் தாயும்
முன்னறிவு சற்றுமிலான்; செய்த பின்னர்த்
துடிதுடிப்பன், எனையழைப்பன்,என்றும் ஈதே
தொழிலானான், எனமுனகிப் புறத்தே வந்தான்;
படைமறவர் வெருண்டோடித் தவிக்கக் கண்டு
பரிமாவைச் சீற்றமொடு துரத்தி வந்தான். 387

போராற்ற வல்லாரும் அவனைக் கண்டு
புறங்காட்டி ஓடுகின்றார் நில்லார் என்றால்
பேராற்றல் கொண்டானைத் தவம்பு ரிந்து
பெற்றானே பெற்றானென் றுண்ம கிழ்ந்து
பாராட்டி வருவேழன் றன்னை நோக்கிப்
பகருமொரு படைமறவன், 'ஆண்மைப் பண்பே
நேராற்ற வந்ததுபோல் ஒருவன் ஆங்கே
நிற்கின்றான் விழிப்புடன்நீ செல்க' என்றான். 388

# இயல் - 90

**தனயனும் தந்தையும் தரியல ராகி**
**முனைந்து பொருதனர் முதல்நாட் போரில்**

வாளெடுத்த நாள்முதலா வெற்றி யென்ற
வரலாறே கற்றுயர்ந்த வேழன் இன்று,
தாளெடுத்து வைக்கின்ற சிறும கற்கோ
தளர்ந்தொதுங்கிப் பின்செல்வன்? எதிரில் வந்த
கேளெடுத்து மொழிந்ததைஓர் பொருட்டாக் கொள்ளான்
கிளந்தவனை நகைத்தெள்ளி விரைந்து சென்றான்;
வேளெடுத்த கோளரியும் தன்னை நோக்கி
விரைந்துவரும் வீரனைக்கண் டுவகை கொண்டான். 389

களிறொன்று பிளிறுதல்போல் ஒருவன் ஆர்த்தான்;
கடுஞ்சீயம் உறுமுதல்போல் சிறுவன் ஆர்த்தான்;
ஒளிறுபெறும் வாளெடுத்துத் தனித்துச் செய்யும்
ஒருசமரே தொடக்குதற்கு முனைந்து நின்று
களிறனைய பெருமகனும் கடுங்கட் சீயம்
கடுக்கவரும் ஒருமகனும் பொருத வந்தார்;
நளிருடனே பொரவருவோர் தம்முட் கொண்ட
நல்லுறவு யாதென்றே அறியார் அந்தோ! 390

கேள் - உறவினனாகிய வீரன், வேள் - மன்மதன், ஒளிறு - விளங்குகின்ற. சீயம் - சிங்கம், கடுக்க - ஒப்ப நளிர் - பகை.

# இயல் - 91

**ஒருவரை ஒருவர் உணரா ததெிர்ந்தவர்**
**உருவையும் பொலிவையும் உவப்புடன் வியந்தனர்.**

பொருதொழிலைத் தொடங்குமுனம் களத்து நின்று
புதுவதுபோல் ஒருவரைமற் றொருவர் பார்த்தார்;
ஒருபெரிய வடிவமொடு நிமிர்ந்து நிற்கும்
உருக்குடலும் துதிக்கையெனத் திரண்டு ருண்ட
இருபெரிய நெடுங்கையும், பரந்த மார்பும்,
எழுகதிர்கள் இரண்டனைய விழிகள் தாமும்
குருமருவு விரிநுதலும்,ஒளிமு கத்தில்
குவிந்தடர்ந்த சுருளணலும் இளைஞன் நோக்கி, 391

கண்டாலும் நடுக்குறுத்தும் தோற்றங் கொண்ட
களிறனையான் இவனன்றோ வீரன் ஆவான்
திண்டோள்கள் கொண்டிவனைப் பொருது வென்ற
திறலன்றே திறலாகும்; தோல்வி ஒன்று
கண்டாலும் குற்றமில்லை; என்பே ராற்றல்
காட்டுதற்குத் தக்கானும் இவனே யாகும்;
விண்டாலும் இவன்தோற்றப் பெருமை எல்லாம்
விரித்துரைக்க இயலாது விளைந்து நிற்கும்; 392

எனவியந்த கோளரியன் மனத்த கத்தே
இவனொருகால் தன்தந்தை வேழன் தானோ?
எனநினைந்தான்; அவன் அணியும் கவச மில்லை;
இவன்வேறு பிறன்போலும் எனத்தெ ளிந்தான்;
கனவகத்தும் இவனைப்போற் கண்ட தில்லை;
கற்பனைசெய் தாயினும்நான் பார்த்த தில்லை
இனையபல வியந்தெண்ணி, ஆவ தாக!
எனக்கரிய வாய்ப்பொன்று கிடைத்த தென்றான். 393

---
குரு - ஒளி. நுதல் - நெற்றி. அணல் - தாடி, விண்டால் -சொன்னால்.

இளவலுக்கு வாய்த்தஒரு வீரப் பாங்கும்,
எதிர்பொருவார் மனங்கவரும் எழில்வ னப்பும்,
பளபளக்கும் அவன்முகத்தில் தவழ்ந கைப்பும்,
பாய்ந்துவரும் அரிபோலும் அஞ்சா நோக்கும்,
களமுனைக்கு மதர்த்துவரும் பெருமி டுக்கும்,
கண்குளிரக் கண்டுளத்தில் மகிழ்ச்சி பொங்கும்
அளவினுக்கோர் எல்லையில்லை; வலிய வேழன்
அகமுருகி அவன்வயமாய் மொழிய லுற்றான். 394

மதர்த்து - செருக்கி

# இயல் - 92

**எழில்முகத்துப் பாலகன்நீ போர்தொ டுக்க**
**ஏன்வந்தாய்? பிழைத்துப்போ! என்றான் வேழன்.**

'பால்வழியும் எழில்முகத்துப் பால! இங்குப்
பற்றியுனைப் பொருதுகொல மனமே யில்லை;
ஏல்வலியை நீயெனினும் சிறுவன் அன்றோ!
யான்முதிர்ந்த பெருமறவன்; குருதி வெள்ளம்
வேல்வழியிற் பாய்ந்தோடக் களங்கள் கண்டேன்
வெண்பூதன் மடிந்தொழியப் பொருது வென்றேன்
சால்புடைய மறவர்குல மகனே! ஈன்ற
தாய்க்குரிய மகனாகப் பிழைத்துப் போபோ! 395

நான்பெற்ற மகன்போல உனைநி னைத்தே
நவில்கின்றேன் நயவுரைகள்; கேளென் சொல்லை;
ஏன்பெற்றாய் இந்நிலையை? நாவ லத்தான்
ஏவலுக்கோர் ஆளாகி மடிதல் வேண்டா!
வான்பெற்ற பிறகளங்கள் புக்கு நின்றன்
வாள்வலிமை காட்டியங்கு வென்றி கொள்க!
தேன்பெற்ற மொழியுனக்கு மனமி ரங்கிச்
செப்புகின்றேன் சென்றுபிழை! செல்வா' என்றான். 396

---

ஏல் - (போருக்கு) ஏற்ற, வெண்பூதன் - மாவேழனால் கொல்லப்பட்ட பெருவீரன்.

# இயல் - 93

**மாவேழன் யாவனென வினவி நின்ற**
**மகனிடமே உண்மைநிலை மறைத்தான் வேழன்.**

'மனமிரங்கி இனியவுரை தந்தாய்! உண்மை
மறைப்பின்றி எனக்குணர்த்த வேண்டு கின்றேன்;
முனமிருந்தே உயர்ந்தமறக் குடியின் வந்த
மொய்ம்புடைய மாவேழன் யாவன்? தோளில்
தினவுயர்ந்த அப்பெருமான் உறைதல் யாங்கோ?
செய்தியிது தெரியுமவா மிகுதி கொண்டேன்;
எனதுமனம் மகிழவரும் அண்ணால்! சற்றே
இளகியருள் புரிகவெனக்' கெஞ்சி நின்றான். 397

கெஞ்சுமுரை கேட்டிருந்த வேழன் 'ஆம்ஆம்
கேட்டாரும் நடுநடுங்கும் வீரங் கொண்ட
நெஞ்சுடைய மாவேழன் ஒருவன் உள்ளான்;
நெடியவன்பாற் பயின்றவன்நான்; என்னை வென்று
விஞ்சியபின் நீஅவனைக் காண லாகும்;
விழைந்ததெது? நின்னுயிரா போரா?' என்றான்;
வெஞ்சமரன் வேழனிவன் என்ற எண்ணம்
வீணாகித் தளர்ந்திளவல் போரே என்றான். 398

தினவு உயர்ந்த - போர்ச்செருக்கு மிகுந்த

# இயல் - 94

**போர்வேண்டா எனமீண்டும் சொன்னான் வேழன்**
**புலியடையான் இசைந்திலன்; போர் தொடங்கிற் றன்றே.**

'முகில் தழுவ நெடிதாக உயரக் கட்டி
முடிந்துநிற்கும் கோபுரம்நான்; என்னைக் கண்டு
திகில் தழுவ நிற்கின்றோய்! நீயோ கொட்டிக்
கிடக்கின்ற செங்கலடா; சிறியோய் உன்னை
உகிர்முனையால் வகிர்ந்தெனது விரல்க ளுக்கே
ஒருகளங்கம் விளைவிக்க விழைய வில்லை;
துகிரனைய உன்னுடலைத் துண்டம் செய்யத்
தோளுக்கும் வாளுக்கும் எண்ணம் இல்லை. 399

ஆதலினால் ஓடிவிடு வீடு நோக்கி
அருஞ்சமரம் விட்டொழிக' என்றான் வேழன்;
'மோதலினால் உயிர்விடுவோர் யாவர் என்று
முனைவதன்முன் முடிவுசெய விரைந்தாய் வீர!
சாதலினால் அஞ்சுமனம் உடைய வர்க்குச்
சமரகத்து வேலைஎன்ன? உண்மை ஒன்றை
ஓதினைநீ முடிந்துவிட்ட கோபு ரந்தான்;
உன்கதையும் முடிந்ததென உணர்வாய் இன்றே 400

உரமிருப்பின் வாய்வீசேல்; வாளை வீச
உருவிஎழு! பேச்செதற்'கென் றிளவல் சொன்னான்;
பொரநினைத்த மாவேழன் வாளெ டுத்தான்;
புதல்வனெனத் தந்தையென அறியா ராகி
மறமடுத்துத் தினவெடுத்து வலிமை கொண்டு
மாமடங்கல் இரண்டுடன்று பொருவதென்னக்
குரலெழுப்பித் திறலெழுப்பிப் பொருதா ராங்கே
குழுமிவரும் வீரரெலாம் வியர்த்து நின்றார். 401

---

உகிர் - நகம், துகிர் - பவளம். சமர் - போர். மடங்கல் - சிங்கம், உடன்று - சினந்து.

# இயல் - 95

**புகுபோர் தனில் கொலைவாள் கொடு**
**பொருதார் பகை மிகவே.**

வாள்சுழற்றும் வித்தகமும், பின்னும் முன்னும்
மாறிவந்தே ஒருவருடன் ஒருவர் மோதித்
தாள்பெயர்த்துச் சுழன்றுவரும் விரைவும், கட்கம்
தாக்கிஎழும் தீப்பொறியும், கேட யத்தால்
வாள்தடுத்துத் திரிகின்ற விறலும், கையை
வாய்வைத்து வியந்தங்கே கண்டு நின்றார்;
கோள்வளர்க்கும் பொருசமரில் வெற்றி தோல்வி
கொள்பவரார்? எனவறிய வல்லா ரில்லை! 402

வளர்ந்துவரும் பகைக்களத்தில் வலிமை கொண்டு
மற்றவர்க்குத் தந்திறமை காட்டும் வீரர்
தளர்ந்தறியா வாளிரண்டுஞ் சுழற்றி வீசித்
தாக்குவதால் வாய்மழுங்கிப் பற்கள் கொண்டு
விளைந்தபுலக் கருக்கரிவாள் போல மாறி
விட்டதனால் விட்டெறிந்து, வேல்கள் தாங்கிக்
களந்தனிலக் கடுமறவர் ஏற்றங் கொண்டு
கதக்களிறு பொருவதெனக் கலந்து நின்றார். 403

கட்கம் - வாள், விறல் - திறமை. கோள் - கொலை, கதம் - கோபம்,

# இயல் - 96

**தண்டும் வேலும் கொண்டுபோர் புரிந்தவர்**
**தண்புனல் வேட்டுத் தனித்தனி ஒதுங்கினர்.**

ஈட்டியினைத் தாங்கியவர் புரவி ஏறி
இடப்பக்கம் வலப்பக்கம் மாறி மாறி
வேட்டமுறு வேங்கையெனப் பொருது வந்தார்;
வீரரெலாம் வியந்தஞ்சி ஒதுங்கி நின்றார்;
கோட்டைவிடும் இவனென்பர் ஒருசார் நின்றார்;
கொன்றுவிடும் அவனென்பார் மறுபால் நின்றார்;
காட்டலுறும் வலிமையெலாங் காட்டி நின்றார்
கையீட்டி வாய்பிளந்து நொறுங்கக் கண்டார். 404

தண்டெடுத்துக் கொண்டெழுந்தார் தாவித் தாவித்
தாங்கரிய திறலோடு மோதி மோதிப்
பண்டுரைத்த போர்முறைகள் அனைத்துங் காட்டிப்
பரந்துபடத் துகளெழுப்பிக் கவச மெல்லாம்
விண்டவற்றின் முகம்பிளக்க, உடல மெங்கும்
வியர்வையொடு செங்குருதி கலந்து பாயக்
கண்டதற்குந் தளராமல் உடன்று நின்றார்;
கடும்புரவி ஆற்றாமல் களைத்து நின்ற. 405

இடையின்றிப் பொருதமையால் இருவர் நாவும்
ஈரமொரு சிறிதுமிலா துலர்ந்து போகப்
படைகொண்ட மறவர்புனல் வேட்கை கொண்டு
பரிவுடையர் ஆகினரால் வெய்து யிர்த்துத்
தொடைகொண்ட அகலங்கள் எழுந்தெ ழுந்தே
தோன்றுபெரு மூச்சினராய் வாய்ம டித்து
நடையின்றித் தனித்தனியே ஒதுங்கி நின்றார்;
நண்பகலில் பிறமறவர் பதைத்து நின்றார். 406

---

தண்டு - கதை என்னுங்கருவி, விண்டு - பிளந்து உடன்று - சினந்து, நின்ற - நின்றன. புனல் - நீர், வெய்துயிர்த்து - பெருமூச்சுவிட்டு, அகலம் - மார்பு.

# இயல் - 97

**கோளரியை மாவேழன் வியந்து நிற்கக்**
**கொடுவிற்போர் புரிகவென அழைத்தான் காளை.**

'பார்முழுதுங் களங்கண்டேன் வென்று வந்தேன்
பலரோடும் பொருதிருந்தேன்; அடஓ இந்தப்
போர்முனையில் நேர்பொருதும் முறுவற் காளை
போலொருவர் கண்டதிலை இன்று காறும்;
வார்முரசம் அதிர்களத்தில் அஞ்சா வீரன்
வாள்வலியும் தோள்வலியும் சிறக்கக் கண்டேன்;
வேர்வையுறும் முகப்பொலிவும் என்னே! என்று
வேழன்தன் மனத்தகத்துள் வியந்து நின்றாள். 407

விரல்கொண்டு நுதல்வியர்வை துடைத்துக் காளை
வேறுபெயர் கொண்டுடன்ற அவனை நோக்கி,
'விரலுண்டோ மறுமுறையும் முறுக்கு தற்கு?
வீரவுளங் கொண்டனையேல் இனிநி கழ்த்தும்
உறங்கொண்ட பெரும்போரில் வில்லை ஏந்தி
உனதாண்மை காட்டுகநீ! இன்றேல் தோற்றுப்
புறந்தந்தாய் என்பதற்கோர் இசைவு காட்டு!
போர்மறவ! விரைந்தொன்று புகல்க' என்றான். 408

முறுவல் - புன்னகை. நுதல் - நெற்றி.

# இயல் - 98

**விற்போர் முடித்து வீரர் இருவரும்**
**மற்போர் விளைத்தனர்; மாலையில் களைத்தனர்.**

சீற்றத்தால் ஆர்த்தெழுந்த வேழன் நீண்ட
சிலையொன்றைக் கைக்கொண்டான்; சினந்தெ ழுந்த
தோற்றத்தான் கோளரியும் வில்லெ டுத்தான்;
சோவேனப்பெய் மாரியைப்போல் அம்பு பெய்தார்;
ஆற்றத்தாம் எய்தவெலாம் முறிந்து வீழ,
அடற்புரவி விட்டிறங்கித் தமது தோளின்
ஏற்றத்தால் மற்போரைத் துவக்கி விட்டார்;
இருபாலுங் குவிந்திருந்தோர் ஆர்ப்ப ரித்தார். 409

புலியேறு பொருவதெனப் பாய்ந்து தாவிப்
போயிருவர் உடல்பற்றிப் பொருதுங் காலை
வலியோடு பொருபவர்தாம் மேலுங் கீழும்
வருவதும்பின் போவதுமாய்ப் புரண்டி ருந்தார்;
மலைவாருள் இவன்மேலா அவன்தான் மேலா
மதிப்பிட்டுச் சொலமுடியா நிலைய ரேனும்
நிலையாக இவ்வமரில் இரண்டி லொன்று
நிகழ்ந்துவிடும் எனநினைந்தார் சூழ்ந்த வீரர். 410

தரைமுழுதும் வீழ்ந்ததிரப் புரண்டு ருண்டும்
தாளொடுதாள் பிணைந்துமிரு தோள்கள் பற்றி
விரைசெறியும் அகலத்தில் அறைந்தும் மோதி
வீறுகொடு பெருமுழக்கஞ் செய்து கூவிப்
பொருதகர்போல் பின்பெயர்ந்து பதுங்கி மீண்டும்
புலிபோலப் பாய்ந்துடன்று மாலைப் போழ்து
வரைபொருது நெடிதுயிர்த்துக் களைத்துச் சற்றே
மலைவின்றித் தனிமையினில் ஓய்வு கொண்டார். 411

---
சிலை - வில், மலைவார் - போர்செய்வோர், அகலம் - மார்பு, தகர் - கடா. மலைவு - போர்.

# இயல் - 99

**எறிதண்டு தாக்குறவே நிலைத்தான் வேழன்**
**இன்றுபோய் நாளைவா என்றான் காளை.**

இனிமுடிவு காணுதலே இனிதென் றெண்ணி
எழுமுணர்விற் கோளரியன் தண்டெ டுத்துத்
தனிவலிவு கொண்டதனைச் சுழற்றி, அங்குத்
தருக்கிவரும் வேழன்றன் தலையை நோக்கி
முனிவுகொடு குறிதவறா தோங்கி வீச
முழுவலியன் தடுக்குமுனம் தாக்கிற் றாங்கே
நனிவிழுந்த அடிதாங்க இயலா னாகி
நடுமரம்போல் நிலைத்துவிட்டான் தோலா வேழன். 412

'வெற்றிக்கே முழுவுரிமை பேசி வந்த
வீரத்தின் குலமகனே! நிலைத்து நின்ற
பெற்றிக்குக் காரணமென்? போது மென்ற
பெருமனமோ? அடிபட்ட நாணந் தானோ?
முற்றுற்ற கோபுரமே! செங்க லுக்கு
முன்னிற்க மனமிலையோ? வீர மெல்லாம்
வெற்றுக்குப் பயன்படுத்த வேண்டா என்று
விழைந்தனையோ? முதுமகனே எண்ண மென்ன? 413

தோர்ந்தபெருங் களங்களெலாம் வென்று வந்த
திறலெங்கே? கொண்டுவந்த தோள்கள் எங்கே?
சேர்ந்தஉன தருஞ்செயல்கள் வலிமை எல்லாம்
செப்பியநல் வாயெங்கே? சிறுவன் என்பால்
நேர்ந்திளகிக் கசிந்துருகும் நெஞ்ச மெங்கே
நிலையாக நிலைத்தனவே அனைத்தும் ஒன்றாய்!
ஓர்ந்துனது நிலைமைஎனக் குரைத்தல் நன்றாம்
உரைநடையால் உயர்வீர!' என்றான் செல்வன். 414

முனிவு - கோபம், பெற்றி - தன்மை. உரைநடையால் - பேச்சால்

கோளரியன் பொடிவைத்து மொழிந்த வெல்லாம்
　　கூர்விழியன் கேட்டிருந்து, 'வீரச் செல்வ!
நாளையினிப் பொரவருவோம்; மாலை வேளை
　　நண்ணியதால் சமர்நிறுத்திப் பிரிந்து செல்வோம்;
ஏளனமேன்? மறுநாளே முடிவு காண்போம்'
　　என்றுரைத்தான் மாவேழன்; 'இன்று சென்று
வாளொடுநீ வாநாளை' எனமொ ழிந்தான்
　　வாய்மைமிகு போர்முறைகள் தேர்ந்த செம்மல்.

# இயல் - 100

**போர்த்திறங் கண்டோர் புகன்றனர் பலமொழி**
**வேர்த்துளம் தளர்ந்து வேழன் நடந்தனன்.**

மலைந்தமுறை நிகழ்ந்தமொழி அனைத்தும் அங்கே
வளைந்திருந்து வியப்புடனே கண்டு கேட்டுக்
கலைந்துசெலும் வீரரினம், இளவ லின்று
காட்டியநல் லாண்மையையும், வேழன் போரில்
குலைந்ததையும் தனித்தனியே பேசிச் சென்றார்;
கொடுஞ்சமரில் நாளையிவர் கூடுங் காலை
மிலைந்துகொளும் வாகையினை இளைஞன் தானே
மேவுவது திண்ணமெனச் சொன்னார் ஓர்பால். 416

'திசையனைத்தும் வென்றியொன்றே கண்டு வந்த
திறலனுக்கோ இந்தநிலை வந்த திந்த
வசையினைத்தான் கேட்பதற்கோ இன்று வந்தேன்;
வாடியவன் செல்கின்றான் அந்தோ!' என்று
மிசையனைத்தும் கண்டிருந்த கதிரோன் துன்பம்
மிடைந்துவரும் நெஞ்சினனாய் மறைந்து சென்றான்;
குசைமடுத்த புரவிமிசை ஏறிச் செல்லான்
குனிந்ததலை நிமிர்ந்திலனாய் நடந்தான் வேழன். 417

---

மிலைந்து - சூடி, வாகை - வெற்றி மாலை, மிசை - மேலிருந்து. குசை - கடிவாளம்.

## இயல் - 101

**வாட்டமுடன் வரும்வேழன் வேந்தற் கண்டு**
**வலிமைமிகு கோளரியின் திறம்வி யந்தான்.**

திரும்பிவரும் மாவேழன் வேந்தற் கண்டு
தெறுசமரில் நடந்தவெலாம் விளங்கச் சொல்வோன்
'இரும்பனைய இளவலைப்போல் இந்நாள் மட்டும்
எக்களத்தும் கண்டதிலை; அஞ்சா வேங்கைப்
பெரும்புலியின் வீரமொடு வலியும் யாண்டுப்
பெற்றனனோ? குன்றினையும் அசைக்கும் என்றன்
அரும்புயங்கள் அம்மகனை அசைக்க கில்லா
தயர்ந்தனவே! வீரனென்றால் அவனே வீரன். 418

ஈர்த்திழுத்துப் புரவியினின் றவனைத் தள்ள
எத்தனையோ முறைமுயன்றும் இயல வில்லை;
பேர்த்துமொரு போர்விளைக்கக் குறித்து வந்தேன்
பிள்ளையுடன் பொருதுவரச் செல்வேன் நாளை;
ஆர்த்துவரும் அவன்பிள்ளைப் பருவ மேனும்
அடலரியின் திறமுடையான்; வெற்றி தோல்வி
யார்க்குவரும் என்றுணர இயல வில்லை;
எனினும்போர் புரிந்திடுவேன் மன்னா' என்றான். 419

'புகுகின்ற களமெல்லாம் வாகை கொண்டேன்
புகழ்நிறுவ அவைதாமே சாலும் சாலும்;
மிகுகின்ற வலியுடைய வீர னேனும்
மேலொருநாள் இவ்வுலகில் மாய்தல் திண்ணம்;
நகுகின்ற சாவினைத்தான் தடுக்க வல்லார்
நானிலத்தில் எவருமிலர்; என்னை விஞ்சிப்
புகுகின்ற அன்புணர்வோ ஏதோ ஒன்று
புரியாமல் என்னுளத்தை அலைக்கக் கண்டேன்'. 420

---

தெறு - அழிக்கின்ற, அடல்அரி - வலியசிங்கம்.

என்றுழலும் நெஞ்சினனாய் வேழன், தன்னோ
டிணைந்துவரும் ஒருமறவற் கூவி 'நாளை
நின்றுபுரி சமர்தன்னில் படையைக் கூட்டி
நிரல்நிறுத்து! நான்வெற்றி கொள்வே னாயின்
துன்றிவரும் மகிழ்ச்சியினால் இன்பக் கண்ணீர்
துளிக்கட்டும்; வீழ்ந்துபட நேரு மாயின்
கன்றிவரும் புனல்விழியர் நிற்போர் தம்மைக்
கடுகிஅழைத் தேகுகநம் நாட்டுக்' கென்றான். 421

நிரல் - வரிசைப்பட. புனல் - (கண்) நீர்.

# இயல் - 102

**என்னுடன்போர் புரிந்தவனா வேழன் என்ற இளவலுக்கு மாவலியன் மறைத்து ரைத்தான்.**

படைவீடு புகுந்தடைந்த இளவல் போரில்
பாய்ந்துபொரும் மாவீரன் வலிபு கழ்ந்து,
விடைபோலும் மாவலியை விளித்துத் தன்பால்
'வெஞ்சமரம் புரிந்தோன்அவ் வேழன் தானோ?
மிடையாத முனமவனைச் சொல்லக் கேட்ட
மேன்மைஎலாம் இவனிடத்தும் விளங்கக் கண்டேன்;
அடையாளம் நீயறிவை! அறிந்தி ருப்பின்
அன் பனைக் கறிவிப்பாய் இன்றே' என்றான். 422

பெருங்கனகன் சூழ்மதியால் துணைபோ லிங்குப்
பின்வந்த மாவலியன் உண்மைச் செய்தி
தருங்கருத்தொன் றிலனாகி மறைத்துச் சொல்வோன்
'தருக்கொடுநின் னுடன்பொருதோன் வேழன் அல்லன்;
மருங்கிருந்து கண்டுள்ளேன் அவனைப் பல்கால்;
மலையுமிவன் சிலகுறியால் அவன்போ லுள்ளான்;
பெருங்களிற்றின் அனையானுக் கின்று வந்த
பெரியவன்றான் இணையாமோ?' எனப்ப கர்ந்தான். 423

விடை - காளை, மிடையாத - போர்செய்யாத.

# இயல் - 103

**மறுநாள் போர்செய வந்தமா வேழனை**
**உரவோய்நீ யாரென உசாவினன் கோளரி.**

இன்றேனும் மாவேழன் வலிமை காண்போம்
    எனநினைவான் போலெழுந்தான் கதிரோன் வானில்;
என்றேனும் களரிதனில் தளர்வு காணா
    ஏற்றமுறு மாவேழன் வந்து நின்றான்;
நின்றானைக் கண்டாற்கு முன்னாள் போல
    நெகிழ்ந்துள்ளம் பரிவுகொள அருகிற் சென்று
'குன்றேறு போல்நிற்கும் முதியோய்! உண்மை
    கூறிவிடு! போர்வேண்டா; யார்நீ வீர! 424

எனைமீறி உன்பாலோர் அன்பு கொள்ள
    எழுமுணர்வை மனத்துடிப்பை அறியாய் ஐய!
முனைவேழன் எனப்படுவோன் நீயோ? இன்றேல்
    முதுமையுறும் நின்பெயர்தான் யாதோ? வீணில்
புனைபேரால் ஏமாற்ற முனையேல்! உண்மை
    புகலுதியேல் வீண்போரே நமக்குள் இல்லை;
தினையேனும் பகையின்றி நண்ப னாவேன்;
    செப்புதிநீ யாவ'னென வணங்கிக் கேட்டான். 425

களரி - போர்க்களம், புகலுதியேல் - சொல்வாயானால்.

# இயல் - 104

**யாவன் நீயெனக் கோளரி வினவக்**
**கூவினன் போர்செயக் கூறிலன் மெய்யே**

இளமகனை மாவேழன் மேலுங் கீழும்
ஏறிட்டு நோக்கியிவன் யாவ னோவென்
றுளம்நினைந்து, நெருநலொரு தண்டால் தாக்கி
உரைத்ததையே நினைத்ததனால் கறுவு கொண்டு
களமதனில் பழிவாங்கும் நினைவால் உண்மை
கழறமனம் இலனாகிப் புனைபேர் கொண்டே
களரிபுக நினைந்தனன்; தான் பெற்ற பிள்ளை
கண்டறியான்; பெண்ணெனவே நினைவு கொண்டான். 426

'விளையாட்டுப் பருவத்தோய்! பொருவ தற்கு
வேழன்தான் வேண்டுதியோ? என்னை வெல்லின்
உளையாட்டி வரும்புரவி ஏறி நின்முன்
உலவிவரும் வீரனைநீ காண லாகும்;
பிளைநேற்றுப் பொருள்செறித்து நவின்ற பேச்சுப்
பின்னாளில் மாறியதேன்? என்னால் நேரும்
விளைவேற்க அஞ்சினையோ? நயந்து பேசும்
வேளையன்று போர்விளைக்கும் நேரம்' என்றான். 427

---

கறுவு - நீங்காக் கோபம், கழற - சொல்ல, உளை - பிடர்மயிர். பிளை - பிள்ளை.

# இயல் - 105

**மற்போரில் மாவேழன் தோற்றா னாக**
**மனமறிந்த பொய்சொல்லித் தப்பிச் சென்றான்.**

'தோற்றத்தால் களிறனையோய்! இளகி நின்று
தொழுதுன்னைக் கேட்டவெலாம் உண்மை; ஆனால்
மாற்றித்தான் பொருளுணர்ந்தாய்! அஞ்சிச் சாகும்
மரபன்றே என்மரபு! வீர மூட்டும்
சோற்றைத்தான பாலைத்தான் எனக்குத் தந்தார்;
சொற்றவணம் போர்தொடங்கும் வேளை, யிங்கு
மாற்றத்தாற் பயனில்லை; எழுக வீர!
மற்போரில் ஒருமுடிவு காண்போம்' என்றான். 428

இருவருந்தம் புரவியினின் றிறங்கிப் பற்றி
இருநிலத்தின் மிசையெங்கும் புரண்டு ருண்டு
செருமிடைந்தார்; வியர்வைஎலாம் நிலத்தில் வீழச்
செம்புழுதி உடலெங்குந் தோயக் கண்டோர்
வெருவுறவே மேல்கீழாய் மலைந்தி ருந்தார்;
மிகுபொழுது பொருதிருந்தும் முடிவே யில்லை;
முறுவலனவ் வேழனிடைக் கச்சை பற்றி
முழுவலியோ டிழுத்தவனைச் சுழற்றித் தள்ள, 429

பொத்தெனவே மணற்பரப்பில் வீழ்ந்தான் வேழன்;
புலிப்போத்துப் போலிளவல் பாய்ந்து சென்று
கத்துகுரல் யானையின்மேற் சிங்கம் என்னக்
கடுங்கண்ணன் அகலத்தில் அமர்ந்து கொண்டு
குத்துடைவாள் தனை எடுத்துக் கையை ஓச்சக்
'கொலைபுரியேல்! பொறுமகனே! ஒருகால் தோற்பின்
எய்த்தவனை விடுவதன்றிக் கொன்றொ ழித்தல்
எம்நாட்டின் விதியன்று; தெரிந்தா யல்லை! 430

மாற்றம் - பேச்சு, மலைந்து - போர்செய்து. அகலம் - மார்பு.

மறுமுறையும் தோற்பவரே இறத்தல் வேண்டும்
　மதித்திதனை எனைவிடுப்பாய் மகனே' என்றான்;
உருகுமுளங் கொளுமிளைஞன் முதியன் சொல்லை;
　உண்மைஎன நம்பிய தாற் கொலைவி டுத்தான்;
கருணைமறங் கொண்டவர்க்குக் கடமை யீதாம்;
　காளையிவன் தோற்றவனைச் செலவி டுத்தான்;
'மருவியுள முதுமைக்கும் சொற்கும் இன்றே
　மதிப்பளித்தேன் போநாளை வா'வென் றானால். 431

# இயல் - 106

**பொய்த்தவன் தலையைப் போரில் நாளைப்
பிய்த்தெறி வேனெனப் பேசினன் காளை.**

பொருதுவரும் மாமல்லன் தனது பாடி
புக்குறைந்து நடந்தவெலாங் கூறக் கேட்ட
வருமுதவித் தடவலியன் பதறி நின்று,
'வலைவீழ்ந்த புலியினையோ அவிழ்த்து விட்டாய்
கறுவிவரும் மாவீரற் கொல்லா திங்குக்
கருணைசொலித் திரும்புதியால் முறையோ மைந்த!
வெருவியவன் உரைத்தவிதி யாண்டும் இல்லை;
வீழ்ந்தனைநீ அவன்மொழிந்த வஞ்சப் பேச்சில். 432

கையகத்துக் கிட்டியதை வாய்க்குக் கிட்டக்
கருதாமல் ஏமாறி வந்தாய்! வஞ்சப்
பொய்யகத்தன் தப்பினனால்' எனப்பு கன்றான்;
'போயினென்ன போகட்டும்; வீரன் நாளைச்
செய்யமர்க்கு வரும்பொழுது யானுங் காண்பல்;
சிறிதளவுங் கவலற்க; தலையைப் போரில்
கொய்தகற்றிப் பழிதீர்ப்பல் விரைவில்; நாளைக்
கொடும்போர்க்கு முடிவொன்று செய்வல்' என்றான். 433

பாடி - பாசறை

# இயல் - 107

**தோல்வியினால் மனமுடைந்து வேழன் மீண்டான்**
**தோற்றவன்றன் நிலைக்கிரங்கி மறைந்தான் வெய்யோன்**

நடித்துரைத்த பொய்ம்மொழியால் தப்பி வந்த
நாடறிந்த மாவேழன் மனமு டைந்து,
'வடித்தெடுத்த படைக்கலங்கள் பெற்றி ருந்தும்
வட்கார்முன் சிறுவனுக்குத் தோற்று விட்டேன்
படித்தலத்தில் வாழ்வதினும் இறத்தல் மேலாம்;
பாருலக வீரனெனப் பேர்பெற் றென்ன?
வடிப்புடுத்த அவன்முகத்தைக் காணுங் காலை
வலிமைஎலாங் குறைந்துபடக் காண்கின் றேனே! 434

சாய்ந்துபடும் கதிரவனே! இந்நாள் மட்டும்
சமர்முனையில் என்றேனும் சாய்ந்த துண்டோ?
காய்ந்திடினும் சாய்ந்திடினும் யாரும் நின்னைக்
கடிவதிலை வணங்குகின்றார்; சிறும கற்குச்
சாய்ந்தவெனை யார்புகழ்வர்? இகழ்வ ரன்றோ?
தாங்ககிலேன் இவ்வீழ்ச்சி' எனநி னைந்து
பாய்ந்துவரும் புனல்மூழ்கித் தனது மெய்யிற்
படிந்ததுகள் கழுவியபின் பாடி புக்கான். 435

வாடிவரும் வீரனுரை கேட்ட வெய்யோன்
'மாவேழன் தனதுடலில் படிந்த மாசை
ஓடிவரும் புனலகத்துக் கழுவிக் கொண்டான்;
ஒப்பரிய வீரத்திற் படிந்த மாசை
ஓடிவிடச் செய்வானோ? அந்தோ! நாமே
உலகறிய வொண்ணாமற் செய்வோம்' என்று
மூடிவரும் இருளென்னும் திரையை யிட்டு
மூழ்கினன்போய் மேற்புறத்துக் கடற்ப ரப்பில். 436

---

வட்கார் - பகைவர். வடிப்புடுத்த - அழகு பொருந்திய. துகள் - தூசி.

# இயல் - 108

**மூன்றாம் நாளும் முழுவலி ரேயடவர்**
**ஏன்றுடன் பொருதனர் எதிரெதிர் நின்றே.**

கதிரோனும் மாவேழன் தானும் ஒன்றாய்க்
கண்விழித்தார் புதுப்பொலிவு கொண்டு நின்றார்;
எதிராக வருவோர்தம் கண்கள் கூச
என்றுமிலா எழிலோடு விளங்க நின்றார்;
முதிராத இளையோனும் முதியன் றானும்
மோதுபுலம் வந்தடைந்தார்; தன்னை முன்னாள்
அதிராமல் பொய்ம்மைசொலி ஏய்த்த தெண்ணி
அடலேறு மிகக்கனன்று நோக்கி நின்று, 437

'அணல்சுருளும் கதுப்புடையோய்! முதல்நாள் நின்றன்
ஆற்றலிற்றான் தளர்வுகண்டேன்; நெருநல் என்றுந்
தணவரிய வாய்மையிலும் தளர்வு கண்டேன்;
தகுமுறையில் புளுகஇனி என்கொ ணர்ந்தாய்?
குணமிலையால் உனையின்று கொல்வ தன்றிக்
கொடுபோக உன்னுயிரை விடுதற் கொவ்வேன்;
மணல்விழுந்த இருமுறையும் கொல்லா துன்பால்
மறக்கருணை காட்டியது போதும்' என்றான். 438

இளங்காளை முகங்கண்டு முன்போல் நெஞ்சம்
இளகாமல் மும்மடங்கு வலிமை கொண்டு,
'களங்காண வந்தோய்நின் இளமை தன்னால்
கடுகளவும் அஞ்சாது, நிலைமை யொன்றும்
விளங்காது முழங்குகிறாய்! கிழவன் என்று
விளம்புகிறாய்! உனையழிக்கும் கிழவன் நானே;
துளங்காதே! இன்றுனது வலியும் வாழ்வும்
தொலைப்பதற்கே வந்துள்ளேன் வாவா' என்றான். 439

அதிராமல் - நடுங்காமல். அணல் - தாடி. கதுப்பு - கன்னம், நெருநல் - நேற்று, தணவரிய - நீங்காத

முன்னையிரு நாளையினும் காணாப் போரின்
    முறையெல்லாம் மொய்ம்புகொடு பொருது நின்றார்;
தன்னையொரு சிறுமகனோ வெல்வ தென்று
    தாங்ககிலா ஆற்றலொடு மலைந்தான் வேழன்;
பன்னரிய நெஞ்சுரத்துப் பாலன் இன்று
    பழையவனை விடுவதிலை என்று டன்றான்;
கன்னமொடு கைசேர்த்துக் கண்வி ழித்துக்
    கலக்கமுடன் சூழ்மறவர் கண்டு நின்றார். 440

பெருமறவன் சிறுமகனை மார்பில் தாக்கிப்
    பிறழ்ந்துவிழச் செய்துவிட்டான்; எழுந்த காளை
உறுவலியால் அவனிருதோள் பற்றிக் கொண்டான்;
    உந்திஎழும் மாவீரன் உதறித் தூக்கி
மறுமுறையும் எறிந்துவிட்டான்; மீண்டும் நின்ற
    மனவலியன் இருதோளும் ஓச்சி வந்தான்;
உறழ்புலிபோல் பாய்ந்தோடி அவனைப் பற்ற
    உருண்டுருண்டு பொருதிருந்தார் சிங்கம் அன்னார். 441

---

பழையவனை - முதியனாகிய வேழனை, ஓச்சி - ஓங்கி, உறழ் - பகைகொண்ட.

# இயல் - 109

**தந்தைபெயர் கேட்டவுடன் மலைத்து நின்ற**
**தனிமகனை மாவேழன் தாக்கி விட்டான்.**

இருவரும்பின் தனியெழுந்து கூர்ந்து நோக்கி
இருமருங்கும் கையுயர்த்திச் சுற்றிச் சுற்றி
வருபொழுது மாவீரன் சீற்றம் பொங்கி
வழக்கம்போல் ‘மாவேழா’ என்று கூவப்
பொருவமரில் தந்தைபெயர் கேட்ட காளை
பூரித்து மலைத்தங்கு நின்று விட்டான்;
பெருங்களிறன் வலிகொண்டு பாய்ந்து தள்ளிப்
பிள்ளையிளம் மார்பகத்தே ஏறி நின்றான். 442

நொடிப்பொழுதும் தாழ்த்தவிலை உடைவாள் கொண்டு
நுடங்கரிய மருமத்தே பாய்ச்சி விட்டான்;
வெடிப்புடைய இளங்காளை அவனை நேற்று
வீழ்த்தியபோழ் தவனுரைத்த விதிம றந்தான்;
கடுப்புடைய மாவேழன் மைந்தன் என்று
காணாமல் உறவுமுறை அறுத்தெ றிந்தான்;
துடிப்புடையன் மார்பிலது பாய்ந்த தாலே
சோர்ந்துதரை வீழ்ந்துபல கதறு கின்றான். 443

மருமம் - மார்பு

## இயல் - 110

**எனைப்பெற்ற மாவேழன் அறிந்தால் நின்னை**
**ஈர்ந்தெறிவன் தப்பிவிடு என்றான் காளை.**

‘நயவஞ்சப் பேருருவே! பொய்ம்மை ஒன்றே
    நாடுகின்ற கிழப்புலியே! நேற்று ரைத்துப்
பயனடைந்த விதிஎங்கே? ஓடி யின்று
    பதுங்கியதோ? தனக்கொன்றும் மற்றோர்க் கொன்றும்
செயவந்த விதிமுறையோ உனது நாட்டில்?
    செய்யாத செயல்செய்தாய்! வீரம் ஈதோ?’
கயமுவந்து பழிபுரிந்தாய்! தந்தை பேரைக்
    கழறினைநீ! நான்மலைத்தேன் வீழ்த்தி விட்டாய்! 444

எனைப்பெற்ற தந்தையைநான் தேடித் தேடி
    இளைத்திருந்தும் உயிர்விட்டுங் காண கில்லேன்;
முனைப்புற்ற மாவீர! என்னைக் கொன்ற
    மொழிகேட்பின் மாவேழன் எனக்குத் தந்தை
நினைச்செற்றுத் தொலைத்தழித்தே அமைவன்; இன்றே
    நிற்கின்ற களம்விட்டுத் தப்பி ஓடு!
சினப்புற்றான் முனைந்தெழுமேல் பாத லத்துச்
    சென்றுறினும் விட்டுவிடான் வந்தே கொல்லும். 445

---

கயம் - கீழ்மை, சினப்பு - கோபம்.

# இயல் - 111

**நினைப்பெற்றோன் மாவேழன் என்ப தற்கு**
**நிகழ்த்துமொரு சான்றுண்டா? என்றான் வேழன்.**

ஏந்தலுரை கேட்டிருந்த வேழன், 'நிற்கு
யார்தந்தை? யார்தந்தை? மொழிக'என்ன,
'வேந்தரெலாம் போர்கேட்டு நடுங்க நின்ற
வீரமகன் மாவேழன், தந்தை' என்றான்;
'சாந்துணையில் வருமகனே! வேழன் பெற்ற
தனிமகவு பெண்மகளே' என்றான் வேழன்;
'ஏந்தெழிலி எனையீன்றாள் வேல்வி ழிக்கோர்
இளவலன்றிப் பிறிதொருபெண் இல்லை' என்றான். 446

என்றமொழி ஈட்டிஎன நெஞ்சில் தைக்க,
'என்செய்தேன் ஐயாவோ! பாவி நானே
கொன்றுவிட வாளெடுத்துப் பாய்ச்சி விட்டேன்;
கொடுமையிது! கொடுமையிது! என்ற ரற்றி,
நின்றஇரு கால்கள்தடு மாறக் கண்கள்
நிலைசுழல உலகனைத்தும் சுழலல் போலக்
குன்றனைய மாவேழன் மயக்க முற்றுக்
குமுறிவரும் விழிப்புனலைத் துடைத்து நின்று, 447

'பெறலரிய பெருஞ்செல்வா! நின்னைப் பெற்றோன்
பெருந்தவத்தன் மாவேழன் றானோ? உண்மை
பெறஒருசொல் மொழிந்திடுவாய்! பிறந்த தெற்குப்
பெண்மகவே எனவிருந்தேன்; வேல்வி ழிக்கு
நறுமலரின் தொடைசூட்டி மணந்து கொண்ட
நாயகன்நான்; மாவேழன் என்பான் நானே;
முறுவலனே! நீயவற்கு மகனே என்று
மொழிவதற்கோர் அறிகுறிதான் உண்டோ? என்றான். 448

# இயல் - 112

**பொன்னணி கண்டபின் புதல்வன் அவனென**
**உண்மை யறிந்ததும் உடைந்தனன் மனமே.**

தந்தையிவன் எனவுணர்ந்த காளை, நெஞ்சில்
தாங்கரிய துயரடைந்து, மிகவி யந்து,
சிந்தையுடன் கண்கலங்கி, 'அந்தோ! எந்தாய்!
சேர்த்தணைத்துக் கொஞ்சுகின்ற கைகள் கொண்டோ
இந்தவிதம் செயத்துணிந்தாய்! நின்னைக் காணின்
என்மனந்தான் இளகுவதால் உண்மை காண
முந்திவரும் ஆர்வத்தால் கெஞ்சி நின்று
முறையிட்டேன் மொழிந்தனையோ? மறுத்து விட்டாய்! 449

பெற்றெடுத்த அன்புணர்ச்சி பெற்றா யென்னில்
பிறரறியாப் புனைபெயராற் பொருவாய் கொல்லோ?
உற்றிளைத்த இருநாளும் உன்னைக் கொல்லா
தொழிந்ததுமோர் நல்வேளை; ஈன்ற அன்னை
பெற்றுவக்கும் மங்கலநாண் காத்தேன் ஐயா!
பெறுமகனைப் பிரித்தேகி விடுவை என்றே
பெற்றவளும் பொய்ம்மொழிந்தாள்; நீயும் இன்று
பெரும்பொய்யை மொழிந்தென்னைப் பிரித்தே விட்டாய்! 450

மகன்பிறப்பான் இதனையவன் கையிற் கட்டு!
மதித்தென்றும் கழற்றாமல் காக்க! என்று
புகன்றளித்த பொன்னணிபார்! அதன கத்தில்
பொறித்திருக்கும் நின்பெயரும் பார்பார்' என்றே
மகன்கொடுத்த பொன்னணியைப் பெற்றோன் உற்ற
மனத்துயரை எடுத்துரைக்க வல்லார் யாரோ?
அகலகலத் துடைவாள்பட் டொழுகும் செந்நீர்
அவன்சிந்தும் கண்ணீர்க்கு நிகரோ? இல்லை 451

அகல் அகலம் - அகன்ற மார்பு.

# இயல் - 113

**துடித்தே புலம்பித் தொடுவாள் கொண்டுயிர்**
**மடித்திட முனைந்தனன் மாழ்குறும் வேழன்.**

'நின்னனைதான் கருவுற்றுத் திகழும் ஞான்றே
நிகர்வரிய வீரமகன் பிறப்பன் என்றேன்;
சொன்னவணம் அரியேற்றைப் பெற்றெ டுத்தாள்;
சூரனென உரையாது பொய்ம்மை கூறி,
அன்னையவள் செய்பிழையால் உனையி ழந்தாள்
அறிவிலனாய்ப் புனைந்துரைத்த பொய்யால் நானும்
உன்னையிழந் துறுதுயரங் கொண்டேன்; அந்தோ!
ஒருபொய்க்கு விளைபயன்தான் இத்து ணைத்தோ! 452

பெருவலியில் எனைநிகர்வாய் எனுங்க ருத்தில்
பெற்றஎனக் கெதிராவாய் எனப்ப கர்ந்தேன்;
பொருவமரில் எதிரானாய் அந்தோ! இந்தப்
போர்க்களத்து மண்ணுக்கே கொணர்வேன் என்றேன்;
உறுமொழியின் படியுன்னைக் கொண்டு வந்தே
ஊர்மண்ணிற் கிடத்திவிட்டேன்; களத்து மண்ணே
மறவனுக்கு வாழ்வென்றேன்; சொன்ன வண்ணம்
வாழ்வதுவும் மண்ணானாய்! அந்தோ! அந்தோ! 453

வாரியுனை அணைத்தெடுத்து மார்பிற் சேர்த்து
மகிழ்கின்ற வாய்ப்பொன்றும் இல்லேன்; முத்த
மாரியுனக் களித்துவக்கும் பேறும் இல்லேன்;
மனந்துணிந்து செருமுனையில் உனது காலை
வாரிவிட, இருவிழியும் மாரி கொட்ட,
மண்மாரி பொழிகின்ற பேறு பெற்றேன்;
பாரிலெனைப் போலஒரு பேறு பெற்ற
பாவியைநான் கண்டதில்லை ஐயோ! ஐயோ! 454

453 ஆம் பாடலொடு 185 189 ஆம் பாடல்களை ஒப்பு நோக்குக.

சொலற்கரிய வீரன்தான் எனக்கு மைந்தன்
சூரன்தான் சிங்கந்தான் குறைவே யில்லை;
வெலற்கரிய போர்முனையில் திறமை காட்டி
வேறொருவன் மலையுங்கால் மாய்ந்தி ருப்பின்
குலக்கொழுந்தை மறக்குருத்தை வாழ்த்தி நிற்பேன்
கூறவொணா மகிழ்ச்சியினால் சிரித்து நிற்பேன்;
புலைக்குரிய என்செயலால் பழிக்க நின்றேன்
பூமிஎலாம் எனைக்கண்டு சிரிக்க நின்றேன். 455

முடித்தலையில் அடித்தவற்றைப் பிய்த்துக் கொண்டு
முகத்தகத்தும் மார்பகத்தும் அறைந்து கொண்டே
'படித்தலத்தில் எனக்கினிமேல் வாழ்வெ தற்குப்
பாலகனைப் பின்தொடர்வேன்' என்று கூறி,
வடித்தெடுத்த கூர்வாளைக் கையிற் பற்றி
மாவேழன் கடிதோச்சக் கண்ட மைந்தன்
பிடித்திழுத்து 'வீரவுன துயிர்வி டுப்பின்
பிழைப்பனென எண்ணினையோ? பிழையேன் ஐய! 456

புலைக்குரிய - இழிந்த.

# இயல் - 114

**தற்கொலைக்கு முயன்றானைத் தடுத்துக் காத்துத்**
**தன்னினைவு பலித்திலதே எனக்க வன்றான்.**

எனையிழந்த துயர்தாங்கித் துடிக்கும் அன்னை
இடர்துடைத்தல் நின்கடமை யன்றோ? ஐய!
எனையிழந்தாற் பெறலாகும்; நினையி ழப்பின்
என்அன்னை நிலைஎன்ன? அடஓ அம்ம!
முனையகந்தான் வீரனுக்குச் சொந்த மாகும்;
மொய்ம்புடையோய்! நிற்காணும் ஆர்வம் உந்தி
இனையவந்தேன்; கண்டுகொண்டேன்; மாற்றான்வாளால்
இறக்கவிலை; கவலற்க எந்தாய்! எந்தாய்! 457

வென்றிகொளும் பெருவீர! உடலி னின்று
விலகாமல் உயிரின்னும் நிலைத்த தைய!
துன்றிவரும் நாவலத்துப் படைஞர் எல்லாம்
துயரின்றித் திரும்பவழி விடுதல் வேண்டும்;
ஒன்றுபிழை செய்திலரால் ஒறுத்தல் வேண்டா;
உடன்பிறவா விடினுமவர் உறவாக் கொண்டேன்;
கன்றனையேன் எந்தையைத்தான் காண வந்தேன்;
கண்டுவந்தேன்; நினைவொன்று பலிக்க வில்லை. 458

மூவகத்து வேந்தனென நின்னை யாக்கி,
முடிசூட்டிக் கோல்தந்தே அணையில் ஏற்றி
நாவலத்தை வென்றதனை வயப்ப டுத்தி
நலஞ்சான்ற அரசிருக்கை நானும் பெற்றுக்
காவலர்க்கு நிகரில்லை என்னும் பாங்கில்
காத்தளித்து மகிழ்ந்திருக்க நினைவு கொண்டேன்
சாவகற்றிப் போரகற்றி இரண்டு நாடும்
தழைக்குமெனும் நினைவுகன வாயிற் றென்றான். 459

---

முனையகம் - போர்க்களம், இனைய - வருந்த.

# இயல் - 115

**கரைந்துருகும் மாவேழன் கண்ணீர் சிந்திக்**
**காவலர்காள் இனிப்போரே யில்லை என்றான்.**

கரைந்துருகி அவனுரைத்த மாற்ற மெல்லாம்
    களிறனையான் கேட்டழுது விம்மி நின்றான்;
நிறைந்துவரும் மறக்குலத்து மைந்தர் தாமும்
    நெஞ்சுருகி உளைந்துமிக அரற்றி நின்றார்;
இரைந்தழுது புரண்டாலும் விளைவ தென்ன?
    இளமைந்தன் எழுந்துவரப் போவ தில்லை;
கரைந்தழுது முகம்விளர்த்த வேழன் அங்குக்
    கண்கலங்கும் காவலர்பால் ஒன்று கூறும். 460

'துணைவருவீர்! முடிந்ததுபோர்; இனிமே லென்றும்
    சொல்லரிய துயர்ப்படுத்தும் போரே இல்லை;
இணையொருவர் இல்லையென வந்த வீரன்
    இன்னுயிரும் வல்லமரும் விட்டான் என்று
துணைபுரியும் மாவலிக்குச் சொல்லி, வேழன்
    தொடுதல்செயான் படையினிமேல் என்றுங் கூறிக்
கணையுடைய மறவரெலாம் தம்நா டேகக்
    கண்காணித் தனுப்புக'வென் றாணை யிட்டான். 461

# இயல் - 116

**அருமருந்து பெற்றுவர வேழன் தூதொன்**
**றனுப்பினன்அம் மதலைக்கோன் மறுத்து விட்டான்.**

படைக்கலங்கள் துளைத்தபெருங் காய மெல்லாம்
பட்டளவில் ஆற்றிவிடும் அரும ருந்து
குடைக்குரியன் மதலைக்கோன் பெற்றி ருந்தல்
குன்றனைய வேழற்கு நினைவில் தோன்ற,
நடைக்குயர்ந்த பரிவீரன் ஒருவற் கூவி
நாடாளும் மன்னவன்பாற் செலுத்தி நின்றான்;
விடைத்திறலன் நொடிப்பொழுதில் புரவி ஏறி
விரைந்தேகி வேந்தன்பால் அனைத்தும் சொன்னான். 462

'பாசறைமுன் நின்றென்னை இகழ்ந்து ரைத்த
பகைவனுக்கோ அருள்புரியப் போந்தான் வேழன்?
மூசுவலைப் படும்புலியைக் கொல்வ தன்றி
முனைந்தெழுக எனவிடுப்பார் உலகில் உண்டோ?
வீசினனைக் கொன்றொழித்து நாடு பற்ற
விழைந்திங்கு வந்தவற்கோ கருணை செய்வல்?
தேசரவின் வாயகத்துப் பாலை வார்க்கத்
தெளிந்தமதி யுடையவர்யார் இசைவர்?' என்றான். 463

---

தேசு - ஒளி.

## இயல் - 117

**கண்ணெதிரில் மகனிறக்கக் கண்டான் வேழன்**
**கதறினான் பதறினான் சாய்ந்தே விட்டான்.**

மன்னவன்றான் பகைவனுக்கு மருந்த ளிக்க
மறுத்துரைத்தான் எனமொழிந்தான் வந்த தூதன்;
பன்னரிய பெருஞ்சினமோர் புறத்துப் பொங்கப்
படர்ந்துவரும் அருந்துயரம் அடுத்துத் தாக்கப்
பன்னெரியக் கடித்தடக்கித் தாழ்த்த லின்றிப்
பரியேறித் தான்செல்ல நினைத்தெ ழுந்தோன்
ஒன்னலரும் விழையுமுகன், உருவச் செம்மல்,
ஒப்பரியன் மலர்விழிகள் மூடக் கண்டான். 464

வெடித்துவிடும் மனமுடையான் துயரம் ஆற்றான்
வீறிட்டான் உடையனைத்துங் கிழித்தெ றிந்தான்;
பிடித்திழுத்துத் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டான்;
பெரும்பழியை எனக்கிழைத்த கொடுங்கை வாளே
ஒடித்தெறிவேன் எதற்கினிநீ? என்று கூறி
ஒள்வாளைத் தகர்த்தெறிந்தான்; வாய்ம டித்துக்
கடித்தெழுந்து பித்தனைப்போல் கதறி நின்றான்;
கண்ணெதிரிற் படுமகனைப் பார்த்து நின்றான். 465

‘பெற்றவள்பால் நில்லாமல் இங்கேன் வந்தாய்?
பேதைமனங் கொண்டவனே! பகைக்கு லத்தைச்
செற்றஎன்வாள் கறைபடியச் செய்வ தற்கோ?
தீராத பழிஎனக்குத் தருவ தற்கோ?
உற்றவண்நீ உறைந்தனையேல் வாழ்ந்தி ருப்பை;
ஒருநாளில் என்றேனும் உன்னைக் காண்பல்;
பெற்றவளும் உண்மையினை மறைத்தாள்; அந்தோ!
பெரும்பகைபோல் எனக்கவளும் ஆகி விட்டாள். 466

---

பன்னெரிய - பல்நெரிய, ஒன்னலர் - பகைவர்.

ஒருமுறைதான் உன்முகத்தைக் கண்டேன்; ஆனால்
உறுதுயரைத் தாங்ககிலேன் அரற்று கின்றேன்;
கருவறையில் ஈரைந்து திங்கள் தாங்கிக்
கடுந்துயரால் உயிர்த்தெடுத்துப் பாலும் ஊட்டிச்
சிறுதுயிலும் கொள்ளாமல் பேணிக் காத்துச்
செய்யமுகங் கண்டுளத்துக் களித்த தாய்தான்
மறுகவரும் இக்கொடுமை எப்ப டித்தான்
மங்கையவள் ஆற்றுவளோ? ஐயோ பாவம்! 467

உண்டுடுத்து விளையாடிக் களைத்த யர்ந்தே
ஊசல்தனில் கண்வளர்தல் காணாப் பாவி
மண்தொடுத்த வெறும்புலத்தில் களைத்துச் சாய்ந்து
வளர்துயிலிற் கிடக்கின்றாய் கண்டு நின்றேன்;
கண்டெடுத்த நன்மணியைத் தோற்று விட்டேன்;
கன்றதனைப் பிரிந்தலறும் ஆவி னைப்போல்
வண்டுடுத்த குழலாளை வாடச் செய்தேன்;
மடந்தையவள் படுந்துயரம் எற்றோ? எற்றோ? 468

வீரத்தின் விளைநிலமே! கருணை கொள்ளும்
விறல்மகனே! கற்பகமே! செல்வக் கோவே!
தீரத்தின் வைப்பகமே! குணத்தின் குன்றே!
தெய்வமணிக் குலக்கொழுந்தே! ஆண்மை என்னும்
பேருக்கு வடிவளித்த உருவே! கண்ணே!
பெறற்கரிய மாமணியே! எனைப்பி ரிந்த
பாரத்தைச் சுமந்தினிநான் வாழ்தல் நன்றோ?
பளுவதனால் பயனென்ன?' என்ற ரற்றி, 469

அணிந்திருந்த வீரவுடை படைக்க லங்கள்
அத்தனையும் எரியிட்டுத் தீய்த்தொ ழித்தான்;
தணிந்திருந்த பாசறையைப் பிடித்து வீழ்த்தித்
தலைப்பறந்த கொடியெடுத்துக் கிழித்தெ றிந்தான்;
அணிந்தொளிர்ந்த இருக்கைதனைச் சுக்கு நூறா
அடித்தொடித்தான்; வீரத்தின் சின்ன மெல்லாம்
திணிந்திருந்த கவசத்தை பின்னம் செய்தான்
திகில்கொண்டோன் அமர்க்களமே ஆக்கி விட்டான். 470

தினவடங்கு மாவேழன், பெற்ற மைந்தன்
திருமுகத்தை மறுமுறையும் கூர்ந்து நோக்க
மனமடங்கிச் சினமடங்கி ஆற்றல் சான்ற
மறமடங்கிச் செயலடங்கிப் பொருது வெல்லும்
நினைவடங்கி உடலடங்கிச் சுழன்று பாயும்
நிலையடங்கிக் கொலையடங்கி நாட்டை யாளும்
கனவடங்கிச் சினமடங்கல் மதிமு கந்தான்
கலைமலிந்து மும்மடங்கு பொலியக் கண்டான். 471

முகங்கண்டு மனமுடைந்து, 'குலக்கொ ழுந்தை
முளைத்துவரும் பொழுதத்தே கிள்ளி விட்டேன்;
அகங்கொண்ட என்மைந்தன் விழித்த லின்றி
அமரகத்துத் துயில்கின்றான்; குலம்வி ளக்கும்
முகங்கொண்ட மணிவிளக்கை அணைத்து விட்டேன்;
மூடிவரும் இருளொன்றே பரவக் கண்டேன்;
இகழ்வுண்ட வாழ்வினிமேல் எனக்கெ தற்கோ?
என்றலறி வீழ்ந்தவன்தான் எழவே யில்லை. 472

மடங்கல் - சிங்கம்.

# இயல் - 118

**மகனும் கணவனும் மடிந்ததால் வேல்விழி**
**நகையிழந் தழுதே நலிந்துயிர் துறந்தனள்.**

பெற்றெடுத்த மகன்மடிந்தான் மாலை யீந்த
பெருங்கிழவன் தான்மடிந்தான் என்ற செய்தி
விற்றொடுத்த புருவத்தாள் வயந்தம் வாழும்
வேல்விழியாள் செவிப்படலும் ஆற்றா ளாகி
முற்றெரிக்கும் அனல்மூட்டி அதனுட் பாய்ந்து
மூழ்குதற்கு முயன்றாளைத் தடுத்தா ராக
உற்றிருக்கும் வாழ்வெதற்கோ? நாளும் மாயும்
உயிரெதற்கோ? எனமொழிந்து மனமு டைந்தாள். 473

உருமாறித் துயில்மாறி நினைவும் மாறி
உணவுகொளும் மனம்மாறித் துயரம் ஏறிக்
கருவூறிக் கிடந்தானை அனுப்பி வைத்த
கதைமாறிப் போனதையே நினைந்து நைந்தாள்;
பரியேறிப் போனவன்கைப் படைகள் கண்டு,
பாலனவன் அணிந்திருந்த உடைகள் கண்டு,
வெறிஏறி அழுதிடுவாள் உருகி நின்று
விழுந்திடுவாள் எழுந்திடுவாள் தொழுவாள் அன்னை. 474

'திரைசூழ்ந்த இவ்வுலகில் நிகரே யில்லாத்
தீரனைத்தான் கணவனெனப் பெற்றி ருந்தேன்;
அரிநேர்ந்த மகனைத்தான் பெற்றி ருந்தேன்;
ஆயினுமப் பேறனைத்தும் நிலைக்க வில்லை;
புரைதீர்ந்த நன்மைதரும் எனநி னைந்தே
பொய்மொழிந்தேன் அம்மொழியால் என்றன் வாழ்வு
கறைசேர்ந்து போனதம்மா! இன்பம் என்னும்
கரைதூர்ந்து வீழ்ந்ததம்மா!' என்று நோவாள். 475

கொழுநனுக்கே அழுவாளோ? சுமந்து பெற்ற
கொழுந்தினுக்கே அழுவாளோ? தனக்கு நேர்ந்த
பழுதினுக்கே அழுவாளோ? மகன்பாற் கொண்ட
பரிவினுக்கே அழுவாளோ? தந்தை கொன்ற
இழிவினுக்கே அழுவாளோ? அந்தோ! அந்தோ!
இரவினுக்கும் பகலினுக்கும் அழுதே தீர்ந்தாள்;
அழிவினுக்கே ஆளாகார் யாரே உள்ளார்?
அழுதழுது கரைந்துருகித் தீர்ந்தே போனாள்! 476

★

**போர்ப்படலம் முற்றும்**